10

சக்கரவர்த்தினி

JL
M211 NOSCH
N6.12
145 625

196

Registered No. M. 520.



சக்ரவர்த்தினி,

"கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவோ
மற்றீண்டு வாரா நெறி".

VOL. 12. } October & November 1916. { NO. 3.4.
தொகுதி 17. } அக்டோபர் - நவம்பர் 1916 { பகுதி 3.4.

பொருளடக்கம், பக்கம்.

1. செந்தமிழ்ப்பெண்டிர் உவத்திற்கழகு 71
2. இனியாதவிருந்து 76
3. நீதிசாரம் 81
4. வல்லாளமகாராஜன் சரித்திரம் 85
5. பக்தியோகம் (ஸ்வாமிவிவேகானந்தர்) ... 88
6. கிரீஸ்தேசத்துப் பீமசேனன் கதை ... 91
7. நன்னடக்கை 93
8. அர்ச்சனை 94
9. ஸ்திரீகள் 95
10. உலகியின் தரிசனம் 97
11. ஆசாரமஞ்சரி 99
12. கலை ராசன் 102
13. சுகாதாரம் (வாய்வு) 112
14. சரீரக உபவாசம் ... 114 | 15. யுத்தம். ... 116

கோ. வடிவேலுசெட்டியார், பத்திராசிரியர்-பத்திராதிபர்
கோமளேசுவரன் பேட்டை, சென்னை.

22-12-16

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
22 SEP 1916
MADRAS

லோகோபகாரி.

இது சோமவாரந்தோறும் சென்னை சோமஸேசுவரன் பேட்டையில் பிரசுரமாகும் தமிழ்ப் பத்திரிகை; 22 வருடகாலமாகச் செவ்வனே நடை பெற்றுவருகின்ற தென்பது பிரசித்தமாம். இஃது ஏனைய பத்திரிகை களைப் போலல்லாது மக்களாய்ப் பிறந்தோர் பெறவேண்டிய பெரும் பேற்றை யடைதற்குரிய சாதனங்களை யாவரும் சுலபமாக அறியுமாறு போதித்து வருவதாம். இதுவேயுமன்றி இதில் கைத்தொழில், கல்வி, சுதேசிய, விதேசிய முதலிய அநேக விஷயங்கள், சிறுவர் சிறுமி யரியாவருக்கும் பயன்படுமாறு செவ்விய நடையி லெழுதப்பட்டு வருகின் றன. தினசரிப் பத்திரிகை வாங்குவோரும் இப்பத்திரிகையின் ஒரு பிர தியை வாங்கிப் படிப்பார்களாயின், இதனை மறந்தும் கைவிடமாட்டார்க ளென்பதும், இஃது ஒவ்வொரு வீட்டிலுமிருத்தற்குரியதா மென்பதும் நன்கு விளங்கும். சாம்பில் காப்பி ஒன்று இனாமாக அனுப்பப்படும்.

சந்தா விவரம்.

இந்தியா, சிலோன், பர்மாவிற்கு.

ஆறு மாதத்திற்கு ரூபாய் 1-14 | ஒரு வருடத்திற்கு ரூபாய் 3 - 8

(நேட்டால்-சிங்கப்பூர்-பினங்கு).

ஒரு வருடத்திற்கு ரூபாய் 5 - 8 | ஆறு மாதத்திற்கு ரூபாய் 3 - 0

இதுகாறும் வெளிவாராத யூகிமுனிவர் வாதவைத்திய நூல்கள்.

வாதாக்க நிகண்டு—300, வாதவைத்திய விளக்கம்-200 மதிவெண்பா—100 - விலை ரூபாய் 1.

தேரையர் கரிசலை-யூகிமுனி கரிசலை-கல்கண்டு சூத்திரம் அணா 12

சக்ரவர்த்தினி.

"சக்ரவர்த்தினி" என்னும் பெயர்பூண்ட மாதப்பத்திரிகை சென்ற பதி னொரு வருடங்களாகத் தமிழுல கெங்கும் பரவிவருகின்றதென்பது பிரசித் தமாம். இஃது எமது வாசிவாத 1912-ம் வருஷம் பிப்ரவரிமாத முதற்கொ ண்டு லோகோபகாரி ஆபீஸில் நடை பெற்றுவருகின்றது. இதில் கல்வி யறிவு ஒழுக்கங்களைவிருத்தியாவதற் குரிய விஷயங்களும், மாதாரடவர் தரு மங்களும், மனோகர சாதனங்களும், பிறவும் பிரசுரஞ் செய்யப்பட்டு வரு கின்றமையின், இது யாவரும் அத்தியாவசியமாக வாசித்தற் குரியதாம்.

சந்தா விகிதம்.

இந்தியா-சிலோன்-பர்மாவிற்கு		பிறதேசங்கட்கு-வருடம்	2—8—0
வருடத்திற்கு	ரூபாய் 2-0—0	ஷை 6- மாதத்திற்கு	1—8—0
ஷை 6-மாதத்திற்கு	ரூபாய் 1-4—0	தனிப்பிரதி	0—3—0

சக்ரவர்த்தினி.

...லைப்பவேர்

No-1.
பகுதி-1.

செப்பனிடுவதற்காக எடுத்துக் கொள்ளப்பட்ட
ஆகஸ்ட் மாதம் 1990 வருடம்
செப்பனிட்டு முடித்த
ஆகஸ்ட் மாதம் 1990 வருடம்
ஆராய்ச்சி உதவியாளரின் கையொப்பம்.

...மை.

...ிய செயல்களைச் ...ப் பெறுவதில்லை ...் தமது வம்சம் ...் செய்தல் அவசி ...் பெருகுதற்குக் ...ம். நன்மக்களைப் பெறுதலாகு இம்மையாவது மறுமையாவது பயனில்லையாமென் பதை நன்குணர்ந்தவர் யாது செய்வர்? தமது மனையாளோடு கூடிவாழ்வர். தமது மனையாளோடு கூடி நன்மக்களைப் பெறுத வர் இம்மைத் துன்பம் மறுமைத் துன்பமென்னு மிரண்டையும் டைதற்குரியவராகின்றன ரென்பது தவறாத விஷயமாம். இது

"பொன்னுடைய ரேனும் புகழுடைய ரேனுமற், றென் னுடைய ரேனு முடையரோ—இன்னடிசில், புக்களையுந் தாமரைக் கைப் பூநாறுஞ் செய்யவாய், மக்களையிங் கில்லாதவர்" என்று நளவெண்பா கூறுவதால் நன்கு விளங்குவதாம்.

ஒருவர் மற்றொருவரைக் கண்டு, அவரது யோக க்ஷேமங் களை வினவும்போது, முன்னர் யாது வினவுகின்றனர்? தங்களுக் கெத்தனை பிள்ளைகளிருக்கின்றன வென்றன்றோ வினவுகின்றனர்? இதனால் புத்திர பாக்கியம் மிகச் சிறந்ததா மென்பது நன்கு விள

க்குமன்றோ? புத்திர பாக்கிய மில்லாதவர் மிகப் பெருஞ் செல்வ ராயிருப்பினும், அவரது வாழ்க்கை நல்வாழ்க்கை யாவதில்லையாம். ஒருவர் மிகப் பெரிய துன்பமுடையவராயிருப்பினும், அவர் தம் பிள்ளைகளோடு கலந்து பேசும்போது, அவர்க்குள்ள துன்ப மனைத்தும் தோன்றா தொழிகின்றன. புத்திர பாக்கியம் துன்பத்தை யொழிப்பதற்கு ஒரு நற் சாதனமாக விருத்தலின், புத்திர பாக்கியத்தைப் பெற வொவ்வொருவரும் தவறாது முயலுதல் வேண்டும். தெய்வப் புலமைத் திருவள்ளுவ நாயனார் "பெறுமவற்றுள் யாமறிவ தில்லை யறிவறிந்த, மக்கட்பே றல்ல பிற— ஒருவன் பெறும் பேறுகளுள் அறிய வேண்டுவனவற்றை யறிதற்குரிய மக்களைப் பெறுதலல்லது பிற பேறுகளை யாம் மதிப்பதில்லை" என்று திருவாய் மலர்ந்தருளியிருப்பதை நாம் நன்குணர்வோமாயின், புத்திர பாக்கியத்திற்கு மேம்பட்ட பாக்கியம் ஒன்றுமில்லை யென்பது நமக்குப் பிறழாது விளங்குவதாம். புத்திர பாக்கியம் பெறுதற்குரிய செயல்களைச் செய்யாது வேறு பாக்கியம் பெறுதற்குரிய செயல்களைச் செய்பவர் அப்பாக்கியங்களின் பயனைப் பூரணமாகப் பெறுவதில்லையாம்.

புத்திர பாக்கியத்தைப் பெற விரும்புகின்றவர் தமது மனையாளோடு கூடி யின்புற்று வாழ்ந்து வருதல் வேண்டும். கணவ னொருவழி மனையா ளொருவழியாக விருக்கும் குடும்பத்தில் நன்மக்க ளுண்டாவதில்லையாம். ஒரு குடும்பம் மேலும்மேலும் விருத்தியடைவதற்குக் காரணமா யிருப்பவர் அக்குடும்பத்திற் பிறந்த நன்மக்களேயாகலின், தமது குடும்பம் மேலும்மேலும் விருத்தியடைய வேண்டுமென்று விரும்புகின்றவர் தமது மனையாளுடன் மனமொத்து வாழ்ந்துவருதல் வேண்டும். கணவனும் மனைவியும் மனமொத்து வாழ்வாராயின், அவர்க்குப்பிறக்கும் பிள்ளைகள் நற்குணநற்செய்கைகளுக் குறைவிடமா யிருந்து, தமது தந்தைதாயர்களுக்கு வேண்டியவற்றைத் தாம் பெரியவராகிய காலத்துந் தவறாது செய்துவருவர். இவ்வாறு செய்துவரும் பிள்ளைகளையுடையவர் தமது மூப்பு(கிழ)ப் பருவத்தில் பெரிதும் வருத்தமுறுவதில்லையாம். குழந்தைப்பருவ முடையவராயிருக்கும்போது மழலைச் சொற்கள் முதலியவற்றாலும், பெரியவராகியபோது நன்மைதரும் காரியங்களைச் செய்வதனாலும் தம்மை மகிழச்செய்யும் பிள்ளைகளை யில்லாதவர் இம்மைப்

K45625

பயனையும் மறுமைப் பயனையு மடைவதில்லையாம்; ஆகவே, ஒவ்வொருவரும் தமது மனையாளோடு மனமொத்து வாழ்ந்து நன்மக்களைப் பெறுதல் வேண்டுமென்பதை நம்மனோர்க் குணர்த்துதற் பொருட்டு நமது தமிழ்த் தேவதையாகிய ஔவைப்பிராட்டியாரவர்கள் "சந்ததிக் கழகு வந்திசெய் யாமை-ஒருவனது வம்சம் பெருகுவதற்கு அழகாவது அவன் தன்மனையாளை மலடியாகச் செய்யாமல் அவளோடு கூடிவாழ்தலாம்" என்றருளிச் செய்தனர்.

ஒருவன் தன்பிறவி வளராது தேய்தற்குக்காரணமாகிய நல்வினைகளைச் செய்யும் புத்திரரைப் பெறுவனாயின், அவன் இறந்தபின் நல்லுலகஞ்சேர்வது நிச்சயமாமாகலின், ஒவ்வொருவரும் தம்புத்திரர்களைக் கல்விகேள்வி யறிவொழுக்கமுடையவராக்குதல் வேண்டும். தம்புத்திரர்களைக் கல்வி கேள்வி யறிவொழுக்க முடையவராகச் செய்பவர்க்கு என்ன குறைவுண்டாம்? ஒரு குறைவு முண்டாவதில்லையாம். இக்கருத்தைப்பற்றியே திருவள்ளுவநாயனார் "தம்பொரு ளென்ப தம்மக்கள் - தம்புதல்வரைத் தம்பொருளென்று சொல்லுவர் அறிந்தோர்" என்று திருவாய் மலர்ந்தருளினார்.

அச்ச முள்ளடக்கி யறிவகத்தில்லாக் கொச்சை (ஆடுகள் போன்ற) மக்களைப் பெறுபவர் எப்பயனையும் பெறுவதின்மையின், ஒவ்வொருவரும் தாம் நற்குண நற்செய்கைகளை யுடையவராயிருந்து, தமது புத்திரர்களையும் நற்குண நற்செய்கை யுடையவராகப் பழக்கி வருதல்வேண்டும்; அவ்வாறு செய்து வருபவர் தமதுபுத்திரர்வாயிலாகப்பெறுதற்குரியபயனை யடைவது தவறுவதில்லையாம். தசரதசக்ரவர்த்தி, பாண்டுவேந்தன் முதலாயினோர் நமது வம்சம் விர்த்தியாகவேண்டும்; நாம்நற்கதியடைதல்வேண்டுமென்று கருதியன்றோ புத்திரபாக்கியத்தைப் பெறவிரும்பினர்? புத்திரபாக்கியம் பெறுவது பற்றி முயலாது, வேசி நாயகராக விருந்து வருபவர் அம்பி துணையாக ஆறிழிக்கவர் போல்வாராகலின், வேசி நாயகராக விரும்பாது, தமது மனைவியோடு மனங் கலந்து வாழ்ந்து, நன்மக்களைப் பெற்றிருப்பவர் இம்மையிலேயன்றி மறுமையிலும் நன்மையடைதற்குரியவரா யிருக்கின்றன ரென்பதை நம்மனோர் மறவாது கவனித்து வருதல் வேண்டும்.

புதல்வர்க்குத் தந்தையும் தாயும் தெய்வமாவரென்பதை நன்குணர்ந்து, தம் புதல்வரைத் தீநெறியிலொழுகவிடாது நல்வழியிலொழுகச்செய்து வருபவரது குடும்பம் மேன்மேலும் விருத்தியடைவதாம்.

பிரமசரியம், வானபிரஸ்தம், சந்நியாசம் என்னும் மூவகையாசிரமத்தி லிருப்பவர் அடுத்துப் பிழைப்பதற்கிடமாயிருப்பவர் இருகஸ்தாசிரமிகளாகலின், இருகஸ்தாசிரமத்திலிருப்பவர் பிரமசரிய முதலிய நால்வகையாசிரமமும் விருத்தியாதற்பொருட்டும், அறம் வளர்தற் பொருட்டும், மறம் தேய்தற்பொருட்டும், தாம் நற்கதியடைதற்பொருட்டும், கண்ணிரண்டு மொற்றுமையாயிருந்தொன்றைப்பார்ப்பதுபோலத் தமது மனைவியோ டொற்றுமையாயிருந்து, நன்மக்களைப் பெற்று, தமது குடும்பத்தை விருத்திசெய்து வருதல்வேண்டும்; இவ்வாறு செய்வதே அவர் வம்சம் பெருகுவதற்கு அழகாயிருப்பதாம்.

பகீரதன் கங்கையை நோக்கிச்செய்த தவத்தின் மாட்சிமையால், அவனது முன்னோர் நல்லுலகடைந்தன ரென்பது நமக்கென்னவுணர்த்துகிறது? நற்புத்திர னொருவன் தனது தந்தை தாயர் தீவினைதேய்தற்பொருட்டு அவனை நோக்கிச்செய்யுந் தானதருமங்களால் அவர் நல்லுலகடைகின்றன ரென்பதையன்றோ உணர்த்துகின்றது?

பிரமோத்தரகாண்டம்.

உந்து நீர்க்கட லுடுத்தபார் முழுவது மொருங்கே
வந்து தாமொழு மரசியல் வளமெலாம் பெறினு
மிந்தி ராதியர் பெரும்பதத் திருக்கையெய் திடினு
மைந்த ரின்றியே வாழ்வது வாழ்வுமற் றன்றே.

கந்தபுராணம்.

மைந்த ரைப்பெறு கின்றது மாசிலாப்
புந்தி யன்பொடு போற்றி வளர்ப்பதுந்
தந்தை மாண்டுழித் தம்முறைக் கேற்றிட
வந்த பின்கட னாற்றுதற் கேயன்றே.

இப்பிரயோகங்களிங்கு நன்குணர்தற் பாலனவாம்.

சில முக்கியமான குறிப்புக்கள்.

"சர்க்கரை சப்பது வாயின்குற்றம்" என்பதுபோல் தற்காலம் இங்கிலீஷ்படித்த வர்ணாசிரம தர்மங்களைத் தொலைக்க வழிதேடும் போலி ஆரியர்கள் அநேக யுகங்களாகத் தங்கள் முன்னோர்கள் கூறி நூல்களையும் அநாதியாயுள்ள வேத சாஸ்திரங்களையும் நடாமல், யாரேனும் "ஐரோப்பியரொருவர் ஜாதி வித்யாஸம் பாராட்டவேண்டியதில்லை" என்று ஒரு புஸ்தகம் எழுதினால் அதை வெகு சிரத்தையாய்ப் படித்து அவ்வாறு அநுஷ்டிக்கத்தொடங்குகிறார்கள்! இதற்குள்ள காரணமென்றால், 'கலிராஜனுடைய சாபத்தினால்பிடியுண்ட ஆசாமிகளாகிய இவர்களுக்கு இதுவரைக் கட்டிக்கரும்புக்கட்டியாகத் தோன்றுவதேயன்றிவேறல்ல.' "கொள்ளென்றால் வாயைத் திறக்கிறதும் கடிவாளமென்றால் வாயை மூடுகிறதும்" குதிரையின் சுபாவமாம்; அதுபோல், தற்காலத்திய ஆசாரவீரர்கள் தகப்பனார் தேடி வைத்த நிலத்துக்கும், பணத்துக்கும், தாங்கள் பாத்தியஸ்தர்களென்று சிவில்கோர்ட்டில் வழக்கிடுகிறார்கள்! தகப்பனார் அநுசரித்த மதமும் சம்பிரதாயங்களும் தங்களுக்கு உரியனவாமென்று நினைத்து அவைகளை ஏன் அநுசரிக்கவில்லையோ அறியோம்!! இதுதான் கலியின் கூத்துப்போலும்! "வெளியே சொன்னால் வெட்கம்" அடியில் வருவதை ஒவ்வொருவரும்படித்து வெளியே சொல்லாமல் இரகஸ்யமாய் வைத்துக்கொள்ளவேண்டும். காவேரி தீரத்திலுள்ள ஓரூரில் ஆங்கிலேய பாஷையைக் கற்று, விபரீதஞானமடைந்த சிலர் ஒரு சங்கம் கூடினார்கள். அவர்களுள் பிராமணர்கள் 3, முதலியார் 1, நாயுடு 1. இவ்வைந்து பேர்களும் சேர்ந்து ஏற்படுத்திய சங்கத்திற்கு "ஆச்சரிய (அல்ல, ஆசார)சீர்திருத்தச் சங்கமென்று பெயர்". ஆரம்பத்தில் ஜாதி வித்யாஸம் அவசியமில்லையென்ற ஓர் உபந்யாஸம் செய்து அதை எல்லோரும் ஆமோதித்தார்கள். முதலியார் எழுந்திருந்து 'ஆமோதிப்பது போதாது. அநுஷ்டிப்பதவசியம்' என்றார்; அதன்படி அவ்வைவர்களும் சம்மதித்து அருகிலிருந்த ஒரு சூத்திரப் பையனிடம் ஒரு பாத்திரத்தைக் கொடுத்து ஜலம் கொண்டுவரும்படி சொன்னார்கள். அவ்வாறே அவன் கொண்டுவந்தவுடன் இரண்டு பிராமணர்கள் அதை வாங்கி மடமடவென்று குடித்துவிட்டார்கள். முதலியாரும் நாயுடுவும் யாதொரு சங்கடமுமின்றி அருந்தினார்கள். கடை-

ஸியாக நின்ற பிராமணனுடைய மனம், அந்த ஜலத்தையுட்கொள்ளத் துணியவில்லை; பாத்திரத்தை உதடுவரையும் தூக்கினான்; அதை உட்கொள்ள மனம் இசையவில்லை. நீரைக் குடிக்காவிட்டால் மற்ற நால்வர்களும் அவன் மண்டையைப் பிளந்து விடுவார்கள். ஆதலின் அவர்களுக்கு ஸமாதானமாய் ஒன்று சொல்லவேண்டுமென்று முதலியாரை நோக்கி "ஐயா" நீர் ஏன் பிராமண்யத்தைக் கெடுக்கிறீர்? இதனால் நான் மாத்திரம் கெட்டுப் போகிறேனேயன்றி நீர் கெட்டுப்போகவில்லை. நாமெல்லோரும் ஜாதி வித்யாஸம் பாராட்டாமலிருப்பதற்கு வேறொரு வழியிருக்கிறது; இதோ 5 ரூபாய் கொடுக்கிறேன்; இதைக்கொண்டு ஒரு ஆடு வாங்கி நம்மூர்த் தோட்டியிடம் கொடுத்துச் சமையல் செய்யச்சொல்லி அவனுடன் நாம் சமபந்திபோஜனம் செய்யவேண்டும்; அப்படிச் செய்தாலன்றி நாம் ஜாதிவித்யாஸத்தை விட்டதென்பது ஏற்படாது என்றார். அதற்கு முதலியார் நான் பறையனுடன் சாப்பிடமாட்டேன்; அவன் தாழ்ந்த ஜாதி யென்றார். உடனே பிராமணன் நானும் இந்தத் தீர்த்தத்தை உம்முடன் சாப்பிடமாட்டேன்; நீர் தாழ்ந்த ஜாதி என்றார். பிறகு ஸபையானது சர்வாபாஸமாகிக் கலைந்துவிட்டது; எல்லோரும் இச்சங்கதியை வெளியே சொல்லுகிறதில்லையென்று பிரதிக்ஞை செய்துகொண்டு கலைந்து போனார்கள். ஆகா! என்ன அழகான ஸபை! அங்கத்தினர் செய்த காரியம் எவ்வளவு உபகாரமானது!

"கர்மத்தை எவ்வாறு ஒழிக்கலாம்" என்பது ஒரு கேள்வி. முள்ளை முள்ளாலேயே பிடுங்கி யெறிவதுபோலும் செம்பிலுள்ள களிம்பை அதற்கினமான புளியால் தேய்த்துப் போக்கடிப்பது போலும் கர்மத்தைக் கர்மத்தினாலேயே விலக்கிக் கொள்ளவேண்டும்; நாம் செய்யவேண்டிய கர்மம் இன்னதென்பதைக் கர்மயோகத்தில் அறிந்துகொள்ளலாம். உதாரணமாக: நாம் வெளியே செல்லும்போது, ஸ்திரீகளெதிர்ப்பட்டால் அவர்களைப் பார்க்கலாகாது; கண்ணை (நேத்ரவிருத்தியை) மூடிக்கொள்ளவேண்டும்; அஃதாவது வெளியேயுள்ள வஸ்துக்களைப் பார்க்கவிடாது, உள்ளேயுள்ள ஆத்மாவைப் பார்க்கும்படி (ஆத்மாபிமுகவிருத்தியை) பழக்கவேண்டும். மனுஷ்யன் வீட்டில் வந்தால் தன் பெண்சாதியாயினும் அவள் நிர்வாணியாயிருக்கும்பொழுது பார்க்கலாகாது. இதனால் கர்மத்தைக் கொஞ்சம் கொஞ்சமாய் வெல்லும் வழி

ஏற்படும். இன்னும் விரதாதிகளை அனுஷ்டிக்குமாறு கூறியிருப்பது சரீரத்தில் அபிமானமற்றுப் போவதற்காகவே. மனுஷ்யன் இம்மாதிரிக் கர்மங்களைச் செய்வதால் மனதைத் தன்வசமாக்கி, அதை ஈசுவரனுடைய பாதாரவிந்தத்தைப் பற்றும்படி கட்டிவிட்டு, ஞானத்தால் ஆத்மாவைத் தரிசித்து முடிவில் பிரஹ்மமாய் விளங்குகின்றான். மகா யோகியாயிருந்தாலும் அவன் கர்மம் செய்தே தீரவேண்டும். எவன் கர்மப்பிரஷ்டனாகிறானோ அவன் பதிதனென்பதில் தடையில்லை.

கர்மத்தை எப்போது விட்டு விடலாம்? கர்மத்தை எப்போதும் விட்டுவிடலாகாது. ஆனால் பிரஹ்மவிசாரணை செய்யும் போது சிறிதுகாலம் கர்மத்தை விட்டிருக்கலாம். மற்றக் காலங்களிலெல்லாம் கர்மத்தைச் செய்தே வருதல்வேண்டும். தூங்குகின்றவன் கைமலர்போல் கருமம் தானே நழுவவேண்டும். அதை நாமே சோம்பலினால் விட்டுவிடல் கூடாது.

"கொக்கு ஒட்டையைப் பழித்ததுபோல்" என்று ஒரு பழமொழியுண்டு. அஃதாவது ஒரு கொக்கு வழியே போய்க்கொண்டிருந்த ஒட்டையைப் பார்த்து 'உன் கழுத்து நீளம்' என்று பழித்தது! அதற்கு ஒட்டை, கொக்கை நோக்கி "நீ கண்ணாடியில் உன் கழுத்தைப் பார்த்துக்கொண்டால் என்னைப் பழிக்கமாட்டாய்" என்றது. அதுபோல் தற்காலம் பிராமணர்களைச் சூத்திரர்கள் பழிப்பதும், சூத்திரர்களைப் பிராமணர்கள் பழிப்பதும் வழக்கமாயிருக்கின்றன. உண்மையாக வேத சாஸ்திரங்களின் மூலமாகவும், ஸ்ரீகுருநாதன் மூலமாகவும் அநுக்ரஹம் பெற்றுத் தம் கடமையை நன்றாக அறிந்தவர்கள், இந்த அவிவேகிகளை இழுக்கும் போலிமதக் கலகவலையிற் சிக்கார். எல்லோரும் கடவுளின் திவ்ய குமாரர்களாகவிருக்கின்றனர். ஒவ்வொருவரும் ஒவ்வொரு தொழிற்புரிந்து இவ்வுலகத்திற்கு நன்மை செய்து வருவதைப் பார்த்து விவேகி ஆனந்தமடைய வேண்டும்.

T. K. இராமபத்ர சர்மா,
காளையார் கோவில்.

சந்திரனை விழுங்கின கழுதை.

[ஒரு கதை].

அயிறுக்கு விடுமுறை நாள் வந்தது. "அயிறு" என்றால் என்ன தெரியுமா? வண்ணார அருணாசலத்தின் கழுதை; அயிறுக்கு ஓய்வு என்னென்றால் பதிர்த் தொட்டங்கள் ஊதம் என்றர்த்தம். என்ன செய்கிறது? எல்லாருக்கும் தாக்ஷிண்ணியப் பட்டவன் அருணாசலம்; அவன் கழுதையை ஒருவரும் பட்டிக்கு ஓட்டிக் கொண்டு போகிற வழக்கமில்லை. ஆதலால் ஓய்வு நாட்களில் அயிறுக்குக் கொண்டாட்டந்தான். மூட்டைச் சுமக்க வேண்டுவது வேலையில்லை; நல்ல தீனி; மேலும் விடுதலை. ஏன் சந்தோஷமிராது?

அயிறுக்கு விடுமுறை நாள் வந்தது. அது பகல் முழுதும் தன்னிஷ்டப்படி ஊரெல்லாந் திரிந்து விலாப்புடைக்க மேய்ந்து விட்டுச் சூரியன் அஸ்தமித்த பிறகு தண்ணீர் குடிக்க வண்ணான் குளத்திற்குச் சென்றது. அன்று பௌர்ணமி தினம். சந்திரன் தனது பூர்ண கலைகளோடு மப்பு மந்தாரமில்லாத வானத்தில் தோன்றி மிகவும் அழகாகப் பிரகாசித்துக்கொண்டிருந்தான். அதனால், பூமியின் மீது, மாசு மறுவில்லாத ஒரு வெண் திரை போடப்பட்டது போலிருந்தது.

கழுதைக்குத் தாகம் பொறுக்க முடியவில்லை. உடனே அது சீக்கிரமாகக் குளத்திலிறங்கி நீர் குடிக்க ஆரம்பித்தது.

அயிறுக்குப் பின்புறமாய்க் குளக்கரைமீது சில பேர் சந்தோஷமாக உட்கார்ந்து வார்த்தையாடிக் கொண்டிருந்தார்கள். கிராமங்களில் பௌர்ணமி மிகவும் விசேஷமான தினம்; பட்டணங்களில் இரவிலே எப்போதும் நல்ல மின் வெளிச்சம் உண்டு. சந்திரனை ஒருவரும் எதிர்பார்க்கிறதில்லை. கிராமங்களில் அங்ஙனமன்று; அதிலும் பாழூரிலே பூர்ணசந்திரனுடைய தினத்தன்று எல்லாரும் வெண்ணிலவில் தங்களிரவைக் கழிப்பது வழக்கம்; மேலும், அக்கிரகாரத்தில் அப்பா! பிச்சு வையர் வீட்டுக்குத் திவட்டித் திருடர்கள் வந்து போனது முதல், அந்த ஊர் ஜனங்கள் இரவில் சரியானபடி தூங்குவதில்லை. ஓரிடத்தில் கூத்து; மற்றோரிடத்தில் கானம்; அக்கிரகாரத்தில் பஜனை; இவ்வண்ணம் இரவு முழுதும் சந்தடியாக இருக்கும் பாழூரில், பௌர்ணமியன்றால்

சந்தோஷத்திற்குக் கேட்பானேன்? ஆகையால் அன்று அவ்வூர் ஜனங்களிற் சிலர் வண்ணான் குளக்கரையில் காலம் போக்கிக் கொண்டிருந்தார்கள்.

அயிறு தண்ணீரில் வாயை வைத்துக் கொஞ்சங் கொஞ்சமாகக் குடித்துக் கொண்டிருந்தது. தாகசாந்தியினால் உண்டாகும் இன்பம் அதிக நேரம் நிலைத்திருக்கும் பொருட்டு, மெதுவாக நீருண்டது. அது தண்ணீரில் வாய்வைத்த இடத்திலே சந்திரனுடைய பிரதிபிம்பத்தைக் கரையிலிருந்தவர்கள் கண்டார்கள்.

அயிறு ஒரு வாய்த் தண்ணீரிழுத்தது. உடனே நீரின் மீது வட்டமான அலைகள் உண்டாகி சந்திரனுடைய பிரதிபிம்பத்தைக் கலைத்தன; அயிறுக்குத் தாகவிடாய் தீர்ந்துவிட்டது. அது கரையேறும் சமயமாக இருந்தது. அப்போது வானத்திலே வடமேற்கு மூலையில் ஒருசிறிய கருமேகம் தோன்றி அதிவிரைவாக ஆகாயமுழுதும் பரவிற்று; உடனே எங்கும் இருளாயிற்று; குளங்கூட இருளில் அமிழ்ந்தது.

அதனால் கரைமீதிருந்த கூத்து-சுப்பன் தன்னருகிலிருந்த உடையாரைப் பார்த்து; "என்ன! உடையாரே! அருணாசலத்தின் கழுதை சந்திரனை விழுங்கிவிட்டதுபோ லிருக்கிறதே" என்றான். எல்லாரும் கலைந்து வீட்டுக்குப் போய் விட்டார்கள். உடையான் தனது தெருவிலுள்ள கணக்கனிடத்தில் போய் "அருணாசலத்தின் கழுதை அயிறு சந்திரனை வாயில் போட்டுக் கொண்டது" என்றான்.

கணக்கன்:—நிஜந்தானா?

உடையான்:—ஆம். என்ன இருள்பார்!

கணக்கன் சோவியிடம் சென்று, "கேட்டாயா, சோவி ஒரு சேதி" என்றான்.

சோவி.—என்ன?

கணக்கன்:—அருணாசலத்தின் கழுதை நிலாவை விழுங்கி விட்டது.

சோவி:—நிலாவையா!

கணக்கன்:—ஆமாம்; என்ன இருட்டு பார். இந்தச் சேதியை ஒருவரிடமும் சொல்லாதே.

சோவி:—ஏன்?

கணக்கன்:—இது ரகசியம்.

சோவி:—ரகசியமா—சரி.

இதைக் கேட்டபோதே சோவிக்கு நாவில் தினவெடுக்க ஆரம்பித்தது. உடனேபோய் வெல்லக்கடை வாத்தியிடத்தில் சொன்னாள். வாத்தி நயினுவுக்குச் சொன்னான். நயினு அக்கிரகாரத்தில் மூக்கு ராமசாமி அய்யருக்குச் சொன்னான். மூக்கய்யர் கோட்டக்காரனிடமும், கோட்டக்காரன் மணியக் காரனிடமுமாக இக்ஷணம் வண்ணார அருணாசலத்தின் கழுதை நிலாவை விழுங்கின சேதி பாழூர் முழுதும் பரவிற்று.

பொழுது விடிந்தது. மந்தை வெளியில் கூட்டம். "சந்திரன் குளத்திலிறங்காது; கழுதையால் சந்திரனை விழுங்க முடியாது. ஆகையால் இந்தச்சேதி உண்மையாயிராது" என்று சிலர் சொன்னார்கள். அப்போது மூக்கு-ராமசாமி அய்யரும், அக்கய்யரும் சேர்ந்து "என்ன கழுதையால் சந்திரனை விழுங்க முடியாதா? உங்களுக்கென்ன தெரியும்? என்று சொன்னார்கள். உடனே "கேளும் உடையாரே" என்றார் அக்கய்யர்;" சென்ற வருஷம் சந்திர கிரஹணம் வந்ததே உனக்குத் தெரியுமா?

"தெரியும்" என்றார் உடையார்.

அக்கய்யர்:—சரி! ஒரு பாம்பு சந்திரனைச் சென்ற வருஷம் விழுங்கியிருக்க, அதே சந்திரனை ஒரு கழுதை இந்த வருஷம் விழுங்கக் கூடாதாயென்ன? தெரிந்ததா?

உடையார்:—அப்படியானால் இன்றைக்குக் கிரஹணம் சாமி.

அக்கய்யர்:- இந்தக் கிரஹணத்தைப் பஞ்சாங்கத்தில் காணோம். ஒருவேளை 8 நம்பர் பஞ்சாங்கத்தைப் பார்த்தால் தெரியும்.

இதற்குள் மாடுகளை ஓட்டிக் கொண்டு போவதற்கு வந்த பறக்கூத்தான் சொன்னதாவது: "ஒருவேளை சந்திரனை மேகம் மறைத்துக் கொண்டிருந்ததோ என்னமோ அதைப் பார்த்தீர்களா" ஐயமாரே?

"பறப்பயலே, உனக்கென்ன தெரியும்? உன் வேலையைப் பாரடா. நாங்கள் பேசிக்கொண்டிருக்கும்போது நடுவில் வந்து உளறுகிறாய். மாடுகளை ஓட்டிக்கொண்டு போ. இதெல்லாம் உனக்குத் தெரியாது" என்று படபடப்புடன் சொன்னார் மாப்பிள்ளை அப்பய்யர்.

எல்லாரும் சேர்ந்து, அன்றிரவு சந்திரன் தோன்றாவிட்டால் கழுதை நிலாவை விழுங்கினது உண்மையே யெனத் தமக்குள் தீர்மானஞ் செய்துகொண்டார்கள். உடனே கூட்டங் கலைந்து, ஒவ்வொருவனும் இரவை எதிர் பார்த்துக் கொண்டிருந்தான்.

(வரும்)

N. சுப்பிரமணிய அய்யர்,
புதுவை.

கதா விநோதமாலை.

All Rights Reserved.

முன்னொருகாலத்தில் இவ்வவந்தியின்கண் ஜெகதத்தன் என்னுமொரு அரசன் அரசுபுரிந்து வந்தனன். இவன் மிகச் செல்வம் படைத்தவன். அவனுக்குத் தன்னிடம் யாசிப்போர்க்கு லக்ஷம் பொன்னுக்குக் குறைந்து கொடுப்பதே தெரியாது. எவருடனேனும் அவன் சிறு பேச்சுவார்த்தையாடினால் அவனுக்கு லக்ஷம் கொடுப்பான். அவன் வறுமையாளர்களின் வறுமைக்கு வறுமையைச் செய்துவந்தான். இதனால் ஜகதத்தன் என்னும் அவனுடைய பேர் பிரசித்தி படைத்திருந்தது. அவ்வரசனுடைய மாளிகையின் வாசலில் சுதமாதத்தன் என்பவன் அல்லும் பகலும் உட்கார்ந்திருப்பான். அவனது ஆஸ்தி அவன் இடுப்பில் கட்டிக்கொண்டிருந்த ஒரு கந்தைத்துணி மாத்திரமே; அவன் தலையில் சடை விழுந்திருந்தது. அவன் கோடைகாலத்திலும் மாரிகாலத்திலும் அவ்வரண்மனை வாசலைவிட்டு நகருவதில்லை. அரசன் சுதமாதத்தன் அரண்மனை வாசலைக் காத்திருப்பதைப் பார்த்துக்கொண்டே போவான். சுதமாதத்தன் அவ்வரண்மனை வாசலில் காத்திருந்து மிகக் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தான். அரசன் தயாளுவாயிருந்தும் கொடையாளியாயிருந்தும் சுதமாதத்தனுக்கு யாதொன்றும் கொடுக்கவில்லை.

ஒருநாள் அரசன் வேட்டையாடக் காட்டிற்குச் சென்றபொழுது அவனைத் தொடர்ந்து கையில் ஒரு தடியை யெடுத்துக்கொண்டு ஸுமாதத்தன் போனான். வனத்தில் மன்னவன் கையில் வில்லேந்தி வாகனத்தின்மீது அமர்ந்தான். அவனைச் சுற்றிலும் சேனையிருந்தது. அரசன் அம்புமாரிபொழிந்து புலி, காட்டுப்பன்றி, மான் முதலியவைகளைக்கொன்று கொண்டிருந்தான். அப்பொழுதும் கால்நடையயிருந்த ஸுமாதத்தன் அவ்வரசனுக்கு முன்பாகத் தனியாய்த் தன் தடியால் பல மிருகங்களைக் கொன்றுகொண்டிருந்தான். அரசன் இதனைப்பார்த்து "இவன் மிகவும் பராக்ரமசாலியா யிருக்கிறான்" என மனத்தில் மெச்சிக்கொண்டான். இவ்வாறிருந்தும் இறைவன் அவனுக்கு யாதொன்றும் கொடுக்கவில்லை. அரசன் வேட்டையாடிக் களைத்தபின் விடாயாற்றிக் கொள்ளத் தன் நகரமடைந்தான். ஸுமாதத்தன் மீண்டும் முன்போலவே அவ்வரசன் மாளிகை வாசலில் உட்கார்ந்திருந்தான்.

பின்பு ஒருநாள் ஸுதத்த மன்னவன் தனது தேசத்தின்மீது படையெடுத்து வந்திருந்த பகைவர்களை எதிர்த்து முறியடிக்கச் சென்றான். அவ்விடம் ஒரு பெரும் போர் நடந்தது. அந்த யுத்தத்தில்ஸுமாதத்தன் அரசன் முன்னிலையில் தன் கருங்காலித் தடியால் பல பகைவர்களைக் கொன்று சௌரியத்தைக் காட்டினான். அரசன் தன் சத்துருக்களைத் தோற்கடித்துத் தன் நகருக்குத் திரும்பினான். ஆனால் ஸுமாதத்தன் பராக்கிரமத்தைப் பார்த்தும் அவனுக்கு ஒன்றும் கொடுக்கவில்லை. இவ்வாறு ஸுமாதத்தன் கஷ்டப்பட்டுக்கொண்டு ஐந்து வருஷங்களைப் போக்கினான்.

ஆறாவது வருஷம் பிறந்தபிறகு ஒருநாள் வேந்தன் ஸுமாதத்தனைப் பார்க்கையில் மன்னனுக்கு தயையுண்டாகி "இவ்வளவு காலமாய் வருத்தப்படுகிறான்; நாமிவனுக்கு ஒன்றுங் கொடுக்கவில்லை; ஆகையால் இவனுக்குத் தெரியாதபடி இவனுக்கேதாவது கொடுத்துப் பார்ப்போம். இந்த நிர்ப்பாக்கியனுடைய பாவம் இன்னும் அற்றுப்போய்விட்டதோ இல்லையோ வென்பதையும் இலட்சுமி கடாட்சம் இவனிடம் உண்டாயிருக்கிறதோ இல்லையோ வென்பதையும் பார்த்துவிடலாம்" என்று ஆலோசித்தான். பின் தன் பொக்கிஷத்தில் நுழைந்து ஒரு கொடி யெலுமிச்சம்

பழத்தை யெடுத்து அதை இரண்டாய்ப் பிளந்து, அதில் இரத்னங்களை நிரப்பி ஒரு வம்புடம்போலச் செய்தான். பின்பு மன்னவன் தன் ஆஸ்தான மண்டபத்திற்கு வெளியில் சபைகூட்டிக்கொண்டிருந்தான். அதற்கு அந்நகரத்து ஜனங்கள், பட்டம் கட்டிய சிற்றரசர்கள், அமைச்சர்கள் முதலிய யாவரும் வந்தனர். அவர்களுடன் ஸுமாதத்தனும் வந்து சேர்ந்தான். அப்பொழுது அரசன் அன்புடன் "ஏ ஸுமாதத்தா? இங்கே வா" வென்று கூப்பிட்டான். அவன் அரசன் தன்னை யழைத்தது கேட்டு மகிழ்வுற்று அரசனுக்கு எதிரில் நின்றான். அரசன் அவனை "ஏடா ஸுமாதத்தா? நீயாக ஒரு சுலோகத்தை இயற்றிச் சொல்" என்று கட்டளையிட்டான்; அதைக்கேட்டு ஸுமாதத்தன் அடியிற் கண்ட பொருளுள்ள ஒரு சுலோகத்தைக் கூறினான்:— நதிகள் யாவும் நிறைந்திருக்கும் கடலை யடைந்து நிரப்புகின்றன; வறண்டு கிடக்கும் குளங்கள் குட்டைகளை நிரப்புகிறதில்லை. அம்மாதிரியாகவே இலட்சுமி தேவியானவள் செல்வமுள்ளவர்களுக்கு மேலும் மேலும் கொடுக்கின்றாள்; நிர்ப்பாக்கியனா யிருப்பவன் கண்ணில் படுவதில்லை.

அரசன் மேற்கண்ட கருத்துள்ள சுலோகத்தைக் கேட்டுச் சந்தோஷமடைந்து விலையுயர்ந்த இரத்னங்கள் நிறைந்த அவ்வெலுமிச்சம் பழத்தை அவனுக்குப் பரிசாகக் கொடுத்தான். அச்சமயத்தில் அச்சபைக்கு வந்திருந்தோர் சிலர் மரியாதையால் ஒருவரைப் பார்த்து ஒருவர் "இந்த ஸுமாதத்தன் எவ்வளவு நிர்ப்பாக்கியனா யிருக்கிறான். மன்னவனுக்கு யாரிடம் கிருபை உண்டாகின்றதோ அவர்களின் வறுமைக்கு வறுமை வந்துவிடுமே? இப்பொழுதோ இந்த வறுமையை அனுபவித்த கலைஞர்களும் பார்க்கப் பிரியமாய்ப் பேசி முடிவில் ஒரு எலுமிச்சம் பழத்தைக் கொடுத்திருக்கிறார்? உண்மையாகவே யாவருக்கும் இஷ்டத்தைக் கொடுக்குங் கற்பக விருக்ஷமானது அதிருஷ்டஹீனன் போனால் புரசை மரமாகி விடுகிறது" என்று பேசிக்கொள்ளத் தலைப்பட்டார்கள்.

அந்த ஸுமாதத்தன் இரத்னங்கள் நிறைந்த அந் நாரிஞ்சிப் பழத்தைப் பெற்றுக்கொண்டு தூக்கிக்கொண்டு வெளியே செல்லுகையில் "ராஜவந்தி" என்னும் புத்த சந்நியாசினி எதிரே வந்தாள். அவள் நாரிஞ்சிப் பழத்தைப் பார்த்து அது

சிறந்ததென்று நினைந்து க்ஷேமாதத்தனுக்கு ஒரு துணியைக் கொடுத்து அப்பழத்தை வாங்கிக்கொண்டு அரசனுக்குக் காணிக்கையாகக் கொண்டு கொடுத்தான். அரசன் அது தான் கொடுத்த பழமென்றறிந்து அப்புத்த சன்னியாசியை "உமக்கு இப்பழம் எவ்வாறு கிடைத்தது" என வினவினன். அதற்கு அப்புத்த சன்னியாசி தனக்கு க்ஷேமாதத்தன் கொடுத்தான் என்றார். அரசன் அதைக் கேட்டு வியப்புற்று அந்தோ? அவ்வேழைப்பிராமணன் தீவினை இன்னும் நீங்கவில்லையே? எனத் துக்கித்து அதனை எடுத்துக்கொண்டு ஒரு நிமிஷம் கழிந்து சபையினின்று எழுந்திருந்து தன் நித்ய கர்மானுஷ்டானஞ் செய்யச் சென்றான். க்ஷேமாதத்தன் அத்துணியை விற்று ஆகாரஞ் செய்துவிட்டு எப்பொழுதும்போல அரச மாளிகையின் வாசலில் உட்கார்ந்திருந்தான்.

மறுநாளும் மன்னவன் முதனாளைப் போல ஒரு பெரிய சபை கூட்டினன். நகரத்திலுள்ள ஜனங்கள் யாவரும் அரசனைக் காண வந்தனர். அங்கு க்ஷேமாதத்தனும்வந்து சேர்ந்தான். அரசன்க்ஷேமாதத்தனைப் பார்த்து முன்போலவனைத் தன்னருகில்வரவழைத்து, அவனையுட்காரவைத்து, அவன் முன்னர்கூறியசுலோகத்தைமீண்டுஞ் சொல்லச் சொல்லி சந்தோஷமடைந்து முதல் நாள் கொடுத்ததுபோல உள்ளே இரகசியமாய் இரத்தினங்கள் வைக்கப்பட்ட ஒரு எலுமிச்சம் பழத்தை அவனுக்கு இனமாக அளித்தான். அதனைப் பார்த்து சபையோர் ஒருவர்க்கொருவர் "இப்பொழுது இராஜ சந்தோஷம் வீணாய் விட்டதே? இவன் தரித்திரம் இன்னும் தீரவில்லை." எனப் பேசிக்கொண்டனர். அந்த க்ஷேமாதத்தனும் அப்பழத்தைப் பெற்றுக்கொண்டு வெறுப்படைந்து "அரசன் இரண்டாந் தடவை கருணை கூர்ந்தும் வீணாகி விட்டது" என்று நினைத்துக்கொண்டு வெளியில் போனான். அப்பொழுது அவ்விராஜ்ஜியத்தில் வந்த ஒரு புது உத்தியோகஸ்தன் எதிரே வந்தான். அவன் க்ஷேமாதத்தன் கையிலிருந்த பழத்தைப் பார்த்து அதனைத் தனக்குக் கொடுக்கும்படி வேண்டி, ஒரு ஜோடி வஸ்திரம் கொடுத்து அப்பழத்தை விலைக்கு வாங்கி அரசனவைக்களத்திற்குச்சென்று எலுமிச்சம் பழத்தைக் காணிக்கையாகக் கொடுத்தான். அரசன் அது தான் கொடுத்த பழமென்றறிந்து அவனை "உனக்கு இப்பழம் ஏது" என வினவினன். அதற்

கவன் அது தனக்கு க்ஷேமாதத்தனிடமிருந்து கிடைத்ததென்று கூறினான். அதனைக் கேட்டு வேந்தன் "அந்தோ? இலக்ஷ்மிக்கு இன்னும் இவனிடம் மனமிரங்கவில்லையே" என்று ஆலோசித்து மிக்கத் துக்கித்து சபையை விட்டு எழுந்திருந்தான். க்ஷேமாதத்தன் வேஷ்டியைக் கடை வீதிக்குக் கொண்டு போய் அங்கு ஒரு துணியை விற்று ஆகாரஞ் செய்து கொண்டு மற்றொரு துணியை இரண்டாய்க் கிழித்துத் தான் உடுத்திக்கொண்டான்.

திரும்ப மூன்றாம் நாளும் அரசன் சபை கூட்டினன். அதற்கு முன்போல நகரத்தாரனைவரும் க்ஷேமாதத்தனும் வந்து சேர்ந்தனர். அரசன் க்ஷேமாதத்தனை யழைத்து அவன் முன்னர்க்கூறிய சுலோகத்தை மீண்டும் சொல்லச் செய்து முன்போல் ஒரு எலுமிச்சம்பழத்தையே கொடுத்தான். இதனைப்பார்த்துயாவரும் ஆச்சரியமடைந்தனர். க்ஷேமாதத்தன் அதைப் பெற்றுக்கொண்டு வெளியேபோய்த் தன்னெதிரேவந்த அரசனுடைய ஆசைநாயகியாகிய ஒருதாசியிடம் கொடுத்தான். இராஜ வன்மானமாகிய விருக்ஷத்தின் மெல்லிய கிளையைப் போன்ற அவ்வரச நாயகியானவள் க்ஷேமாதத்தனுக்குப் பின்னாலுண்டாகப் போகும் பலனுக்கு அறிகுறியாக (ஒரு கிளை புஷ்பம் கொடுப்பதுபோல) அவனுக்கு ஒரு பொன் நாணயம் கொடுத்தாள். க்ஷேமாதத்தன் அன்றைய தினம் அதை வைத்துக்கொண்டு ஆனந்தமாயிருந்தான். அம்மையல் கொண்ட தையல் அரசனிடம்சென்று பிரியத்துடன் பருத்தும் அழகாயுமிருந்த அப்பழத்தைக் கொடுத்தனள். அரசன் அது தான் கொடுத்த பழமென்றறிந்து தன் காதலியை "அது எவ்விடம் கிடைத்தது" என வினவினன். அதற்கவள் "எனக்கு க்ஷேமாதத்தன் கொடுத்ததாகக் கூறினள். இதனைக்கேட்டு அரசன் சிந்தையுற்று "இன்னுங்கூட திருமகள் கடாக்ஷம் அவன் மீது படவில்லையே? அவன் தீவினை இன்னும் அழியவில்லை யாகையால் அவன் நான் கொடுக்கும் பரிசுகளைப் பயனற்றதாக வெண்ணுகின்றான். அந்தோ இதற்கு என்ன செய்வது? எனத் துக்கித்து எலுமிச்சம்பழத்தை ஓரிடம் பத்திரமாய் வைத்துவிட்டு எழுந்து தன் நித்ய கர்மானுஷ்டானங்களைச் செய்யத்தொடங்கினான்.

மறுபடி எல்லாம் நாளும் வேந்தன் முன்போலவே சபைகூட்டினான். அதனில் சிற்றரசர்கள், அமைச்சர்கள், நகரவாசிகள் முதலியவர்கள் மிகுதியாய் வந்திருந்தமையால் மிக்க நெருக்கமாயிருந்தது. அங்கு சூமாதத்தனும் வந்திருந்தான். அவனை அரசன் அண்மையில் வரவழைத்து, உபசாரஞ்செய்து, முன் போல சுலோகத்தைச் சொல்லச்சொல்லிக் களிப்படைந்து இரு அதே எலுமிச்சம்பழத்தைக் கொடுத்தான். அது காரி கன் கையில் வந்ததும் தவறிக் கீழேவிழுந்து இரண்டு துண் பிரிந்து, உடனே உள்ளே மறைத்து வைக்கப்பட்டிருந்த இரத்தினங்கள் வெளியில் விழுந்து சபாமண்டபத்தைப் பிரகாசிக்கச் செய்தன. இதனைப்பார்த்து ஜனங்கள் "ஆ! இதோ! இந்த மர்மம் நமக்குத் தெரியாததால் மூன்று நாள் வீண் பிரமைகொண்டிருந்தோம். மன்னவன் கருணை இவ்வாறன்றோ இருக்கின்றது" எனப் பேசத்தலைப்பட்டனர். அதனைக் கேட்டு சோமன் "இவனுக்கு இலட்சுமி கடாக்ஷமுண்டாயிருக்கின்றதா வென்பதை அறியவே இவ்வாறு பரீக்ஷை செய்தேன். மூன்று நாளாய் இவன் பாபம் தீரவில்லை. இன்றையதினம் இவன் பாபம் தீர்ந்துவிட்டமையால் இன்று இலக்ஷ்மி அவனுக்குப் பிரஸன்னமாயிருக்கிறாள்" எனக்கூறி அவனுக்கு அவ்விரத்னங்களோடு கிராமங்கள், யானைகள், குதிரைகள் முதலியவைகளைக் கொடுத்து அவனை ஒரு சிற்றரசனாக்கினான். சபையோர்களும் நகரவாசிகளும் மன்னவனை மெச்சிக்கொண்டார்கள். அரசன் சூமாதத்தனுக்கும் சபையோர்க்கும் விடைகொடுத்துவிட்டுத் தான் தன் மாளிகைக்குச் சென்றான்.

மேற்கூறிய சரிதத்தால், பொறுத்தவர் பூமியாள்வார் என்பதும், அவசரப்படுவது கூடாதென்பதும், சௌரியம் வாய்ந்தவன் மேன்மையடைவான் என்பதும், கொடையால் புகழுண்டாகுமென்பதும், முற்காலத்தில் குடிகள் இராஜ சபைக்குச் செல்வது வழக்கமாயிருந்ததென்பதும், ஆய்ந்தோய்ந்து பாராது தோன்றியபடி கூறும் ஜனங்களின் வாயை மூடுவது கூடாமையென்பதும் பிறவும் வெளியாகும்.

Pandit M. M. Narayanasamy Aiyar,
Mudikondan.

சர்வஞ் சின்மயம்.

"அருங்கற் பனையின் விரைந்தேக வந்தேன் மலைசால் வியும்
புயனென், சுருக்கச் சொல்லும் பயன்சேராய் தோன்ற விக்குள
ளாவுஞ்சிந், தொருங்கப் புறத்தாந் திக்கெல்லை யுள்ளதுஞ் சக்
கெல்லைபற, செருங்குற் றனுந் சித்தி யான்சித்த சீசித் தலை
நிறைசித்தே"

என்று வாசிட்டம் கூறுவதைச் சிறிதூன்று நோக்குவோமாயின் "சர்வம் சின்மயமே" என்று செவ்விதாய் விளங்கும்.

சர்வம் சின்மய மென்பது வடமொழி வாக்கியமாம். எல்லாம் அறிவின் காரியமென்பது இதன் பொருளாம். "எல்லாம்" என்பது நான்முகப்பிரமன் முதல் அரும்பீறாக வுள்ள (தேவர், மக்கள், நாகர், விலங்குகள், ஊர்வன, பக்ஷிகள், பூச்சி புழுக்கள், தாவரங்கள், பொன், கல், முதலிய) சேதன சேதனத் தொகைமான பௌதிக உலகங்கள் யாவையுங் குறிக்குஞ் சொல்லாம்.

அதிஷ்டானமாயும் சாஸ்திரப் பிரமாணத்தினுற் சித்திக்கும் சுவர்க்க நரகங்களும், மற்ற அண்டங்களும் "எல்லாம்" என்னும் பதத்தில் அடங்கு மென்றறிதற் பாலதாம். "சித்து" அல்லது அறிவென்பது ஆன்மா அல்லது பிரஹ்ம வடிவ ஞானமாம். "மயம்" என்பது காரியம் அல்லது வடிவமாம்.

"எல்லாம் பிரஹ்ம வடிவ அறிவின் காரியம் அல்லது எல்லாம் பிரஹ்ம வடிவமேயாம்" என்பதிதன் திரண்ட பொருளாம்.

காரணமின்றிக் காரியந் தானே உண்டாதல் கூடாதென்பது நியாயமாதலால், சர்வஜீசியப் பிரபஞ்சங்களும் ஒரு காரணத்தினின்று தான் உண்டாயிருத்தல் வேண்டும். இக்காரணந்தான் பிரஹ்மம். பிரஹ்மம் எங்ஙனம் உலக காரணமாமோ அதைச் சற்று ஆராய்வாம்.

காரணம் இருவகைத்து. ஒன்று உபாதானம்; மற்றொன்று நிமித்தமாம். ஒரு குடத்திற்கு மண் உபாதான காரணமும் குயவன் நிமித்த காரணமுமாம்.

காரியப் பிரபஞ்சங்களுக்கு பிரஹ்மம், குடத்திற்கு மண்ணைப் போல் உபாதானமா? அல்லது குலாலனைப் போல் நிமித்தமா? என்ற சந்தேகம் உண்டாகலாம். பிரஹ்மம் ஒன்றே உலகத்திற்கு உபாதானமாயும் நிமித்தமாயும் இருக்கிறது. சிலந்திப் பூச்சி, தன் வலைக்குத்தானே உபாதானமாயும் நிமித்தமாயும் இருத்தல் போலாம். இங்ஙனங் கூறின்,

"சிலந்தியின் ஜடசரீரம் அதன் வலைக்கு உபாதானமா[க]; சேதனம் நிமித்தமாயும் இருக்கிறது. இங்ஙனமே பிரஹ்மத்தின் ஜட சரீரம் உலகத்திற்கு உபாதானமாயும் சேதனம் நிமித்தமாயும் இருத்தல் வேண்டும். இருக்கவே பிரஹ்மத்தினிடத்தில் பரஸ்பரம் விருத்தமான ஜடசேதன பாகங்கள் சித்திக்கும். சித்திக்கவே பிரஹ்மமாகிய சேதனம் கண்டமாய், கண்டப் பொருள்கள் எங்ஙனம் அநித்தமாமோ அங்ஙனமே பிரஹ்மமாகிய சேதனமும் அநித்தமாய் முடியும். ஆதலால் பிரஹ்மத்தினிடத்தில் ஜகத் காரணத் தன்மையைக் கூறுதல் நல முடையதாகுமா" வென்று சந்தேகம் உண்டாகலாம். மேற்கூறிய சிலந்தி திருஷ்டாந்தத்தில் சிலந்தியின் சரீரம் வலைக்குப் பரிணாமி உபாதன காரணமாம். உபாதான காரணம் ஆரம்பம், பரிணாமம், விவர்த்தமென மூவகைத்து. ஒரு சரீரத்திற்கு, கை, கால், தலை, உடல் முதலியன ஆரம்ப உபாதன காரணங்களாம். தயிர்க்குப்பால் பரிணாமி உபாதன காரணமாம். (கயிற்றரவு திருஷ்டாந்தத்தில்) அரவிற்குக் கயிறு விவர்த்தோபாதானமாம்.

உலகிற்குப் பிரஹ்மம் விவர்த்தோபாதான காரணமேயன்றி பரிணாமி உபாதானமன்று. பிரஹ்மத்தை உலகிற்கு ஆரம்ப பரிணாமி உபாதானமென்று கொண்டாலல்லவோ பரஸ்பர விருத்தமான ஜட சேதன பாகங்களாகிய இரண்டு சத்தியப் பொருள்கள் சித்திப்பதன் மூலமாய் "ஏகமேவாத் விதீயம் பிரஹ்மம்" என்ற சுருதிக்கு விரோதமாய்ப் பிரஹ்மம் கண்டமாயும் அநித்தியமாயு முடியும். விவர்த்தோபாதானமாகக் கொண்டால் யாதும் விரோதமின்றாம். எங்ஙனம்? கயிற்றில் தோன்றும் அரவு தோற்ற மாத்திரத்தில் விளங்கி, தனது விவர்த்தோபாதன காரணமாகிய கயிற்றின் இருப்பிற்கு விரோதியாவதில்லையன்றோ? அங்ஙனமே சர்வப் பிரபஞ்சங்களும் தோற்ற மாத்தி-

ரத்தில் விளங்குங் காலத்தும் தமது விவர்த்தோபாதான காரணமாகிய பிரஹ்மத்தின் இருப்பிற்கும், விளக்கத்திற்கும் விரோதியாவதில்லையாம். ஆதலால் பிரஹ்மம் உலகத்திற்கு அபின்ன நிமித்தோபாதான விவர்த்த காரணமெனச் சித்தித்தது.

"ஆம். கயிற்றரவு திருஷ்டாந்தத்தில் மயக்கம் நீங்கிக் கயிறென்றறிந்த பின்னர் பாம்பு தோன்றுவதில்லை. பிரஹ்மத்தைத் தவிர உலகம் இன்றென்றுணர்ந்த பின்னரும் உலகந் தோன்றுகின்றதே" யெனின் கானலிற் றோன்றும் நீர் கானலைத் தவிர இன்றென்றுணர்ந்த பின்னரும் கானல் ஜலம் தோற்றுவது போல பிரஹ்மத்தைத் தவிர உலகம் இன்றென அறிந்த பின்னரும் உலகம் தோற்றும். இத்திருஷ்டாந்தமும் தவறுடையதாகும். ஏனெனில் கானல் நீர் அநுபவ போக்கியமன்றாம். ஆனால் உலகமோ கண், காது மூக்கு முதலிய இந்திரியங்களுக்கு அநுபவ போக்கியமாம். ஆதலால் மனத்தினிடத்திற் றோன்றும் சொப்பன உலகைப் போல் பிரஹ்மத்தினிடத்தில் சர்வ திருசியப் பிரபஞ்சங்களும் தோற்றுகின்றன. சொப்பன உலகிற்கு உபாதானமும், நிமித்தமும் மனமே யாவதுபோல சர்வ திருசியப் பிரபஞ்சங்களுக்கும் உபாதானமும் நிமித்தமும் பிரஹ்மமேயாம்.

இக்காரணத் தன்மை மாயா உபஹித பிரஹ்மத்திற்கே சித்திக்குமே யன்றி சுத்தப் பிரஹ்மத்திற்குச் சித்திப்பதில்லையாம். தானே பாம்பாகத் தோற்றக்கூடிய சக்தி கயிற்றில் இருப்பதால் தான் பாம்பு தோன்றுகிறது; இங்ஙனமே தானே உலகமாய்த் தோற்றக்கூடிய சக்தியையுடைய பிரஹ்மந்தான் விவர்த்தோபாதானமாகும். அச்சக்தியற்ற சுத்தப்பிரஹ்மம் விவர்த்தோபாதான காரணத் தன்மையைப் பெறுவதில்லையாம். என்? சக்தி (காரிய உலகம்) இன்மையின் எங்ஙனம் பிரமம் நீங்கிய காலத்தில் கயிற்றினிடத்தில் தோன்றிய பாம்பானது மித்தையாய் அங்ஙனம் பாம்பாகத் தோற்றுவிக்கும்படியான கயிற்றின் சக்தியும் மித்தையாய்ப் போகின்றனவோ அங்ஙனமே ஒரு காலத்தில் நானாவாகத் தோற்றும் சர்வப் பிரபஞ்சமும் மித்தையாய் இங்ஙனம் தோற்றுவிக்கும்படியான பிரஹ்மத்தின் சக்தியும் மித்தையாய் முடிகின்றன. ஆதலால் சுத்தப் பிரஹ்மம் ஒன்றே சத்தியம், சக்தியான மாயை மித்தையாமெனப் பெறப்பட்டது.

பிரஹ்மம் சத்தியமெனக் கொண்டால் முக்காலத்தும் இருக்க வேண்டும். உலகம் தோன்றும்போதும் பிரஹ்மம் தோற்ற வேண்டும். அப்படி உலகம் தோன்றும்போதும் பிரஹ்மம் தோற்றுவது யாருக்கும் அநுபவமில்லை. ஆதலால் பிரஹ்மம் சத்திய மென்பது எங்ஙனங் கூடு"மென்பது சிலருக்குச் சந்தேகம் உண்டாகலாம். பிரஹ்மம் உலகம் தோன்றும்போதும் தோன்றிக் கொண்டேயிருக்கிறது. இது யாவருக்கும் அநுபவமேயாம்; எங்ஙனமெனின், இது பாம்பு என்னும் பிரமம் நீங்கிய காலத்து "இது கயிறு" என்கிற உண்மை ஞானம் உண்டாகின்றது. "பாம்பு" என்கின்ற விசேஷ ஞானம் உள்ளபோது "கயிறு" என்கிற விசேஷ ஞானம் இல்லாமலிருக்குமேயன்றி மயக்க காலத்திலுள்ள இது என்கிற சாமான்ய ஞானம் தெளிவு காலத்தில் இல்லாமலிருக்கவில்லை. மற்றோ, மயக்க காலத்திலும் தெளிவு காலத்திலும் அநுகதமாயிருக்கின்றது.

இங்ஙனமே மித்தையாகிய சர்வ திருசியப் பிரபஞ்சங்களும் தோற்றுகிற காலத்திலும் பிரஹ்மம் சாமான்ய வடிவமாய் இருந்துகொண்டு, அம்மித்தையாகிய பிரபஞ்சங்களை விளக்கிக் கொண்டும் முக்காலத்திலும் பாதிக்கப்படாமல் சத்தியமாயிருக்கின்றது. உலகப் பொருள்களெல்லாம், அஸ்தி, பாதி, பிரியம், நாமம், ரூபம் என்னும் ஐந்து அம்சங்களோடு கூடியனவாயிருக்கின்றன.

கடமென்னும் பெயர் "நாமமாம்". வளைவு குவிவு முதலியன அதன் "ரூபங்களாம்". கடம் இருக்கிறதென்பது "அஸ்தியாம்". கடம் விளங்குகின்றதென்பது பாதியாம். அது வேண்டுமென்னும் இச்சைக்கு விஷயமாயிருப்பதால் பிரியமாம்." இவற்றில் அஸ்தி, பாதி, பிரியவடிவ மூன்று அம்சங்களும் சகல பதார்த்தங்களிலும் வியாபகமாயிருக்கின்றன.

ஒரு பதார்த்தத்திற்குள்ள நாமரூபங்கள் மற்றொரு பதார்த்தத்திற்கில்லையாம்; ஆதலால் அவ்வியாபகமாம்.

ரஜ்ஜு சர்ப்பாதிகளில் அநுகதமான "இது" என்னும் அம்சம் எங்ஙனம் சத்தியமோ அங்ஙனமே எல்லாப்பதார்த்தங்களிலும் வியாபகமான அஸ்திபாதி பிரியங்கள் அதிஷ்டானமாயும் சத்தியமாயும் இருக்கின்றன.

கயிற்றரவுகள்போன்று நாமரூபங்கள் கற்பிதமாயிருக்கின்றன. ஆதலால் அஸ்தி, பாதி, பிரியங்கள் சேதநாம்சங்களாம். நாமரூபங்கள் அவித்தை அல்லது மாயையின் அம்சங்களாம். இச்சேதநாம்சங்கள் சர்வதிருசியப் பிரபஞ்சங்களுக்கு மூலாதாரமே. கற்பிதமாகிய நாமரூப அம்சங்களை யொழித்து நோக்கின் அவை சின்மயமாகவே விளங்குகின்றன. ஆதலால் முன் "ஸர்வம் சின்மயம் நானென்பது சிந்தித்தும் இன்று ஒன்றேயுள்ளது. இரண்டாவதில்லை" என்று சுருதிகள் கூறுகின்றன. இங்ஙனம் எல்லாம் பிரஹ்ம வடிவமாக நோக்குவதே அகண்டாகார விருத்தியெனப்படும். இதனை யிடைவிடாது அப்பியசிப்பதால் அனாதியாகத் தரத்தக்கவித்தவிசேஷங்கள் யாவும் ஒழிந்து அகண்டைகரச சொரூபமாய் விளங்கலாம். ஆதலால் "சர்வம் சின்மயம்" என்கின்ற பாவனையை மனிதப் பிறவி யெடுத்தவர்கள் ஒவ்வொருவரும் இடைவிடாது அப்பியசித்து அகண்டைகரச சொரூபமாய் விளங்க முயலுதல் வேண்டும்.

கு. சுப்பிரமணிய ஐயர்,

திருவேட்டீசுவரன் பேட்டை, சென்னை.

காமத்தால் வரும் கெடுதி.

(1) திருப்பதிமலை யோரத்துள்ள கிராமங்களுள், ஒரு கிராமத்தில் வேங்கடராமனென்னுமொரு உழவனிருந்தான். அவன் செயற்கை யறிவிற் குறைந்தவனாக விருப்பினும் இயற்கை யறிவில் மேம்பட்டுச் சமயோசிதமாகப் பேசுதலும் செய்யத் தக்கவற்றைத் தக்க காலங்களிற் செய்து முடித்தலும், தனது கிராமத்தாரிடத்தும் தனது கிராமத்தைச் சூழ்ந்துள்ள கிராமத்தாரிடத்தும் அன்பாயிருந்தது முதலியவற்றால் சிறந்தான். அவன் ஒருநாள் காலையில் மலையோரத்துள்ள தனது விளைநிலத்தில் ஏர் கட்டி உழுதுகொண்டிருக்கும்போது, ஒரு வேட்டைப்புலி, மலையினின்றிறங்கி மிகு வேகமாக அவ்வுழவனருகிற் பாயவந்தது. அவன் புலியின் பாவனையை யறிந்திருந்தவனாதலால், புலியை நோக்கிப் "புலியரசே! நீயேன் வேகமாகப் பாய வருகின்றீர், உமக்கு யாது வேண்டும்? அதைக் கூறினால், தவறாது யான் கொடுக்கின்றேன்" என்று கூறினான். அதுகேட்டு, அப்புலி சற்று

யோசித்து நின்று, இவனுக்கு நமது பாஷை தெரிந்திருந்தால் இவனைக் கொல்லுதலடாது; இவனது கலப்பையிற் கட்டியுள்ள கொழுத்த விவ்விரண்டு எருதுகளையும் கொன்றுண்பதே தக்கதாமென்று தீர்மானித்து, அவ்வுழவனை நோக்கி 'ஓ உழவனே!' உனக்கு எங்களுடைய பாஷை தெரிந்திருக்கின்றமைபற்றி, உன்னைக் கொன்றுண்ண எனக்கெண்ணமுண்டாகவில்லை; உன்னுடைய இவ்விரண்டெருதுகளும் நன்றாய்க் கொழுத்துப் பூரித்திருந்தலால், அவற்றைக் கொன்று தின்ன வந்தேன்; இவ்விஷயத்தில் நீ தடைசெய்தால் நிச்சயமாகச் சாவாய்" என்று கூறி அவ்விரண்டெருதுகளின்மீதும் பாய வாலை யசைத்தது. அது கண்டு, அவ்வுழவன் தைரியமாக அப்புலியினெதிரே போய் நின்று, புலியாரே! நீரேனிக்காரியத்தைச் செய்ய முயலவேண்டும்? யானுமக்குப் பிரியத்தோடு கொடுக்க விரும்பியிருப்பதைப் பெற்றுக்கொள்ளும் பாக்கிய முமக்கில்லைபோலும்! இந்த அற்ப எருதுகளின்மீதாசைப்பட்டு, அந்தப் பாக்கியத்தை யிழக்க விடலாமா?" என்றான். அவன் கூறியவற்றைக் கவனித்துக் கேட்ட புலி உழவனை நோக்கி, நீ எனக்குப் பிரியத்தோடு கொடுக்க விரும்பியிருப்பதை விரைவாகக் கூறு; இல்லாவிட்டால் உன்னையுங் கொன்றுண்பேன் என்று கூறிற்று. அதற்கவ்வுழவன், தலைமீது கைகூப்பி வணங்கி, "புலியாரே! இவ்வாறு கோபித்துக் கொள்ளலாமா? எனக்கொரு பெண்ணிருக்கின்றாள்; அவளுடைய அழகிற்குத் திருமகளையும் ஒப்பாகச் சொல்லுதல் கூடாது; அவளொவ்வொருநாளும் என்னை என்னழகிற்கொத்த புருஷனைச் சம்பாதித்துத் தரல் வேண்டும் என்று தொந்தரவு செய்கின்றாள்; நான் சில வருஷங்களாகப் பல விடங்களிலும் அவள் கூறியவாறு தேடிப் பார்த்தேன்; உம்மைப்போன்றிளமையும், அழகும், ஆண்மையுமுடைய புருஷனை நான் பார்க்கவில்லை; யான் தங்களுக் கவளை விவாகஞ் செய்விக்கலாமென்று யோசிக்கின்றேன்; அவள் தங்களைக் கணவனாகப் பெறுவாளாயின் அவளது வாழ்நாள் சாம்பலினூற்றிய நெய்க்கொப்பாகும். தங்கள் விஷயத்தில் என் புத்திக்கு யாதோராட்சேபமு மிராதென்று நினைக்கின்றேன்; தங்களுடைய அபிப்பிராயத்தைத் தயவுசெய்து கூறியருளல் வேண்டும்" என்று மிகப் பயந்தவனைப்போன்று பணிவாகக் கூறினான்.

(2) புலியானது அவன் கூறியவற்றை யெல்லாங் கேட்டுப் பரவசமாகி "எங்கே உன் பெண்ணிருக்கின்றாள்? நான் வந்து பார்க்கலாமா? கூட வரலாமா?" என்று கூறிற்று. அதற்கவன் 'புலியாரே! தாங்கள் என் வீட்டிற்கு வரவேண்டுவதின்று; சிறிது நேரம் இவ்விடத்திலேயே தயவுசெய்திருங்கள். நான் விரைந்தோடிச் சென்றவளை யழைத்து வந்திவ்விடத்திலேயே தங்கட்கு விவாகஞ் செய்து கொடுக்கின்றேன்; சீக்கிரமாக உத்தரவு தாருங்கள்" என்று கூறினான். அதற்குப் புலி உழவனே! உம்மிஷ்டப்படி செய்யலாம்; சீக்கிரஞ் சென்று பெண்ணை யழைத்து வாருங்கள்; வரும்போது அவளுக்கென்னுடைய அழகு ஆண்மை முதலியவற்றைச் செவ்வையாக விரித்துக் கூறுங்கள்; உமது மகள் விஷயத்தில் யான் பூரண விசுவாசமுடையவனாக விருப்பேன் என்று தழுதழுத்துக் கூறிப்படுத்தது. அவ்வுழவன் அதனெதிரே விரைந்தோடுவது போற் காட்டிச் சிறிது தூரஞ் சென்று, ஒரு புதரிடத்து மறைவாகச் சில நேரமிருந்து, பிறகு, அப்புலிக்கெதிரே விரைந்தோடி வந்தான். புலியவனைப் பார்த்துக் கோபத்தோடு "எங்கே பெண்? அழைத்து வரவில்லை? என்னுடைய சொருபு இன்னமு முனக்குத் தெரியவில்லையா? சீக்கிரஞ் சொல்" என்றது. அதற்கு உழவன் "ஒரு வார்த்தை தங்களிடத்துக் கூற வேண்டும்" அது பற்றித் தான் வந்தேன்; பெண்ணை யழைத்து வருவது பற்றி யாதொரு தடையுமில்லை" என்றான்; அதற்குப் புலி "அந்த வார்த்தை யென்ன? சீக்கிரஞ் சொல்" என்றது. அதற்கு உழவன் "என் பெண்ணினிடத்துத் தங்களது இளமையைப் பற்றியும், அழகைப்பற்றியும், ஆண்மையைப்பற்றியும், உடம்பினமைப்பைப்பற்றியும் செவ்வையாகக்கூறி இப்போதே வா என்று கூறினேன்; அதற்கவள் அவரது கைகளில் நகங்கள் நீளமாக விருக்கின்றன வென்று கூறினீரே; அவர் என்னைக் கட்டித் தழுவும்போது, அந்த நகங்கள் எனது மிருதுவாகிய மேனியில் பட்டா லென்ன செய்வது? அந்த நகங்களை வாங்கி விடும் பட்சத்தில், நான் தாங்கள் கூறிய புருஷனை விவாகஞ் செய்து கொள்வதற்கு யாதொரு தடையுமில்லை என்று கூறுகின்றாள். நகங்களின் விஷயமாகத் தான் சிறிது யோசிக்கின்றேன்; அவையில்லாத பட்சத்தில் யாதொரு தடையுமில்லை" என்று கூறினான். "ஆக்கிரக

காரனுக்குப் புத்தி மட்டு" என்னும் பழமொழிக் கிப்புலி யிலக்காகநின்று இந்தப் பாழும் நகங்களிருப்பது பற்றியன்றோ அந்தக் கண்மணி என்னைக் கலியாணஞ் செய்து கொள்ள மாட்டேனென்கிறாள்; இந்த நகங்களை லாவத் தக்கது ஒன்று மின்றே; உமது கையிலுள்ள கத்தியினால் எனது நகங்களை வாங்கி விடுவேன்; நீங்கள் இனிமேல் விஷயமாக அஞ்ச வேண்டுவதில்லை; விரைவாக யான் கூறியவாறு செய்யுங்கள்" என்றாத்திரத்தோடு கூறிற்று. அதனுடைய ஆத்திரத்தைக் கண்டவுழவன், தானும் விரைவாக நகங்களைக் கத்தியால் வாங்குவது போல நடித்து, அதனிரண்டு கைகளிலுள்ள நகங்களிலெவ்வளவு வாங்க வேண்டுமோ அவ்வளவு தூரம் வாங்கி யெறிந்து விட்டு, விரைந்து பெண்ணை யழைத்து வருவது போல நடித்து, பெண்ணை யழைத்து வரட்டுமோ? பெண்ணை யழைத்து வரட்டுமோ? என்று புலியை நோக்கிக் கூறினான். புலி "அதற்கென்ன தடை விரைந்து போங்கள் என்று கூறி, அவனது வருகையை ஆவலோடு பார்த்திருந்தது. அவ்வுழவன் முன் போன்றே விரைந்தோடிச் சென்று, ஒரு புதரில் மறைந்து சிறிது நேர மிருந்து பிறகு விரைந்தோடி வந்தான். அது கண்டு புலி பெருங் கோபத்தோடு கர்ஜித்து இன்னுமா பெண்ணை யழைத்து வரவில்லை? அழைத்து வாராமைக்குக் காரணமென்ன? காரணங் கூறவிட்டாலுன்னை இப்போ அறைந்தே கொன்று விடுவேன்" என்று கூறியது. அதற்கவ்வுழவன் நடு நடுங்கினவனைப் போன்று பாவனை காட்டிப் "பெண்ணைவிட்டுக் கொண்டு வருவதற்குத்தடை யென்பது சிறிதேனுமின்று; என் பெண் நான் கூறும் இந்த வார்த்தையை புலியேந்தனுக்குக் கூறி வந்தால், பிறகு நான் வருவேனென்று கூறுகின்றாள்; அந்த வார்த்தையைக் கேட்டருள வேண்டும்" என்றான்.

(3) அதற்கப்புலி என்னுடைய நாயகி கூறிய வார்த்தை யாது? அவள் சொன்னவாறு செய்வதற்குத் தடையுண்டோ? என்றது. அதற்குழவன் என்னுடைய நாயகனோடு நான் கூடித் தழுவிக் குலாவும்போது முத்தமிடாதிருக்க முடியுமா? என் பிரிய நாயகனுக்குக் கோரப்பற்க ளுண்டென்று நீங்கள் கூறியதைக் கேட்க எனக்குப் பயமாயிருக்கின்றது; அப்பற்களில்லாத பட்சத்திலந்த நாயகனைக் கூடுவதற் கிப்போதே வருகின்றேன்" என்று கூறுகின்றாள். "கோரப் பற்களைத் தாங்களொழித்து விட்டால்தான் தாலிற்கே பீடையில்லாமற் போம்" என்றான்.

ஆசை பயமறியாது; "மோகம் முன் பின்னறியாது" என்னும் பழமொழிக்கிலக்கியமாக நின்ற புலி இந்தக் கோரப் பற்களைப் பற்றியா இவ்வளவு தூரம் பேச வேண்டும்? கூடிய சீக்கிரத்தில் உமது கையிலுள்ள மரம்வெட்டும் கத்தியால் எனது கோரப் பற்களை யெல்லாந் தட்டிப் பிடுங்கி யெறியுங்கள்" என்றது.

(4) வெங்கடராமனென்னு மவ்வுழவன் மிகுவினயமாய்ப் பேசி, அப்புலியின் கோரப்பற்களை யெல்லாம் மரம் வெட்டுங் கத்தியாற் றட்டித்தட்டிப் பிடுங்கி யெறிந்து விட்டுச் சந்தோஷத்தோடு, அதனெதிரே நின்று பெண்ணையா அழைத்துவர வேண்டும்? அழைத்து வரட்டுமா? என்று கூறி, அதன் பிடரிமயிரைப் பிடித்துப் பிடித்துக்கொண்டு போய்க் கலப்பையிற் கட்டி உழவாரம்பித்தான். புலியென்ன செய்யும்? பெண்ணாசையாலிப்படி பேதைமையாயிற்றே? இவ்வுழவனிடத்தினின்றுந் தப்பிப்போவதெப்படியென்று வருத்தமுறுவதாயிற்று. இக்கதையினாற் பெண்ணாசை சகல அநர்த்தத்திற்கு மேதுவென்பது நன்குவிளங்கும். பெண்ணாசையை யொழித்தவரே பேதைமையை யொழித்தவராவர்; பெண்ணாசை பொல்லாதென்பவற்றிற்கு மூலமாக விருத்தலின், அதனையெவ்வாற்றாலேனு மொழிக்கமுயலுதல் வேண்டும். சந்திரனுக்குச் சாபமுண்டானதும், இந்திரன் மைந்தனாஞ் சயந்தனுக்கு இரண்டு கண்ணுமொன்றானதும், இராவணன் புத்திர மித்திர களத்திராதிகளுடன் நாசமானதும் பெண்ணாசையினாலன்றி வேறெதனாலாம்? "பிறர் மனைவியைப் பெற்ற தாய்" என்று கருதி ஒழுகுகின்ற வில்லறத்தாரும், அவளையன்றி யாவரையும் ஆதிபராசக்தியென்று கருதுகின்ற துறவறத்தாருமன்றோ நற்கதியடைதற்குரியவராவர். பெண்ணாசையை யொழிக்க முயலாது, எவ்வளவு காலம் வேதாந்தங்கேட்டாலும் ஒரு சிறிதும் பிரயோஜனமின்றாம். பெண்ணாசையை யொழித்து வேதாந்தங்கேட்டு, கேட்டவாறொழுகுகின்றவர்களே பரமேசுவரனருளுக்குப் பாத்திரராகிப் பரமாநந்த நிலையையடைவர்.

நாடகம்.

நாடகம் என்றால் நடிப்பது என்று பொருள். நாடகம் என்னும் பெயர்ச்சொல், நடி என்னும் வினைப்பகுதியை அடியாகக்

கொண்டது. நடிப்பது என்பதில் நடிப்பு + அது = நடிப்பது என்றாயிற்று; அஃதாவது எது நடிப்போ அது நாடகம்; நடிப்பு என்றால் ஒரு மிருகத் தன்மையோ, தெய்வத் தன்மையோ, அசுரத் தன்மையோ, அல்லது வேறு தனக்கன்னியமாயுள்ள வஸ்துக்களின் தன்மையோ, ஆகிய இவைகளிலேதாவதொன்றைத் தான் மேற்கொண்டு நடப்பதற்கு நடிப்பு என்று பெயர்.

நாடகம் என்பதில் நாடு + அகம் = நாடகம்; அஃதாவது, அகம் = ஆத்மாவை; நாடு = நட்புக்கொள்; ஓ புத்தியே! நீ ஆத்மாவை நேசித்துக் கொள் என்பது பொருளாம். எவ்வாறெனில், தோட்டி வேடம் போட்டு நாடகத்தில் நடிக்கும் ஒரு பிராமணன், தனக்குள்ளே நான் பிராமணன்; தோட்டி அல்ல; சூத்திரதாரியின் உத்தரப்படி தோட்டியின் வேடம் பூண்டிருக்கிறேன் என்று தன்னை வேறாகக் கண்டு நின்றதுபோல, நாடகத்தைச் சேர்ந்தோர்கள், இத்தேகமாகிய நாடக சாலையில் சூத்திரதாரியாகிய ஈஸ்வரரின் உத்திரவின்மேல் இந்திரியங்களென்றும், அந்தக்கரணமென்றும் வேஷம் பூண்டிருக்கிறேன்; உண்மையாக நான் இந்திரியங்களன்று, மனமாதி அந்தக் கரணங்களன்று; உண்மையாக நான் ஆத்ம ஸ்வரூபம்தான் என்று எவ்வாறு அநுபவிக்க வேண்டுமோ அதை உணர்த்துவதற்காகவே நமது முன்னோர்கள் நாடகம் ஏற்படுத்தி வைத்திருப்பது. ஒருவனுக்கு ஒரு விஷயம் சொல்வதைவிட அம்மாதிரி தான் நடத்திக்காட்டுவது மிகவும் உத்தம மென்று கண்டு உத்தமர்கள் உதவியிருக்கிற உத்தமத்தை உணர்வித்த உத்தமர்களின் கடமையாம்.

நாடகம் என்பதில் தேகம் நாடகசாலையாகவும் மனம் நடிப்பவனாகவும், பரமாத்மா சூத்திர தாரியாகவும், விஷயங்கள் நாடகம் பார்ப்போர்களாகவும் கொள்ளப்படும்.

“அறம் பொருளின்பம் வீடடைதல் நான்கும்
உறுவத்தாலாய பயன்” (ஔவை குறள்)

எனப்படும் நான்கு புருஷார்த்தங்களாகிய இந்நான்கைத் தவிர மற்றவைகளெல்லாம் நடிப்பதற்குற்ற தன்மைகளாம்.

ராமன் என்னும் ராட்சச விரோதி.

(முன் தொடர்ச்சி).

ராமன்வீட்டுக் கதவு மூடியிருந்தது; அதைக் கெடகெடவென்று சப்தம் உண்டாகும்படி கெட்டியாய்த் தட்டினான். இதைக்கேட்ட ராமனது மாமனான ராட்சசன் வெளியே வந்து என்னத்தினால் இச்சப்தம் உண்டாயிற்று என்று பார்த்தான். பின்பு “யார் அங்கே” என்று பெருஞ் சப்தமிட்டுக் கேட்டான்.

இதற்கு ராமன், “யாருமில்லை; நான்தான், உனது மருமகன், ராமன்” என்றான். இதைக்கேட்ட ராட்சசன், “உன்னைப் பார்க்கச் சந்தோஷமானது. என்ன விசேஷம்? சொல்லு” என்றான்.

“என்ன கஷ்டம்! ஓ! மிகக்கெட்ட சங்கதி சொல்லவேண்டியதா யிருக்கிறது. இராஜகுமாரன் பெரியசேனைசேர்த்துக் கொண்டு இங்குவருகிறான்; அவன் வந்து உன்னைக்கொன்றுவிட்டு, உன்னுடைய வீட்டில் நீ வைத்திருக்கிற பொருள்களையெல்லாம் எடுத்துக்கொண்டு போக நினைத்திருக்கிறான்.

இதைக்கேட்ட ராட்சசன் மிகவிசனப்பட்டான். பின்பு கொஞ்சம் பயந்தெளிந்து சொன்னது, “ஆ! எனது மருமகனே! இதென்ன கெட்டசங்கதி! ஹா! ஹா!! ஆனால் ஒன்று; நான் ஓடிப்போய் என்வீட்டுக்குள்ளே யாரும் கண்டுபிடிக்கக்கூடாத ஓர் அறையில் போய் ஒளிந்துக்கொள்ளுகிறேன். நீ அந்தவீட்டுக் கதவைமூடித் தாழ்ப்பாள்போட்டுச்சாவிபோட்டுக்கொள். அந்தச் சாவியை ராஜகுமாரன் போகும்வரைக்கும் நீயேவைத்துக்கொள்.

இராட்சசன் உடனே வீட்டுக்குள்போய் விட்டான். இராமன் அறையைப்பூட்டிக்கொண்டு சாவியைப் பத்திரமாகமடியில் வைத்துக்கொண்டான். அப்புறம் ராஜகுமாரன் காத்துக்கொண்டிருந்த இடத்திற்குப் போனான்.

ராமனும் முருகனும் இராட்சசன் வீட்டிற்கு மறுபடியும் வந்தார்கள். நன்றாகச்சாப்பாடு சாப்பிட்டுவிட்டுப்படுத்துக்கொண்டார்கள். ராமன் இராஜகுமாரனுக்கு வேண்டியபொன்னும் வெள்ளியும் கொடுத்தான். மூன்றுகல்தூரம் வரைக்கும் ராமன் ராஜ குமாரனுடனே போனான். அதற்கப்புறம் ராஜ குமாரனுக்குப் பயமில்லை என்று சொல்லி அவனை அனுப்பிவிட்

டான். ராமன் மறுபடியும் மாமனார ராட்சசன் வீட்டுக்குவந்தான். ராட்சசன் இருந்த அறையின்கதவைத் திறந்தான்; அவனை வெளியேவிட்டான். ராட்சசன் இவனைப்பார்த்து, "மருமகனே! நீ எனக்கு மிகப்பட்சம் காட்டினாய்; உனக்கு என்ன வேண்டுமென்றுகேட்டான்; அதற்குராமன் ஒன்றும் வேண்டாம்; உனக்கு இஷ்டமானால் உன்னுடைய பழயகத்தியும், பெட்டியிலிருக்கும் உனது சட்டையும், உனது படுக்கையிலிருக்கும் தொப்பியும், கால்ஜோடும்கொடு," என்றான்.

இதற்கு ராட்சசன் "அப்படியா; உனக்கு அவற்றைக்கொடுக்கிறேன்; அவை அதிக உபயோகப்படும். மேல்சட்டை போட்டுக்கொண்டால் நீ இருக்கிற சங்கதியாரும் தெரிந்துகொள்ள மாட்டார்கள்; தொப்பி எல்லாவற்றையும் உனக்குத் தெரியக்காட்டும், அந்தக் கத்தியால் எதை அடிக்கிறயோ அது துண்டுதுண்டாகி விடும்; ஜோடுபோட்டுக்கொண்டால் அதிகவேகமாகப் போகலாம்.

ராமன் இந்த வெகுமானங்களைப் பெற்றுக்கொண்டு புறப்பட்டு இராஜனைத்தேடிப்போய் அவனைச்சேர்ந்தான். பிறகு இராஜகுமாரனைப் பின்பற்றிப்போனான். இரண்டுபேரும் சேர்ந்து கொஞ்சதூரம் போனார்கள். இராஜகுமாரன் தன் அரண்மனைக்குப் போய்விட்டான். இராமன் மாத்திரம் தனியாய்ப் போய்க்கொண்டிருந்தான்.

அப்படியே போகும்போது வழியில் ஒருபெரிய அரண்மனையைப்பார்த்தான். அங்கு ஒரு பெரிய விருந்துநடந்துகொண்டிருந்தது. அங்கிருந்தவர்கள் இந்த வாலிபனை இன்னான் என்று தெரிந்துகொண்டு இவனையும் விருந்துக்கு அழைத்தார்கள்.

அந்த விருந்துக்கு வந்திருந்தவர்கள் மிகசந்தோஷமாக இருந்தார்கள். அப்போது ஒரு பெரும் ராட்சசன் அங்கேவரவந்துகொண்டிருக்கிறான் என்று ஒருபையன் சொன்னான்.

அதைக்கேட்ட ராமன் "நீங்கள் பயப்படவேண்டாம். எல்லாச்சங்கதியும் எனக்குவிட்டுவிடுங்கள், நான்பார்த்துக்கொள்ளுகிறேன்" என்றான்.

உடனே மாமன்கொடுத்த சட்டையைப் போட்டுக்கொண்டான். அதனால் அவன் யாருக்கும் தெரியாது மறைந்து விட்டான்.

பிறகு அந்த ஜோட்டைப் போட்டுக்கொண்டான்; அது அவனை வெகுசீக்கிரமாய்க் காற்றைப்போல் கொண்டுபோனது.

அந்த ராட்சசனது அரண்மனைத் தெருக்கதவினிடம் போய்ச் சேர்ந்தவுடனே, உரக்கக்கூச்சலிட்டுப் பாடினான்.

ஹா ஹா ஹி ஹி ஹோ ஹோ ஹோம் ஆங்கிலர் காறம் அடிக்கிறதிங்கே; யார் வாழினும்சரி, யாரிறக்கினும்சரி அவனது முதுகில் அமைந்துள்ள எலும்பை முறுக்கி வடையா முறமுறக் கடிப்பேன்.

"நீ என்னை முதலில் பிடி பார்ப்போம்" என்று சொல்லிக்கொண்டே, அந்த அரண்மனையைச் சுற்றிச்சுற்றி ஓடினான்; இவனைப்பின்பற்றி அந்த ராட்சசனும் ஓடினான்.

இப்படி இரண்டுபேருமாக அரண்மனைக்கு எதிரில் இருக்கும் வாராவதிக்குவந்தார்கள். அந்த வாராவதியைத் தாண்டினார்கள்; ராட்சசன் தாண்டிவரும் சமயத்தில் ராமன் குனிந்து தன் மாமன்கொடுத்த கத்தியால் ஓர் அடி அடித்தான்; இதனால் இந்த ராட்சசன் இறந்தான்.

இம்மாதிரியே ராமன் அநேக ராட்சசர்களை மிகவேகமாகக் கொன்றுகொண்டே தன் ஊர்சுற்றிவந்தான். இம்மாதிரி சுற்றிக்கொண்டிருக்கும்போது அவன் இளைப்படைந்தான்; அதனால் வீடு போய்ச்சேர்ந்தான். அங்கே தான்விரும்பிய ஓர் அழகான பெண்ணைக் கலியாணம் செய்துகொண்டான். அவன் தன்மனைவியை விரும்பி அவளோடு பல்காலம் வாழ்ந்து அநேக புத்திரர்களைப் பெற்றான்.

அங்கே தன் தகப்பன் வைத்த நிலங்களைப்பயிர்செய்து அதனால்வந்த வரும்படியை வைத்துக்கொண்டு அவனும் அவனது மனைவியும் குழந்தைகளும் சுகமாக வாழ்ந்துவந்தார்கள்.

(அப்போது அவன் கொடுத்த அச்சியந்திரம் சக்கிரவர்த்தினி அச்சியந்திரசாலையிலும், எழுதுகோல் என் கையிலும் இருக்கின்றன).

வ. ஆறுமுக செட்டியார்,
முத்தியாலுபேட்டை, சென்னை.

ஆசார மஞ்சரி.

(முன்தொடர்ச்சி.)

அறிவுடையார் தாம் செல்லும்போது செய்யுஞ்
செயல்களிவையா மெனல்.

(31) அறிவுடையார் இரண்டு தேவர் மத்தியிலும், பார்ப்பார் மத்தியிலும் செல்லார்; தம்மின மிக்கப் பெரியர் வாழ்த்தினுல் அவரை வணங்கித் துதிப்பார்; தம்மோடொப்பார் தாம் சொல்லும்பொது வந்தால் அவர்க்கு நேரேசென்று மனமகிழ்ந்து அவரை யுபசரித்தழைப்பர். இரண்டு தேவர் - இரண்டு தெய்வ விக்கிரகங்கள்.

எச்சிலுமிழ்தலும் மலஜலங்கழித்தலும் இவ்விவ்விடங்களில்
செய்தல் கூடாதெனல்.

(32) உணர்வுடையார் புல்லிலும், விளைநிலத்திலும், ஆப்பியிலும், சுடுகாட்டிலும், வழியிலும், தீர்த்தத்திலும், தேவாலயத்திலும், நிழலுள்ளவிடத்திலும், பசுமந்தை யிருக்குமிடத்திலும், சாம்பலிலும் எச்சிலுமிழ்தலும் மலஜலங்கழித்தலும் செய்யார்.

ஆப்பி - பசுஞ்சாணி; தீர்த்தம் - நீர்நிலை.

மலஜலங்கழிக்கும் காலக்கிரமத்தையும்
தீயில் நீருற்றுங்காலத்தையுங் கூறல்.

(33) அறிவுடையார் பகலில் தெற்கு நோக்கியும், இராத்திரியில் வடக்குநோக்கியுமிருந்து மலஜலங்கழியார்; பகற்பொழுதில் தீயில் நீர்வார்த்து அதனையவியார்.

தீ - சமையலறையிலுள்ள நெருப்பு.

அறிவுடையார்எச்சிலுமிழ்தலும் மலஜலங்கழித்தலும்
செய்யும்போது செய்யும் பாவனையைக்கூறல்.

(34) யாம் நல்முறையாக வொழுகுதல் வேண்டுமென்று கருதுமறிவுடையார் பத்துத் திக்குகளையும் மனத்தால் மறைத்ததாகப் பாவித்து, அப்பத்துத்திக்குகளிலன்றி வேறிடத்திலே செய்வதாகக்கருதியல்லது இந்திரன் வசிக்குமுலகத்தைப் பெற்றாராயினும், எச்சிலுமிழ்தலையும் மலஜலங்கழித்தலையும் செய்யார்.

வாய்கழுவுங்கிரமத்தைக் கூறல்.

(35) அறிவுடையார் சிலர் ஒருபாத்திரத்தில் முகந்த நீர் வார்க்க வாய்கழுவுதல் முடியாதாயின், நீரில் நின்று கொண்டும் நடந்து கொண்டும் வாய்கழுவார்; ஓடு நீர் பெற்றிலராயின் நிலைநீரிலிருந்தும் வாய்கழுவார்; மனத்தால் இவ்வளவு நீரால் வாய்கழுவுதல் வேண்டுமென்று ஒரு வரையறை செய்துகொண்டே நீரால் வாய்கழுவுவர்.

தம்கடமையை யறிந்தவரது செயல்க ளிவையாமெனல்.

(36) எப்போதும் தமது கடமையை யறிந்த அறிவினையுடையவர் ஒருவனிருக்குமிடத்திற்கும் விளக்கிற்கும் நடுவே போகார்; சுவரின்மீது எச்சிலுமிழார்; தமக்குக் குளிரால்பெருங்கஷ்டமுண்டாயினும், பிறர்கட்டிய அழுக்கு வஸ்திரத்தைக் கீழே போட்டுக்கொள்ளார்; மேலே போர்த்துக்கொள்ளார்; தம்மை வருத்த பகைவர் ஆயுதங்களுடன் வந்தாராயினும், தாம் கட்டியுள்ள வஸ்திரத்தின் காற்றைப் பிறர் மீது படச்செல்லார்; பகலிலே நின்று தாம் கட்டியுள்ள வஸ்திரத்தை யவிழ்த்துதறுர்.

ஐம்பெரும் பாதகங்களை யறிவுடையார் செய்யக்கருதாரெனல்.

(37) பிறர் மனைவியரை விரும்புதலும், கள்ளுண்டலும், களவுசெய்தலும், சூதாடுதலும், கொலை செய்தலுமாகிய இவ்வைந்தும் நரகத்திற்குச்செல்லும் வழியில் (தம்மையுடையவரைச்) செலுத்துதலால், இவ்வைந்தினையும் யாம் செய்வோமென்று அறத்தை யறிந்தவர்கருதார்; கருதுவராயின், இப்பாவியரென்று பலரால் இகழப்படுதலுமல்லாமல் (மறுமையில்) நரகத்தையுமடைவர்.

ஐயந்தீர் காட்சியார் செய்யாதன இவையெனக் கூறல்.

(38) ஐயம் நீங்கிய அறிவினையுடையவர் பொய் பேசுதலும் கோட்சொல்லுதலும் பிறர் பொருளை யபகரிக்கவேண்டுமென்று விரும்புதலும், பிறரது ஆக்கத்தைக் கண்டு பொறாமை யடைதலுமாகிய இந்நான்கினையும் நினையார்; நினைப்பாராயின், அவை அவர் தம்மைப்பிச்சையெடுக்குமாறு செய்து மீளுதற்கரிய நரகத்திலும் செலுத்தும்; தெய்வமும் கெடுத்துவிடும்.

ஆக்கம் - மேன்மேலுயர்தல்.

சமைத்தன்னுண்ணுங் கிரமத்தைக்கூறல்.

(39) அறிவுடையார் தமக்கென் றடுப்பின்மீது உலைவையார்; தெய்வத்தின் பொருட்டாக வல்லாமல் தம்பொருட்டாக

ஒரு பிராணியைக்கொன்று மாமிசத்தைக்கொள்ளார்; சமைய லறையில் எச்சிற்செய்யார்; மனையில் வசிக்கும் தெய்வங்களுக் குப் பலி யூட்டினமையை யறிந்த பிறகு தாமுணவுண்பர்.

குரவர் தமக்கிளைய சுற்றத்தாருண்ணும் போதிருக்குந் நியமத்தைக்கூறல்.

(40) குரவர் தமக்கிளைய சுற்றத்தாருணவுண்ணும் போது உயர்ந்த ஆசனத்திலிரார்; அச்சுற்றத்தார் முறைமை கடந்து தீய காரியங்களைச் செய்திருந்தாராயினும், அவர் தம்மனம் நொந்தழி தற்குரிய செயலைச் செய்யார்.

உறுதி மொழி.

எல்லா மறிந்தவ ரொருவ ரில்லை.
அறிந்தமைக் கழகுன் னடங்கி யொழுகுதல்.
அடக்க முடையவ ரறிவ ருண்மையை.
உண்மை யுணர்ந்தவ ரொன்றும் விரும்பார்.
விருப்பில் லாதவர் வெறுப்பில ராவர்.
வெறுப்பிலார் சித்தம் வெள்ளிபோல் விளங்கும்.
சித்தமா சற்றார் தியக்கமற் றிருப்பர்.
தியக்க மற்றவர் சேரா ருலகில்.
உலகிற் சேரா ருறுதுய ரொழிவர்.
துயரிலார் நன்மை துன்னுவர் தாமே.

ஞானசாதனநிலை.

பொன்போல விலங்குமனஞ் சஞ்சலத்தாற் குரங்காம்
புத்திவிசா ரித்தறியும் பொலிவதனு லரவாந்
தன்போல விலையெனலா லகங்கார மதமா
தனைநிகராஞ் சித்தமொரு தன்மையினு லுயா
மின்போலுஞ் சலனமன மசையாம லிருத்தி
விசாரிக்கும் புத்தியினை மெய்ப்பொருட்பால் விடுத்து
வன்போடு வருமகங்கா ரத்தினையுங் கடிந்தால்
வைத்தவிடத் திருந்துசித்த மசைத்துவழுத் தருமே.

ஆகாரம்.

சுகம் வேண்டாம், துக்கம் வேண்டும் என்னும் இச்சை யுடையபிராணி இவ்வுலகின்க ணில்லை. அதனால் மனிதர் இவ்வுல கின்கண் அநுபவித்தற்கு யோக்யமாயுள்ள இன்பங்களுள் சரீர சுகமே முதன்மையானதாம்; சுகவீனம் மிகுதியும் துன்பத்தைத் தருவதாம். மக்கள் உண்ணும் உணவுப் பொருள்களை ஜீரணஞ் செய்யும் கருவிகளும், உண்ட அன்னாதிகளிலிருந்து இரத்தத்தை யுண்டாக்கி, அதனைச் சரீர முழுதும் வியாபிக்கச் செய்யும் நாம் புக் கருவிகளும், ரத்தத்தைச் சுத்தஞ் செய்யுமாறு வாயுவை உட் கொள்ளும் சுவாசக்கருவிகளும், பிற கருவிகளும் சமநிலைமையி லிருந்து சரீரத்தையியக்கும்போது தான் மனிதன் சுகஸ்திதியிலிரு க்கின்றான் என்று கூறுகின்றேம். மக்கள் சுக சரீரிகளாயிருத்தற் பொருட்டு பகவான் நமக்கு ஆயுள் வேதத்தைக் கொடுத்திருக்கின் றார். அந்த வேதத்திற் கூறப்பட்டுள்ள விதி விலக்குக்களை யநு சரித்து நடப்பவர் பெரும்பான்மையும் திடகாத்திரராயிருந்து, நீடி த்த ஆயுளைப்பெற்றுச் சுகமாக வாழ்ந்து வருகின்றார்கள். அவ் விதி விலக்குக்களை யநுசரித்து நடவாதவர்கள் பெரும்பான்மை யும் சரீர பீடையுற்று அற்ப ஆயுளுடையவராய்த் துக்கிகளாக வாழ்கின்றார்கள். நித்திய கர்மானுஷ்டானங்கள் செய்வதற்கும், போஜனஞ் செய்வதற்கும், வேலை செய்வதற்கும், போகஞ் செய் வதற்கும், உறங்குவதற்கும் கால அளவைகளைப் பெரியோர்கள் ஏற்படுத்தியிருக்கின்றனர். இவ்விதிகளை யநுசரித்து நடப்பவர் பெரும்பான்மையும் சுகமாக வாழ்ந்து வருகிறார்களென்பது பிர சித்தமாம். மக்கட்கு சரீரம் ஆரோக்யமாயிருப்பதும், அஃதின்றி யிருப்பதும் விதிவசத்தினுலாமென்று அறிவினர் கூறிக்கொ ள்ளினும் ஆயுள் வேதத்தில் கூறப்பட்டுள்ள விதி விலக்குக்களைப் பொருட்படுத்தாது யதேஷ்டாசாரிகளாயிருப்பவர் பெரும் பான்மையும் அற்பாயுளுடையவராயும், துக்கிகளாயும் வாழ்ந்து வருவதும் பிரசித்தமாம். பகவான் விதியையும் விதித்து, அதனை விலக்குவதற்கு மதியையும் மக்கட்குக் கொடுத்திருக்கின்றார். விதியையும் மதியினுல் வெல்லலாமென்னும் பழமொழி வழங்கி வருவதும் உலகப் பிரசித்தமாம், அதனுல் சரீரம் நிலைத்திருத் தற்கு அத்தியாவசியமான வாயு, ஜலம், போஜனம், தேக சுத் தம், தேசப்பயிற்சி, நித்திரை, வாச ஸ்தலம், மனோவமைதி

முதலிய விஷயங்களைப்பற்றி விரிவாகக் கூறும் சாஸ்திரங்களை யொவ்வொருவரும் கற்று அவற்றிற் கூறப்பட்டுள்ள விதி விலக்குக் களை அநுசரித்து நடப்பது அத்தியாவசியகமாம். சரீரமும், மனமும் சமநிலைமையிலிருந்தாற்றான் இகலோக வின்பத்தைப் பூர்ணமாய் மக்கள் அநுபவித்தற்குச் சாத்தியமாகும்.

அறிவுடைமை.

சோர்வுவாராதபடிக்கும், பகைவராற்றுன்பம் வாராதபடிக் கும், காக்கின்றதற்கு அறிவே காரணமாதலால், அதனிடத்து எப்போதும் சிந்தை வைத்து நடக்கவேண்டும்.

மனம்போனவழியிற் புத்தியைப் போகவிடாமல் நன்மார்க் கத்திற் செலுத்துவது அறிவே யாதலால், அதைச் சித்தித்திருக்க வேண்டும்.

மாறி மாறிவரும் (ஸாத்விகம், ராஜஸம், தாமஸம் என்னும்) முக்குணங்களின் தன்மையால் நல்ல பொருளைத் தீயோரிடத்தி லும் தீயபொருளை நல்லோரிடத்திலும் கேட்டிலும், அவைகளின் தன்மைகளைப் பகுத்தறிந்து, உண்மை இஃதென்று கண்டறி வதே அறிவாம்.

அறிவில்லாத மனிதர் வறுமையிற்றுன்பப் படுவதற்குப் பல திருஷ்டாந்தம் வேண்டுவதில்லை; ஏனெனில், அறிவுடையவன் பலஹீனனாக விருந்தாலும் இக்கட்டு வந்தவிடத்துத் தப்பித்துக் கொள்வான்; அறிவிலான் பலசாலியாக விருந்தாலும் ஒருவ னால் உயிரிழக்கும்படி நேரிட்ட காலத்தில் தப்பித்துக்கொள்வது கடினமாம்.

பின்வரும் நன்மை தீமைகள் இவ்விதமாக வருமென்று புத்திக் கூர்மையால் முன்னறிந்து நடப்பவர்களே அறிவுடையா ரென்றும், அப்படிக்கறிந்து நடவாதவர்க ளறிவிலாரென்றும் பெரி யோர் கூறியிருக்கின்றனர்; அஃது அநுபவமுமாம்.

ஒரு தடாகத்தில் 3 மீன்களிருந்தன; அவற்றிலொன்று வருங்காலமறிந்து தக்கபடிமுயலுமறிவுடையது; மற்றொன்று ஒரு காரியம் நேர்ந்த பின் தகுதியான யுக்திசெய்து பலனடையத்தக்க அறிவுடையது; மூன்றாவது வருவது வாராமற் போகாதென்று கருதி முயலாமலிருக்கும் புல்லறிவுடையது. இம்மூன்று மீன்களும் வெகுகாலமாய் அத்தடாகத்தில் வாஸஞ்செய்து வருகையிலொரு

நாள் ஒரு செம்படவன் மீன்பிடிக்க வந்தான். அவன் வந்த அர வங்கண்டு வருங்காரியமறிந்து முயல்கின்ற மீன் தடாகத்தின் பாதாளத்தில் மூழ்கி மண்ணைக் கடித்துக்கொண்டோரிடத்தில் அடங்கியிருந்தது. ஸமயோசித புத்தியுள்ள இரண்டாவது மீன் அப்படிக்குச் செய்யாமலிருந்தபடியால், செம்படவன் எறிந்த வலைக்குள்ளகப்பட்டு வருந்தித் தப்பிப்போக வென்னவழியென் றாலோசித்துப் பிராணனை விட்டதுபோற் கைகால்களை யசைக்கா மல் அவன் போட்டவிடத்திற் கிடந்து ஸமயம்பார்த்துத் துள் ளித்தொப்பென்று தண்ணீரிற் குதித்தோடிப்போய் க்ஷேமமடை ந்தது. வருவது வாராமற் போகாதென்கிற நினைப்புள்ள மீன் வலை யிலகப்பட்டதுமன்றி செம்படவனாற் கரையிற் போடப்பட்டவுட னே துள்ளித்துள்ளி விழுந்தபடியால் இது தண்ணீரில் வீழ்ந் தோடிப்போமென்று நினைத்துச் செம்படவன் அதைக் காலால் மிதித்துக்கொன்று போட்டான். ஆதலால் வருங்காரியமறிந்து நடப்பவனை உத்தம புத்திமானென்றும், ஸமயோசித புத்தியுள்ள வனை மத்திமனென்றும், வந்தது வரட்டுமென்றிருப்பவனை அதம னென்றும் சொல்லவேண்டும்.

பழிபாவங்களுக் கஞ்சா திருப்பது மூடருடைய தன்மை; அஞ்சி நடப்பது அறிவுடையவர்களுடைய செய்கையாம். ஆத லால் அறிவு எல்லாவற்றிற்கும் சிறந்ததாம்.

எல்லாச் செல்வங்களுக்கும் அறிவே காரணமாதலால் அறி வுடையோர்க்கொன்று மில்லாவிடினு மெல்லா முண்டென்றும், அறிவிலார்க்கு எல்லாமுளவாயினு மொன்றுமில்லையென்றும் பல நூல்கூறுகின்றது.

ஆதலால் அறிவை நோக்கி யுலகத்தோடொத்து வாழவேண்டும்.

யுத்தம்.

இப்போது ஐரோப்பாக்கண்டத்தில் நடக்கும் யுத்தம் மிகு உக்ரமாக நடந்து வருகின்றது; மேற்குப் போர்முகத்தில், சோம் நதிப் பிரதேசத்தில் ஜெர்மானியர் பெருஞ்சேனை திரட்டிவந்து போர்புரிந்து வருகின்றனர்; இவ்விடத்தில் எவ்விதத்திலும் பிரிட்டிஷாரையும், பிரெஞ்சுக்காரரையும் முன்னேறிச்செல்ல வொட்டாது செய்தல் வேண்டுமென்று பெரும்பிரயத்தனஞ்செய்து வருகின்றனர்; அங்ஙனமிருந்தும் பிரிட்டிஷாரும், பிரெஞ்சுக் காரரும் பீரங்கிப்படையின் பலத்தினால் முன்னேறிச்சென்று

கொண்டிருக்கின்றனர். வர்டூனைப்பிடிக்க ஜெர்மானியர் 200 நாள் கடுமையான யுத்தஞ்செய்தும், அஃது அவர்களால் சாத்தியப்படாமற்போனது. அதனாலவர்கள் வர்டூனைத்தாக்கிப் பிடிக்கும் யோசனையை விட்டுவிட உத்தேசித்திருக்கின்றனர். இவற்றால் ஜெர்மானியரது பலங்குறைந்து வருகின்றதென்றே கூற வேண்டியிருக்கின்றது.

ருஷ்யப்போர்முகத்தில் ருஷ்யர் கலீஷியாவைக்கடந்து கார்பேதியின் மலைக்கணவாய்களில் பிரவேசித்திருக்கின்றனர்; கிழக்குப் போர்முகத்தில் ஜெர்மானியரையும், ஆஸ்டிரியரையும் தலைகாட்டவொட்டாது அடித்துத்துரத்தி வருகின்றனர்.

ரொமேனியர் நேசராஜாங்கத்தாரோடு சேர்ந்து ஆஸ்டிரியாவின்மீது படையெடுத்து, ஆஸ்டிரிய ஹங்கரியில் 20 மைல்தூரம் பிரவேசித்துவிட்டனர்; டிரான்ஸில்வேனியாவை ஆஸ்டிரியர் காப்பாற்றுவதற் கசக்தராய்விட்டனர்; அதனால் டிரான்ஸில்வேனியா முற்றும் ரொமேனியர் வசமாய்விடும். இப்போது ரொமேனியரும் ருஷ்யரும் சேர்ந்து ஆஸ்டிரியருடன் போர்செய்து வருகின்றனர். ருஷ்யர் ரொமேனியா மூலமாகப் பல்கேரியாவிலும் சென்று பல்கேரியரோடு போர்செய்து வருகின்றனர்; பல்கேரியாவிலும், செர்பியாவிலுமுள்ள சில ஊர்களையும் பிடித்திருக்கின்றனர். ருஷ்யரும், ரொமேனியரும் சேர்ந்து செர்பியாவை மீட்டுக்கொள்வார்கள்; பல்கேரியா சமாதானத்திற்கு வராவிடின், அது செர்பியாவின் கதியாய்விடுமென்பது சந்தேகமற்ற விஷயமாம். ருஷ்யர், சலோனிக்காவிலிருக்குமவரும் நேசதேச சேனைகளுடன் சேர்ந்து துருக்கியை யெதிர்ப்பார்கள். அப்போது துருக்கியின்கதி அதோகதியே ஆகிவிடும். இப்போது சலோனிக்காவிலிருந்து வந்து பிரிட்டிஷாரும், பிரெஞ்சுக்காரரும், செர்பியரும் பல்கேரியரை யெதிர்த்து வருகின்றனர். சீக்கிரத்தில் பல்கேரியா வடக்கு, மேற்கு, தெற்குப் பாரிசங்களில் நேசக்கட்சியாரால் சூழ்ந்து கொள்ளப்படும்.

இத்தலி தடைபடாது முன்னேறிச்சென்றுகொண்டிருக்கின்றது; அஃது அல்பேனியாவிற்கும் சேனையை அனுப்பியிருக்கின்றது.

ரொமேனியா நேசக்கட்சியுடன் சேர்ந்துவிட்டமையின், கிரீசும் நேசக்கட்சியாருடன் சேரவே வேண்டியிருக்கின்றது; அதுபற்றிக் கிரீஸில் இப்போது பெருங்குழப்ப முண்டாயிருக்கின்றது. கிரீசும் நேசக்கட்சியுடன் சேர்ந்துவிடுமாயின் யுத்தம் சீக்கிரம் முடிவுபெறும்.

Printed & Edited by K. Vadivelu Chettyar at the Sacchidhanandha Press, Komaleeswaran Pet, Madras.

சக்ரவர்த்தினி.

"கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர் மற்றீண்டு வாரா நெறி".

VOL 12. தொகுதி 12. | September 1916. செப்டம்பர் 1916. | NO. 2. பகுதி 2.

பொருளடக்கம். பக்கம்.

1.	சான்றோரென்னை நின்றோர்க்கழகு.	 41
2.	ஆசாரமஞ்சரி	 44
3.	கல்வியா-உடைமையா பெரிது?	 47
4.	சந்திரனை விழுங்கின கழுதை	 49
5.	பிள்ளைகளின் மூளை	 54
6.	கலாதரம் (வரவு)	 58
7.	கிரீஸ்தேசத்துப் பீமசேனன்	 61
8.	புல்லறிவாண்மை	 63
9.	நட்பு	 64
10.	ஸ்வாமி விவேகாநந்தர் பிரசங்கம்	 66
11.	யுத்தம்.	 70

கோ. வடிவேலுசெட்டியார், பத்திராசிரியர்-பத்திராதிபர்
கோமளீசுவரன் பேட்டை, சென்னை.

Sacchidhanandham Press, Komaleeswaranpet, Madras.

லோகோபகாரி.

இது சோமவாரந்தோறும் சென்னை சோமசேகவரன் பேட்டையிற் பிரசுரமாகுந் தமிழ்ப் பத்திரிகை; 22 வருடகாலமாகச் செவ்வனே நடைபெற்றுவருகின்ற தென்பது பிரசித்தமாம். இஃது ஏனைய பத்திரிகைகளைப் போலல்லாது மக்களாய்ப் பிறந்தோர் பெறவேண்டிய பேறும் பேற்றை யடைதற்குரிய சாதனங்களை யாவரும் சுலபமாக அறியுமாறு போதித்து வருவதாம். இதுவேயுமன்றி இதில் கைத்தொழில், கல்வி, சுதேசிய, விதேசிய முதலிய அநேக விஷயங்கள், இருபாலர் சிறுமியரியாவருக்கும் பயன்படுமாறு செவ்விய நடையி லெழுதப்பட்டு வருகின்றன. தினசரிப் பத்திரிகை வாங்குவோரும் இப்பத்திரிகையின் ஒரு பிரதியை வாங்கிப் படிப்பார்களாயின், இதனை மறந்துங் கைவிடமாட்டார்களென்பதும், இஃது ஒவ்வொரு வீட்டிலுமிருத்தற்குரியதா மென்பதும் நன்கு விளங்கும். சாம்பில் காப்பி ஒன்று இனாமாக அனுப்பப்படும்.

சந்தா விவரம்.

இந்தியா, சிலோன், பர்மாவிற்கு.

ஆறு மாதத்திற்கு ரூபாய் 1-14 | ஒரு வருடத்திற்கு ரூபாய் 3 - 8

(நேட்டால்-சிங்கப்பூர்-பினங்கு).

ஒரு வருடத்திற்கு ரூபாய் 5 - 8 | ஆறு மாதத்திற்கு ரூபாய் 3 - 0

இதுகாறும் வெளிவராத யூகிமுனிவர் வாதவைத்திய நூல்கள்.

வாதாங்க நிகண்டிஷதி—300, வாதவைத்திய விளக்கம்-200, மதிவெண்பா—100 - விலை ரூபாய் 1.

தேரையர் கரிசல்-யூகிமுனிகரிசல்-கல்கண்டு ருத்திரம் அணா 12

சக்ரவர்த்தினி.

"சக்ரவர்த்தினி" என்னும் பெயர்பூண்ட மாதப்பத்திரிகை சென்ற பதினொரு வருடங்களாகத் தமிழுல கெங்கும் பரவிவருகின்றதென்பது பிரசித்தமாம். இஃது எமது வசமாக 1912-ம் வருஷம் பிப்ரவரிமாசி முதற்கொண்டு லோகோபகாரி ஆபீசில் நடை பெற்றுவருகின்றது. இதில் கல்வியறிவு ஒழுக்கங்களபிவிர்த்தியாவதற் குரிய விஷயங்களும், மாதாடவர் தருமங்களும், மகோலய சாதனங்களும், பிறவும் பிரசுரஞ் செய்யப்பட்டு வருகின்றமையின், இது யாவரும் அத்தியாவசியமாக வாசித்தற் குரியதாம்.

சந்தா விகிதம்.

இந்தியா-சிலோன்-பர்மாவிற்கு	பிறதேசங்கட்கு-வருடம் 2—8—0
வருடத்திற்கு ரூபாய் 2-0—0	ஷை 6- மாதத்திற்கு 1—8—0
ஷை 6-மாதத்திற்கு ரூபாய் 1-4—0	தனிப்பிரதி 0—3—0

OFFICE OF THE REGISTRAR ... 3 NOV 1916 ... MADRAS

சக்ரவர்த்தினி.

" கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர் மற்றீண்டு வாரா நெறி ".

VOL-12 தொகுதி-12 | September செப்டம்பர் 1916. | No-2. பகுதி-2.

சான்றோரென்கை யீன்றோர்க்கழகு.

சான்றோரானவர் தம் தந்தை தாயார்க்கு அழகு செய்பவராகவிருத்தலின், ஒவ்வொருவரும் சான்றோராக முயலுதல் வேண்டும். முன்னறிதெய்வமாகிய தந்தை தாயர்க்கு அழகு செய்யாதவர் தமக்கும் பிறர்க்கும் பயன்படுத லுடையவராகாது போதல் நிச்சயமாம். சான்றோராகாதவர் தமக்கும் பிறர்க்கும் பயன்படுதலுடையவரா யிருத்தல் ஒருவாற்றானு மின்மையின், நம்மனோர் சான்றோராக வொவ்வொருவரு மிடைவிடாது முயன்று வருதல்வேண்டும். சான்றோரென்பவர் நல்லனவென்று சொல்லப்படுங் குணங்கள் பலவற்றானும் நிறைந்திருப்பவராவர். அக்குணங்கள் அளவுகடந்த உபகாரம், சாந்தம், கர்வமில்லாமை, பிறர்குற்றங் கூறாமை, இடம்ப மில்லாமை முதலியனவாம். இக்குணங்கள் எளிதில் நிறைந்திருத்தல்போல, எவரிடத்திருக்கின்றனவோ அவர்தாம் சான்றோரென்று கூறுதற்குத் தகுதியுடையவராக விருக்கின்றார். இக்குணங்களால் நிறைந்து, அவற்றை யாளுதல் கல்வி கேள்வி அறிவொழுக்கமில்லாதவர்க்கு எவ்வகையானு முடியாதாகலின், ஒவ்வொருவரும் கல்வி கேள்வி முதலியவற்றை யுடையவராதல் வேண்டும். கல்வி கேள்வி முதலியன முன்னறிதெய்வங்களாகிய தந்தைதாயர் உதவியில்லாவிடத் தடைதல் பெரும்பான்மையு மின்றாமாகலின், ஒவ்வொருவரும் தம்தந்தைதாயர்க்கழகு செய்யத் தாம் சான்றோராதல் வேண்

டும். ஒவ்வொருதந்தை தாயரும் தம்புத்திரர் சான்றோராதல் வேண்டுமென்று விரும்புகின்றனரென்பது சிறிதாலோசித்து நோக்கினால் நன்குவிளங்கும். தந்தைதாயருள் பலர் இடம்பம், கர்வம், அடங்காத அகங்காரம், காமம், குரோதமுதலிய வற்றிற் குறைவிடமா யிருப்பினும், தம் புத்திரர்கள் அயோக்கியராக விருப்பதில்லை யாம்; அவர்கள் தம்புத்திரர்கள் மேன்மேலு முயர்ச்சியடைய வேண்டுமென்றே கருதிவருகின்றனரென்பது தம் குடும்ப வியவகாரத்தைச் சற்றாலோசித்து நோக்குவார்க்கு விளக்கமுறும்போலும்.

தாய் தன் புத்திரர் சான்றோரா யிருக்கின்றனரென்று அறிவுடையோர் சொல்லுவதைக் கேட்டு விரும்புகின்றாள்; தந்தையோ தன்புத்திரரைச் சான்றோராக்க முயலுகின்றான். தந்தையின் முக்கியக் கடன் தன்மைந்தனைச் சான்றோனாக்குதலேயாம். இதனை பொன்முடியார் புறநானூற்றில் "சான்றோ னாக்குதல் தந்தைக்குக் கடனே" என்று கூறியிருப்பதனால் நன்கு விளங்குவதாம். தந்தை தன்மைந்தனைக் கல்வி கேள்வி அறிவு ஒழுக்கங்களால் நிறைந்தவனாகச்செய்து விடுவானாயின், அம்மைந்தன் சான்றோனாகாதிருத்தல் ஒருவாற்றானு மில்லையாம். ஒருபொருள் முதலில் விழுதற்கு அதனது கனமை காரணமாயிருக்கின்றது; அப்பொருள் அதன்பின் விழுதற்கு அவ்விழுதலாலுண்டாய அப்பொருளின் வேகம் காரணமாயிருக்கின்றதென்பது சிறிதாலோசித்து நோக்கினால், செவ்வனே விளங்கும். ஒருபொருள் விழுதலால் அப்பொருளிடத்து வேகமுண்டாதல்போல, ஒருவன் கல்வி கேள்வி அறிவு ஒழுக்கமுடையவனுவானாயின், அவனிடத்து சால்பு நிச்சயமாகவுண்டாவதாம். சால்புடையார்க்கு (சான்றோர்க்கு) மிகச்சிறந்த குணமாயிருப்பது பிறரது குற்றத்தைக் கூறாமையாம். தவத்தினர்க்கு ஒருயிரையும் கொல்லாத அறத்தினைப் புடையதா யிருத்தல்போல, சான்றோர்க்குப் பிறரது குற்றத்தைக் கூறாதகுணம் சிறப்புடையதாக விருக்கின்றதென்பது நமக்கு விளங்குமாயின், நாம் மிகவெளிதாகச் சான்றோராதல்கூடும். பிறரது குற்றத்தைக்கூறாதிருப்போமாயின், நாம் சான்றோராதற்குத் தடையின்றாம்.

ஸ்ரீராமர், தருமபுத்திரர் முதலாயினோர் சான்றோராயிருந்தனரென்பது அவர்தம் சரித்திரத்தைப் படித்தவர்கட்கு விளங்காமற்போகாது. அவர் தமக்கு யாது சிறந்தவணிகலமாக விருந்

தது? பிறர் தம் குற்றத்தைக் கூறாமையன்றோ? பிறரது குற்றத்தைக்கூறாமையென்னுங் குணத்தை அணிகலமாகக் கொள்வோமாயின், நாம் சான்றோராகி, நம் தந்தைதாயர்க்குப்பெருமை செய்பவராவோம். ஒருவன் தன் தந்தைதாயர்க்குப் பெருமை செய்தலாவது அறிவுடையார் அவனைப்பற்றிப் பேசும்போது இவனைப்பெறுதற்கு இவனது தந்தைதாயர் என்ன தவஞ்செய்தனரோ என்று கூறுதலாம்.

இவ்வழகினும் அவர் தமக்கு வேறென்னவழகு வேண்டும்? இவ்வழகினை யுடையவரன்றோ புத்திரப்பேற்றினைப் பெற்றவராவர்? இடம்பம், கர்வம், அடங்காத அகங்காரம், காமம், குரோதம், உலோபம், அவிவேகம், பேருணவு, பெருந்தூக்கமுதலிய குணங்களால் நிறைந்த புத்திரர்களை யுடையவர்க்கு என்ன அழகுண்டாகும்? அவரவர்க் கெப்போது முண்டாவது அழுகையே யாம்.

தந்தைதாயரிடத்து வணக்கமுடையவராக விருக்கும் புத்திரர்கள் சான்றோராகவே யிருப்பரென்பதற்குத் தடையொன்று மில்லையாம். ஸ்ரீராமர் தந்தையுரை கடவாது வனஞ்சென்றமையையும், புரு என்பவன் தனது தந்தையாகிய யயாதிவேந்தனது மூப்பை(கிழத்தன்மை) ஏற்றுக்கொண்டமையையும், சாமியென்னும் வேடன் தன் தந்தைதாயர்களிடத்துத் தவறில்லா தொழுகினமையையும், முறையே இராமாயணம், பாரதம், விஷ்ணுபுராண மென்பவற்றைப் படித்துணர்ந்தவர்க்கு மைந்தர் தம் தந்தை தாயர்க்குச் செய்யு மழகு விளங்காநிற்கும். "தந்தைதாய்ப் பணிதல் செய்யுந் தவமலாற் றவம்வே றில்லை" என்பதுணர்ந்து ஒழுகும் புத்திரரைப் புகழ்ந்து பேசாதார்யார்? ஒருவருமிலராவர்; அப்புத்திரர் பிறர்குற்றத்தை மறந்துங் கூறுவதில்லையாம்; அவரிடத்து அன்பு, ஈரம், உபகாரம், தாட்சணியம், உண்மையுரைத்தல் என்பன பூரணமதிபோலப் பிரகாசித்துக்கொண்டிருப்பனவாம். இத்தன்மையாராய புத்திரர்களை யுடையவர்களுக்கு இம்மைப்பயன் மறுமைப்பயனென்னு மிரண்டும் தவறாது வாய்ப்பனவாம்.

"தந்தை மகற்காற்று நன்றி யவையத்து, முந்தி யிருப்பச் செயல்—தந்தை புதல்வனுக்குச்செய்யும் நன்மையாவது கற்றோ

ரது அவையில் அவரினு மிக்கிருக்குமாறு கல்வியுடையவனாக்கு தல்" என்று திருவள்ளுவர் கூறியவாறு தந்தை தன்மைந்தனைக் கற்றோர்சபையில் அவரினுமிக்கிருக்குமாறு கல்வியுடையவனாக்கு வானாயின், அம்மைந்தன் சான்றோனாவது திண்ணமாம். தந்தை தன் கடனாகிய இதனைத் தன்மைந்தனுக்குச்செய்து விடுவானாயின், அம்மைந்தனை யறிவுடையார் புகழ்ந்து பேசாதிருப்பதில்லையாம். அப்புகழ் மொழியைக் கேட்பதே அவனைப் பெற்றவர்க்கழகாம்; வேறெதுவு மழகாவதில்லையாமென்பதை விளக்கவே நமது ஞானத்தாயாகியஔவைப்பிராட்டியார் "சான்றோரென்கை யீன்றோர்க் கழகு—தம்புத்திரரைச் சான்றோரென்று அறிவுடையார் சொல்லுதலைக் கேட்டலே அவர்தம்மைப் பெற்றவர்க்கழகாம்" என்றருளிச்செய்தனர்.

புத்திரர்கள் தாம் சான்றோராதற்குரிய செயலை மறவாதுந் தவறாதுஞ்செய்துவருவாராயின், அவர் தம் தந்தைதாயர்க்குப் பேரழகுசெய்பவராக விருப்பதன்றி, தமக்கும் பிறர்க்கும் பயன்படுதலுடையவராய், நன்மையென்று சொல்லப்படுவன வனைத்தையும் பெறுதற்குரியவராவரென்பது சிதையாத சித்தாந்தமாம். தந்தை தனதுகடமையையும் மைந்தன் தனது கடமையையும்மறவாது செய்து வருதல்வேண்டும்; வந்தாற்றான், தந்தை தான்பெறுதற் குரியதையும் மைந்தன் தான் பெறுதற்குரியதையும் பெறுதல் கூடும். மைந்தன் சான்றோனாதலே இந்நோக்கில் அவன் பெறுதற் குரியதைப் பெறுதலாம்.

புத்திரர் சான்றோராவதால், தந்தைதாயர்க்குப் பேரழகும் பெருவகையு முண்டாவனவாயிருத்தலின், ஒவ்வொருவரும் தம் புத்திரர்களைச் சான்றோராக்க முயலுதல் வேண்டும்; இம்முயற்சி யுடையவர்க்கு நலமனைத்து முண்டாவனவாம்.

"ஈன்ற பொழுதிற் பெரிதுவக்குந் தன்மகனைச்
சான்றோ னெனக்கேட்ட தாய்.
தம்மிற்றம் மக்க ளறிவுடைமை மாநிலத்து
மன்னுயிர்க் கெல்லா மினிது"

என்று திருக்குறள் கூறுவது இங்கு நன்குணர்தற் பாலதாம்.

ஆசார மஞ்சரி.

(முன்தொடர்ச்சி.)

நண்ணிய நூலறிவினர் செய்வன வினையெனல்.

(41) நண்ணிய நூற்பொருளை யுணர்ந்தவர் ஒருவர் தமது கண்ணிற்கு மையிட்டிய (அஞ்சனக்) கோலால், அக்கண்ணெச்சிலோடு தமது கண்ணிற்கு மையிட்டார்; தமதொரு காலால் மற்றொரு காலைத் தேயார்; புண்ணியத் தருவனவாகிய (வில்வம், துளசி, புஷ்ப முதலிய) பொருள்களைத் தமது தலையில் வைத்துக் கொள்வதுடனே கண்களினும் ஒற்றிக்கொள்வர்.

கணவர் தம்மனைவியரைப் பார்க்கக்கூடாத காலையும் பிரியக்கூடாத காலையுங் கூறல்.

(42) அறிவுடையார் தம்மனைவியர்க்குப் பூப்பு நிகழ்ந்தால், அது நிகழ்ந்த நாள் முதற்கொண்டு மூன்று நாளளவும் அவரைப் பாரார்; அவர் நீராடியபின் நீராடிய நாள் முதற்கொண்டு பன்னிரண்டு நாளளவும் (கரு வயிற்றுறுங் காலமாகலின்) அவரை விட்டுப்பிரியார். இவ்வாறிருத்தல் வேண்டுமென்பது பேரறிவாளரது நிச்சயமாம்.

கணவர் தம்மனைவியருடன் கலத்தல்கூடாத நாள்களிவை யெனல்.

(43) அறிவுடையார் தமது மனைவியருடன் நடுப்பகலும், நடுக்கங்குலும், காலையும், மாலையும், (அரனுக்குரிய நாளாகிய) திருவாதிரை நட்சத்திரமும், (அரிக்குரிய நாளாகிய) திருவோண நட்சத்திரமும், அமாவாசையும், பௌர்ணமியும், தாம் பிறந்த நாளுமாகிய இந்த நாட்களில் தமது மனைவியருடன் கூடார்.

—நடுக் கங்குல்-நடுராத்திரி.

இன்னின்ன காரியஞ் செய்தல் கூடாதெனல்.

(44) அறிவுடையார் நாழியை மனைவியின்மீது வையார்; மணையைக் கவிழ்த்து வையார்; புத்தாடையைத் தலைக்கடையில் விரியார்; பலர் வருதற்குரிய தலைக்கடையில் இனிவருநம் வாராரன்றோவென ஆராய்ச்சி செய்யாது கட்டிவிட்டுப் படுக்கார்; தம்மை யறியாதவாறு தலைக்கடையிற் சென்று நில்லார்.

புத்தாடை-புதுவஸ்திரம். நாழி-அளக்குங் கருவி.

மணப்பந்தலில் இன்னின்ன பொருள்களைப் பரப்புதல் கூடாதெனல்.

(45) மணப்பந்தலின் கீழ் குப்பை பெருக்கும் துடைப்பமும், தூசோடுகூடிய செத்தையும், பூவின் புறவிதழும், பழங் கருங்கலக்களும், கிழிந்த கட்டிலுமென்னு மிவ்வைந்தையும் பரப்புதல் கூடாது. பழங் கருங்கலங்கள்-பழைய கரிப்பானைகள்.

நல்லதுறல் வேண்டுவார் செய்வன இவையெனல்.

(46) தமக்கு நல்ல பாக்கியமுண்டாதல் வேண்டுமென்று விரும்புகின்றவர் சிறு காலையிலெழுந்து, தமது வீட்டிலுள்ள செத்தைகளைப் பெருக்கி, கருங்கலங்களைக் கழுவி, ஆப்பியினை யெங்குந்தெளித்து, நீர்சாலும் கரமும் புறம்பே நிறைய படிமலரணிந்து, தம்வீட்டிற்குச் சிறப்புண்டாக, அடுப்பினுள் தீயிட்டு மூட்டக்கடவர். (இவ்வாறு செய்வது மாதர்தம் கடமையாம்.)

சிறுகாலை-விடியற்காலம், கருங்கலங்கள்-முன்னாள் சமைத்த கரிப்பானைகள், ஆப்பி-பசுஞ்சாணம், நீர்ச்சால்-நீர்வார்த்து வைக்கும் சால், கரகம்-நீர்ச்சால்மீது வைக்கும் மண் பாத்திரம்.

வேதாத்தியயனஞ் செய்தற்குரியதாகாத நாள்களிவை யெனல்.

(47) அஷ்டமி திதியும், அமாவாசையும், பௌர்ணமியும், சதுர்த்தசி திதியும், தாம் வசிக்கும் பூமியைப் பாதுகாக்குமரசர்க்கு விபத்துண்டாய நாளும், மிகுதியாகப் பூகம்பமுள்ள நாளும், விண்ணதிர்ப்புள்ள நாளும், தமக்குத் தூய்மையில்லாத நாளுமென்னு மிந்நாள்கள் பார்ப்பார் இலங்குநூல் ஓதுதற்குரியனவாகாத நாள்களாம். பூகம்பம்-பூமியசைதல், விண்ணதிர்ப்பு-இடி முழக்கம், தூய்மை-தீட்டில்லாமை, இலங்குநூல்-வேதம்.

அறமும் விருந்தும் தவறாது செய்தற்குரிய நாள்களிவை யெனல்.

(48) அறிவுடையார் தாம் செய்யும் கலியாண நாளும் தேவர்க்குச் சிறப்பான (ஏகாதசி, கிருத்திகை முதலிய) நாளும், பிதிர்களுக்குச் சிறப்புச்செய்யும் நாளும், தேவர்க்குத் திருவிழா நடக்கும் நாளும், வேள்வி செய்யும் நாளும் என்னுமிவ்வகை நாள்களினும் மறவாது கொடையறஞ் செய்வர்; விருந்தினர்க்கு (அறுசுவைக் கறிகளுடன்) சோறிடுவர்.

பிதிர்களுக்குச் சிறப்புச்செய்யும் நாள்-சிரார்த்தஞ் செய்யும் நாள்; வேள்வி-யாகம்; கொடையறஞ் செய்தல்-இரப்பார்க்கில்லை யென்னாது அவர் வேண்டிய தொன்றனைக் கொடுத்தல்.

எவரும் நடையுடை முதலியவற்றைத் தத்தமக் கேற்றவாறு கொண்டொழுக வேண்டுமெனல்.

(49) எவரும் உடுக்க வுடையும், நடக்குநடையும், சொற்சோர்வடைதலும், வைதலும் என்னும் இந்நான்கையும் தாம் அரசனாற் சிறப்புறப் பெற்றமைக்கும், தமது கல்விக்கும், தமது ஆண்மைக்கும், தமது குடிப்பிறப்பிற்கும், தக்கவாறாக மேற்கொண்டொழுகக் கடவர்.

சொற்சோர்வு-சொற்றவறுதல், வைதல்-திட்டுதல், ஆண்மை-ஒன்றற்குந் தளராமை.

நற்கேள்வியுடையவர் செயல்களிவை யெனல்.

(50) பிறர் பெறுதற்கரிய நற் கேள்வியுடையவர் பலர் நடுவிலிருந்து பிறரைப் பழித்துப் பேசார்; குறைத்துப் பேசார்; பலர் நடுவிலிருந்து நித்திரை செய்யார்; தாம் செய்வதற்கு முடியாத காரியத்தைப் பிறர்க்குச் "செய்கின்றே"னென்று கூறிச் செய்யா தொழியார்; வறியவரை மறந்தும் தகுதியில்லாது நிந்தித்துக் குறைத்துப் பேசார்.

வறியவர்-தரித்திரர். (வரும்)

கல்வியா - கடமையா பெரிது?

உலக ஞானத்தையும், ஆன்ம ஞானத்தையும் உண்டு பண்ணும் நூல்களைத் தக்கவாறுணர்வது கல்வி யெனப்படும்; அல்லது புத்தியை விரியச் செய்யும் நூலாராய்ச்சியுங் கல்வி யெனலாம். கடமையாவது அவரவர்கள் செய்ய வேண்டும் விதி கர்மங்களை, அஃதாவது ஆன்றோருரைத்த ஒழுக்கங்களை யநுஷ்டிப்பது கடமையாம். இதனை வடமொழியில் கர்த்தவ்ய மென்பர். இவ்விரண்டனுள் கல்வியா, கடமையா, எது பெரிதென்பது நன்கு கூறத்தக்க விஷயமாம். சிலர் கல்வியே முக்கியமா மென்றும், வேறு சிலர் கடமையே முக்கியமா மென்றுங் கூறுகின்றனர். ஒழுக்கமின்றிய கல்வியானது எக்காலும் பயனைக் கொடுப்பதின்று

மென்பது திண்ணம்; கல்வியின்றிய ஒழுக்கமோ வெனின் அவசி யம் பயனைக் கொடுப்பதேயாம். ஒழுக்கமின்றிய கல்வியானது குருடன் கையில் தீபத்தைக் கொடுத்து வழி நடக்கக் கூறுவதை யொக்கும். கல்வியின்றிய ஒழுக்கம் பட்டப்பகலில் கண்ணுடை யோன் வழி நடப்பதை யொக்கும். கல்வியும் ஒழுக்கமும் ஒன் றாகச் சேர்ந்திருப்பது தீபத்தின் சகாயத்தால் இரவு வழிநடப் பதை யொக்கும். ஆதலின் இயல்பாகிய ஒழுக்கம் பயனைத் தருவதாம்; கல்வியுடன் கூடிய வொழுக்கம் அதனினு மிகுதியா கிய பயனை யளிக்கும்; வெறுங்கல்வியானது ஒரு சிறிதும் பயனை யளிப்பதின்றும். மாறாக தீமையையும் விளைவித்தல் கூடும். கல்வி யை நாம் எவ்வழியாகச் செலுத்துகின்றோமோ, அவ்வழியாக அது பயனை யளிப்பதாம். எங்ஙனம் நெருப்பை நாம் முறையாக மூட்டுவோமாயின் அது பாகம் முதலிய காரியங்களால் நமக்கு உதவியைச் செய்கின்றது முறைபிறழச் செய்வோமாயின் வீட் டை வேகவைத்து இடரை விளைவிக்கின்றது. அங்ஙனமே கல்வி யும் கற்போனது செய்கையை யொட்டி அநுகூலப்பிரதிகூலங்களை யளிக்கின்றது. ஒரு சந்நியாசி வேதாந்த சாஸ்திரங்களை நன்குணர் ந்து சிறிதேனும் அநுபவமில்லாது யாத்திரை செய்து கொண் டிருந்தார். இவரது வாக்கின் சாதுரியத்தால் பலரும் உண்மைத் துறவி யென்றே கருதி யிருந்தனர். சில ஸ்திரீகளும் இவருக்குத் தொண்டு புரிந்து வந்தனர். ஒருநாள் விதவையாகிய ஓர் மங் கையை நோக்கி "அம்மணி! எல்லாம் பிரஹ்மந்தானே; உனது சரீரமும் எனது சரீரமும், எல்லாமும் பிரஹ்மத்தைத் தவிர வே றில்லை; ஆதலின் நம்மிருவரது சையோகத்தால் பிரஹ்மத்திற்குக் குறைவு வருவதின்றும் எனக்கூறி அப்பெண்மணியின் அருகிற் சென்றனர்.

"இதோ திரும்பி வருகிறேன்" எனக்கூறி அப்பெண் வீட் டினுட் புகுந்து ஒரு இரும்புத் துண்டைப் பழுக்க வைத்து, "ஸ்வாமின் இந்த இரும்புத் துண்டும் பிரஹ்மந்தான்; தங்கள் சரீரமும் பிரஹ்மந்தான். இதைத் தங்கள் முதுகின் மீது வைக் கின்றேன், பின்னர்த் தாங்கள் கூறியபடியே செய்வோம்"; எனக் கூறி ஸ்வாமிகளினருகிற் சென்றனள். உடனே வேதாந்தத்தைப் பறக்க விட்டு ஸ்வாமிகள் ஓட்டம் பிடித்தனர்; இக்கதையால் கல் வியின்றிய அப்பெண்மணியின் ஒழுக்கம் பெரிதா? அல்லது ஒழு

க்கமின்றிய ஸ்வாமிகளது கல்வி பெரிதா? என்பதனை நன்கு கவ னிப்போமாயின், ஒழுக்கமே யாவற்றினுஞ் சிறப்புடையதா மென்பது நன்குவிளங்கும். அன்பர்களே! ஆன்றோர் கூறிய ஒழுக் கமே கல்வியினும் மேன்மையாதலின் அதனையே கைக்கொள்ளு தல் வேண்டுமென்பது ஒருதலை.

ஒரு துறவி.

சந்திரனை விழுங்கின கழுதை.

(முன் தொடர்ச்சி)

இரவு வந்தது-பாழூர் ஜனங்களெல்லாம் மந்தை வெளியில் கிழக்கு முகமாய் நின்றுகொண்டு வானத்தைப் பார்த்த வண்ண மாக இருந்தார்கள். சூரியன் அஸ்தமித்து நான்கு, ஐந்து, ஆறு, ஏழு, எட்டு நாழிகைகளுமாயின; சந்திரனைக் காணவில்லை. மேலும் நல்ல இருள். பறைகூத்தான் சொன்னபடி சந்திரனை மேகங்கள் மறைத்துக் கொண்டிருக்கக்கூடும் என்கிற சந்தேகத்திற்கும் வழியில்லை. ஏனெனில் வானம் மிகவும் கருமையாக இருந்தது. இவ்வளவு கருமையான மேகம் பாழூரில் சாதாரணமல்ல. அவ் வூரில் கார்த்திகை, மார்கழியில் மாத்திரம் சிற்சில வருஷங்களில் மழை பெய்வதுண்டு; வயல் வெளிகளெல்லாம் வானம் பார்த்த பூமிகள். ஜனங்கள் கூடியவரையில் சிரமப்பட்டு ஏற்றம் இறைத் துத்தான் பயிரிட்டுவருகிறார்கள். நிலக்காரனுக்குக் குத்தகை கொடுத்ததுபோக மிச்ச மாசூல் முதல் ஆறுமாதம் வரைக்கு ஒரு வேளையும், மற்றுமாதம் இரண்டு நாளைக்கு ஒருவேளையு மாகத்தான் அவர்களுடைய போஜனத்திற்கு நடந்துவரும். ஓய் வில்லாமல் வருஷமுழுதும் உழைப்பு. பலர் ஒருவேளை போஜ னம், அநேக சந்தர்ப்பங்களில் உபவாசம். கல்வி சம்பந்தமான எண்ணம் அவர்களுக்கு எங்கிருந்து வரப்போகிறது?

தவிர அக்கிராமம் ஒரு காலத்தில் செழிப்பாக இருந்தது. இப்போது அங்குள்ள 20 வீடுகளில் 15 வீட்டுக்காரர்கள் சமை யல் முதலிய பரிசாரகத்தொழில் செய்து ஜீவனம் செய்கிறார்கள். வீடுகளோ குடிசைகள். அவர்களுக்கும் கல்வி கற்க நேரமில்லை. தன்னைத் தெரியாமற் போனாலும், சூத்திரன், பறையன் இவர்களை

இகழ்ச்சியாகவும், ஏளனமாகவும் பேசுவதேதர்மமெனக்கொண்டு, கௌரவத்தை விடாமல் காலங்கழிக்கிறார்கள். மற்ற 5 வீட்டுக்காரர்கள் கொஞ்சம் பொருளாளிகள். இவ்வூர் நிலங்களில் பாதி அந்த 5 வீட்டுக்காரர்களுக்கும், இன்னொருபாதி அருள் குப்பத்து நாய்க்கனுக்கும் சொந்தம். பாழூர் குடியானவர்களின் ஏழைமைக்கு இந்தப் பிரபுக்களே காரணம். ஒவ்வொரு குடியானவனுக்கு அவனவன் நிலத்தின்மீது இரண்டரை வட்டிக்குக் கடன்கொடுத்து நாளடைவில் அந்நிலங்களை, ஸர்க்கார் நியாயஸ்தல தீர்மானங்களின் உதவியினால் கைக்கொண்டு விட்டார்கள். ஆகவே அக்கிரகாரத்தாராலும், அருள் குப்பத்து நாய்க்கனாலும் குடியானவர்களுக்கு ஹிம்சையேயொழிய, ஒருவிதமான உபகாரமுமில்லை. ஆகையால் இவர்கள் தங்களுக்குள்ள அறிவைக் கொண்டு கூடியவரையில் பிழைத்துவருகிறார்கள். மேலும் பாழூரில் அடர்ந்த தோப்புண்டா? பெரிய ஏரிஉண்டா? நல்ல ஆடிகாலத்து மழையைக் கண்டதார்? கார்மேகத்தைப் பார்த்ததார்? இக்காரணங்கள்பற்றி, அயிலு சந்திரனை விழுங்கினது முதல், வானத்தின் தன்மை அவ்வூர் ஜனங்களுக்கு அதியாச்சரியமாகவும், அசாதாரணமாகவும் தோன்றிற்று.

சூரியன் அஸ்தமித்து 10 நாழிகைகளாயின. இன்னும் சந்திரனைக்காணோம். ஜனங்கள் மிரண்டுவிட்டார்கள். அந்த மிரட்சிக்கு வேறொரு காரணமுண்டு. வண்ணான் அருணாசலம் தன்னூரில் கொஞ்சம் கல்வியறிவுடையவன்; அவனுக்குப் படிக்கத் தெரியும். வேலை செய்த நேரம்போக மற்ற வேளையில், தெருத் திண்ணை மீது உட்கார்ந்து கொண்டு பாரதம், குசலவன், நல்லதங்காள் முதலிய கதைகளைப் படித்துக் கொண்டிருப்பான்; அவனுக்குப் பூண்டு வர்க்கங்களெல்லாம் தெரியும். தவிர ஏர்மாடுகளையும், கழுதைகளையும் நோயில்லாமல் காப்பாற்றும் வகையையும் அறிவான். மற்றவர்களைப் போல அவன் அடிக்கடி வருத்தப்படுகிற வழக்கமில்லை. அக்கிரகாரத்துப் பிரபுக்கள் கையில் சிக்காதவன் பாழூரில் இவனொருவனே. இக்காரணங்களாலே, அவ்வூர் குடித்தனக்காரர்களெல்லாம் அவனை ஒரு மந்திரவாதியாக மதித்திருந்தார்கள். மந்திரவாதியின் கழுதை சந்திரனை விழுங்குதல் சாத்தியமெனக் கொள்ளும்படி நேரிட்டது. அதற்கேற்ப சந்தர்ப்பங்களெல்லாம் ஒத்திருந்தன.

[illegible] ராத்திரியில் குடியானவர்களுக்குக் கோபம் பிறந்துவிட்டது. அவர்களுள் இருபது பேர் சேர்ந்து தடிகளுடன் அருணாசலத்தின் வீட்டிற்குப் போய்க் கதவைத் தட்டினார்கள். "யாரது" என்றான் அருணாசலம். "நாங்கள் தாம்" என்று குடியானவர்கள் பலமாகச் சொன்னார்கள்.

அ:—நாங்களென்றால், யார்?

கு:—முக்கய்யர், நயினா உடையான், கூத்தா சுப்பன் முதலானவர்கள்.

அ:—இந்நேரத்தில் எங்கு வந்தீர்கள்? என்ன வேண்டும்?

கு:—எங்களுக்கு உன் கழுதை வேண்டும்.

அ:—என் கழுதையா? ஏன்?

கு:—அதனைக் கொல்ல.

அ:—என் அயிலைக் கொல்லவா? அது உங்களை என்ன செய்தது?

கு:—அது சந்திரனை விழுங்கி விட்டது. எங்களுக்குச் சந்திரன் அவசியம்.

கலீரென நகைத்தான் அருணாசலம்-பலமான சிரிப்பு. அறுபது வயதுள்ள அவன் இந்நாள் வரையில் அங்ஙனம் சிரித்ததேயில்லை.

கு:—சிரிக்க வேண்டாம்; பரிகாசம் கூடவா? போதும்; கழுதையை ஓட்டிவா

என்று சொல்லிக்கொண்டே தடிகளால், ஓங்கித் தெருக் கதவை இடித்தார்கள்.

அருணாசலம் கொஞ்சம் பயந்தான். விவகாரம் பலக்கிறதைக் கண்டு, எழுந்து போய்க் கதவைத் திறந்தான்.

உடனே அடுக்கு நயினா, அயிலு சந்திரனை விழுங்கின சமாசாரத்தை ஆதி யோடந்தமாய்த் தெளிவாகச் சொன்னான்.

"நீங்கள் சொல்லுகிறது மடக்கதையே யொழிய உண்மையன்று. இருந்தாலும் என் கழுதை சந்திரனை விழுங்கினதைப் பார்த்ததார்? என்றான் அருணாசலம்.

"நயினா தான் பார்த்தான்" என்றான் கிழவனான முக்கய்யர்;

"இல்லை யில்லை, வெல்லக்கட்டி வாத்தி பார்த்தான்" என்றான் நயினா.

"இல்லை, சோவி... இல்லை. கணக்கன்........

"சரி, யார் பார்த்தாலென்ன" என்றான் நயினா; விஷயம் உண்மை; அதனை ருஜுப்படுத்த வேண்டிய அவசியமில்லை. கேட்டையா, அருணாசலம்? உன் கழுதை இந்த க்ஷணம் இங்கிருக்க வேண்டும்; உன் மந்திரங்களைக் கட்டிவை; எங்களிடம் காட்டாதே"

என்று இவ்வண்ணம் சொல்லிக்கொண்டே, நயினா பாணு கழற்ற ஆரம்பித்தான். மற்றவர்களும் அங்ஙனமே செய்தார்கள்.

நியாயம் பேசுவதற்குத் தகுந்த நேரமன்றென்று தெரிந்து கொண்டான் அருணாசலம்-அவன் உடனே சொன்னதாவது:—

"சரி, என் கழுதை சந்திரனை விழுங்கி விட்டதல்லவா? நீங்கள் கழுதையைக் கொன்றால் சந்திரனும் இறந்து போகாதா? உங்களுக்கோ சந்திரன் வேண்டும். ஆகையால், நீங்கள் நினைத்திருக்கும் வண்ணம் செய்யாமல் என் இஷ்டப்படி விடுவீர்களானால், நான் எனது அபியோடு கலந்து பேசி விவகாரங்களை ஒழுங்காக முடிப்பேன். அபியே என் கழுதை; அதனால் என் சொற்படி நடக்கும்; அது என் சொல்லை மாத்திரந்தான் கேட்கும்; இன்னும் இரண்டு நாட்களில், நீங்கள் சந்திரனைக் காணாவிட்டால் அப்போது என்னையும், என் கழுதையையும் உங்களிஷ்டப்படி செய்யலாம்."

அருணாசலத்தின் வார்த்தைகள் குடியானவர்களின் வேகத்தைக் குறைத்தன. நடுக்குநயினா மற்றத் தோழர்களோடு ஆலோசனை செய்தான். முடிவில் "நாங்கள் நீ சொன்னதை அங்கீகாரம் செய்தோம். நீ உன் வார்த்தைப்பாட்டை மறந்துவிடாதே" என்று அருணாசலத்திடம் சொல்லிவிட்டு எல்லாரும் கலைந்து போனார்கள்.

அவர்கள் சென்ற சிறிது நேரத்திற்குப் பிறகு, வானத்திலிருந்து சில மழைத்துளிகள் தரைமீது விழுந்தன. "நல்லது" என்று நினைத்து, அருணாசலம் சந்தோஷங் கொண்டான்.

அங்ஙனமே வானத்தின் தன்மைமாறி 48-மணி நேரம் இடைவிடாமல் மழை பொழிந்தது. பிறகு மேல்காற்று கிளம்பி

மேகங்களைக் கலைத்துவிடவே, சந்திரன் வழக்கம்போல மிகவும் லாவண்யமாகப் பிரகாசித்தான்.

பாழூர் ஜனங்கள் மறுபடியும் அருணாசலத்தினிடம் செல்லவேயில்லை. ஆனால் அவர்களுக்கு அவனுடைய மந்திரத்தில் அதிக நம்பிக்கை ஏற்பட்டுவிட்டது. அவன் விஷயத்தில் அச்சமும், மதிப்பும் உண்டாயின. அவனுடைய கழுதைக்கு முன்னைவிட அதிக சந்தோஷத்திற்கு இடமாயிற்று. ஒவ்வொருவனும் அதனுடைய சிநேகத்தை அடைய விரும்பி, அதற்குக் கொள்ளு, கிழங்கு, கீரை முதலியவற்றை ஏராளமாக வழங்கிக்கொடுக்கத் தலைப்பட்டான். கோவில் மாட்டுக்குக் கடைத்தெருவில் என்ன பூஜை நடக்குமோ அந்தப்பூஜை பாழூரின் அபிக்கு நடந்து வந்தது. மேலும் அந்த ஊரில் எல்லாரும் கையில் ஏதோ ஒன்று சாம்பல் நிறமாகக் கட்டிக்கொண்டிருக்கிறார்களே அதென்ன தெரியுமா? நமது அபியின் வால்மயிர்.

அபியின் அடர்த்தியான வால் மயிரைப்பிடுங்கி, ஒரு மணிக்கட்டில் கட்டிக் கொண்டால் பில்லி, சூனியம், திருஷ்டி தோஷம், பேய் முதலியவை அணுகாவாம். இந்தச் சங்கதி எங்கும் பரவிற்று. வெகு தூரத்திலிருந்து கூட ஜனங்கள் இந்த அருமையான ரக்ஷையை நாடி வந்து போய்க் கொண்டிருந்தார்கள். ஆகவே அபியும் மிகவும் கொழுத்து, இறுமாந்திருந்தது. ஒருநாள் அருணாசலம் அதன் மீது அழுக்கு மூட்டைகளை ஏற்றினபோது, அது முறைத்துக் கொண்டு, கழுத்தை நீட்ட ஆரம்பித்தது. அப்போது அருணாசலம் "ஆஹா என்னையும் இவ்வூர் மூடர்களில் ஒருவனாக மதித்தனையோ? இவ்வளவு கர்வமும், கொழுப்புமா உனக்கு? என்னிடம் உன் ஜம்பம் சாயாது. இதோ பார்" என்று சொல்லி, உள்ளே சென்று உலக்கையை எடுத்தோடிவந்தான். அதைக் கண்டவுடனே கழுதையின் சரீரம் நடுங்க ஆரம்பித்தது. நீண்டசெவிகள் தொங்கிப்போயின. எந்த வால் மற்றவர்களுக்கு ரக்ஷையாக இருந்ததோ, அந்தவால் ஆசனத்தோடு இறுக ஒட்டிக்கொண்டது. இந்தக் கோலத்தோடு, இரக்கமான கண்களாலே எஜமானனைப்பார்த்தது கழுதை. உடனே அருணாசலம் அதனை வெகு சுலபமாகத் துறைக்கு ஓட்டிக் கொண்டுபோனான்.

மனிதர்களின் தாரதம்மியத்தை நன்றாகக் கண்டுகொண்டு அபியும் அன்று முதல் எஜமானிடத்தில் மிகவும் விசுவாசமாக

வும், இவ்வூர் ஜனங்களுக்கு நான் மேல், எனக்கு என் வழிமான் மேல் வந்த எண்ணத்தோடும் காலம் கழிக்க வந்தது.

N. சுப்பிரமணிய அய்யர்,
புதுவை.

Brain & its structure. Perception, Thought & Memory.

(a) பிள்ளைகளின் மூளை.

எந்தப் பொருளினால் நாம் ஐம்புலன்களின் மூலமாய் உலகத்திலுள்ள சகல விஷயங்களையும் அறிகிறோமோ, எதனால் வெளிக்கிடுகிறோமோ அந்த வஸ்துவைப்பற்றிச் சற்று நமக்குத் தெரிந்திருப்பது நலம். இந்த வஸ்துதான் மூளை. எப்படி ஒரு தனவந்தன் வீட்டிலுள்ள பணமும், விலையுயர்ந்த நகைகளும் இரும்புப் பெட்டியில் பத்திரமாய் வைக்கப்பட்டிருக்குமோ அப்படியே நம்முடைய மூளையும் மண்டையில் கெட்டியான ஓடுகளாலாக்கப்பட்ட பெட்டியில் வைக்கப்பட்டிருக்கிறது. ஒரு மனிதனுடைய எல்லா அவயவங்களைக் காட்டிலும் இது மிகச் சிறந்ததானபடியால் பணம் நகைகளைப்போல் பத்திரமாய்க் காப்பாற்றப்படவேண்டியது அவசியம். இதன் மேற்பாகம் மிருதுவாயும் சாம்பல் நிறமாயும், உருண்டை வாயும் மடிப்பு மடிப்பாயுமிருக்கும். இதன் உட்பாகம் வெளுப்பாய் பல நரம்புகளின் சேர்க்கையினால் கெட்டியாயிருக்கும். இது பார்ப்பதற்கு ஒரு மாமிச பிண்டத்தைப் போலிருக்கும். ஆனால் இது சாதாரண மாமிசம் போன்றதல்ல. இதன் மூலமாகத் தான் நாம் எல்லா விஷயங்களையு மறிகிறோம். இது எவ்வளவுக்கு எவ்வளவு மேலானதாயிருக்குமோ அவ்வளவுக் கவ்வளவு இதை யுடையவன் புத்தியில் சிறந்தவனாயிருப்பான்.

மேலும் இந்தமூளையானது ஒவ்வொருவனுடைய ஜனனத்தின் மாது சாரமாக தன் சந்ததியாரின் மூளை விசாலத்தை யடுத்துச் சில விசேஷங்களைப் பெற்றிருக்கிறது. நரியின் குட்டி நரியினத்தின் தந்திர புத்தியையும், புலியின் குட்டி தன்னினத்தின் கோரகுணத்தையும், சிங்கத்தின் குட்டி தன்னினத்திற்கு இயல்பாயுடைய பெருந்தன்மையையும் மானின்குட்டி தன்னினத்திற்குச் சுபாவமாகிய பயத்தையும் இவற்றிற் குள்ளேயே வெவ்வேறு ஜாதிகள் தங்கள் தங்களுக்குத் தக்கவாறு புத்தி விசேஷங்களையும் ஜனன காலத்திலேயே பெறுகின்றன. இங்ஙனமே மனிதனுடைய மூளையும்

தன் சந்ததியாரின் மூளை விசாலத்திற்கு ஏற்றபடி சில சில விசேஷங்களைப் பெற்றிருக்கின்றது.

இதனாற்றான் ஒரு பிள்ளைக்கும் மற்ற பிள்ளைக்கும் சுபாவத்தில் வித்தியாசம் ஏற்படுகிறது. உதாரணமாக ஒரு பிள்ளைக்குச் சித்திரம் எழுதுவதில் பிரியம். ஒரு பிள்ளைக்குப் பாட்டு பாடுவதில் ஆசை; வேறொரு பிள்ளைக்குக் கணிதத்தில் இச்சை. இங்ஙனம் பலவகைப்படும். இங்ஙனம் ஒவ்வொரு விசேஷத்தைப் பெற்று ஒவ்வொருவரின் மூளையிலிருந்தும் பல சிறிய எலும்புகளாலாக்கப்பட்ட மணிக்கோவையைப் போன்ற முதுகெலும்பின் மத்தியில் இருக்கும் கால்வாயின் மூலமாகப் பல நரம்புக்கட்டுகள் இறங்கும். இந்நரம்புகள் தேகத்தின் பற்பல பாகங்களுக்குச் செல்லுகின்றன. இந்நரம்புகள் கண், காது மூக்கு, நாக்கு முதலிய இந்திரியங்களுக்கும் மூளைக்கும் சம்பந்தமாக விருக்கின்றன. இவ்விந்திரியங்களின் மூலமாக நாம் அறியும் ஒளி, நிறம், சப்தம், வாஸனை, பரிசம், உருசி முதலிய உணர்ச்சிகள் இந்நரம்புகளின் மூலமாய் நம்மூளைக்குச் சென்று அறிவிக்கின்றன. நெருப்பைத் தொட்டபோது அது (நெருப்பு) நம் கையைச் சுடுகிறது. இதனால் நெருப்பு சூடுடையதென்று அறிகிறோம். வெல்லத்தை வாயில் போட்டு ருசி பார்த்தபோது இனிய சுவையை யுணருகின்றோம். இதனால் வெல்லம் இனிது என்ற ஞானம் நமக்கு வருகிறது. ஒரு எலுமிச்சம் பழத்தைக் கண்ணால் பார்க்கிறோம். அப்போது அது உருண்டை வடிவமுடையதென்றும் மஞ்சள் நிறமுடையதென்றும் அறிகிறோம். இங்ஙனம் ஒவ்வொரு இந்திரியத்தாலும் அதற்குரிய விஷயங்களை யறிகிற அநுபவ ஞானமாம். இந்த அநுபவ ஞானமானது ஒவ்வொருவருடைய மூளையிலும் எண்ணங்களாக (Ideas) பதிகின்றன. ஒருவன் ஒரு எலுமிச்சம் பழத்தைத் தன் இந்திரியங்களின் மூலமாய் அது உருண்டை வடிவமுடையதென்றும், மஞ்சள் நிறமானதென்றும், மிருதுவானதென்றும், ஒருவித வாஸனையானதென்றும், புளிப்பாயிருக்கிறதென்றும் அநுபவித்து அறிகிறான்.

அதிக சில நாளைக்குப்பிறகு அந்த எலுமிச்சம் பழத்தைப் பார்க்க நேர்ந்தால் அப்போது அவன் அதைக் கையில் தொடாவிட்டாலும் அது மிருதுவானதென்றும், முகராவிட்டாலும் அது ஒருவித வாஸனையுடையதென்றும், சுவைக்கா விட்டாலும் அது

புளிப்பான தென்றும் அவன் மனதில் எண்ணுகிறான். பிறகு அவன் வீட்டிற்குச் சென்று அந்தப் பழத்தின் தன்மைகளை யெல்லாம் நினைக்கிறான். அப்போது உருண்டை வடிவம் முதலியன அவனுக்கு ஞாபகம் வருகின்றது. இதற்குத் தான் ஞாபகசக்தி யென்று பெயர். ஒரு பொருளின் தன்மைகளை அல்லது மற்ற விஷயங்களை நன்றாய் ஞாபகத்தில் பதிய வேண்டுமானால் ஒவ்வொரு இந்திரியத்தாலும் அவ்விஷயங்களை யறியும்போது அவன் கவனித்திருப்பது அத்தியாவசியமாம். ஒவ்வொரு இந்திரியத்திற்குரிய விஷயத்தையும் அறியும்போது மனமும் இந்திரியமும் சேர்ந்து வேலை செய்வது தான் கவனித்தலென்றும் உற்றுப் பார்த்தல் என்றும் சொல்லப்படும். "மனமானது இந்திரியத்தோடு சேர்ந்து வேலை செய்வது" என்றால் ஒரு இந்திரியத்தின் மூலமாய் அதற்குரிய விஷயத்தை மூளைக்கு அறிவிக்கும் நரம்புகள் வேலை செய்து கொண்டிருந்தால் வேறொரு இந்திரியத்தின் மூலமாய் அதற்குரிய விஷயங்களை மூளைக்கு அறிவிக்கும் நரம்புகள் வேலை செய்யாது. உதாரணமாக, செவியினால் ஒரு சப்தத்தை யுற்றுக் கேட்டுக் கொண்டிருக்கும்போது கண்ணால் பார்த்த வடிவம், நிறம் முதலியவை மூளைக்கு எட்டா. இப்போது மூளையானது (மனம்) கண்ணிந்திரியத்தோடு ஒத்து வேலை செய்யாததால் அவன் கவனமாய்ப் பார்க்கவில்லையென்று சொல்லுகிறோம். கவனமாய்ப் பாராததால் பார்த்த வடிவம் நிறம் முதலியவை மனதில் நிலை பெற்றிரா.—ஆனால் அப்போது செவி யிந்திரியத்திலிருந்து போகும் நரம்புகள் வேலை செய்து கொண்டிருப்பதால் அவன் மனமானது செவியோடு ஒத்து வேலை செய்ததென்று சொல்லுகிறோம். இதனால் அவன் சப்தத்தை நன்றாய் அறிந்தான். ஆகவே விஷயங்களைச் சந்தேக விபரீதங்களின்றி அறிய உற்றுக் கவனித்தலே இன்றியமையாத தென்று பெறப்பட்டது.

(b) உற்றுப் பார்த்தல் (Observation)

ஒவ்வொரு இந்திரியத்தின் மூலமாயும் அதனதற்கேற்ற விஷயங்களை ஸ்தூலமா யறியாமல் ஸூக்ஷ்மமாயறிந்து அவற்றின் ஒற்றுமை வேற்றுமைகளைக் கவனித்து யாதொரு சந்தேகமும் உண்டாகாத வண்ணம் காரணத்துடன் அறிவதே உற்றுப் பார்த்தலெனப்படும். உதாரணமாக, ஒரு கிளியைப் பார்த்து அது பச்சை நிறமாயிருப்பதால் தன் சத்துருக்களாகிய வேடர்களின் கண்களுக்கு அகப்படாமல் தப்பித்துக் கொள்வதற்கு அது வசிக்கும் மரங்களின் பச்சை நிறத்தைப் போலவே அதற்கும் அந்நிறம் கடவுளால் கொடுக்கப்பட்ட தென்றும், மூக்கு வளைந்திருப்பதால் கடினமான கொட்டைகளையும் உடைத்துத் தின்ன சௌகரியமாயிருக்கு மென்றும், அதன் கால்விரல்கள் முன்னே இரண்டும் பின்னே இரண்டு மிருப்பதால் மரக்கிளைகளை நன்றாய்ப் பிடித்துக் கொள்ளத் தகுதியாக அமைக்கப்பட்டிருக்கின்றன வென்றும் உணரலாம். பூனையின் கால்கள் பஞ்சுப் பொதிகளைப் போன்று மிருதுவானவையா யிருப்பதால் பூனை தன் இரையைச் சப்தமாய்ச் சம்பாதிக்கத்தகுந்த சாதனமாயிருக்கின்றதென்றும், பாம்பின் பற்கள் உள் வளைவாயிருப்பதால் அவை ஆகாரத்தை மெல்லுவதற்கு உபயோகப் படாவிட்டாலும் அது ஆகாரத்தை (தவளை எலி முதலியவற்றை) முழுதாக விழுங்குகையில் அவை அதன் வாயிலிருந்து தப்பித்துப் போகமுடியாமல் செய்வதில் மிக்க உபயோகமாயிருக்கின்றனவென்றும் அறியலாம்.

நன்றாய், உற்றுப் பார்ப்பதனால் இயற்கையிலுள்ள அநேக விநோதங்களும், கடவுளின் வல்லமையும், ஞானமும் நன்றாய்ப் புலப்படும். இதுவேயுமன்றி மரத்திலிருந்த அத்திப்பழம் கீழே விழுந்ததை யுற்றுநோக்கி, யோசித்ததினா லல்லவோ நியூடன் என்கிறவர் பூமிக்கு ஆகருஷண சக்தி யுண்டென்று கண்டுபிடித்தார்? "ஜேம்ஸ் வாட்" "ஸ்டீவன்ஸன்" என்பவர்களால் நீராவி இயந்திரங்கள் கண்டுபிடிக்கப்பட்டதும் உற்றுநோக்குதலாலேயே யல்லவா? ஆகவே கடவுளால் நமக்குக் கொடுக்கப்பட்ட புத்தியை யுபயோகித்து சிருஷ்டியாகிய இயற்கைப் புஸ்தகத்தை உற்றுப் பார்த்தலின் மூலமாய் வாசித்து கடவுளின் அருமையான செய்கைகளையும் நம்மிடத்தில் அவருக்கிருக்கும் விசுவாசத்தையும் கிருபையையும் அறிந்து நம்முடைய அறிவை விர்த்திசெய்து கொள்ள வேண்டுவது அவசியம். இங்ஙனமே நம்மிடம் கற்கும் பிள்ளைகளிடத்திலும் உற்றுப்பார்க்குஞ் சக்தியை விர்த்திசெய்து அவர்களின் அறிவையும் விர்த்திசெய்தல் நம்முடைய கடமையே யல்லவா?

(c) உற்றுப்பார்த்தலே சிறந்த உபாத்தியாயர்.

(Observation, the great Instructor of Children.)

உபாத்தியாயர்களாகிய நாம் சிறுபிள்ளைகளிடத்தில் உற்றுப் பார்க்குஞ் சக்தியை வழக்கத்திற்குக் கொண்டுவந்து விர்த்திசெய்

தால் நாம் அவர்களுக்குக் கற்றுக்கொடுக்க வேண்டியது மிகவும் சுலபமே. நாம் ஒரு வழிகாட்டியைப்போ லிருந்து விஷயங்களைத் தங்களுக்குத் தாங்களே உற்றுப்பார்த்து யோசித்து அறியும்படி செய்கிறபோது உற்றுப்பார்த்தலே உபாத்தியாயராக வில்லையா? உற்றுப்பார்க்கும் வழக்கத்தை விருத்திசெய்யாமல் "சொல்லிக்கொடுத்த படிப்பு கிளிப்பிள்ளைப் படிப்பைப்போலும், மணமற்ற புஷ்பம்போலும், அறிவு என்பது சற்றேனுமின்றி முடத்தன்மையாயிருக்கும். மேலும் சொல்லிக்கொடுத்த வார்த்தையும் கட்டிக்கொடுத்த சாதமும் எத்தனைநாளைக்குத் தாங்கும்" என்ற பழமொழிப்படி அவ்வித முடப்படிப்பும் ஒரு நாளேனும் மனதில் நில்லாது. ஆகவே நாம் சிறுபிள்ளைகளுக்குக் கற்றுக்கொடுப்பது மிக்க கொஞ்சமாக விருந்தாலும், எப்படி வெண்ணெய் வைத்திருப்பவனுக்கு நெய்யுடைமை நியமமோ அப்படியே உற்றுப்பார்க்குஞ்சக்தியுடையவனுக்குப் புத்திகூர்மையும்மேதாவிசாலமுமிருப்பது நியமமாதலால், இந்த வழக்கத்தை நாம் சிறுவர்களிடத்தில் விருத்திசெய்வது நம்முடைய முதல் நோக்கமென்றறிவது அவசியமாம்.

(வரும்).

ந. சுப்பிரமணிய அய்யர்,
திருவேட்டீச்வரன் பேட்டை.

சுகாதாரம்.

வாயு.

வாயு ஜீவகோடிகளுக்கு ஜீவாதாரமாக விருக்கின்றது. ஆகாரமின்றி ஜீவகோடிகள் சிலகாலம் ஜீவித்திருக்கலாம்; ஆனால் வாயுவின்றி ஒரு நிமிஷநேரமேனும் ஜீவித்திருத்தல் கூடாதாம். இதனால் ஜீவகோடிகளின் ஜீவிதத்திற்கு வாய்வு அத்தியாவஸ்யகமாக வேண்டியிருக்கின்றது. ஜீவர்கள் பிறந்தவுடன் வாயுவையுட்கொள்ளுவது தான் அவர்களது முதற் செய்கையாக விருக்கின்றது; ஜீவர்களிறக்குங் காலத்தில் வாயுவை விடுவது தான் அவர்களது கடைசிச் செய்கையாக விருக்கின்றது.

வாயுவு பூமி மட்டத்திலிருந்து ஆகாயத்தில் 45 மைல் உயரம் வரையில் வியாபித்திருக்கின்றது. வாயுவின் சலனத்திற்குக் காற்

றென்று கூறப்படுகின்றது. வாயுவில் இரண்டு அம்சங்கள் சேர்ந்திருக்கின்றன; ஒன்றற்கு ஆக்ஸிஜன் (Oxygen) பிராணவாயுவென்றும், மற்றொன்றற்கு நைட்ரோஜன் (Nitrogen) உப்பு வாயுவென்றும் பெயராம். பிராண வாயுவு ஐந்தில் ஒருபாகமும், உப்பு வாயு ஐந்தில் நான்குபாகமு மிருக்கின்றன. பிராண வாயு பிராணிகள் ஜீவிப்பதற்கும், நெருப்பு எரிவதற்கும் ஆதாரமாயிருக்கின்றது. இந்தப் பிராணவாயு வில்லாத விடத்தில் பிராணிகள் இறந்துபோவதும், விளக்கு அணைந்துபோவதும் உலகானுபவமாம். ஆனால் வாயுவில் உப்பு வாயு கலந்திராது, பிராண வாயுவே முற்றுமிருக்குமாயின் உலகம் நிலைபெறுவதில்லாதுபோம்; எங்கும் நெருப்பு மயமாய்விடும். அதனாற்றான் கருணையுள்ள கடவுள் ஜீவகோடிகளின் போகானுபவத்திற்கு வேண்டிய அளவாக அதனை வாயுவில் ஐந்தில் ஒருபாகமாக அமைத்திருக்கின்றனர்.

வேறு வாயுக்கள் பல ஆகாயத்தில் வியாபித்திருக்கின்றன. அவற்றுள் கரியமில வாயுவு (கார்பானிக் ஆஸிட் காஸ் Carbonic-acid gas) என்றொரு வாயு விருக்கின்றது. இது வாயுவில் பத்தாயிரம் பங்கில் நான்கு பங்குளது; பிராணிகள் சுவாசத்தினால் வாயுவையுட்கொள்ளும்போது அதிலுள்ள பிராண வாயுவு இரத்தத்தைச் சுத்தஞ் செய்து தேகத்திலுள்ள அசுத்த பதார்த்தங்களை எரித்து விடுகின்றது. அதனாலுண்டாகும் வாயுவே கரியமில வாயுவென்று கூறப்படுகின்றது. ஒரு புருஷன் ஒரு மணிநேரத்தில் 636 கிரெயின் அல்லது 3½ ரூபாய் எடையுள்ள கரியமில வாயுவைச் சுவாசத்தினா லுண்டாக்குகின்றான். விளக்கு முதலியவற்றாலும், தீ எரிவதனாலும், புல் பூண்டுகள், பிராணிகளின் பிரேதங்கள் அழுகிப்போவதனாலும் கரி அமில வாய்வு உண்டாகின்றது. பிராண வாய்வு பிராணிகள் ஜீவித்திருப்பதற்கும், தீ எரிவதற்கும் ஆதாரமாயிருக்கின்றது; கரி அமில வாய்வு பிராணிகளுக்கு ஹானி உண்டாக்குவதற்கும், நெருப்பை அணைப்பதற்கும் யோக்யமுடையதா யிருக்கின்றது. இந்தக் கரி அமில வாயுவை ஒரு பாத்திரத்தில் சேகரஞ் செய்து வைத்து, அதில் ஒரு ஜெந்துவை விட்டால், அஃது உடனே இறந்து விடும். ஆழமான கிணறுகளில் இந்த வாய்வு அதிகமாக விருப்பதுண்டு; அத்தகைய கிணறுகளில் இறங்குகின்றவர்கள்

திடீரென்று இறந்து விடுவதை நாம் காண்கின்றோம். புதையல்களைத் தோண்டுகின்றவர்கள் திடீரென்று இறந்துவிடுகின்றார்கள் என்று நாம் கேள்விப்பட்டிருக்கின்றோம். இதற்குக் காரணம் பேய் பூதங்களல்ல; புதையலிலிருந்துண்டான கரியமில வாயுவேயாம். இக்காரணத்தை யறியாத மூடர்கள் புதையலில் பூதங்களிருக்கின்றனவென்று கருதி அவற்றிற்குப் பலியிடுகின்றார்கள். ஜனநெருக்கமான விடத்திலும், விளக்குகள் நிறைந்த விடத்திலும் கரியமில வாய்வு அதிகமாகவுண்டாகின்றது; அதனாலன்றோ அவ்விடங்களிலுள்ளவர்கள் தலைநோயும், ஆயாசமு முடையவர்களாகி அவ்விடங்களை விட்டு வெளியாயிருக்கு மிடங்கட்குப் போகப் பிரியப்படுகின்றார்கள். இவ்வாற்றால் கரியமில வாய்வு விஷமான தென்றேற்படுகின்றது. இக்கரியமில வாய்வு நிறைந்த ஆகாயத்தினால் பிராணிகட்குக் கெடுதியுண்டாகுமே யென்று பலர் நினைத்தல்கூடும்; ஆனால் இந்தக் கரியமில வாய்வு புல், பூண்டு, செடி, மர முதலிய தாவரங்களுக்கு ஜீவாதாரமாக விருக்கின்றது. அதனால் அவை கரியமில வாயுவை யுட்கொண்டு பிராண வாயுவை வெளியாக்குகின்றன. பிராணிகள் ஆகாயத்திலுள்ள பிராண வாயுவை யுட்கொண்டு தாவரங்களுக்கு ஜீவாதாரமாகிய கரியமில வாயுவை வெளியாக்குகின்றன; தாவரங்கள் கரியமில வாயுவை யுட்கொண்டு பிராணிகளுக்கு ஜீவாதாரமாகிய பிராணவாயுவை வெளியாக்குகின்றன. இங்ஙனம் பிராணிகளும் தாவரங்களும் பரஸ்பர சகாயமுடையனவாயிருக்கின்றன. விருட்சங்கள் பகலில் பிராண வாயுவையும், இரவில் கரியமில வாயுவையும் வெளியாக்குகின்றமையின், பிராணிகள் விருட்சங்களின் கீழ் இரவில் அதிக நேரமிருத்தல் கூடாதாம்; அங்ஙனமிருப்பவர்க்குச் சுகவீனமும், சோர்வுமுண்டாகின்றன; பகற்காலங்களில் விருட்சங்களின் கீழிருப்பவர்க்கு சுகமும் உற்சாகமு முண்டாகின்றன.

கரியமில வாயுவேயன்றி ஆகாயத்தில் வேறு விதமான விஷக்காற்றுக்களும் வியாபித்திருக்கின்றன. அவற்றுள் முக்கியமானவை கெந்தக ஜலவாய்வு (Sulphuretted Hydrogen gas), நவாசாரவாய்வு (Amonia gas) என்பனவாம். கெந்தக ஜலவாய்வு ஜலதாரை முதலிய அசுத்தமுள்ள விடங்களில் உற்பத்தியாவது; இதுமிகவும் விஷமுள்ளது. சென்னையில் மூடப்பட்டிருக்

கும் சாக்கடைகளைச் சுத்தஞ்செய்யச் சென்ற கூலியாட்களுள் இருவர் மயக்கமடைந்து இறந்துவிட்டனர். இந்த விஷக்காற்றையே வீசிக்கொண்டிருக்கும் சாக்கடைகளினருகே வாசஞ்செய்பவர்கள் மிகவும் சுகவீனமுள்ளவர்களாக விருப்பதை நாம் பார்க்கின்றோம்; அவர்கள் தலைவலி, மயக்கம், வாந்தி, பசியின்மை முதலிய நோய்களால் பீடிக்கப்பட்டிருப்பதை நாம் காண்கின்றோம். அதனால் சாக்கடைகளினருகே வாசஞ் செய்வது சுகவீனத்திற்கேதுவாமென்பதனை ஜனங்கள் உணர்தல் வேண்டும். அசுத்தத்தை வீசும் இந்த விஷவாய்வு நாம் பானஞ்செய்யும் ஜலத்தில் சேர்ந்துவிடுமாயின், அந்த ஜலத்தைக் குடிப்பவர்க்கு இரத்தக்கட்டி, வயிற்றுப்போக்கு, சீதபேதி முதலியவியாதிகள் உண்டாகும். அதனாற்றான் ஜலத்தை நன்றாகக் காய்ச்சி, வடிகட்டிய பின்னரே பானஞ்செய்தல் சுகாதாரத்திற்கேதுவாமென்று சாஸ்திரஞ்ஞர்கள் கூறுகின்றனர். பிராணிகளின் மூத்திர முதலிய கழிவுப் பதார்த்தங்களிலிருந்துண்டாகும் வாய்வு நவாசார வாயுவாம். இவற்றைப்போன்ற பலவகைப்பட்ட விஷவாயுக்கள் ஆகாயத்தில் வியாபித்திருக்கின்றன. (வரும்).

கிரீக்தேசத்துப் பீமசேனன் கதைகள்.

பீமசேனனும் பாம்புகளும்.

உலகத்தில் ஆதிகாலத்தில் அதிக நாகரிகம் பெற்ற தேசம் கிரீஸ் தேசமாம். அந்தத் தேசத்தில் அநேக வல்லமைசாலிகள் இருந்தார்கள். அவர்களுள் அதிக கீர்த்திபெற்றவன் பீமசேனன் என்பவன். இவனைப்பற்றி அநேக கதைகள் சொல்லுகிறார்கள். அவற்றுள் சில இப்போது சொல்லப்படும்.

கிரீஸ் தேசத்தார்க்கும், இந்துக்களுக்கு இருப்பதுபோல, அநேக தேவகதைகள் உண்டு. அவர்களுடைய ஒரு தேவனது புத்திரன் பீமசேனன். இவன் அந்தத் தேவனது புத்திரர்களில் மிக்க பலசாலி, தைரியவான், பெருத்த சரீரமுடையவன். இவன் பிறந்து சில மாதத்திற்குள்ளாகவே, அச்சிறுவனது இளங்குழந்தையாக இருக்கும்போதே தனது தைரியத்தைக் காட்டினான். இவனை இவன் தாயார் இவன் தமையனது கேடயத்தில் வளர்த்தித் தூங்கச்செய்வது வழக்கம். அதுபோலவே ஒருநாள் இவன்

தாயார் இவனை அந்தத் தொட்டிலில் வளர்த்தித் தூங்கவைத்தாள். எல்லாச் சந்தடியும் அடங்கிவிட்டது; இவனும் தூங்கிவிட்டான்; அப்போது இரண்டு பெரிய பாம்புகள் அந்த அறைக்குள் மெதுவாகப்போய் அந்தக் கேடயத்தில் நுழைந்தன. பிறகு அதில் தூங்கும் குழந்தையைச் சுற்றிப் பின்னிக்கொண்டன; தலைகளையும் தூக்கி இக்குழந்தையைக் கடிக்கவும் ஆரம்பித்தன.

அப்பொழுது குழந்தை விழித்துக்கொண்டது; பாம்பைப் பார்த்துப் பயப்படவில்லை. ஆனால் தொட்டிலில் மெல்ல எழுந்து நின்றுகொண்டு இரண்டு பாம்புகளையும் இரண்டு கைகளால் சீக்கிரமாகப் பிடித்தது; பிறகு அவற்றை நன்றாகப் பலங்கொண்டு நசுக்கினது. இந்தப் பாம்புகள் அக்குழந்தையைச் செவ்வனே பின்னிக்கொண்டு தலையை அடித்தன. இந்தச் சத்தத்தைக் கேட்ட அவனது தாயார் அங்கே ஓடிவந்தாள். அங்கிருந்த குழந்தையையும் பாம்புகளையும் பார்த்துப்பயந்து துணைதேடுவதற்காக வெளியே ஓடினாள். மறுபடியும் உள்ளேவந்து பார்க்கத் தன்னுடைய குழந்தை பொம்மைகளோடு விளையாடுவதுபோல் அந்த இரண்டு பெரும் பாம்புகளோடு விளையாடிக்கொண்டிருந்தது. கொஞ்ச நேரத்தில் இரண்டு பாம்புகளும் இறந்துவிட்டன. இதையறிந்த தாயார் பாம்புகளைக் கையிலிருந்து விடுவிக்க முயன்றபோது இந்தப் பாம்புகளைத் தன்னுடைய குழந்தையின் சிறுகைகள் மிகக் கெட்டியாய்ப் பிடித்துக்கொண்டு இருந்தனவென்றும், அதனால் அப்பாம்புகள் இறந்துபோய் விட்டன என்றும் கண்டு ஆச்சரியமடைந்தாள்.

மேலும் பின்னால் நடக்கப்போகிற காரியங்களை முன்னமே சொல்லுகிறதாக அந்தத் தேசத்தார் எண்ணியிருந்த ஒரு குருட்டுக் கிழவனிடம் குழந்தையின் தாயார் அடுத்த நாள் சென்றாள்; ஒரு வருடம்கூட ஆகாத ஒரு குழந்தை இரண்டு பெரிய பாம்புகளைக் கொன்றுவிட்டது; இதன் அர்த்தம் என்ன என்று எனக்குச் சொல்லவேண்டுமென்று அக்கிழவனைக் கேட்டாள்.

உலகத்தில் முற்காலத்தில் இருந்த எல்லாரைப் பார்க்கிலும் உன்னுடைய குழந்தை, பீமசேனன், மிக்க வல்லவனாவான் என்றும், அவன் விநோத காரியங்கள் அநேகம் செய்வானென்றும், முடிவில் கிரீக் தேசத்து மலையுச்சியில் தேவதைகளோடு வசிப்பான் என்றும் அந்தப் புத்திமான் சொன்னான்.

இந்தக் குழந்தை வளர்ந்து வந்து கொண்டிருக்கும்போது நின்றுகொண்டே தனது தேரை ஓட்டவும், பலமுள்ள இரும்பால் செய்த உடுப்புகளைப்போட்டுக் கொண்டு சண்டை செய்யவும், குஸ்தி பிடிக்கவும், வில்லில் அம்பைவைத்துத் திறமாய் எய்யவும், நன்றாகப் பாடவும், விளையாடவும் கற்றுக்கொண்டான்.

இம்மாதிரியாக அவன் பதினெட்டுவயது அடையும் வரைக்கும் வலுமையிலும் பலத்திலும் விருத்தியாவதில் காலத்தைக் கழித்துவந்தான். ஆனால் அவன் சாந்தமும் பட்சமும் உடையவனாக இருந்து, தன்னைப் போன்ற பலமில்லாதவர்களுக்கு ஆவலோடு எப்பொழுதும் உதவி செய்துவந்தான்.

வ. ஆறுமுகசெட்டியார்,
முத்தியாலுபேட்டை, சென்னை.

புல்லறிவாண்மை.

ஆழமறியாமல் ஜலத்தில் காலை யிடுகிறவன் தனக்குத்தானே யமனாவானென்பதற்கு அவனது புல்லறிவாண்மையே காரணமாகவிருக்கின்றது.

எதையும் விபரீதமாக நினைத்துத் திகைக்கின்றவன் மூடரில் தலைமையானவனென்று கருதப்படுவான்.

நன்றி யின்னதெனத் தெரிந்துகொள்ள மாட்டாதவன் மனிதனாக வுருக்கொண்டிருக்கினும் ஸூத்திரக் கயிற்றால் அசைவுறுமரப் பாவையின் தன்மை யுடையவனென் றெண்ணப்படுவான்.

மோக்ஷத்திற்குறுதியைத் தரும் நல்லவசனங்களை விரும்பிக் கேளாதவர்கட்கு வலுவிற்போய் அவைகளையெளிதிற் சொல்ல விரும்புகின்றவன் ஞானியாக விருந்தாலும் பேதையிற் பேதையெனப்படுவான்.

எண்ணிக்கையில்லாமல் வைக்கப்படுகின்ற த்ரவ்யம் குறைவடையுமென்பதற்கு ஸந்தேகம் வேண்டுவதில்லை; எப்படியெனில், அறிவில்லாதவன் கைப்பொருள் அவனையறியாமலே அழிந்துபோமென்பது போலேதான்.

அறிவென்னும் தீபமில்லாதவர்கள் வாழுமிடம் அந்தகாரமான இருள்மூடிய காட்டுக்கொப்பாகும்; ஆதலால் அவர்களோடு சேர்ந்து செய்வதில் ஒரு பலனுமில்லாமற் போவதுமன்றி பற்பல விக்கட்டுகளும் நேரிடும்.

தம்மைத்தாமே புகழ்கின்றவர்கள் வித்வான்களாக விருந்தினும் அவிவேகிகளென இகழப்படுவார்கள்.

மதம்பொழிகின்ற யானை முன்னிட்டவர்களைக் கொல்லுமென்றறிந்திருந்தும் அதற்கு முன்னேறுகிறவன் பலாட்டியனாக விருந்தினும் உயிரிழக்கும்படி நேரிடுமென்றறியாதவன் அறிவிலானுவான்.

ஆதலால் அறிவின்மையானது எல்லாநன்மைகளுக்கும் பங்கத்தை யுண்டாக்குவதால் அந்த மௌட்யத்திற் கிடங்கொடாது நடத்தலே நன்மார்க்கத்திற்கோர் சேணியாக விருக்கும்.

நட்பு.

அன்பை விருத்திசெய்கின்ற நட்பாளரை யெக்காலத்துங் கைவிடாது நேசித்திருப்பதே ஸ்நேஹத்திற்கழகு.

அன்புடன் ஸ்நேஹிப்பவர்களை யெப்பொழுதுங் கைவிடாமல் அவர்கள் விருத்தியாகும்படிக்குத் தன்னாற்கூடிய வுதவிசெய்து புகழடைவதே பெருமையாம்.

நெடுங்காலமாய்ப் பழகிவருந் தொடர்ச்சியையுடைய நல்லோர்களை நன்குமதித்துக் காக்கவேண்டும்.

சுற்றத்தார் மகிழ்ச்சியடையும்படி அவர்களைத் தழுவி வாழ்தலால் அவர்கள் செய்யுமுரிமைகொண்டு பெருமையடையலாகும்.

இனிய செய்கையுடைய நல்ல விவேகிகளின் நட்பைக்கொண்டு அவர்களோடு கூடிவாழ்வதைவிடத் தர்மம் வேறொன்றில்லை.

நட்பின் முறைமையில் "நீரும்பாலும்போல" வென்னுமோர் உவமையுண்டு; எப்படியெனில், பாலானது காய்ச்சப்படும்போது தண்ணீரானது தான் ப்ரவேசித்து அக்காய்ச்சல் வருத்தத்தை மேற்கொண்டு மித்திரனைக்காக்க விரும்பிச் சுண்டிப்போகின்றது; அதுகண்டு பாலானது பொங்கி நெருப்பில் வீழ்ந்தழிந்து போக முயல்கின்றது; அதைக்கண்டு பொறுக்காமற்றண்ணீர் மறுபடி

சேர்கிறது; பாலை நெருப்பில் விழவொட்டாமல் காக்கின்றது. இதுவே "க்ஷீரோதக ந்யாயம்" எனப்படும். பால் காய்ச்சப்படும்போது தண்ணீர் கலக்கப்படுவதும், அது சுண்டினவுடனே பால் பொங்குவதும், பின்னர்த் தண்ணீர் கலக்கப்படுமாயின் அது பொங்காமலிருப்பதுந்தான்.

தீனரோடு கூடி துர்மார்க்கங்களை யநுஸரித்துப் பாபத்திற்கு ஏதுவான காரியங்களைச் செய்கிறவன் நல்ல குடிப்பிறந்தவனாக விருந்தாலும் அவிவேகியெனப்பெயர் பெறுவதுமல்லாமல் குலஹீனனென்றும் பெயர்பெறுவான்; ஆதலால் மேன்மக்களோடு நட்புச் செய்யவேண்டும்.

செல்வம் வந்த காலத்திலும் ஸ்நேஹத்தை மறவாமலதிகமான அன்பைச்செலுத்தித் தகுந்தவுதவி செய்கின்றவர்களே ஸ்நேஹர்க்குத் தகைமையானவர்களாக வெண்ணவேண்டும்.

சுற்றத்தாரை விட்டுநீங்கித் தாம் விரும்பியவைகளைத் தாமே நினைப்படிச்செய்து நடக்கின்ற அறிவீனர்களோடு உறவு செய்யலாகாது; அதனால் தீங்கு நேரிடுவதுமன்றிச் சீர்திருத்தும் கேடுவரும்.

நம்மிடத்தில் யதார்த்தமாக நம்பிக்கைவைத்திருக்கின்ற ஸ்நேஹிதரிடத்துப் பொய்சொல்ல வொருபோதும் விரும்பக்கொள்ளலாகாது; அப்படிவிரும்பினால் வஞ்சகனென்கிற பெயருண்டாவதோடு ஸ்நேஹபங்கமும் நேரிடும்.

உரிமையாக நினைத்துச் சொல்லப்படும் யதார்த்தத்தைப் பொய்மையாக வெண்ணி மெய்யான ஸ்நேஹத்தை விரோதிக்கின்றவன் புத்தி சாலியல்ல வென்பதற்கு ஸந்தேஹமில்லை. ஏனெனின்; அதனால் அவனுடையவேண்டிய எல்லாப்பயன்களையு மிழந்து விடுவா னென்பதனாலேதான்.

விவேக மில்லாதவனுடைய நட்பைக்காட்டிலும் விவேகியினுடைய பகைமேலானதென்று பெரியோர் கூறுவதற்குப் பொருளென்ன வெனில், புத்திமான்களுடைய ஸ்நேஹத்தை விரும்பித் தேடவேண்டு மென்பதுதான்.

மெய்யான நட்பாளருடைய வொருமை விரோத முதலான காரணங்களாற் கெடமாட்டாது; எப்படியெனின், சந்த்ரன் மேகத்தினாற் சூழப்பட்டு நெடுந்தூரத்திலிருந்தாலும் ஆம்பல்களை மலர்ப்பித்து வாஸிக்கும்படிச் செய்யவில்லையோ?

அதிஸ்நேகத்தினால் அவிவேகிகள் ஸ்நேஹிதருடைய பெருமையையுங் குணங்களையுமறியாமற் போகிறதுமல்லாமல் அவர்களை யலக்ஷியஞ்செய்கிறார்கள்; அதெப்படியெனின் சந்தன விருக்ஷங்கள் அதிகமாயிருக்கும் காட்டிற் குடியிருக்கின்ற மூடர்கள் அதை யெரிகரும்பாக வழங்குந் தன்மைபோலேதான்.

ஸம்பத்துண்டானால் ஸ்நேஹர்கள் அதிகமாய்க்கூடுவார்கள்; ஆனால் அவர்கள் மெய்யான ஸ்நேஹிதரோ அல்லரோவென்று அறிவதற்கு, தரித்ரம் உரைகல்லாயிருக்கும்.

ஆதலால் மேன்மை பொருந்தியவர்களுடைய நட்புக்கிடைக்கொடா திருப்பது வறுமையினுங் கொடியதென்றுணரவேண்டும்.

பக்தி யோகம்.

அவர் சர்வப்பிரபஞ்சத்தின் ஆத்மாவாம்; அவர் மரணமற்றவர்; அவர்க்கே பரணசக்தி; அவர் சர்வஞ்ஞர்; சர்வவியாபி; ஜகத்தை ரக்ஷிக்குங் கர்த்தா; ஜகத்திற்கு நித்தியனாகிய கடவுள்; இந்த ஜகத்தை நிரந்தரமாகத் தரிப்பதற்கு வேறொருவரும் சக்தரன்றாம். அவர் முதலில் பிரஹ்மாவைச் சிருஷ்டித்தனர்; அந்தப் பிரஹ்மாவிற்கு வேதத்தை உபதேசித்தனர்; முமுட்சுவாகிய நான் ஆத்ம ஞானத்தைப் பிரகாசிப்பிக்கவும், அந்தக்கடவுளைச் சரணடைகின்றேன். (சுவேதாசுவதர உபநிஷத்-VI-17-18).

1-பக்தியின் லட்சணம்.

பக்தியோகமென்பது ஈசுவர சாட்சாத்காரத்திற்குரிய உண்மையான ஒரு மார்க்கமாம். இந்த மார்க்கத்திற்கு ஆரம்பத்திலும், மத்தியிலும், முடிவிலும் பிரேமமே ஆதாரமாம். ஒருக்ஷணநேரம் ஈசுவரனிடத்துள்ள அதிப்பிரேமத்தினால், அல்லது அதிபக்தியினால், அல்லது அதி சிநேகத்தினால் நமக்கு முக்தி யுண்டாகின்றது. நாரதமகரிஷியின் பக்தி சூத்திரங்களுள் பக்தியென்பது ஈசுவரனிடத்திலுள்ள அதிப்பிரேமம்" எனக்கூறியிருக்கின்றார். "மனிதன் அதனை யடையும்பொருட்டே அவன் சகலத்தையும் நேசிக்கின்றான்; எதையும் வெறுப்பதில்லை. அவன் நித்தியதிருப்தனுமாம்". "ஆனால் இந்த அதி சிநேகம் லௌகிகமாகிய எதனையும் அடையும்பொருட்டும் உபயோகப்படுத்தப்படக்கூடாததாம்"

ஏனெனின், இக்கதை பெருமையுடைய தாயிருக்கின்றதோ, அது பரிபக்தம் இந்த அதி சிநேகம் அடையப்படுவதன்றும். "பக்தி கர்மத்தைவிட மேன்மையாம்; யோகத்தைவிடவும் மேன்மையாம்; ஏனெனின், இவை ஓர் உத்திருஷ்டகாரியத்திற்குச் சாதனங்களாக மாத்திரமிருக்கின்றன. ஆனால் பக்திக்கு பக்தியே சாதனமாயும், சாத்தியமாயும், பலமாயுமிருக்கின்றது."

பக்தி நமது மகரிஷிகட்கு எப்போதும் பிரசங்கத்திற்குரிய ஒரு விஷயமாம். பக்தியென்னும் விஷயத்தைப்பற்றிச் சாஸ்திரீயமாக எழுதியிருக்கும் சாண்டில்யர், நாரதர் முதலிய மகரிஷிகளைத் தவிர, ஞானமார்க்கத்தைப் பிரதிபாதிப்பவராகிய வேதசூத்திரபாஷ்ய கர்த்தாக்களும் அதனை மிகச் சிலாகித்திருக்கின்றனர்.

பக்திக்கும் ஞானத்திற்கும் சாதாரணமாக நினைத்துவருவது போல ஒன்றற்கொன்று வித்தியாசமின்றாம். அவற்றின் ஆதியே ஞானத்திற்குக் காரணென்றும், முடிவிலவ்விரண்டும் ஒன்றாகச் சேர்கின்றனவென்று முன்னமே நாம் இதிலிருந்தே மேற் பிரதிபாதிக்கப்படும் சங்கதிகளால் நாம் தெரிந்துகொள்ளலாம். இவ்வாறே ராஜயோகமும் முக்தியடையும்பொருட்டுப் பழகப்பட்டால் முடிவில் முற்கூறிய எல்லாவற்றுக்குந்தான் அது நம்மைச் செலுத்துகின்றது.

பக்தியோகம் மோட்ச அடைவிற்கு மிகச் சுலபமும், இயல்பானதுமுள்ள ஒரு மார்க்கமாம்; இதுதான் பக்தியோகத்திற்குரிய பெரிய நன்மையாம். ஆனால் பக்தியின் தொடக்கத்தில் அதற்கு இன்னம் ஒரு தோஷமுண்டு; அது கிரமத்தினால் பிரகிருத பக்தியாய் முடிவில் பயங்கரமாகிய மகாமூட விசுவாசமாகப் பரிணமிக்கின்றது. இதுதான் அதற்குள்ள பெரிய தோஷமாம். இந்து மதத்திலும், மகம்மது மதத்திலும், கிறிஸ்தவமதத்திலும் காணப்படும் எண்ணிறந்த மதப்பற்றுடைய மகாமூடர்கள் முற்கூறியவாறு சிரேஷ்ட பக்தியினின்று வெளிப்பட்டவராம். ஓர் இஷ்ட பதார்த்தத்தின்கண் நிஷ்டை வைத்திருக்கிறான் அதன்கண் பரிபூர்த்தமாகிய சிநேகம் உண்டாம். ஒருவர் பலவிடங்களிலும் அந்த ஏனைய பதார்த்தங்களை இகழ்வதற்கும் காரணமாகவிருக்கின்றது. எல்லாத் தேசங்களிலும், எல்லாமதங்களிலுமுள்ள அற்பமதியினர்க்கும், மூடர்க்கும் தன்னது சொந்தமதத்

தை லேசிக்க ஒருமார்க்கமே யிருக்கின்றது; ஏனைய மதங்களிடத்தும், மதஸ்தர்களிடத்தும் மாறாத வைரத்தைக் காட்டுகின்றனர். சுயமதத்தையும், அதிற் பிரதிபாதிக்கப்பட்டிருக்கும் கடவுளையும் அதிபக்தியுடன் நம்பும் ஒரு புருஷன் மற்றொரு மதஸ்தனையோ மற்றொரு சித்தாந்தத்தையோ பார்க்கும்போது மகாமூர்க்கனும், பயங்கரனும், கேவலம் பித்தம் பிடித்தவனுமாக வெளிப்படுவதற்குரிய காரணம் முற்கூறியதேயாம். இவ்வகைப்பக்தி நாய்களுக்குச் சகஜமாகவுள்ள யஜமான பக்தி போலாம்; நாய் தனது யஜமானனுடைய சொத்தை அந்நியர்கள் அபகரியாது பாதுகாக்கின்றது; அன்றியும் சிலகாரியங்களில் நாய்க்கு மனிதனைவிட அதிக புத்தியிருப்பதாகவும் நினைத்தல் வேண்டும்; ஏனெனின் தனது யஜமானன் எந்த வேஷத்துடன் வந்தபோதிலும் அவர் தனது சத்துருவாமென்று அந்நாய் ஒருகாலும் மாறாக நினைப்பதின்று. இத்தகைய பிராந்தியால் இவ்வகை மூடர்கள் தங்களிடத்துள்ள அற்ப விவேகத்தைக்கூட நாசஞ்செய்கின்றனர். சுயமதத்தின் பிரீதியால் மற்றொருவன் கூறுவது யாதென்று கேட்பதற்குக்கூட அவர்கட்குப் பொறுமையின்று; சரியோ, தவறோ எதுவிருந்தபோதிலும் கூறுபவன் யாவனென்பது மாத்திரம் அறியவேண்டும். தனது பட்சத்தைச் சார்ந்தவர்களிடத்து நற்குணமும், சத்தியமும், சினேகமும் பாராட்டும் அவர்களே அந்நியர்களிடம் துக்கேதுவாகிய நீசகிருத்தியங்களைச் செய்யப் பின்வாங்குவதில்லை.

பக்தியின் ஆரம்பகாலமாகிய கௌணி என்னும் அவஸ்தையில் மாத்திரந்தான் இந்தத் தோஷத்தைப்பற்றிப் பயப்படவேண்டும். இவ்வவஸ்தையை விட்டுப் பராபக்தியை யடைந்தபின் முற்கூறிய பயங்கரமாகிய மூடத்தன்மையைப்பற்றி நினைப்பதற்கின்றும்; ஏனெனின் அத்தகைய உத்கிருஷ்ட பக்தன் பரமாத்மாவோடு மிகச் சமீபித்தவனும்; அவனுக்கு ஏனைய உயிர்களிடத்து யாதொரு வைரமும் தோற்றுவதின்றாம்.

ஞானம், பக்தி, யோகம் என்னும் மூன்றும் ஒன்றாக எந்தப் புத்தியில் மிக ஒற்றுமையாக இருக்கின்றனவோ, அதுவே மகா உத்தமமாம். ஆனால் இவ்வாறு இந்த ஜன்மத்தில் எல்லோரும் அடைவதற்குரித்தன்றாம். ஒரு பட்சிக்குப் பறப்பதற்கு மூன்று சாதனங்கள் வேண்டும்; இரண்டு சிறகும், வழிதிருப்புவதற்கு

ஒருவாலுமாம். நமது அந்தக்கரணமாகிய பட்சிக்கு ஞானம் ஒரு சிறகும் பக்திமற்றொரு சிறகுமாம்; யோகம் வாலின் ஸ்தானத்தில் மத்தியஸ்தமா (சமப்படுத்துவதா) யிருக்கின்றது. இம்மூன்று மார்க்கங்களையும் ஒன்றாகப் பற்ற முடியாது; பக்தி மார்க்கத்தை மாத்திரம் அனுஷ்டிக்கத்தக்கோர் ஒரு காரியத்தை ஞாபகப்படுத்துதல் வேண்டும். நித்திய நைமித்திகக் கர்மங்கள் ஆருருட்சுவின் நிலையில் அத்தியாவசியகங்களாயினும், ஆருடாவஸ்தையில் பரமாத்மாவினிடத்து அதிபக்தியுடனிருக்கும்போது அவற்றால் யாதொரு பயனுமின்றாம். அவை பராபக்திக்குச் சாதனங்கள் மாத்திரமேயாம்.

பக்திமார்க்கத்தை உபதேசிக்கும் ஆசாரியர்களும் பரஸ்பரம் சிறிது அபிப்பிராய பேதமுடையவர்களாம். ஞானிகள் பக்தியை மோட்சசாதன மாத்திரமாக நினைக்கின்றனர்; ஆனால் பக்தர்கள் அதனைச் சாதனமும், சாத்தியமுமாக நினைக்கின்றனர். இந்தப்பேதம் மிக வித்தியாசமுடைய தன்றென்பது எனது அபிப்பிராயம். பக்தி சாதனமாக விருக்கும்போது அது தாழ்ந்தபடியிலுள்ள (கௌணி) பக்தியென்பது பொருளாம். ஆனால் ஆருடாவஸ்தையிலுள்ள பராபக்தியும், இவ்வாரம்பாவஸ்தையிலுள்ள கௌணிபக்தியும் பிரிக்கப்படத்தக்க நிலையிலன்றாம். ஞானியும், பக்தனும் அவரவர்களுக்குரிய பிரத்தியேக மார்க்கத்திற்குப் பிராதான்யத்தைக் கற்பிக்கின்றனர்; ஆனால் பூரணபக்தியுண்டாவதோடு பரமார்த்தஞானம் அவஸ்யம் உண்டாவதாமென்றும், அங்ஙனமே பூர்ணஞானமும் பரமார்த்தபக்தியும் பரஸ்பரம் ஒன்றுபட்டிருக்கின்றனவென்றும், அவற்றைப் பிரித்தல் அசாத்தியமாமென்றும் அவர் நினைப்பதின்றாம்.

இதனையும் ஞாபகத்தில் வைத்துக்கொண்டு இனி இவ்விஷயத்தைப்பற்றி வேதாந்த பாஷ்யகர்த்தாக்கள் கூறுவது யாதென்றறிய நாம் முயற்சிசெய்வோம்.

"ஆவ்ருத்திரஸக்ருதுபதேசாத்"

" என்னும் சூத்திரத்தை வியாக்யானிக்கும்போது பகவான் சங்கராச்சாரிய சுவாமிகள் இங்ஙனம் கூறுகின்றார்: "சாதாரணமாக ஜனங்கள் அவன் ராஜபக்தன், இவன் குருபக்தன் எனக் கூறுகின்றனர். மற்றொன்றையும் விரும்பாது குரு கைங்கர்யத்தை மாத்திரம் செய்யும்பொருட்டுக் குருவைப் பின்

தொடரும் சிஷ்யனை முன்னிட்டே அவ்வாறு கூறுவதாம். அது போலவே, புருஷனிடத்து அதிப்பிரேமமுள்ள மனைவி தனது பிரியநாயகனை எப்போதும் ஸ்மரிக்கின்றாள். இத்தகைய இடங்களில் மிக ஆவேசத்துடன் வரும் பிரவாஹரூபமாகிய ஸ்மரணையைத் தான் குறிப்பிட்டிருக்கின்றது" இது தான் பக்தி. (வரும்)

யுத்தம்.

இப்போது நடைபெற்று வரும் யுத்தம் நேச ராஜாங்கத்தார்க்கு அநுகூலமாகவே இருக்கின்றது; எங்கும் அவர்கள் வெற்றி பெற்று வருகின்றனர். மேற்கரங்கத்தில் பிரிட்டிஷாரும், பிரெஞ்சுக்காரரும் ஜெர்மானியரைப் பின் தள்ளிக்கொண்டு முன்னேறிச் செல்லுகின்றனர். கிழக்கரங்கத்தில் ருஷ்யரும் கலீஷியாவைக் கடந்து கார்ப்பேதியன் மலைப்பிரதேசத்தில் வந்திருக்கின்றனர். சலோனிக்காவிலும் நேசராஜாங்கத்தார் பல்கேரியரைப் பின்தள்ளிக்கொண்டு முன்னேறிச் செல்லுகின்றனர். ரொமேனியரும் டிரான்சில்வேனியாவில் பிரவேசித்து ஆஸ்டிரியருடன் சண்டை செய்து வருகின்றனர். ரொமேனியா சண்டையில் பிரவேசித்திருப்பதை நோக்கி ஜெர்மனி அதை அழிக்கப் பெரும்பிரயத்தனஞ்செய்து வருகின்றது. ரொமேனியருக்கு ருஷ்யர் உதவி செய்து வருகின்றமையின் ஜெர்மனியின் உத்தேசம் நிறைவேறுவது கஷ்டசாத்தியமாம்.

இத்தாலியப் போர்முகத்தில் இத்தாலியர் தடைபடாது முன்னேறிச் சென்றுகொண்டிருக்கின்றனர்; அவர்கள் டிரியஸ்ட் நகரத்தைப் பிடிக்கப் பெரும்பிரயத்தனஞ் செய்துவருகின்றனர்.

இத்தப்போர் சமீபகாலத்தில் முடிவுபெறுமென்று தோன்றவில்லை. பிரிட்டிஷ் மந்திரிகளெல்லாம் இப்போதுதான் யுத்தம் ஆரம்பமாயிருக்கின்றதென்றும், அது முடிவதற்குக் குறைந்தது ஒருவருடகாலமாகுமென்றும் அபிப்பிராயப்படுகின்றனர். அவ்வாறாயின் உலகம் பெரிதும் கஷ்டமடைவதாம். கடவுள் திருவருளினால் இந்த யுத்தம் சீக்கிரத்தில் முடிவுபெறுதல் வேண்டும்.

சக்ரவர்த்தினி.

"கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றீண்டு வாரா நெறி".

VOL-12 தொகுதி-12 | October & November அக்டோபர்மீ - நவம்பர்மீ 1916. | No-3-4. பகு-3-4.

சிவத்தைப் பேணிற் றவத்திற் கழகு.

நம்மவருள் பலர் வறுமையுடையவராகவும் சிலர் செல்வமுடையவராகவு மிருத்தற்குக் காரணம் அத்தியாவசியமாக விருத்தல் வேண்டுமன்றோ? காரணமில்லாவிட்டால் காரிய முண்டாகாதென்பது நிச்சயமாதலின், வறுமை யுண்டாதற்கொரு காரணமும், செல்வமுண்டாதற் கொரு காரணமுமிருத்தல் வேண்டுமென்பது சிறிதூன்றி நோக்குவார்க்குச் செவ்வையாக விளங்குவதாம். "இலர்பல ராகிய காரணம் நோற்பார், சிலர்பலர் நோலா தவர்—உலகத்துச் செல்வர்கள் சிலராக நல்கூர்வார் (தரித்திரர்) பலராதற்குக் காரணம் யாதெனின், அது தவஞ் செய்வார் சிலராக அது செய்யாதார் பலராதல்" என்று தெய்வப் புலமைத் திருவள்ளுவ நாயனார் திருவாய் மலர்ந்தருளியிருப்பதை ஆராய்ந்து நோக்குவோமாயின், செல்வ முண்டாதற்குக் காரணம் தவமாமென்றும், வறுமை யுண்டாதற்குக்காரணம் தவமில்லாமையாமென்றும் நமக்கு நன்கு விளங்குவனவாம். நம்மவர் சொப்பனத்திலும் விரும்புவது செல்வமாக விருத்தலின், நாம் செல்வ முண்டாதற்குக்காரணமாகிய தவத்தைமறவாது செய்து வருதல்வேண்டும். தவம் செய்யாதவர் செல்வத்தை விரும்புதல் முதற்பொருளில்லாத வணிகர் இலாபத்தை விரும்புவதுபோலவாம். முதற் பொருளுடைய வணிகர்க்கன்றி மற்றவணிகர்க்கு இலாப முண்டாகாமை போலத் தவமுடையார்க்கன்றி மற்றவர்க்குச் செல்வ முண்டாகாதென்பது திண்ணமாமென்பதை மறவாதிருப்பவர் தவஞ்செய்யா திருப்ப

இல்லையாம். சித்திமுத்தி யென்பனவற்றுள் யாதாவ தொன்றனைப் பெறுதல் தவமின்றிக் கூடாதாகலின், நாம் தவத்தை மறவாது செய்து வருதல் வேண்டும்.

தவத்தினது இலக்கணம், தவத்தினது சிறப்பு, தவஞ் செய்வாரது உயர்ச்சி யென்பன நமக்கு நன்கு விளங்குமாயின், நாம் நிச்சயமாகத் தவஞ் செய்வதற்கு முயற்சி செய்வோம். தவத்திற்கு இலக்கணமாவது தவஞ் செய்வார் உண்டி சுருக்கல் முதலியவற்றால் தம்முயிர்க்கு வருந் துன்பங்களைப் பொறுத்தலும், பிறவுயிர்களுக்குத் துன்பஞ் செய்யாமையுமாம்.

தவத்தினது சிறப்பாவது தவஞ்செய்வார் நன்மனமும், சாபானுக்கிரக சாமர்த்திய முடையவராதலும் தாம் விரும்பிய பொருள்களை விரும்பியவாறே யடைதலுமாம். தவஞ் செய்வாரது உயர்ச்சியாவது தவஞ் செய்வார் யாவரும் வணங்கும் மேன்மையும், நீண்ட நாள் வாழ்வும், ஈசனது அருளைப்பூரணமாகப் பெறுதற்குத் தகுதி யுடையவராதலாம்.

தவஞ் செய்தவர் சித்தியும் முத்தியும் பெறுதற்குரியவராவா ரென்பதை அடிக்கடி ஞாபகத்திற்கொண்டு வருவோமாயின், ஒருகால விசேஷத்தில் பெரியார் கூறியவாறு தவஞ்செய்யும் பாக்கியத்தைப் பெறுதற்குரியவராவோம்.

“கொல்லாமைக்கது, சொன்மை-பிறவறங்களும் வேண்டுமா விலும் தவம் ஒருயிரையும் கொல்லாத அறத்தின் கண்ணதாம்” என்று திருவள்ளுவர் திருவாய் மலர்ந்தருளி யிருப்பதை நன்கு சிந்தித்து நோக்குவோர்க்குக் கொல்லாத அறமுடையார்க்கன்றி மற்றவர்க்குத் தவஞ் செய்வது முடிவுபெறுமென்பது விளங்கா திருப்பதன்றும்; ஆகவே, நாம் முன்னர்க் கொல்லாவறமுடையவராக முயலுதல் வேண்டும். எறும்பு முதலிய பிராணிகளுள் எந்தப் பிராணியையும் மனப்பூர்வமாகக் கொல்வது அல்லது துன்புறுத்தலது நம்மிடத்தில்லா திருக்குமாயின், நாம் நிச்சயமாகத் தவஞ்செய்து, அதன் பயனைத் தவறாதடைதற்குரியவராவோம். “எவ்வுயிரு மென்னுயிர்போ லெண்ணி யிரங்கவுநின் தெய்வ வருட்கருணை செய்யாய் பராபரமே” என்று தாயுமானவர் திருவாய் மலர்ந்தருளி யிருப்பதை மறவாது, எந்தப் பிராணிக்கும் தீமை செய்யாது தீமை செய்தவர்க்கும் நன்மை செய்து வருப

வர் தவம்புரிதற்குத் தகுதியுடையவரென்பது நிச்சயமாம். கொல்லாவிரதத்தை மேற்கொண்டு தவஞ் செய்பவர் சிவனைத் துதித்து வணங்குவதை மறந்து விடுவாராயின், அவர் தவத்தின் பயனைப் பூரணமாக வடைவதில்லை யென்பதை நம்மனோர்க்கு வற்புறுத்தவே, நமது தமிழ்த் தெய்வமாகிய ஔவைப் பிராட்டியார் “சிவத்தைப்பேணிற் றவத்திற் கழகு—(தவஞ் செய்ய முயன்றவன் தான் தவஞ் செய்யும்போது) சிவத்தை விரும்பி வழிபாடுசெய்து வருவானாயின், (அது அவன் செய்யும்) தவத்திற் கழகாவதாம்” என்றருளிச் செய்தனர்.

“சிவ நன்மை குறுணி முத்தி” என்பது கொண்டாகலின், தவஞ் செய்ய முயல்பவர் நன்மையையும் முத்தியையும் விரும்பித் தவஞ் செய்தல் வேண்டும். நன்மை யென்பது இங்குச் சீவர்களுக்கு நன்மையைத் தரும் சிவமாம்; அஃதாவது கடவுளாம். அக்கடவுளை மறவாது தவஞ் செய்பவர் காலக்கிரமத்தில் துன்பமென்பதின்றி யின்பமே வடிவமாகவுள்ள முத்தியை யடைவதோடு பல நன்மைகளையுமடைதற்குரியவராயிருத்தலின், நம்மனோர் கடவுளை மறவாது தவத்தைச் செய்து வருதல் வேண்டும். இஃதொவ்வொருவரும் மறவாது செய்தற்குரியதாம். தவமாவது மனத்தையும் மெய், வாய், கண், மூக்கு, செவி யென்னுமிந்திரியங்களையும் தீய வழியிற் செல்லாதவாறு பிரயத்தன பூர்வகமாக அடக்குதலாம். மனத்தை யடக்குதல் சமமென்றும், இந்திரியங்களை யடக்குதல் தமமென்றும் சொல்லப்படுகின்றன. சமம், தமமென்னு மிரண்டையும் பூரணமாகப் பெற்றவர் தவத்தின் முடிவில், சிற்பவராவரென்று நாம் நன்குணர்தல் வேண்டும்.

மனத்தைத் தீய வழியிற் செல்லாவாறடக்குதல், இந்திரியங்களைத் தீய வழியிற் செல்லாவாறடக்குதல் என்னுந் தவத்தைச் சிரத்தையோடு, எல்லாம்வல்ல ஈசனைத் தியானித்தும் வாழ்த்தியும், வணங்கியும் செய்துவருபவர் மார்க்கண்டேய மகாமுனிவரைப்போல யமனை வெல்லுமாற்றலு முடையவராவர்; அவர் விரும்பியபயன்களை யெல்லாம் விரும்பியவாறே அடைவரென்பது நம்மனோர்க்குப்பெரும்பான்மையும் விளங்கா திருக்கின்றது. அதனால் பலர்செல்வ முண்டாவதற்குக் காரணமாய தவத்தைச்செய்யாது, வறுமை நோய்க்குவாய்ப்பட்டோராக வருந்துகின்றனர். நாமிப்போது வறுமையுடையவராயிருப்பதற்குக்காரணம் முன்னர்த்தவஞ்செய்

பூரணமையே யாவென்பது நமக்கு நன்குவிளங்குமாயின், நாம் இப்போது தவத்தை மறவாது செய்து வருதற்குரியவரோம். வாக்குண்டாமென்னும் நூலில் நமது ஔவைப் பிராட்டியார் "மேலைத் தவத்தளவே யாகுமாம் தாம்பெற்ற செல்வம்" என்றருளி யிருப்பதனால், அவரவர் செய்த தவத்தினளவாக அவரவர்க்குச் செல்வமுண்டாகின்ற தென்பதன்றோ விளங்குகின்றது? நாம் இப்போது விரும்புவது செல்வமாக விருத்தலின், செல்வத்தை வேண்டிச் சிவத்தை நோக்கித் தவஞ் செய்தல் வேண்டும்; இதனைக் கிரமமாகச் செய்து வருவோமாயின், செய்த தவத்தினளவிற்கேற்றவாறு செல்வமுடையவராவோம். உலகத்தில் பலர் வறுமையுடையவரா யிருப்பதைக் கவனித்து நோக்குவோமாயின், தவஞ் செய்வதில்லாது தங்காலத்தை வீணே கழித்துவருபவர் பலராயிருக்கின்றன ரென்பது நமக்குவிளங்காமற் போகாது. புகை யாதிருந்தா லுண்டாவதாம்? தீயிருந்தாலன்றோ உண்டாவதாம்; அங்ஙனமே செல்வம் யா திருந்தா லுண்டாவதாம்? தவமிருந்தாலன்றோ உண்டாவதாம். பெருந் தவத்தைச் செய்தவர் தம் தவத்தினளவிற்கேற்ப அரசராகவும், சக்ரவர்த்தியாகவும், யோகியாகவும் ஞானசாதகராகவும் பிறக்கின்றனரென்று சாஸ்திரங்கள் கூறுகின்றன. நாம் சாஸ்திர விசுவாசமுடையவராய்த் தவத்தைச் செய்துவருவோமாயின், விரும்பிய பயன்களை விரும்பியவாறு தவறாதடைதற்குரியவராவோம்.

தவம் காமியத்தவம், நிஷ்காமியத் தவமென இருவகைத்தாம். இப்பயன் எனக்கு வேண்டுமென்று செய்யுந் தவம் காமியத் தவமாம்; ஒன்றையும் விரும்பாது ஈசனை நோக்கிச்செய்யுந்தவம் நிஷ்காமியத்தவமாம். காமியத் தவம் செல்வத்தைத்தருவதாம்; நிஷ்காமியத்தவம் சித்தத்தை ஆசையில்லா தாக்கி, தத்துவஞான வாயிலாக மோட்சத்தைக் கொடுப்பதாம். இவ்விருவகைத் தவத்துள் நமக்கிஷ்டமாயிருப்ப தெதுவோ அதனை நாம் கடவுள் வழிபாட்டோடு சமயம் நேர்ந்த போதெல்லாம் தவறாது செய்து வருதல் வேண்டும்; செய்து வருவோமாயின், விரும்பிய பயனைத் தவறாதடைந்து மேன்மை யுடையவராவோம். விசுவாமித்திரர், மேன்மையுற்றதும், மார்க்கண்டேயர் சிவனருளுக்குப் பாத்திரமானதும், பகீரதன் ஆகாயகங்கையை அவனியில் வரச் செய்ததும், பிறவும் தவத்தின் மாட்சியாலேயென்பதை மறவாது,

பொருள் கொடுத்துக் கொள்ளவேண்டாத இப்போல வுன்னத தவத்தைச் செருக்கின்றிச் சிவவழிபாட்டோடு செய்து வருவோமாயின், நாம் தவத்தின் பயனை நிச்சயமாக அடைதற்குரியவரோம். தவத்தைப் பெரியார் கூறியவாறு கடவுள் வழிபாட்டோடு செய்வதே தவத்திற்கழகாம். இத்தவமுறை நம்மிடத்துப் பூரணமாக விருக்குமாயின், நாம் எல்லா நன்மையுமடைதற்குரியவராவோம்.

மநுதர்ம சாஸ்திரம்-11-அத்தியாயம்.

"தேவர்க்கும் மக்களுக்கும் உண்டாகும் சுகத்திற்குத் தவமே ஆதியாயும், மத்தியமாயும், அந்தமாயுமிருக்கின்றதென்று வேதப்பொருளுணர்ந்த வித்வான்களாகிய மகரிஷிகள் கூறுகின்றனர்".

முதுமொழிக்காஞ்சி.

"சிற்றல் வேண்டுவோன் தவஞ்செயல் தண்டான்"

பழமொழி.

"முற்பெரிய நல்வினை முட்டின்றிச் செய்யாதார், பிற்பெரிய செல்வம் பெறலாமோ."

திருவாசகம்.

"வான்பாவிய வுலகத்தவர் தவமேசெய வவமே யூன்பாவிய வுடலைச்சுமந் தடவியம ரானேன்"

காஞ்சிப் புராணம்.

"தவமே மேலை நெறியாகுந் தவமே யின்ப நலமாக்கும், தவமே துறக்க மடைவிக்குந் தவமே நரகந் தீர்வாக்கும், தவமே வானோர் திசைக்கிறைவர் சார்க்கு நாயகமாக்குவிக்கும், தவமேயடைதற் கிடையாத தன்றோ வென்று சாற்றினதால்"

என்னும் பிரயோகங்கள் இக்கருத்துணர்தற் பாலனவாம்.

"ஆபதா மபஹர்த்தாரம் தாதாரம் ஸர்வ ஸம்பதாம் லோகாபிராமம் ஸ்ரீராமம் பூயோ பூயோ நமாம்யஹம்; சிவசாம்ப, சிவ சிவ சிவசிவ" என்ற மந்திரங்கள் அனைவரத்து அக்ரஹாரத்தின் மேலத்தெருவிலே ஒரு வீட்டுத் தெருத் திண்ணைமீது முழங்கிக் கொண்டிருந்தன. ரங்கய்யர் வழக்கம்போல குளத்திற்குச்சென்று, மாலை சந்தியாவந்தனத்தை முடித்துக்கொண்டு, தன் வீட்டுத் திண்ணையின்மேல்உட்கார்ந்து, மந்திரங்களை ஜெபிக்க ஆரம்பித்து விட்டார். சுமார் ஏழுமணி. இது ஸகலருக்கும் தெரியும். அக்கிரகாரத்தில் ரங்கய்யருடைய செய்கைகளைக் கொண்டு எவனும் சுலபமாக மணியை நிச்சயித்து விடுவான். அச்செய்கைகள் ஒழுங்காக அந்தந்தக் காலங்களிலே தவறாது நடைபெற்று வந்தன. அதனால் "ரங்கய்யர் குளத்திற்குப் போகிறார்; மணி ஆறு; ரங்கய்யர் ஜெபம் செய்கின்றார்; மணி ஏழு" என்று இங்ஙனம் அவ்வூரிலுள்ளவர்கள் பேசிக்கொள்வது வழக்கம்.

"சிவ சிவ சிவ சிவ, சிவசாம்ப" என்று ரங்கய்யர் ஒன்றையும் நினைக்காமல், சித்தத்தைப் பரமசிவனிடத்தில் நாட்டி, இருட்டில் உட்கார்ந்து சொல்லிக்கொண்டிருக்கிறார்.

சூரியன் அஸ்தமித்து ஏழு, எட்டு, ஒன்பது நாழிகைக்கு நேரமாயின; ஊரில் எல்லாரும் சாப்பிட்டுவிட்டுத் தூங்குகிறார்கள். ரங்கய்யர் ஒருவர் மாத்திரம் இன்னும் சாப்பிட எழுந்திருக்கவில்லை. என்ன காரணம்? அவருடைய தர்மபத்தினியான தங்கம்மாள் அவரைப் போஜனத்திற்கு இன்னும் அழைக்கவில்லை. வழக்கமாய் அந்தப் பதிவிரதா சிரோமணி சமையல்செய்து தனது இரண்டு குழந்தைகளுக்கும் சாப்பாடுபோட்டு, அவர்கள் சாப்பிட்டானபிறகு, தன் கணவனிடம் சென்று "போஜனத்திற்கு எழுந்திருக்கலாம்" என்று சொல்லி, உடனே செம்பில் ஜலங்கொண்டு வந்து கொடுப்பாள். ரங்கய்யர் ஜெபத்தை நிறுத்திவிட்டு, கை கால்களைச் சுத்தம் செய்துகொண்டு சாப்பிடப் போவார். அங்ஙனமிருக்க அன்று இரவு ஒன்பது நாழிகைகள் ஆகியும், அவருடைய பத்தினி அவரை அழையாததனாலும், உள்ளேயிருந்து கொஞ்சமேனும் புகை வெளி வராததினாலும், உண்மையைத் தெரிந்து கொண்டார் ரங்கய்யர். அன்று தம்பதிகளுக்கு உபவாசம். இவ்

விதமான கட்டாய உபவாசங்கள் அந்த ஏழையான குடும்பத்திலே அடிக்கடி நிகழ்வதுண்டு. அந்த நாட்களில் தங்கம்மாள் சிரமப்பட்டு எங்ஙனமாகிலும் குழந்தைகளுக்கு அரைவயிறேனும் நிரம்பும்படியான ஏற்பாடுசெய்துவிடுவாள். அந்த விஷயத்தைக் கூட கவனிக்கமாட்டார் ரங்கய்யர்.

அவர் மிகவும் பொறுமையும், விவேகமுமுடையவர்; சிவந்த மேனி, நடுத்தரமான உயரம், 56 வயது; நீர்க்காவி ஏறிய சுத்தமான பஞ்சகச்ச வேஷ்டி; நல்ல வைதிகர்; ஆசார சீலர்; தெய்வ பக்தி யுடையவர்; சுலபமாக இளகக் கூடியமனது; பரதுக்கம் சகிக்கமாட்டார். பாரதம், ராமாயணம் முதலிய சரித்திரங்களை எவரேனும் படிக்கும்போதும், தாமே வாசிக்கும் போதும், அநேக கட்டங்களில் அவருடைய கண்களிலிருந்து நீர் தாரை, தாரையாகப் பெருகுவதைக் காணலாம். ஒரு சமயம், பாரதத்திலே, பாஞ்சாலியைத் துகிலுரியுங் கட்டத்தில், புஸ்தகத்தைக் கையில் வைத்துக்கொண்டு, அதிலுள்ள துரியோதனனோடு தர்க்கம் பேச ஆரம்பித்து விட்டார். மிகவும் ஏழை; ஆனால் நித்திய கருமங்களை விடமாட்டார். அதிகாலையில் தீர்த்தாத்திரம், ஸ்நானம், பிறகு சந்தியாவந்தனம், சூரிய நமஸ்காரம், பகவத் கீதை படனம். இதற்குள் 65-நாழிகைகளாகும். பிறகு மாத்யான்னிகம், பிரம யக்ஞம், தேவபூஜை, போஜனம், இராமாயணபடனம். மாலை சந்தியாவந்தனம், தெய்வ ஜெபம், போஜனம், நித்திரை. இவை தாம் அவருடைய தினசரி கருமங்கள். அடிக்கடி இராப் போஜனம் தவறுமே யொழிய, மேலே சொன்ன கர்மங்கள் தவறா. அவர்க்கு இரண்டு குழந்தைகளிருந்தும் குடும்பத்தைப் பற்றி அவர் கவலைப் படுவதில்லை. போஜனமில்லாவிட்டால் தான் பட்டினியிருந்து விடுவார். ஒருவரையும் போய் ஒன்றும் கேட்கமாட்டார். அக்கிரஹாரத்துப் பிராமணர்களைப் போல, மற்றவர்களிடமிருந்து விசேஷ தினங்களிலே ஏதேனும் பூரி, தானம் முதலியவை பெற்றுக்கொள்வதற்கும் போகிறதில்லை. ஆதலால் குடும்பத்தின் பாரம் அவருடைய பத்தினியான தங்கம்மாள் தலை மீது விழுந்தது.

அவள் மிகவும் கஷ்டப்பட்டு, நகைகளை விற்றும், பாத்திரங்களை விற்றும், பட்டினி கிடந்தும் குழந்தைகளை வளர்த்து வந்தாள்; வீடோ, ஒரு குடிசை. மேலேயிருந்த விழல் காற்றினால்

அடித்துக்கொண்டு, போகப்பட்டு, அங்கங்கே துவாரங்கள் உண்டாகி விட்டன. சாமான்களெல்லாம் போயின; நகைகளெல்லாம் போயின; தோட்டத்திலிருந்த ஒரு புளிய மரத்தையும் விற்றுவிட்டது. தங்கம்மாள் புருஷனிடத்தில் தரித்திரத்தைப் பற்றிப் பேசுவதேயில்லை. தரித்திரம் முற்ற, முற்ற புருஷனிடத்திலுள்ள விசுவாசமும், பக்தியும் முற்றிக்கொண்டே வந்தன. மேலும் தெய்வபக்தி நிரம்பினவள் தங்கம்மாள். அவளுக்குக் கலியாணமாகி அநேக வருஷங்கள் சென்றும், புத்திர பாக்கியமில்லாதிருந்த படியினால் மிகக் கவலைகொண்டு, தனது இஷ்ட தெய்வமாகிய, மயிலம் சுப்பிரமணிய சுவாமியை நாடி, பக்தி சிரத்தையாக கிருத்திகை விரதங்கள் அனுஷ்டித்து, ஓர் அருமையான புத்திரனைப்பெற்று மகிழ்ச்சி அடைந்திருந்தாள். அப்புத்திரன் தனது அம்மான் வீட்டில் வளர்ந்து கல்வி கற்றுக்கொண்டு வருகிறான். பிறகு இரண்டு புத்திரர்கள் காலக்கிரமத்தில் பிறந்தார்கள். நல்ல பருவமழைகள் இல்லாதபடியினாலும், நிலங்கள் சரியான பலனைத்தராதபடியினாலும், நிலவரி, குடும்பச்செலவு முதலியவற்றாலும் அந்தச் செழிப்பான குடும்பம் நாளடைவில் தரித்திர தசையை அடைந்து இந்த ஸ்திதிக்கு வந்திருக்கிறது.

ரங்கய்யரோ, எது எங்ஙனமாயினும் ஒரே பிடிவாதமாக வெளியே செல்வதில்லை. ஆனால் கிராமத்தின் நன்மையைக்கோரி பொதுவிஷயங்களுக்கு உழைப்பதில் மிகுந்த சிரத்தையுடையவர். அதற்காக, சலிக்காமல், நியாயஸ்தலங்கள் எவ்வளவு தொலைவிலிருந்தாலும் கால் நடையாகவே போய்வருவார். போஜனம் கிடைத்தால் மேல்; கிடைக்காவிட்டால் நல்லது என்றிருந்து விடுவார். ஆதலால் "எல்லாம் ஈசன் செயல், நமது குடும்பம் தங்கம்செயல்" என்றிருந்துவிட்டார் போலும்!

இக்காரணங்கள் பற்றி அவர், தனது பத்தினிவந்து "எழுந்திருக்கலாம்" என்று சொன்னபிறகுதான், திண்ணையை விட்டெழுந்திருப்பார். அன்று அன்னமில்லாதபடியினால், உபவாசம் என்று தெரிந்துகொண்டார் ரங்கய்யர்; ஜெபம் சிறிது நீண்டது.

சுமார் பத்து நாழிகைக்கு "அண்ணா, அண்ணா" என்று சொல்லிக்கொண்டே, ஒருவர் திண்ணைமீது வந்து உட்கார்ந்தார். "என்ன வெங்குசாமி, இந்த நேரத்தில், இந்த இருட்டில், எங்

கிருந்து வருகிறாய்?" என்றார் ரங்கய்யர், குரலின் தொனியைக் கொண்டு.

இங்ஙனம் "வெங்குசாமி" என்றழைக்கப்பட்டவர் அதே தெருவில் தெற்குக்கோடி வீட்டு ராமய்யருடைய தம்பி; அவர் தம் தமயனுடன் சண்டைபோட்டுக்கொண்டு, வேலூரிற்சென்று, நிலம் அளக்கும் இலாகாவில் ஓர் உத்தியோகம் பெற்று, சுகமாக ஜீவித்து வருகிறார். தற்காலம் அவருக்கு நெல்லூர் ஜில்லாவில் உத்தியோகமான படியினால், ரங்கய்யர் "எங்கிருந்து வருகிறாய்?", என்று ஆச்சரியமாகக் கேட்கும்படி நேரிட்டது.

வெங்குசாமி:—அண்ணா, நான் இத்தனை நாளைக்குப் பிறகு எவ்வளவு தொலைவிலிருந்து வந்திருக்கிறேன்; என்னை அகத்தில் ஒருவரும் "வா" வென்று சொல்லவில்லை. எனக்கோ கடுமையான பசி; என்னுடைய மன்னி போஜன விஷயத்தைக் கவனிப்பதை விட்டு, பழைய சங்கதிகளை எடுத்துக்கொண்டு பேசிச் சண்டை பிடிக்க ஆரம்பித்தாள். அண்ணா ஏதும் ஒன்றும் பேசவேயில்லை. நான் உத்தியோகத்தில் அமர்ந்தது முதல், பழைய விரோதங்களை எண்ணாமல், என் தமயன் குடும்பத்திற்கு எவ்வளவோ உபகாரங்கள் செய்திருந்தும், அவர்கள் அவற்றை மறந்து விட்டார்கள். இத்தனை காலஞ்சென்று வந்தவனுக்குக் கொஞ்சம் சாப்பாடு போட்டு, மறுபடி சண்டை பிடிக்கலாகாதா? எனக்கு அவ்விடத்திலிருக்கக் கொஞ்சங் கூட பிடிக்கவில்லை. அதனால் ஓடி வந்தேன். இப்போது எனக்குப் பசிக்கின்றது. மன்னி உள்ளே இருக்கிறாளா? நீங்கள் சாப்பிட்டாய் விட்டதா?

ரங்கய்யர்:—இன்று சனிக்கிழமை அல்லவா? எனக்கு விரதநாள். இரவில் ஒன்றும் சாப்பிடும் வழக்கமில்லை.

வெங்குசாமி:—கொஞ்சம் பழையது இருந்தாலும் போதும்.

உடனே ரங்கய்யர் உள்ளே சென்று தனது பத்தினிக்கு வெங்குசாமியின் வரவை அறிவித்தார். இரண்டு பேரும் கையைப் பிசைந்துகொண்டு யோசித்தார்கள். அக்கிரஹாரத்திலே ஒருவனும் இரவில் கடன் கொடுக்கமாட்டான்; கதவையே திறக்க மாட்டான். என்ன செய்கிறது? கடைசியாக, ரங்கய்யர் தோட்டத்திலேயே, தம் வயதுடைய ஒரு தட்டானிடத்தில் போய் உண்மையைச் சொன்னார். அவனும் ஏழையான படியினால்,

அரைப்படி அரிசியும், கொஞ்சம் பருப்பும் கொடுத்தான். ரங்கய்யர் அவற்றைப் பெற்றுக்கொண்டு, தனக்கிருந்த ஒரே மேல் வேஷ்டியை அவனுக்குக் கொடுத்தார். அவன் அதைப் பெற்றுக் கொள்ளாமல் "சுவாமி, தமக்கு நல்ல காலம் வரும்போது, எனக்கு ஒரு புதிய வேஷ்டி வாங்கிக் கொடுக்கலாம். இப்போது வேண்டாம்" என்றான். ரங்கப்பர் அதி விரைவாக அந்தக் கரசியையும், பருப்பையும் எடுத்துக்கொண்டு வந்து, தங்கம்மாளிடம் கொடுத்துவிட்டு, தெருத்திண்ணைக்கு வந்தார். கொஞ்சம் தாமதித்து வந்ததைக் கண்டு "என்ன, அண்ணா! விருந்து பலமோ?" என்றார். இக்குடும்பத்தின் ஏழைமை ஸ்திதியை அறியாத வெங்குசாமி அய்யர். மேலும் ரங்கய்யர் உபவாசங்களால் மெலிந்திருக்கவில்லை; தான் வருந்தப்படுகிறதுமில்லை. எப்போதும் சந்தோஷமாக இருப்பார். பட்டினியாக இருந்தாலும், சாப்பிட்டவரைப் போலக் காணப்படுவார். அந்த விஷயத்தை ஊரிலுள்ளவர்களே அறியார்கள். அங்ஙனமிருக்க, சில வருஷங்களாக ஊரிலில்லாத வெங்குசாமி அய்யருக்கு என்ன தெரியும்? அவர் வழக்கம் போல் பேசினார்.

"ஆம், பலமான விருந்துதான்; நினையாத விருந்து" என்றார் ரங்கய்யர்.

பிறகு, இருவரும் நெல்லூர் ஜில்லா, உத்தியோகம் முதலிய விவகாரங்களைப்பற்றி சம்பாஷித்துக் கொண்டிருந்தார்கள். சிறிது நேரத்திற்கெல்லாம், தங்கம்மாள் "போஜனத்திற்கு எழுந்திருக்கலாம்" என்று சொல்லி, ஒரு செம்பில் ஜலம் கொண்டு வந்து திண்ணை மீது வைத்தாள். வெங்குசாமி எழுந்து, கைகால்களைச் சுத்தம் செய்து கொண்டு, உள்ளே சென்று விருந்துண்டு வெளியே வந்தார். ரங்கய்யர் "இன்று விரத"மென்று ஏற்கெனவே சொல்லிவிட்டபடியால், அவர் வெங்குசாமியுடன் உட்கார்ந்து சாப்பிடவில்லை.

"அண்ணா," "என்றார் வெங்குசாமி." என்ன சுகமான விருந்து! இந்தப் பருப்புத் துவையலும் ரஸமும் சேர்ந்த போஜனத்தைப் போல் அவ்வளவு ருசிகரமானதும், மனதிற் கின்பமானதுமான சாப்பாடு இதுவரையில் புசித்ததேயில்லை. இதுது உண்மையில் நான் நினையாத விருந்து."

என்று சொல்லிவிட்டு, உடனே போய்விட்டார். அவர் போன பிறகு, தங்கம்மாள் வழக்கம்போல், வெளியே வந்து "போஜனத்திற்குத் தாங்களும் எழுந்திருக்கலாம்" என்று சொல்லி, செம்பை நீட்டினாள். ரங்கய்யர் அதைக்கொண்டு கைகால்களைச் சுத்தம் செய்துகொண்டு, உள்ளே சென்று சாப்பிட்டு விட்டு, மறுபடியும் திண்ணை மீது வந்து உட்கார்ந்து விட்டார். அதற்கு மேல் அவருடைய பத்தினியும் போஜனம் அருந்தினாள். அன்றைய போஜனம் இந்தத் தம்பதிகளுக்கும் விருந்தாகவே இருந்தது. இவர்களும் "நினையாத விருந்து".

N. சுப்பிரமணிய அய்யர், புதுச்சேரி.

நீதிசாரம்.

பகை.

எந்தக்காரணத்தினாலாவது நேரிட்ட விரோதத்தைத் தீர்க்கமாய் மனதில் வைக்கின்றவர்கள் மூர்க்கரெனப்படுவர்.

எப்பொழுதும் மனதில் பகையையுடையவன் எவ்வளவு மேன்மையுடையவனாகவிருந்தாலும் அவனால் ப்ரயோஜனமுண்டாயிருக்கினும் அவனோடு கூட்டுறவு செய்வதைவிட்டு வெறுமையாக விருப்பது நன்று.

தனது யஜமானனிடத்தில் குற்றத்தைப் பாராட்டிப் பகைத்துக் கொள்ளுகின்ற ஊழியன் தனக்குத்தானே சத்துருவாவன்.

தீர்க்க வைரம்வைக்கின்றவன் தனக்குச் சுற்றத்தானாக விருக்கினும் அவனை அப்புறமே நீக்கவேண்டும்.

எல்லா வுயிர்களுக்குக் கெடுதியைத் தருகின்ற தீயகுணமாகிய பகையை ஒருவன் தன் மனதினிடத்திருந்து பற்றற வொழிப்பானாகில் அது தர்மங்களுக்குள் சிறந்த தர்மமாகப் ப்ரகாசிக்கும்.

ஒருவருக்கொருவர் நட்புப்பெற்றிருப்பதைப்பார்த்து ஸஹியாமல் பகையை விளைவித்துத் துன்பஞ்செய்கின்றவர்கள் யாவரினும் தாழ்ந்தவர்களென்றும் அப்படிக்கல்லாதவர்களே உயர்ந்தவர்களென்றும் பெரியோர் கூறுவர்.

பலவிதத் துன்பங்களையும் விளைவிக்கும் பகையாகிய தீக்குணத்தை மனதிலிருந்து நீங்கும்படிச் செய்கின்ற ஒருவனுக்கு

எல்லாரும் நட்பினராவதுமன்றி அவன் பால் புகழுங்கீர்த்தியும் மேன்மேலும் வளர்ந்து வரும்.

எல்லாத்துன்பத்திற்குங் காரணமும், நற்குணத்தைக் கெடுப்பதற்கு ஹேதுவுமாகிய பகையென்னுந் துர்க்குணத்தை ஸ்வப்நத்திலும் சிந்தியா திருப்பார்களாகில் அவர்களுக்கு ஸகல நன்மையுந் தாமேவந்து கைகூடும்.

பகையானது தோன்றியவப்பொழுதே அதை மனதினிடத்திருந்து நீக்கவல்லவர்களுக்கு உலகத்திலுள்ள யாவரும் அன்பினராவார்களாதலா லவர்களை யார் பாதிக்க நினைக்கின்றவர்கள்?

பகை தனக்கினியதென்றதை மேற்கொண்டு விரோதத்தைப் பாராட்டுகிறவன் மேன்மையடைந்திருந்தாலும் உடனே தனக்குள்ள மேன்மையையும் பொருளையுமிழந்து விடுவதுமன்றி உயிரையு மிழப்பான்.

பகையை மனதினிடத்துக் குடியாகவுடைய அறிவிலர் வெற்றி பெறுதற்குக் காரணமாகிய நீதிநூலினிடத்துண்டாகிய பொருளை யுணர்ந்து முணரமாட்டார்கள்.

பகை அல்லது வைரம் எனும் களை முளைக்கும் பொழுதே யதை விவேகமெனுங் கூரியவாளைக்கொண்டு கொய்து விடுவானேல் அவனுக்குப் புகழும்பெருமையு முண்டாகுமென்பது எப்படியோ அப்படியே அதற்கிடங் கொடுத்து வளர்ப்பவனுக்குப் பழியும் பாவமும் வளர்ந்தேறுமென்று சான்றோருரைத்திருக்கிறார்கள்.

ஆதலால் யாவரும் பகையென்னுந் துர்க்குணத்திற் கிடங் கொடாமல் நீக்கி நற்குணத்தைக் கைப்பற்றி நடக்கவேண்டும்.

கோபம்.

விவேகமின்மையால் சாந்தகுணத்தைவிட்டுக் கோபத்திற் கிடங்கொடுக்கின்றவன் மூர்க்கனெனப்பெயர் பெறுவான்.

ஒருவன் வைதசொற்களுக்குக் காதுகொடுத்துங் கொடாதவன் போல் மனமொடுங்கி யிருப்பதே குணவான்களுக் கழகு.

பெரியோர்களுடைய ஸபையின் முன்னிருந்து அறிவின்மையால் கோபங்கொண்டு இழிவான சொற்களை மதுரமான சொற்க

ளாக வெண்ணி ப்ரயோகிக்கின்றவன் மனிதரிற் பதரென்றிகழப் படுவான்.

மனதிலுதிக்குங் கோபத்தை யடக்கத்தக்க சாந்தகுணத்தை யெப்போதுங் கைவிடாது காப்பதே புருஷருக்கழகெனப்படுவதுமன்றி அப்படிப்பட்டவனுக்குப் பெருமையே வருமெனவும் ஒருபோதுந் தாழ்வுவாராதெனவுங் கூறப்பட்டிருப்பதற்கு அநுபவத்தை விட நிதர்சனம் வேறு வேண்டுவதில்லை.

கோபமென்பது ஒருவ்யாதியாக நினைக்கப்படுவதுமன்றி அதிலுங் கொடியதாகும்; ஏனெனில், அது தாழ்ந்தவர்களிடத்தில் மாத்திரம் வருகிறதேயல்லாமல் மேலானவர்களிடத்தில் வருவதில்லை. பொதுவான வ்யாதியினால் சரீரத்திற்கு மாத்திரங் குறையும் அசௌக்யமுமுண்டாகும். இந்தக்கோபமாகிய வ்யாதி சரீரம் மனது காரியமுதலிய எல்லாவற்றிற்குங் குறையும் நாசமுமுண்டாக்கும்.

கோபத்தினால் அருந்தவம்புரிந்த முனிவர்கள் கூடத் தங்கள் தபோமஹிமையை யிழந்தாரென்று புராணமுதலியவற்றில் வழங்கி வருவதைக் ஞாபகத்தில் வைத்து அதற்கிடங்கொடாமல் நீக்க வேண்டும்.

ஒருவனது கோபஞ்செல்லத்தகுந்த தாழ்ந்தவனிடத்து அவன் கோபிக்காமலதை நீக்கவேண்டும்; தனது கோபஞ் செல்லமாட்டாத மேலானவர்களிடத்தில் கோபித்தாலென்ன கோபிக்காமல் சாந்தமடைந்திருந்தா லென்ன?

தனக்கு மேலானவர்களிடத்துச் செய்யுங் கோபத்தால் தனக்கே துன்பம் நேரிடும்; தாழ்ந்தவர்களிடத்துச் செய்யுங் கோபத்தால் பழியும் பாபமும் நேரிடும்; ஆதலால் தாழ்ந்தவர்களிடத்திலாவது மேலானவர்களிடத்திலாவது கோபஞ் செய்யலாகாது.

மற்றும் மேலானவர், தாழ்ந்தவர், ஸரியானவர், ஆகிய மூவரிடத்திலும் கோபத்தை மறக்கவேண்டும். ஏனெனில், கோபத்தினாலே யாவர்க்குந் தீமை விளைகின்றது.

துறந்தவர்களாகிய ஸந்யாஸிகட்குப் புறம்பானபகையொன்று மில்லை; ஆயினும், கோபங்கொண்டவர்களானால் அது அவர்களுக்குள்ளாகவே சத்துருவாகத் தோன்றி நட்பு-தவை முதலானவை

களை நீக்கிப்பிறவித் துன்பத்தை யடைவிக்குமாதலால் அவர்களுக்குக் கோபத்தைவிட வேறொரு சத்ருவில்லை.

தன்னைத் துன்பமணுகவொட்டாதபடி காக்க நினைக்கின்றவன் கோபமாகிய துன்பத்திற்கிடங்கொடாதபடிக்குத் தக்க முயற்சி செய்யவேண்டும், அப்படிச்செய்ய முயலாவிடின் அது அவனுடைய பிராணனை யிழக்கும்படிச் செய்யும்.

கோபத்திற்கிடங் கொடுக்கின்றவனிடத்துண்டாகிய கோபாக்னி அவனையு மவனுக்கு நல்வழி காட்டுகின்ற ஆசாரியனையுஞ் சுடும்; ஆதலால் கோபத்திற் கிடங்கொடுக்கலாகாது.

நிலத்தினிடத்து மோதி அறைந்தவனது கைதப்பாமல் நிலத்திற் பட்டு வருத்தமடைவது போல தன் வல்லமையைக் காண்பிப்பதற்குக் கோபத்தையே தாயுதமாகவெண்ணிக் கோபிக்கின்றவனது அறிவின்மை விபரீதத்தையுண்டாக்கி அவனுடையவேண்டிய நற்பயன்களைத் தப்பாமலிழக்கச் செய்யும்.

ஜ்வாலைகளையுடைய அக்னியானது ஒன்றைச்சூழ்ந்து தஹிப்பதுபோல ஒருவன் மேன்மேலுந் துன்பத்தைச்செய்வானாயினும் அவன் மேற் கோபிக்காமலிருப்பதற்குக் கூடுமானால் அதைவிட உலகத்தில் நன்மை யொன்றுமில்லை.

கோபத்தைப்பற்ற வொழிப்பதற்கு அருள்நிறைந்த வுள்ளத்தோராக விருக்கவேண்டும். அவர்கள் இம்மை மறுமையிலுண்டாகிய ப்ரயோசனத்தை யொருமிக்க வடைவார்கள்.

மிகுதியாகக் கோபத்தையுடையவன் பிறப்பிறப்பென்னும் துன்பங்களிலிருந்து நீங்கமாட்டான். ஆகையால், அவனுயிருடனிருந்தாலும் இறந்தவனுக்கு ஸமானமாவான். கோபத்தைப்பற்ற விட்டவன் ஞானத்தால் மோக்ஷத்தை யடைவான். அவன் இறக்கத்தக்க சரீரத்தை யுடையவனானாலும் பிறப்பென்னும் துன்பத்தை விட்டவனாவான்.

ஆதலால் கோபமாகிய கொடியபழிக்கு எப்போது மஞ்சி நடக்கத்தக்க விவேகத்தை யுடைத்தாயிருக்கவேண்டும்.

வல்லாள மகாராஜன் சரித்திரம்.

(முன்தொடர்ச்சி.)

அவ்வரசன் சொன்மொழி பிறழான்; கலைகள்யாவுங் கசடறக்கற்று, அதற்குத் தக்கவாறு தாணியாள்வான்; அறவினையே புரிவான்; நின்மலர்ப்பாதமே அரணெனை அனுதினமுந்துதித்து மகிதலகற்பகம் போன்று மன்னுயிர் காத்தரசாளுகின்றான். பெருநெறி கடைப்பிடித் தொழுகும் இப்புரந்தரன் தன்வழித் தொருமக விலாமையினால் சிந்தை மெலிந்து, தன்னரிய அமைச்சருடன் மகப்பேறின்மையும், அஃது இலாமையினால் வருந்துவதும் எண்ணி ஒரு தீர்மானஞ் செய்தனன். அஃது வேண்டினோர் வேண்டியவாறே கொடுத்தலாம். இதை வெளிப்படுத்தத் தவசமொன்று நாட்டி, பறைசாற்றினன். இவ்வாறே இதுகாறுந் தடையிலாது இது நடைபெற்று வருகிறது. இதனால் இரவலரால் துதிபெற்றும், வேதியரால் ஆசிபெற்றும், பாவலரால் புகழ்பெற்றும் வருகின்றான். இதனை அடியனேன் காணவிரும்பி அருணையம்பதிபோய் அங்கு நடைபெறும் பல தருமங்களைக் கண்டு களிப்புற்றேன். அம்மன்னனையும், அவனருந்துணைவியர் இருவரையும் கண்டேன். பிறகு காலங்கடந்த முன்னேனேன்! இங்கடைந்தேன். ஆவியுள்ளாவியாய் விளங்கும் ஆதியே! தேவரீர் அறியாத தொன்றுண்டோ? எனக்கூறி வணங்கி ஒருபுற மொதுங்கி நின்றனர். அமலன் இவையனைத்தும் செவியுற்றுக் கேட்டுச் சொல்லுகின்றான்: அருந்தவமுனிவ! அறமார்க்கமே வேண்டினை; அதனால் அவ்வரசனை யடைந்தனை! அவன் மனமறிந்து இவண் வந்தனை! அங்கு நிகழ்வனயாவும் எமக்குச் சொல்லினை; தபோதனரே கேண்மின்! எண்டிசைத்தோரைத்தனையாவும் யாம் செவியுற்றனம். நன்னெறி புரவச்செய்வது நமது கடனன்றோ! இவ்விஷயம் உலகமறிய வேண்டி ஒரு திருவிளையாடல் செய்ய வெண்ணியுள்ளேம். ஆதலால் யாம் அவ்வருணையம்பதி யடையத் தீர்மானிக்கின்றோம் என்றெம்பிரான் திருவாய் மலரக்கேட்ட முனிவர் கோமான் சிவபெருமானை நோக்கி, அன்பர் வாய்மை உலகமறிய ஆடல்புரிவது நின் கருணைத் திறமோ? என்று பேசி அடிவணங்கி விடைப்பெற்று மீண்டு, வாயில்கடந்து, நந்தியம்பிரான் அடிதொழுது, மீண்டுபோய் அவ்வெள்ளியங்கிரியினோர்பால் தங்கினர். இது நிற்க.

அமலன் நாதருக்கு விடைகொடுத்தனுப்பி மலைமகள் முகநோக்கி யிவ்வாறு மொழிவாராயினர். என்னருட் சக்தியே! முனிவனின் மொழிகளைத்தனையாவும் நீயும் கேட்டனையன்றோ? பூதலத்திம் மன்னன் மனதுறுதி சோதித்து அதனை வெளியாக்கக்கொண்ட எண்ணமும் நீயறிந்துளாய் அன்றோ? ஆகவே நாம் மேதினி சென்று மீளுங்காலவரை நம்மன்பர்க்கு அருள்பாலித்து இங்கு நீயமர்ந்திருப்பாய் என்று கட்டளையிட்டார். இதனைக் கேட்ட கருமணக்கூந்தல் நாயகி எழுந்து பணிந்து, நின்று, போற்றி கண்ணுதற்பெருமா! எவ்வுலகில் யாவர் நின்னை அடைபவர்? ஆயினும் தமியேன் விண்ணப்பமொன்றுளது. திருச்செவி சாய்த்தருளல் வேண்டும் என்று புகன்றாள். என்னிறைவா? முற்றுமறிந்தாயெனவும், வேண்டுதல் வேண்டாமையிலாயெனவும், இயல்பாகவே பாசங்கள் நீங்கினாயெனவும், தொன்மறைகள் சொல்லுவதாக ஆன்றோர் கூறக்கேட்டுளேனே; அவற்றுள் ஒன்றேனும் தேவரீர் வசமிருப்பதாகச் சிறியேனான் அறிய அறிவு சிறிதுமில்லை. பந்த வலையிற்பட்டு அவ்வலையினின்றும் மீளப் பிரியமிலாத தற்பரனே! ஆதிமுதல் ஆன்மாக்களையும் படைத்து, அருமறைகளளித்து, உயிர்களைத் தத்தம் வினைகளில் இயற்றி, தக்க பலன்களை அருளவைத்து, பின் இருவினை ஒப்பு மலபரிபாகத் தேர்க்கழி நின்னுடன் கலக்க அருளுங் கும் பெருந்தொழிற் கொண்டவனே! இயல்பாகவே பாசங்களில் நீங்கினாய் என்பதெவ்வாறோ அறிகிலேன். "நித்திய, சின்மய, நிராமய, நிட்கள, நிரஞ்சன" வெனத் தொன்மறைகள் போற்றுவதனையும் வேண்டாது, நீ "வில்லடிக் கல்லடித்தழும்பும், செருப்படி பிரம்படித்தழும்பும் பெற்றினாய்" எனவும் "மண் சுமந்தாய், பொன் சுமந்தாய், விறகு சுமந்தாய், வலையல் சுமந்தாய்" எனவும், "மனக்கடுத்தாய், மாதகம் விற்றாய், பிச்சை யெடுத்தாய், கற்பழித்தாய்," எனவும், "நரிபரியாக்காட்டினை, பரிநரியா வோட்டினை, மண்ணடைத்தனை, மாமனாய் வந்தனை, பித்தனெனப் பேர் பூண்டனை" யெனவும், "பந்தர்ப்பரப்பினை, பகட்டிச் செய்தனை, பாதிமிரவிற் றூதுசென்றனை, வேடனிட்ட வெச்சிலருந்தினை, ஓலைகொடுத்தனை, வேடச் செய்தனை, விழியுணி கொடுத்தனை, காவச்செய்தனை, வஞ்சகம் பேசினை" எனவும் பற்பல விழி தொழிலாய பழிமையே ஆதியாய்ப் பகருதலிக்கு உள

மகிழ்ந்து, இருகணைக்கொள்ளியி னுறும் நின்னை வேண்டுதல் வேண்டாமையற்றோனென்பது எங்ஙனமோ? தமியேன் அறிகிலேன். படைத்தளித் தழிக்கும் பராபரனுக்கு அனைவியாம் பெரும்பேறு பெற்ற அம்மையின் வாழ்வுயிரிலதாயினும் பழியிலதன்று விழைந்துசென்றாக் கல்விறைந்த பொருளாய்த் தோன்றி அடியவரை யாட்கொள்ள அமலா நீ அவனிக்கேகும் போதெல்லாம் அம்மை தனித்து மணமிலா மலர்க்கொப்பாகின்றனள். நின்னுடனிலவாயின், நம்மரும் புதல்வரோவெனின் காணவுங் கிட்டாதாயினர். மதுரத்தேனும், மணக்குழலும், பொறிகடலையும், பிவார் தொடுக்கும் வினைகள் யாவும் முட்டின்றி முன்னின்று முடிப்பிக்க முன்னவனை முக்கண்ணன் மூவுலகும் வலாவுவன்; ஏராளால் வாரி யெடுத்தனைத்துப் பயோதரப் பாலூட்டப் பருகின சரவணனை யீன்றவன் மாசறுமுகஞ்செய்து, வரம்பெற்று, அமரர் வாழ்வினைப் பழிக்கும் அசுரரை யழிக்கவும், ஒரு கன்னி வேண்டியும் உலகெலாஞ் சுற்றி வருகின்றமையில் யான் துணையிலாது தனித்தேயிருக்க வேண்டியதாகிறது. அதனால் அடியாள் மனம் நோகின்றது. ஆயினும் என்றுநமியே கற்கரிய நியமத்தம் நாம் பிரிவதால் ஒருவாறு துயரம் அடங்குகிறது. மேலும் தேவரீரது திருவுளஞ் செய்யக் கருதியது புகன்றதும், மீனவர் வரைக்கும் யிவண்ண மாப்பணித்ததும் நின் கருணைத்திறமன்றோ? இப்பணி கொண்டு இருந்து தமது கல்லாவுக் கெதிர் நோக்கியின்றே அமர்வேன் எனச் சாற்றிப் போற்றி நின்றனள். யாவும் கேட்ட பெருமான் புன்முறுவற் கொண்டு புவனாசூளியே! நின் மாற்ற மனைத்தும் வாய்மையதே. ஆயினும் ஒன்றுரைப்பம் கேண்மோ! நம்மடி கொள்வோரைத் தாக்குறுந் துன்பம் யாவும் நம்மைத் தாக்கியவாமன்றோ? நம்மன்பர் மகிழும் மகிழ்ச்சி யாவும் நம்மைச் சேர்ந்ததன்றோ? அன்பர் எக்காலத்து எவ்விடக்கண் அடையினும் அது நம்மதலவோ? ஆகவே அதனை நீக்குவது நம்கடமை. ஆன்ம கோடிகள் பால் நாம் இணங்கிக் கடாக்ஷிக்கும் காரணமும் நின்னருட்சக்தி விசேஷத்தாலன்றோ? நின்னைத் துணைக்கொண்டன்றோ முத்தொழிலியற்றி முதல்வனும் எனும்பேறும் கொண்டுள்ளேன். நீ என்னோடு இல்லையாயின் யாதானும் என்னால் இயலாதன்றோ? ஆதலால் அடிக்கடி யாம் அவனிக்கேகவும், அடியவரைக் காக்கவும் நீயே முக்

ஷியமான காரணமன்றி யானன்று; "விமலையே" இன்னுமினென் தொன்மறைகள் என்னிதயத்தை அறிப்பனபோல் மாத வினையுங் காக்கின்றனவன்றோ? அம்மூல புருஷனை மாதவ ரும் தன்னிலே நீக்கி மேதினி சென்று அரிய நிலையடைந்து அவனி படைத்த அழகியவர் பொருட்டுத் தாமே சென்றும், எத்திலையெடுத்தும், தேரோட்டியும், உரைமறைத்தும், வறியவர்தனையடி வணங்கி யும், இழிஞனியமல் இனிப்பாய்ப் பெற்றுத்தின்றும் இவ்வாறு பற்பல பிழைதொழில்கள் செய்து அன்பர் குறைதீர்த்து அவரை மகிழ்விக்க அன்றே? மேலும் நன்னாய் தாக்குமிடத்து அன்பின் முறையறிந்தவரே அறிவாரன்றி வேறொருவருமன்று. அன்பே நம் முருவம். இதனையறியாமாந்தர் அன்பாலெமை யடை யக்கருதுவர். அன்பு அன்மையடைவதெங்ஙனம். அதுவே பத வாதலால் அறிவாளர் அன்பே சிவமாயமர்வர். இவையனைத்தும் மகிமைகளே யெற்றாத்தோ. ஆதலால் நாம் தாணியடைந்து அவ சன் வரலாறு தெரிந்தபின்னர் நீயும் அவ்விடத்திய விதைபங்கள் அறியத்தக்கவன் ஆகுவாய் எனத் திருவாய்மலர்ந்தனன்; இதனைக் கேட்ட பெருமாட்டி அமலனே! நானதன்புப் பெருக்கால் நின் மொழிக்கெதிர்மொழி பகர்ந்தமைமு திருவுளத்தில் முனியா திருத்தல் வேண்டும். எனப்பணிந்து போற்றி அமர்ந்தனள்.

(வரும்) கோகிலாம்பாள்.

பக்தியோகம்.

(முன்தொடர்ச்சி.)

தியானம் என்பது ஒரு பாத்திரத்திலுள்ள எண்ணெய் மற்றொரு பாத்திரத்தில் விடும்போது இடையீடின்றித் தாரையாக ஒழுகுவதுபோல, எந்த வஸ்து தியானிக்கப்படுகின்றதோ, அவ் வஸ்துவின் இடையீடின்றிய ஸ்மரணமாம். ஒருவனுக்கு இவ் வாறுள்ள தியானம் சித்தித்தால் அவனது சகல பந்தமும்போம். தியானம் மோட்ச சாதனம் என்று சுருதிகளிலும் கூறப்பட் டிருக்கின்றது. தியானமும், பிரத்தியட்ச தரிசனமும் ஒன்றே யாம். ஏனெனின் அவ்விரண்டிற்கும் ஒரே பொருளாம். அதனு டைய பேதமின்றியனவா மென்று எண்ணப்படுகின்றன.

கீழ்க்குறிக்கப்படும் சுருதியால் இது ஸ்பஷ்டமாம்—"சமீபத் திருப்பவனுகவும், தூரத்திருப்பவனுகவும், பாமார்த்தமாக பரா பரபேதமின்றியவனுகவும் இருக்கும் கூடஸ்தன் அல்லது சாட்சி அபரோட்ச ஞானத்தினுல் சுவானுபவப் படும்போது ஒருவனது சகல பந்தங்களும் நாசமாம்;' அவனது எல்லாச் சம்சயங்களும் நாசமாம்; அவனது சர்வ கர்மங்களும் கடியத்தை யடையும்" (சமீபஸ்தனை நம்மால் காண முடியும்; தூரஸ்தனை ஸ்மரிக்க மாத் திரந்தான் முடியும்; ஆனுல் தூரஸ்தனையும் சமீபஸ்தனைப்போல் நாம் காணவேண்டுமென்று சுருதி கூறுகின்றது). அதனுல் தியா னத்திற்கும் பிரத்தியட்ச தரிசனத்திற்கும் சமநிலைமையைக் கொடுத்திருக்கின்றதெனக் குறிப்பிக்கப்பட்டிருக்கின்றது. தியா னத்தின் மேல்நிலைமை பிரத்தியட்ச தரிசனத்திற்குச் சமான மாம். சசுவா பூஜையென்பது சிரந்தா ஸ்மாணையாமென்பதற்கு வேதவாக்கியமுமிருக்கின்றது. ஞானமே பக்தியென்பதும், அதுவே தியானமென்பதும் வேதத்தில் கூறப்பட்டிருக்கின்றது. தியானம் பிரத்தியட்ச தரிசனத்திற்குச் சமானமாமாது அவ்வளவு மேன் மையை யடையும்போது அது மோட்ச சாதனமாகின்றதென்று சுருதியில் கூறப்பட்டிருக்கின்றது. "ஆன்மா பலவித சாஸ்தி ரங்களினுலும், புத்தியினுலும், வேத அத்தியயனத்தினுலும் அடையப் படுவதன்றாம். எவனுக்கு ஆத்மஜிஞாசையுளதோ அவனுல், ஆத்மா அடையப்படுகின்றது. அவனுக்கு ஆத்மா பிரத்தியட்சமாகின்றது." கேவலம் சிரவண, மனன, நிதித்தியா சனங்களால் மாத்திரம் ஆத்மா அடையப்படுவதன்றாமெனக்கூறிப் பின்னரும் கூறுகின்றது. "ஆன்மா எவனைச் சிநேகிக்கின்றதோ அவனுல் ஆத்மா அடையப்படுகின்றது;" அதிபக்தியுள்ளவனை ஆன்மா சிநேகிக்கின்றது. எவனுல் ஆத்மா அதிபக்தியுடன் சிநேகிக்கப்படுகின்றதோ அவன் ஆத்மாவிற்கு அதிப்பிரியனும். அதிபக்தனுகிய இவனுக்கு ஆன்மப் பிராப்தி யுண்டாகும் பொரு ட்டு, ஈகதிகவானே அவனுக்கு உதவி புரிகின்றார்; ஏனெனின் பகவான் இங்ஙனங் கூறுகின்றார். "எவர் என்னையே சரண டைந்தவராய் அதிபக்தியுடன் என்னை உபாசிக்கின்றனரோ அவ ர்க்குப் பத்தி யோகத்தைக் கொடுக்கின்றேன்; அதன் வாயிலாக அவர்கள் என்னை யடைகின்றனர்". அதனுல் பக்தி யென்னும் பதத்தினுல் இங்கு நித்திய ஸ்மாணையை, அல்லது தியானத்தையே குறிப்பிட்டிருக்கின்றதென்பது ஸ்பஷ்டமாம்.

"அதாதோ ப்ரஹ்மஜிஜ்ஞாஸா" என்னும் சூத்திரத்தை வியாக்யானிக்கும்போது பகவான் ஸ்ரீராமாநுஜாசாரியரும் அங்ஙனமே கூறுகின்றார். "ஈஶ்வரப்ரணிதாநாத்வா" (ஈச்வர சேவையால்) என்னும் பதஞ்சலி சூத்திரத்தை வியாக்யானிக்கும்போது போஜராஜா இங்ஙனங் கூறுகின்றார். "ப்ரணிதானம் என்பது விஷய சுகங்களை விரும்பாது சகல கர்மங்களையும் எல்லாக் குருக்களுக்குங் குருவாகிய ஈசுவரனிடத்துச் சமர்ப்பணஞ் செய்யும் ஒரு பக்தி விசேஷமாம்". அந்தச் சூத்திரத்தையே வியாக்யானிக்கும்போது பகவான் ஸ்ரீ வியாச மகரிஷி ப்ரணிதானம் என்னும் பதத்திற்கு இவ்வாறு பொருள் கூறுகின்றனர். "ப்ரணிதானமென்பது ஒரு பக்தி விசேஷமாம். அதன் வாயிலாக யோகியானவனுக்குப் பரமேசுவரனது காருண்யம் சித்திக்கின்றது. அவன் சர்வப் பிரகாரத்தாலும் அனுக்கிரகிக்கப் பட்டவனாகின்றான்" "பக்தி யென்பது ஈசுவரனிடத்துள்ள அதிப்பிரேமமாம்" என்பது சாண்டில்ய மகரிஷியின் அபிப்பிராயமாம். ஆனால் பக்தியின் உத்தமமாகிய விவரணம் பக்தர்களரசனாகிய பிரகலாதனனதாம்.

"யாப்ரீதிரவிவேகாநாம் விஷயேஷ்வநபாயிநீ த்வாமநுஸ்மரதஸ் ஸா மே ஹ்ருதயாந்மாபஸர்ப்பது" பொருள்:—"அவிவேகிகளுக்கு விஷயங்களை அசஸ்வரமாகிய எந்தப் பிரீதியிருக்கின்றதோ அத்தகைய சிநேகம் தங்களை எப்போதும் தியானித்துக்கொண்டிருக்கும் எனது இருதயத்திலிருந்து போகாமலிருத்தல் வேண்டும்" சிநேகம் எவ்விடத்தில்? பரம கருணாநிதியாகிய கடவுளிடத்தில் எவ்வளவு மேன்மையுடையவனாயிருந்த போதிலும், மற்றொருவனிடத்துள்ள சிநேகத்தைப் பக்தி யென்று கூறுவதில்லை. ஏனெனின்,

ஆப்ரஹ்மஸ்தம்ப பர்யந்தா ஜகதந்தர்வ்யவஸ்திதா:
ப்ராணிந: கர்மஜநித ஸம்ஸாரவஶவர்த்திந:|
யதஸ்ததோ ந தே த்யாநே த்யாநிநாமுபகாரகா: |
அவித்யாந்தர்கதா: ஸர்வே தே ஹி ஸம்ஸாரகோசரா:||

பொருள்:—பிரஹ்மா முதல் திருணபரியந்தம் ஜகத்திலுள்ள சகல பிராணிகளும், அவரவர்களின் கர்மவசத்தினால் ஜனன, மரண சம்சாரத்தில் கட்டுண்டவரா யிருக்கின்றனர். அக்கார

ணத்தினால், தியானிப்பவர்க்கு, அவை யொன்றும் தியேயமாக யோக்யமுடையனவன்றாம். ஏனெனின், அவையாவும் அநித்யங்களும், அவித்தையால் மறைபட்டனவுமாம்." சாண்டில்ய மகரிஷி பிரயோகித்திருக்கும் அநுரக்தி யென்னும் பதத்தை சுவப்னேசுவரரென்பவர் இவ்வாறு வியாக்யானித்திருக்கின்றனர். "அநு-பின்னர்" "ரக்தி-சிநேகம்". ஈசுவர மகாத்மியத்தை யறிந்த பின்னர் அவரிடத்துண்டாம் அதிசிநேகத்திற்குப் பக்தியென்று பெயராம். இங்ஙனமன்றாயின், மனைவியிடத்தோ, புத்திரனிடத்தோவுள்ள இயல்பாகிய சிநேகத்திற்கும் பக்தியென்று கூறுதல் வேண்டும் அதனால் பக்தியென்பது பூஜை முதலியவற்றால் ஈசுவரபஜனஞ் செய்த பின்னர்க் கிரமமாக அவரிடத்து அதிப் பிரேமமாக முடிவுபெறும் ஒரு அந்தக்கரண விர்த்தி விசேஷமா மென்று நாம் ஸ்பஷ்டமாகக் காண்கின்றோம். (வரும்)

கிரீக்தேசத்துப் பீமசேனன் கதைகள்.

(முன்தொடர்ச்சி.)

பீமசேனனும்-சிங்கமும்.

சில நாளைக்கெல்லாம் பீமசேனன் தன் பராக்கிரமத்தைக் காட்ட ஆரம்பித்து விட்டான். ஒருநாள் இவன் அரசனது வீட்டுக்குப் போனான்; அங்கு அவர் கொடுக்கும் எந்த வேலையையும் செய்யத் தயாராக யிருப்பதைக் குறித்துக்காட்டினான். இவன் சரீர வல்லமைக்கும் பரந்த தோள்களுக்கும், புஜபலத்திற்கும் கீர்த்தி பெற்றிருந்தான்; அரசனோ மெலிந்த சரீரத்தோடும் கோபமுடைத்தும் இருந்தான்.

அரசன் தன் எதிரில் முதல்தடவை வந்த பீமசேனனின் வலிமை தங்கிய சரீரத்தைப்பார்த்து பொறாமை கொண்டான். உடனே அவனது மனதில் துர்எண்ணம் உண்டாயிற்று; அதாவது அவனைக் கொல்லச் செய்ய வேண்டுமென்று; இதற்குத் தகுந்தவாறு அவனுக்கு ஒரு மிகக் கஷ்டமும் அபாயமுமான வேலையையிட்டான். ஆகமொத்தம் பன்னிரண்டு வேலைகள் இட்டபட ஒவ்வொன்றும் முன்சொன்னதைப் பார்க்கினும் அதிக கஷ்டமுடையது; ஆனால் பீமசேனனோ அவற்றை எல்லாம் செய்து முடித்தான்.

இவற்றில் முதலாவது ஒரு பெரிய சிங்கத்தைக் கொன்று அதன் மேல்தோலைக் கொண்டு வருவதாம். இம்மிருகம் வசித்திருந்த குகை பெரியமரங்கள் அடர்ந்து நெருங்கிய கனவாய்; அங்குப் பக்கங்களில் வசித்திருந்த ஜனங்கள் மிகுதியாக இதற்குப் பயந்திருந்தார்கள். ஆடுமாடுகளை அடிக்கடி கொன்றும் சில வேளைகளில் குழந்தைகளைக் கொன்றும் அங்குச் சுற்றியிருந்த தேசத்தை பாழாக்கி வந்தது. அம்பு அல்லது கத்தி உள்ளே நுழையமுடியாத அவ்வளவு மொத்தமாய் (பெருமனாய்) அதன் தோல் இருந்தது.

ஆயினும் பீமசேனனுக்குப் பயம் சிறிதும் தோன்றவில்லை. இதனைக் கொல்லுவதற்காகத் தீர்மானித்துக் கொண்டு தனது வில்லும் அம்பும் கையில் எடுத்துப் புறப்பட்டுப் போனான். இவன் போகும் வழியில் தழைத்துப் பெருத்து வளர்ந்துள்ள ஒரு ஒலிவ மரத்தைப் பார்த்தான். அது தனக்குக் கைக்கோலாகுமென்று நினைத்தான்; சாதாரணமாய் நம்மைப்போன்ற பலமில்லாதவர்கள் செய்வதுபோல் ஒரு கிளையை ஒடித்துக்கொள்ளாது அம்மரத்தை வேரோடு பிடுங்கிக் கொண்டான். இதை ஆயுதமாகக்கையில் எடுத்துக்கொண்டு சிங்கமிருக்கும் குகையின் சமீபத்தில் சென்றான்.

அங்கு ஒரு மனிதனும் தென்படவில்லை. இடையர்களும் கூட தங்கள் மந்தைகளை இம்மிருகத்திற்கு விட்டுவிட்டார்கள் அவர்கள் அதனால் கொல்லப்படுவார்கள் என்று மிக்க பயந்திருந்தார்கள் என்று இதனால் வெளியாகின்றது அல்லவா? அந்த அடர்ந்த காட்டில் பீமசேனன் தனித்து ஒன்றியாய் அம்மிருகம் வரும்வரைக் காத்திருந்தான்.

சிறிது பொழுதிற்கெல்லாம் ஒருபெரும் கர்ஜ்ஜனை கேட்டது; அதனால் சிங்கம் அருகில் வந்திருக்கிறது என்று பீமசேனன் தெரிந்துகொண்டான். அது அன்றைய இரையைத் தேடித் திரிந்துவிட்டுத் தன் குகைக்கு வந்துகொண்டிருந்தது. அதன் தோல் இரத்தத்தால் நனைந்திருந்தது. அதன் கண்கள் கொடூரமான பார்வையோடு காணப்பட்டன.

இப்படிவரும் இதனைப்பீமசேனன் ஒரு மரத்தின் பக்கத்தில் மறைந்திருந்து பார்த்தான். பிறகு அம்பை வில்லிலிட்டு கு

வைத்து எய்தான். இவ்வம்பு அதன்மேல் பட்டது, கீழே விழுந்தது; ஆகவே அதற்கு ஒருகாயமும் நேரிடவில்லை. அந்த மொத்தமான தோலின்மேல் எய்த அம்பும் தைக்கவில்லை.

பீமசேனன் மற்றொரு அம்பைவிட்டான்; அதுவும் முன்போலவே அதன் சரீரத்தில் புகாது கீழேவிழுந்தது. அம்மிருகம் திரும்பித் தன் பற்களைக் காட்டியது; அவன் மற்றொரு அம்பை எய்வதற்கு வில்லில்வைத்துப் பூட்டும் சமயத்தில் இவனை அது பார்த்துவிட்டது.

அது பயத்தால் முறுமுறுத்துக்கொண்டு மண்டி போட்டுப் பாய்ந்தது. ஆனால் இதனை எதிர்க்கப் பீமசேனன் சித்தமாயிருந்தான். இவன் தன் கையிலிருந்த ஒலிவமரமாகிய தடியைத் தன் தலைக்குமேல் தூக்கி ஓங்கி ஓர் அடி அம்மிருகத்தின் தலைமேல் அடித்தான்; அப்போது அது பிரமை கொண்டுவிட்டது.

உடனே அவன் தான் குழந்தையாக யிருந்தபோது பெரும் பாம்புகளைக் கையில்பிடித்து நசுக்கியதுபோல், இதனையும் கழுத்தண்டைப்பிடித்துப் பிசைந்து கொன்றுவிட்டான்.

அதன் சரீரத்தை எடுத்துத் தன் தோள்மேல் தூக்கிக் கொண்டு அரசனிடம் அதனைக் கொண்டுபோனான். அதன் தோலால் தனக்கு ஒருசட்டை செய்துகொண்டான்; இச்சட்டையே அவன் எப்போதும் உடுத்தி வந்தான். (வரும்)

வெ. ஆறுமுகசெட்டியார்,
முத்தியாலுபேட்டை, சென்னை.

நன்னடக்கை.

ஆசாரியர்களைப் பூசிப்பது, சத்தியத்தைப் பேசுவது, கோபமில்லா திருப்பது, தயாளுவாக விருப்பதாகிய நான்கும் நல்லோர் நடக்கையி லெப்பொழுது மிருக்கத் தக்கனவாம்.

சக்தியே நமக்குவேண்டியவைகளி லதிக மேலானது. நல்ல வித்தையே அதிகமேலான தனம். தேகசௌக்கியமே எல்லாப் பலனிலு முத்தமமானது. திருப்தியாக விருப்பதே சந்தோஷங்களி லெல்லாம் முக்கியமானது.

வயதுப் பிரமாணத்தினாலும், நரைமயிரினாலும், தனத்தினாலும், சுற்றத்தினாலும் ஒருவரும் பெரியோர்களாக மாட்டார்கள். எவன் உண்மையான ஞானவானோ அவனே மகாத்மா. இப்படித் தர்மத்தை ரிஷிகள் விதித்திருக்கின்றார்கள்.

முகத்திலும் தலையிலும் நரைமயிர் இருப்பதினாலேயே ஒருவனும் பெரியவனாகமாட்டான். வயதில் சிறியவனாக இருந்தாலும் நல்ல ஞானமுடையவனே உண்மையான பெரியவனென்று தேவர்கள் நினைக்கின்றார்கள்.

மூடர்களொருபொழுதுந் திருப்தியடையமாட்டார்கள். படித்தவர்களெப்பொழுதுஞ் சந்தோஷமாக விருப்பார்கள். ஆகையால் படித்தவர்களிவ்வுலகத்தில் திருப்தியினால் சகலசுகத்தையுமனுபவிப்பார்கள்.

துர்ச்சனனுக்கு வித்தை, திரவியம், வம்சமாகிய இவை கர்வத்தை யுண்டாக்குகின்றன. இவையே நல்லோர்களை யடக்கமுடையவர்களாகச் செய்கின்றன.

திருப்தி யில்லாதவர்கள் பேராசையினால் நாசமடைவார்கள். புத்திமான்கள் திருப்தியாக விருப்பார்கள். மனதிலுள்ள சங்கடத்தை விவேகத்தினால் போக்கிக்கொள்ள வேண்டும். தேகசங்கடத்தை ஔடதங்களினால் போக்கிக்கொள்ள வேண்டும்.

துர்ச்சனர்.

மேன்மையை விரும்புகிற புத்திமான்கள் நடவடிக்கையினாலும் புத்தியினாலும் கெட்டுப்போனவர்களோடும், பாபகாரியங்களில் புத்தியைச் செலுத்தினவர்களோடும் சகவாசஞ் செய்தல் கூடாது.

கோபம் மனிதனுக்கு நாசத்தையும் அவமானத்தையுமுண்டாக்கக்கூடியது. இவ்வுலகத்திலவர்களுடைய நாசத்திற்குக் கோபமே முக்கிய வேராயிருக்கிறது.

காமம், கோபம், பிராணிகளிடத்தில் கொடுமை, பேராசை யிவைகளையுடைய மனிதன், தன்னுடைய மானிட சன்மத்தை யிழந்து மிருகசாதிகளில் திரும்பப் பிறப்பான்.

தரித்திரனை ஈகையினாலும், பொய்சொல்பவனை நிசத்தினாலும், கொடியகாரியங்கள் செய்பவனைப் பொறுமையினாலும்,

கெட்டவனை நல்ல தனத்தினாலும் நாம் வசப்படுத்திக்கொள்ள வேண்டும்.

காமம், சூதாடுதல், வேட்டையாடுதல், குடித்தல் முதலிய இவை அதிக ஆசையினாலுண்டாகின்றன. இவை நான்குமதி துக்கமாகின்றன. இவற்றால்மனிதன் தன் தனத்தையும், கௌரவத்தையும் போக்கிக் கொள்ளுகின்றான்.

கீழ்மக்களுடைய சேர்க்கையினால் மனிதர்கள் தங்களுடைய சுய புத்தியைக் கெடுத்துக்கொள்ளுகின்றார்கள் நடுவுநிலைமையுடையவர்களுடைய சேர்க்கையினால் தங்களுடைய புத்தியும் நடுநிலைமையாகவிருக்கும்; மேன்மக்களுடைய சினேகத்தினால் புத்தி அதிக உத்தமமாகும்.

பிறர்செய்த நன்மைகளை மறக்கிறவனுக்குக் கீர்த்தி, கௌரவம், சுகமெப்படி யுண்டாகும்? (அஃதாவது அப்படிப்பட்டவனிடத்திலவைகளிரா); அப்பேர்ப்பட்டவனை நாம் பரித்தியாகஞ் செய்யவேண்டியது அவனுக்குப் பிராயச்சித்தமே கிடையாது.

ஸ்திரீகள்.

மனிதனுக்குப்,பெண்சாதியே தனம்;உத்தமமான சினேகிதி, சுவர்க்கத்திற்குக் காரணமானவள், சம்சாரத்தைத் தாண்டுவதற்கு வழியானவள்.

சூரியகாந்தையினால் தகிக்கிறவர்களுக்குத் தண்ணீர் எப்படிச் சுகத்தைக் கொடுக்குமோ, அதுபோலவே மனதிலுள்ள விசனத்தினாலுள்ளே யெரிந்துகொண்டிருக்கிறவர்களும் வியாதியினால் தேகாவஸ்தைப் படுகிறவர்களும் தங்கள் தங்களுடைய ஸ்திரீகளிடத்தில் மிகுந்த சந்தோஷத்தை யடைவார்கள்.

எல்லாத் துக்கத்திற்குஞ் சரியான ஔஷதம் ஸ்திரீயே. அவளுக்குச் சமானமான மருந்து வேறில்லை. இவ்வுண்மையை உன்னுடன் சொல்லுகிறேன்.

மேன்மையும், புண்ணியமும், வீட்டிற் பிரகாசகரமும், சம்பத்காரமுமுடைய ஸ்திரீகள் கௌரவிக்கத் தக்கவர்கள். ஆகையால் நாம் அவர்களை அதிக அக்கரையுடன் காப்பாற்றவேண்டும்.

பதிவிரதையாகவும் பிரியமாகவுமுள்ள பெண்சாதி யெவன் வீட்டிலில்லையோ அவன் காட்டிற்குப்போகவேண்டியது;(அஃதா

வது அவன் நிசமான சம்சாரசுகத்தை யநுபவிக்கமாட்டான்.) அவன்வீடு காட்டைப்போலப் பயங்கரமாக விருக்கும்.

பெண்சாதிக்குச் சமானமான பந்து வேறொருவரில்லை அவளுக்குச் சமமான கதியும் வேறில்லை. இவ்வுலகத்தில் தர்மத்தைச் சம்பாதிக்கத்தக்கவழி பெண்சாதிக்குச் சமமானது வேறில்லை.

ஒரு கிருகஸ்தனுடைய வீட்டிலெப்பொழுதும் குமாரர்களும், பேரன்மார்களும், நாட்டுப்பெண்களும், வேலைக்காரர்களுமாக விருந்துகொண்டிருந்தாலும், பெண்சாதியொருத்திமாத்திரமில்லாவிட்டா லவ்வீடு பாழ்வீட்டைப்போல் துக்ககரமாக விருக்கும்.

எந்தப் பிரகாரமாகப் பிராணிகளெல்லாந் தங்கள்தங்களுடைய தாய்களை யடுத்துச் சீவிக்கின்றனவோ அதேபிரகாரமாக இதர ஆசிரமங்களி லுள்ளவர்கள் கிருகஸ்தாசிரமத்தி லுள்ளவர்களை யடுத்துப் பிழைக்கிறார்கள். (அதாவது கலியாணம் பண்ணிக்கொண்டு கிருகஸ்தாசிரமத்தி லிருப்பதே அதிக உத்தமமானது.

பட்சிகள், மிருகங்கள், பூதங்கள் முதலியவைகள் கிருகஸ்தனை யடுத்தே சுகப்படுகின்றன. ஆகையினால் கிருகஸ்தாசிரமத்தி லிருக்கிறவனே மேலானவன்.

பாழ்வீடு வீடல்ல. மனையாளிருப்பதே வீடு. மனையாளில்லாதவீடு காட்டைப்போல்வதாம்.

பணத்தி லாசைவைத்துத் தங்கள் பெண்களை விவாகஞ் செய்து கொடுப்பது மிகவுமற்பமாம். பெரியோர்கள் பணம் சம்பாதிப்பதற்காகத் தங்கள் பெண்களை அப்படி விவாகம் செய்து கொடுக்கமாட்டார்கள்.

நல்ல நடக்கையும், தகுந்தபடிப்பும், மேன்மையான குலமும், நல்லகாரியமும், நல்லகுணமுமுடைய புருஷனையே தேடி ஒரு பெண்ணை விவாகஞ் செய்துகொடுக்க வேண்டியது.

ஸ்திரீகளுடைய தர்மம்.

எந்தஸ்திரீ வீட்டுவேலைகளில் கெட்டிக்காரியோ, குழந்தைகளையுடையவளோ, கணவனைத் தன் பிராணனைப்போல நினைக்கின்றாளோ, பதிவிரதையாக விருக்கின்றாளோ அவளே உண்மையான மனைவி.

தங்களுடைய பிராணனை விட்டாவது தங்களுடைய கணவர்களுக்கு நன்மையைச் செய்வதே ஸ்திரீகளுக்கு இவ்வுலகத்திலதிகமேன்மையாம்; கௌரவமான காரியமாம்.

ஸ்திரீகள் தங்களுடைய பந்துக்களிடத்தில் அதிககாலமிருப்பது சிறமல்ல. அப்படிச்செய்வது அவர்களுடைய கீர்த்தியையும், நன்னடக்கையையும் தர்மத்தையும் போக்குவதாம். ஆகையினாலவர்கள் சீக்கிரமாக அவர்களை விட்டுவிடவேண்டும்.

எந்தஸ்திரீ, தன் நாயகனைப் பூசித்துவருகிறாளோ அவளே சுவர்க்கத்தை நிச்சயமாக வடைந்தவளாகின்றாள். எவ்விதயாகமானாலும், கர்மமானாலும், சிராத்தமானாலும், உபவாசமானாலு மவளுக்கு வேண்டுவதில்லை.

உமையின் தரிசனம்.

சுமார் இரவு எட்டு மணி இருக்கும்; நான் என் சிநேகிதன் கண்ணனுடன் சமுத்திரக்கரையிலிருந்து வீட்டிற்குத் திரும்பி வந்தேன். வரும் வழியில், ஒரு தனவான் வீட்டில் கலியாணம் முடிந்து, சங்கீதக்கச்சேரிகள் நடந்துகொண்டு வந்தன. அன்றையதினம் பின்ளாங்குழல் கச்சேரி. பல்லடம் சஞ்சீவி ராவ், பின்ளாங்குழல்; கருர்சின்னசாமி அய்யர் பிடில் (கர்நாடக வாத்தியமல்ல) தற்கால ஐரோப்பிய வாத்தியம்; அழகநம்பிப்பிள்ளை மிருதங்கம்; சங்கீதக் கச்சேரி வெகு விமரிசை-எனக்கு சங்கீதத்தில் கொஞ்சம் பைத்தியம்; ஆகையால் எனக்கு அழைப்புச் சீட்டு கொடுக்கப்படாவிட்டாலும் நானாகவே கச்சேரி கேட்டானந்திக்க உள் நுழைந்தேன். இரவு பதினொன்று மணிக்குக் கச்சேரி முடிந்தது. நான் வீட்டிற்குப் போய் சாப்பாடு முடித்துக்கொண்டு படுக்க நடு இரவு ஆயிற்று. அதிக நேரஞ்சென்று படுத்ததால் காலையில் சற்று அயர்ந்து நித்திரை போய்விட்டேன்.

அப்போது யாரோ ஒருவர் என் அருகில் வந்து உட்கார்வது போலும் என் மீது கைவைப்பது போலும் உணர்ந்தேன்; எனக்குக் கொஞ்சம் விழிப்பு வந்த போதிலும் கண்ணை மூடின வண்ணமாய் இன்னும் என்ன நடக்கிறதென்று கவனிக்க ஆசைகொண்டிருந்தேன். ஸ்பரிசம் அதிக மிருதுவாயும் சம சீதோஷ்ணமாயும் இருந்தது.

அடுத்த கணத்தில் இடியென்று ஒரு சப்தம் உண்டாயிற்று. அச்சப்தம் "தம்பி அடே எழுந்திரு இந்தா." அநேகமாய் அச்சப்தம் கண்டத்தின் மூலமாய் வந்த வார்த்தை தான் போலும். ஆனால் சென்ற இரவு நான் கேட்ட பிள்ளாங்குழல் சப்தத்தைப் பார்க்கிலும் உருசியானது; மதுரமானது; குயிலின் சப்தத்தைப் பழிக்கத்தக்கது. கண் விழித்தேன். என்ன ஆச்சரியம்! ஒரு சுந்தர இளமங்கை; வயது பதினாறிருக்கும்; கம்ப இராமாயணத்தில் கவிக்கடப்பம் சீதையை வர்ணித்திருக்கிறான். "பிரமன் இவளைப் படைக்கச் சரஸ்வதியையும், இலக்ஷ்மியையும் இன்னும் இதர தேவ கன்னிகைகளையும் படைத்துக் கை பழகித் தேர்ந்த பின்னரே இவளைப் படைத்தான்." இப்போது நான் சொல்வது இச்சீதையைப் படைத்துக் கைபழகித் தேர்ந்த பின்னரே நான் தரிசித்த பெண்ணைப் படைத்தான் போலும்! அழகே உருவெடுத்து வந்திருந்தது.

அவளைப் பார்த்து நீ யார்? என்று கேட்டேன்.

தம்பி! நானா? என் பெயர் உஷை யென்பார்கள்; நான் ஒளியை(பிரகாசத்தை) ஆடை ஆபரணமாகப் பூண்டவள். என் சக்தியினால் இப்பூமண்டலத்தின் இருளைப் போக்கி வருகிறேன். நான் சர்வ வியாபி (எங்கும் நிறைந்திருப்பவள்); சர்வ சக்தியையும் உள்ளே அடக்கியிருப்பவள்.

நான் நினைத்தது நடக்கும். நான் இச்சித்த முன்னவர்களைத் தூக்கி விடுவேன். சாஸ்திர ஆராய்ச்சி செய்பவர்களுக்கு உதவி புரிவேன். யக்ஞம் பண்ணுகிறவர்களுக்கு முன்னிருந்து வழி காட்டுவேன். காளிதாஸனைக் கவியாக்கினேன். சிவாஜிக்குத் தாயாகப் பிறந்து வாள் கொடுத்தேன். ஜனகனுக்குத் தீர்க்க யக்ஞம் பண்ணுவிக்கச் சித்தத்தைத் திடமாக்கினேன். இந்து தேசத்து வீரர்களுக்கு வீர்யம் கொடுத்தேன். ஈகைக்குணத்தைக் கர்ணனிடத்தில் கொடுத்து, சாகும் பொழுதில் இரண்டு செவிக் குண்டலம் கொடுக்கச் செய்தேன். இலங்கை அரக்கன் அழிய வில்லை இராமனிடத்தில் கொடுத்தேன்.

பிறகு, காலத்திற்குத் தகுந்தபடி காரியங்களை நடத்திக் காட்டுவேன். இப்பொழுது ஐரோப்பிய மகா யுத்தத்தில் லக்ஷக்கணக்கான ஜனங்கள் மடிகின்றனர்; இதற்குக் காரணம் யானே. முதலாவது ஆஸ்திரிய இளவரசனைக் கொல்லச் செய்தேன். பிறகு ஐரோப்பாவையே கலக்கிவிட்டேன். இதில் எவ்வளவோ அற்புதங்கள் காட்டினேன். கடைசியாக ருமேனியா என்னும் தேசத்தை உன் தேசக் கட்சியில் சேர்த்து ஜெர்மனியரைக் கதறச் செய்தேன். பார்த்தாயா? இன்னும் இச்சண்டையில் எவ்வளவோ விநோதங்கள் காட்டப்போகிறேன். முடிவில் இவ்வுலகத்தைப் பொடியாக்கி ஜலத்தில் கரைத்து ஒன்றுமில்லை என்று ஆக்கி விடுவேன். உலகத்தின்கணுள்ள அழகுள்ள ஸ்திரீ, புஷ்பம் எல்லாம் யான் தான். ரோஜாவின் அழகு நான்; வாஸனை நான்; யாழின் சப்தம் என்னால் உண்டானது; வீணையின் தொனி நான் உண்டாக்கினது. மிருதங்கத்தின் நாதம் நான். அறிவுடையவர்கள் மனதில் சதா குடியிருப்பவள் நான். நானே ஆக்குபவள், காப்பவள், அழிப்பவள். தம்பி! என்ன! உஷை வந்தும் தூங்குகிறாயா! எழுந்திரு! என்றாள்.

(இன்னும் வரும்)

N. சாமிநாத அய்யர், புதுவை.

ஆசார மஞ்சரி.

(முன் தொடர்ச்சி)

தம்பொளி வேண்டுவார் நோக்குதற்குத்
தகுதியாகாதன இவை யெனல்.

(51) தமது தேககாந்தி கெடாதிருக்க வேண்டுமென்று விரும்புகின்றவர் மின்னலின் ஒளியையும், எரிந்து விழுகின்ற நட்சத்திரத்தையும், விபசாரிகளின் அலங்காரத்தையும் நோக்கார்; அல்லாமே சூரியனது காலை யொளியையும் மாலை யொளியையும் நோக்கார்.

மின்னல் ஒளி முதலியவற்றைக் குறிக்கொண்டு நோக்குவோரது தேககாந்தி குறைந்து விடுமென்பது கருத்தாம்.

சான்று மறையாத வுள்ளத்தவர் கூறாதன இவையெனல்.

(52) எப்பொழுதும் கலங்காத மனமுடையவர் வஞ்சனை கலந்த சொல்லையும், (தமக்கும் பிறர்க்கும்) பயன் தருவதில்லாத

சொல்லையும், நாவடக்கமில்லாது வேண்டியவாறு சொல்லுஞ் சொல்லையும், பிறரைப் பழித்துச் சொல்லுஞ் சொல்லையும், காணாத விடத்துப் பிறரைப் பழித்துச் சொல்லுஞ் சொல்லையும் சொல்மாட்டார்.

திருந்திய மனமுடையவர் (வஞ்சனை கலந்த சொல் முதலியவற்றை) மறந்துஞ் சொல்லாரென்பதாம்.

நல்வழியி லொழுகுவோர் செய்யாதன இவையெனல்.

(53) நல்வழியி லொழுகுவோர் ஒருவர்க்கொன்றனைக் கொடுக்கும் போது அதனை அவர் முன் வீசி யெறிதலும், பிறர் மீது கல்லை யெறிதலும், (சபையில்) வீணே செய்தலும், தூரப்போகின்றவனை (கைதட்டல் முதலியவற்றைச் செய்து) அழைத்தலும், பிறரது சொற் செயல் முதலியவற்றைத் தாமுமவ்வாறு இகழ்ந்து செய்து காட்டலும், (சந்தர்ப்பமில்லாத போது) வேகமாக நடத்தலும், (இரப்பார்க்குத் தம்மிடத்துள்ள பொருளை யில்லையென்று கூறி) மறைத்தலும், கைகொட்டிப் பேசுதலும், பிறர்க்கு வெளிப்படையாகத் தோன்றத் தம் முறுப்பைச் செறுத்தலுமாகிய இவற்றை யெல்லாம் மறந்துஞ் செய்யார்.

வீணே செய்தல்-கனைத்தல், சிரித்தல், பிறரோடு இரகசியமாகப் பேசல் முதலியனவாம். உறுப்பைச் செறுத்தல்-கண் சிமிட்டல், (உடம்பைச்) சொறிதல், காலாட்டல் முதலியவற்றைச் செய்து உடம்பை அசையச் செய்தலாம்.

விருந்தினர்க்குச் செய்வன இவையெனல்.

(54) ஒருவர் தம்மிடத்து வரும் விருந்தினர்க்குச் செய்யுஞ் சிறப்புகள் அவர் தம்மை நோக்கி வந்த விருந்தினரைக் கண்டவிடத்துச் புன் சிரிப்போடு இன்சொற் சொல்லுதலுடன், அவர்க்குக் கால் கழுவ நீரும், இருக்க மனையும், படுக்கப் பாயும், இருக்க இடமும், உண்ண வுணவும் தருதலாம்.

இல்லறத்தான் விருந்தினர்க்கு இவ்வாறு செய்யாவிடத்து, தான் செய்துள்ள நல்வினையை யிழந்து விடுவானென்பதாம். விருந்தினர்-துறவிகள்; அஃதாவது சந்நியாசிகள்.

இவ்விவ்விடங்களில் நிலைத்து நிற்றல் கூடாதெனல்.

(55) நல்லறிவினை யுடையவர்: பகைவர் கோபங்கொண்டு சண்டை செய்கின்ற விடத்திலும், குடியர்களுண்டு களித்தாடு

கின்ற விடத்திலும், பொதுமகளிர் வசிக்கு மிடத்திலும், தமது குணத்தை யாராய்ந்து நோக்கித் தம்மோடு நட்புக்கொண்டவர், அந்நட்பினை விட்டவிடத்து, அவரதுவீட்டிலும், நீராடல் முதலியவற்றை விரும்பிப் பலர் கூடும் தண்ணீர்த்துறையிலும் நிலைத்து நிற்றலை ஒருபோதும் விரும்பார்.

இவ்விடங்களில் நிலைத்து நிற்பவர்க்கு ஆபத்துத் தவறா துண்டாகு மென்பதாம்.

அறிவுடையார் இவ்விக்காரியங்களைச்
செய்யாரெனக் கூறல்.

(56) அறிவுடையார் முற்றிய புல்லுள்ள விடத்திலும், முற்றிய காட்டிலும் சேர்ந்திரார்; அவற்றைத் தீயிட்டுக் கொளுத்தார்; மழை பெய்யும்போது காலைப் பரப்பிக் கொண்டோடார்; வழி தெளிவாகத் தெரியாத காட்டில் ஒன்றியாகப் போகார்; மழை பெய்யாமையால் வறுமை மிகப் பெருகியதானாலும், தமது குடியொழுக்கத்திற்கு விரோதமாய தொழில்களைச் செய்யார்.

முற்றிய புல்லுள்ளவிடத்திற் சேர்தல் முதலிய காரியங்களைச் செய்பவர்க்கு ஆபத்து அவர் தம் தலைமீதிருக்கு மென்பதாம்.

நோயின்மை வேண்டுவோர் செய்வன இவையெனல்.

(57) தமக்கு நோயின்மையை விரும்புகின்றவர் குடியில்லாத வீட்டிலும், தேவாலயத்திலும், சுடுகாட்டிலும், வழியில்லாத விடத்து முளைத்து வளர்ந்து பழமையதாகவுள்ள தனி மரத்தினடியிலும், துணையோடு போவதல்லாமல், தாம் தனித்துச் செல்லார்; பகலில் நித்திரை செய்யார்.

நோயின்மை-வியாதியில்லாமை. குடியில்லாத வீட்டிற் செல்லுதல் முதலியன நோயுண்டாதற்குக் காரணங்களா மென்பதாம்.

அறிவுடையார் இன்னின்ன காரியஞ் செய் [illegible]

(58) அறிவுடையவர் பிறரெழுந்து [illegible] தொடங்கிய போது பின்னே நின்றவரை யழையார்; [illegible] செய்யார்; மறந்தும் எங்கே போகின்றீரென்று கூறார்; முன்னே சென்று எதிர் முகமாயிருந்தும் அவரோடு பேசார்; [illegible] அவர்க்கு இரு

மருங்கிலிருந்து சொல்ல வேண்டுவனவற்றைச் சொல்வர்; குரவர் போம்போது-அவர்க்கு வலங்கொண்டு போவர்.

இரு மருங்கு-வலப்பக்கம்; இடப்பக்கம். வலங்கொண்டு போதல்-வலப்பக்கத்திருந்து சுற்றி வணங்கிச் செல்லுதல்.

(59) அறிவுடையார் பிறரைப் பார்த்து உம்முடம்பு நன்றாக விருக்கின்றதென்று கூறார். விளக்கை வாயாலூதி அவியார்; சமையலறையின் அடுப்பிலுள்ள நெருப்பை அவியச் செய்யார்; அந்நெருப்பினை யடுத்திருந்து, அதன் சுடர் தம்மீது படக் குளிர்காயார்.

(60) அறிவுடையார் அகன்று விளங்கிய சிறந்த அறிவுடையாருடன் குதிக்கமேதாரிடத்திற்குச் செல்லப் போம்போது, (குதிரை, வண்டி, முதலியவற்றுள்) ஏதன்மீதேறியுஞ் செல்லார்; (காலில்) கழற் காப்புப் போட்டுச் செல்லார்; தம்மீது வெயில் படாதிருக்கப் பிறர் குடைபிடித்து வரச்செல்லார்.

கழற் காப்பு-பாதரட்சை.

நல்ல அரசன்.

(ஒரு விநோத சம்பாஷணை)

மந்திரிமார்:—மகாப்பிரபோ! தாங்கள் எப்போதும் குடிகளுக்கு நன்மை செய்வதிலேயே கருத்தாயிருக்கின்றீர்கள். ஆகையால்தான் நாட்டுக்கு நல்லரசன் எனப் பலரும் தங்களைக் கொண்டாடுகின்றனர். மேலும் தங்களுக்கு ஏழையும் சரி பணக்காரனும் சரிதான்; இருவரையும் ஒரேவிதமாய் மதிப்பது தங்கள் வழக்கம். நமது தேசத்தார் சந்தோஷமாய் வாழ்வதற்கு அதுவே காரணம்.

அரசன்:—மந்திரிமாரே! உங்களைப்போன்ற மந்திரிகளை யுடைத்தாயிருக்கும் பலத்தினால் அல்லவா எல்லாவிதப் பெருமையும் நான் அடைந்திருக்கின்றேன். விளக்கு எவ்வளவு பிரகாசமாய் எரிகின்றதாயினும் அதற்குத் தூண்டுகோல் ஒன்று அவசியம் வேண்டுமல்லவா? சரி, இன்றுமுதல் நமது அரண்மனை வாயிலில் மணிக்கூடு ஒன்று கட்டி வைக்க வேண்டும். என்று விரும்புகிறேன், ஆகையால் நீங்கள் என் இஷ்டப்

படி உடனே மணிக்கூடு ஒன்றை நாட்டுவித்து அதில் ஒரு மணியை அமைத்து, அதன் நாக்கில் ஒரு கயிற்றையும் கட்டித் தொங்கவிட்டு வையுங்கள். யாராவது அந்தக் கயிற்றைப் பிடித்து மணியை அடித்தால் உடனே நானெழுந்து வருவேன். அப்போது மணி யடித்தவர் தமது குறைகளை நேரில் தெரிவிக்கலாம். நானும் காலதாமதமில்லாமல் உடனுக்குடன் அவரவர் குறையைக் கேட்டு அதற்குத் தக்க பரிகாரஞ் செய்தல் கூடும். இந்த ஏற்பாட்டையும் நமது நகரத்தார் எல்லோர்க்கும் தண்டோரா மூலமாகத் தெரிவித்தால் நலமாயிருக்கும்.

மந்திரி:—மகாராஜா! அப்படியே செய்கின்றேன்.

[மணிக்கூடு ஒன்று கட்டப்பட்டு ஆராய்ச்சி மணியும் அமைக்கப்பட்டது.]

(1) இரண்டு யோக்கியர்களின் வழக்கு.

அர:—மந்திரிகாள்! யாரோ மணியடிக்கின்ற சத்தம் கேட்கின்றது; வாருங்கள் சபாமண்டபத்திற்குப் போவோம்.

மந்:—ஆக்ஞை; அப்படியே வருகின்றேன்.

(போகின்றார்கள்)

குடிகள்:—மகாராஜா! வந்தனம்.

(நமஸ்கரிக்கின்றார்கள்)

அர:—மங்களமுண்டாகுக; நீங்கள் யார்? உங்கள் வேண்டுகோள் என்ன?

குடி:—பிரபோ! நாங்கள் வசிப்பது இருக்குற்றாலம். நான் இதோ நிற்கும் வியாபாரியிடம் ஒரு தோட்டத்தை விலைக்கு வாங்கினேன். அதில் ஒரு கிணறு வெட்டும்போது ஒரு புதையல் அகப்பட்டது. அதை எடுத்துப்பார்க்க அதில் பதினாயிரம் பொன் இருந்தது. அப்பொன்னை வியாபாரியிடம் கொடுக்கப்போனேன். அவர் "அதை வாங்கிக் கொள்ளமாட்டேன். அது உனக்குத்தான் சொந்தம்." என்று மறுத்து விட்டார்.

அர:—அப்புதையலை நீயேன் எடுத்துக்கொள்ளக் கூடாது?

குடித்தனக்காரன்:—பிரபோ! நான் இந்த வியாபாரியினிடமிருந்து தோட்டத்தை மாத்திரம் விலைக்கு வாங்கினேன். இனிமேல் நான் அதை உழுது பயிரிட்டுப் பலன் அடையவேண்டும். இப்பொழுது அகப்பட்டபுதையல் அவருக்குத்தான் சொந்தமாகும்.

அர:—(வியாபாரியை நோக்கி) உன் அபேக்ஷையென்ன? ஏன் அப் பொன்னை வேண்டாம் என்று மறுத்து விட்டாய்?

வியாபாரி:—மகாராஜா! நான் தோட்டத்தை அவனுக்கே விற்று விட்டேன். அதன் கிரயத்தையும் வாங்கிக்கொண்டேன். தோட்டத்திற்கும் எனக்கும் சம்பந்தமே இல்லை. அதிலுள்ள மரங்களும் அந்நிலத்திற்குள் அகப்படக்கூடிய எதுவும் அவருக்குத்தான் சொந்தமாகும்; எனக்குக் கொஞ்சமேனும் பாத்தியமாகாது. ஆகையால் அப்புதையலை அவரே எடுத்துக் கொள்ள வேண்டும்.

அர:—(மந்திரிகளை நோக்கி) பார்த்தீர்களா இவர்களுடைய உத்தம குணத்தை; இருவரும் பரமயோக்கியராக விருக்கின்றார்கள். பதினாயிரம் பொன்னையும் சரிப்பாகமாக்கி இரண்டு பேர்க்கும் கொடுத்து விடலாமென்று நினைக்கிறேன். உங்கள் அபிப்பிராயம் என்ன?

மந்:—கேட்டுப் பார்ப்போம். வழக்காளிகள் என்ன சொல்லப் போகிறார்களோ தெரியவில்லை.

அர:—இருவரும் யோக்கியர்கள் போற் காணப்படுகின்றனர். இவர்கள் தனித்தனி ஐயாயிரம் பொன் எடுத்துக்கொள்ளலாம். அப்படியே தீர்மானிக்கின்றேன்.

ஒருவன்:—பிரபோ! எனக்கு அதில் ஒட்டின தூசுகூட வேண்டுவதில்லை. அவரே எடுத்துக்கொள்ளட்டும். கிரயப்படுத்தின பிறகு பாத்தியம் எப்படி எனக்குண்டாகும்?

அ:—(மற்றவனை நோக்கி) நீ என்ன சொல்லுகின்றாய்? உனக்கு அவ்வாறு பங்கிட்டுக் கொடுப்பது சம்மதமா?

மற்றவன்:—மகாராஜா எனக்கும் வேண்டாம். அப்புதையல் நான் கஷ்டப்பட்டுத் தேடிய பொருளல்ல. அவருடைய முன்னோர்கள் இத்தோட்டத்தில் எந்தக் காரணத்தாலாவது அதனை மறைத்து வைத்திருக்கலாம்.

ம:—நல்லது! இருவர் சொல்வதும் நியாயந்தான். (வியாபாரியை நோக்கி) உனக்குப் பிள்ளையாவது பெண்ணாவது உண்டா?

வி:—பிரபோ! ஒரேபையன் இருக்கின்றான்; அவனுக்கு இப்போது பதினாறாவது வயது நடக்கின்றது.

ம:—(மற்றவனை நோக்கி) உனக்கும் ஏதாவது சந்ததி இருக்கிறதா?

மற்ற:—எனக்குப் பெண் ஒன்றுதான்; பிள்ளை கிடையாது.

ம:—அப்படியானால் அதுவே சரியாய் முடியும். உன்னுடைய பெண்ணை இந்த வியாபாரியின் பிள்ளைக்குக் கலியாணம் பண்ணிக்கொடுத்து பிறகு அத்தம்பதிகளுக்குப் பதினாயிரம் பொன்னையும் சீதனமாகக் கொடுப்பது நலம்.

அர:—நல்ல யோசனை! இதுதான் தெய்வ சம்மதமாகும். (இருவரையும் நோக்கி) சீக்கிரத்தில் ஒரு முகூர்த்தம் வைத்து சுமார் நூறுபொன் செலவு செய்து கலியாணத்தை நடத்தவும், மிகுந்த 9900 பொன்னையும் தம்பதிகளுக்கு சீதன திரவியமாகக் கொடுக்கவும் தீர்மானம் செய்திருக்கின்றோம்.

இருவர்:—உத்திரவின்படி அப்படியே செய்கின்றோம். வந்தனம் போய் வருகிறோம்.

ம:—பிரபோ! மணியடிக்கும் சத்தம் கேட்கின்றது. சேவகர்கள் பெருங் கூச்சல் போடுகிறார்கள்.

அ:—சீக்கிரம் போய் விசாரிப்போம் வாருங்கள்.

(போகிறார்கள்.)

ம:—(ஸ்திரீகளை நோக்கி) ஏன் வீண் கூச்சல் போடுகின்றீர்கள்? உங்களுக்கு என்ன நேரிட்டது?

மூத்தவள்:—நாங்கள் இருவரும் ஒருவர்க்கே வாழ்க்கைப்பட்டவர்கள்; எங்களுக்குத் தனித்தனி ஒவ்வொரு குழந்தை பிறந்தது; எங்கள் புருஷனும் தற்காலம் ஊரிலில்லை; நேற்று இராத்திரி என் சக்களத்தியின் குழந்தை இறந்து போய்விட்டது. அவள் தன் பிள்ளையை மெல்ல எடுத்து என்பக்கத்தில் கிடத்திவிட்டு உயிரோடிருந்த என் குழந்தையைத் தான் எடுத்துக்கொண்டு அந்தப்பிள்ளை தன்னுடையதென்று சாதிக்கின்றாள். ஹா! என்ன செய்வேன்? வெகு காலம் கழித்து அருமையாக இக்குழந்தையைப் பெற்றேனே! பழிகாரி என்னை இப்படி மோசம் பண்ணப் பார்க்கிறாளே! இவ்விரண்டு குழந்தைகளும் உருவத்திலும் நிறத்திலும் ஒன்றாகவே இருக்கின்றன; கொஞ்சமும் வித்தியாசம் தோன்றவில்லையே!

அ:—(மற்றவளைப்பார்த்து) அது, உன் குழந்தைதானா?

இளையவள்:—மகாராஜனே! என் குழந்தைதான் இது. அவள் சொல்வது எல்லாம் புரட்டு.

அ:—(மந்திரியைப்பார்த்து) உயிரோடிருக்கும் குழந்தையும் இசைவாயிருக்கிறதே! இந்த அறைக்குழந்தை தன் தாயை இன்னாளென்று எப்படி தெரிந்துகொள்ளும்? அக்குழந்தையால் நாம் எவ்வாறு உண்மை அறியலாகும்?

ம:—உயிரோடேகூடிய இந்தப் பிள்ளையை இரண்டாய்த் துண்டித்து இவளுக்கு ஒருபாதியும் அவளுக்கு ஒரு பாதியுமாகக் கொடுப்பது நலம். (மற்றவளை நோக்கி) என்ன சொல்லுகின்றாய்? அப்படி செய்வது உனக்குச்சம்மதமா?

இளையவள்:—அதுவே சரி! எனக்கும் வேண்டாம் அவளுக்கும் வேண்டாம்.

மூத்தவள்:—நடுநிலை வழாத நற்குண அரசே!
பால் மணம் மாறாப் பசுஞ்சிசு இதனைப்
பதைக்கப் பதைக்க வதைக்கவே வேண்டாம்
இரக்கஞ் சிறிதும் இல்லாது பேசும்
இவளுக்கேயிவ் விளஞ்சிசு இதனை
உயிருடன் தருவீர் உண்மையா யெனக்கு
வேண்டவே வேண்டாம் மேவியிக் குழந்தை
அவளிடந்தனே அன்புடன் வளரவென்
கண்ணாற் கண்டு களிப்புறுவனே
போதும் போதும் புண்ணிய வேந்தே.

ஐயனே! எந்த நிமித்தத்தினும் குழந்தையைக் கொல்ல வேண்டாம், அவளே வைத்துக்கொள்ளட்டும்; அதை நான் கண்ணால் பார்த்துக்கொண்டாவது தேறுதல் அடைவேன்.

(கண்ணீர் விட்டு அழுகிறாள்).

அ:—மந்திரிகாள்! இவள்தான் இக்குழந்தையின் தாயாயிருக்கலாம்.

ம:—பிரபோ! கைப்புண்ணுக்குக் கண்ணாடி வேண்டுமா என்ன? இவள் தான் அதற்குச் சந்தேகமில்லை; பெற்றவளுக்குத் தெரியும் பிள்ளையின் அருமை.

அ:—(மற்றவளை நோக்கி) பாதகி! குழந்தைக்குத்தாய் நீ போனால் அதை வெட்டத்துணிவாயா? சீச்சீ துடிப்போ இங்கிருக்கும்? (போகின்றனர்).

(3) ஆராய்ச்சி மணியும் பசுவும்.

அ:—இது யாருடைய பசு? ஏன் இப்படி இளைத்து மெலிந்து இருக்கிறது? இதற்குப்போதுமான தீனி போடாதபடியால் இது இந்நாள் கயிற்றைக் கடித்து இழுக்கிறது.

சேவ:—மகாராஜா! நமது சேனாதிபதியின் பசு இது. இதற்குப் புல் போடாமல் விட்டுவிட்டதனால் தான் இப்படி அலைகிறது.

அ:—மந்திரியிடம் சொல்லி சீக்கிரம் சேனாதிபதியைப் பிடியாய் வரவழைக்கும்படி தெரிவி.

(மந்திரியும் சேனாதிபதியும் வருகிறார்கள்)

மந் - சேனா:—வந்தனம்.

அ:—மங்களமுண்டாகட்டும். மந்திரி! ஆசனத்தில் அமர வேண்டும். (சேனாதிபதியை நோக்கி).

சேனாபதி! இது யாருடைய பசு? இதைக்கவனிப்பாரில்லையோ?

சேனா:—அரசே! என்னுடைய பசுதான். கிழப்பசுவானதால் இதைக்காப்பாற்றுவதில் பலன் ஒன்றுமில்லையென்று கவனியாமல் இருந்தேன்.

அ:—நியாயம் ஒழுங்காக இருக்கின்றது! இருபது வருஷம் உமக்குப் பால்கொடுத்து வந்த பசுவைத் தீனிக்கு அலைய விட்டீரே. சரிதான்! நீரும் கிழவர் ஆய்விட்டீர்; இனிநீர் உத்தியோகம் செய்ய உதவமாட்டீர்; உமது வேலையை விட்டுவிடும்.

சேனா:—அரசே! அந்தப் பசுவைக் காப்பாற்றாது அலைய விட்டது என் குற்றமே! என்னை மன்னித்தருளல் வேண்டும்.

மந்:—சேனாபதி! நீர் இராஜாங்கத்திலும் இப்படித்தான் வேலைபார்ப்பீர்: பசு பாலியமாக இருந்தபோது உமக்கும் உமது குடும்பத்திற்கும் வேண்டியமட்டும் குடம் குடமாய்ப் பால் கொடு

திருக்கு அல்லவா? அதற்காகவா வந்து இதைப் போவித்து வருவது உமது கடமை. பசியால் அலைபவர்களிடம் தெய்வ சம்மதமாகுமோ?

சேனு:—இனிநான் தங்கள் உத்தரவின் பிரகாரமே அப்பணத்தைப் பாதுகாத்து வருகின்றேன்.

அ:—அதுவேசரி! நாம் கட்டிவைத்த மணி மாட்டுக்கும் நியாயம் தீர்த்தது.

(4) விவேக வழக்கு.

மந்திரி:—மகாராஜா! நமது ஆசாரவாசலில் ஆராய்ச்சிமணியின் ஓசைமீண்டும் கேட்கின்றது. விசேஷம் யாதோ தெரியவில்லை.

அர:—ஆம் மந்திரி! உடனேபோய் விசாரிப்போம் வா?

மந்:—தங்கள் சித்தம் எப்படியோ அப்படியே, பிரபு!

(போகிறார்கள்.

ஒரு பிராமணனும் பறைச்சியும் வாதாடிக்கொண்டு மணியினிடம் நிற்கிறார்கள்.)

பிராம:—தருமராஜனே! உமக்கு மங்களமுண்டாகுக.

(ஆசீர்வதிக்கிறான்)

அர:—பிராமணோத்தமரே! என்ன விசேஷம்? உம்முடனே நிற்பவள் யார்?

பிரா:—வேந்தே!

விருத்தம்.

வேதநூல் ஓதி அந்நூல்
விளம்பிய வழிநின் றோதி
நாதனைப் பணியும் நானோர்
நற்குலப் பார்ப்பான்; என்னைப்
பாதகத் தொழில் செய் இந்தப்
பறைச்சிதன் கணவன் என்று
வாதமிட்ட டாறுபேசி
வழிமறிக் கின்றாள் பாராய்.

நான் ஒரு வைதிகப் பிராமணன்-வேதம் ஓதியவன்; நகவரபத்தியில் ஈடுபட்டவன். அடுத்த கிராமம் போகவேண்டி அதிகாலையில் எழுந்து அனுஷ்டானங்களை முடித்துக்கொண்டு புறப்

பட்டேன். வழியில் இப்பாவி நான் வருவதைக் கவனிக்கவில்லை. என் அருகில் வந்து நின்றாள்; தூரமாகப் போகும்படி நான் கோபித்துக்கொண்டேன்; கோபிக்கக் கோபிக்க அவள் என்னைக் கட்டி விண்சண்டைக் கிழுக்கின்றாள். "நீர் என் கணவராத லால் உம்மைவிட்டு நான் எங்குச் செல்வேன்" என்று வீண்பழி போடுகிறாள். இந்த அடாதவழக்கை விசாரித்து நியாயம் புரிதல் வேண்டும்.

அர:—(பறைச்சியைப் பார்த்து) நீ என்ன சொல்லுகிறாய்?

பறை:—ஐயா, சாமி, ஆண்டவனே! தண்டம்.

விருத்தம்.

தருமஞ் சிறிதுந் தவறுதித்
தரையை ஆளும் ராஜனே!
சிரமங் கொண்டிங் கிழிதொழிலால்
ஜீவித் திடும்நான் ஓர்பறைப்பெண்
கருமம் ஒன்றும் இன்றிஇந்தக்
கல்வல் லோனைக் கைநின்டேன்
மருமம் அதைநீர் இம்மறையோன்
வாயைக் கொண்டே வெளிப்படுவீர்.

நானோ பறைப்பெண். இவரோ வைதிகப்பிராமணர். இவரை நான் நெருங்கிவழியில் தொடுவதற்கு அவ்வளவு தைரியம் எனக்கு எப்படி உண்டாகும்? ஏதோ சம்பந்தம் இருந்ததால் இப்படி நேர்ந்தது; அந்தரகசியத்தை இவ்வேதியரைக் கொண்டே வெளியாக்குவது நலமாயிருக்கும்.

அ:—அந்தணரே! இவள் கூறியதைக் கேட்டீரா? இவளோ பெண், அபலை; அதிலும் சண்டாளக்குலத்தில் பிறந்தவள். உம்மை எதிர்க்கும் துணிவு இவளுக்கு எவ்வாறு வரும்? காரணம் வேறு இருக்கலாம். அவசரப்படாமல் நீரே அதை வெளியிட வேண்டும்.

பி:—(தனக்குள்) ஜகதீசா! இதுவும் உன் திருக்கூத்தோ! கூச்சமில் சம்பந்தம் உண்டென்று நியாயஸ்தலத்திலுமல்லவா கூறுகின்றாள். ஆவதும் அழிவதும் பெண்களால் என்பது மெய்யே. ஆ! நான் ஒருபாவமும் அறியேனே. அடங்காப்பிடாரியோ இவள்!

பழிபாவத்துக்கு அஞ்சாதவள். இருக்கட்டும், பார்ப்போம். (வெளிப்படையாய்) நரேந்திரா! ஏதோ ரகசிய மிருப்பதாகச் சொல்லுகிறீரே; அது அவள் மனசுக்கும் எங்குமுள்ள ஈசனுக்குந்தான் தெரியும். நானொன்றும் அறியேன். "பெண் என்றால் பேயும் இரங்கும்" என்றபடி இவள் பேச்சுத்தானே முன்னுக்கு வருகிறது. இவளையே அந்த ரகசியத்தை வெளியிடக் கட்டளையிடும்.

அ:—வேடிக்கைதான்! சரி (பறைச்சியைநோக்கி) ஐயர் தமக்கு ஒன்றும் தெரியாதென்று சாதிக்கிறார். நீதான் அந்த அந்தரங்கத்தைப் பகிரங்கமாய்ச் சொல் பார்ப்போம்.

ப:—சாமி! இப்பிராமணரோ சகலமும் கற்றுணர்ந்தவர்; நிற்கும் இந்த நீதிஸ்தலத்தில் எங்களிருவர்க்கும் நடந்த உண்மையை நிர்ப்பயமாய்ச் சொல்வதற்கு ஏனோ மயங்குகிறார். என்னையே வெளியிட உத்தரவானபடியால், அதை நானே தெரிவிக்கிறேன். நானோர் அவசரவேலையாய்ப் போய்க்கொண்டிருந்தேன். எனக்கு அவ்வேலையிலேயே ஞாபகம்; வழியில் எனக்கு முன்பாவது பின்பாவது எவரேனும் போய்க்கொண்டாவது வந்துகொண்டாவ திருக்கிறார்களாவென்று நான் கவனிக்க இல்லை. என்பின்னே வந்த இவரும் என்னை எச்சரிக்கை செய்யவில்லை; நெருங்கிய போதுதான் நானும் அவரைப் பார்த்தேன், அவரும் என்னைப் பார்த்தார். இச்சம்பவம் தற்செயலாய் நேர்ந்துவிட்டது. உண்மையா அல்லவா என்பதை இவரைக் கேளுங்கள்.

அ:—வேதியரே! இப்போது இவள் சொன்ன விஷயம் சரிதானா?

பி:—ஆம் அரசே! ஆயினும் அவள் கவனியாதது தப்புதானே!

அ:—நீரேன் கவனிக்கக்கூடாது?

பி:—நான் ஈசுவரத் தியானபரனா யிருந்தபடியால் கவனிக்கவில்லை.

ப:—சாமி! அப்படியிருக்க இவரெப்படி என்னைக் கோபிக்கலாம்?

அ:—நீரேன் கோபித்தீர்?

பி:—தீண்டாததா யாதலால் தூரமாகப் போகுமாறு கோபித்தேன்.

ப:—பிழையில்லாத என்னைச் சாந்தமாக அப்புறம் போகும்படி வாய்வார்த்தையாகச் சொல்லலாகாதா? இவர்க்கும் அற்ப விஷயத்தில் கோபம் வரலாமா?

அ:—பிராமணரே! நீர் வயதிலும் பெரியர்; வேஷத்தைப் பார்த்தால் அறிவிலும் பெரியவராகவே காணப்படுகின்றீர். பரம சாது என்று எவரும் அழைக்கத்தக்க கோலத்தைக் கொண்டு விட்டீர். இருந்தாலும் கோபம் மாத்திரம் உம்மைவிட்டுப் போகவில்லையே! நிரபராதியான இவளை நீர் வீணே கோபித்தது உமது குற்றமே.

பி:—கோபித்துக் கொண்டதற்கா இவள் என்னைத் தன் புருஷனாகக் கொண்டுவிட்டாள்?

ப:—ஆம்! ஆம்!! ஆண்டவனே! ஒருதரமல்லவே கோபித்துக்கொண்டது. நான் விலகுவதற்குள் பலதரம் என்னைக் கோபித்து வைதபடியால் அவ்வாறு செய்தேன். என் செய்கையில் பிழையில்லை என்பது இவருக்கே தெரியவரலாம். சிறிது நிதானமாக யோசிக்கவேண்டும்.

அ:—சுவாமி வேதபாரகரே! என்ன சொல்லுகிறீர் நீர்?

பி:—நரேந்திரா! இவள் கபடக்கருத்து எனக்கு விளங்கவில்லையே.

அ:—பெண்ணே! நீயே விபரமாகத் தெரிவி?

ப:—சாமி! இவர் பன்முறை என்மீது கோபங்கொண்டபடியால், நான் இவரைத் துணிந்து கைப்பற்றலானேன். ஏனென்றால் எங்கள் நீசத்தன்மை இவரிடம் குடிகொண்டிருந்தமையால். "கோபம் பாபசண்டாளம்" என்னும் பழமொழியை இவரே அறிந்தும் கேட்டும் இருக்கலாம். "ஆனைக்கும் அடிசருக்கும்" என்கிறார்களே. அதுபோலத் தெய்வாதீனமாக நேர்ந்துவிட்ட செயலுக்கு யார்தான் என்ன செய்யலாம். ஆகாயமும் பூமியும் அதிரும்படி ஆரவாரித்துக் கோபங்கொண்டாரே. இவருடைய சாதுத்தன்மைக்கு அது கெடுதியன்றோ?

அ:—கேட்டீரா விப்பிரரே! இத்தீசப்பெண்ணிடம் விளங்கும் அறிவுகூட சகலமுங்கற்ற உம்மிடம் விளங்காமற் போயிற்று. புலமையை விட்டுப் புலைமையைக் குடியேற்றி யிருந்தபடியால் இனம்பற்றி இவள் உம்மை நாயகனாக வரித்தாள். இனிநீர் கோபத்தை ஒழித்துவிட்டு, சாந்தவடிவமா யிருந்து நற்கதியை அடைவீராக.

"கோபத்தாற் கௌசிகன் தவத்தைக் கொட்டினான்
கோபத்தால் நகுடனும் கோல மாறினான்
கோபத்தால் இந்திரன் குலிசம் போக்கினான்
கோபத்தால் இறந்தவர் கோடி கோடியே".

செல்லா இடத்துச் சினந்தீது செல்லிடத்தும், இல்லதனில் தீய பிற"

"ஆறுவது சினம்", "சுளிக்கச் சொல்லேல்", "ஞயம்பட வுரை", "வெட்டெனப் பேசேல்" எனவரும் ஆன்றோர் உறுதி மொழிகளை மேற்கொண்டு ஒழுங்குபெற வாழ்வீராக.

"கடிவதுமற" (முதற்பாகம் முற்றிற்று).

T. K. ஸ்ரீனிவாச அய்யங்கார்,
சென்னை.

சுகாதாரம்.

வாய்வு.

நம்முடைய வீடுகளிலும், அவற்றைச் சூழ்ந்துள்ள இடங்களிலும் விஷவாயுக்கள் உற்பத்தியாகின்றன. அதற்குக் காரணம் பலவுள. வீடுகளில் குப்பை முதலியவற்றைக் குவியுமாறு செய்வதினாலும், பசுமாடு முதலியவற்றை வீட்டிற்குள் கட்டி வைத்துக் கொள்வதினாலும், கக்கூஸ்களிலுள்ள குப்பைகளைத் தினந்தோறும் சுத்தஞ் செய்யாமையாலும், வீதிகளில் சிறுவர்களும், பெரியோர்களும் ஜல-மலோபாதிகள் கழிக்கின்றமையாலும், பலவிதமான கொடிய விஷவாயுக்களுண்டாகி நாம் சுவாசிக்கும் வாயுவோடு கலந்து பலவகையான தேக சுகவீனங்களை யுண்டாக்குகின்றன; விஷபேதி, விஷசுரம், அம்மை முதலான தொத்து வியாதிகளு முண்டாகின்றன. வீடுகளையும், வீடுகளைச்சுற்

றியுள்ள இடங்களையும் சுத்தமாக வைத்துக்கொள்ளும் விவேகம் நம்மனோர்க்கு இன்னும் வாராதிருக்கின்றது. முனிசிப்பாலிட்டியாருடன் ஜனங்களும் கலந்துழைத்தாற்றான் சுகாதாரம் நிலைபெறும்; முனிசிப்பாலிட்டியார் சுத்தஞ் செய்து வருமிடத்தை ஜனங்கள் அறிவீனத்தினால் அசுத்தஞ் செய்து வருவார்களாயின் சுகாதாரம் நிலைபெறுமா றெங்ஙனம்? வீடுகளினுள்ளேயும் இவைத்த இடங்களிலெல்லாம் குழந்தைகளும், சிறுவர்களும் அசுத்தஞ் செய்கின்றனர்; அவ்விடங்களை உடனுக்குடன் சுத்தஞ் செய்வதில்லை; ஜலதாரைகளைக் கவனமாகச் சுத்தம் செய்வதில்லை. இவ்வாற்றால் வீடுகளிலேயே விஷவாயுக்கள் உற்பத்தியாகி வீட்டிலுள்ளவர்களைச் சுகவீனப்படுத்துவதற் கேதுவாகின்றன. அசுத்தமாயிருக்கும் வீடுகளிற் குடியிருப்பவர்களுக்குப் பெரிய வியாதிகள் உண்டாகாவிடினும், நாளடைவில் அவர்களது தேக சுகங் கெட்டுப், பின்னர் அவர்கள் பலவீனத்தினாலும், பலவகையான ரோகங்களினாலும் பீடிக்கப்படுவார்கள். நகரங்களில், ஜன நெருக்க முதலிய பலகாரணங்களினால் ஆகாயம் அசுத்த மடைந்திருக்கின்றது. ஆதலால் நகரங்களில் வாசஞ் செய்யும் ஜனங்கள் தங்கள் வீடுகளையும், வீடுகளைச் சுற்றியுள்ள இடங்களையும் மிகவும் சுத்தமாக வைத்திருத்தல் வேண்டும். சுத்தமான காற்றைச் சுவாசஞ் செய்வதே சரீர ஆரோக்கியத்திற் கேதுவாகின்றது.

நாம் உண்ணும் உணவு வயிறு, குடல் இவற்றிற்குள் சென்று ஜீர்ணமாகிப் பால் போன்ற அன்னரசமாகின்றது. இது சிறிய அன்னரசக்குழல்கள் வாயிலாகவும், இரத்தக் குழல்கள் வாயிலாகவும் சுவாசக் கருவியினிடத்திற் போய்ச் சேர்கின்றது. அங்கு அன்னரசத்தின் மீது நாம் சுவாசத்தினால் உட்கொள்ளும் வாயுவின் ஓர் அம்சமாகிய பிராண வாய்வு (ஆக்ஸிஜன்) பட்டவுடன் அது சிவப்பு நிறமுள்ள சுத்த இரத்தமாக மாறி விடுகின்றது. இவ்வாற்றால் நாம் சுவாசஞ் செய்யும் வாய்வு எவ்வளவிற் கெவ்வளவு சுத்தமாயிருக்கின்றதோ அவ்வளவிற் கவ்வளவு நமது உணவினுண்டாகும் அன்னரசம் அதிகமும், சுத்தமுமான இரத்தமாகும். இதனால் சுத்தமான காற்றில்லாத இடங்களில் வாசஞ் செய்கின்றவர்களும், தேகப் பயிற்சியினால் சுவாசக் கருவிகளை இயங்கச் செய்யாதவர்களும், வீட்டிற்குள்ளேயே பாயும், படுக்கையுமாக விருப்பவரும் சரீர சுகத்திற்கு வேண்டியவளவாகச் சுத்த

மான வாயுவைச் சுவாசிக்காமையினால் அவர்கட்கு நல்ல பசி உண்டாவதில்லை; உண்ட வுணவு முற்றும் ஜீரணமாகி நல்ல இரத்தமாக மாறுவதுமில்லை. இவ்வாற்றால் சுத்தமான வாயுவை யுட்கொள்வதனாலும், தேகப்பயிற்சி மூலமாக சுவாசக்கருவிகளை யியக்குவதனாலும் உண்ட உணவு முற்றும் நல்ல இரத்தமாக மாறி தேகசுகமும், பலமும், உறுதியு முடையதாகவாகும்.

சரீர சுக உபந்யாசம்.

ஸ்திரீகள் நான்கு வகுப்பினராவர்:— அறிவில்லாதவர், தீர்க்கயோசனையில்லாதவர், உபேட்சை யுள்ளவர், தங்களுக்கியன்றமுயற்சிசெய்பவர்கள். ஸ்திரீகள் அறியாமை வடிவமாயிருக்கின்றனர். ஸ்திரீகளுக்குத் தம்மக்கள் மீது அதிக பட்சமுண்டு; ஆனாலவர்கட்குத் தம்மக்களை இன்னவிதமாக வளர்ப்பதென்பதுதெரியாது. ஒருகால் ஓர் அறையில் 21-பேர்வசிக்கும் ஸ்திரீகளிருந்தனர்; அவர்களுடைய அபிப்பிராயங்கள் பல திறத்தனவாகவிருந்தன. அம்பட்டத் தாதிகளுடைய சிகிச்சை கொடூரமானது. பிரசவித்த சுகசரீரமுள்ள ஸ்திரீயின் முலைப்பால் 9-மாதம் குழந்தைக்குப் போதுமான உணவாயிருக்கத்தக்க புஷ்டியுள்ளதாயிருக்கும்; பின்னர் அந்தப் பால் புஷ்டியிலும், அளவிலும் குறைந்து போகின்றது. இந்தியாவில் இரத்தமில்லாது இளைத்தும், வெளுத்தும், சாப்பாட்டிற்குக் கவலைப்படுபவருமாயிருக்கும் நூற்றுக்கணக்கான தாய்மார்கள் தம்மக்களுக்கு முலைப்பாலூட்டி வளர்த்து வருகின்றனர்; அவ்வாறு செய்வதனால் குழந்தைகட்குப் போதுமான அளவாகவும், புஷ்டியாகவும் பால்கிடைக்காமையினால் அவை பலவிதமான நோய்களாற்பிடிக்கப்பட்டு வருகின்றன. பிரிட்டிஷ் ராஜ்யத்தில் குழந்தைகள் ஒருவருடமாவதற்கு முன்னர் நூற்றில் 16-வீதம் இறந்து விடுகின்றன; இந்தியாவில் 33-வீதம் இறந்து விடுகின்றன. இதற்குக் காரணம் இந்தியத் தாய்மார்களின் முலைப்பால புஷ்டியாயில்லாதிருப்பதும், தாய்மார்கள் குழந்தைகள் ஜீரணித்துக் கொள்ளுவதற்கு யோக்யமல்லாததும், அசுத்தமுமான உணவுகளைக் குழந்தைகட்குக் கொடுப்பதுமேயாம்.

இதனால் புட்டிப்பால் குழந்தைகட்குக்கொடுப்பது மிக மேலானதாம். இந்தியாவில் பசுவின் பால் புஷ்டி யுடையதாகவில்லை; ஆனது பற்றிப் பசுவின் பாலில் சர்க்கரையையும், சிலதுளி மீன் எண்ணெயையும் சேர்த்துக் கொடுப்பது குழந்தைகட்குச் சுகத்தை யுண்டு பண்ணுவதாம். இந்தியாவில் குழந்தைகளின் மரணம் அதிகமாக விருக்கின்றது. சென்னையில் 1911-வது வருடத்தில் 19500-குழந்தைகள் ஜனனமாயின; அவற்றுள் அதேவருஷத்தில் 6000-குழந்தைகளிறந்து விட்டன; நான்கு வருடத்திற்குள் 3000-குழந்தைகளிறந்து விட்டன. இந்தக் கணக்கின் பிரகாரம் குழந்தைகள் நான்கு வயதாவதற்குள் நூற்றிற்கு 45-வீதம் இறந்து விடுகின்றனவென்றும், ஒரு வயதிற்குள் நூற்றிற்கு 33-வீதம் இறந்து விடுகின்றனவென்றும் தெரிகின்றன. கிராமங்களில் இவ்வளவு அதிகமாகக் குழந்தை மரணங்கள் நேரிடுவதில்லை; கிராமங்களில் நான்குவருடக் குழந்தைகள் நூற்றிற்கு 25-வீதம் மரணமடைகின்றன. இங்கிலாந்தில் குழந்தை மரணம் நூற்றிற்குப் பதினைந்து வீதமாயிருக்கின்றது. இதனைக் குறைத்தற் பொருட்டு அந்தத் தாய்மார்கட்குப் போதனைக்கலாசாலை முதலியன ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன.

இந்தியா உலகத்தில் மேன்மை யடைதல்வேண்டுமென்று நினைக்குமாயின், அது தன்னுடைய குழந்தைகளைத் திடமாக வளர்த்துவரவில்லையென்பதைக் கவனித்தல் வேண்டும். குழந்தை மரணம், தாயினுடைய ஸ்திதியையாவது, குழந்தையினுடைய ஸ்திதியையாவது பொறுத்ததாகவில்லை; ஆனால் இந்த தேசத்தின் நிலைமையைப் பொறுத்ததாக விருக்கின்றது. இந்துக்களின் ஜனசமூக நிலைமை, கௌரவ அந்தஸ்து, பொருளுடைமை அவர்களுடைய பழக்க வழக்கங்களைத் திருத்துவனவாயில்லை. அவர்கள் நகைகள் செய்வதில் பிரியமுடையவர்களாயிருப்பார்களேயன்றி, சுகாதாரமான இடங்களில் விசாலமான வீடுகளில் கூடியிருப்பதற்குத் தகுந்த வீடுகளில் வாசஞ்செய்யக் குடிக்கூலி கொடுக்கப் பின்வாங்குகின்றனர். ஜனசமூக வாழ்க்கையில் ஸ்திரீகள் அதிக சுதந்தரமுடையவர்களாதல் வேண்டும். எல்லா ஜனங்களும் சுகாதார விதிகளை அறிந்து கொள்ளுதல் வேண்டும். குழந்தைகட்குச்சுத்தமான பால் கொடுக்கும் பாற்சாலைகளை ஏற்படுத்துதல் வேண்டும்; சுகாதார சம்பந்தமான உபந்யாசங்களை செய்

யப்படுதல் வேண்டும்; சுத்தமான ஜலவசதியிருத்தல் வேண்டும்; சுகாதார நிலைமை விர்த்தியடைதல் வேண்டும்; ஸ்திரீகள் கல்வி கற்றல் வேண்டும்; தாதிகளைத் தயார் செய்யத் தகுதியான போதனாசாலைக ளேற்படுதல் வேண்டும்; பிரசவ ஆஸ்பத்திரிகளில், பிரசவ காலத்திற்கு முன்னரே ஸ்திரீகளைக் கவனித்தற்குரிய பிரத்தியேக இலாக்காவிருத்தல் வேண்டும்; நோயாளிகளை வீட்டிற் சென்று பார்ப்பதற்குப்போதுமான அளவாக தாதிகளைத் தயார் செய்தல் வேண்டும்.

மேற்படி உபந்யாசம் ஜனங்கட்கே யல்லாமல் கவர்ன்மெண்டார்க்கும் அறிவுறுத்துவதாக விருக்கின்றது. இந்த உபந்யாசம் டாக்டர் ஹில்ஸ்டன் என்பவரால் செய்யப்பட்டது.

யுத்தம்.

யுத்தம் தீவிரமாக நடந்து வருகின்றது. சீக்கிரம் முடிவாகுமென்று தோன்றவில்லை. மேற்காங்கத்தில் ஜெர்மானியர் "வர்டூன் பிரதேசத்திலிருந்து துரத்தி விடப்பட்டனர். பிரிட்டிஷாரும் முன்னேறிச் செல்லுகின்றனர். ருஷ்யர் கார்ப்பேதியன் மலைப் பிரதேசத்தில் வந்திருக்கின்றனர். ருஷ்யருடன் ரோமேனியர் யுத்தத்தில் சேர்ந்து டிரான்சில்வேனியாவில் முன்னேற்றமடைந்து வருகின்றனர். சலோனிக்காவில் நேச ராஜாங்கத்தார் மொனாஸ்டருக்கருகே வந்து பல்கேரியருடன் உக்ரமாகச் சண்டை செய்து வருகின்றனர். கிரீஸ் அரசரின் மனோ நிலைமை திடமாகவில்லை; ஜெர்மனியின் பட்சமாகவேயிருப்பதாகத் தோன்றுகின்றது. ஜெர்மன் நீழ்நீர்க்கப்பல்கள் வர்த்தகக் கப்பல்களைத் தாக்கிக் கடற்கிரையாக்கி வருகின்றன.

ஞானநூல் கற்றது கற்றறவு பூண்டாது
மோன சமாதி முயன்றதுக்— தானதி
யெல்லாக் கலையுமற் றின்புற் றிருப்பதுவே
சொல்லரு முத்திச் சுகம்.

Registered No. M 520.

20 MAR 17

சக்ரவர்த்தினி.

"கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றீண்டு வாரா நெறி".

VOL 12. | December 1916 & January 1917 | NO 5.6.
தொகுதி 12. | டிசம்பர் 1916-ஜனவரியீ 1917. | பகுதி 5.6.

பொருளடக்கம்: பக்கம்.

1. சீரைத்தேடி னேரைத் தேடு 119
2. அரிசியின் குணாகுணங்கள் 125
3, பப்பையாப் பழம் 127
4. காவிய பூஜை 128
5. நீதிசாரம் 129
6. பக்தியோகம் 132
7. நித்திய சுமங்கலி 138
8. தந்தையற்ற இரு சகோதரர்கள் 147
9. சுகாதாரம் 151
10. சுதேச வைத்தியம் 153
11. தத்துவ போதினி 157
12. மாமிச போஜன விலக்கு 158

கோ. வடிவேலுசெட்டியார், பத்திராசிரியர்-பத்திராதிபர்
கோமளேசுவரன் பேட்டை, சென்னை.

Sacchidhanandha Press, Komaleeswaranpet, Madras.

10-2-1
44

லோகோபகாரி.

இது சோமவாரந்தோறும் சென்னை கோமளேசுவரன் பேட்டையில் பிரசுரமாகுந் தமிழ்ப் பத்திரிகை; 22 வருடகாலமாகச் செவ்வனே நடை பெற்றுவருகின்றதென்பது பிரசித்தமாம். இஃது ஏனைய பத்திரிகைகளைப் போலல்லாது மக்களாய்ப் பிறந்தோர் பெறவேண்டிய பெரும் பேற்றை யடைதற்குரிய சாதனங்களை யாவரும் சுலபமாக அறியுமாறு போதித்து வருவதாம். இதுவேயுமன்றி இதில் கைத்தொழில், கல்வி, சுதேசிய, விதேசிய முதலிய அநேக விஷயங்கள், சிறுவர் சிறுமியாவருக்கும் பயன்படுமாறு செவ்விய நடையில் எழுதப்பட்டு வருகின்றன. இவ்வரிய பத்திரிகை வாங்குவோரும் இப்பத்திரிகையின் ஒரு பிரதியை வாங்கிப் படிப்பார்களாயின், இதனை மறந்தும் கைவிடமாட்டார்களென்பதும், இஃது ஒவ்வொரு வீட்டிலுமிருத்தற்குரியது மென்பதும் நன்கு விளங்கும். சாம்பில் காப்பி ஒன்று இனாமாக அனுப்பப்படும்.

சந்தா விவரம்.

இந்தியா, சிலோன், பர்மாவிற்கு.

ஆறு மாதத்திற்கு ரூபாய் 1-14 | ஒரு வருடத்திற்கு ரூபாய் 3 - 8

(நேட்டால்-சிங்கப்பூர்-பினாங்கு).

ஒரு வருடத்திற்கு ரூபாய் 5 - 8 | ஆறு மாதத்திற்கு ரூபாய் 3 - 0

இதுகாறும் வெளிவராத யூகிமுனிவர் வாதவைத்திய நூல்கள்.

வாதாங்க தீக்ஷாவிதி—300, வாதவைத்திய விளக்கம்-200 மதிவெண்பா—100 - விலை ரூபாய் 1.

தேரையர் கரிசலை-யூகிமுனிக்கரிசலை-கல்கண்டு சூத்திரம் அணா 12

சக்ரவர்த்தினி.

"சக்ரவர்த்தினி" என்னும் பெயர்பூண்ட மாதப்பத்திரிகை சென்ற பதினொரு வருடங்களாகத் தமிழுலகெங்கும் பரவிவருகின்றதென்பது பிரசித்தமாம். இஃது எமது வாயிலாக 1912-ம் வருஷம் பிப்ரவரிமாத முதற்கொண்டு லோகோபகாரி ஆபீசில் நடை பெற்றுவருகின்றது. இதில் கல்வியறிவு ஒழுக்கங்களபிவிர்த்தியாவதற் குரிய விஷயங்களும், மாதராடவர் தருமங்களும், மனோலய சாதனங்களும், பிறவும் பிரசுரஞ் செய்யப்பட்டு வருகின்றமையின், இது யாவரும் அத்தியாவசியமாக வாசித்தற் குரியதாம்.

சந்தா விகிதம்.

இந்தியா-சிலோன்-பர்மாவிற்கு		பிறதேசங்கட்கு-வருடம்	2—8—0
வருடத்திற்கு	ரூபாய் 2-0—0	ஷை 6- மாதத்திற்கு	1—8—0
ஷை 6-மாதத்திற்கு	ரூபாய் 1-4—0	தனிப்பிரதி	3—0—0

சக்ரவர்த்தினி.

" கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றீண்டு வாராநெறி ".

VOL-12 } December 1916 & January 1917. { No-5-8.
தொகுதி-12 } டிசம்பர்மீ 1916 - ஜனவரிமீ 1917. { பகு-5-6.

சீரைத்தேடி னேரைத் தேடு.

நாம் இகலோக சுகம், பரலோக சுகம், மோட்ச மென்பன வற்றை யடைதற்கு முறையே உழவு, வாணிகம், உத்தியோக மென்பனவும், தேவதாபூசை, ஆலய சேவை முதலியனவும், பெரியோரை யடுத்து ஞான சாஸ்திர ஆராய்ச்சி செய்தல், அவர் கூறியவாறு நிற்றல் முதலியனவும் சாதனங்களாயிருப்பனவாம். இகலோகத்தில் க்ரமமாக வாழுதலறியாதவர்க்கு ஒரு நன்மையு முண்டாவதின்றாகலின், நம்மனோர்க்கு இகலோக வாழ்க்கைக் குரிய சாதனங்களுள் தலைமையாயிருப்பதை மேற்கொண்டொழுகுதல் அத்தியாவசியகமாம். இகலோக வாழ்க்கை செவ்வையாக நடை பெறுதற்குச் சாதனமாயுள்ள உழவு, வாணிகம், உத்தியோக மென்பனவற்றுள், உழவே தலைமையாயதாம். உழவென்பது நடைபெறா தொழியுமாயின், வாணிகஞ் செய்வாரையும், உத்தியோகஞ் செய்வாரையுங் காண்டல் மிகவரிதாம்.

" மானங் குலங்கல்வி வண்மை யறிவுடைமை, தானந் தவமுயர்ச்சி தாளாண்மை—தேனின், கசிவந்த சொல்லியர்மேற் காமுறுதல் பத்தும், பசிவந் திடப்பறந்து போம்" என்று நல்வழி கூறுவது நன்குணரப்படுமாயின், பசிப்பிணியுடையாரிடத்து மானமும், குடிப்பிறப்பும், வித்தையும், ஈகையும், பகுத்தறியும், தானமும், தவமும், மேன்மையும், முயற்சியும், இற்றின்பப் பிரியமும் என்னும் பத்தும் சூரியனைக்கண்ட இருள்போலத் தொலைந்து

கோரமானவா மென்பது நன்குவிளங்குமன்றோ? இப்பசிப்பிணி யுணவினலன்றி மற்றெதனுலும் ஒழிவதின்மையின், உணவு ஒவ்வொரு பிராணிக்கும் மிக அத்தியாவசியமாக வேண்டுவதாம்? ஒருவன் குபேரன் பண்டாரத்தில் வசிப்பானாயினும், அவனுணவில்லாது வாழ்வதமையுமோ? உணவைப் பெறுதற்கு மிகச் சிறந்த சாதனமாயிருப்பது உழவேயாகலின், அத்தொழிலை நம்மனோர் பொன்னேபோற் போற்றி வருதல் வேண்டும்; வந்தாற்றான், இக லோகவாழ்க்கையை யினிதாக நடத்துதல் கூடும்.

வாணிகமும், உத்தியோகமும், மற்றவைகளும் உழவில்லாவிடத்து நிலை பெறுவனவாமோ? வாணிகம் உத்தியோக முதலியன நிலை பெறுதற் கேதுவாயுள்ள உழவுத் தொழிலை ஒவ்வொருவரும் நன்கு கவனித்து, அதனைச் செய்தோ, செய்வித்தோ வருதல் வேண்டுமென்பதை நம்மனோர்க்கு நன்குணர்த்தவே நமது ஞானத்தாயாகிய ஔவைப்பிராட்டியார் "சீரைத்தேடின் ஏரைத் தேடு—(சீ) மேன்மையைத் தேடுவாயாயின், (முன்னர்) ஏர்த்தொழிலைத் தேடக்கடவாய்" என்றருளிச் செய்தனர். ஏர்த்தொழில் உழுது பயிரிடுந் தொழிலாம். உழுது பயிரிட்டு வருவார் வாணிகஞ் செய்வார்க்கும்; உத்தியோகஞ் செய்வார்க்கும் உணவு தருபவராயிருக்கின்றனர். அவரத்தொழிலை விட்டொழிவாராயின், வாணிகஞ் செய்வார் கதியும், உத்தியோகஞ் செய்வார் கதியும் அதோகதியேயாம். வாணிகஞ்செய்வார்க்கும் உத்தியோகஞ் செய்வார்க்கும் உழுதுண்டு வாழ்வார்க்குள்ள சுதந்தரமிருப்பதில்லையாம். உழுதுண்டு வாழ்பவர் சுதந்தரமான வாழ்க்கை யுடையவராயிருத்தல் பற்றியன்றோ தெய்வப்புலமைத் திருவள்ளுவநாயனர் "உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாந் தொழுதுண்டு பின்செல் பவர்—பாவருமுண்ணும் வகை உழுதலைச் செய்து, அதனாற்று முழுண்டு வாழ்கின்றாரே தமக்குரியராய் வாழ்கின்றவர்; மற்றையாரெல்லாம் பிறரைத் தொழுது, அதனாற்றுமுண்டு அவரைப் பின்பற்றிச் செல்கின்றவர்" என்றருளிச் செய்தனர். ஔவைப் பிராட்டியார் கொன்றை வேந்தனில் மற்றொரிடத்து, "தொழுதூண் சுவையி னுழுதூ ணினிது" என்றருளியிருத்தலுமிங் குணர்தற்பாலதாம். ஔவைப்பிராட்டியார் "பருவத்தே பயிர்செய்," "நெற்பயிர் விளை," "பூமி திருத்தியுண்" "மேழிச் செல்வங் கோழைபடாது" என்று ஆத்திசூடியிலும் கொன்றை

வேந்தனிலும் கூறியிருத்தலையும், நல்வழியில் "ஆற்றங் கரையின் மரமு மரசறிய வீற்றிருந்த வாழ்வும் விழுமன்றே-ஏற்றம், உழுதுண்டு வாழ்வதற் கொப்பில்லை கண்டீர், பழுதுண்டு மற்றோர்பணிக்கு" என்று கூறியிருத்தலையும் நாம் பலகால் சிந்தித்துணர்வோமாயின், இகலோகவாழ்க்கைக்கு மிக முக்கிய சாதனமாயிருப்பது உழவுத் தொழிலாமென்பது நமக்கு மிகு நன்றாக விளங்குவதாம்; ஆகவே, நம்மனோர் சிறிதளவாகவேனும் ஏர்கொண்டுழுது பயிரிடுதற்குரிய நிலத்தைத் தமக்கென்று தேடி, அதில் பயிரிட்டு வர முயலுதல் வேண்டும். ஏர்கொண்டுழுது பயிரிடுந் தொழிலைச் செவ்வையாகச் செய்தோ செய்வித்தோ வருகின்றவர் பெரும்பான்மையும் வறுமைப் பிணியால் வருந்துவதில்லையாம்; வாணிகம் உத்தியோகம் செய்பவரோ பெரும்பான்மையும் வறுமைப் பிணியால் வருந்தா திருப்பதில்லையாம்.

வாணிகஞ் செய்பவரும், உத்தியோகஞ் செய்பவரும், சுவர்க்கத்தையடைதற் பொருட்டு வேள்வி முதலியவற்றைச் செய்பவரும், மோட்சத்தை யடைதற்பொருட்டு, ஞானசாஸ்திர விசார முதலியவற்றைச் செய்பவரும் உழுது பயிர்செய்வாரது உதவியையெதிர்பார்த்திருத்தலையும், உழுதுபயிர் செய்வாரில்லாவிடத்து அவரை யொழிந்தவர் பசிப்பிணியால் வருந்திப் பரிதபிக்க வேண்டியவரா யிருத்தலையும், உழுது பயிர் செய்வார் பிறரைத் தொழுங் கஷ்டமில்லாதவரா யிருத்தலையும், அரசனது செல்வம் உழுது பயிர்செய்வாரது நன்முயற்சியால் விருத்தியாவதாயிருத்தலையும், அவர் வறியார்க்கில்லை யென்னாமல், அவர் விரும்பியதொன்றைத் தவறாது கொடுத்தற்குத் தகுதியுடையவராயிருத்தலையும், நாம் நன்கு சிந்தித்து நோக்குவோமாயின், தமக்குச்சீரைத் தேட விரும்புகின்றவர் அத்தியாவசியமாக ஏரைத்தேடல் வேண்டுமென்பது நமக்குத் தெளிவாக விளங்குவதாம். உழுத நிலத்தின் புழுதி பொருபலம் காற்பலமாக அதனைக் காயவிட்டு, எருவிடல், களைபிடுங்கல், காவல்புரிந்து நீர்பாய்ச்சல், மாடுமுதலியன மேயாவாறு காத்தல் என்பவற்றை மேற்கொண்டு பயிர்செய்பவன் விதிவசத்தாலன்றி, மற்றெவ்வசத்தாலும் வறுமை யடைவதில்லையாம். நாம் எத்தொழிலைச் செய்வதாக விருப்பினும் உழவுத் தொழிலை யொரு சிறிதாக மேற்கொண்டொழுகல் வேண்டும். உழுது பயிரிடுந்தொழில் நம்வசமாக விருக்குமாயின், உணவின்

பொருட்டுப் பிறரை யெதிர்பார்ப்பது ஒருவகையாலுமில்லையாம். நமக்கு மிக முக்கியமாக வேண்டுவதாயிருப்பது உணவேயாம்; அதுபயிரிடுந் தொழிலாலுண்டாவதாக விருத்தலின், நாம் அது செய்தற்குரிய நிலத்தை அத்தியாவசியமாகத்தேடி, அதில் ஏராளமாகப் பயிரிட்டோ, இடுவித்தோ வருதல் வேண்டும்; வருவோமாயின், உணவின் பொருட்டு வருத்த முறுவதில்லாது வாணிகத்தைச் செய்வதற்குப், பிறரை நம்மிடத்து உத்தியோகமாக வைத்துக் கொள்ளுவதற்கு முரிமையுடையவராய், மேன்மையுடையவராக வாழ்வோம். பயிர்த்தொழில் நன்றாக நடைபெறும் நாட்டில், கைத்தொழிலும் வியாபாரமும் செவ்வையாக நடைபெறுவனவா மென்பதை நாம் நன்றாக ஞாபகத்தில் வைத்து, பயிர்த்தொழிலை விருத்திசெய்து வருவோமாயின், நமக்கு வறுமைப்பிணி வருவது பெரும்பான்மையு மில்லையாம். உணவின்மைக்கு மேம்பட்ட வறுமைப்பிணி பிறிதொன் றில்லையாம்; உணவு கிடைத்தற்குரிய பயிர்த்தொழிலை விருத்தி செய்து வருவோமாயின், நாம் வறுமைப்பிணிக்கிலக்காதல் கூடுமோ? கூடாதென்பது ஒரு தலையாம்.

எறும்பு தனக்கு வேண்டிய தீனவையும், தூக்கணாம்புள் முதலிய பறவைகள் தாம் வசித்தற்குரிய கூட்டையும் தேடுவது போல நாமுண்ணுதற்குரிய உணவையும், வசிப்பதற்குரிய வீட்டையும் அத்தியாவசியமாகத் தேடுதல் வேண்டும். உணவு கிடைத்தற்குரிய பயிர்த்தொழிலைத் தவறாது செய்ய முயலுவோமாயின், வீடுமுதலியவற்றை யெல்லாம் மிக எளிதாகப்பெறுதற்குரியவராவோம். புறப்பொருள் வெண்பாமாலை "வயலுள், உழுவானுலகுக் குயிர்" என்று கூறுவதை நன்குணர்ந்து, உணவைத் தேடுபவரினைப் பெருமவிராரென்பது நிச்சயமாம்.

"வார்சான்ற கூந்தல் வரம்புயர வைகலும், நீர்சான் றுயரவே செல்லுயரும்-சீர்சான்ற, தவாக் குடியுயரத் தாக்கருஞ்சீர்க் கோவுயரும், ஓவா தாரைக்கு முலகு" என்று சிறுபஞ்ச மூலங் கூறுவதும், "நெற்பயிர் செய்வோர்க் கில்லை தாழ்வுகள்" என்று நீதிசாரங் கூறுவதும், இங்கு நன்குணர்தற்பாலனவாம்.

ஆசாரமஞ்சரி.

(முன் தொடர்ச்சி.)

நான் முறையாளர் அனைவு இஃதெனக்கூறல்.

(61) அறிவுடையோர் நற்குடிப் பிறப்பினால் மேன்மையடைந்து வரும் பிராமணர்களை மேன்மையுடைய தமது குரவரை வணங்குவது போல வணங்கி வருதல் வேண்டும்; இவ்வாறு வருதல் வேண்டுமென்பது நால்வகைக் கிரமமாக அறிந்தவரது நிச்சயமாம். குரவர்-ஆசிரியர்.

குரவரிடத்துச் செய்தற்குரிய முக்கிய ஆசாரங்களிவை யெனல்.

(62) மக்கள் தமது குரவரது காலில் விழுந்து வணங்கல் வேண்டும்; அவர் நல்லது எழுந்திரு வென்று கூறிய சமயத்தில் எழுந்து நிற்றல்வேண்டும்; அவரைக் கண்டவிடத்து எழுந்திருத்தல்வேண்டும். இவை குரவரிடத்துச் செய்தற்குரிய ஆசாரமாமென்று நல்லோர் கூறுவர். குரவரிடத்துச் செய்யவேண்டிய ஆசாரங்களுள் இம்மூன்றுமே சாரமாக விருப்பனவாம்.

சிறப்புடை யறிந்தார் கண்ட நெறி யிவையெனல்.

(63) மக்கள் அருந்தவரைப் பாதுகாத்தல் வேண்டும்; பழி பாவங்களுக்குக் காரணமாகிய செயல்களைச் செய்ய நாணமடைதல் வேண்டும்; தாம் கற்ற வித்தைகளைக் குரவர் முன் மறந்தாயினும் சொல்லாதிருத்தல் வேண்டும். இம்மூன்றும் சிறப்புடை அறிந்தவர் கண்ட நெறியாம். நாணமடைதல்-அஞ்சுதல்.

இன்னாரின்னார்க்கு வழிவிட்டு விலகிச்செல்லுதல் வேண்டுமெனல்.

(64) பார்ப்பாரும், தவசிகளும், (தலையிலோ முதுகிலோ) சுமையுடையாரும், பிணியுடையாரும், மூத்தாரும், பிள்ளைகளும், பசுவும், பெண்களுமென்னு மிவ்வெண்மர்க்கும் மிகவும் வழிவிட்டுப்போதல் வேண்டும்; அவ்வாறு வழிவிட்டுப் போகின்றவர் ஒவ்வொரு பிறப்பினிடத்தும் பிறர் அறிந்த வணக்க மேன்மையராக வாழ்வர். பிணி-நோய்; மூத்தார்-கிழவர்.

இன்னாரின்னார் தமியராயிருக்கும்போது அவருடன் வசித்தல் கூடாதெனல்.

(65) சான்றோர் தமது அன்னையுடனாவது புத்திரியுடனாவது சகோதரியுடனாவது அவருடன் தாம் தமியராக வசியார்; (ஏனெனில்) ஐம்புலனும் தடுத்தற்கரியனவாக விருத்தலா லென்க.

சான்றோர்-நற்குணங்களால் நிறைந்தவர். ஐம்புலன்-மெய், வாய், கண், மூக்கு, செவியென்னு மிந்திரியங்கள்.

இந்திரியங்களைத் தடுத்தலரிதாகலின், தமது தாய், மகள், சகோதரி யென்பவருள் எவருடனாவது ஆடவர் தனித்து வசித்தல் கூடாதென்பதாம்.

கடைபோக வாழ்து மென்பார் அரசரிடத்திவ்வா றொழுகுவரெனல்.

(66) முன்போலப் பின்னும் கடை போக நாம் வாழ்வோ மென்று கருதுகின்றவர் அரசரது கடை வாயிலில் காவலர் தம்மை யுள்ளே போதல் கூடாதென்று தடுத்தால், அதைப்பற்றிக் கோபங் கொள்ளார்; அரசருடன் மிக்கவுரிமையை அவர் பொறுத்துக் கொள்ளாவாறு பாராட்டார்; அரசர் தமக்கொன்று கொடுக்கும்போதும் சன்மானஞ் செய்யும்போதும், இவை யெமக்குப் போதாவென்று அமைதித்தல் செய்யார்; அரசர் போலத் தம்மை யலங்கரித்துக் கொள்ளார்; அரசன் வீற்றிருக்குஞ் சபையில் ஊடறுத்துப் போகார்; மற்றொருவனைச் சேர்ந்திரார்.

கடைபோக-முடிவு பெற; உரிமை-சுதந்தரம்; ஊடறுத்துப் போதல்—சபை நடுவே ஆங்கிருப்பவரை விலக்கிக் கொண்டு செல்லுதல்.

அரசரிடத்துச் சொல்லத்தகாதன இவை யெனல்.

(67) (கடைபோக வாழ்து மென்பார்) தாம் சொல்லுவனவாகத் தமக்குப் பொருந்திய கட்டுரைகளையும், தம்மினும் பெரியராக அரசரால் சிறப்புச் செய்யப்பட்டார் சொல்லிய சொற்களையும், அவையின்றியே பிறர்க்குறுதியாயுள்ள கட்டுரைகளையும் அரசரிடத்துக் கூறார்; கூறுவாராயின், அவை அவர் தமக்கு வடுவுண்டாக்குங் குற்றமாய் விடும். கட்டுரை - நன்மை பயக்குஞ் சொல்; வடு-தீமை.

அறிவுடையார் இன்னின்னவற்றைச் செய்யாரெனல்.

(68) அறிவுடையார் தம்மினும் பெரியவராயுள்ளவர் விரும்புவனவற்றைத் தாம் விரும்பார்; தம் வீட்டினுள்ளே கீழ் மக்களை யழைத்துக்கொண்டு செல்லார்; அறிவினை அறியாத பிள்ளையாயிருந்தாலும், தம்மோடு கலத்தவில்லா விடத்து, அவரை உயர்வாகப் பேசுவதல்லாமல் இழிவாகப் பேசார்.

அறிவினை யறியாத பிள்ளை-விருத்தெரியாத பிள்ளை.

அறிவுடையார் அரசனிடத் தொழுகு முறையினைக் கூறல்.

(69) அறிவுடையார் அரசன் செய்கின்ற காரியங்களை வெறுத்துப் பேசார்; அவனுடன் பகைத்துக் கொள்ளார்; விலகி நிற்பதன்றி அவன் முகத்தின் எதிரே நில்லார்; அரசன் தனிமையாக விருக்கும்போது சென்று அவனிடத்துத் தமக்காக வேண்டிய காரியங்களைச் சொல்லார்; இனியவாய பொருள்களை யாங்கள் அநுபவித்து வருகின்றோமென் றவனிடத்துக் கூறார்; அவன் காக்கை வெண்ணிற முடையதாயிருக்குமென்று கூறினானாயினும், அவன்மீதுள்ள அன்பை யொழித்து அவனைப் பழித்துப் பேசார்.

(70) அறிவுடையார் அரசர் முன்பு எச்சி லுமிழ்தலும், உயர்ந்த பீடத்தேறியிருத்தலும், பாக்குத் தின்னுதலும், தகுதியில்லாத வார்த்தைகளைச் சொல்லுதலும், உறங்கி விழுதலுமாகிய இவ்வைந்தனையுஞ் செய்யார்.

பாக்குத் தின்னல்-தாம்பூலம் போட்டுக்கொள்ளுதல்.

அரிசியின் குறைகுணங்கள்.

பூனா பயிர்த்தொழில் வித்தியாசாலையில் மிஸ்டர் ஜதிந்திரநாத்ஸென் என்பவர் அரிசியைப்பற்றிச் செய்த சில விசாரணைகள் ஜனங்களுக்கு மிகவும் நன்மையைக் கொடுக்கக்கூடிய விஷயமாயிருக்கின்றன. அரிசியிலிருந்து தவிட்டை வேறுபடுத்துவதனால் அரிசியின் குணங்கள் குறைந்து விடுகின்றன. அரிசியிலிருந்து தவிட்டைப் பிரித்துவிட்டு அரிசியைச் சுத்த வெண்மையாகுமாறு தீட்டி விடுகிறதினால் அரிசியிலிருக்கிற எண்ணெய் வஸ்து பாதி குறைந்து விடுகிறது. அல்புமினாய்டஸ் என்ற வஸ்து

கொஞ்சம் மங்கிவிடுகிறது. அரிசியிலுள்ள ஒரு நார்சத்து கால் பங்கும், உலோக சத்துக்கள் பாதியும் குறைந்து விடுகின்றன. தீட்டியும் கழுவியும்விட்ட பிற்பாடு, அரிசியிலிருந்து நீக்கப்பட்ட வஸ்துக்கள் அரிசியைப்பார்க்கிலும் புஷ்டியுடையனவா யிருக்கின்றன. வைத்திய சாஸ்திரப் பிரகாரம் இவ்வாறு செய்வது மிகவும் தவறும். தவிட்டிலும் வெண்மையான அரிசியைச் சேர்த்துச் சாப்பிட்டால் பெரிபெரி என்ற ஒருநோய் வருகிறதில்லையென்று 1897-ம் வருஷத்தில் ஐய்க்மன் என்ற ஒருவர் கண்டுபிடித்தார். பாஸ்பரிக் ஆஸிட் என்ற வஸ்து அரிசியில் குறையக் குறைய பெரிபெரி என்ற வியாதி அதிகரிக்கிறதென்று டாக்டர்கள் அபிப்பிராயப் படுகின்றார்கள். நூற்றுக்கு 0·47 பாஸ்பரிக் ஆஸிட்டையுடைய அரிசி கோழிகளுக்குச் சுகமான ஆகாரமாயிருக்க, அதேவஸ்து நூற்றுக்கு 0·28 உடைய அரிசி மனிதர்களுக்கு நோயையுண்டாக்கக்கூடிய ஆகாரமாயிருக்கின்றது. தவிட்டைப்போக்காத அரிசி தேகத்துக்குச் சுகத்தைக் கொடுக்கும்; தவிடு நீங்கின அரிசி சாப்பிடுவதற்கு யோக்கிய மில்லையென்று மிஸ்டர் சென் சொல்லுகிறார். அவ்வித அரிசியை மாத்திரம் நாம் சாப்பிட்டு வருவோமாயின் எத்தனையோ சுகயீனத்தைக் கொடுக்கும். ஆனால் நாம் மாம்ஸம், மரக்கறி முதலியவைகளை அன்னத்துடன் சேர்த்து அருந்துவதினால் அநேக நோய்கள் நம்மைப் பிடிக்காமலிருக்கின்றன. ஆயினும் நாம் எப்பொழுதும் அவ்விதம் செய்வது உசிதமல்ல. அரிசியைப் பால்போல் கழுவி, அதிலுண்டான தவிட்டைப் போக்கி, குருணை அல்லது சிதறிப்போன அரிசியைநீக்கி, அரிசியைச்சமைத்து, சாதத்திலிருந்து கஞ்சியை வியர்த்தஞ்செய்து அச்சாதத்தைச்சாப்பிடுவது உசிதமல்லவென்று கெல்னர் என்பவர் வற்புறுத்துகிறார். நாம் நாவுக்கு ருசியைக் கவனிக்கிறோமேயொழிய அரிசியிலுண்டான நல்லவஸ்துக்கள் போய் விடுகின்றனவேயென்று யோசிக்கிறதில்லை. சில இடங்களில் அரிசியை வெண்மையாக்கச் சுண்ணாம்பை உபயோகிக்கிறார்கள். அது மிகவும் தீமையைக் கொடுக்கின்றது. சில இடங்களில் அரிசியைக் கழுவின தண்ணீரையும் கஞ்சியையும் மாட்டுத் தொட்டியில் விட்டுக் கால்நடைகளுக்குக் கொடுக்கின்றார்கள். ஆனால் அவ்விதம் எல்லோரும் செய்கிறதில்லை. சுண்ணாம்பினால் வெண்மையாக்கின அரிசியை உபயோகப் படுத்தாமல், அரிசியிலுள்ள தவிட்டின் சத்தை நீக்காமல் கஞ்சியுடன் சாதத்தைப் பொங்கிச் சாப்பிடுவதே வைத்திய சாஸ்திரத்திற்குப் பொருத்தமாம்.

"சுதேச பரிபாலினி"

பப்பாயாப் பழம்.

பப்பையாப்பழம் ஐரோப்பியர்களாலும் இந்தியர்களாலும் சாப்பிடப்பட்ட ஒரு ருசியானபழம். அம்மரம் ஆதிமுதல் இந்தியாவிலுள்ள மரங்களிலொன்றோ அன்றோ என்று நிர்மானமாய்த் தெரியவில்லை. ஆனால் சமஸ்கிருத பாஷையில் அதற்குப் பெயரில்லாதபடியால் அது பிற்காலங்களில் இந்தியாவிற்குக் கொண்டு வரப்பட்டதென்று நினைக்கவேண்டும்; ஆயினும்இருநூறு வருஷத்துக்கு முன்னமே 1626-ம் வருஷத்தில் அம்மரத்தின் விதைகள் இந்தியாவிலிருந்து இட்டலி தேசத்திலிருக்கிற நேப்பிள்ஸ் நகரத்திற்கு அனுப்பப்பட்டதென்று தெரிகிறது. ஒருவேளை அமெரிக்காவைக் கொலம்பஸ் கண்டு பிடித்தபின்னர், சப்பாத்திச் செடியைப்போல இதையும் அமெரிக்காவிலிருந்து போர்ட்டுகீஸ் ஜாதியார் இந்தியாவுக்கு முதல் முதல் வந்தபொழுது தங்களுடன் பப்பையா மரத்தின் விதையையுங் கொண்டு வந்திருக்கலாம். ஏனெனில் பப்பையா என்ற வார்த்தை போர்ட்டுகீஸ் பாஷையிலிருந்து வந்ததென்று தெரிகிறது. இம்மரத்தை நாம் சிரத்தையெடுத்துப் பயிரிடுகிறதில்லை; கொல்லைகளிலும் தோட்டங்களிலும் சில மரங்களைப் பார்க்கிறோம். அவற்றிலிருந்து விழும் விதைகளினால் பக்கங்களில் சிறுமரங்கள் முளைக்கின்றன. பழுத்தபழம் ருசியென்று நாம் எல்லோரும் அங்கீகரிக்கிறோம். காயைக் கறிசமைக்கிறோம். ஊறுகாய் போடுகிறோம். காயினுடைய ரசம் ஜீரண சக்தியைக் கொடுக்கிறது. அதைப் பப்பெயின் என்ற ஒரு மருந்தாக ஐரோப்பாவில் மாற்றப்படுகிறது. பழமாயினும் காயாயினும் மருந்துக்கு அடுத்ததாயிருக்கிறது. காயின் ரசத்தை முகத்திலுள்ள பருக்களை நீக்க ஸ்திரீகள் உபயோகப்படுத்துகிறார்கள். இவ்விதம் பற்பலவிதமான உபயோகங்களுக்கு உபயோகப்படுத்தக் கூடிய இம்மரத்தை நாம் ஜாக்கிரதையாய்ப் பயிர் செய்கிறதில்லை. இதென்ன அறியாமை! இம்மரங்களைக் கஷ்டமில்லாமல் வளர்க்கலாம். அதிக பக்குவம் வேண்டியதில்லை. இம்மரத்தை நம்மவர்கள் ஏராளமாய்ப் பயிர் செய்வார்களானால் தக்க லாபமுண்டென்பதற்குச் சந்தேகமில்லை.

"சுதேச பரிபாலினி"

காமிய பூஜை.

பிரம்மதேஜஸ்ஸை விரும்புகிறவன் பிரம தேவனைப் பூஜிக்க வேண்டும். இந்திரியங்களின் புஷ்டியை விரும்புகிறவன் இந்திரனைப் பூஜிக்க வேண்டும். பிரஜைகளை விரும்புகிறவன் பிரஜாபதியையும், ஸ்ரீயை விரும்புகிறவன் பராசக்தியையும், தேஜஸ்ஸை அபேக்ஷிக்கிறவன் அக்னியையும், திரவியங்களில் அன்புள்ளவன் வசுக்களையும், வீரியத்தில் விருப்பமுள்ளவன் ருத்திரனையும், அன்னம் முதலியவற்றில் அபிப்பிராயம் உள்ளவன் அதிதி தேவியையும், சுவர்க்கலோகத்தை அபேக்ஷிக்கிறவன் தேவர்களையும், இராஜ்யத்தை இச்சித்தவன் விச்வே தேவர்களையும், பிராணிகளை வசப்படுத்தப் பற்றுதலுடையவன் சாத்தியர்களையும், ஆயுளை அபேக்ஷித்தவன் அசுவினி தேவர்களையும், புஷ்டியை விரும்பியவன் இளையையும், பிரதிஷ்டையை அபேக்ஷிக்கிறவன் உலகத்திற்குத் தாய் தந்தையாகிய ஆகாய பூமிகளையும், இலக்ஷணத்தை உத்தேசிக்கிறவன் கந்தர்வர்களையும், ஸ்திரீகளை அநுபவிக்க ஆசையுள்ளவன் ஊர்வசி என்னும் அப்ஸரஸ் ஸ்திரீயையும், எல்லோருக்கு மேற்பட்ட தன்மையை எக்காலத்திலும் விரும்புகிறவன் பரமேஷ்டியையும், பெருமையை உத்தேசித்தவன் யாகத்தையும், பொக்கிஷத்தை விரும்புகிறவன் வருணனையும், வித்தையை விரும்புகிறவன் பரமசிவனையும், தாம்பத்தியம் நிலைபெற விரும்புகின்றவன் ஸதி என்ற பெயர்கொண்ட உமையையும், தருமத்தை அபேக்ஷித்தவன் நாராயணனையும், புத்திர ஸந்தானத்தை விரும்பியவன் பிதிர்க்களையும், இரக்ஷையை இச்சித்தவன் இராக்ஷஸர்களையும், ஓஜஸ்ஸை விரும்பியவன் தேவகணங்களையும், இராஜ்யத்தை இச்சித்தவன் மக்களையும், அபிசாரத்தை அபேக்ஷித்தவன் நிருதியையும், காமத்தை விரும்பியவன் ஸோம தேவதையையும், விருப்பமில்லாதவன் பரம புருஷனையும், ஆசை கொண்டோ ஆசையில்லாமலோ மோக்ஷத்தை விரும்புகிறவன் தீவிரமான பக்தியோகத்தால் இரகுநந்தனராகிய ஸ்ரீராமச் சந்திரப் பிரபுவையும் பூஜை செய்யவேண்டும்.

ஆநந்த ராமாயணம்.

நீதிசாரம்.

வஞ்சனை.

உற்றாரோடு வஞ்சகமாகப் பேசுகின்றவன் விசுவாஸகாதகனென்பதற்கு அநுமானம் வேண்டுவதில்லை.

பிறர்கற்ற கல்வியினிடத்துக் காரணமின்றிக் குற்றங்கூறுதலைத் தனக்கு மேன்மையாக நினைக்கின்ற வஞ்சகன் கல்விமானாகவிருந்தாலும் புத்திஹீனனாவான்.

தீமையை நினைப்பதிலுஞ் சொல்வதிலும் ஸந்தோஷத்தையடைகின்ற வஞ்சகன் இம்மையில் நிந்தனையும் மறுமையில் நரகத்தையும் பெறுவான்.

ஒருவனுடைய சொத்தை வஞ்சகத்தால் அபஹரித்துக்கொண்டவன் த்ரவியஸஹாயத்தைக்கொண்டு இம்மையிலரசனுக்குத் தப்பித்துக் கொண்டாலும் மறுமையில் யமனுக்குத் தப்பித்துக் கொள்ளமாட்டான்.

சொல்லத்தகாத பொருளை வஞ்சனையாகக் கெடுதிசெய்ய விரும்பி வெளியிடுகிறவன் திருடாத்திருடனெனவும் பொய்யனெனவும் பெயர் பெறுவான்.

ஒரு காரியத்தையும் நிறைவேற்றிக்கொடுக்க ஸாமர்த்தியமில்லாதவன் ஆசை வார்த்தையால் பிறரைமயக்கி அவர்களுடைய பொருளை அபஹரித்துக்கொண்டு பின்பவர்களிடத்தில் வீணாகவொரு குற்றத்தைச் சுமத்திப் பழிகூறுகின்ற வஞ்சகன் மீளாத துன்பத்தையநுபவிப்பான்.

பிறர்க்குக் கெடுதிசெய்ய முயல்கின்றவனுக் குதவிசெய்யவுடன்படுகின்ற த்ரவ்யஸ்தன் தனது பாக்ய முற்றும் வீணில் போக்கடித்துக் கொள்வதுமன்றி வஞ்சகனுக்கு ஸஹாயஞ்செய்த மஹா வஞ்சகனென்கிற பழிக்காளாவான்.

நடுவுநிலைமையின்றிக் கெடுதிசெய்கின்றவனும், ஒருவன் பக்ஷமாக வழக்கோரஞ் சொல்லுகின்றவனும் ஆகிய இவர்களுடைய குடும்பம் நனைவினாலே உப்புப்போர் கெடுதியடைவது போல நசித்துப்போகும்.

ஒருமையாகக் கூடியிருக்கும் ஸ்நேஹத்தைப் பிரிவுபடச் செய்கிற வஞ்சகன் உலகத்தில் துஷ்டனென இகழப்படுவதுமல்லாமற் குண்டுணி யெனவும் பெயர்பெறுவான்.

ஒருவனோடு ஒருமையாக ஸ்நேகஞ்செய்து பின்பு அவனுடைய பொருளை வஞ்சகஞ்செய்து அபஹரிக்கின்றவன் அருநா றெக்கள்ளனாவான்.

உலகத்தோராற் பழிக்கப்படுங் காரியங்களை விடுவதற்கும் புகழப்படுங் காரியங்களைச் செய்வதற்கும் தகுதியான வலிமை தெளிந்தோர்க்கே யல்லாது மற்றவர்க்கில்லை; ஆதலாலப்படிக்கல்லாத வஞ்சகர்களை நம்பலாகாது; நம்பினால் தீங்குவிளையும்.

ஆதலால் வஞ்சனையாகிய தீங்குக் கிடங்கொடாது நீதியோடு வாழ்வதே ஸுகஜீவனமென்று நம்பவேண்டும்.

கொலை.

வதை செய்வதையே விளையாட்டாக வுடையவன் மறுமையில் நரகயாதனையில் வருந்துவானென்னப் பெரியோருரைத்திருப்பது மன்றி யிம்மையிலு மிரக்கமில்லாத கொலைப்பாதகனென்று பெயர் பெறுவான்.

கொல்லுந்தொழிலில் இச்சை வைத்திருக்கின்ற கொடிய பாவிகளைக் கண்டால் எல்லாவுயிரும் அஞ்சி நடுநடுங்குமென்பது முற்கூறப்பட்ட வாக்கியமேயாம்.

அரசன் ஸந்தோஷிக்கும்படி யுத்தகளத்தில் சத்ருக்களைக் கொன்று வெற்றிபெறுதலைக் கொலை செய்வதென்றெண்ணவொண்ணாது; ஏனெனில், சமர்க்களத்தில் அபஜயப்பட்டிறக்கின்றவர்களுக்கு வீரஸ்வர்க்கமுண்டென்று பலக்ரந்தங்களிலுஞ் சொல்லியிருப்பதினாலே தான்.

ஒரு ப்ராணி வதைப்படும்போது பார்க்கின்ற மற்றொருவன் அதை மறுக்காமல் சும்மாவிருப்பானாகில் கொலைப்பாதகனினுங் கொடியவனென்று இகழப்படுவான்.

குற்றமற்ற வுயிர்களை யிரக்கமில்லாமற் கொல்லுகின்ற பாவியானவன் காட்டில் ஸஞ்சரிக்குந் துஷ்டமிருகங்களுக்கு மதிக கொடியவனாக வெண்ணப்படுவான்.

அரசனானவன் துஷ்டரைக் கண்டுகொண்டு அவரவர்களுக்குத் தகுதியான தண்டனை செய்வதில் நேரிடுங் கொலையானது கொலைப் பாதகமென நினைக்கப்படாது; ஏனெனில், துஷ்டநிக்ரஹமும் சிஷ்டபரிபாலனமும் அரசர்களுக்குரிய தர்மங்களாகையினாலே தான்.

மாம்ஸபக்ஷணஞ்செய்கிற வ்யாஜத்தினாலாயினும் ஜீவவதை செய்யத் துணியாதவர்களை யாவருங் கைகூப்பித் தொழவேண்டும்.

பசுபந்தனமுதலிய யாகஞ்செய்வதிலும் தேவதாப்ரார்த்தனை செய்வதிலும் ஜீவவதை செய்வது கொலைப்பாதகமல்லவென்று ச்ருதிகளிற் சொல்லப்பட்டிருந்தாலும் அவைகளை இக்காலத்தில் வேதியரில் பலரும் நிஷேதித்திருக்கிறபடியால் அவர்கள் கொலைப்பாதகத்துக் கஞ்சின புண்யபுருஷரெனப் படுவார்கள்.

ஜீவவதைக் கிடங்கொடாமலிருப்பதே பரமதர்மமென வடநூலோரு முரைத்திருக்கிறார்கள்.

ஆதலால் பஞ்சமஹாபாதகங்களி லொன்றாகிய கொலைப்பாதகத்தைக் கனவிலுங் கைக்கொள்ளலாகாது.

அருள்.

அருளென்பது தயை; அதுவே இரக்கமென்றும் க்ருபையென்றும் அன்பென்றும் சொல்லப்படும்; இஃதில்லாமலுலகமில்லை; பகவான் தமக்குள்ள அருளினாலேயே உலகத்தையும் அதிலுள்ள சராசரங்களையும் படைத்துப் பாதுகாத்து ரக்ஷிக்கின்றார்; அரசர்களும் ப்ரஜைகளைக் காப்பாற்றுகிறார்கள்; மாதாபிதாக்களும் தம் மக்களை ரக்ஷித்து வளர்க்கிறார்கள். இத்தன்மை பக்ஷிம்ருகங்கள் முதலான ஸகல ஜந்துக்களுக்கு முண்டு. ஆதலால் தயையில்லாதவன் நமனிலுங் கொடியவனாவான்.

இரக்கமில்லாத கல் மனமுடையவர்கள் மேன்மக்களாயினுங் கீழ்மக்களாக நினைக்கப்படுவார்கள்.

தம்முயிர்போல எல்லாவுயிரையும் நினைக்கின்றவர் அருளுடையவரென்று சொல்லப்படுவார்.

அன்புள்ள பெரியோர்களாலே அன்புடையவனென்று சொல்லுமாறு நடந்துகொள்ளுவதே புத்திக்கழகாம்.

அருளும் தாரதம்ய விவேகமும் இல்லாத ஒரு திரவ்யவானை அடிப்பதைப் பார்க்கினும் அக்குணங்களையுடைய ஒரு வறியவனை யடித்தால் வீணாகாது.

விவேகமுள்ள சிறுவர்களைக்கண்ட பெரியோர்கள் அன்புடன் அவர்களை நெருங்கி வசனித்து ஆசீர்வதிப்பார்கள்; ஆதலால் பெரியோரை வணங்கி நடக்கவேண்டியது சிறுவர்க்கழகாம்.

தீயசொற்களா லிகழும் பகைவர்களிடத்தும் கோபிக்காமல் பொறுமையோடு சிந்தித்து இரங்குவது பெரியோர்களுக்குக் கடமையாம்; ஆதலால் அருளோடு பொறுமை கொண்டிருத்தல் மிகுந்த பெருமை பயக்கும்.

ஆதலால் மனிதனுக்கு அருளும் அன்பும் உண்டாயிருக்க வேண்டுவது அவசியமாம். இது வலியவர்க்கும் எளியவரிடத்தி லுண்டாயிருக்க வேண்டிய தன்மையென்றறிக. இஃதில்லாத புருஷனுக் குயிரிருந்தாலும் அவன் உயிர்ப்பிணமென்றே சொல்லப்படுவான்.

பசியினாலுடம்பு மெலிந்து உயிரை யிழக்கும்படி நேரிட்டாலும் பொறுமையையும் மனவுறுதியையுங் கைசோரவிடலாகாது.

ஆதலால் அருளென்னுங் குணத்தைத் தன்னுயிர்போற் காக்க வேண்டும்.

பக்தியோகம்.

2. ஈசுவரதத்துவம்.

கடவுள்யார்? "ஜந்மாத்யஸ்ய யத:" "எந்த வஸ்துவினிடத்திருந்து ஜகத்தின் சிருஷ்டி, ஸ்திதி, சம்மாரங்கள் உண்டாகின்றனவோ அவரே கடவுள்" "சுதந்தரன், நிர்மலன், நித்திய முக்தன், சர்வசக்தன், சர்வக்ஞன், தயாசிந்து, சர்வகுருக்களுக்குங் குரு"; இவை யாவற்றிற்கும் அப்பால் "ஸஈஸ்வர: அநிர்வசநீய ப்ரேமஸ்வரூப:" "கடவுள் வாக்கால் வசனிக்கப்படாத பிரேமை வடிவினரானவர்".

ஈண்டு கூறப்பட்டவையாயும் மூர்த்திமத்தாகிய ஒருகடவுளது விசேஷணங்களாம். அங்ஙனமாயின், கடவுளிருவருளரா? நேதி நேதியென்னும் வேதாந்தியின் சச்சிதானந்த சொரூபாகிய கடவுள் ஒருவர் வேறு, பக்தனது பிரேமை வடிவினராகிய

கடவுள் ஒருவர் வேறு, இங்ஙனம் இருவரா? ஒருகாலுமன்றாம். சச்சிதானந்த வடிவினரே பிரேமை வடிவினராக விருக்கின்றனர்; சோபாதிகனே நிருபாதிகனாக விருக்கின்றான். சாகாரனாகவும் (சகுணமாகவும்), பிரேம சொருபனாகவு மிருக்கும் பக்தனது கடவுள் நிராகாரமாகவும், நிர்க்குணமாகவு மிருக்கும் பிரஹ்மத்திற்கு வேறன்றென்று எப்போதும் உணர்தல் வேண்டும். யாவும் அத்விதீயமாகிய பிரஹ்மமே; ஆனால் அத்விதீயமாகவும், நிர்க்குணமாகவு மிருக்கும் பிரஹ்மத்தைப் பக்தியுடன் உபாசிப்பது மிகக்கடினமாம். அதனாற்றான் பக்தன் பிரஹ்மத்தின் மற்றோரவஸ்தையாகவும் சகல ஜகத்திற்கும் நியந்தாவாகவும் இருக்குங் கடவுளைத் தனக்கு உபாஸ்யவஸ்துவாக அங்கீகரிக்கின்றான். இதற்கொரு திருஷ்டாந்தங் கூறுவாம்:—பிரஹ்மத்தைக் களிமண் அல்லது அநேக பதார்த்தங்களை யுண்டாக்கத்தகுந்த ஒரு சாதனமாகக் கற்பிக்குக. மண்ணாகப் பார்க்கும்போது அவையாவும் ஒன்றே; ஆனால் நாமரூபங்கள் சேரும்போது யாவும் வேறுகளே தோற்றப்படுகின்றன. அவற்றை யுண்டுபண்ணுவதற்கு முன்னர் அவையாவும் அதன்கண் (மண்ணில்) லயித்திருந்தன; காரணதசையில் எல்லாம் அபின்னமாம்; ஆனால் காரியதசையில் நாமரூபங்களுடன் உண்டுபண்ணப்பட்டபோது அவையாவும் வேறுகளே யிருக்கின்றன. மண்ணாற் செய்யப்பட்ட யானையும், மண்ணாற்செய்யப்பட்ட எலியும், நாமரூபங்களைச் சார்ந்தவரையில் ஒருகாலும் ஒன்றாதல் கூடாவாம்; ஆனால் மண்ணாகப் பார்க்கும்போது யாவும் ஒன்றேயாம். ஏனெனின், ரூபங்களைக் கற்பித்தபோதுதான் அவை பின்னங்களாகப் பிரகாசித்தன; ரூபத்தைக் கற்பிக்காது மண் மாத்திரமா யிருந்தபோது யாவும் ஒன்றே, ஈஸ்வரனென்பது அவ்யக்தமாகவும், நிரூபிக்கமுடியாததாகவும், அக்ஷரமாகவும் இருக்கும் பாரமார்த்த தத்துவத்தின் (பிரஹ்மத்தின்) மிக உத்கிருஷ்டமாகியதொரு வியக்தியாம்; அதனினும் சூக்ஷுமமாகிய பிரஹ்மத்தின் சொரூபம் நமது அந்தக்கரணத்திற்கு விஷயமாவதின்றாம். நிர்க்குணப்பிரஹ்மத்தின் சகுணாவஸ்தைதான் ஈஸ்வரன். ஈஸ்வரனை நாம் உபாசித்தல் கூடும். ஆனால் அதனினும் சூக்ஷுமமாயிருப்பது நமது மனத்திற்கு விஷயமாவதின்றாம்.

முக்தனுக்கு சர்வஞ்ஞத் தன்மையும், சர்வசக்தியும் பூரணமாகவுமுண்டாமெனக் கூறி வியாசமகரிஷி பிரஹ்மசூத்திரம்

4 வது அத்தியாயம் 4 வது பாதத்தின்கண் இங்ஙனங் கூறுகின்றார்:—“ எந்த முக்தனுக்கும் பிரபஞ்சத்தின் சிருஷ்டி, ஸ்திதி, சம்மாரங்களுக்குரிய சக்தி கிடைப்பதின்றாம். ஏனெனின், அச்சக்தி ஈசுவரனுக்கு மாத்திரந்தானிருக்கின்றது.” இந்தச் சூத்திரத்தை வியாக்யானிப்பதில், அற்பனாகிய ஜீவான்மாவிற்கு, உத்கிருஷ்டரும், சுதந்தரரும், நித்திய முக்தருமாகிய கடவுளது சர்வசக்தித் தன்மை உண்டாவது ஒருகாலும் கூடாதென்பதைக் காண்பிப்பது துவைதிகட்கு மிகவினிதாம். துவைதமத ஸித்தாந்தியாகிய ஸ்ரீமத்வாச்சாரியர் வராக புராணத்தினின்று ஒரு சுலோகம் எடுத்துக்காட்டி, இதனை இவ்வாறு வியவகரிக்கின்றனர்.

இந்தச் சுலோகத்தை வியவகரிப்பதில் ஸ்ரீராமானுஜாச்சாரியார் இங்ஙனங் கூறுகின்றார்:—முக்தர்கட்கு சித்தித்திருக்கும் சக்திகளில் ஜகத்தின் சிருஷ்டி, ஸ்திதி, சம்மாரமாகின்ற ஈசுவர சக்தியிலடங்குமா? அல்லது சர்வசக்தராகிய ஈசுவரனது சாட்சாத் காரத்தினால் மாத்திரம் உண்டாமா? என்னும் ஐயத்தில் கீழ்க்காண்பிக்கும் பிரகாரம் ஒரு பூர்வபட்சம் உண்டாகின்றது. முக்தர்கட்கு ஜகத்தின் ஈசத்துவம் சித்திக்குமென்பது நியாயமாகவிருக்கின்றது. ஏனெனின் வேதம் இங்ஙனங் கூறுகின்றது “ அவன் சுத்தப்பிரஹ்மத்துடன் ஐக்கியத்தை யடைகின்றான்;” ஆனால் நித்திய திருப்தியும், பரமைக்யமும், பரமேசுவரனது பிரத்தியேக சக்தியாகிய ஜகத்தின் ஈசத்துவமுமின்றிச் சித்திப்பதின்றாம். அதனால் நித்திய திருப்தியும், பரமைக்கியமும் முக்தர்கட்குச் சித்திக்குமாயின் அவர்கட்கு ஜகத்தின் ஈசத்துவமும் சித்திக்குமென்று கொள்ளல் வேண்டும். இதற்கு நாம் (ராமானுஜாசாரியார்) சமாதானங் கூறுகின்றோம். முக்தர்கட்கு ஜகத்தின் ஈசத்தன்மையைத் தவிர ஏனைய சகல சக்திகளும் சித்திக்கின்றன. ஜகத்தையாளுதல், அதீனத்வம், அதன் கண்ணுள்ள சகல சராசர வஸ்துக்களின் அபீஷ்டங்களை நிறைவேற்றுதலும், அவற்றின் ஏனைய சகல க்ஷேமங்களை விசாரிப்பதுமாம்; ஆனால் முக்தர்கள் இவற்றினின்றும் விடுபட்டவராம். ஏனெனின் அவித்தையால் ஆரோபிக்கப்பட்ட சகல பிரார்த்திகளும், அவர்களிடத்திருந்து நீங்கியிருக்கின்றன. அவர்கள் பிரஹ்ம சாட்சாத்காரத்தை யெப்போதும் அநுபவித்து ஆனந்திக்கின்றனர். இது வேதவாக்யத்தால் ஸ்பஷ்டமாம். “ எவரி

டத்திருந்து இந்த ஜகத்துண்டாகின்றதோ, யார் ஜகத்தை ரக்ஷிக்கின்றனரோ, முடிவில் எவரிடத்து லயத்தையடைகின்றதோ, இம்மூன்றற்கும் அதிஷ்டானம் பிரஹ்மமாம்”. ஜகத்தைப் பரித்தலென்னும் சக்தி விசேஷம், முக்தர்களிடத்து இருப்பதாமாயின், இவ்வேத வாக்கியத்தினால் ஜகத்தின் ஈசத்தன்மையைக் காண்பிப்பதாகிய இந்த விவரணம் பிரஹ்மத்திற்குப் பொருத்தமாதல் கூடாது. அசாதாரணமாகிய ஒன்றிற்கு மாத்திரந்தான் பிரத்தியேக விவரணம் அவஸ்யமாம். ஆதலின் “ ஏகராகவும், மித்ரோமை வடிவினராகவும், அத்விதீயராகவுமிருக்கும் அவர் மாத்திரந்தான் ஆதியிலிருந்தனர். ஹே பிரிய புத்ர! நான் நானாவிதமாகிய சிருஷ்டியைச் செய்யவேண்டும் என்னும் இச்சை அவரிடத்துண்டாயது; அவரிடத்திருந்து முதலில் தேஜசு உண்டாயது; பிரஹ்ம மாத்திரந்தான் முதலிலிருந்தது; அது தானு கவேவிரிவை யடைந்தது; அதனிடத்திருந்து க்ஷத்திரமுண்டானது. வருணன், சோமன், ருத்ரன், பர்ஜன்யன், யமன், மிருத்யு, ஈசானன் முதலிய சகல தேவர்களும் க்ஷத்திரங்களாம்.” “ ஆத்மா மாத்திரம் ஆதியிலிருந்தது; அதனிடத்திருந்து ஜகத்துண்டாயது;” “ நாராயணர் மாத்திரம் ஆதியிலிருந்தனர்; பிரஹ்மாவோ, ஈசானனோ, சுவர்க்கமோ, பூமியோ நட்சத்திரங்களோ, ஜலமோ, அக்னியோ, சோமனோ, சூரியனோ, யாதொன்றும் இருந்ததன்றாம். அவர் விளையாட்டின் பொருட்டுத் தியானத்தினால் ஒரு புத்திரியையும், தசேந்திரியங்கள் முதலியவற்றையும் சிருஷ்டித்தனர்” என்ற சுருதிகளிலும், “பரமாத்மா ஜகத்திலிருக்கின்றதாயினும், அதற்கு வேறாம்” என்ப காதி சுருதிகளிலும் முக்தர்கட்கு ஜகத்தின் ஈசத்தன்மையைக் கற்பித்ததாகக் காணப்படவில்லை. அடுத்த சூத்திரத்தை வியாக்யானிக்கும் போதும் ராமானுஜர் இங்ஙனம் கூறுகின்றார். நான் வியாக்யானித்ததற்கு மாறான பொருளைக் காண்பிக்க சுருதி வாக்யங்களைத் தெளிவாயிருக்கின்றனவென்று நீங்கள் கூறுவீர்களாயின் அஃதங்ஙனமன்றாம். ஏனெனின் அத்தகைய சுருதி வாக்யங்கள் முக்தர்களின் மகான்மியத்தைக் குறிப்பிப்பனவாம்; அந்ய தேவர்களை யபேட்சித்து அவர்கள் மேன்மை யுடையோராம், எனக் கூறுதல் மாத்திரமேயாம்”. ராமானுஜாச்சாரியரின் சித்தாந்தம் இருவித அத்துவிதத்தைத்தான் சாதிக்கின்றது; ஆயினும்

அதன் கண்ணே நித்தியமாகிய வேதமும் காணப்படுகின்றது. ஆதலால் இச்சித்தாந்தமும் ஒருவித அத்வைதந்தானெனக் கூறலாம். இந்தச் சித்தாந்தப் பிரகாரம் ஜீவான்மாவும், ஈசுவரனும் வேறுமென்பது எளிதில் வெளியாகின்றது.

இனி இவ்விஷயத்தைப்பற்றி அத்வைத சித்தாந்திகளின் அபிப்பிராயம் யாதென்றுணர நாம் முயற்சி செய்வோம். அவைதிக மத சித்தாந்தங்களை அங்கீகரித்துக்கொண்டே அத்வைதி தனது மதத்தை ஸ்தாபிக்கின்றான். சம்சார பந்தத்தினின்று விடுபட்ட பின்னரும், தங்களுக்கு வேறாகவே இருக்க வேண்டுமென்னும் விருப்புடையவர்க்குச் சகுணப் பிரஹ்மத்தைச் சாக்ஷாத்கரித்து அனுபவிப்பதற்குத் தகுந்த சந்தர்ப்பங்களுள. பாகவத புராணத்தில் கூறப்பட்டிருக்கும் மகான்கள் இத்தகையராவர். "ஏ மகாராஜனே! சம்சார பந்தத்தினின்று முக்தர்களாய், ஆத்மா ராமர்களாய் சாக்ஷாத் ஜகதீஸ்வரனைப் பிரேமையின் பொருட்டு மாத்திரம் சிநேகிக்கின்றனர். இத்தகைய வசிஷ்டர்களை சாங்கிய மதப்பிரகாரம் இந்தக் கர்ப்பத்தில் லயத்தையடைந்து வேறு கர்ப்பத்தில் ஒவ்வொரு பிரஹ்மாண்டங்களுக்கு நாயகர்களாகின்றனர். ஆனால் இவர்களுள் ஒருவரும் ஒருகாலும் ஈசுவரனுக்குச் சமானமுடையவரன்றாம். சிருஷ்டி, ஸ்திதி, சம்மாரங்களைக் கடந்திருப்பதாயும், ஞாதா, ஞான, ஞேயங்களுக் கதீதமாயும், நான், நீ, அவன் என்னும் வியவகாரமில்லாததாயும், கர்த்தா, கர்மம், கிரியை என்னும் பேத மற்றதாயுமிருக்கும் நிலைமையில் எவன் எதையறிவான்? எத்தகையர் மனத்திற்கும், வாக்கிற்கும் கோசரமல்லாததாகிய நேதி, நேதியென்னும் சுருதிகள் கூறும் அவஸ்தையை அடைந்திருக்கின்றனர். ஆனலின்னிலைமை வேண்டாதவர்களுக்கும், இதனையடைய முடியாதவர்களுக்கும் அத்வைதமாகவும், அபின்னமாகவுமிருக்கும் பிரஹ்மத்தில் ஈசுவரன், மாயை, ஜீவன் என்னும் மூன்றும் எப்போதும் விளங்கிக்கொண்டிருப்பனவாம். பிரகாசதன் தன்னைத் தான் மறந்து சமாதியிலிருந்தபோது அவனுக்கு ஜகத்தோ, அதன் காரணமோ ஒன்றுந் தோற்றவில்லை. எல்லாம் ஏகாகாரமாயும், நாமரூபங்களற்றதாகவும், அனந்தமாகவுமிருந்தன. பின்னர் தான் பிரகலாதனென்னும் ஸ்மரணை அவனுக்குவந்தபோது சகல

பிரபஞ்சமும் அவன்முன் தோற்றியது. அதனோடு சகலகுணங்கட்கும் ஆதாரபூதராகிய ஜகதீசுவரரும் அவன்முன் தோற்றினார். அநுக்கிரகிக்கப் பட்டவர்களாகிய கோபிகளின் நிலைமையும் அவ்வாறேயாம். எதுவரையில் அவர் தம்மிடத்துத் தமென்னுந் தன்மையை விட்டிருந்தனரோ, அதுவரையில் அவர்கள் ஸ்ரீகிருஷ்ணர்களாகவே யிருந்தனர்; பின்னர் அவர்கள் கிருஷ்ணனைச் சேவியன் (சேவிக்கப்படுவோன்) என நினைத்தபோது அவர்கள் மீண்டும் கோபிகளாகவே யிருந்தனர். உடனே,

[illegible]

[illegible]

"பீதாம்பரதாரரும், வனமாலைகளால் அலங்கரிக்கப்பட்டவருமாகிய ஸ்ரீகிருஷ்ணபகவான் முககமலத்தில் மந்தகாசத்துடன் அவர்கட்குப் பிரத்தியக்ஷப்பட்டனர். (பகவான் சௌந்தர்யத்தினால் காமதேவனையும் வெல்லத்தக்க சுந்தரபுருஷன்).

இனிநாம் ஸ்ரீ சங்கராசாரியரின் சித்தாந்தத்தை நாடிச் செல்வோம். அவரிங்ஙனங் கூறுகின்றார்.—"சகுணப்பிரஹ்மத்தை உபாசித்துத் தான் வேறென்னும் புத்தியுடன் ஈசுவரனிடத்துச் சாயுஜ்யத்தை யடைபவரின் மாகாத்மியம் முடிவுடையதா? முடிவற்றதா? இவ்விடத்தில் ஒரு பூர்வபட்சம் பிறக்கின்றது. "அவர்களின் மாகாத்மியம் அநந்தமா (முடிவற்றதா) யிருத்தல் வேண்டும். ஏனெனின் அவர்களைப் பற்றிச் சுருதிகளிங்ஙனம் கூறுகின்றன. "அவர்கள் பரிபூரண அவஸ்தையை யடைகின்றனர்". "அவர்களைச் சகல தேவர்களும் வணங்குகின்றனர்". "அவர்கள் எல்லா உலகங்களினும், எல்லா அவஸ்தைகளினும், இருப்பதாயிருக்கின்றனர்." இதற்குச் சமாதானமாக வியாசமகரிஷி "ஜகத்தை ஆளுவதற்குரிய சக்தியைத் தவிர" என்று கூறியிருக்கின்றார். சிருஷ்டியைத் தவிர ஏனைய அணிமாதி சக்திகள் அவர்கட்குச் சித்திக்கின்றன என்பது கருத்தாம். ஜகத்தை யாளும் கர்த்ருத்தன்மை, நித்திய சித்தனாகிய ஈசுவரனிடத்திலிருக்கின்றது. ஏனெனின், சிருஷ்டி முதலிய காரியங்களைப் பற்றிப் பிரதிபாதிக்கும் வேதவாக்கியங்களெல்லாம் ஈசுவரனுக்கே ஜகத்தின் கர்த்ருத்துவம் கற்பித்திருக்கின்றன. முக்தர்களைப் பற்றி அவ்விஷயத்தில் யாதொன்றும் கூறியிருப்பதாகக்

காணப்படவில்லை. சிருஷ்டி முதலிய வியாபாரங்களைச் சகல தேவதைகளும் கைவிட்டுத்தே வ்யாபிக்கின்றனர். அன்றியும் பரிபூரணன் என்னும் ஒரு விசேஷணமும் சேர்ந்திருக்கின்றது. சகல சாட்சாத்காரத்திற்குரிய முதற்பிசகிலிருந்தும் சகலபரிணத்திலிருந்துதான் அணிமாதி சித்திவகைகள் சித்திக்கின்றன வென்று வேதம் கூறுகின்றது. அதனால் சித்தர்களாயிருப்பவர்க்கு உலகத்தைப் பாலனத்தில் எவ்வதிகாரமுமின்றாம். அதுவு தவிர அவர்களின் அந்தக்கரணங்கள் பின்னங்களா யிருத்தலின் அவர்களின் இஷ்டங்களும் பின்னங்களாகவேயிருத்தல் வேண்டும்; அங்ஙனமிருக்கால், ஒருவர் சிருஷ்டி வேண்டுமென்று விரும்பும்போது, மற்றொருவர் சம்ஹாரம் வேண்டுமென்று விரும்புவர். இவ்விடத்தில் பொருத்தமின்மை வாராமலிருக்க வேண்டுமாயின், எல்லாப் புத்திகளையும், ஒரு புத்தியின் கீழாக நினைத்தல் வேண்டும். அப்போது முக்தர்களின் புத்திகள் ஈசுவரனது மகத்தாகிய புத்திக்குக் கீழ்ப்பட்டனவும், அதனை அனுசரித்தனவுமாக விருக்கின்றன வென்பதுதான் இதனால் வெளிப்படுங் கருத்தாம். (வரும்)

நித்திய சுமங்கலி.

பரத கண்டத்தில் ஓர் பிரிவாகிய சோழநாட்டில் காவிரிநதி சூழ்ந்துள்ள பூலோக வைகுண்டமென்னும் அரங்கப்பதியில் பள்ளிகொண்டிருக்கும் ஸ்ரீ அரங்கநாதப் பெருமானின் பணிப் பெண்களுள் யான் ஒருத்தி. என்பெயர் நித்திய சுமங்கலி. என்னுடன் பிறந்தவர்கள் சரஸ்வதி, இலட்சுமி, பத்மாசனி, பங்கஜம், சாரதா, கங்கை என்னும் ஆறுபேர்கள். பரம்பரையாய் எங்கள் குடும்பத்தில் பிறந்த பெண்களைத் தேவாலயங்களுக்கென்றே பொட்டுக் கட்டித் தொண்டுசெய்ய விடுகின்றனர். காஞ்சி வரத ராஜன், தில்லை கோவிந்தராஜன், குடந்தை சாரங்கராஜன், நாகை சௌந்தரராஜன், மதுரைக் கள்ளழகர், சென்னை பார்த்தசாரதி ஆகிய மூர்த்திகளுக்கு முறையே என் சகோதரிகள் தாசிகளாக அமர்ந்து காலங்கழித்து வருகின்றார்கள். நாள்தோறும் சூரியன் உதயமாவதற்கு முன்னமே ஸ்நானாதி நியம நிஷ்டைகளை முடித்துக்கொண்டு ஆலயம் சென்று திருப்பள்ளியெழுச்சி என்னும் பிரபந்தத்தைப் பகவான் முன்னிலையில் நின்று பாடுவோம். பிறகு

நந்தவனம் நாடிச்சென்று மல்லிகை, முல்லை, ரோஜா, பாரிசாதம் சண்பகம் முதலிய மலர்களைக் கொணர்ந்து மாலைகட்டிக் கொடுப்போம். சந்நிதானத்தில் பஞ்சவர்ணப் பொடிகளால் நானாவித மாய்க் கோலமிடுவோம். தூபதீபக் கால்களை விளக்கிக் கொடுப்போம். சந்நிதானத்தில் உஷற்காலம், சாயங்காலம், இரண்டாங் காலம், அர்த்தஜாமம் முதலிய ஆராதனைக் காலங்களில் சின்ன மேளம் என்னும் பக்க வாத்தியங்களுடன் பரதநாட்டியம்செய்து பக்தி விநயத்துடனே மெய்மறந்து பற்பல பாடல்களையும் பாடுவோம். பூர்வ புண்ணியவசத்தினால் தேவாலயத்தில் நாங்கள் இவ்விதத் திருத்தொண்டினைச் செய்யப் பாக்கியம் பெற்றமையால் எங்களுக்குத் தேவ அடியாள் அல்லது தேவதாசி என்னுங் காரணப்பெயர் வழங்கலாயிற்று. எங்கள் மூதாதைகள் பரம்பரையாய் ஒவ்வொரு தலைமுறையிலும் தங்கள் குடும்பம் விருத்தியாகும்பொருட்டு, இரண்டொரு பெண்களைத் தகுந்த வரனுக்கு விதிப்படி கலியாணம் செய்துகொடுத்து குடும்ப ஸ்திரீகளாக வைப்பார்கள். மற்றப் பெண்கள் தேவதாசியாகவிருந்தே காலங் கழிப்பார்கள். அப்பெண்கள் அக்காலத்தில் மனவாக்குக் காயம் முதலியவற்றால் எம்பெருமானைத் துதித்தும் பற்பல தொண்டுகள் செய்துவந்தமையால் உலகத்தார் அவர்களைத் தெய்வப்பெண்களென்ன நன்குமதித்து வணங்கியும் வந்தார்கள். தேவாலயங்களில் அர்த்தஜாம ஆராதனை முடிந்த பின்னர் அவர்கள் மங்களகரமாக எடுபிடி சாமான் இன்னம் மேளவாத்தியம் முதலிய உபசாரணையோடு தங்கள் ஆசிரமம் வந்து சேர்வார்கள். நித்திய சுமங்கலியாகையால் அவர்களுக்கு வைதவ்வியம் கிடையாது. எங்கள் ஆதி மூதாதைகளுக்குப் பின்னிட்டவர்கள் கலிவாந்தரத்தில் பிரபஞ்ச வாழ்க்கையை மேலாகக் கருதி மூவ்வாசையென்னும் மாயையில் சிக்குண்டு, தங்களுக்கு விரதம் ஒன்று ஏற்படுத்திக் கொண்டனர். அவ்விரதத்தைத் தங்கள் வம்சத்தினர் வெகு காலம் அநுசரித்து வந்தனர்.

நமது எண்ணத்தையும் செய்கையையும் எக்காலமும் கடவுளுக்கென்றே ஒப்படைத்துக் காலங்கழிப்போமானால் அது நம்மைச் சிற்றின்பத்தில் ஆழ்த்தி விடாமல் பேரின்பக் கரைக்கு நடத்திச்செய்யும். ஆதலால் நான்மாத்திரம் இவ்விரதத்தைக் கைக்கொள்ளவில்லை; ஆதி தேவதாசியைப் போல நித்திய சுமங்கலியாக விருக்கின்றேன்.

இந்த தேசத்தில் தாசிகள் பெரும்பான்மையோர் கோவிலாளை நம்பி இராப்பட்டினி கிடக்கின்றார்கள். கோவில் பூஜை தேவருக்கு அஞ்சாது என்பதற்கிணங்க தற்காலத்துத் தர்மகர்த்தர்களும் மடாதிபதிகளும் தெய்வச் சொத்தைக் கொள்ளையடிப்பதில் சற்றும் பின்வாங்குகிறதில்லை. போதாக் குறைக்கும் ஆலயங்கள் தோறும் பத்து, பன்னிரண்டு பஞ்சாயத்தார்கள் ஏற்பட்டார்கள். மற்ற சிப்பந்திகள் பாடு புறங்கை நக்கும்படியாயிற்று. ஆடிக் காற்றில் அம்மியே பறக்கும்போது இலவம்பஞ்சு தனக்கென்னவழி என்பதுபோல தர்மகர்த்தர்களிடம் பல்லைக்காட்டிப் பரக்கவிழித்து மன்றாடியும் காரியமொன்றும் ஆவதில்லை; இவையும் கலிகாலக் கொடுமை என நினைத்துத் தாசிகள் பலர் ஸ்ரீரங்கத்தில் ஒன்றுகூடித் தங்கள் தங்கள் பெண்களைக் குடும்ப ஸ்திரீகளாக்கி விலைமாதர் என்னும் பெயரை ஒழித்து பகவானுடைய குணாதிசயங்களையும் அடியார்களுடைய சரித்திரங்களையும் காலதேச வர்த்தமானங்களுக்குப் பொருத்தமாக, தக்க இராகதாளங்களோடு அப்பெண்கள் அனைவரும் பாகவதர்களைப்போல் கூடிக் காலக்ஷேபஞ் செய்வதே உத்தமம் எனத் தீர்மானித்தார்கள். அன்றுதொட்டு நானும் ஹரிகதா காலக்ஷேபம் செய்யலானேன்.

ஈகைத் தன்மை யாரிடத்து உளது?

திருவல்லிக்கேணி பார்த்தசாரதிப் பெருமானைத் தரிசிக்கும் பொருட்டு ஆவலோடு சென்னைக்குப்போனேன்; போகும் வழியில் நாவறட்சையினாலும் பசியினாலும் களைப்படைந்து ஒரு அந்தணர் வீட்டில் நுழைந்து கொஞ்சம் தாகத்திற்கு மோராவது ஜலமாவது கொடுங்கள் என மன்றாடிக் கேட்டும் அங்குள்ள தம்பதிகள் மோர் சொட்டுக்கூட இல்லை; ஜலமும் சேஷமாய்ப் போய்விடும். வேறே எங்கேயாவது போய்ப்பார் என்று சொல்லிக் கதவையும் சாத்தித் தாழ்ப்பாளிட்டனர். பிறகு வைசியர் அகத்திலாவது ஒரு சமயம் கேட்டுப் பார்ப்போமென நினைத்து அங்குப் போகலானேன். அங்குள்ளவள் விலைமோரில் வெண்ணெய் எடுப்பாள். அறுத்தகைக்குச் சுண்ணாம்பு கொடாத தீபாவி. "பொதிக் களப்பதற்குள்ளே சந்தத்திற்கு அளக்கச் சொல்லுகிறாயே; இன்னம் கடைபோணியாகவேயில்லை; தேவையானால் அரை அணாக் கொடு; ஒரு குவளை மோர் தருவேன்" என்றாள்.

"செட்டுமக்கள் வாசல்வழிச் செல்லோமே செக்கார்,
பொட்டுமக்கள் வாசல்வழிப் போகோமே—முட்டுப்படும்
பார்ப்பாரகத்தை யெட்டிப்பாரோமே யெந்நாளும்
காப்பாரே வேளாளர் காண்"

எனக் கம்பநாட்டாழ்வார் பாடிய பாட்டு சற்று ஞாபகத்திற்கு வந்தது. வாவே சரேலென்று வேளாளர் இல்லம் நாடிச் சென்றேன். அவ்வீட்டுத் தலைவர் தம் கழனிகளை உழுது பண்படுத்த கையில் ஏரைப் பிடித்து மாடுகளை ஓட்டிச் செல்லச் சித்தமாய் இருந்தனர். என் வரவைக் கண்டவுடன் அன்னவர் அவைகளை அங்கேயேவிட்டு வெகு பரபரப்புடனே தோட்டத்தில் நன்றாய்க் கனிந்த வாழைத்தாரைக் கொணர்ந்து மேழிபிடிக்கும் தமது கையால் மூன்று சீப்புப் பழத்தைக் கொடுத்தனர். அவர் தம் மனைவி தன் நாயகன் குறிப்பையறிந்து ஒரு பாத்திரத்தில் பாலும் தட்டில் கொஞ்சம் சர்க்கரையும் என் முன்வைத்து அருந்தும்படி உள்ளன்போடு வேண்டினள். தேகியென்று வந்தால் நாஸ்தியென்று சொல்லாமல் தம்மாலியன்றளவு கொடுத்து ஆதரிக்கின்ற குணம் யாருக்குத்தான் வரும்? அஃது இயற்கையாகவே ஒருவர்க்கு ஏற்படும். தானாகக் கனியாத பழத்தைத் தடிகொண்டடித்தால் கனியுமா?

"சித்திரமுங் கைப்பழக்கஞ் செந்தமிழு நாப்பழக்கம்
வைத்ததொரு கல்வி மனப்பழக்கம்—நித்தம்
நடையு நடைப்பழக்க நட்புந் தயையுங்
கொடையும் பிறவிக் குணம்" என்று ஔவைப் பிராட்டியார் கூறியதுபோல் ஈவிரக்கம் பச்சாத்தாபம் முதலிய அரும்பெருங் குணங்கள் பிறவியிலேயே ஏற்படக் கூடியவை. வேளாளர் மேழிபிடிக்குங் கையை வியந்து

"மேழிபிடிக்குங் கை வேல்வேந்தர் நோக்குங்கை
ஆழிதரித்தே யருளுங்கை—சூழ்வினையை
நீக்குங்கை யென்று நிலைக்குங்கை நேழி
காக்குங்கை காராளர் கை"

எனவுங் கம்பர் பாடியதும் இவர்களுக்கே தகும்.

ஆணும் அவலம் பெண்ணும் பேதை.

திருவல்லிக்கேணியை யடைந்து சந்திரபுஷ்கரணியில் நீராடி எம்பெருமானின் சந்நிதி ஏகினேன். அங்கேயும் எனக்கு திவ்விய சேவை கிடைத்தது. பிறகு அருகேயுள்ள ஒரு கிரகத்தில் சற்று உட்கார்ந்து திருவாய்மொழி பிரபந்தத்தில் சில பாசுரங்களைப் பாடிக்கொண்டிருந்தேன். நான் உட்கார்ந்த வீட்டை சுற்றி அவரைப் பந்தல். சூரியர் சந்திரர் சதாகாலம் அங்கு வாசம் பண்ணுகிறார்கள். அவ்வீட்டுத் தலைவர் பண்ணிவந்த பாவமோ அளவு சங்கையில்லையாம். எந்நேரமும் அவர் முகம் மூதேவி வாசமாயிருந்தது. ஆனால் சந்தான சம்பத்துக்குக் குறைவேயில்லை. தலைச்சன் பிள்ளைக்குக் குஷ்டரோகமாம்; மற்ற ஆறு பிள்ளைகளில் ஒருவன் ஊமை; இருவர் குருடர்; அவர்களது கண்கள் புடலம்பூவையொத்து பொட்டை விசலாய் விளங்கின; மற்றவன் பைத்தியம் பிடித்துக் கடைவீதிதோறும் திரிகிறானும்; அடுத்த குழந்தையோ திருட்டுக்கு சிரோமணி; காராக்கிரகப் பிரவேசம் அவனுக்குத் தண்ணீர் பட்டபாடு; நடுவில் கொஞ்ச காலம் சிறைவாசம் இல்லாமலிருந்தாலும்; மறுபடியும் அவன் அடியைப் பிடியடா பாரதபட்டா" எனக்கள்வர் கூட்டத்திற் சேர்ந்து திருட ஆரம்பம் பண்ணி விட்டானும்; அவன் தம்பி முடவன்; அன்றியும் பெருவயிறு படைத்தவன்; தகப்பன் ஓடியாடி சம்பாதிக்கிறதெல்லாம் அவன் கடைவாய்க்கே போதாவாம். மலைமுழுங்கி மஹாதேவனுக்குக் கதவு ஓர் அப்பளம். ஆகையால் இவன் தன் வீட்டில் சாப்பிட்டான கையோடே சத்திரம் சாவடி தேடிச் சென்று, இலவசச் சோற்றுக்குக் காகம்போல் காத்திருப்பான். எட்டாவது பெண் பிறப்பு. அது கன்னிகழிந்து எட்டிப் பார்த்துவிடும் குட்டிச் சுவராகப் போய்விட்டதோ மொட்டைத்தலையும் முட்டாக்கு சேலையுமாக அவள் போன மூன்றும்நாளே பிறந்தகத்திடம் வந்து சேர்ந்தாளாம். இவர்களைப் பெற்ற தாய்தந்தையர் பண்ணிய பாவங்கள் தம் மக்கள் தலையிலேயே வந்து முடிந்தன. அதற்கு என்செய்வது! தாம்பும் அறுதல்; செம்பும் ஓட்டை; ஆண் போனவழி பெண் போகிறதில்லை. மேலும் அம்மக்களைப் பெற்றவள் கணவனைத் துரும்பாக மதிப்பாள். எப்போது பார்த்தாலும் அவளது முகம் சிடுசிடுத்த வண்ணமாகவே யிருக்கும். கோபம் வந்தால் வேங்கைப்புலிபோல் பொரிபறக்க வெரிக்கப்

பார்ப்பாள். அவள் வாயைத் திறந்தாளோ கொள்ளிவாய்ப் பிசாசை யொத்து வரம்புகடந்து வைவாள். அவள் வாய்க்குப் பயந்தே ஒருவரும் கிட்ட வருகிறதில்லை. மலைப்பாம்புபோல தெருத்திண்ணையில் வீழ்ந்து கிடப்பாள். புருடனைக் கண்டும் எழுந்திருக்கவுமாட்டாள். மேலும்,

"ஐயருக் கமுதுபடை யென்றுவந்தாய் நீயு
மாண்பிள்ளை யென்றெண்ணியோ
அரிசியெங்கே பானை சட்டியெங்கே யென்பள்
அவள்சொன்ன வகைகளெல்லாம்
பையவே கொண்டுவந்தாலுஞ் சமைக்கப்
படாதுதலை நோகுதென்று
பாயிற்கிடப்பள்சின மாயொன்று பேசிறுற்
பாருனைக் கேற்றபுத்தி
செய்யவல்லே னென்பள் சற்றடித்தால் நஞ்சு
தின்கிறேன் கூகவெனத்
தெருவீடுதோறு முறையிடுபெண்டி ருண்டெனிற்
றீயநமன் வேறுமுண்டோ
வையகம் புகழ்சோலை மலையலங்காரனே
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமணவாளனே
வரதவேங்கடராயனே"

என்று மணவாள நாராயண சதகத்தில் கூறியபடி கணவன் தன் மனைவியை நோக்கி "பாகவதர் வந்திருக்கின்றார், அவரோ பெரிய பாகவதர். மேலும் அவர் அன்னியருமல்லர் நமக்குக் கிட்டிய உறவினர் ஆகின்றார். இன்றைக்கு நம்மகத்தில் அவருக்கு அமுதுபடைக்க வேண்டும்" என்று சொல்ல, அதற்கு அவள் "சரி சரி! உன் தொழிலுக்கு ஆரம்பித்தனையா? இதுவும் வேடிக்கை தான்! தன்னைப் பெற்ற ஆத்தாள் கிண்ணிப்பிச்சை எடுக்கிறாள் தம்பி கும்பகோணத்தில் கோதானம் பண்ணுகிறான் என்பதுபோல், வீட்டிருப்பு அறியாத ஆண்பிள்ளையை வைத்துக் கொண்டு என்னசெய்வேன்? அந்த மூன்றும் அடுக்காய் இருந்தாலல்லவோ அறியாப் பெண்ணும் கறிசமைத்திடுவள்? அமுதுபடைக்க அரிசி எங்கே? விறகு எங்கே? வெறுங்கையைக் கொண்டு முழம்போடுவது எப்படி? என்று பதிலுரைப்பாள்.

அவளைப் பெண்டாகக் கொண்டவன் அப்படியே சகலமும் சேகரித்துக் கொடுத்தாலும் அப்பொழுதும் இவளுக்குச் சற்றேனும் சம்மதமில்லை. பின்னும் அவனை நோக்கி அரிசி ஆழாக்காவது அப்படியாங்கட்டி மூன்று வேண்டாமா? சட்டியா? பானையா? ஒன்றுமில்லை. ஏனையில்லாமல் எதில் சமைக்கிறது? எப்படி எரிமூட்டுவேன்? என்பாள். அவைகளையும் உடனே வருவித்துக் கொடுத்து, சீக்கிரம் தளிகை ஆகட்டும் என வற்புறுத்தியும் அதற்கு அவள் "உனக்கு என்னவேலை? நன்றாய் அலைகிறாய்! வயிற்றைச் சுற்றச் சால்போலக் குழையக் குழைய வைத்துக் கொண்டு தடிதண்டு சந்நியாசி யொருவன் திண்ணையில் வந்து உட்கார்ந்தால் அவன் உனக்கு என்ன உறவு? ஆச்சாளுக்குப் பிச்சான் மதினிக்கு உடன்பிறந்தான் நெல்லுக்குத் தூக்கரிக்கு ஓரே உடன்பிறந்தான்" என்பதுபோல் வழியில் போகிறவன் வருகிறவன் எல்லாரும் உனக்குப் பந்துவென்று சொல்லி அழைத்துவந்து அழுதுபடை என்கிறாயே? உனக்கு அழுவதல்லாமல் எனக்கு அழுவா? என்னுலே சற்றும் ஆகாது; எனக்குத் தலைவலிக்கிறது என்று பாசாங்கு பண்ணுவாள். மீண்டும் அவளது கணவன் "அடி உனக்கு என்னகேடு? செக்குலக்கைபோல் இருக்கின்றாயே? கொட்டியத்துப் பெருச்சாளிபோல் மூன்று வேளைக்கு ஆறுவேளை சாப்பிடவில்லையா? நீ என்ன செய்வாய்? உன்பேரில் குற்றமில்லை. நீரும் சோறும் தின்று நிழலில் படுத்தால் மலைக்கும் மசைக்கைசெரியுமல்லவா? என அதற்கு அவள் "சரிதான், எருமைநோய் காக்கைக்குத் தெரியுமா? எல்லாம் தனக்கு வந்தாலல்லவோ தெரியும். உன் சமையில் என்ன வாட்டம்! நீயும் ஒதிய மரம்போல் பருத்து, வளர்த்தொண்டையையும் தாழ்வாரியையும் படைத்திருக்கின்றாயே? வேளைக்கு போர் அந்தனைசாதம் விழுங்குவதில் குறைவில்லையே" என்று சொல்லி பாயை விரித்து முக்காடிட்டுப் படுத்துக்கொள்வாளாம். உடனே கோபத்தினால் அந்தச் சண்டியை ஒரு தட்டுத்தட்ட அப்போரி எழுந்து "ஓ, ஓ! சண்டாளா! என்னைக் கொலைசெய்யவா ஏற்பட்டாய்? உன்னுலானமட்டும் அடி, சும்மா கொல்லு, இனிமேல் நான் உயிரை வைத்துக்கொள்ளப் போகிறதில்லை. ஊமத்தங்காயைத் தின்றாவது பழிபோடுகிறேன் பார்" என்று தெருவிலே வந்து கூ கூ வென்று பெருங் கூச்சலிட்டுத் தலைப்படுவாளாம்.

இவ்வாறெல்லாம் இவர்கள் நாயும் பூனையும்போல் ஒற்றுமையின்றி ஏறுமாறாகக் குடித்தனம் செய்து வந்தார்களாம். "நல்லநாளிலேயே நாழிபால் கறக்கும் கன்று செத்தால் கலப்பால் கறக்குமா," என்பதுபோல இவனது இல்லாள் இடமாகவிருக்கும் போதே வீட்டுவேலை பார்க்க வீண்வம்பு பேசி மூக்கால் அழுவாள். இப்பொழுது கேட்கவும் வேண்டுமோ? அவளோ பூரண கர்ப்பிணி; பிரசவகாலம் இப்போதைக்கோ சற்று நேரத்திலேவென இருக்கின்றதாம். பட்டகாலிலே படும் கெட்ட குடியே கெடும் என்பதற்கிணங்க,

"ஆவின மழைபொழிய இல்லம்வீழ
அகத்தடியாள் மெய்நோவ அடிமைசாவ
மாவீரம் போகுதென்று விதைகொண்டோட
வழியிலே கடன்காரர் மறித்துக் கொள்ளச்
சாவோலை கொண்டொருவ னெதிரேசெல்லத்
தள்ளவொண்ணு விருந்துவரச் சர்ப்பந் தீண்டக்
கோவேந்த ருழுதுண்ட கடமைகேட்க
குருக்களோ தட்சணைகள் கொடுவென்றாரே"

என அவளது கணவர் அன்று காலை தமக்குற்ற பற்பல இடையூறுகளை என்னிடம் சொல்லிக் குறைப்பட்டார். பின்னர் யானும் அவரை நோக்கி

காப்பிளக்கப் பொய்யுரைத்து கவிதியக் தேடி
நலமொன்றுமறியாத நாரியரைக் கூடிப்
பூப்பிளக்க வெழுகின்ற புற்றீசல்போலப்
புலபுலெனக் கலகலெனப் புதல்வர்களைப் பெறுவீர்
காப்பதற்கும் வகையறியீர், கைவிடவுமாட்டீர்
கவட்டுத் தொன்மரத் திடுக்கிற் காலைநுழைத்துக் கொண்டே
ஆப்பதனைப் பிடித்தசைத்த பேய்க்குரங்குபோல
அகப்பட்டீர் கிடந்துழல வகப்பட்டீரே.

எனப் பட்டணத்தடிகள் கூறியபடி இந்தச் சமுசாரசாகரத்தில் அகப்பட்டு விழிக்கின்றீரே என் செய்வது! எல்லாம் ஈசன் செயல்; அவனன்றி அணுவும் அசையாது. உலகத்தில் விசனமில்லாதிருப்பவர் ஒருவருமில்லை. இருஷ்டாந்தமாக,

"பாலுக்குச் சர்க்கரை யில்லையென் பார்க்கும் பருக்கையற்ற
கூழுக்குப் போடவுப் பில்லையென் பார்க்கும் குற்றித்தைத்த
காலுக்குத் தோற்செருப் பில்லையென் பார்க்கும் கனகதண்டி
மேலுக்குப் பஞ்சணை யில்லையென் பார்க்கும் விசனமொன்றே!"

தோட்டிமுதல் தொண்டமான்வரையும் யாவர்க்கும் சுகதுக்கம் ஒன்றேயாகும். அனைவர்க்கு அளந்துதான் போட்டிருக்கின்றார் பகவான்.

தொட்டையிலே யிருந்து மனத் துறவடைந்த பெரியோர்களிம் மென்றுமிலோர், தொட்டையிலே தொடுத்து முத்தி பெறுமளவும் பெரிய சுகங்கிடைக்கும் காம, வெட்டையிலே மதிமயங்கச் சிறுவருக்கு மணம்பேசி விரும்பித்தாலி, கட்டையிலே தொடுத்து நடுக்கட்டையிலே கிடக்குமட்டுங் கவலைதானே.

என ஒப்பிலா மணிப்புலவர் பாடியருளியபடி கவலை யாரை விட்டது? நளமஹாராஜன், அரிச்சந்திரன், பஞ்சபாண்டவர் முதலானவர்கள்

விடங்கொண்ட மீனைப்போலும் வெந்தழல் மெழுகுபோலும்
படங்கொண்ட பாந்தள்வாயிற் பற்றிய தேரைபோலும்
திடங்கொண்ட ராமபாணஞ் செருக்களத் துற்றபோதம்
கடன்கொண்டார் நெஞ்சம்போலுங் கலங்கினான் இலங்கைவேந்
[தன்.

என்றவண்ணம் கலங்கித் தத்தளிக்கவில்லையோ? பின்னர் ஸ்ரீமந் நாராயணன் அவர்களது இடர்களையெல்லாம் நீக்கி மேலான பதவியில் வைத்தனரன்றோ? மேலும் முதலைவாயில் அகப்பட்டு ஆதிமூலமே என்று கதறிய யானையை இரக்ஷித்தருளவில்லையா? கௌசிகமுனி வேள்வியைக்காத்து, மிதிலையிற் சிவனது வில்லை ஒடித்து, சீதையைத் திருமணமுடித்து, அயோத்திக்கு மீள்கின்றபொழுது வழியிற் பரசுராமனை வென்று, வனத்தில் விராதன் தோளைச் சாய்த்து, கரதூஷணாதியரை அதமாக்கி, மாயமானைக் கொன்று, தாடகையைச் சங்கரித்து, சுபாகுவைக் கொன்று, கவந்தனை மாய்த்து, மராமரத்தைத் துளைத்து, வாலியை வதைத்து, சுக்கிரீவனுக்கு அரசளித்து, மகராட்சசனை மடித்து, கும்பகர்ணனைச் சேதித்து, மூலபலத்தை முடித்து, இராவணாதி ராட்சசர்களை யெல்லாம் கருவறுத்து, விபீஷணனுக்கு முடிசூட்-

டிய வேலைகாதனை ஸ்ரீராமசந்திர மூர்த்தியைத் தியானித்துப் போற்றுவையாயின் சூரியனைக்கண்ட பனிபோல் உனக்குற்ற அபாயமெல்லாம் நீங்கி நீயும் உன்மக்களும் நலம்பெற்று சுகம் அடைவீர்கள்" எனத் தம்பதிகளை வெகுவாய்த் தேற்றியும் பின்னர் அவர்களுக்குப் பற்பல ஹிதோபதேசம் பண்ணியும் யான் ஊருக்குத் திரும்பலானேன். அவர்களும் அன்று தொட்டு ஒழுக்கமுற வாழ்ந்து சுகவாழ்க்கையும் பெற்றார்கள்.

T. K. ஸ்ரீநிவாச அய்யங்கார்.

தந்தையற்ற இரு சகோதரர்கள்.

ஜட்கா வண்டிக்காரன் கையில் சவுக்கெடுத்தான். குதிரைகள் ஓட ஆரம்பித்தன. கட கட வென்ற சத்தத்துடன் வண்டியானது "பரிஸ்" பட்டணத்தை நோக்கி ஓடுகின்றது. வண்டிக்குள்ளே, பின்புறத்தில் ஒரு சிறு பையன் உட்கார்ந்திருக்கிறான்; மிகவும் எளியவன். கிழிந்துபோன உடைகள். வெளியில் குளிர்ந்த காற்று வீசுகின்றது. பனிக்காலம் பையனுடைய சரீரம் குளிரால் நடுங்குகின்றது. வண்டிக்குப் பின்னால், பாதையின்மீது ஒரு வாலிபன் நடந்து செல்கிறான். அறிவுள்ள முகத்தோடும், மேன்மையான பார்வையோடும் விளங்குகிறான். குதிரைகள் ஓடுகின்றன; இவனும் ஓடுகிறான். அதனால் அவனுடைய நெற்றியிலிருந்து வேர்வை பெருகுகின்றது. வண்டிக்குள்ளிருக்கும் பையனை அடிக்கடி பார்த்துக்கொண்டே நடக்கிறான். அந்தப் பையனும் இவனைப் புன்சிரிப்போடு நோக்குகிறான். பையனுடைய அங்கங்கள் குளிரால் நடுங்குவதைப்பார்த்த வாலிபன் "ஏ தோழனே! உனக்குக் குளிரில்லையா?" என்றான். "ஆம், மிகவும், எனக்குக் குளிர்தான் பொறுக்க முடியவில்லை" என்றான் பையன். "இந்தா, இதைப் போர்த்துக்கொள். நான் நடக்கிறபடியால் எனக்குக் குளிரவில்லை" என்று சொல்லி வாலிபன் தனது உடையைக் கழற்றி, பையனிடம் எறிந்தான். அப்போது வண்டிக்குள்ளிருந்த பிரயாணிகளில் ஒருவன் பையனைப் பார்த்துச் சொன்னதாவது:—"உன்மட்டில் அந்த வாலிபன் எவ்வளவு அன்பு செலுத்துகிறான்!

பையன்:—ஆம், நானும் அவனை மிகவும் பக்ஷமாக நேசிக்கிறேன். அவன் என்னுடைய பெரிய அண்ணனல்லவா?

பிரயாணி: அங்ஙனமா? ஏன் உன்னுடன் வண்டியில் ஏறாமல் அவன் இங்ஙனம் நடந்துவருகின்றான்?

பையன்:—ஏன்? வண்டிச்சத்தம் கொடுக்கப்பணமில்லை. தெரியவில்லையா? என்ன? நாங்கள் எளியவர்கள். எங்களுடைய தகப்பனார் இங்கே ஒரு கிராமத்திற்கு எங்களைக் கூட்டிக்கொண்டு வந்தார். வந்த இடத்தில் இறந்துவிட்டார். என்ன செய்கிறது? எங்களுடைய தாயார் பாரிஸில் இருக்கிறாள். எங்களிடத்தில் உள்ளது 10 ரூபாய். இதைக்கொண்டு எங்ஙனமாயினும் பாரிஸுக்குப் போய்விட்டால், எப்படியாவது பிழைக்கலாம்; தாயாரையும் காப்பாற்றலாம் என்று எண்ணி, மிஷேல் பாரிஸுக்குப்போக வண்டிச்சத்தம் என்னவென்று விசாரித்தான். ஒரு ஆளுக்குப் பத்துரூபாய் என்றேற்பட்டது. அந்தத் தொகைதான் எங்களிடத்திலுமிருந்தது. அதனால் "நீ ஏறிக்கொள், நான் நடந்து வருகிறேன்" என்று என் அண்ணன் சொன்னான். எனக்கு அது சம்மதமில்லை. நானும் நடந்து வருகிறதாகச் சொன்னேன். அதற்கு அவன் இணங்கவில்லை. எனக்கு நடக்கத் திராணி போதாது என்று சொல்லிவிட்டான்.

பிரயாணி: ஓ! உன் அண்ணன் ஒருதீரன், யோக்கியன். அப்போது வண்டியிலிருந்த வேறொரு பிரயாணி "அந்த வாலிபன் இந்தப் பனியில் எவ்வளவு தூரம் நடந்துவருவான்; களையினாலும், குளிரினாலும் இறந்துவிடுவானே" என்றான். அதற்கு வண்டிக்காரன் "வண்டிச்சத்தம் கொடுக்க சக்தியில்லாதவர்களையெல்லாம் நான் இனாமாக ஏற்றிக்கொள்வதென்றால், என்வண்டி போதாதே" என்று மறுமொழி சொன்னான்.

பிரயாணி: சரி; நாம் வண்டிக்குள் 10 பேர் இருக்கிறோம். தலைக்கு ஒரு ரூபாய் கொடுத்தால் சரிப்பட்டுவிடும். வண்டிக்காரரே! தயவுசெய்து உம்முடைய போர்வையை அந்த வாலிபனுக்குக் கொடும்.

எல்லாப் பிரயாணிகளும் இந்த உதாரமான அபிப்பிராயத்தை ஏற்றுக்கொண்டார்கள். 10 ரூபாய்கள் வசூலாயின. வாலிபனைக் கூவி வண்டியில் ஏறிக்கொள்ளச் சொன்னார்கள். வாலிபனும் மிகவும் சந்தோஷமும், ஆச்சரியமுமடைந்தான்.

இங்ஙனம் தனது அண்ணனுக்காக இவ்வளவு சிரமம் எடுத்துக்கொண்ட பிரயாணிக்கு, பையன் ஒரு சங்கதிசொல்ல மறந்துவிட்டான். அதாவது "மிஷேல்" ஒரு அன்பான சகோதரன் மாத்திரம் அன்று, பள்ளிப்பிள்ளைகளில் மிகவும் சிறந்தவன். அவனுடைய உபாத்தியாயர், அவனுடைய கூர்மையையும் ஏற்றத்தையும் கண்டு, அவன்மட்டில் மிகவும் பிரியம் வைத்திருந்தார். அதனால் அவனுடைய தகப்பன் இறந்த உடனே, அவர் அவனுக்கு இனாமாகக் கல்வி கற்றுக்கொடுப்பதாக வாக்களித்தார். அது மிஷேலுக்கும் சம்மதந்தான். ஆனால், 13 வயதுள்ள தனது சிறிய சகோதரனுடைய நினைப்பும், பாரிஸில் ஏழைமை ஸ்திதியில் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும் தனது தாயாரின் ஞாபகமும் அவனுடைய கல்விக்குத் தடைகளாயின. அவன் குடும்பத்தில் மூத்தவனல்லவா? தகப்பனில்லாதபடியால், அவன்மீது குடும்ப பாரம் விழுந்தது. தகப்பனுக்குப் பின் தமையன். இது தெரிந்த விஷயம். சிறிதேனும் தயங்காமல், மிஷேல் குடும்பத்திற்காக தனக்குக் கல்விமீதுள்ள காதலை பலியிடத் துணிந்தான். பள்ளிக்கூடத்தைவிட்டு தனது சகோதரனைக் கூட்டிக்கொண்டு, பாரிஸுக்குப் புறப்பட்டான்.

இருவரும் அப்பெரும் பட்டணம் வந்து சேர்ந்தார்கள். மிஷேல், தான் நினைத்ததுபோலவே தனது தாய் வறுமையினால் கஷ்டப்படுவதைக் கண்டான். அவளுக்குத் தேறுதல் சொல்லி, ஏதாவதொரு தொழில் செய்ய எண்ணங்கொண்டான். 'அவனுடைய தகப்பன் ஒரு சிற்பி. தான் கல்வெட்டும் தொழிலை ஏற்றுக்கொண்டான்.

இதுவரையில் புஸ்தகங்களின் ஏடுகளைத் திருப்புவதில் பழகின, ஓ இளங்கைகளே! இப்போது கடினமான கல்லில் வேலை செய்யப் பழகுங்கள். சாஸ்திரங்களை மேன்மேலும் கற்க விரும்பிய, இள அறிவே! படித்தவற்றை இந்தக் கடினமான வேலையினில் மறந்து விடுவையோ? ஓ தீர மனமே! உன்னுடைய எண்ணம் உனக்குக் கேட்டை விளைக்குமோ?

ஒருகாலும் இல்லை. சக்யத்திலேயே அந்த மனது மேன்மையடைந்தது; வறுமையை ஏற்றுக்கொண்டு, அதனை வெல்லுந் திறமையை அடையும்.

தந்தையற்ற குடும்பத்தைப் போஷிப்பதற்காக, மிஷேலின் கைகள் கல்லிட்டுப் போயிருக்கின்றன. ஆதலால் அவனுடைய புத்திக்கு வேலையில்லையென்று நினைக்கவேண்டாம். அவன் தனது பள்ளிக்கூடத்துப் புஸ்தகங்களையும், பாடக்குறிப்புகளையும் கைவிடவில்லை. அச்சிறு கல்தச்சனுடைய உடையின் பைகளைச் சோதித்தால் "கிரேக்" புஸ்தகமாவது, "லத்தீன்" பாஷைப் புஸ்தகமாவது நிச்சயமாய் அகப்படும்.

வேலை முடிந்த உடனே, எல்லாரும் சாப்பாட்டுக்குப் போய்விடுவார்கள். நமது மிஷேல் மாத்திரம் தங்கிவிடுவான். தான் பொளிந்த கல்லின்மீது உட்கார்ந்து, ஒரு கையில் ரொட்டித்துண்டும், இன்னொரு கையில் புஸ்தகமும் வைத்துக்கொண்டு காணப்படுவான். ரொட்டியைத் தின்றுகொண்டே படிப்பான். ஒரு வேலையினால் ஏற்பட்ட களையை மற்றொருவிதமான வேலையினால் தீர்த்துக்கொள்வான்.

அவன் இங்ஙனம் படிப்பதை ஒருநாள் ஒருகொல்லன் கண்டு பரிகாசம் செய்ய ஆரம்பித்தான். மற்றவர்களும் அவனைக் கேலி பண்ணத் தொடங்கி, அவனுக்குப் "பள்ளிக்கூடத்தான்" என்று பேர் வைத்தார்கள். ஒரு கல்தச்சன், ஓய்வு நேரங்களில் லத்தீன் பாஷை படிப்பது மிகவும் ஆச்சரியமல்லவா? அதைக்கண்டு மெச்சுவதைவிட்டு, கேலி பண்ணுதல் இழிவன்றோ? அதனால் மிஷேலுக்குக் கிஞ்சிற்றேனும் வருத்தமில்லை. அவனும் மற்றவர்களோடு சேர்ந்து சிரிப்பான். படிப்பதை நிறுத்தவில்லை. பகலில் போதுமான நேரம் கிடைக்காததால், இரவிலும் படிக்கத் தொடங்கினான்.

ஒருநாள் இங்ஙனம் அவன் வேலை செய்துகொண்டிருக்கும்போது, ஒருவன் அவனிடம் சென்று "என்ன செய்கிறாய்" என்றான்?

கல்தச்சன்:—"ஹொராஸ்" புஸ்தகத்தை மொழிபெயர்க்கிறேன், ஐயா.

அன்னியன்:—காண்பி, பார்ப்போம்.

மிஷேல்:—மொழி பெயர்ப்பைக் காண்பித்தான்.

அன்னியன்:—உன்னுடைய மொழி பெயர்ப்பு நன்றாக இருக்கின்றது; உனக்கு வயதென்ன?

கல்தச்சன்:—18 வயது, ஐயா.

அன்னியன்:—ஒருசெதி கேள்; "பள்ளிக்கூடத்தான்" என்று சில கொல்லர்கள் கேலியாகப் பேசிக்கொண்டிருந்ததை நான் கேட்டிருக்கிறேன். அந்தப் "பள்ளிக்கூடத்தானை" நேரில் பார்க்க எண்ணங்கொண்டேன். நீயோ புத்திசாலியாகவும், உழைப்பாளியாகவும் காணப்படுகிறாய். உன்னை என் மாணவனாக எடுத்துக்கொள்ள விரும்புகிறேன். உனக்குச் சம்மதமா? உன் தகப்பனைப் போல நானும் ஒரு சிற்பி. உன் குடும்பத்தை நான் பார்த்துக்கொள்கிறேன். அதைப்பற்றிய கவலை உனக்கு வேண்டாம்.

மிஷேல்:—அந்தச் சிற்பியின் மாணவனாய் விட்டான். அந்தச்சிற்பியும் தனது புதிய மாணவனைத் தன்னுடைய வேலைகளில் சேர்த்துக்கொண்டான். ஆயினும் பழைய கல்தச்சன் "ஹொராஸ்", புஸ்தகத்தைக் கைவிடவில்லை. தனது ஓய்வு நேரங்களைக் காவியத்திலும், பாஷாபிவிருத்தியிலுமே கழித்து வந்தான். கடைசியில், "பிரெஞ்சு பாஷா சங்கத்தின்" ஓர் அங்கத்தினனாகி 1797 இல் இறந்தான்.

இறக்கிறதற்குமுன், தன்னைக் காப்பாற்றின பெரிய மனிதன் பேரனை, தனது பிள்ளையைப்போல வளர்த்து, அவனுக்குக் கல்வி கற்பித்து வந்தான். அச்சிறுவனே தான் பிற்காலத்தில் மிகவும் பிரக்யாதிபெற்ற, ஓவியர் சிரோமணியான, "டேவிட்" என்ற சித்திர சாஸ்திரி.

N. சுப்பிரமணிய அய்யர்,

24-12-16. புதுவை.

சுகாதாரம்.

வாய்வு.

(முன் தொடர்ச்சி)

சுத்தமான வாயுவை உட்கொள்ளுவதனால், அதன் ஒரு பாகமாகிய பிராண வாயு நமது சரீரத்திலுள்ள பலவகை விஷமுள்ள கழிவுப் பதார்த்தங்களோடு சேர்ந்து அவற்றை யெல்லாம் எரித்துப் பின்னர் கரி அமில வாயுவாக மாறி வெளியே வந்துவிடுகின்றது. தேகாரோக்யத்திற்கு வேண்டிய அளவான சுத்த வாயுவை யுட்கொள்ளாமலிருப்போமாயின், நமது தேகத்தி

துள்ள அழியும் பதார்த்தங்களில் ஒரு பாகம் தேகத்திலேயே தங்கி விடும்; அதனால் தேகத்தில் புதிதாகச் சேரவேண்டிய பதார்த்தங்களுக்கு இருப்பிடத்திற்கிடையூறுண்டாகின்றன. இது காரணமாகச் சுத்த வாயுவை யுட்கொள்ளாதவர்கட்குத் தீவிரமான பசி உண்டாகமாட்டாது. அதனால் ஆகாரத்தின் மீது அரோசிகம் உண்டாகும்; தேகத்திலும், மனத்திலும் அசதியும், சோர்வுமுண்டாம். இக்காரணத்தினாற்றான் வீட்டிற்குள்ளேயே யிருந்து தேகப் பயிற்சி செய்யாமலும், சுத்த வாயுவை யுட்கொள்ளாமலுமிருக்கும் தனவான்கள் சதா நோயாளிகளாக விருக்கின்றார்கள். பரந்த இடங்களிலிருந்து, சுத்த வாயுவை யுட்கொண்டு, மிருகஷ்டமான கூலிவேலை செய்து வரும் கூலியாட்கள் திடகாத்திரர்களாயும், சுக ஜீவிகளாயுமிருக்கின்றனர். ஒரு நாள் முழுதும் உழைத்து வரும் கூலியாட்கள் சுத்த வாயுவை யுட்கொள்ளுவதனாலும், அதிக தேகப் பயிற்சி செய்வதனாலும் அவர்களுடைய தேகம் உறுதியுள்ளதாய் எந்தக் குளிரையும், காற்றையும், தாங்கும் சக்தியுடையதாய் விடுகின்றது; அவர்கள் எவ்வளவு அசுத்தமான உணவை உண்டபோதிலும், அவர்களுடைய ஜீரணக் கருவிகள் பலமுள்ளவையாயிருக்கின்றமையின், அந்த அசுத்தமான உணவிலிருக்கும் சத்தைக் கிரகித்தும் விஷத்தை நீக்கியும் அவர்களுடைய தேகத்தை வளர்த்துப் புஷ்டியாக்கும். தனவானுடைய தேகமோ, வீட்டிலிருக்கும் அசுத்தமான வாயுவினாலும், தேகப் பயிற்சி யின்மையினாலும், உறுதியற்றுத் திடமற்றிருக்கின்றது; அதனால் அது அற்பக் குளிரையும், காற்றையும் சகிக்கும் சக்தியுடையதாகவில்லை; தனவான்களுடைய ஜீரணக் கருவிகளும் பலவீன முடையனவாயிருக்கின்றமையின், அவை சத்தான உணவுகளிலுள்ள சாரத்தைக் கிரகிக்கும் சக்தியுள்ளனவாகவில்லை; அதனால் தனவான்கள் சத்தான உணவுகளை உண்டபோதிலும், அவர்களுடைய தேகம் திடமும் சுகமுமுள்ளதாயில்லை.

சுத்தமான வாயு பரவியிருக்கு மிடங்களில் வாசஞ் செய்து, வெளியிற் சென்று தேகப்பயிற்சி செய்த மனிதர்களுக்குள் மதுபான வழக்கம் அதிகமாக விருக்கும். அந்த வாயுவு மனிதனுக்குச் சுகத்தையும், உற்சாகத்தையும் உண்டாக்குவதனால் மனிதர் தத்தமக்குரிய வேலைகளை வருத்தமின்றிச் செய்வதற்குச் சக்தி யுள்ளவர்களாக விருக்கின்றார்கள்.

சுதேச வைத்தியம்.

நமது தேகத்தில் உள்ள அவயவங்கள் முறை பிறழ்ந்து நடப்பதனால் நாம் நோய்க்குள்ளாகின்றோம். அந்த நோயைத் தீர்த்துக்கொள்வதற்கேற்ற உபாயங்களைப் போதிப்பதே வைத்தியமாம். சரீரம் பல அவயவங்கள் சேர்ந்த ஒரு பிண்டமாதலால், அஃது, ஒரு யந்திரம் அடிக்கடி அதன் கருவிகள் கெடுவதனால் பழுதுறுவதுபோல, அவயவங்கள் கெடுவதனால் நோய்களை யடைகின்றது. சரீரம் நோயினால் மெலிந்து திடங்குன்றுமாயின், அதன் முக்கிய அம்சமும் அதனை இயக்குவதுமாகிய உயிர்க்கும் அபாயம் நேரிடுகின்றது. பிராணபாயம் நேருமாயின் சரீரம் அழிகின்றது. ஆதலினால், நம்மவர் ஒவ்வொருவர்க்கும் வைத்தியமென்பது வாழ்க்கைக்குரிய இன்றியமையாத தொன்றாகின்றது. "நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" என்னும் பழமொழியுங் காண்க. நோய் என்னும் பகைவன் கைசிக்கிய ஒருவன் உலகத்தில் வாழ்வதினும் உயிர்விடுவது மேலாகும். பிணியுள்ளார்க்கு இவ்வுலகிற் செல்வத்தாலேனும் மற்றும் பெண்டு பிள்ளைகளாலேனும், உலகத்துள்ள பொருள்களாலேனும் சுகம் கிடைக்குமா? அவர்களுக்கு இவையெல்லாம் கண்ணாற் காணவும் வெறுப்பைக் கொடுப்பனவாமன்றோ?

ஆகவே, நோய்கள் அணுகவிடாது அவற்றைக்களைந்து சுகத்தைக் கொடுக்கத்தக்க சாதனமாகிய வைத்தியத்தை நம்மவர்கள் கைசோர விடுவது பெரிதும் விசனிக்கத்தக்கதும் அறிவீனமுமாகுமன்றோ? இந்த வைத்தியம் நம் தேயத்தவரால் அனுஷ்டிக்கப்பட்டுவந்த முறை அஷ்டாங்கமும், மந்திரம், யோகம், ஞானம் முதலியவற்றைச் சாதனமாகக் கொண்டதுமாகும். இதனை வடநூலார் ஆயுர்வேதம், தநுர்வேதம், காந்தர்வ வேதம், அர்த்தசாஸ்திரம் என்பன வேதத்தின் உபவேதங்களென்று கூறப்படுகின்றன. ஆகவே ஆயுர்வேதம் என்னும் வைத்தியமும் வேதமென்பது விளக்கமாகிறது.

இனிவேத மென்பதென்ன என்று ஆராய்வோம். வேதம் என்பது கர்மாநுசாரப்படி பிறவிநுகிக்கும் ஜீவர்கள், அறிவின் அபிவிருத்தி யடைந்து [illegible] அவைகளிடத்துக்கொண்ட கருணையினால் தாமே திருவாய் மலர்ந்தரு

ளிய தெய்வீக நூலாம். இது ஆதியந்த மற்றது. தெய்வமென்பது எப்போதுண்டாயிற்று? அதன் மூலமென்ன? என்று விசாரிக்கின், அஃது எக்ஷணம் நமக்குப் புலப்படாதிருக்கின்றதோ அக்ஷணமே வேதமுமாகும். வேதங்கூறும் விதிவிலக்குக்களை யறிந்து நடந்து பேரறிவு நிலையைப்பெற்றவரே முத்தியென்னும் இன்பத்தை யடைகின்றனர். இது விரிக்கிற்பெருகும்.

இப்போது நாம் வேதமென்பது இத்தன்மைத்தென்று கூறியதுமன்றி ஆயுள்வேதம் என்பது உபவேதமென்றோம். கடவுள் செய்யும் அரியபெரிய செய்கைகளை அவரது அம்சமாக விளங்கும் மகனீயர்களும் செய்வர் என்பது ஆஸ்திகோத்தமர்களாகிய நாம் அநுபவத்திலும் நூற்கள் மூலமாகவும் கண்டும் படித்து மறிந்ததேயாகும். கடவுளின் செய்கையைச் செய்யக் கடவுளின் அம்சமுடையார்க்குங் கூடுமன்றோ.

வேதம் எதை நமக்குத் தருகின்றது? நித்யா நித்ய வஸ்து விவேகமாகிய பேரறிவை யளிக்கின்றது. அதனால் உலகபந்தமென்னும் கொடிய நோயொழிந்து நாம் முத்தியென்னும் பரமபதத்தை யடைகின்றோம். வைத்யம் என்னும் ஆயுள்வேதமோவெனின், அது உலகத்திலுள்ள பதார்த்தங்களின் குணங்களை உணர்த்துகின்றது; அல்லாமலும் அவற்றை நாம் நோய்க்குத் தக்கபடி உபயோகிப்பதையும் போதிக்கின்றது; ஆகவே அவை கொண்டு நாம் சரீரத்தின் வாதபித்த சிலேஷ்மங்களின் மாறுபாடுகளினால் நேரிடும் நோய்களைக் களைந்து சுகத்தை யடைகின்றோம். ஆகவே, வேதம் பரமோத்தமமானதும் அழிவற்றதுமான சுகத்தையும், ஆயுர்வேதம் சரீரசுகத்தையும் தருகின்றன. இதனால் ஆயுள்வேதம் வேதத்தின் தன்மையை ஒருவாறு விளக்கி நிற்கின்றதென்பது பெறப்படுகின்றது. அல்லாமலும், கவனிப்பின் சரீரசுகமில்லையாயின் நாம் வேதத்தை போதியுணர்வதும், உணர்ந்தவாறொழுகுவதும் கூடாமை யென்பது மலைவிளக்காகும். இதனால் இகபரசுக மிரண்டிற்கும் சரீரசுகமே முக்கிய காரணமாகின்றது. இகபரசுகத்திற்கு முக்கிய காரணமாகிய சரீரசுகத்தைத் தருவது ஆயுள்வேதமாகின்றமையாலேதான், காயசித்தி யடைந்து அருந்தவம் புரிந்து இறைவன் திருவடிசேர முயலும் யோகிகளும் சித்தர்களும் தமக்கு வைத்யத்தை யாதாரமாகக் கொண்டு, அதனைப் பரிசீலனைசெய்து, போதமான மருந்து

களைக் கண்டுபிடித்துத் தாமுண்டு மனுபவித்த மகான்களாதலால், அவர்கள் உலகின்மீது கொண்ட கருணையினால் பரமசிவன் வேதத்தை யருளியவாறு தமதநுபவத்தை நமக்கருளி யுள்ளார். ஆகவே, நமது வைத்யம் ஆங்கிலேயர்களுடைய வைத்யம்போலக் கேவலம் படிப்பினால் மட்டும் வெளிவந்ததல்லவென்றாயிற்று. யோகிகள், முதலில் தாம் சரீரசுகத்தைக் காப்பாற்றிக் கொள்ள வைத்யத்தைப் பரிசீலனை செய்துகொண்டு பின்னர்ச் சரீர சித்தியடைதற்கு யோகத்தை யப்பியசிக்கின்றனர். இதிலொரு இரகசியம் கவனிக்கத்தக்கது.

வைத்தியம் சரீரத்தின்கண் பொருந்தியுள்ள அவயவங்களை யுணர்த்தி அவற்றின் பாகுபாடுகளையும் அவை கெட்டவிடத்துச் சீர்திருத்தும் வழியையும் நமக்குப் போதிப்பதாம். யோகம், சரீரத்தினுட் பொருந்தியுள்ள இடகலை, பிங்கலை, சுழுமுனை முதலிய நாடிகள் ஆதாரமண்டலங்கள், அங்கங்குள்ள தெய்வங்கள், அவற்றிற்குரிய யந்த்ர, மந்த்ரங்கள் முதலியவற்றையும், பிராணன், மனம், ஜீவன் முதலியவற்றையும் செவ்வனே விளக்குவதாம். ஆகவே, இவ்விரண்டிற்கும் சம்பந்தமுண்டாயிருக்கின்றது. இவ்வாறே மந்த்ரமும் இவ்விரண்டற்கும் உதவியாக நிற்கின்றது. வைத்திய வழியில் தீராத நோய்களை மாந்திரிக மூலமாகத் தீர்ப்பதைப் பார்க்கின்றோம். யோகமும் மந்திரத்தையே அநுஸரித்து நிற்பதாம்.

ஆரியர்களே!

இப்படிப்பட்ட பெருமையுடையது நமது வைத்யம். நம்முடைய வைத்தியத்தை எங்கிருந்த போதிலும் நாம் செய்யக்கூடும்; மலையிலும் காட்டிலுங்கூடச் செய்யலாம். ஆங்கில வைத்யம் அப்படியல்ல. அது இங்கிலாந்திலிருந்து மருந்துவராவில்லையாயின், இல்லையாம். தவிர, மருந்து ஷாப்புகள் இல்லாத ஊரிலும் இடத்திலும் அவ்வைத்தியர்கள், நம்மால் இங்கொன்று முடியாதென்று கூறவேண்டியவர்களேயாவர்: அநேகமாக நமது வைத்தியர்கள், மாந்திரீகம், ஜோதிடம், யோகம் முதலியன பயின்றவர்களாகவே யிருக்கின்றனர். இதனால் அவர்கள் ஒன்றை யநுஷ்டித்துப் பெரும்புகழும் பெற்று விளக்கினரென்பது எல்லோரு மறிந்ததே. இப்படிப்பட்ட வைத்யம் இப்போது கையாண்டு பயன் பெறுவாரற்றுக்கிடப்பது நம்நாட்டிற்குப் பெருங் கேட்டைத் தருவதேயாமன்றோ?

பொருள் படைத்தார்க்குப் பணமே மருந்தாகையினால், அவர்கட்கு நம் வைத்தியத்தைப்பற்றிச் சிந்தை செலுத்தவேண்டிய அவசியமில்லை; ஏழைகளுக்குப் பாடே கஷ்டமாகின்றது. ஒரு அறுகம் புல்லில் அளவற்ற நோய்களைக் குணப்படுத்திக் கொள்ளத்தக்க முறைகள் நம்வைத்யத்திலிருக்க, அதனைப் புறக்கணித்து ஆங்கிலங்கற்ற டாம்பீகர்களுடைய வழியையநுஸரித்து ஏழைகளும் கெடுவதென்றால், இது மதியீனமல்லாமல் வேறென்னாம்?

கடைசியாக நாம் கூறுவதொன்றுண்டு—ஸ்திரீகள் கர்ப்பவதியாவர்களாயின், அவர்கள் பிரஸவித்துக் குழந்தைகள் தாபவது மறுபிறவியேயன்றோ? அது ஸம்பந்தமாய் விசேஷக் கவனஞ் செலுத்தவேண்டியது ஆடவர்க்கேற்ற பெருங்கடமையன்றோ? இதனை மறப்பதுபோற் பெருங்கேடு தருவதொன்றேனு முலகத்தில்? இதற்கு நாம் செய்யவேண்டியது என்னவெனில் ஸ்திரீகளுக்கு அந்தச் சாஸ்திரப்பயிற்சி ஏற்படுமாறுசெய்து அவர்கள் அந்த வைத்தியத் தொழிலைக் கையாண்டுவரப் பழக்க வேண்டியதேயாகும். வீணே அவர்கட்கு பாட்டும் கூத்தும் போலிப்படிப்பும் கற்றுக்கொடுத்து அவர்களையும் தேசத்தையும் நாசஞ் செய்வதைவிட, இந்த வைத்யத்தை விளக்கவைப்பது மேன்மையன்றோ? இதற்குரிய வைத்யமுறைகள் அளவற்றன; அவை நம் வைத்தியநூல்களிற் காணப்படுகின்றன. அவையெல்லாம் கையாடுபவரில்லாமற் கெடுகின்றன.

ஆஸ்திகோத்தமர்களே!—நம்மவர்கள் தெய்வ நம்பிக்கையுடையவர்களாதலின், அவர்கள் முறையை மற்றவர்கள் அநுசரித்து நமது வைத்தியத்தைக் கற்றுத்தெய்வ நம்பிக்கையோடு வைத்யஞ்செய்வார்களாயின், பெரும்பயன் பெறுவார்களென்பது திண்ணம். வைத்யத்தினால் உலகம் நன்மையடையும் என்பது அநுபவத்தில் விளங்குவதாதலினால், ஒவ்வொருவரும் நல்ல அநுபவத்தைத் தமது குரு உபதேசித்த வழியில் நின்று ஒழுங்குபடி செய்து நன்மையடைய முயற்சிசெய்ய வேண்டுமென்பதை நன்கறிவார்களாக.

திரு-அ-சுப்ரமண்ய பாரதியார்,
சென்னை.

நினைத்தகாரியம் ஜயமாகுமா? எப்படி?

இதைப்பற்றி ஜோஸ்யம் கேட்க வேண்டுமோ? வேண்டாம். ஏன்?

(1) உன்னை உண்மையாக நம்பினவர்களுக்கு உதவிசெய்.

(2) உன்னையே சரணமாக அடைந்தவர்களுக்கு உதவிசெய்.

(3) உனக்குச் சிறிதேனும் ஞானம்வரும்படி படிப்பித்தவர், ஆசிரியர்-பெரியர் யாவரினும் அவர்களுடைய வறுமையைத்தீர்.

(4) உன்பொருளைக்கொண்டு தர்மஞ்செய். பிறர்பொருளைக் கொண்டு தர்மஞ் செய்யாதே. அப்படிச்செய்தால் அந்தத் தர்மம் உனக்கு விபரீதபலனைத்தரும். உண்மையாக ஏழைக்கு இரங்கு, உதவு.

(5) அன்போடு செல்வாக்கிருக்குங்கால் - உனது ஐம்பொறிகளும் நல்லநிலைமையி லிருக்கும்போது யாருக்கும் வாக்குறுதியைச் செய்யப் பின்வாங்காதே. உடம்பின்கோயில் ஜீவர்களே. சரீரமே ஆலயம். ஆத்மாவே சிவலிங்கம். சேதனத்தின் மூலமாய் தர்மம் அட்டமசித்து அறஞ்செய். அன்புடன்செய். நினைத்தது ஜெயம். ஒன்று ஆயிரம் பலன்தரும்.

(இயற்கையற்புதங்கள்.)

(1) மனம் இருப்பவனுக்குப் பணமும், பணமிருப்பவர்க்குத் தாராளமான மனமும் இருப்பதில்லை.

(2) பண்டிதனிடம் குணமில்லை. குணவானிடம் படிப்பில்லை,

(3) ரூபமுள்ள பெண்கள் பாவிய விதவைகளாகின்றனர். விகாரரூபமும் கொடிய குணமும் வாய்த்தவள் நெடுநாள் மனித ஸமூகத்தின் தலைமை வகித்து அதிகாரஞ் செலுத்துகிறாள்.

(4) நல்ல பணம் செலவாகிவிடுகிறது. செல்லாப்பணம் பெட்டியிலேயே தங்கி விடுகிறது. அதுபோல் நல்ல மனிதர்கள் சீக்கிரம் மேலுலகு நாடுகின்றனர். பரோபகாரமற்ற மனிதர் பலர் சிரஞ்சீவிப்பட்டம் பெறுகின்றனர். "ஓ பிரமா! கெட்ட நகைகளையழித்து நல்லநகை செய்வதா? அல்லது நல்ல நகைகளை எடுத்தெறிந்து விட்டுக் களிமண் அணிகளைக் காதில் பூணுவதா?"

(5) உண்மையான பொருள்களை நாம் பார்க்க விரும்புவதில்லை. போலிகளைப்பார்க்க நமது மனம் மிகவும் விரும்புகின்றது; உண்மையான நமது புராதன சாஸ்திரப்பொருள்கள் நமக்குக் கசப்பாகவும், ஆங்கிலேயர் எழுதிய-விபரீதப் பொருள்கள் வேதவாக்காகவும் மாறிவிட்டன.

(6) மனிதன் - ஜடத்தை நேசிக்கின்றான் - சோதிக்கின்றான் - களிக்கின்றான். சேதனப்பொருளை ஒருவரும் அதிகமாகச் சோதிக்கக்காணோம்; நேசிக்கக்காணோம்; உண்மையைக்கண்டு களிக்கக்காணோம்; உலகத்திற்கு உண்மைகளைத் தெரிவிக்கக்காணோம். இவை பிரஹ்மாவின் இயற்கை யற்புதமல்லவா?

T. K. இராமபத்ர சர்மா.

மாமிச போஜன விலக்கு.

ஒரு வேண்டுகோள்.

இங்கிலாந்தில் வாரத்தில் ஒருநாள் மாமிசபோஜனம் செய்வது தடுக்கப்படப் போகின்றது.

ஜெர்மனியில் வாரத்தில் இரண்டு நாள் மாமிசம் விற்றல் கூடாதென்று தடுக்கப்பட்டிருக்கின்றது.

ஜெர்மனியும், இங்கிலாந்தும் மாமிசபோஜனத்தை விலக்க முற்பட்டிருக்கின்றன. இந்தத் தேசங்களில் மாமிச போஜன விலக்குச் சங்கங்கள் பற்பலவாக ஏற்பட்டிருக்கின்றன. அநேக மாயிர ஐரோப்பியர் மாமிசபோஜனத்தை முற்றும் விட்டிருக்கின்றனர்.

மைசூர் ராஜ்யத்திலுள்ள இரண்டு ஜெயில்களில் கடுங்காவற்றண்டனை யனுபவிக்கும் கைதிகளுக்கு மைசூர்க் கவர்ன்மெண்டார் சென்ற வருடத்தில் பரீக்ஷார்த்தமாக மாமிச உணவு கொடுப்பதை விலக்கி மரக்கறி உணவைக் கொடுத்து வந்தனர். அதனால் கைதிகட்குச் சரீரசுகம் உண்டானதுமன்றி ஜெயிலின் செலவும் குறைந்ததென்று மைசூர் ஜெயில் இன்ஸ்பெக்டர் ஜெனரல் டாக்டர் ஸ்மித் கூறுகின்றார்.

டிசம்பர்மாதத்தில் நடைபெற்ற காங்கிரஸ் உபசாலைக்கமிட்டியார் மாமிசபோஜனத்திற்கு இரண்டு ரூபாய் வீதமும், மரக்கறி

உணவிற்கு $1\frac{1}{2}$ ரூபாய் வீதமும் திட்டம் செய்திருந்தனர். இதனால் மரக்கறி உணவிற்குச் செய்யும் செலவினும், மாமிச உணவிற்குச் செய்யும் செலவு அதிகமாமென்று தெரிகின்றது.

சுகாதார விதியை யநுசரித்தும் மாமிசமுண்பது பல வியாதிகளை யுண்டாக்குவதற்குக் காரணமா யிருக்கின்றதென்று இங்கிலீஷ் டாக்டர்கள் அபிப்பிராயப் படுகின்றனர். கால் நடைகட்குத் தொண்டைநோய், கால்நோமாரி, வாய்நோமாரி, சுரம், க்ஷயம் முதலிய நோய்கள் வருகின்றன. இவ்வாறு நோய் கொண்டுள்ள மிருகங்களையும் ஜனங்கள் கொன்று தின்கின்றனர். இதனாலும் மனிதர்கட்கு நோய்மிகுதியும் உண்டாகின்றது; அதனால் ஜனங்களுள் பலர் மரண மடைகின்றனர்.

மாமிச பட்சணிகளாகவே யிருக்கும் ஜெர்மானியரும், ஆங்கிலேயரும் மாமிச பட்சணத்தை முற்றும் ஒழித்துவிட வாரத்தில் சிலநாட்களில் ஏற்பாடு செய்திருக்கின்றமையினும், மாமிச போஜன முண்பது வியாதிக்கும், மதுபானத்திற்கும், சுகாதாரத்தின் கெடுதிக்கும், அநாசாரத்திற்கும், அநாகரிகத்திற்கும், அதிகச் செலவிற்கும் காரணமாயிருப்பதினாலும், இந்தியாவிலும் வாரத்தில் 2-3 நாட்களில் மாமிசம் விற்பது நிறுத்தப்பட வேண்டுமென்றும், இந்தியாவிலுள்ள ஜெயில்களிலெல்லாம் கைதிகட்கு மாமிச உணவு கொடுப்பது நிறுத்தப்படுதல் வேண்டுமென்றும், அவ்வாறு செய்வதால் ஜெயில் நிர்வாகச் செலவு குறைவாகுமென்றும், இந்தியாவிலுள்ள கலாசாலைகளிலெல்லாம் மரக்கறி உணவின் விசேஷத்தைப்பற்றியும், மரக்கறி உணவிலுள்ள சுகாதாரமும், மதுபான விலக்கும், குடும்பச்செலவு குறைவாகுமென்பதுபற்றியும் மாணவர்கட்கும், போதனை செய்தல் வேண்டுமென்றும், ஸ்ரீமான் லப்ஷங்கர் லட்சுமிதாசரவர்கள் கவர்ன்மெண்டார்க்கு விண்ணப்பஞ் செய்திருக்கின்றார். இந்த விண்ணப்பத்தைக் கவர்ன்மெண்டார் ஏற்றுக்கொண்டால், கவர்ன்மெண்டார்க்குக் கோடிக்கணக்கான பவுன் லாபங் கிடைக்குமென்றும், பிரிட்டிஷ் குடிகள் இந்தியா விருப்பதில் அதிக சுகாரோக்கியமுடையவர்களாக வாழ்வார்களென்றும், அது மதுபான விலக்கிற்குப் பெரிய அநுகூலமாகுமென்றும் அவர் கூறுகின்றார். அவர் கூறுவது உண்மையேயாம். ஆனால் அவர் வேண்டுகோளுக்கிணங்கி நடக்கும் அதிகாரமுள்ளவர்கள் யாரிருக்கின்றனர்?

யுத்தம்.

இப்போது ஐரோப்பாக் கண்டத்தில் நடக்கும் யுத்தம், அதிக மழையும், பனியும் அதிகமாகப் பெய்வதனால், தீவிரமாக நடக்கவில்லை. சாலோனிகாவில் மாத்திரம் ஜெர்மானியர் பெரும் பிரயத்தனஞ் செய்து வருகின்றனர். மழைக்காலங் கழிந்ததும் தீவிரமான சண்டை நடக்கப்போகின்றது. மழைக்காலம் மாறுவதற்கு முன்னர் ஜெர்மானியர் சமாதானத்தை முடித்துவிட வேண்டுமென்று, அதைப்பற்றி மிகுதியும் கவலையுடையவராயிருக்கின்றனர்.

(இதுகாறும் தமிழில் வெளிவராதது).

ஸ்வாமி விவேகாநந்தர்

இராஜயோகம்.

(தமிழ் மொழிபெயர்ப்பு)

இது உயர்ந்த கிளேஸ் கடிதத்தில் கிரவுன் 16 பக்க அளவில் 141 பக்கங் கொண்டது, ஸ்வாமிகளின் ஆப்டோன் படத்துடன் அச்சிடப்பட்டிருக்கின்றது. அணா பன்னிரண்டு.

1893-வது வருஷம் அமெரிக்காவில் சிக்காகோ நகரத்திற் கூடிய அதிமகத்தாகிய மதப்பிரதிநிதி மகாசபை முடிந்த பின்னர் அவ்விடங்களில் ஸ்வாமி விவேகாநந்தர் சஞ்சாரஞ் செய்திருந்தபோது, "இராஜயோக"த்தைப் பற்றி ஆங்கில பாஷையில் ஸ்வாமிகள் செய்த எட்டு உபந்நியாசங்கள் இதிலடங்கியிருக்கின்றன. இந்நூலானது இதுகாறும் எவராலும் தமிழ் பாஷையில் மொழிபெயர்த்து வெளியிடப்படவேயில்லை. ஸ்வாமி விவேகாநந்தர் இதில் குருமுகமாக அறியவேண்டிய பல உண்மைகளை விளக்கமாகக் கூறியிருக்கின்றாராதலின் ராஜயோக மார்க்கத்தை யனுஷ்டிக்க விரும்புவோர்க்கு இந்நூல் மிகு உபயோகமாகும். இது கோவிலூர் மடாலயம் ஸ்ரீ இராமகிருஷ்ண ஸ்வாமிகளவர்களால் மொழி பெயர்க்கப்பட்டிருக்கின்றது. இதில் அடியிற் குறிப்பிட்ட எட்டு உபந்யாசங்களடங்கியிருக்கின்றன.

அவதாரிகை	அத்யாத்மப் பிராண நியமனம்
முதற் சோபானங்கள்	பிரத்தியாகாரம் – தாரணை
பிராணன்	தியான – சமாதி
அத்யாத்மப் பிராணன்	ராஜயோகச் சுருக்கம்.

Registered No. M 520.

சக்கரவர்த்தினி.

"கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர் மற்றீண்டு வாரா நெறி".

VOL. 12. தொகுதி 12. | February 1917. பிப்ரவரி 1917. | NO. 7. பகுதி 7.

பொருளடக்கம். பக்கம்

1. சுற்றத்திற்கழகு சூழவிருத்தல் 161
2. கர்ணன் 165
3. ஆசாரமஞ்சரி 168
4. முயற்சி 170
5. பக்தியோகம் 174
6. ஒரு பருந்தும் நரியுங்கூடிய வஞ்சகமொழி ... 178
7. காற்று 180
8. அத்தர்-பப்பாளிக்காய் 182
9. காக்ருப்பூச்சிக்கு மருந்து 183
10. பேய் ... ... 18[illegible]
11. ஜீவகாருண்யம் ... ... 18[illegible]
12. வெசித்தேசத்துப் பிரவேசனக்கதை 188
13. யுத்தம் 190

கோ. வடிவேலுசெட்டியாரவர்களால் சென்னை கோமளேச்வரன் பேட்டை, சச்சிதானந்த அச்சியந்திர சாலையில் பதிப்பிக்கப்பட்டது.

லோகோபகாரி.

இது சோமவாரந்தோறும் சென்னை, சோமசேகரன் பேட்டையில் பிரகாசமாகும் தமிழ்ப் பத்திரிகை; 22 வருடகாலமாகச் செவ்வனே நடைபெற்றுவருகின்றது என்பது பிரசித்தமாம். இந்த எளிய பத்திரிகையைப் போலவல்லாது மக்களாய்ப் பிறந்தோர் பெறவேண்டிய பெரும்பேற்றை யடைதற்குரிய சாதனங்களை யாவரும் சுலபமாக அறியுமாறு போதித்து வருவதாம். இதுவேயன்றி இதில் கைத்தொழில், கல்வி, சுதேசிய, விதேசிய முதலிய அநேக விஷயங்கள், சிறுவர் சிறுமியர் யாவருக்கும் பயன்படுமாறு செவ்விய நடையில் எழுதப்பட்டு வருகின்றன. இலவசமாய்ப் பத்திரிகை வாங்குவோரும் இப்பத்திரிகையின் ஒரு பிரதியை வாங்கிப் படிப்பார்களாயின், இதனை மறந்துங் கைவிடமாட்டார்கள் என்பதாம், இஃது ஒவ்வொரு வீட்டிலுமிருத்தற்குரியது என்பதும் நன்கு விளங்கும். சாம்பில் காப்பி ஒன்று இலவசமாக அனுப்பப்படும்.

சந்தா விவரம்.

இந்தியா, சிலோன், பர்மாவிற்கு.

ஆறு மாதத்திற்கு ரூபாய் 1-14 | ஒரு வருடத்திற்கு ரூபாய் 3-8

(நேட்டால்-சிங்கப்பூர்-பினாங்கு).

ஒரு வருடத்திற்கு ரூபாய் 5-8 | ஆறு மாதத்திற்கு ரூபாய் 3-0

இதுகாறும் வெளிவராத புதுமுறையில் வாதவைத்திய நூல்கள்.

வாதாங்க திகைநவிதி—300, வாதவைத்திய விளக்கம்-200 மதிவெண்பா—100 - விலை ரூபாய் 1.

தேரையர் கரிசலை-புதுமுனி கரிசலை-கல்லாடர் ருத்திரம்-அணா 12

சக்ராவர்த்தினி.

"சக்ராவர்த்தினி" என்னும் பெயர்பூண்ட மாதப்பத்திரிகைசென்ற பன்னிரண்டுவருடங்களாகத் தமிழுலகெங்கும்பரவிவருகின்றதென்பது பிரசித்தமாம். இஃது எமது வாயிலாக 1912-ம் வருஷம் பிப்ரவரிமாத முதற்கொண்டு லோகோபகாரி ஆபீஸில் நடை பெற்றுவருகின்றது. இதில் கல்வியறிவு ஒழுக்கங்களைப்பயிர்த்தியாவதற்குரிய விஷயங்களும், மாதரடைவர் தருமங்களும், மனோலய சாதனங்களும், பிறவும் பிரகடஞ் செய்யப்பட்டு வருகின்றமையின், இது யாவரும் அத்தியாவசியமாக வாசித்தற் குரியதாம்.

சந்தாவிகிதம்.

இந்தியா-சிலோன்-பர்மாவிற்கு வருடத்திற்கு	ரூபாய் 2-0—0	பிறதேசங்கட்கு-வருடம்	2—8—0
ஷை 6-மாதத்திற்கு	ரூபாய் 1-4—0	ஷை 6- மாதத்திற்கு	1—8—0
		தனிப்பிரதி	3—0—0

MADRAS

சக்ராவர்த்தினி.

"கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றீண்டு வாரா நெறி".

VOL-12 } February 1917. { No-7.
தொகுதி-12 } பிப்ரவரி 1917. { பகு-7.

சுற்றத்திற்கழகு சூழவிருத்தல்.

நம்மவினர் வலிமையுடையவராக வாழவேண்டுமாயின், நமது சுற்றத்தார் தம்மிலின்றும் நீங்காமல் நம்மைச்சூழ்ந்து வாழ்ந்து வர, அவர்க்குவேண்டியவற்றைத் தவறாது மறவாதுஞ்செய்து வருதல்வேண்டும்; வந்தாற்றான் குறைவின்றி வாழ்தல்கூடும். தமது சுற்றத்தாரைப் பாதுகாவாமல், பழித்துவருபவன், எப்போதாவதொரு சமயத்தில் அவர்களால் அவமானப்படுவது நிச்சயமாம். "கெட்டோடிருப்பவன் கனமாகவாழ்வான்" என்னும் பழமொழி நம்மவினர்க்கு எதனை புணர்த்துகின்றது? தனது சுற்றத்தார் தன்னைவிட்டு நீங்காவாறு, அவர்க்கு வேண்டுவனவற்றைச் செய்து, அவரது பாதுகாப்பில் வாழ்பவன், தனது பகைவர்செய்யும் இடைக்கஞ்சாது மேன்மையாக வாழ்வானென்பதையன்றோ உணர்த்துகின்றது? கொக்கானது குளக்கரை முதலியவற்றின்கண் தனித்திருந்து, மீன்பிடிக்குந் தன்மைபோலவங்கேயாவதோரிடத்தில் தனித்திருந்து, பொருளைத்தேடி வாழ்ந்துவருபவன் தனக்கு விபத்து வந்த காலத்தில் தன்னைத் தாங்குவாரில்லாமையால், பெருந்துக்கமடைவானென்பது நிச்சயமாம். "சேர்ந்து வாழ்வதே சிறந்தவலிமை" என்னும் பழமொழியை நம்மவினர் பெரிதுங்கவனிக்கவேண்டும். ஒருகொம்பையொடிப்பது எவர்க்கும் மிக எளிதாயகாரியமாம்; அக்கொம்புபல ஒருங்கே சேர்த்துக்கட்டப்பட்டிருக்குமாயின், அவற்றையொடிப்பது எவர்க்கும் எளிதாயகாரிய

மன்றும், நம்மனோர் தம்முறவினர் தம்மை அன்பாகச் சூழ்ந்து வாழ இருப்பாராயின், கள்வர் பகைவர் முதலாயினோர்க்கு அஞ்ச வேண்டுவதில்லையாம்; அவர்க்கு அவ்வச்சம் சேர்வது மிக அருமை யாம். உறவினரினுதவியின்றித் தனித்துவாழ்வது பலகேடுகட் களுக்குக் காரணமாமென்பதை நன்குணர்ந்தவர் தம் உறவின ரைத் தம்மினின்றும் நீங்காவாறணைத்துவாழ்வா ரென்பதற்கு ஐயப்பாடெள்ளுத்துணையாகவேனுமில்லையாம். ஒருவர் எத்துணை வலிமையராக விருப்பினும், அவர் தம்முறவினரின் சார்பின்றி வாழ் வாராயின், அவர்க்கு ஆபத்து சம்பவிப்பது மிக எளிதாமாதலின், நம்மனோர் எப்போதும் தம்முறவினரோடு கூடிமனமொத்து வாழ் ந்துவருதல் வேண்டும்; இவ்வாறு வாழ்வது அவர்க்குப் பலநலன் களைத் தருவதற் கேதுவாம்.

தம்முறவினரைப்பாதுகாத்து, அவர் தம்மைச் சூழ வாழ இருப்பவர் வேறெவர்க்கு உபகாரஞ்செய்தற்குரிய வராவர்? தமது மாமன், மாமி, மைத்துனன், அண்ணன், தம்பி முதலாயி னோரிடத்துப் பட்சமில்லாதிருப்பவர் அயலவர் அறவினர் முதலா யினோரிடத்துப் பட்சமாகவிருந்து, அவர்க்குபகாரஞ்செய்தல் கூடுமோ? ஓராற்றுமணலின்கடியில் ஒருவகையான தண்ணீர்காற் றோடுவதுபோல நம்முடம்பினுள்ளும், நம் முறவினருடம்பினுள் ளும் ஒருவகையான இரத்தம் ஊற்றோடுகின்றது; அவரும் நாமும் ஓரேகுலத்திற்பிறந்து, ஓரேபந்தியில் உணவுண்டு உரிமையுடையவராயிருக்கின்றோம்; அவர் நம்மை அன்பாகச் சூழ்ந்துவாழாத போது வேறுயாரும் நம்மை அன்பாகச் சூழ்ந்து வாழாரென்பதறிந்தவர் தம்முடைய சுற்றத்தார் தம்மை அன்பா ய்ச் சூழ்ந்துவாழ வாழ்வதன்றி, ஒருபோதும் தனிமையாகவாழ விரும்புவதிலலென்பது நமக்கு நன்குவிளங்காநிற்கின்றது; அத னால் நாம் சுற்றத்தாரைவிட்டுத் தனிமையாக வாழவிரும்புகின் றோம்; தனிமையாக வாழ்வதனாலுண்டாகும் சங்கடங்களைச்சிறிது சிந்தித்துப் பார்ப்போமாயின், அவ்வாறு வாழ ஒருபோதும் முடன் படமாட்டோம். ஒருவர் தமது சுற்றத்தார் தம்மை அன்பாகச் சூழ்ந்து வருதற்குரிய காரியங்களைச் செய்து வருவாராயின், அவர் ஒருநாளவிலேனுந் [illegible] அறிவுடையார் பலர் தம்மை அன்பு [illegible] நன்குவாழ்வரென்பது தவறுவதில்லையாம். சுற்றத்தாரிடத்து வெறுப்பாயிருப்பவர் எவரிடத்தும் அன்பாகவிருப்பதில்லை யாத

லின், எம்பாலிடத்தும் அன்புடையவராகவிருக்கவேண்டுமாயின், முன்னர்ச் சுற்றத்தாரிடத்து அன்புடையவராக வொழுகிவருதல் வேண்டும்; சுற்றத்தாரிடத்து அன்புசெய்து அவர்க்குவேண்டு வனவற்றைக் குறிப்பறிந்து நமக்கியன்றவளவு வஞ்சனையில்லாது செய்து வருவோமாயின், அவர் நம்மை அன்பாகச்சூழ்ந்திருந்து நமக்கு வேண்டியவற்றைத் தவறாதுசெய்து வருவரென்பது நிச் சயமாமென்பதை யுணர்ந்தே நமது ஞானத்தாயாகிய ஔவைப் பிராட்டியார் "சுற்றத்திற்கழகு சூழவிருத்தல் = சுற்றத்தார்க்கு (நீ செய்யும்) அழகாவது (அவர் உன்னைச்) சூழ (அவர் நடுவே) வாழ்ந் திருத்தலாம்" என்றருளிச்செய்தனர்.

அன்பில்லாதாருக்கு இடமும் பொருளும் ஏவலும் (எவ்வள வும்) இருப்பினும், அவன் அவற்றுள் தனக்குவேண்டிய பயனை யடையானென்பதைச் சுற்றத்திற்கழகு சூழவிருத்தலென்பதனைக் கவனித்து நோக்குவார்க்கு விளங்காதிருப்பதின்றும். உறவினரை யுபசரித்து வருபவர் சகுனி முதலாயினோர் போன்றவுறவினரோடு நெருங்கியிராது, விதுரன், கர்ணன் முதலாயினோர் போன்றவுற வினருடன் நெருங்கி வாழ்ந்துவருதல்வேண்டும்; அன்புமுற்ற போது அணையாகவந்து நம்மைக்காப்பவர் உறவினரன்றி மற்றவ ரல்லரென்னும் அறிவு நமக்கிருக்குமாயின், நாம் நம்முறவினரை வெறுத்து வாழ்வது ஒருவாற்றானுமில்லையாம். திரிகடுகம் "கிளை ஞர் (உறவினர்)க் குதவாதவன் செல்வமும்......உள்ளனபோலக் கெடும்" என்றும், நான்மணிக்கடிகை "எப்பியின், கிளையுட் கழி ந்தார் கெடுக" என்றும் கூறுவதைக் கவனிப்போமாயின், உற வினர்க்குதவிசெய்யாதவரது செல்வம் விரைந்துகெடுவதாம்; உற வினருள் ஏழையாயிருப்பவர்க் குதவிசெய்து அவரை உயர்த்த வேண்டுவது ஒவ்வொருவர்க்குங் கடமையாமென்பது நமக்கு நன்குவிளங்குவதாமன்றோ? உறவினர்க்குதவி செய்தற்பொருட் டே நமக்குப்பொருள் கிடைத்து வருகின்றதென்று கருதி, தம்மு றவினர்க்கு உதவிசெய்து அவர் தம்மை அன்பாகச்சூழ்ந்து வாழ் ந்துவரச்செய்பவர் மிகுதியவராயின், வறியவராயிருந்து வருந்து கின்றவர் மிகச்சிலராக விருப்பரென்பது திண்ணமாம். "அற்ற குளத்தி னறுநீர்ப் பறவைபோல், உற்றுழித் தீர்வா ருறவல்லர் — அக்குளத்தில், கொட்டியு மாம்பலு நெய்தலும் போலவே, ஒட்டி யுறுவா ருறவு" என்று வாக்குண்டாங் கூறுவதைக்கவனித்து, நம்

முறவினர்க்கு நாம் உண்மையுறவினராக விருந்தொழுகிவருவோ மாயின், அவரும் நம்மிடத்து உண்மையுறவினராக விருப்பார்; இவ் வாறுபயுறவினரை யுடையவராயிருப்போமாயின், நமக்குவரும் துன்பங்கள் பெரும்பகுன்மையுங் குறியனைக்கண்ட பனிபோலத் தொலைந்து போவனவாம். "உற்றுரை யுதாசினங்கள் சொல்ல வேண்டாம்" என்றலகநீதி கூறுகின்றதன்றோ? உற்றுரையுதாசி னங்கள் சொல்பவர்க்குத் தீங்குபல வருமென்பதைத் தெளிவித்தற் கன்றோ அந்தவ்வாறு நமக்குத்தெரிவித்தது? பக்தனது அன் பைக்கு மறுத்தகாது பாலதருதல்போல நாம் நமது உறவினர்க்கு மறைக்காது உண்டிமுதலியவற்றைத் தந்துவருவோமாயின், ஏது மனையும் பெரும்பான்மையும் எக்கடையில்லாமல்வாழலாம்; நமக்கு வரும்கஷ்டங்களை யவர்களேற்றுக்கொண்டு, நம்மைச் சுகமாக வாழச்செய்வர். இது திச்சயமாம். சுற்றத்தாரென்பவர் ஒருவர்க் கு அவரது உறவினரது உறவினரும், அவரது உறவினருமாயிருப் பவராவர். இச்சுற்றத்தார் தம்மையன்பாகச் சூழ்ந்தபடி வாழ்ந்து வருபவர் அன்மை யென்பன செல்வமவற்றையும் பெறுவர். இது தவறுவதில்லையாம். நாம் இனிமேலும் உறவினர் நடுவேயிருந்து அவர்க்கு உவப்பனவற்றைச்செய்துவாழ்முயல்வோமாக.

திருக்குறள்.

"சுற்றத்தாற் சுற்றப் படவொழுகல் செல்வந்தான்
பெற்றத்தாற் பெற்ற பயன்"

நாலடியார்.

"பொற்கலத்துப் பெய்த புலியுகிர் வான்புழுக்கல்
அக்காரம் பாலோ டமராரைத் தாண்டலின்
உப்பிலிப் புற்கை யுயிர்போற் கிளைஞர்மாட்
டெக்கலத் தானு மினிது."

என்றுள்ள பிரயோகங்களிங்கு நன்குணரத்தபாலனவாம்.

ஓ

கர்ணன்.

கண்ணன் கழலிணை
எண்ண வருந்துணை.

முதலத்தியாயம்.

கொடையிற் சிறந்தோங்கி விளங்கியவர்களிற் சிறந்தோர்களா கிய சிலரைத் தமிழ்ப்புலவர்கள் தேர்ந்தெடுத்து, முதலெழுவள் ளல்கள், இடையெழுவள்ளல்கள் கடையெழுவள்ளல்கள் என முத்திறத்தினராக வகுத்திருக்கின்றனர்.

அவருள் முதல் எழுவள்ளல்களாவார்:—செம்பியன், காரி, விராடன், நிருதி, துந்துமாரி, சகரன், நளன் என்னும் எழுவர். இவர்கள் வரையின்றி யாவர்க்குங் கொடுப்போர்கள்.

இடை எழுவள்ளல்களாவார், அக்குரான், சந்திமான், அந்தி மான், சிசுபாலன், வக்கிரன், கன்னன், சந்தன் என்னும் எழு வர். இவர்கள் இரப்போர்க்குக் கொடுப்போர்கள்.

கடை எழுவள்ளல்களாவார்: பாரி, ஆய், எழினி, நள்ளி, மலயன், பேகன், ஓரி என்னும் எழுவர். இவர்கள் புகழ்வோர்க் குக் கொடுப்போர்கள்.

அவர்களுள், இடையெழுவள்ளல்களுள், ஒருவனாகிய கர்ண னையே கொடையிற் சிறந்தோர்க்கெல்லாம் உவமையாகக்கூறி அவர் களைப்புகழ்தல் கற்றோர்க்கும் மற்றோர்க்கும் பெருவழக்காய்நின் றது. "கர்ணனுக்குமிஞ்சின கொடையுமில்லை, கார்த்திகைக்கு மிஞ்சின மழையுமில்லை" என்னும் பழமொழி உலகவழக்கில் யாவ ருங் கூறுவதொன்றாகும். இங்ஙனம் புகழப்படும் பெருவள்ள லாகிய விச்சிரியவருணிதி, துரியோதனனுக்குத் துணைநின்று புரிந்த செயல்களால் ஒருபால் இகழவும் படுகின்றனன்.

அருளென்னும் விதையினிற்றோன்றி, அன்பென்னும் வேர் ஊன்றியுறவுன்றப்பெற்று, இன்மொழிகளென்னும் பசிய இலை களையும், நகைமுகமென்னு நன்மலரையும் உடையதாய் உலகத் துயிர்களுக்கு நலம்பலபுரிய ஒவ்வொருவரும் ஒப்பருஞ் சீர்த்திபார் கற்பெருந்தருவாகும் கொடையென்னுந்தன்னிய குணமார்ந்திருந்த இம்மன்னன் புகழ்பெறுவதற்குக் காரணமாக இவன்பாலிருந்த

சிறந்தகுணம் இவ்விகைத்துணை பொன்றுதாமோ? இன்னும் வேறுசிறந்த குணங்களும் இருந்தனவோ? இவனுடைய வள்ளன்மை எத்தகையது? இவன் இகழப்படுவதற்குக் காரணமாக இவர்பாலிருந்த தீக்குணங்கள் எவை? என்பனவற்றை யாவரும் நன்குணர்தற்பொருட்டு இவனது வரலாறுமுழுதும் ஈண்டு ஒரு சேர எழுதப்படுகின்றது.

அத்தினபுரியின் அரசனாகிய திருதராட்டிரனுடைய தேர்ச் சாரதியாகிய அதிரதன் மனைவியாகிய ராதை என்பவள் ஒருநாட் காலை அவனைநோக்கி "என்னுருமைக்காதலனே! இன்று நாம் முடன்வந்து கங்கையில் நீராடவிரும்புகின்றேன்" என்றனள். அச் சூதர்களின்றலைவன் "கண்மணி! எனக்கும் அது விருப்பமானதே; வருக; செல்வோம்" என்று அவளை அழைத்துக்கொண்டு கங் கைக்கரைக்குச் சென்றனன். சென்றவன் தன் அன்புக்குரியவளா கிய அம்மதிமுகத்தை நோக்கிக், "காதலி! யாவரும் கைதொழத்தக்க இக்கங்கையாகிய தேவி தன்பாலுள்ள தேர்கண்டகொண்டுங் கண்களால் உன்னுடைய பேரெழிலையுற்று நோக்குகின்ற அழ கினைக் காண். இந்நதி தன்னைப்போலத் தண்ணிய குணமும், இடையறாத நல்லொழுக்கமும் வாய்த்த உன்னைத்தழுவிக்கொண்டு களிக்கவிரும்பித் தன்னுடைய திரைக்கரங்களால் காதலோடன் டழைக்கின்றாள். சூரியனுடைய கிரணங்கள் தன்மேற்படுதலான் பலநிறங்கொண்டு தீ கண்டு சிரிக்கும்படி பலவண்ணமணிகளாற் செய்யப்பட்ட அணிகள் பலவற்றை அணிந்துகொண் டிருப்ப வளைப்போலத்தோன்றும் இத்தேவியின் பொலிவினைநோக்கு" என்றிவ்வாறு பல இனிய மொழிகளை அம்மெல்லியலுக்குக் கூறிக்கொண்டிருக்கையில் அக்கங்கை தன் திரைக்கரங்களால் மெல்லென அசைத்துக் கரைக்குக்கொண்டுவரும் ஒருபேழையைக் கண்டனன். உடனே அப்பெட்டியையெடுத்து அதைத்திறந்து அதில் "சூரியனே ஒரு குழவியின் வடிவுற்றுவந்தனனோ" எனக் கண்டோர் யாவருங் கூறத்தக்க ஒளிபொருந்திய முகமும், மேகங் களின் அருளின் பகுதிகளை வெல்லக்கொண் டமைந்தாலன்ன கண்களும், பவழக்கின்னம் போன்றவாயும், சங்கம் போன்ற கழுத்தும் வாழையின் இளந்தண்டுகளைப் போலு மென்மைவாய்ந் து, செங்கரும்பின் உருவம் பெற்றாலன்ன கைகால்களும், செம் மணிப் போன்ற விரல்களும், செம்பொன்னின் உருக்கினாற்செய்த

போன்றமேனியும் பொருந்திய ஒரு பச்சிளங்குழவி இருக்கக் கண்டு அளவுக்கடங்காத வியப்பும், களிப்புங் கொண்டவனாய் அதையெடுத்துத் தன் காதலியின் கையிற் கொடுத்தனன். அந்நங்கை அக்குழவியைக்கண்டு பிறவிக்குருடன் கண்பெற்றாற் போலவும், என்றும் வறுமையிலேயே வாடியிருந்தவன் பொற்குவி யலைக் கண்டடைந்தாற் போலவும் களிப்பென்னுங் கடலின் மூழ் கித் தன் காதலனை நோக்கி "என் அன்புக்கினியீர்! புத்திரப் பேறின்மையினாலாகிய நம்முடைய அருந்துயரைக் களைய வெண்ணி இக்கங்கை யென்னும் பூம்புனலரசி இம்மகவை நமக் களித்தனள். ஆ! என்ன வியப்பு! இப்பச்சிளங்குழவியின் காதில் குண்டலங்களும், மார்பிற் கவசமும் இருத்தலைக்காணீர். இவை யொருவரால் இடப்பட்டனவாகத் தோன்றவில்லை; இவை இம் மைந்தன் பிறந்தபோதே உடன் தோன்றியனவாயிருத்தல் வேண் டும்! இஃதோர் தெய்வப்பிறவியேயாகும்" என்றனள். அவற் றைக் கண்ட சூதர்பதன் இம்மைந்தனுக்குக் காதில் குண்டலங் கள் உடன் தோன்றியிருக்குங் காரணத்தால் கர்ணன் என்று பெய ரிடுகின்றேன். இவனுடைய மார்பில் கவசம் உடன் தோன்றி யிருக்குங் காரணத்தால் இவனுக்கு அரசகுமாரரைப்போலப் படைக்கலம் பயிற்றுவித்தல் வேண்டும். கண்மணி! இம்மைந்தன் உன்னை அவாவோடு நோக்குதலைக்காண்; ஆ! நான் என் ஆர்வ மெல்லாந் தோன்ற இதோ ஒருமுத்தங்கொடுக்கின்றேன்" என்று அக்குழவியை இருகைகளாலுந் தழுவி அதன் செவ்விய கனியைப் போன்ற வாயில் ஒரு முத்தங் கொடுத்தனன். அந்நங்கையும் அங்ஙனமே பலமுறை முத்தங்களைக்கொடுத்து மார்போடணைத் துக் கொண்டனள். பிறகு இருவரும் பெருங்களிப்போடு அக் குழவியை எடுத்துக்கொண்டு தம்மனைக்குச் சென்றனர். அவர் கள் அம்மைந்தனைப் பலவகையாகச் சீராட்டி அருளின் உருவை வளர்ப்பது போல வளர்த்துவந்தனர். அவனும் அறிவு வளர வளர்ந்து பலநூற் கடலின் கரைகண்டு பரசுராமரிடஞ் சென்று படைக்கலவகைகளைப்பயிலவிரும்பினன். அவர் தம்மிடம் படைக்கலங்களைப் பயின்ற பீஷ்மரோடு ஒருகால் போர்புரிந்து தோற்றாராதலால் இனி அரசகுலத்தினர்க்குப் படைக்கலங் கள் பயிற்றுவிப்பதில்லை என்று உறுதிசெய்து கொண்டிருந்தாரா கலின், கர்ணன் பார்ப்பனச் சிறுவனைப்போல வேடங்கொண்டு

அவரிடஞ்சென்று படைக்கலவகைகளையெல்லாம் நன்கு பயின்று சிறந்தவீரனாயினான்.

ஒருநாள் பாசுராமர் தமது ஆச்சிரமத்தில் கர்னன்தொடையில் தலைவைத்துத் துயின்றனர். அப்பொழுது ஒருவண்டு அவர்தொடையை நன்ருய்க்கடித்து மிகவும் உதிரம் பெருகும்படி செய்துவிட்டது. அவன் தன் குருவருடைய தூக்கத்தைக் கெடுக்கலாகாது என்றெண்ணி அதைப் பொறுத்துக்கொண்டு இருந்தான். பெருகிய உதிரம்சென்று பாசுராமரது உடலிற்பட்டது. அவர் அதனால் திடுக்கிட்டெழுந்து கர்னன்தொடையில் உதிரம் பெருகியிருத்தலையும் கர்னன் அதனால் உண்டான வருத்தைப் பொறுத்துக்கொண் டிருப்பதோடு உதிரத்தைக்கண்டு நடுங்கங்கொள்ளாமலிருத்தலையுங்கண்டு இவன் பிராமணன் அல்லன்; இவ்வாறு உதிரத்தைக்கண்டபின் உளநடுங்காமலிரான் என்று தமக்குள் எண்ணிக்கொண்டு, அவனைநோக்கி "உன் குலத்தை உண்மையாகக்கூறு" என்று வற்புறுத்திக் கேட்டனர். உடனே அவன் தன் வரலாற்றின் உண்மையைக் கூறிவிட்டனன். உடனே அவர்மிகவும் கோபங்கொண்டு "நீ உணர்ந்துள்ள உயர்ந்த படைக்கலங்கள் உனக்குப் பயன்படா தொழிக" என்று சபித்தனர். அச்சாபமேற்ற கர்னன் மிக்க வருத்தத்தோடு தன்வளர்ப்புத்தந்தையாகிய அதிரதனிடம் வந்து சேர்ந்தனன்.

கோவிந்தராஜ முதலியார், பவானி.

ஆசார மஞ்சரி.

(முன் தொடர்ச்சி)

குலமுடையார் அரசர்முன் இன்னவற்றைக் கூறாரெனல்.

(71) நற்குலத்திற் பிறந்தவர் அரசர்முன்பு தம்முடைய செல்வத்தையும் தாங்கற்ற கல்வியையும் தமக்குள்ள மதிப்பையும் தம்பாலுள்ள குணத்தையும் பகைவர்போல் நின்று, மிகுதியாக வியந்து பலமுறை பேசார்; (கூறுவாராயின், தம் வம்

சத்தோடு கர்வமாய்விடுவர்). மதிப்பு - புகழ்; குணம் - அறிவு, ஆண்மை முதலியகுணங்கள்.

குரவரை யின்னவிடங்களில் வணங்குதல் கூடாதெனல்.

(72) அறிவுடையார் அரசனது வீட்டிலும், தேவாலயத்திலும், தெய்வம் புறத்தேவந்து விழாக்கொள்ளு மிடத்திலும், அரசர் ஊர்வலம் வருமிடத்திலும், (தாய், தந்தை, தமையனே யன்றி) குரவரையும் கண்டால், அவரை வணங்கார்; (வணங்குவாராயின், அரசனையும் தெய்வத்தையும் அவமானம் செய்தவர்போலாவர்). விழாக்கொள்ளுதல் - பிரமோற்சவ முதலிய வழிபாடு கொள்ளுதல்.

அரசன் முன் இன்னின்னவற்றைச் செய்தல் கூடாதெனல்.

(73) அறிவுடையார் அரசர்முன்பு சிரித்தல், கொட்டாவிவிடுதல், காறியுமிழ்தல், தும்முதல் என்னுமிவற்றைச் செய்யார்; செய்வாராயின், அவர்மீது பழி குறையாதுவந்து நிற்கும்.

அரசர்முன் சிரித்தல் முதலியவற்றைச் செய்பவர் அவரது கோபத்திற்காளாகிக் கேடுறுவரென்பதாம்.

நன்மாணுக்கர் ஆசிரியரிடத் தொழுகவேண்டிய கிரமத்தைக் கூறல்.

(74) நன்மாணுக்கர் எப்போதும் தம்மாசிரியர் முன் அடக்கமொழுகுதல் வேண்டும்; அவ்வா றொழுகும்போது அவர் பாடஞ்சொல்லுதலை நிறுத்தியவுடன் தாமும் படிப்பதை நிறுத்துதல் வேண்டும்; அவர் முன்னிருக்கும்போது அவர் எழுந்துபோ வென்று சொல்லுதற்குமுன் எழுந்துபோதல் கூடாது; அவர் பாடமுதலியவற்றைச் சொன்னால், சிந்தையைப் புறத்தேவிடாது காதுகொடுத்துக் கேட்டல் வேண்டும்; அவர்யாதொன்றும் கூறவிடின், பாடஞ்சொல்லவேண்டுமென்று தாமவரைத் திருப்பிக் கேளாதிருத்தல் வேண்டும். (இவ்வாறொழுகுதலே நன் மாணுக்கரது கடமையாம்).

பெரியார் கூடியுள்ள சபையில் ஒழுகவேண்டிய கிரமத்தைக் கூறல்.

(75) அறிவுடையார் கல்வி கேள்வி அறிவு ஒழுக்கங்களால் பெரியவர்களிருந்து கூடியுள்ள சபையில் தம்மாசுடைமையைக் [illegible]

கட்டார்; காதைச் சொறியார்; கையை மேலெடுத்துப் பேசார்; பெண்களை நோக்கார்; பிறர் தம் செவியில் சொல்லுஞ் சொல்லையுங் கேளார். (இவ்வாறொழுகாதவர்க்கு அவமதிப்புண்டாம்).

ஒருவர் மற்றொருவரிடத்து ஒன்றனைச் சொல்லும்போது, அதனைச் சொல்லுங் கிரமத்தைக் கூறல்.

(76) அறிவுடையார் ஒருவரிடத் தொன்றனைச் சொல்லும்போது, அதனை விரைவாகக்கூறார்; கூறியதை மேன்மேலுங் கூறார்; பொய்பய சொற்களை விரித்துக்கூறார்; தாம் சொல்லுதற்குரிய சொற்களைப் பலதிறத்தனவாக விரித்துக்கூறார்; ஒருமிக்கத் தாம்சொல்லவேண்டிய வினைத்தையும் சிலவெழுத்துக்களையுடைய பதத்தாலே பொருள் விளங்கும்படி காலத்திற்கேற்றவாறு அவரது சமயமறிந்து, அவரிடத்துக் கூறுவர். (அவ்வாறு சொல்லாதவர் தாம் சொல்லக்கருதியதன் பயனையடையார்).

குலமகளிரது செயலைக்கூறல்.

(77) நற்குலப் பெண்டிர் தங்கணவரது உடம்பின்வடிவத்தைப் பார்ப்ப தல்லாமல், மற்ற ஆடவரது மேனி எவ்வளவு அழகுடையதா யிருப்பினும் அதனைப் பாரார்; தம்முடம்பின் வடிவத்தையும் பாரார்; (மற்ற ஆடவர்முன்) நகையினைக் கோதார்; கைந்நொடித்தல் முதலியவற்றைச் செய்யார். (இவ்வாறொழுகாத மாதர் நற்குலப் பெண்டிராகார்). மேனி - அழகு. கைந்நொடித்தல் முதலியன - சிட்டிகைபோடுதல், கண்சாடை காட்டுதல், குறிப்புமொழிகூறல் முதலியனவாம்.

அரசனுடனிருப்பவர் ஒழுகுங்கிரமத்தைக் கூறல்.

(78) அரசனுட னிருப்பவர் பிறரோடுகூட விருந்து ஒன்றனை ஆராய்ச்சி செய்தல் கூடாது; அரசனை நெருங்கி நிற்றல் கூடாது; அரசன் ஒருவனிடத் தொன்று சொல்லும்போது அதனைத் தங்காதுகொடுத்துக் கேட்டல் கூடாது; அப்போது சமீபத்தி லிருக்கும்படி நேரிட்டால், ஏதோவொன்றனை யாராய்ச்சி செய்வார்போல முகந்திரிக்கு நிற்றல்வேண்டும். (இவ்வாறொழுகாதார் அரசனது கோபத்திற் காளாய், வருத்தம்பலவற்றை யடைவர்).

(வரும்)

முயற்சி.

விதிப்படி நடக்குமென்றெண்ணி யாதொருகாரியத்திலும் முயற்சிசெய்யாமலிருத்தலே வறுமையை யடைதற்கு முக்கிய காரணமாம்.

சாத்தியப்படாத பொருளையடைய முயல்கின்றவன் மேன்மையையுடையவனாயினும் பேயர்களில் முதல்வனாகக் கருதப்படுவான்.

யாதொருகாரியத்தினிடத்துஞ் சோம்பலின்றித் தக்கமுயற்சி செய்பவனை வறுமை நெருங்குதற் கஞ்சும்; ஆதலால் சோம்பலுக் கிடங்கொடாது முயற்சிசெய்யவேண்டும்.

மேலாகிய விரதங்களை விடையூறின்றி நடத்துமுயல்கின்றவன் சிறியவனாக விருப்பினும் தவசியெனப் பெயர்பெறுவான்.

பயிர் என்பது பயிற்சி-முயற்சி யெனவுங் கொள்ளப்படும். ஆதலால் பயிர்செய்வதி லியற்படும் முயற்சியே செல்வப்பேற்றிற்கு முதற்காரணம்.

உழவு முதலியனவைகளில் வருத்தமுற்று இட்டபயிர் பலனைக் கொடுக்குங்காலத்தில் சோம்பலால் தக்கபடி நடத்தவறியாதவன் தரித்திரத்தை யடைவான்.

எல்லாக்காரியங்களுக்கும் அவைகளாலடையும் பயனுக்குந் தெய்வாதீனத்தைப் பார்க்கிலும் புருஷகாரமே மேலானதாகும்; எங்ஙனமெனின், ஒருவன் [illegible] தாம் கடவுள் தன்மையோடு புருஷகாரமில்லாமல் தெய்வ [illegible] சொல்ல முடியாது.

மன்னரும் அறிஞரும் எவரினையும் பலவாறுணர்ந்தச் [illegible] புருஷகாரமென்கிற முயற்சியிலல்லாமல் எவனாய் வெளிப்படுவதில்லையே! ஆதலால் முயற்சியின்றி ஒன்றும் நிறைவேறாது; அதில்லாமற் சோம்புற்றவன் பயனையடையான்.

முயற்சியில்லாவிடின் கல்வியில்லை; கல்வியில்லாவிடின் புத்தியுமில்லை; பராக்கிரமமுமில்லை; இவைகளில்லாவிடின் பொருளுமில்லை; பெருமையுமில்லை; சிலவேளை பொருள்மாத்ர மிருந்தாலும் பயன்படாது; ஆதலால் முயற்சியில்லாவிடின் ஒன்றும் சித்திக்காது.

முயற்சியுள்ள புருஷனிடத்திலேயே மஹாலக்ஷ்மி யடைகிறாள். தெய்வத்தினால் பாக்யம் கொடுக்கப்பட வேண்டுமென்று ஆலஸ்யமாகிய சோம்பலும் அவிவேகமாகிய தெரியாமையுமுள்ள புருஷர் நினைக்கின்றனர். ஆகையால், தெய்வத்தினிடத்தில் நம்பிக்கையைவிட்டு சொந்த சக்தியினாலே முயற்சிசெய்தும் ஒருவேளை கார்யம் ஸாதிக்கப்படாமற்போனால் குற்றமென்னவென்று ஒரு வித்வானுரைத்திருக்கிறார். அதையோசித்தால் எளிதில் தெரிந்து கொள்ளலாம்.

தெய்வத்தால்யாவும் நடக்குமென்று முயற்சியைக் கைவிட்டவன் கெட்டுப்போவான்; புருஷகாரமில்லாமல் தெய்வம் ஃபலிக்கிறதில்லை யென்பதை யறிந்தவனே புத்திமான்.

பலவற்றிலுஞ் சென்றுழன்றலைகின்ற மனத்தை விவேகத்தால் தடுத்து நிலைக்கச்செய்வதே மோக்ஷத்திற்கு முக்ய காரணமான முயற்சியாம்.

கஷ்டதசையிலிருக்கும் ஒருவன் அக்கஷ்டத்தைப் பாராட்டாமல் ப்ரயோசனத்தைக் கொடுக்குந் தொழிலின்னதென்றும் அதனிடத்து மனதைச்செலுத்தி முயற்சிசெய்தால் ப்ரயோசனத்தை யடையலாகுமென்றும் புத்தி கூர்மையால் பகுத்தறிந்து நடப்பானாயின் அவனுக்குச்செல்வமும் பெருமையும் ஏன் உண்டாகாமற்போகும்? உண்டாவது ஸித்தமே.

செய்யத்தக்க கார்ய மின்னதென்றும் அதனிடத்து புத்தியைச்செலுத்தி முயற்சிசெய்தால் பலனுண்டாகுமென்று தெரிந்திருந்தும் சோம்பலால் அதைக்குறித்து முயற்சிசெய்யாமல் தரித்ரத்தால் வருந்துவோன் கல்வியிற்சிறந்தவனாக விருந்தாலும் அவனைப் அப்ரயோசகனென்று உலகம் பழிக்கும். இவ்விதப் பழிப்புக்காளாவதை விட இறத்தல் நலமாகவிருக்கும்.

பிறர்க்கு உபகாரஞ் செய்வதினிடத்து புத்தியைச் சோரவிடாமலிருப்பவன் பலநன்மைக்கும் ஆதாரமாகிய முயற்சியினிடத்து சிந்தையுடையவனாக விருப்பான்.

முயற்சிசெய்வதில் ச்ரத்தையில்லாதவன் பரோபகாரஞ் செய்யவேண்டுமென்கிற எண்ணத்தைமாத்ரங் கொண்டிருந்தால் அவ்வெண்ணம் முடிவுபெறாது.

எளிதில்பெறத்தக்க பலநன்மைகள் தனக்கெதிராக விருக்கும். முயற்சியின்மையால் சோம்பலுற்று அவைகளைப்பெறாமல் விட்டுவிடுகிறவன் யாதொருபயனும் அடையமாட்டான். அஃதெவ்வாறெனின், எல்லாவுயிரையும் வதைப்பதற்குக் காரணமாகிய கூர்மையுடைய வாளாயுதம் பேடிகையில் விளங்கிக்கொண்டிருந்தால் அதனால் யாது பயன்?

உபகாரிகளாக விருக்கின்ற நல்லோர்கள் தங்களுடைய சௌக்யத்தை விரும்பாமலே ஒருகார்யத்தில் ப்ரவேசித்து அதனாலாகிய த்ரவிய ஸம்பாதனையைத் தன்சுற்றத்தார் நட்பினர் முதலாகியவர்களுக்குண்டாகிய துன்பங்களைமாற்ற உபயோகப்படுத்தி அவர்களுக்கு சௌக்யத்தை யுண்டாக்குவார்களென்று முன்னோர்கள் சொல்லியிருக்கின்றார்கள். அஃதெவ்வாறெனின், மாளிகை முதலாகிய வீடுகளினுலே தூண்களுக்கு யாதொரு நன்மையுமில்லாதிருந்தாலும் அத்தூண்கள் தங்கள் வருத்தத்தை நினையாமலே அம்மாளிகையைத் தாங்கிக் காப்பாற்றுவது போலவாம். ஆதலால் இவர்களைத் தாங்குவோரென்று நயனூலுஞ் சொல்லியிருக்கின்றார்.

முயற்சியினிடத்து மனத்தளர்ச்சியில்லாதவனுக்குச் செல்வம் வளர்ந்தேறுமென்றும், அம்முயற்சியில் மனவூக்கமில்லாதவனிடத்து வறுமை நிரந்தரங் குடிகொண்டிருக்குமென்றும் சொல்லப்படும். இந்நீதியையறிந்து நடக்கின்றவனுக்கு எல்லாநன்மையும் எளிதில்வந்து கைகூடும்.

மூதேவி சோம்பலையுடையவனிடத்து வாஸஞ்செய்து கொண்டிருப்பாளென்றும், சோம்பலையகற்றி நன்முயற்சி செய்பவனிடத்து ஸ்ரீதேவி நர்த்தனஞ் செய்துகொண்டிருப்பாளென்றும் முன்னோர்கள் சொல்லிய நீதிவாக்யம் இப்போது அநுபவத்திற்கும் ஸரியாகவிருப்பதால் யாவரும் முயற்சிசெய்வதில் ச்ரத்தையுடையவர்களாக விருத்தல் வேண்டும்.

ஒரு தொழிலினிடத்து முயற்சிசெய்தும்-ஊழினாலாயினும் தெரியாத மற்றக்காரணத்தினாலாயினும் பலன்கிடையாமற்போனால் குற்றமொன்றுமில்லை; இதற்காக உலகம் பழித்துக் கூறாது. ஆனால் விதியில்லையென்று முயற்சியைக்கைவிட்டுச் சோம்பலுற்றவனை உலகம் பழிக்கும்.

வழியிலே ஒன்றுமடைவதற் கிடமில்லாதிருந்தாலும் மனவுறுதியுடையவன் தனது நன்முயற்சியால் அவ்வழியுங்கடந்து நடப்பானென்று அறிவுடையோர் சொல்லியிருப்பதற்கு திருஷ்டாந்தமென்னவெனில், பதினாறுவயதிற் கதிகமில்லாத மார்க்கண்டேயன் தன்னுடைய மனவூக்கத்தின் முயற்சியால் என்றும் பதினாறு வயதினையுடையவனாக விருந்தானென்கிற ப்ரமாணமிருக்கவில்லையா ?

ஒருகாரியத்தை முயன்று நடத்திவரும்போது அதற்குப் பல விகாதங்கள் மேன்மேலும் வருமாயினும், அவைகளுக்கு இடங்கொடாமலும் மனங்கலங்காமலும் தான்தொடங்கிய காரியத்திற்குப் பங்கம்வாராமல் நிறைவேற்றுகிறவனுக்கு உலகத்திலொருவனும் சமமாக மாட்டான்.

கரைபுரண்ட வெள்ளம்போல் பலதுன்பம்வந்தாலும் அவற்றை உள்ளத்தில் உன்னிப்பார்த்து மனமகிழ்ச்சி கொண்டிருப்பவனுக்கு அத்துன்பம் வழியிலே வந்தாலும் உடனே கெடுமென்று முன்னோர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

உளையிலழுந்திய வண்டியைக் கடா தன்வருத்தத்தைப் பாராட்டாமல் மாறுதல்கொண்டிழுப்பதுபோல நன்முயற்சியில் புத்தியுடையவன் தான் நடத்துங்காரியத்திற் கிடையூறுவருமாயின் தன்னுடல் வருத்தத்தைப் பாராட்டாமல் கூடியமுயற்சிசெய்து நிறைவேற்றுவான். இவ்வகையோருக்குப் பலதுன்பமுண்டாயிருந்தாலும் அவை யுடனே அவர்களைவிட்டு நீங்கிப்போய்விடும்.

ஆதலால், உயிர்க்குத்துணைக் காரணமாக விருக்கும் முயற்சியினிடத்தில் மனத்தளர்ச்சி செய்யாமல் ஜாக்ரதையாயிருத்தல் வேண்டும்.

பக்தியோகம்.

ஈசுவரதத்துவம்.

(முன்தொடர்ச்சி)

அதனால் பிரஹ்மத்தின் சாகாரமான அவஸ்தையில் மாத்திரந்தான் நமக்குப் பக்திசாத்தியமாமென்பது ஸ்பஷ்டமாம்.

க்லேசோதிகதரஸ்தேஷாம் அவ்யக்தாஸக்தசேதஸாம்

பொருள்:—தேகாபிமானிகளுக்கு நிர்க்குணப் பிரஹ்ம உபாசனை மிகக்கடினமாம் (ப. கீ.-அ. 12-சு. 5). நமது நாற்புறமும் காணப்படும் சகல பதார்த்தங்களிலும் ஈசுவரரூபத்தைக் காண்பதுதான் பக்தி. சகுணவஸ்தையிலன்றி, நிர்க்குணவஸ்தையில் நாம் பிரஹ்மத்தைத் தியானிக்கமுடியாதாம். உண்மையே. ஆனால், நமது ஞானத்திற்கு விஷயமாயிருக்கும் சகல பதார்த்தங்களைப் பற்றியும், இக்காரியம் அவ்வாறே யாமன்றோ! அங்ஙனமன்றி, பதார்த்தங்களைப்பற்றி நமக்கு யாதொரு ஞானமுமுண்டாவதின்றாம். அத்யாத்ம சாஸ்திரஞர்களுள், முதன்மையராகிய கபில மகரிஷி நீண்டகாலத்திற்கு முன்னமே இக்காரியத்தைப்பற்றிப் பிரதிபாதித்திருக்கின்றனர். நமது அந்தக்கரணத்தின் ஞானசக்தியுடன் பாஹ்ய விஷயங்களுக்குச் சம்பந்தமுண்டாகும்போது எந்த உபலப்தி (தோற்றம்) உண்டாகின்றதோ அதுதான் உண்மையாயிருப்பதாமென்பது அவரது அபிப்பிராயமாம். நமது தேகமுதல் ஈசுவரபரியந்தமுள்ள சகல ஞேயவஸ்துக்களினதும் உபலப்தி நமக்குண்டாவது இவ்வாறேயாம். நமது ஞானசக்தியுடன் பாஹ்யமாகிய யாதோரு வஸ்துவின் சம்பந்தமுண்டாகும் அவஸ்தைதான். இதைத்தடுக்க முடியாத சம்யோகத்தைத்தான் நாம் சத்யம் எனக்கூறுகின்றோம். இங்ஙனமன்றிப் பதார்த்தங்களின் யாதொருஞானமும் நமக்குண்டாவதின்றாம். அங்ஙனமாங்கால் கடவுளுக்கு வடிவத்தைக் கற்பித்திருப்பதனால் கடவுள் பொய்யாமெனக்கூறுவது முற்றிலும் பொருத்தமுடையதன்றாம். உலகத்தில் சத்தியமாக வியவஹரிக்கப்படும் பதார்த்தங்களியாவும் ஈசுவரனிடத்து ஒடுங்கியிருக்கின்றன. உலகத்தில் காணப்படும் பதார்த்தங்கள் எவ்வாறு சத்தியமாயிருக்கின்றனவோ, அவ்வாறே ஈசுவரனும் சத்தியமாயிருக்கின்றார். ஆதலால் நாஸ்திகர் எப்பதார்த்தத்தை யேனும் சத்தியமாக நினைக்கின்றாராயின், ஈசுவரனது சத்தையையும், அவர்கள் அங்ஙனமே ஸ்தாபிக்கின்றனரெனக் கொள்ளல் வேண்டும். கடவுளைப்பற்றி அத்யாத்ம சாஸ்திரஞர்களின் அபிப்பிராயங்கள் இவ்வாறாம்.

௩ — பக்தியோகத்தின் பரமப் பிரயோஜனம் அபரோட்சாநுபூதியாம்.

பக்தனுக்கு இவையாவும் தனது பக்திக்கு உறைப்பைக் கொடுக்க மாத்திரம் அவசியப் படுகின்றன; அதனைத் தவிர வேறு பிரயோசனமின்று—யுக்திக்கும், புத்திக்கும் கோசரமல்லாத அவஸ்தையாகிய ஆன்ம சாட்சாத் காரத்தை அடைவதற்குரிய மார்க்கத்தில் தான் பக்தன் பழகுகின்றான். சாஸ்திர பாண்டித்யத்தாலும், யுக்தியாலும் மாத்திரம் அடையக்கூடாததாகிய ஸ்தானத்தைப் பக்தன் ஈசுவர காருண்யத்தினாலடைகின்றான். கேவலபுத்தியையும், யுக்தியையும் மாத்திரம் உபயோகித்து அஞ்ஞான அந்தகாரத்தில் தத்தித்தவறி அலையாமல் அவன் சூர்ய தேஜஸைப்போல் சதா பிரகாசித்துக்கொண்டிருக்கும் ஈசுவர சாட்சாத் காரத்தை யநுபவிக்கின்றான். சாஸ்திர ஞானத்தாலும் யுக்தியாலும் மாத்திரம் அந்த ஸ்தானத்தை யடைதல்கூடாதாம். அந்த ஸ்தானத்தை யடைந்த பின்னர்ப் பக்தன் ஈசுவரனைப்பற்றி வாதிக்கவோ, அந்நியர் கூறுவதைக் கேட்டு நம்பவோ செய்வதின்றாம். ஏனெனின், பக்தன் ஈசுவரனைப் பிரத்தியட்சமாகத் தரிசிக்கின்றான்; அவனை அநுபவிக்கின்றான். இத்தகைய ஈசுவரப் பிரத்தியட்சம்—ஈசுவராநுபவம், ஈசுவரானந்தம்—ஏனைய வஸ்துக்களைவிட மேன்மையுடையதன்றோ? அன்றியும்; இவ்வவஸ்தை மோட்சத்தை விடவும் மேன்மையுடையதாமெனக் கூறும் பக்தர்களும் மிகுதியாகவுளர். இதுவன்றோ உத்கிருஷ்ட புருஷார்த்தம். தேக சம்பந்தமாகிய சுகங்களைக் கொடுக்கும் வஸ்துக்கள் மாத்திரமே உலகத்தில் பயனைக்கொடுப்பனவும், பயனுடையவுமாமென நம்புவோர் மிகுதியாக விருக்கின்றனர். ஈசுவரன், ஆத்மா, அமரத்துவம் (நித்யத்துவம்), மதம் என்பவையாவும் பணஞ் சம்பாதிப்பதற்கும் தேகசுகத்தைக் கொடுப்பதற்கும் பயன்படுவதன்றாயின், அவற்றால் வேறு பயனொன்றுமின்றாம். விஷய அநுபவங்களைத் தரும் இந்திரியங்கட்குத் திருப்தியைக் கொடுக்காதனவாகிய சகல பதார்த்தங்களும், இவர்களது அபிப்பிராயப் பிரகாரம் அநாவசியங்களாம். பிரயோசனம் என்பது அவரவர் அந்தக்கரணத்திற்கொத்த சில பிரத்தியேக அபீஷ்டங்களை யொட்டியிருக்கின்றது. அதனால் உண்ணுதல், உறங்குதல், குடித்தல், சந்ததி

விருத்திசெய்தல், மரித்தல் என்பனமுதலிய அவஸ்தைகளின்று மேற்போகாதவர்களும், விஷயங்களாலுண்டாகும் இந்திரிய சுகத்தை மாத்திரம் இச்சிப்பவரும் ஆகிய ஜனங்களுக்கு இதனினும் மேன்மையாகிய ஓர் அவஸ்தை அவசியமாமென்று தோற்றுவதற்கு மாத்திரமேனும் பழக இன்னும் அநேக ஜன்மங்கள் எடுக்கவேண்டும். ஆனால் அநித்யங்களும், துக்கங்கலந்தனவுமாகிய இவ்வுலக சுகங்களைவிட நித்யமாகிய ஆன்ம விஷயசுகம் மிகு மேன்மையுடையதாமென நினைப்பவர்கட்கு ஈசுவரனும், ஈசுவர பஜனமுந்தான் மிக மேன்மையாகிய புருஷார்த்தம். ஈசுவர கடாட்சத்தினால் அத்தகைய மகான்கள் இவ்வுலகத்தில் இன்னமுஞ் சிலர் எஞ்சி இருக்கின்றனரென்று சந்தோஷத்துடன் கூற வேண்டியதாயிருக்கின்றது.

பக்தியோகம் கௌணி அல்லது சாதனபக்தி யென்றும், பராபக்தியென்றும் இரண்டாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றதென்று முன்னரே கூறியிருக்கின்றோம். பக்தியின் தொடக்கத்தில் அந்நிய அபேட்சைகள் மிகுதியாக வேண்டுமென்று நமக்குத் தெரியவரும். எல்லா மதங்களிலுமுள்ள புராண சம்பந்தங்களாகிய மூர்த்தி உபாசனைகள் பக்தர்களாகிய ஜீவர்களை ஈசுவரனது அபிமுகமாகச்செய்வதற்குரிய உதவிகளாமென்பது வாதமற்ற விஷயமாம். இதிகாசபுராணங்கள் சாஸ்திரத்திற்கூறிய நித்ய, நைமித்திகக் கருமங்கள் பூஜாவிதிகள் என்பவையாவும் எந்த மதத்தில் மிகுதியாகக் காணப்படுகின்றனவோ, அந்த மதத்திற்றான் கம்பீரமும், உதாரபுத்தியுமுடைய ஞானிகளும், பக்தர்களும் உண்டாயிருந்தனரென்னும் விஷயம் சாரமுடையதாம். ஆனால் மகா மூடர்களாகிய சில மதப்பித்தர்களால் சீர்திருத்தப்பட்ட சிலமதங்களுள, மிகக் கௌரவமுடையனவாகவும், அழகாகவும், ஆனந்தத்தை யுண்டுபண்ணுவனவாகவும், ஈசுவரனது அபிமுகமாய்த் தப்பித்தவறி நடக்கும் அற்புதத்தியுடையோர்க்கு உதவி புரிவனவாகவுமிருக்கும் அநேக விஷயங்களை அவ்வகை மூடர்கள் அத்தகைய மதங்களினின்று நீக்கிவிட்டனர். அங்ஙனம் பரிஷ்கரிக்கப்பட்ட மதங்களைப் பரிசோதித்துப் பார்க்கின் தோன்றி ரசமுடைய பாகம் ஒன்றும் அவைகளிற் காணப்படுவதின்றாம். இத்தகைய மதங்களை யநுசரிப்பவர் கேவலம் சார்வாகர்களுக்குச் சமானராவர். இவ்வுலக சுகாநுபவந்தான் அவர்களின்

பாம புருஷார்த்தம்; ஈசுவர பக்தர்களென்று வேஷம் புனைந்து நடக்கும் இத்தகைய மூடர்களாகிய மதப்பித்தர்கள் உண்மையாக நாஸ்திகர்களாம். அவர்கள் இயல்பாகிய வேஷத்தைத் தரிப்பராயின் அது உலகத்திற்கு மிக நன்மையைப் பயப்பிப்பதாயிருக்கும். ஒரு நிமிஷமாயினும் ஆன்மவிஷய காரியங்களில் முயற்சிப்பதும், சுவாநுபவ சித்திக்காகப் பிரயத்னஞ் செய்வதும் நீண்ட காலம் அதைப்பற்றிப் பிரசங்கஞ் செய்வதைவிட மிக மேன்மையாம். கேவலம் மதப்பித்தர்களுள் மகா ஞானியாகவோ, மகா பக்தனாகவோ விருக்கும் ஒருவனையேனும் காண்பித்துக் கொடுக்கக்கூடுமோ? அது முடியாததாயின் மௌனத்துடன், சுத்தஹிருதயமுடையவராய் இந்திய தேசத்திலுள்ள மகான்களாகிய ரிஷிகளின் சமீபத்திற்சென்று விண்ணப்பஞ்செய்க. இவ்விஷயத்தைப் பற்றி அவர்கள் கூறுவதியாதென்று மிகச் சிரத்தையுடன் அறிய முயற்சிசெய்க.

ஒரு பருந்தும், நரியுங் கூறிய வஞ்சகமொழி.

விதிசாபுரம் என்னும் ஒரூரில் ஒரு வேதியன் இருந்தனன். அவனுக்கு வெகுநாட்கள் புத்திரப் பேறின்றியிருந்து ஓர் ஆண் குழந்தை பிறந்தது. அக்குழந்தை பிறந்த சில நாட்கள் இருந்து இறந்துவிட்டது. வேதியனும் அவன் மனையாளும் மிகவும் வருந்திச் சுற்றத்தவர் சூழ அக்குழவியைச் சுடலைக்குக் கொண்டு போய்த் தரையிற் கிடத்தி அம்மகவின் அழகிய முகத்தினைக் கண்டு மிகவும் அறற்றலாயினர். அங்கு ஒரு பருந்து அவர்களுக்கு முன் வந்து அவ்வேதியனை நோக்கி, "ஓ, விப்பிரரே! நீவிர் இங்ஙனம் வருந்துவதனாற் பயன் யாது? நீவிர் இவ்வண்ணம் அறற்றுதலால் இறந்த மகவு உயிர் பெற்றெழுமோ?" "ஆண்டாண்டு தோறு மழுது புரண்டாலு, மாண்டார் வருவரோ?" என்ற முதுமொழியை நீர் கேட்டிலிரோ? பிறந்தவர் தம்மில் இறவாமலிருப்பவர் எவரேனு முளரோ? பிறந்தவரெல்லாம் இறப்பது திண்ணம் என்பதை நீர் அறியீரோ? இங்ஙனம் நீவிர் வீணே அறற்றிக்கொண்டு இவ்விடுகாட்டில் நெடிது நேரம் இருப்பது தகுதியன்று" என்றது. அதுகேட்ட அவ்வேதியனும், மற்றையோரும், அக்குழவியை அங்குக்கிடத்தி வீட்டுக்குத் திரும்பினர். அப்போது ஒருநரி அவர்கள் முன்னுற்று "ஓ வேதியரே!

ஆருயிர் அனைய இவ்வழகிய மகவினை இங்ஙனங்கிடத்தி இதற்குள்ளாக வீட்டிற்குச்செல்ல எவ்வாறு உங்களுக்கு மனந்துணிந்ததோ? சூரியன் இன்னும் மேற்றிசையை யடைந்திலனே! இக்குழவியின் சிறிய முகத்தினைச் சிறிது நேரமேனும் மனமாரப் பார்த்துக் கொண்டிருத்தலை விடுத்து இல்லஞ் சென்று செய்தற்குரியது யாது?" இக்குழந்தையின் ஒளிமுகத்தைக் கண்டால் இது பிழைத்தெழும் பிழைக்கும் எனத்தோன்றுகின்றது; ஆதலால் இன்னுஞ் சிறிதுநேரம் இங்குத்தானே இருப்பீர்" என்றது. வீட்டுக்குத் திரும்பிய அவர்கள் அதுகேட்டு அவ்வாறே அங்கிருந்து மீண்டும் அறற்றத் தொடங்கினார்கள். பருந்து அதைக்கண்டு மீண்டும் அவ்வேதியனை நோக்கி, "ஓ, வேதியரே! நீர் சிறிதும் யோசியாமல் இந்நரியின் சொல்லைக்கேட்கலாமோ? பட்டமரந் தளிர்ப்பதுண்டோ? பெற்றோர் யார்? பிள்ளைகள் யார்? இவையாவும் வெறும் பந்தமே. யாவும் அவரவர்தம் ஊழின்படி நடக்கின்றன. இதற்காக நீவிர் மயங்குதல் தக்கதன்று; தம்மனைக்குச் செல்லுமின்" என்றது. அதைக்கேட்டு நரி, ஓ, மறையவரே! இப்பருந்தின் சொல்லை நீர் கேட்டல் தகுதியன்று. இவ்வுலகில் அவரவர்களுக்கு இனிமை நிறைந்த நன்மைகளையும், தீமைகளையும் முன்னுணரவல்லார்யார்? இம்மகவினிடத்தில் உங்களுக்குற்ற பேரன்பை நோக்கி யான் இங்ஙனம் கூறுகின்றேன்" என்றது. பருந்து "ஓ, அருமறைச் செல்வரே! இச்சுடலையில் யான் ஆயிரவருட காலமாக வசித்து வருகின்றேன். இதுகாறும் இறந்தவர்களில் ஒருவரேனும் பிழைத்தெழுந்ததைக் கண்டிலேன். நீவிர் அங்ஙனம் அறற்றிக் கொண்டிருந்தால் அதனை இறந்த உங்கள் மகவு கேட்குமோ? அன்றிக் கண் திறந்துதான் பார்க்குமோ? இங்ஙனம் வீணே நீங்கள் அறற்றிக் கொண்டிருத்தலாற் பயனின்று; செல்லுமின்" என்றது. நரி, "ஓ, விப்பிரரே! ஸ்ரீராமபிரான் சூத்திரனொருவனைக்கொன்று ஒரு வேதியன்றன் மகவினை உயிர்ப்பித்தனனன்றோ? அது போல, யாரேனும் இம்மகவினையும் உயிர்ப்பித்தல் கூடும். நீர் சென்னாது இன்னுஞ் சிறிதுநேரம் இங்கே இருப்பீர்" என்றது. பருந்து, "ஓ, வேதியரே! சங்கரன், அயன், மால் என்னும் மும்மூர்த்திகள் வந்தாலன்றி இம்மகவை உயிர்ப்பித்தல் முடியாது. இது போன்ற நரிகள் ஆயிரங் கூடினும் பயனொன்று முண்டாகாது. போமின்" என்றது. நரி "ஓ, விப்பிரரே! இக்குழவியின் ஒள்ளிய முகத்தின் குறியைக்காணின்

இது பிழைக்கும் எனத்தோன்றுகின்றது; ஆதலின் நீவிர் இதனை விட்டுப் போதல் தகுதியன்று" என்றது. பருந்து "ஓ, கிப்பிசே! இவ்விடத்தில் இன்னுஞ் சிறிதுநேரஞ் சென்றால், நாய், பேய் முதலியன வந்து கூடும்; அவற்றால் உங்கள் உயிருக்குக் கேடுண்டாம். விரைந்து செல்லுமின்" என்றது. இவ்வனங் கூறு கின்ற இவ்விரண்டின் மொழிகளையுங் கேட்டு ஒன்றுந் தோன்றா மல் மயங்கி நிற்கும் வேதியர் முன்னே பொருநிரைப் புரிசடைச் செருவிடைப்பாகச் செல்வனாகிய சிவபெருமான் இடப்பாலுறைந் துறை யிமய வல்லியுடன் வந்து தோன்றி அம்மகனை எழுப்பித் தந்து பருந்தும், நரியும் ஆகிய அவ்விரண்டினுக்கும் என்றும் பசியுண்டாகாத வரம் அளித்துச் சென்றனர்.

பருந்து பகற்பொழுது நீங்குதற்கு முன் அவர்கள் சென்று விடின் அக்குழவி தனக்கிரையாகும் என்று எண்ணி அங்ஙனங் கூறிற்று. நரி இருண்ட பின் அவர்கள் செல்வார்களாகுல் அம் மகவு தனக்கிரையாகும் என்று அங்ஙனங் கூறிற்று. சிலர் தமக் குறு நலத்தினை நாடி நமக்கிதஞ் செய்வார் போலப் பேசுவர்; ஆகையால் அறிவுடையார் எதையும் ஆய்ந்து தெளிதல் வேண் டும்.

இங்குப் பார். கண்ணுல் என்னைப் பார்க்கின்றாயா? இல்லை, உன்னுல் முடியாது. தொட்டாவது பார்க்கிறாயா? சரி, சரி அது உன்னுல் முடியும். சற்று உன் கையை வீசு. அல்லது நீயே விசி றிக்கொள். அப்பொழுது என்னை உணர்ந்துகொள்வாய்; எனக்கு நிச்சயமாய்த் தெரியும். உன்னைச் சுற்றிலும் எங்கும் இருக்கின் றேன். குளிர்ந்து இருப்பேன். இம்மரங்களைப் பார். இவைகள் எப்படி அசைகின்றன. அவற்றையெல்லாம் அசைப்பது யார் தெரியுமா? நான்தான். தண்டவாளங்களின் மேல் வண்டித் தொடர்கள் எவ்வளவு விரைவாகப் போகின்றன! யார் அவற் றைப் போகச் செய்கிறார் தெரியுமா? அதுவும் நானே. கடலில் கப்பல்கள் செல்வதைப் பார்த்திருக்கின்றாயா? அல்லது கேள்விப் பட்டாவது இருக்கிறாயா? அவற்றையும் போகவைப்பது யார் தெரிந்துகொண்டாயா? நான்தான். உன் சரீரத்திற்குள்ளேயும் போகிறேன். மிக்க விரைவாக உள்ளே பிரவேசிக்கின்றேன். அங் கேயும் நான் சும்மாவிருக்கவில்லை; வெகுவேலை பண்ணுகிறேன். முதலில் உன் இரத்தத்தைச் சுத்திகரிக்கின்றேன். மிகச் சிறிய துவாரங்களின் மூலமாய் எல்லா அசுத்தங்களையும் வெளிப்படுத்தி

விடுகிறேன். மேன்மேலும் உனக்குப் பசியுண்டாகும். பிறகு நீயும் புதிய உணவைத் தேடுவாய். உன்னை வெகுநேரம் தங்கமாட் டேன்; சரீரத்தை விட்டு வெளியே வந்து விடுவேன். இப்பொ ழுது நான் அசுத்தமானேன். கலந்துகெட்டு இருக்கிறேன். கொஞ்சகாலம் அன்னபானமில்லாமல் நீ இருக்க முடியும்; நான் இல்லாமல் நிமிஷமேனும் நீ இருப்பாயா? இல்லை. நிஜந்தான்; முடி யாது. ஏனெனில், நானே உன் உயிர். இந்து ஸ்திரீ புருஷர் கள் என்னைத் தெய்வமாகக் கொண்டாடுகின்றார்கள். என்னைப் பிரார்த்திக்கின்றார்கள். ஏன் அவ்வாறு என்னைப் பெருமைப் படுத்துகிறார்கள் அறிந்துகொண்டாயா? ஐந்து தேவதைகளில் யான் ஒருவன். வெகு தூரத்திற்கப்பாலுள்ள தேசத்தை யும் கடலையும் அடிக்கடி போய்ப் பார்ப்பேன். தரையி னின்று போகும்போது சற்றுச் சூடாகவும், கடலிலிருந்து திரும்பி வருகையில் சில்லென்றும் இருப்பேன்-எனக்கு ஒரு தோழன் உண்டு; யார்தெரியுமா? சொல்லுகிறேன் கேள். அவன் பெயர் உஷ்ணம்; அவனுக்கு என்னிடம் மிக்க ஆசை. என்னை விட்டுப்போக அவனுக்கு மனமில்லை. தன்னோடு அவன் ஆவி யாக மேலே கொண்டு போகிறான். ஆவி என்னைவிட லேசான படியால் மேலே எழும்புகிறது. அவ்வாறு மேலே சேர்ந்துள்ள ஆவிகள் மேகங்களாகின்றன. என் முழுபலத்தால் நானே அம் மேகங்களை வானமெங்கும் பரவச்செய்கின்றேன். அங்கேயும் அவைகளை வெகுகாலம் வைப்பதில்லை. மழையாகப் பூமியில் விழச் செய்வேன். நான் செய்வதெல்லாம் இவ்வளவுதானு? இன்னும் ஒருவேலை உனக்குச் செய்து வருகிறேன்.

யாராவது பேசினுல் அதை உன்னிடம் வந்து சொல்லு கிறேன். எப்படித் தெரியுமா? பேசுவோன் வாயினின்றும் வெளியேவந்தவுடன் அவனது வார்த்தைகளை உள்ளபடி உனக் குப் பறையடித்துச் சொல்லுவேன். தூசிகள் பறக்கின்றனபார். அவற்றை ஓரிடத்தில் தங்கவிடேன்; அப்புறப்படுத்தி விடு வேன். ஆகையினுலேதான் தெருக்களும் சாலைகளும் சுத்தமாய்க் காணப்படுகின்றன. நான் அமைதியாக இருக்கிறேன். இப்போது எனக்கு ஒருபெயர் வைக்கிறாய், அங்கும் இங்கும் அசையுங்காலத் தில்-அதிகமாவது வீசியடிக்கும்போது, மற்றொரு பெயர் எனக்கு வழங்கப்படுகிறது. சிலவேளைகளில் கோரமாய் இருப்பேன்; நீ அப் போது என்னைக் கண்டால் அஞ்சி நடுங்குவாய். ஏனெனில், உன்

னேக் கவைப்படுத்திவிடுவேன். மாக்கொத்தாகிப் பேருடன் அப் புதப்படுத்துவேன். அன்றுக் குழந்திடும் ஒவ்வொன்றையும் நகை ரீழுக்கி வைப்பேன். ஜனங்கள் என்னை அக்காலத்தில் வேறு பெயரால் அழைப்பார்கள். நான் தரைமேல் மாத்திரம் சஞ்ச ரிக்கவில்லை; தண்ணீரிலும் இருக்கின்றேன். இல்லாமற்போனால் அங்கு மச்சங்கள் உயிருடன் காணமுடியாது. என்னைப்பற்றி போதுமான அளவு சொல்லிவிட்டேன். நீ என் பெயரை யூகித்த மாவர்வது சொல்லுவாயா?

ஸ்ரீமோ அம்மாள்.

அத்தர்.

அத்தரில் பலவகையான அத்தருண்டு; ரோஜாப்பூவிலிருந்து செய்வதும் ஒரு விதமான வாசனையுள்ள அத்தராகும். இதை யும் ரோஸ் அத்தர் பல்கேரியாவிலிருந்து வந்து கொண்டிருந்தது; யுத்தம் காரணமாக அது வருவது நின்றுவிட்டது.

ரோஜாப்பூ அத்தர் செய்வது மிகு சுலபமாம். ரோஜாப்புக் களைப்பனியில்லாத காலத்தில் பறித்து அகலமான வாயுள்ள புட்டி களில் அவற்றைப் போட்டு, சிறிது உப்பைப் புஷ்பங்களின் மீது தூற்றவேண்டும். ஆலிவ் ஆயில் என்னும் எண்ணெயில் நனைத்த பஞ்சைப் புஷ்பங்களின் மீது போட்டு மூடி வைத்தல் வேண்டும். பின்னர் மேற்படி எண்ணெயில் நனைத்த பட்டுத் துணியால் புட்டியின் வாயை மூடிக் கட்ட வேண்டும். இவ்வாறு செய்யப் பட்டபுட்டியை இரண்டு வாரம் வெயிலில் வைத்தல் வேண்டும். பிறகு பஞ்சிலிருக்கும், புஷ்பத்திலிருக்கும் எண்ணெயைச் சுலப மாக எடுத்துவிடலாம். இவ்வாறெடுக்கப்பட்ட எண்ணெய் மிகுதி யும் வாசனை யுடையதாயிருக்கும்.

பப்ளிக்காய்.

இது சர்வ சாதாரணமாகக் கிடைக்கக்கூடியது. இதன் குண மோ மிக மேலானதாம். இதனைச் சமைத்துத் தினந்தோறும் சாப்பிட்டு வந்தால் குன்ம நோயும், சுலு—மனவியாதிகளுமுள்ள நோய்களும் நிவிர்த்தியாம்; மலோதர வியாதியும் நீங்கும்; இரத்த விர்த்தியுமுண்டாம்.

நாக்குப்பூச்சிக்கு மருந்து.

குழந்தைகளின் வயிற்றிலுள்ள நாக்குப்பூச்சிகளை வெளியாக் குவதற்கு இதுவரையும் நாம் சான்டொனைன் என்னும் மருந்தை உபயோகித்து வந்தோம். யுத்தம் காரணமாக அந்த மருந்து இப் போது ஒரவுன்ஸ் 15-ரூபாய்க்கு விற்கப்படுகின்றது. நம்முடைய தேசத்தில் மூலிகைகளிலேயே அநேகவிதமான வியாதிகளையும் மிகு சுலபமாக நீக்கிக்கொள்ளலாம். நம்மினோர் அவ்வாறு செய் யாது நமக்கு வேண்டிய மருந்துகளுக்கு அந்நிய தேசங்களை யெ திர் பார்த்திருந்து விட்டனர். யுத்தம் காரணமாக மிகுதியும் கஷ்ட நஷ்டங்களடைந்து வருகின்றனர். இனிமேலாவது நாம் நம் முடைய ஆயுர்வேதத்தை அசட்டை செய்யாது விர்த்தி செய்ய வும், அதனைக் கற்றுக்கொள்ளவும் பெரும் பிரயத்னஞ் செய்தல் வேண்டும். நாக்குப்பூச்சியை யொழிப்பதற்கு மிகு சுலபமான மருந்துகளிருக்கின்றன. அவற்றை நாம் உபயோகித்து வரலாம்; விவரம்:-(1) புரசம் விதையைப் பொடியாக்கி சர்க்கரையில் சேர்த்து மூன்று வேளை கொடுத்தல்வேண்டும். புரசம் விதைப் பொடியில் வாலிபர்கட்கு 20-கிரெய்னும், குழந்தைகட்கு 5-கிரெய்னும் எடுத் துக் கொள்ளுதல் வேண்டும். (2) மாதுளம் பழத்தோலை அரை த்து மோரில் கலக்கி அதிகாலையில் 3-நாள் சாப்பிடுதல் வேண்டும். (3) டர்ப்பன்டைன் பெரியவர்க்கு 30-துளியும், 10-வயதிற்குட் பட்டவர்கட்கு 10-துளியும் பாலில் கலந்து 5-நாள் கொடுத்தல் வேண்டும். பின் 4-அவுன்ஸ் தேங்காய்ப் பால் சாப்பிடுதல் வேண் டும். மேற்கண்ட விதிப்படி செய்தால் வயிற்றிலிருக்கும் நாக்குப் பூச்சிகளெல்லாம் கூண்டோடு வெளியாய் விடும்.

பொய்.

பொய்யாவது உள்ளதை இல்லதாகவும் இல்லதை உள்ளதாக வும் சொல்லுதலாம். பொய் மிகவும் இழிவானசொல். ஒரு பொய் யைச் சொன்னவன் அதை ஸ்தாபிக்க அநேகம் பொய்களைச் சொல்லுகிறான். "நான் சொன்ன பொய்யைப் பொருத்து மன்னிக் கும்படியாய் வேண்டிக்கொள்ளுகிறேன்" என்று சொல்லுவானே யாயின், அப்பொய் ஒன்றுடனொழியும். பொய் சொல்லத் துணிகிற வன் களவு முதலிய தீமைகளைச் செய்ய அஞ்சமாட்டான். பொய்ச் சொல்லலாகிய பழக்கத்தை யொழிப்பானாயின், அதன் வாயி

லாக மற்றப்பாவங்களெல்லாம் தாமே யொழிந்துபோம். பொய்யன் மெய்யைச் சொன்னாலும் பிறர் அதை நம்பமாட்டார்கள். ஆத லால், விளையாட்டிற்காயினும், அல்லது பிறரைப் பரிகசிப்பதற்கா யினும் பொய் சொல்லலாகாது.

"ஒன்றாக நல்லது கொல்லாமை மற்றதன், பின்சாரப் பொய்யா மை நன்று" என, நமது தெய்வப்புலமைத் திருவள்ளுவ நாயனார் திருவாய் மலர்ந்தருளியிருப்பதனை நாம் சற்று உற்று நோக்குவோ மாயின், நாம் சிறிதளவும் பொய்யுரைக்கத் துணிவு கொள்ளோம்.

பொய் பாவச் செயலுக்குத்தாய், மோசத்திற்குத் துன்பக் கருவி, நாசத்திற்கு வேர், எல்லாப் பாவத்துக்கும் வித்து. பொய் வஞ்சகத்தின் வளர்ப்பு, களவுக்குக் கண்ணாடி, நரகத்தின் நாவேணி, பெருமைக்கு அழிவு, சிறுமைக்குச் சிறப்பு. பொய், குலத்திற்குக் கோடரி, குணத்துக்கு நாசம், நன்மைக்குச் சத்துரு, தீமைக்கு மித்துரு, ஆதலாற்றான், எச்சாதியினரும், எவ்வருணத்தின ரும், எக்குலத்தினரும், எக்குணத்தினரும், எப்பதவியினரும், எத்தொழிலினரும், பொய் சொல்லலாகாது. பொய்யைத் தள்ளி மெய்யைத் தழுவுதல் நல்லொழுக்கமாம்.

உண்மை சொல்பவன் இம்மையிற் பொருளையும் மறுமையிற் புண்ணியத்தையும் அடைவான். சத்தியமும், மேலான தவமும் தானமும், தருமமுமாம். எவனுடைய மனம் சத்தியத்திலே நிற்கு மோ அவன் இகத்திலே தெய்வத்தன்மையை அடைவான். பொய் யே கொல்லும், மெய்யே வெல்லும் ஆகையால் சத்தியத்தின் மிக்க தருமமும் அசத்தியத்தின் மிக்க பாவமும் இல்லை.

மெய்யைச் சொல்லுகிறவனுக்கு அதனால் ஒரு கேடு வந்த தாயினும், அவனுள்ளத்திலே மகிழ்ச்சியுண்டாகும், அவனுடைய விரோதிகளும் அவனை நன்கு மதிப்பார்கள். பிறராலே நன்கு மதிக்கப்படவும் தன் காரியம் சித்தியடையவும், எவனொருவன் விரும்புகின்றானோ அவன் எப்பொழுதும் தன் மனத்தோடு பொருந்த மெய்யையே புகலுதல்வேண்டும். ஒருவன் தன் மன மறிந்த தொன்றைப் பிறர் அறிந்திலர் என்று பொய் சொல்லா திருக்கக் கடவன்; பொய் சொன்னானாயின், அவன் மனமே அப் பாவத்துக்குச் சாக்ஷியாய் நின்று அவனைச் சுடும்.

பொய்ச்சான்று சொன்னவரும், பொய் வழக்குப் பேசின வரும், பொய்த்தீர்ப்புச் செய்தவரும் பொய்ச்சாக்ஷி கூறினவரும்,

ஸ்திரீவதையும், சிசுவதையும், பசுவதையும், கன்று வதையும், செய்தவரானவர்; மிக்கக்கொடிய சௌரவாதி நரகத்தை யடை வர்; பல துக்கங்களையும் அனுபவிப்பார்கள். இன்னும் அவர்கள், பன்றி, நாய், கழுதை, காக்கை, கழுகு, புழு என்னும் பிறப்பு களிற் பிறந்து, பின்பு ஊமைகளாயும் வாய்ப்புண்ணினராயும் பிறப்பர்.

ஆகையால், பொய்யுரையாது மெய்யையே புகலுதல் வேண் டும். ஒரு மனிதன் உள்ளன்போடு காரியமற்ற மனத்தினனாய் மெய்யையே உரைப்பானாயின் அவ்வுண்மையான மனிதப் பிறவிப் பயனடைந்தவனாய், இம்மைக்குரிய பெருமையையும் அடைவான்; ஆயுளின் இறுதியில் பூரணமான இருமை நலத்தையும் அடைந்து அவனியை ஆளப் பதவி பெறுவன்.

A. M. துரைசாமி முதலியார்,
காஞ்சீபுரம்.

ஜீவகாருண்யம்.

[பிரஹ்மஸ்ரீ ராமசந்திர சாஸ்திரிகள் எழுதியது.]

ஜீவகாருண்ய மென்பதில்லாதவனும் பிறரிடத்திலிருந்து அநுதாபத்தையாவது அன்பையாவது பெறுவதற்குத் தகுதியுடை யவனல்லன். ஜீவகாருண்யமில்லாதவனை மனித வகுப்பிற் சேர்ப்பதற்குக்கூட ஆன்றோர் அஞ்சுகின்றனர். மாமிசத்தை இச் சித்துப் புசிக்கும் மாமிசபக்ஷிணிகள் இப்பொழுது அதிகரித்து வருகின்றனர். மாமிச போஜனம் நமது மதத்தில் நிஷேதிக்கப் பட்டிருக்கிறது. நமது முன்னோர்களுடைய புத்தியில் இது பெருங் கொடுமையான காரியமென்று தோன்றி யிருந்தால், அதுபோலவே இதன் கேடுகளை விளக்குகின்றதென்று தெரிந்திருந்தால், பிராம ணர்கள்—அதிலும் சகல வேதசாஸ்திர சம்பன்னர்கள்—யாகம் செய்வார்களா? மற்றைய க்ஷத்திரியர் வேறு தேசங்களிலும் மற்றும் ஆகிரமணங்களான ஆடு, கோழிகளைப் பலியிடுவார்களா? என்று சிலர் கேள்விகள் உதிக்கின்றன. இதற்கு விடை பகரவேண் டியது அத்தியாவசியமாயிருக்கின்றது.

நமது இதிகாச புராணங்களைப் பார்த்தால், இதற்குமுன் இப்பூமியில் நரமேதயாகம், அச்வமேதயாகம், கோமேதயாகம் முதலியவைகளெல்லாம் நடைபெற்று வந்தன வென்றுதெரிகிறது.

இப்பொழுது அவையெல்லாம் நின்றுவிட்டன. ஆகலால் இந்த யாகங்கள் ஆரம்பிக்கப்பட்ட காரணத்தை நாம் சிறிது ஊன்றிப் பார்ப்போமாயின், ஜீவவதைசெய்ய வேண்டுமென்ற நோக்கத்துடன் ஆரம்பிக்கப்பட்டனவாக நமக்குத் தோன்றாது; ஆனால் ஆகாரச் செய்கைகளாகிய ஜீவவதையை நிறுத்த வேண்டுமென்ற ஆழ்ந்த கருத்துடனேயே ஆரம்பிக்கப் பட்டிருக்கின்றன. உலகமானது குழந்தைப் பிராயத்தில் இருந்தபொழுது, மனிதர்கள் மனிதர்களாயிராமல் மானிட மிருகங்களா யலைந்து கொண்டிருந்தார்கள். அப்பொழுது அவர்கள் அந்நியோந்நிய சகோதர பாவம் சிறிதுமின்றி, அன்பென்றால் இன்னதென்றே யறியாது, 'பலவான் காரியம் ஜயம்' என்னும் பழமொழிக்கிணங்க தங்களுக்குள்ளேயே ஒருவரை யொருவர் அடித்துத் தின்று கொண்டிருந்தார்கள்; அப்பொழுது சிலஜீவகாருண்ணிய ஸ்வரூபிகள் ஜீவகாருண்ணிய சீலர்கள் சிலர் எப்பொழுதும் இருந்துகொண்டே யிருக்கிறார்கள்—இவ்வக்கிரமத்தைப் பார்க்கச் சகியாதவர்களாய் மனங்கொதித்து வருந்தினார்கள். ஆனால், வெகு நாட்களாகத் தடுப்பாரில்லாமல் அனுஷ்டிக்கப்பட்டு வந்த வழக்கத்தை அப்பொழுது துர்வழக்கமென்று சொல்லி அடியோடு விட்டுவிட வேண்டுமென்றால், ஜனங்கள் கேட்பார்களா? இப்படிச் சொல்லத் துணிபவர்களையே பட்சித்து விடுவார்களன்றோ? ஆகலால் அப் பெரியோர்கள் ஜனங்களை நோக்கி, உங்களுக்குள்ளேயே ஒருவரை யொருவர் அடித்துத்தின்பது அடாதகாரியம். ஆனால் நீங்கள் பலரும் ஒற்றுமையாகச் சேர்ந்துகொண்டு எவனையாவது ஒருவனைக் கொன்று ஈஸ்வரனுக்குச் சமர்ப்பணம் செய்து நிவேதித்துப் பின்னர் தின்றால் உங்கள் அனைவருக்கும் அளவற்ற புண்ணியம் உண்டு, என்று போதித்ததுமன்றி, இன்னின்ன தினங்களில் தான் மாம்சம் புசிக்கலாமென்றும் இப்படிக் குறிப்பிட்ட காலங்களில் புசித்தால் அது பாவமில்லையென்றும் மற்றக் காலங்களில் புசிப்பது பாபமே யென்றும் கூறி வரையறையின்றி வயிறு கொண்டமட்டும் தின்று கொண்டிருந்த மாமிச போஜனத்திற்கு வரையறை ஏற்படுத்தினார்கள். அக்காலத்து மனிதர்கள் அநாகரிகர்களேயாயினும் ஆஸ்திகர்களா யிருந்தார்கள்; ஈஸ்வரபயமுள்ளவர்களா யிருந்தார்கள். ஆதலால் ஈஸ்வரனை முன்னிட்டுச் சில நியதிகள் ஏற்படுத்தப் பட்டபொழுது, அவர்கள்

அவற்றிற்குக் கீழ்ப்படிந்தார்கள். இங்ஙனம் சிலநாட்கள் செல்ல, ஆன்றோர் அத்தகைய தினங்களை இன்னும் அபூர்வமாக்கினார்கள். இதனுடன் மெல்ல அறிவையும் பரப்பினார்கள். பல நாட்கள் சென்றன; பிறகு ஆன்றோர் ஜனங்கள் முன்னினும் அறிவில் விருத்தி யடைந்திருப்பதை யறிந்து அவர்களை நோக்கி "மனிதர்களெல்லோருக்கும் சரீரமும் அவயவங்களும் அறிவும் சமமாகவே யிருக்கின்றன. ஆதலால் மனிதனை மனிதர் கொன்று தின்பது நியாயமானதாகத் தோன்றவில்லை. உங்களுக்குள்ளேயே நீங்கள் வேற்றுமை ஏற்படுத்திக் கொள்வது தவறு" என்று பலவாறு போதித்து "நல்ல அழகிய குதிரையை இன்னின்ன தினங்களில் இன்னின்ன நக்ஷத்ரங்களை முன்னிட்டுக் கொண்டு யாகஞ்செய்து ஈஸ்வரனுக்கு நிவேதித்துப் பின் தின்றால் கோடா கோடி புண்ணிய பலன் உண்டு" என்று உபதேசித்தார்கள். உலக உத்தாரணத்தின் பொருட்டு உபதேசித்த இப்பெரியோர்கள் குதிரை மாமிசத்தைத் தாங்களும் தின்றிருப்பார்கள்; இவர்கள் தின்றதாலேயே சாதாரண ஜனங்கள் இவர்களுடைய வார்த்தைகளில் நம்பிக்கை வைப்பார்கள். இங்ஙனம் அஸ்வமேதயாகமானது செய்யப்பட்டு வந்தது. அநேக ஆண்டுகள் சென்றபின், பெரியோர் "குதிரைகள் நமது தேசத்தை அந்நியர்களுடைய படையெடுப்பினின்றும் தடுப்பதற்காக யுத்தம் செய்யும் சமயங்களில் உபயோகிக்கத் தக்க, இன்றியமையாத மிருகங்கள்; ஆதலால் அவற்றை நாம் கொன்று தின்பது நல்லதன்று." என்று போதித்து, அதற்குப் பதிலாகப் பசுக்களைக் கொன்று யாகம் செய்து தின்றால் மோட்சம் உண்டென்று கூறினார்கள். உடனே ஜனங்கள் கோமேதயாகத்தைப் பின் பற்றினார்கள்.

இங்ஙனம் அநேக ஆண்டுகள் ஆயின. பின்னர், ஆன்றோர் "நமக்குப் பால் முதலியன தந்து தாய்போல் நின்று நமக்கு எவ்விதத்திலும் உதவி செய்கின்ற பசுவைக்கொன்று தின்பதினும் அற்பப்பிராணிகளாகிய ஆடுகளைக் கொன்று யாகம்செய்து தின்னுதலே ஈஸ்வரனுக்குப் பிரியமாம்" என்று கூறினார்கள். மெல்ல மெல்ல அறிவு மேம்பட்டு வந்ததனால் ஜனங்கள் சிறிது சிறிதாக உணர்ச்சி யடைந்தார்கள். இப்பொழுது இவ்வாடுகளையும் கொன்று யாகம் செய்வது கூடாது என்று ஆன்றோர் கூறியிருக்கின்றனர். இதற்கு உதாரணமாக, இக்காலத்தில் யாகம் செய்யும் மாத்வப்

பிராம்மணர்கள் ஆடுகளைக் கொலை செய்யாது, ஆடுகளைப்போல மாவினால் உருப்பிடித்து அதை நிவேதனம் செய்து சாப்பிடுகின்றார்கள். நமது தேசத்தில் யாகங்கள் இவ்விதமாக ஏற்பட்டன. இப்பொழுது நாம் முன்னினும் பல சீர் திருத்தங்களடைந்து அன்பு மிகுந்தவர்களாயிருக்கின்றோம். இப்படியே தான் மற்ற ஜாதியார் பலியிடுகின்ற குரூர வழக்கங்களும் ஆதி காலத்தில் ஆரம்பிக்கப்பட்டு இப்பொழுது ஆடு, கோழிகளைக் கொல்வதில் வந்து நிற்கின்றன. சர்வவியாபகவஸ்துவாகிய ஈஸ்வரனுக்கு சமஸ்த கோடி ஜீவராசிகளும் கரசரணாதி அவயவங்களைப் போன்றனவன்றோ? நாம் நம்முடைய காலையோ, கையையோ நாமே கடித்துத் தின்று கொள்வதற்குச் சம்மதிப்போமா? அதுபோலவே, நம்முடைய சரீரத்தின் வெவ்வேறு உறுப்புகளைத் தின்பதற்கு ஈஸ்வரன் ஒருபொழுதும் பிரியப்படமாட்டா னென்பது நிச்சயம். அப்படி ஒரு கொலை பாதக ஈஸ்வரன் இருந்தாராயின், இப்பொழுது அவர் அந்த ஈஸ்வரஸ்தானத்தில் இல்லையென்பதும் நிச்சயம். ஜீவவதையை நிறுத்தும் நோக்கத்துடனேயே, யாகங்கள் ஏற்படுத்தப்பட்டன. அறிவுபெருக, அன்பும் பெருகிற்று; ஜீவவதையும் நின்றுவிட்டது. யாகங்களும் அநேகமாக நின்றுவிட்டன. யாகத்தில் செய்தாலும் சரியே, போகத்தில் செய்தாலும் சரியே, ஜீவவதையானது சண்டாளச் செய்கை யென்பதில் சந்தேகமில்லை.

"பிரபஞ்சமித்திரன்."

கிரீக்தேசத்து பீமசேனன் கதை.

(முன்தொடர்ச்சி.)

பீமசேனனும் நீர் நாகனும்.

அரசன் மறுபடியும் பீமசேனனுக்கு மற்றொரு வேலை யிட்டான்; இது முன்னவற்றைப் பார்க்கிலும் அதிக கஷ்டம். இவ்வேலை ஒரு நீர்நாகத்தைக் கொல்லுவதாம்; இது ஒருபெரிய சதுப்பு நிலத்தில் வசித்திருந்தது; அதனுடைய மூச்சுக் காற்று கொடிய விஷமாய் இருந்தபடியால் அதன் அருகில்கூட ஒருவரும் போகமுடியாது. ஒருகால் தப்பி யாராவது ஒருவன் அது வசித்திருந்த அந்த இடத்தினின்று வருகின்ற காற்றை முகர்ந்து விட்டால் உடனே அவன் செத்துப்போய் விடுவான்.

அப்படியிருந்த இந்தச் சதுப்புநிலத்தின் மத்தியில் ஓர் ஊருணி (நீர் ஊற்று) உண்டு; இதிலிருந்து ஏழை ஜனங்கள் தண்ணீர் கொண்டுபோவதுண்டு. ஆனால் இப்பொழுது அதன் அருகில் போகமுடியவில்லை. வெயில் காலத்தில் அதிக உஷ்ணமாகவும் உலர்ந்தும் போய், ஊருணிகள் குறைந்து போவதால் ஆடுமாடுகளும் ஜனங்களும் தண்ணீர் இல்லாமல் அடிக்கடி இறந்துபோவதுண்டு.

இப்பாம்பு ஒன்பது தலைகளுடையது; இவற்றின் மத்தியதலை சாவற்றது. அது தனக்குள்ள ஒன்பது பெரிய வாய்களாலும் தன் அருகில் வருபவற்றை யெல்லாம் தின்றுவந்தது.

இப்பொழுது பீமசேனன் தன்னோடு ஒருசிநேகிதப் பையனை அழைத்துக்கொண்டு அப்பாம்பு இருக்கிற இடத்தைக் கஷ்டப்பட்டு வெகுதூரம் போய்க் கண்டுபிடித்தான். அதிக உஷ்ணமாயும் மண்காற்று அடித்துக்கொண்டும் இருந்தபடியால் மத்தியில் குளிர்ந்த நீர் ஊற்றுள்ள இச்சதுப்பு நிலத்தை அடைந்தார்கள். அங்கே அதன் பக்கத்தில் இப்பெரும்பாம்பு நீட்டிக்கொண்டிருந்தது. மேலும், தனது ஒன்பது தலைகளாலும் விஷத்தைக் கக்கிக் காற்றை விஷக்காற்றாக்கிக் கொண்டிருந்தது.

இவன் அதன்மீது அம்புகளை எய்தான்; அதனால் அது துன்பமடைந்தது; உடனே அது தன் பொந்தைவிட்டு வெளியே சதுப்பு நிலத்தில் வேகமாக வந்தது.

பீமசேனன் அதன் தலைகளைக் கைத்தடியால் அடித்துத்தள்ள ஆரம்பித்தான்; ஆனால் ஒரு தலை கீழேவிழுந்த உடனேயே அது இருந்த இடத்தில் இரண்டுதலைகள் முளைத்தன. இவை சிறவும் முன் இருந்த தலையைப் பார்க்கிலும் கொடூரமாகவும் கடிக்க ஆரம்பித்தன.

இச்சண்டையால் பாம்பின் தலை நசுக்கப்படமாட்டாதென்று அவன் சீக்கிரத்தில் அறிந்துகொண்டான். ஆகவே வேறொரு உபாயத்தைத் தேடிக்கொண்டான். அஃதாவது அக்கம்பக்கத்திலுள்ள சில மரங்களை நெருப்பு வைத்துக் கொளுத்திவிடும்படிக்கும், அப்படி எரிந்த மரங்களிலிருந்து எரிகின்ற துண்டுக்கட்டைகளைத் தனக்குக் கொடுக்கும்படிக்கும் தனது சிநேகிதனுக்குச் சொன்னான். இக்கட்டைகளால் தான் அறுத்துத்தள்ளும் ஒவ்வொரு

தலையையும் கழுத்தின் முனையையும் சுட்டான்; இதனால் புதுத் தலைகள் வளராமற் போய்விட்டன. இப்படியே மத்திய ஒருதலை தவிர ஏனைய தலையெல்லாம் நாசமாக்கப்பட்டன.

இந்த ஒருதலை நெருப்பினாலும் கெடப்படாமையால் அதைப் பூமியிற் புதைத்துவிட்டான்; மேலும் அதுமேலே வராமல் இருக்கும்படிக்கு ஒரு பெரும் பாறையை அதன்மேல் தன்னிலைவைத்தான்.

இந்தப் பிரகாரம் இந்த மகாசர்ப்பத்தைத் தொலைத்தான். பிறகு தன்னுடைய அம்புகளை எடுத்து நாகம் கக்கிய விஷத்தில் தோய்த்து அவற்றைக் கொடிய ஆயுதங்களாகச் செய்துகொண்டான். ஆனால் பிறகு தான் இவ்வாறு அம்புகளைச் செய்துகொண்டதற்காக அநேகமுறை வருத்தப்பட்டான்.

வெ. ஞானமுக செட்டியாரி.

சென்னை.

யுத்தம்.

மழை மிகுதியும், பனி மிகுதியும் பெய்வதனால் இப்போது யுத்தம் தீவிரமாக நடப்பதற்கில்லாம லிருக்கின்றது. ஆனால் மேற் கரக்கத்தில் மாத்திரம் பிரிட்டிஷார் முக்கியமான வெற்றி யடைந்து வருகின்றனர்; இவ்விடத்தில் பிரிட்டிஷாரின் நெருக்கத்தினால் ஜெர்மானியர் ஆங்கர் நதிப் போர்முகத்தில் பின்னடைந்து போய்க் கொண்டிருக்கின்றனர். மெசபொடேமியாவிலும் பிரிட்டிஷார் குட்டல் அமாராவையும், பாக்டாட்நகரத்தையும் பிடித்துக்கொண்டனர். இது துருக்கியர்க்குப் பெரிய ஆபத்தை விளைவிக்கக் கூடியதாயிருக்கின்றது. இப்போது நேச ராஜாங்கத்தாரும், ஜெர்மானியரும் வரும் வெயிற் காலத்தில், யுத்தத்தை யொரு முடிவிற்குக் கொண்டு வரத்தீவிரமான பிரயத்தனங்கள் செய்து வருகின்றனர். யுத்தத்திற் பிரவேசித்திருக்கும் எல்லாக் கட்சியாருக்கும் யுத்தத்தைச் சீக்கிரத்தில் முடித்து விடுதல் வேண்டுமென்னும் நோக்க மிருக்கின்றது. யுத்தம் சீக்கிரம் முடிவாக வேண்டுமென்றே உலகத்தவரும் கடவுளைப் பிரார்த்தனை செய்து வருகின்றனர்.

சக்ரவர்த்தினி.

“கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றீண்டு வாரா நெறி”.

VOL-12 } March 1917. { No-8.
தொகுதி-12 } மார்ச்சு 1917. { பகுதி-8.

சூதும் வாதும் வேதனை செய்யும்.

நல்வினை ஆக்கத்தைத் தருவது; தீவினை கேட்டைத்தருவது என்னும் பொருள் தோன்றப் “புண்ணியமாம், பாவம் போம்” என்று நல்வழி கூறுவதை நன்குணர்ந்து, உணர்ந்தவாறொழுகுபவரென்றவர்கள் பிறர் மனைவியரை விரும்புதல், கள்ளுண்டல், பிறர் பொருளைக் களவுசெய்தல், சூதாடல், கொலைவினை வளர்த்தல் என்னும் இப்பெரும்பாதகச் செயல்களைச் செய்யாது, நல்லன வற்றைச் செய்து வருவாரென்பது திண்ணமாம். தீயனவற்றைச் செய்வதொழிந்து நல்லனவற்றைச் செய்து வருபவரும் சில சமயத்துச் சூதாடுதலையும் வாது பேசுதலையும் மேற்கொண்டு வருத்தம் பலவற்றை யடைகின்றனரென்பது பாரத முதலிய இதிகாசங்களைக் கவனித்துப் படிப்போர்க்கு நன்கு விளங்குவதாம். சூதாடுதலும் வாதுபேசுதலும் கீழ்மக்களிடத்தேயன்றி மேன்மக்களிடத்து மிருந்தவின், அவை அவ்விருதிறத்தார்க்கும் வேதனை பலவற்றைத் தருவனவாயிருக்கின்றன. நளன், தருமன், விராடன் முதலியோர் சூதாடித் துன்பம் பலவற்றை யடைந்தமையையும், மதவாதிகள் வாதம் பேசித் தீங்கு பலவற்றை யடைந்தமையையும் கவனித்தொழுகுவோர் - சூதாடுதலையும் வாதுபேசுவதையும் மறந்தும் மேற்கொள்வதில்லையாம். திரிகடுகம் “சொல்லை முனிந்து, பொய்ம்மயக்கம் சூதின்கட் டங்கல்” என்று கூறுவதும், உலகநீதி “வாதாடி வழக்கழிவு சொல்லவேண்டாம்” என்று கூறுவதும் நமக்கு என்ன உணர்த்துகின்றன? சூதாடுகிறவன் பொய்பேசாதிருக்கமாட்டான்; வாது பேசுகின்றவன் பிறருக்குத் துன்பந்தாராதிருக்கமாட்டானென்பனவற்றை யன்றே

புணர்க்கின்றனர்; ஆனால், நாம் சூதாடுதலையும் வாதம்பேசுதலை யும் விளையாட்டாகவேனும் மேற்கொள்ளுதல் கூடாது; கொண்டால் அவை நாளடைவில் பழக்கத்தை உண்டாக்கி [illegible] மென்மேலும் அவற்றில் ஆசையை வளர்க்கும். சூதாடுதலையும் வாதுபேசுதலை யும் விளையாட்டாகவேனும் மேற்கொள்வாராயின், அவர் நாளடை வில் அதில் இழிமக்களுக்குரிய செயல்களை மேற்கொண்டுசெய்து அதனால் சீரழிந்து கெடுவது நிச்சயமாம். ஒளவைப் பெருமாட்டியார் ஆத்திசூடியில் "சூது விரும்பேல்" "வாதுமுற் கூறேல்" என் றருளி யிருப்பதோடல்லாது, கொன்றை வேந்தனில் "சூதும் வாதும் வேதனைசெய்யும் (சூதாடுதலும்-வாதுபேசுதலும் துன்பத் தைச்செய்யும்)" என்றருளி யிருத்தலின், அதனை நாம் பெரிதுங் கவனிக்கவேண்டும். சூதாட விரும்பாதே; வாதுபேச முற்பட்டு வாராதே; வந்தால் அவை உனக்கு வருத்தம் பலவற்றை யுண்டாக்குமென்பதையன்றோ அவ்வாக்கியங்கள் உணர்த்துகின் றன.

சூதாடல், வாதுபேசுதல் என்னுமிரண்டும் துன்பந் தரு வனவாயினும், வாதுபேசுதல் சூதாடுதல்போலத் துன்பந்தருவ தன்றாம்; வாதம் பேசுதலையே தர்க்கவார்த்தையை எவரேனும் முற்கூறாது பிற்கூறினால், அது பெரிதும் வருத்தத் தருவதன்று மென்பது 'சூதும்வாதும் வேதனைசெய்யும்' என்பதில் சூது என் பதற்குப்பின் வாது என்பதிருப்பதாலும் 'வாதுமுற் கூறேல்' என் பதனாலும் பெறப்படுவதாம். சூதாடுதல், வாதுபேசுதல் என்னு மிரண்டனுள், வாதுபேசுதலைப் பிறிடத்து முற்கொள்ளாது பிற் கொள்ளுதல் [illegible] ஒருவாறு நலம் தருவதாமென்றுணர் ந்து, சூதாடுதலினும் வாதுபேசுவதினும் கருத்துடையராகா[illegible] வருபவர் தம்பொருளை யிழக்காமலும், பிறர் தம்மைப் பகைப்பது மில்லாது வாழ்வது நிச்சயமாம்.

சூதாடுகின்றவர் சூதாட்டத்தில் பிறர் பொருளை வெல்வது காரணமாகப் பல பொருளைத் தோற்று அவமானம் பலவற்றை யடைகின்றனர்; அறம் பொருள் இன்பங்களைப் பெறாதழிகின்ற னர்; அவரிடத்து மூதேவி குடிகொண்டு வாழ்கின்றாள், கெட்ட குணங்களெல்லாம் நிலைபெறுகின்றன; பொய்பேசுவது அவர்க் குப் பழமும் பாலும் சாப்பிடுவதுபோலிருக்கின்றது; அவரை மதிப்பும், கல்வியும், செல்வமும், கனமும், உடையும் அடைவ தில்லையென்பது சூதாடுவோர் செயல்களை யெல்லாங் கவனித்து நோக் கினால் நன்கு விளங்குவதாம்.

"காதல் கவறுடன் கள்ளுண்டல் பொய்ம்மொழிதல், ஈதல் மறுத்தலிவை.........செம்மை, நினையாமை பூண்டார் நெறி"

"அறத்தையே செல்லு மருகாலிற் சேர்க்கும்
திறத்தையே கொண்டதனைத் தேய்க்கும்—மறத்தையே
பூண்டிவிரோ தஞ்செய்யும் பொய்க்குதை யிக்கோர்கள்
நீண்டவரோ வென்றுந் தெரிந்து."

"உருவழிக்கு முண்மை யுயர்வழிக்கும் வண்மைத்
திருவழிக்கு மானஞ் சிதைக்கும்—மருவும்
ஒருவரோ டன்பழிக்கு மொன்றல்ல சூது
பொருவரோ தக்கோர் புரிந்து."

"ஆயம் பிடித்தாரு மன்னர் பொருகளிற்
றேயம் பிடித்தாரு தெறுவிசைய—மாயம்
பிடித்தாரின் வேறல்லர் சொன்னபடி தன்றே
வடித்தாரின் [illegible]."

என்று [illegible] என்பாருமது நமக்கென்ன தெளிவிக்கின்றது? சூதாடுவோர் நிலையென்று சொல்லப்படுவனவற்றை யெல்லா மடைவ ரென்பதையன்றோ தெளிவிக்கின்றது?

வாதுபேசுதலாவது வாத சபையிலோ மற்ற இடத்திலோ பிறனை வெல்லக்கருதி அதற்கேற்ற வார்த்தைகளைச் சொல்லுத லாம். வாதுபேசுதல் சொல்லிலக்கணநூலைச் செவ்வையாகக் கற்று, அதன்பின் தர்க்கநூலை முறையாகக் கற்றவர்க்கன்றி மற்றவர்க்குச் செவ்வையாக முடியாதாம்; அவர்க்கு வருவது பெரும்பான்மையும் அவமானமேயாம்.

முறையாகத் தர்க்கநூல் கற்றவரும் வாதவார்த்தைகளை முன் னர்க்கூறுதல்கூடாது; அவசியமாயின், பின்னர்க்கூறுதல் வேண்டு மென்பது "வாது முற்கூறேல்" என்று ஆத்திசூடி கூறுவதாலும், "நன்றென் றவற்றுள்ளு நன்றே முதுவருள், முந்து கிளவாச் செறிவு" என்று திருக்குறள் கூறுவதாலும் பெறப்படுவன, வாது பேச முற்படுவது எவர்க்கும் தகுதியுடையதன்றாம்; வாது பிற்கூறல் தமக்கும் பிறர்க்கும் நன்மை தருவதாயின், அதனை மேற் கொள்ளுதல் குற்றமாகாதாம்; வாது பிற்கூறுதலையும் கூடுமான வளவும் ஒழிப்பது எவர்க்கும் நன்மை தருவதாம். வாதுபேசு பவர் தோல்வி நேர்ந்த விடத்து, பயனிலகூறல், பொய்யுரை புக லல் முதலியவற்றைச் சொல்லுதற்குச் சிறிது மஞ்சுவதில்லையாம்; ஆதலால் அவர் பாவச்சுமையினைச் சுமக்கவேண்டியவராய்த் துன்

புகுகின்றனர். காசிகாண்டம் "அறத்திறந் திறம்பினோர்" என்னுஞ் செய்யுளில் இறப்புடைப் பயனுறத் தர்க்கம் செய்குநர், பெறற்கருந் தீர்த்தநற்பயன்பெ றார்களே" என்று கூறுவதையும், ஒழிவிலொடுக்கம் "முலையுண்ணி நீருண்ணு மோட்டெருமை மூடர், சலமின்றிச் சக்துரைப்பர் தர்க்கர்" என்று கூறுவதையும் ஆழ்ந்தாராய்ந்து நோக்குவோர்க்கு வாதம்பேசுதல் கோது (குற்றம்) பலவற்றிற்குக் காரணமாமென்பது விளக்கமுறாமற் போகாது.

வாதம்பேசுவோர் வாதம், செற்பம், விதண்டை, சலம், சாதி முதலியவற்றை நன்குணர்ந்திருத்தல்வேண்டும். வாதம்-உண்மை யுணர்தல்வேட்கையுடையோன் கதையாம்; செற்பம்-சாதனபிரன்னோ தன்கண் வெல்லும் வேட்கை யுடையான் கதையாம்; விதண்டை-தன் கோட்பாட்டை நிலைபெறுத்தாது பிறர் கோட்பாட்டைப் பழிப்பது மாத்திர முடிவுபேறுடைய கதையாம்; சலம்-ஒரு கருத்துப் பற்றிக் கூறிய மொழிக்கு வேறு பொருள் கற்பித்துக்கொண்டு பழித்தலாம்; சாதி-அசத்துத்தரம் (போலி விடை) ஆம். இவற்றினியல்புகள் தருக்கபரிபாஷை, நியாயப்பிரகாச முதலியவற்றுள் விரிவாகச் சொல்லப்பட்டிருக்கின்றன. தருக்கநூலைக் கற்றல் ஞானசாஸ்திர வாராய்ச்சிக்குதவியா யிருப்பதா மென்பதுணராது, தருக்கநூலைக்கற்று வாதம் பேசித் தம் வாழ்நாளைக் கழிப்பவர் சூதாடுகின்றவர்போல வேதனையை யன்றி வேறொன்றையுமடைவதில்லை யாகலின், வாதம் பேசுகின்றவரும் சூதாடு கின்றவருடன் சேர்க்கப்பட்டனர்; இவர்களுடன் சேராது நல்லோரையடுத்துப் பழகிவருபவர் பெரும்பான்மையும் வேதனைக் கிடம்பெறாது வாழ்வது நிச்சயமாம்.

வேதனையைத் தரும் செயலினைத் தாம் தீவினையாம்; சூதும் வாதும் வேதனையைத் தருவனவாக விருத்தலின், அவையும் தீவினையாம்; ஆகவே அத்தீவினையின் வசமாகி வேதனையுறா திருக்க விழிப்பாயிருத்தலே நமது முக்கியக் கடமையாம்.

திருக்குறள்—சூது.

"வேண்டற்க வென்றிடினுஞ் சூதினை வென்றதூஉந்
தூண்டிற்பொன் மீன்விழுங்கி யற்று."

பெருந்திரட்டு—வாத சங்கற்பம்.

"வேண்டி வாதவர் தத்தர்க்கம் வெல்சுகம்
தூண்டிற் பொன்கவர் மீன்சுகம் போலுமால்

ஆண்டும் வெற்றி யகன்றையிற் கேடதாம்
கண்டி தோல்வி பிழைக்கினிற் பட்டதே,"

இப்பிரயோகங்களினின்று நன்கு கவனிக்கற்பாலனவாம்.

பக்தியோகம்.

4-குருவின் அவசியம்.

சகல ஜீவர்களும் முடிவில் பூர்ணாவஸ்தையை யடையும், நமது முற்பிறப்பிலுள்ள பிரவிர்த்திகளையும், எண்ணங்களையும் அநுசரித்ததே நமது இப்பிறப்பின் நிலைமையாம். வரும் ஜன்மத்தின் நிலைமை நமது இறப்பின் பிரவிர்த்திகளையும், எண்ணங்களையும் அநுசரித்திருக்கின்றது. நாம் முன் செய்திருக்கும் கர்மங்களின் நன்மை தீமைகளை யொட்டியே நாம் பின்னரும் சுகதுக்க முதலிய அவஸ்தா பேதங்களை அநுபவிக்கின்றோம். ஆயினும், நமது நிகழ்கால நிலைமையைப் பேதப்படுத்த வேண்டுமாயின், பாவமாகிய விஷயங்களை அங்கீகரிப்பதற்கு யாதொருதடையுமின்றும், பிராரப்த கர்மம் (விதிவசம்) என்றிவ்வாறு கூறி பிரயத்தனஞ் செய்யாமலிருத்தலாகாது. வினையின் அவ்வாறு சில ஒழிவுகளைக் கூறிச் சமாதானப் படுத்துகின், அதுக்குவேண்டி ஜன்மங்களை யெடுத்தபோதிலும் ஒரு அநுபவஸ்தனுக்கு அவன் முன்னுக்கு வருவதின்றும். ஆகையினால் யாதொரு காரணத்தினாலும் பூர்வ ஜன்மத்து செய்த துஷ்கர்மத்தினால் இந்த ஜன்மத்தில் ஆன்ம விஷயமாக முயற்சி செய்வதில் நாம் மந்தர்களாயிருக்கின்றோமாயினும், இப்போதே மிகச் சிரத்தையுடன் அவ்விஷயத்தில் அதிக பிரயத்தனஞ் செய்யவேண்டுவது ஆவசியகமாம். அங்ஙனஞ் செய்யின் இனிவருஞ் ஜன்மத்திலாயினும் அவ்விஷயத்தில் நாம் ஆயாசமின்றிப் பிரயத்தனஞ் செய்தல் கூடும். பயிரிடுதல் முதலிய லௌகிக இகலோக வியவசாயங்கள் முதலிலிருந்து முடிவு பரியந்தம் ஒரேமாதிரியாக முயற்சி செய்யாதிருக்கின், பயனின்றியனவா கின்றன. ஆனால் ஈசுவர பஜனத்தில் இந்த ஒரு குறையின்றும். நாம் எவ்வளவு பரியந்தம் பிரயத்தனஞ் செய்கின்றோமோ அவ்வளவு வாசனை நம்மிடத்துப் பதிந்து கிடக்கின்றது.

'நேஹாபி க்ரமநாஸோஸ்தி ப்ரத்யவாயோ ந வித்யதே'

ஈசுவரபூஜை யாரம்பித்து பின்னர் அதை வேண்டாமென்று நினைத்த போதிலும், செய்த பிரயத்தனம் பயனற்றதாவதின்றும்;

(ப-கீ-அ-உ-சு-40) என்று ஸ்ரீகிருஷ்ணபகவான் அர்ச்சுனனுக்கு உபதேசிக்கின்றார். இவ்விஷயத்தில் நமக்குக் கைகிடும் சமாதானமும் உண்டாவதற்கு இன்னமும் பகவத் வாக்கியத்தையே யெடுத்துக்காண்பிப்போம் —

பார்த்த நைவேஹ நாமுத்ர விநாசஸ்தஸ்ய வித்யதே
ந ஹி கல்யாணக்ருத் கச்சித் துர்க்கதிம் தாத கச்சதி ॥

ஏ அர்ஜுனா! இவ்வுலகத்திலேனும், பரலோகத்திலேனும் அவனுக்கு (யோகப் பிரஷ்டனுக்கு) நாசமுண்டாவதின்றும். ஏ குழந்தாய்! சத்கருமஞ் செய்யும் எவனும் அதோகதியையடைவதின்றும் (ப-கீ-அத்-6-சு-40). அதனால் இச்சன்மத்தில் நாம் ஆத்மவிஷயமாக அபிப்பிராயத்தனஞ் செய்தல் வேண்டும். அதற்குப் பாகியமாகிய சில உதவிகள் சிலகால் அத்யாவசியகமாகவிருக்கின்றன, அத்தகைய உதவிகள் உண்டாகும்போது நம்மிடத்து மகத்தாகிய சக்தியுண்டாகிறது; ஆத்மஞானமும் நம்மிடத்துப் பிரகாசிக்கின்றது. இங்ஙனம் நாம் ஞானமுடையவர்களாய்ப், பவித்திரர்களாய் முடிவில் பரிபூரண அவஸ்தையையடைவோம்.

நம்மிடத்து ஆத்மஞானத்தைப் பிரகாசிக்கச் செய்வதாகிய இந்தச் சக்தி புத்தகங்களிலிருந்து கிடைப்பதின்றும். ஒரு ஆன்மாவிற்கு மற்றொரு ஆன்மாவினிடத்திருந்தன்றி மற்றொன்றனாலும் இந்தச் சக்தி கிடைப்பதின்றும். ஜீவித காலமுழுதும் நாம்புஸ்தகங்களைப் படிப்போமாயின், அதனால் நாம் மிகுதியான பாண்டித்யத்தைச் சம்பாதித்தல் கூடும். ஆனால், ஆன்ம விஷயமாகச் சிறிதேனும் நாம் அபிவிர்த்தியையடையவில்லையென்று முடிவில் நமக்கே தெரியவரும். சாஸ்திரீயமாகிய ஞானம் நம்மிடத்துப் பெருகுந்தோறும் ஆன்மஞானமும் நம்மிடத்துப் பிரகாசிக்க வேண்டுமென்பதில்லை. சிலகால் நாம் புத்தகங்களைப் படிக்கும்போது அத்யாத்மிகமாக அவை நமக்கு மிகுதியாக உதவிபுரிகின்றனவென்று நாம் மயக்க மடைகின்றோம். ஆனால் நுட்பமாக நாம் நமது அந்தக்கரணத்தைப் பரீக்ஷிக்கும்போது புத்திக்குச் சிறிது விரிவு வந்ததலன்றி ஆன்மவிஷயமாகிய காரியத்தில் நாம் ஒருபடியேனும் ஏறவில்லையென்று நமக்குத் தெரியவரும். ஆத்மஞானத்தையும் பிரகாசிப்பதற்குரிய ஆற்றல் புஸ்தகங்களுக்கின்றும். அதனால் நாம் எல்லோரும் ஆன்ம தத்துவத்தைப் பற்றி மிகு அழகாகப் பிரசங்கிக்கலாம், ஆயினும் பிரவிர்த்தியில் வரும்போது தாழ்ந்த நிலையிற்றா னிருக்கின்றோமென்று நாமே

காண்கின்றோம். ஆன்ம சைதந்யத்தைப் பிரகாசிப்பித்தற்குரிய சக்தி அந்நிய ஆன்ம சைதன்யத்தினிடத்திருந்து வரவேண்டும்.

எவனிடத்திலிருந்து அந்தச் சக்தி வருகின்றதோ அவர் குருவென்று கூறப்படுகின்றனர். எவனது ஆத்மாவை அந்தக் குரு பிரகாசிக்கச் செய்கின்றனரோ அவன் சிஷ்யனெனவுங் கூறப்படுகின்றான். ஆத்ம சைதன்யத்தைப் பிரகாசிப்பித்தற்குரிய சக்தி குருவினிடத்துப் பூர்த்தியாக விருத்தல் வேண்டும். எவனிடத்து அந்தச்சக்தியைப் பிரயோகிக்கின்றனரோ அந்தச் சிஷ்யன் அதற்கு அதிகாரியாகவு மிருத்தல் வேண்டும். முளைப்பதற்குரிய சக்தி விதையி லிருக்கவேண்டும்; நிலம் உழுது தயாரா யிருத்தல் வேண்டும். இவ்விரண்டும் ஒத்திருக்கும்போது ஆன்மசைதன்யம் பூர்த்தியாகப் பிரகாசிக்கின்றது.

ஆசார்யவாந் புருஷோ வேத

ஆத்மஞானத்தை உபதேசிக்கும் குரு மகாசமர்த்தராக விருத்தல் வேண்டும். உபதேசத்தைக் கேட்கும் சிஷ்யனும் மிக யோக்யமுடையனாயிருத்தல் வேண்டும். இங்ஙனம் இருவரும் மகா சமர்த்தரும், யோக்யரு மானாற்றான் ஆத்மஞானம் பிரகாசிக்கும்; வேறெவ்வாற்றானும் பிரகாசிப்பதின்றும். அத்தகையரே பரமார்த்த குருக்கள்; அத்தகையரே பரமார்த்த சிஷ்யர்கள்; ஏனையோர் ஆன்ம விஷயத்தை விளையாட்டாகச் செய்பவராவர். அவரிடத்துச் சிறிது ஜிஞ்ஞாசை பிறந்திருக்கலாம். ஆயினும் அவர் பரமார்த்தமா யிருக்கும் எல்லையில் வெளியிற்றா னிற்கின்றனர். ஆயினும், இதுவும் நலமுடையதாமென்பதற் கையமின்றும். ஏனெனின், முடிவில் அது அத்யாத்மிகமாகிய ஞானவிஷயத்தில் உண்மையான ஜிஞ்ஞாசையாய் பரிணமித்தல்கூடும். எப்போது நிலம் தயாரா யிருக்கின்றதோ, அப்போது விதையும் வந்து சேருமென்பது வாதமில்லாத விஷயமாம். ஆத்மப் பிரகாசத்தை ஆகர்ஷிப்பதற்குரிய சக்தி பக்குவியின் உள்ளத்தில் நிறைந்தால் அதனை யநுசரித்து அந்தப் பிரகாசத்தைக் கொடுப்பதற்குரிய மற்றொரு சக்தி உடனே உண்டாவதாம்.

ஒருகால் இதற்கே சில தோஷங்கள் உண்டாதல் கூடும். க்ஷணிகங்களாகிய சில மனோ விகாரங்களைப் பரமார்த்த ஜிஞ்ஞாசையா மெனப் பிறழ்ச்சியாக எண்ணுகின்றனர். இதுவு ஒருவகைத் தோஷமாம். இது நம்மிடத்து இருப்பது நமக்கே தெரியவரும். நம்முடைய ஜீவிதகாலத்தில் சிலகால் நமக்கு மிக நேச முடையோர் சிலர் இறக்கும்

போது பெரிதாயெடுத்து அடைபட்டதுபோல் தோற்றுகின்றது. அப்போது இவ்வுலகம் அநித்தியமானதென்றும் நம்பத்தகாததென்றும், ஆதலால் நித்தியமாயும், உத்கிருஷ்டமாயுமிருக்கும் வஸ்துவை அடையத்தான் முயற்சி செய்தல் வேண்டுமென்றும் நமக்குத் தோற்றுகின்றது. சிறிதுநாட் சென்றபின்னர் இந்த உணர்ச்சி போய் நாம் முன்னிருந்த விடத்திற்றான் இருக்கின்றோம். நாமெல்லோரும் இவ்வகை ஸ்மசான வைராக்யத்தைப் பாரமார்த்திக ஞானமென்றெண்ணி மயக்கமடைகின்றோம்; எவ்வளவு காலம் பரியந்தம் இத்தகைய க்ஷணகாலத்திய மனோவிகாரங்களைப் பாரமார்த்திக பக்தியாக நினைக்கின்றோமோ, அது பரியந்தம் நமக்குடன்மையான பக்தி கிடைப்பதின்றாம்; நாம் அதற்குரியவற்றையும் கண்டுபிடிக்கமாட்டோம். ஆதலால் நாம் இவ்வளவு காலமும் ஜீவித்தும் நமக்கு ஒரு பயனும் கிடைக்கவில்லையே யென்னும் சங்கடத்தைக் கூறுவதற்குப் பதிலாக, பாரமார்த்திக ஞானம் நமக்குண்டா? இன்றா? என்றறிவதற்கு முதலிலேயே நாம் நமது அந்தக்கரணத்தைப் பரிசோதித்தல் வேண்டும். அப்போது நமக்குத் பெரும்பான்மையோரும் பக்குவிகளாகவில்லை யென்றும், பரமார்த்த ஞானம் நமக்கு வரவில்லை யென்றும் வெளிப்படு[ம்].

குருவின் விஷயத்தில் இதனினும் பெரிய தோஷங்கள் [illegible]ட்கூடும். மகா மூடர்களாயுள்ளோரும், அஞ்ஞானத்தினால் [illegible] சர்வஞ்ஞர்களென நினைப்போர் அநேகருளர். அன்றியும், [illegible]யர்கட்கு உபதேசம் செய்வதற்குரிய பாரத்தையும் அவர்கள் ஏற்றுக் கொள்ளுகின்றனர். ஒரு குருடன் மற்றொரு குருடனுக்கு வழிகாட்டி இருவரும் குழியில் வீழ்கின்றனர்.

அவித்யாயாமந்தரே வர்த்தமாநா:
ஸ்வயம் தீரா: பண்டிதம் மந்யமாநா:
ஜங்கந்யமாநா: பரியந்தி மூடா:
அந்தேநைவ நீயமாநா யதாந்தா:

பொருள்:—"அஞ்ஞானத்தின் கண்ணே சுழல்பவர்களாகவும் தீரர்களென்றும் பண்டிதர்களென்றும் தங்களை நினைத்துக் கொள்பவர்களாகிய மூடர்கள் குருடரால் வழிகாண்பிக்கப்பட்ட குருடரைப் போல் அலைந்து மிகத்துன்பப்படுவர் (முண்டகம் 1-2-8). இத்தகையர் உலகத்தில் நிறைந்திருக்கின்றனர். யாவரும் உபதேசிகர்களாக ஆக இச்சிக்கின்றனர். எல்லாப் பிச்சைக்காரரும் ஒரு கோடி திரவியத்தைத் தானஞ்செய்ய விரும்புவது போலவாம். இது எவ்வளவு பொருத்தமின்றியதாமோ அதுவும் அவ்வளவு பொருத்தமின்றியதாம்."

பிரபஞ்ச விநோதங்கள்.

(1) நம்புசகனுக்கு "அப்சரஸ்" போன்ற ரூபவதியும், லக்ஷ்மி போன்ற மங்கையர்க்கரசிக்கு ஒரு மூக்கறைப்பயலும், ஸ்திரீபுருஷர்களாக அமைகின்றார்கள்.

(2) லோபியினிடம் உயர்ந்த புஸ்தகங்கள் தூங்குகின்றன!

(3) பண்டிதனிடம் ஆசாரமில்லை; ஆசாரமுள்ளவனுக்குப் படிப்பு வருவதில்லை.

(4) ஆசையுள்ளவன் படிப்பதில்லை; அல்லது படிக்க முடியாமல் வறுமை பாதிக்கின்றது. முட்டாளுக்கோ, எல்லா விதமான சௌகரியங்களுமுண்டு; ஆனால் அவனுக்கு ஒரு எழுத்துங் கூட வாயில் நுழைவதில்லை! கடவுளே! உம்முடைய திருவிளையாடல்களுக்கு வந்தனம்.

(5) அநேகமாகப் பால்ய விவாகமே இக்காலத்தில் நடந்து வருகின்றது. அவர்களுக்குப் பிறக்கும் சந்ததிகளோ (14 வயதிற்குட்பட்ட மங்கைக்குப் பிறந்ததாகவே—அவளது அலசித்தைப்போல்—பலமற்றுப் பிரமதேவனால் வார்க்கப்பெற்று) நிமிஷத்தை வியாதிகொண்டனவாய்ப் பிறக்கின்றன. 5-வது வயதில் ஆங்கிலம் ஆரம்பம்; 16-வது வயதில் பிரவேச பரீக்ஷை. இப்பொழுது கல்யாணம் முடிந்து ஒரு குழந்தை பிறந்துவிடுகின்றது! பலத்தைப் பற்றிக் கேட்கவே வேண்டாம். கன்னி வைரந்தான்!

(6) பிறந்த ஆண்குழந்தைக்கு ஆண்டு ஏழு முடியுமுன், பெண் பேசிக் கல்யாணமாகிவிடுகின்றது. உபநயனம் முடிந்து குருகுலவாசமென்பது—கைலாசத்திலாவது—வைகுண்டத்திலாவது [illegible] தள்ளிப்போட்டு நடத்தும்படி கர்மானுஷ்டானம் செய்கின்றார்.

(7) உபநயனம் முடிந்த நான்காவது தினத்தில் விவாஹமாவது செய்யப்படுவது பெரியோரின் ஆசைக்காகவா? அல்லது உபாத்யாயரின் வரும்படிக்காகவா? அல்லது பாஹ்யத்தாரின் கண்ணுக்காகவா?

(8) "விதவாவிவாஹஞ் செய்யலாம்" என்பது சீர்திருத்தக்காரர்களின் அபிப்பிராயம். "கூடாது;" [illegible]

குடும்பத்திற்குத் தோஷம் அணைத்துப்போட்டுச் செய்து பாட்டைக் கழைக்கப் பிறந்ததேயன்றிப் புனர்விவாஹஞ் செய்து, துன்பம் நீக்குவதற்கல்ல" என்பது சாஸ்திரத்தை மறந்த பெரியோர்களுடைய அபிப்பிராயம். இதைப்பார்த்தார் காதர். அவர்மனதிற்குப் பின்வருமாறு ஒரு யுக்தி புலப்பட்டது "ஆசாரத்திற் கேற்பவிபவ ஹாராமுண்டு. அதை மாற்ற முடியாது. முன்காலத்தில் எல்லோரும் 25 வயதுவரை குருகுல வாசஞ்செய்து வந்தார்கள். பிறகு இஷ்டமிருந்தால் 30 வயதில் கல்யாணமாகும். சிற்றின்பத்தில் அவர்களுக்கு இயற்கையான ஆவேசமில்லாமலும் வைராக்யத்தை பே[illegible]க்யமாகக் கருதியும் வந்தனர். பிறகு சாஸ்திரசம்மதப்படி தங்களுடைய இன்பங்களை அடைந்து வந்தனராயினும், அவர்களுடைய சரீரபலமும் மனோபலமும் உரு வெடுத்தனபோல் குழந்தைகளும், நல்ல பல சாலிகளாயும், புத்தி (மேதா) வான்களாயும் பிறந்தனர். ஒருவராவது அவர்கள் (தர்மசாஸ்திர—ஆயுர்வேதச் சட்டங்களுக்குத்) தவறிய நடப்பதில்லை யாதலால் அவர்களுக்குள்— அல்ப ஆயுள்ளவ சந்ததி யுண்டாக அதிசயமே இல்லை. ஏகாந்தசம உண்டாகுமானால் அசௌக்கியமத்தின் தலையில் வைத்து பால்யத்தில் விதவைகளானால்—அவர்கள் புருஷனுடைய சம்பந்த மடையாதிருக்கும் பக்ஷத்தில்—அவர்களுக்குத் திரும்ப விவாகஞ் செய்து விடலாம் என்பதும் சட்டமாக ஏற்பட்டது. அல்லது அந்த ஸ்திரீகளுக்கு இயற்கையாகவே வைராக்ய மிருந்தால்—அவர்கள் பரலோக நன்மையை உத்தேசித்து நடந்து கொள்ள வேண்டியவர்களாயிருந்தால்—அவர்களுக்குச் சில உத்தமமான தர்மம் (கடமை)கள் அமைக்கப்பட்டன. (உடன் கட்டையென்பது பூர்வகாலங்களில் எங்குமே பிரஸ்தாபத்திலில்லை. யாதலால் விதவைகள் உயிரோடிருப்பதுமுண்டு. ஆனால் அதிப்ராய விவாகம் இல்லாததனால் "விதவைக் கட்டமாகவே" விஷமிருந்ததில்லை) இக்காலத்திலே—பாலிய ஜனங்களின் சரீர சக்தி முதலிய ஆசாரக் குறைவினாலும், ஜனத்துயரம்—வித்யாசமும், ஸ்ரீயோ பாசனை முதலிய—சரீரபலத்தை யளிக்கும் கர்மானுஷ்டானக் குறைந்து விட்டதனாலும்,—சாஸ்திரத்தில் விலக்கப்—பட்ட லுமீனத்தருகின்ற—ஆஹாரத்தையே உட்கொள்ளுவதனாலும் சாவிவாஹமானது அன்னபோல் பெண்களெல்லாம் பன்னிரண்டு வயதாகுமுன் குட்டிகள்ளி விடுகின்றனர். "பிஞ்சில் பழுத்தால்

வெம்பல்" என்பது உண்மை. சரீர அவயவங்கள் விருத்தியடையாத பருவத்தில்—ஸ்திரீ புருஷசம்பந்தம் ஏற்படுவதனாலும்—அவர்களுக்கு மனத்திலோ—அல்லது சரீரத்திலோ பூர்ணமான வளர்ச்சி யில்லாததினாலும்—பிரசவிக்க முடியாமல் பல ஸ்திரீகள் இறந்து விடுகின்றனர். அல்லது அதிசீக்கிரத்தில் உலக சுகங்களை வெறுக்கின்றனர். பின் சந்ததிகளைக் காப்பாற்றச் சக்தி யிருப்பதில்லை. அல்லது அக்குழந்தைகளுக்குப் பாலில்லாமல்போகவிட்டுப் போகின்றன. சிறிது காலத்திற் கெல்லாம்—இங்கிலீஷ் படிப்பில் முதன்மைபெற வேண்டி—(குருகுலவாசம் போன்ற காடுகளில்—ஸ்திரீ சகவாசமில்லாத இடங்களில் படிப்பு விருத்தியாகுமென்பதை மறந்து) தாசிகளும்—துஷ்டஸ்போர்வழிகளும் நிறைந்த டவுன்களுக்கு அனுப்பி கலாசாலைகளில் ஸ்திரீகளுடன் படிக்கச் செய்யும்பொழுது சிறுவர்களின் சரீர மனோபலம் புசவும் மேவுட்டும்முறட்டுக் கல்வியினால் உறிஞ்சப்பட்டே—தாயுமாதுப் [illegible] போல—என் அவள் கூட எதற்கு விரதம் இருக்கவும்—குடும்பவேலை செய்யவும் சௌகர்யமில்லை! இவ்வாறு நடப்ப தற்கே இடமிருக்கின்றன! கண் ஜாடை போட்டால் கண்தெரிவதில்லை! காப்பாற்றத் தவல்லே பொறுக்க முடியவில்லை! அதுவும் பாட்டியை இவரைக் கூட்டிக்கொண்டு எவ்வளவோ மேலென்று சொல்லவேண்டும். தண்டத்திற்கு (வீணிற்கு அல்லது அப்பீன் உதவிகிரும்பும்) ஆனாலென்ன! பாலிய விவாஹம் அதிகமாகவே இருப்பது ஆங்கிலம் படித்தவர்கள் பார்க்கவேயாம். வயதாகிவிட்டால் வரதக்ஷிணைப்பிசாசு பிடிக்குமென்று (பெண்ணினைப்) பெற்றோர் பயந்து பெண்ணை எங்காவது தள்ளிவிடப் பார்க்கின்றனர். சிறிது காலத்திற்கெல்லாம் அந்த இலையானது அப்புருஷன் தப்பித்துப் புருஷன் விடுகின்றான். பெண்ணின் கதி அதோகதிதான். பெண் பெரிய மனுஷியாக 6 மாதம் செல்லும்! முதலாவது இந்தப்பெண் விதவையானதற்கு என்ன காரணம்? என்று இலட்சியரோர் சொல்லுகின்றனர்! கர்மம் (விதி) என்றால் யாருடையது என்று கேட்கவேண்டும்? சட்டப்படி விசாரித்தால் 13 வயதாகும்பொழுதுதான் "கர்மங்கள் அவரவருடையன என்று சொல்லவேண்டும்! முதலாவது இவர்கள் செய்யும் விவாகமே செல்லாது; ஆயுள்ளைப் பரிசோதிக்கச்செய்ய முன்னோர்கள் பல வழிகள் அமைத்திருக்கின்றனர். ஜோதிஷத்தை உண்மையாகச் சொல்வோருமில்லை! பார்ப்போருமில்லை! அதனாலேயே அப்

படிக் கைவிட்டவர்கள் என்று கேழ்ப்போருமில்லை. ஆனால் சோதி டமே அழித்து விடுகின்றது. கர்மம் இன்னும் வரவில்லை யென்று ஆசிரியரின்றி—நிதலை சொத்தைப்போல் ஒரு கலியாணத்தை எதிர்பார்க்கின்றது! இது கிடக்க, புரோஹித (உபாத்யாய)ர்களோ செய்கின்ற அக்கிரமங்களுக்குக் கணக்கில்லை! பொய்களினைச் சாதிப்பதும், லஞ்சம் வாங்குவதும் தொழில்! புரோஹித மந்திரத்தின் அர்த்தமோ அவருக்கே தெரியாது! (ஏன்? அவருடைய உபாத்தியாயருக்குக்கூடத் தெரிந்திரா தென்னலாம்!) மாப்பிள்ளைப் பையனுக்குப் "பிராஹ்மணன்" என்ற சொல்லை யாரேனும் மொழிபெயர்த்துக் கொடுத்தால் சுலபமாகச் சொல்லி விடுவான்! (ஆனால் கல்யாணமான)தான் காவது இனிமேல் கல்யாணமாகிவிட்டதால்—சத்தியா வந்தனை மென்பது வாக்பாரிட்டமே தங்கிவிடும். பெண்ணுக்குக் கணவனைப்பற்றி ஒன்றுமே தெரியாது. ஆனால் அவன் பி. ஏ. முதல் வகுப்பில் தேறின செய்தியும்-அவன் சொத்தால் இறந்துபோன தந்தியும் ஏககாலத்தில் கிடைத்துத் தனது சுற்றத்தார் "தன்னைக் கட்டியபொழுதுதான் தெரியும்!" ஆஹா! என்ன பரிதாபம்! "தேவலோக வாசியான எனக்கு இதொன்றும் தெரியாது. எங்களுலகத்தில் இத்தகைய அன்பப்புணர்ச்சி இராது. நாங்கள் இன்ப உலகில் மகிழ்ந்து கடவுளை ஆராதிக்கின்றோம். ஆயினும் பூலோகம் பார்த்து வெகு நாளாகிறதே, ஒரு முறை பார்த்துப் போவோம்!" என்று வந்தேன். பார்க்கப்பார்க்க அக்கிரமங்கள் அதிகரிக்கின்றன! பெண்ணுக்குத் தன்னறிவு வாராதகாலத்திலே—ஆண் குடியனோ, தடியனோ, நெட்டையனோ, குட்டையனோ, ஸுரூபியோ, குரூபியோ, குணமுள்ளவனோ, துர்க்குணியோ, வெறியனோ, நெறியனோ, கருத்தவனோ, செவத்தவனோ, ஸதாசாரியோ, பிசாசாசாரியோ, பண்டிதனோ, மூடனோ, நல்லகுலமோ, கெட்டகுலமோ, மாமன் மாமி எப்படியோ; காடோ, காடோ, இந்தியாவிலோ, பர்மாவிலோ; பெண்ணுக்கு விவாஹம் செய்கின்றனர். அதற்கு ஒன்றுமே தெரியாது. விவாஹத்தில் வைதிகச்சடங்குகள் நடத்த சாவகாசம் இருப்பதில்லை! குளிச்சியிலிருந்து சகல விதமான வைதிகச் சடங்குகளையும் "வாத்யார் நடத்தும்படி" மாப்பிள்ளை ஆக்ஞைசெய்வார்! இந்த விவாஹம் எந்த சாஸ்திரப்படி நடத்தப்பட்டது? இது செல்லுமா? பெண்களை

மனப்பூர்த்தியாகப் புருஷன் வரிக்கிறானா? அல்லது, பெண், தானாகவே புருஷனை அப்போதே நாயகனாக வரித்தாள்? இவையொன்றும் கவனிப்பாரில்லை. பெண்களின் கண்ணீரால் பூமிதேவி நனைகிறாள்! தர்ம தேவதை கதறுகின்றாள்! உண்மையான விவாஹமும்-திருமணத்து அருமையும் எங்கோ கிராமாந்தரங்களில் இருப்பதால் தர்ம தேவதையும் கிராமங்களிலேயே வசித்து வருகின்றாள். ஒருவனது மனைவி—10-வது வயதில் இறந்துபோகிறாள். இறந்த (15) வது தினத்தில் திரும்பவும் அவன் மணமகனாக விளங்குகின்றான்! இதற்கு மட்டும் சாஸ்திரம் படித்துப்பார்க்கிறும்-வயது வராத-அத்தனை இளம்பருவத்தில் கல்யாணமாகிக்—கணவனை இழந்துவிட—அவள் விஷயத்தில் வேதசாஸ்திரங்களும், அறுவை புடவை-புனர்விவாஹத்திற்கு இடங்கொடுக்க-அதற்குள்ளேல், ஆசார்யத்தினிடம் ஏதோ என்ன நியாயமிருக்கின்றதோ? ஆனால் புனர்விவாஹத்திற்கு ஆதாரமான சாஸ்திர அனுகூலங்கள் இல வேறு யுகங்களுக்காக ஏற்பட்டவை யென்றும், கலியுகத்திற்கல்ல வென்றும்—கலியில் அனுஷ்டித்தால் தர்மம் குறைந்துவிடு மென்றும் சொல்லுகின்றார்கள். அது முரட்டுத்தனமான பேச்சு. எப்படியாவது வாதித்தால் வெற்றியடையலாம் என்று நினைத்து கலியுகத்தில்தான் "வையத்தாருடன் வாசியர் இறக்கின்றனர்; ஸ்திரீகள் பெருகுகின்றனர்; ஆண் புருஷர்களில் அனைவருக்கும் ஆயுள் குறைவு நேர்வதால் அனைவருக்கும் உண்டு. இதற்கு ராமாயணம் உத்தரகாண்டத்தில் ஒரு பிராமணன் அற்பாயுசாய் போன கதையும் பின்னர் அவன் பிறகும் ஸ்ரீராமசந்திரனுடைய இருவருக்கும் ஸாக்ஷி. தான் அப்பொழுதும் மேற்பார்த்தவன். அக்காலங்களில் இவ்வாறு அக்கிரமங்களில்லை. ஆகவே ஒரு பெண்-விதவையாகித் தனது உடலைக் கவனியாது-அழிவதாகவும்-வேறு அன்னியாகவும்-சுதந்தரமாய் ஒரு-மிலேச்சனையோ அல்லது ஒரு நீசனையோ சேர்ந்துச் செய் பாத்திர மத்தியில் பேசத்தகாத் தீச்செயல் செய்து-அவள் மறுபாவத்தைச்செய்து-சாதத்தைக் கெடுப்பது மேலே? அல்லது மேற்கூறியபடி (சாஸ்திர முறைப்படி) விவாகமாகாதவளும்-தர்ம சாஸ்திரம் கூறுகின்றபடிக்குத் திரும்ப விவாஹத்திற்கு யோக்கியமானவளும்-தன் சிறுவயதில்-தனக்குத் தெரியாத காலத்தில் தந்தையினால் கலியாணஞ் செய்யப்பட்டவளுமான ஒருத்தி-தான் (சாஸ்திரத்தில் சொல்லப்பட்டபின்னர்படி)-இத்தன்மையான ஆபத்துக்களில்

னொருக்கு உட்பட்டதான்-அக்கினிசாக்ஷியாய் ஒரு கணவனை மணந் சாஸ்திரத்துக்கு விரோதமில்லாமல் வரிக்க (விவாஹஞ்செய்து) கொள்ளுவது மேல்? அல்லது அவளுடைய. ஸ்வர்க்க நரகங்களுக்கு (அவளுக்குப்) பாத்யமிருப்பது உண்மையா? அல்லது மற்றவர்களின் அபிப்ராயப்படி (அவள்-இரகசியமாக அக்கிரமஞ்செய்தால்) தர்மராஜா மன்னித்துவிடுவாரா? அல்லது அவள் தன்னை ஒருவருக்கு அர்ப்பணஞ்செய்துகொள்ள பாத்யமுள்ளவளா? இல்லையா? (அந்த ஆத்மாவை ஒவ்வொருவரும்-தன்னுடையதாகப் பாவித்து ஆராய்ச்சி செய்க). ஆனால், என்னுடைய புத்திக்கு எட்டினமட்டும் இக்கஷ்டங்களையெல்லாம் நான் முன்னமேயே என் தபோபலத்தினால் அறிந்துகொண்டேன். மற்ற, சட்டஞ்செய்யும் (ஸ்ருதிக்காரரான) மஹாஷிகளிடமும் இதைப்பற்றி யோசித்தேன். எல்லோரும் என்னைப்போலவே நினைத்தனர். ஒருத்தி (ஒருவன்) செய்கின்ற பாவமெல்லாம் மனத்தினாலேயே யன்றிச் சரீரத்தினால் அல்ல. உலகம் சரீரத்தைக் கட்டுப்படுத்துகின்றது. மனத்தை அடக்க அதனால் முடியாது. மனமானது பாவஞ்செய்துகொண்டேயிருக்கின்றது. புருஷர்கள் செய்கின்ற அக்ரமங்களுக்குக் கேள்வி முறையில்லை. "எங்குப் பார்த்தாலும் பணத்தாசை! பிராமணவாலிபன் செருப்புப் பதனிடுந்தொழில் கற்கச் சீமைக்குச் செல்லுகின்றான்; பிராந்திஷாப் வைக்கின்றான்; சோற்றுக்கடை வைப்பதென்றால் சுவர்க்க பதவியென்று நினைக்கின்றான். ஞான யாகங்கள் ஒழிந்தன. தேவர்களைக் குறித்த பிரார்த்தனைகள்-கிரியைகள் சீர்குலைந்தன. அவைகளைக் கவனிப்பதுயார்? வீண் மதச்சண்டைகள் பெருத்தன. தேவசாஸ்திரங்களைக் காட்டுக் கதைபோலும் கேட்பாருமில்லாமல் அவை "கதையாகுல்" [illegible]. செய்யவேண்டிய நற்கிருத்தியங்கள் பலகுவிந்திருக்கின்றன. அவைகளைப் பிராமணர் கவனிப்பதேயில்லை. ஸ்திரீகளின்-[illegible] அக்ரமங்களை-நீசர்களுடைய சேர்க்கையைக்கூட-மறைத்து அவர்களைத் தங்கள் குடும்பங்களிலேயே வைத்துக்கொள்ளுகின்றனர். அவர்களின் மூலமாகச் சங்கர (கலப்பு) சாதி பெருகுவதில் தடையில்லை. அப்படிச் சமூகம்-அநியாயமுறைப்புன் [illegible] இடங்கொடுப்பதைக் காட்டிலும்-அக்கினி சாக்ஷியாக "நானும் நான்கு வேதங்களும்-28 தர்மசாஸ்திரங்களும் இன்னும் பலஇதிஹாசபுராணங்களும் கூறியுள்ளபடி" ஓர் உத்தம நாயகனுக்குப் (பர்த்

தாவினது சேர்க்கை யடையாத விதவையான பெண்களுக்கு) விவாஹஞ்செய்வது சாஸ்திரசம்மதமேயாகும். இதற்கு வேண்டிய ஆதாரங்கள் "பூருவ விதவாவாதத்தில்." அச்சிட்டிருக்கின்றனர். சாஸ்திரங்களுக் கிடமின்றாமல் விஷயம் விளங்கும். ஒவ்வொரு ஸமஸ்கிருத பண்டிதர்களும் இதைப்பற்றித் தற்காலம் (ஸ்திரீகளுக்கு நேர்ந்திருக்கின்ற கொடுமைகளைத்) கருணையுடன் கவனித்துப் பத்திரிகைகளில் சர்ச்சை செய்யவேண்டியது மிகுமுக்கியமாகும்". மற்றுமுள்ள சில விஷயங்களைப் பின்னர் தெரிவிக்கின்றேன். இங்கு ஸ்ரீ நாரத மஹாரிஷி ஆலோசித்து முடிவு செய்த விஷயங்களைச் சட்டஞ்செய்யும் மஹாரிஷிகள் எல்லாருடனும் கலந்து ஆலோசித்துள்ள பண்டிதர்களுக்கும் இந்த விஷயத்தைத் தெரிவித்து ஸர்வஸம்மதமான ஒரு பெரிய மஹாசபைகூட்டுமனைக்குறித்து "ஹிமாலயத்திற்குப் போயிருக்கின்றார். உலக நன்மையை உத்தேசித்து இந்த விஷயத்தை எல்லோரும் நம்பும்படி" என்று என்னிடம் சொன்னார். இது விஷயமாக எல்லோரும், கருத்து-யுக்தி-அநுபவங்களுடன் யோசியுங்கள். வந்தனம். நாரதர் ஆரம்பித்த காரியம் வீண் போகுமா? முடிவில் நன்மையே. இங்ஙனம் காற்றுக் கடவுள்.

கர்ணன்.

(முன்தொடர்ச்சி)

இரண்டாம் அத்தியாயம்.

இவன் இங்ஙனமிருக்கத் திருதராட்டிரனுடைய தம்பியாகிய பாண்டு குந்தி, மாத்திரி என்னும் தன் மனைவியர் இருவரோடும், சில மெய்க்காவலரோடும், வேடுவரோடும் இமயமலைச் சாரலிலுள்ள காட்டுக்கு வேட்டையாடச் சென்று அக்காட்டிற் சில வருடங்கள் தங்கியிருந்தனன். அங்குக் குந்தியானவள் தருமன், வீமன், அர்ச்சுனன் என்று மூன்று பிள்ளைகளைப் பெற்றனள். மாத்திரிக்கு நகுலன், சகாதேவன் என்று மைந்தரிருவர் பிறந்தனர். அத்தினபுரியில் திருதராட்டிரனுக்குத் துரியோதனன், துச்சாதனன் முதலிய நூறுபிள்ளைகளும், துச்சளை என்னும் ஒரு பெண்ணும் பிறந்தார்கள். அம்மைந்தர்கள் அனைவரினுக்

தருமன் மூத்தவன்; துரியோதனன் தருமனுக்கு இளையவன் மற்றவர்க்கு மூத்தவன். காட்டிலே பாண்டு ஏதோ காலவசத்தால் பரலோக மடைந்தனன்; அப்போது மாத்திரி தன் மைந்தர்களிருவரையும், தன் பெரிய தமக்கையின் புத்திரியும், தன் சக்களத்தியுமாகிய குந்தியினிடம் ஒப்புவித்து விட்டுடன் கட்டையேறினள். பிறகு குந்திதேவி அவ்விருவருக்குஞ் செய்யவேண்டிய ஈமக்கடன்களையும், சாமக்கிரியைகளையுந் தன் மைந்தர் ஐவர்களாலுஞ் செய்வித்து முடித்தனள். பிறகு சததிருங்கர்என்னு முனிவர் அம்மைந்தர்களோடு அக்குந்திதேவியை அத்தினபுரிக்கு அழைத்துச் சென்று திருதராட்டிரன் பாற் சேர்த்துவிட்டுத் தம்மிடஞ் சென்றனர்.

மூன்றாம் அத்தியாயம்.

திருதராட்டிரன் தன் தம்பியாகிய பாண்டுவை நினைந்து மிகவும் வருந்தி அம்மன்னன் மைந்தர்கள் ஐவரையுங் கட்டித் தழுவி அவ்வருத்த நீங்கினன். அவ்வண்ணமே வீட்டுமர் விதுரர் முதலியோரும் பாண்டு மன்னன் இறந்ததைப் பற்றிப் பெரிதும் வருந்தி அவன் மைந்தர்களைக் கண்டு தழுவி ஆனந்தக் கண்ணீர்ச் சொரிந்தனர். பிறகு பாண்டுவின் மைந்தர்கள் ஐவரும், திருதராட்டிரன் மைந்தர்கள் நூற்றுவருங்கூடி ஒரு தடம்புனற்றடத்தில் ஒருங்கு பொருந்திவளரும் தாமரையும் அல்லியும் என வளர்வாராயினர்.

இவர்கள் இங்ஙனமிருக்க ஸ்ரீ கண்ணனையும், பலராமனையும் ஈன்றவராகிய வசுதேவரும், மற்று குந்திபோசர் என்னும் அரசர்களும், தத்த மனைவியருடனும் மைந்தருடனும் அத்தினபுரியை வந்தடைந்து வீட்டுமர், திருதராட்டிரன், விதுரர் முதலியவர்களையுங் குந்திதேவியையுங்கண்டு பாண்டு மரித்த செய்தியைப்பற்றி வினவி அவர்கள் உள்ளந்தேற இன்மொழிகள் புகன்று பாண்டுவின் மைந்தர்களைத் தழுவிக்கொண்டு களிகூர்ந்து அவணிருந்தனர். பிறகு அவர்கள் தங்கள் நகரத்துக்குச் சென்றார்கள்.

நான்காம் அத்தியாயம்.

இங்ஙனஞ் சில நாட்கள் செல்லத் துரியோதனன் பீமனது பலத்தைக்கண்டு அவனிடம் பெரிதும் பொறாமைகொண்டனன்; அவன் கர்ணனுடைய பராக்கிரமத்தைக்கண்டு அவனைத் தன்

அரிய நண்பனாக்கொண்டான். ஒருநாள் மாலை பாண்டவர்களுந் துரியோதனனும், அவனுடைய தம்பியரும், கர்ணனுங் கங்கைக்குச் சென்று நீரில் விளையாடி மீண்டு அங்குத் தமக்காக அமைக்கப்பட்டிருந்தவொரு மாளிகையடைந்து உண்டு உறங்கினர். அன்று நள்ளிரவில் துரியோதனன் கர்ணனோடும் தன் தம்பியரோடும் யோசித்து வீமனுடைய கைகால்களை ஒருவலிய கயிற்றினால் நன்றாய்க் கட்டிக்கொண்டு போய் அக்கங்கை யாற்றிற் போட்டு விட்டனர். ஆற்றில் விழுந்த பீமன் துயிலொழிந்து விழித்து பார்த்து உடனே கயிற்றைத் துண்டு துண்டாக அறுத்தெறிந்துவிட்டு நீந்திவந்து கரையைச் சார்ந்து தன் வீட்டுக்குச் சென்றனன்.

மீண்டும் துரியோதனன் பீமனைக் கடிக்கும்படி பாம்புகளை அவன்மீது விட்டனன். பீமன் அவற்றை மூட்டைப்பூச்சிகளை நசுக்குவதுபோல் நசுக்கி எழுந்தனன். பிறகு மற்றையோருந் துயிலுணர்ந் தெழுந்தனராக அனைவரும் நகருக்குச் சென்றனர்.

மற்றொருநாள் துரியோதனன் கர்ணனோடாலோசித்துக் கங்கையாற்றில் கரைக்குச் சிறிது தூரத்தில் ஒருபால் கழுக்களை வரிசையாக நீர் மட்டமாக நிறுத்தியபின் பீமனிடம் சென்று "பீமா! நாம் இன்று கங்கையாற்றிற் பாய்ந்து விளையாடுவோம்; வா" என்று அழைத்தனன். அவ்வஞ்சனை யுணராதவனாகிய பீமன் அங்ஙனமே அவனுடன் சென்று அவ்வாற்றிலிறங்கி விளையாடத் தொடங்கினன். அப்போது அவ்வாற்றில் ஒருபக்கம் நீர் மட்டத்தில் வண்டுகள் படிந்திருந்ததைக் கண்டு அங்குக் கழுமுட்கள் வரிசையாக நட்டப்பட்டிருந்ததை அறிந்துகொண்டு கரையேறி வீட்டிற்கு வந்து விட்டனன்.

மற்றொருநாள் துரியோதனன் பீமனுக்கு விருந்து செய்விக்க எண்ணினவன்போல் நடித்து அவனை யோரிடத்திற்கு அழைத்துச் சென்று விடங்கலந்த தின்பண்டங்களைக்கொடுக்க அவன் அவனது கபடத்தை யறியாமல் அவற்றை உண்டு மயக்க முற்றுத் தரையில் விழுந்தனன். உடனே துரியோதனன் அவனைக் கயிற்றாற் கட்டிக்கொண்டு போய்க் கங்கை யாற்றில் வீழ்த்தி விட்டான். அங்ஙனம் அவ்வாற்றில் வீழ்த்தப்பட்ட பீமன் அதில் மூழ்கிப் பாதலத்திற்குப்போக அங்குள்ள பாம்புக்குட்டிகள் பீமனைக் கடித்தன. அவற்றின் பற்களின் விடத்தினால் பீமன் முன்

ஊண்டவிடம் நீங்கியது. உடனே பீமன் மயக்கந் தெளிந்து தன் உடலிற் பிணிக்கப்பட்டுள்ள கயிற்றை அறுத்தெறிந்துவிட்டு நின்றான். அதனைக்கண்ட நாகர்கள் சிலர் விரைந்தோடி வாசுகி என்னும் தம்முடைய அரசனுக்குத் தெரிவித்தனர். அவ்வரசன் பீமனைத் தன்பால் வருவித்து அவன் வாயுவின் மைந்தனென் றறிந்து அவனுக்கு அமுதம் கொடுத்தனன். அவ்வாயுமைந்தனும் அதனை யுண்டு இன்புற்று எட்டுநாள் அங்குத் தங்கியிருந்து அந் நாகர்களின் உதவியினால் கங்கையின் கரையைச் சார்ந்து பின் நகரை யடைந்தனன். அவனைக் காணாமையின் கரையற்ற துயர்க்கடலில் ஆழ்ந்திருந்த குந்தியும் தருமர் முதலிய உடன்பிறந்தோரும் அவனைக்கண்டவுடன் அயர்க்கடலினின்று கரை யேறிக் களிப்பென்னும் பெருங்கடலிற் படிந்தனர்.

பிறகு பாண்டவர்களும் துரியோதனன் முதலிய கௌரவரும் பீஷ்மருடைய கட்டளையின்படி கிருபாசாரியரிடம் வில் வாள் முதலிய போர்க்கலைகளைச் சிலகாலம் பயின்றிருந்து பிறகு அவர் தங்கையின் கொழுநராகிய துரோணாசாரியரிடம் நன்கு பயின்று தேறினார்கள். அவர்களுள் பாண்டவர்களே எல்லாக்கலைகளினும் சிறந்து விளங்கினார்கள். அவருள்ளும் அருச்சுனன் வில்வித்தையில் யாவரினுஞ் சிறந்து இவனுக்கிணையாவார் இலர் என்னும்படி விளங்கினன். இன்னும் அவர்களின் திறமையைக் கண்ட துரியோதனனுக்குப் பொறாமை மற்று மிகுதிபட ஓங்கி வளர்வதாயிற்று. இங்ஙனமிருக்கப் பீஷ்மர் அம்மைந்தர்களின் போர்த்திறனைக்காண வெண்ணி பல மன்னரையும் மற்றுந் தக்கோர் பலரையும் வருவித்து ஒரு சபை கூட்டி அச்சபையில் திறத்தினைக்காட்டும்படி அம்மைந்தர்களுக்குக்கட்டளையிட்டனர். அம்மைந்தர்களும் யானை, தேர், குதிரை முதலியவற்றில் இவர்ந்து அவற்றைப் பல கதிகளாகச் செலுத்திக்காட்டிச்சபையிலுள்ளார் வியக்கும்படி செய்தார்கள். பிறகு அவர்களிற் சிலர் வாட்போர் புரிந்தனர். சிலர் வேல்கொண்டு பொருதனர். சிலர் சக்கரங் கொண்டு சுழற்றினர். சிலர் சூலங்கொண்டெதிர்த்தனர். மல்யுத்தஞ் செய்தனர். இங்ஙனம் அம்மைந்தர்களிற் பலர் அப்பொய்ப் போரில் தத்தம் திறத்தினைக்காட்டியபின், பீமனும் துரியோதனனும் கதையை யேந்திப் போரரங்கில் வந்துநின்று சபையினர்க்குப்புரியவேண்டிய வழிபாட்டினைப் புரிந்து பிறகு போர்செய்யத்

தொடங்கி இடிவிழுதல்போல் கதைமேல் கதையை ஏற்றி மண்டலமாகச் சுழன்று பலதிறத்துந் தொழிற்றிறங்களால் தம் போர்த்திறத்தினை யாவருந் திடுக்கிடும்படி காட்டினர். சிறிது நேரத்திற்கெல்லாம் அவர் தம் பொய்ப்போர் மெய்ப்போராகவே மாறுவதாயிற்று. துரோணாசாரியர்தம் மைந்தராகிய அசுவத்தாமர் அக்குறிப்பினை யுணர்ந்து உடனே அவர்களை விலக்கினர்.

பிறகு அருச்சுனன் வில்லேந்திப் போரரங்கில் வந்துநின்று அனைவர்க்கும் வந்தனம் புரிந்து வில்லிற் பாணங்களைத் தொடுத்து இவனுக்கிணையாவார் ஒருவரும் இல்லை என்னும்படி பற்பலவிதமாக எய்து தன் திறத்தினைக் காட்டினான். அதைக்கண்ட சபையோர் அனைவரும் "அரிது, அரிது இங்ஙனம் பாணங்களை எய்தல் எவர்க்குமரிதேயாகும். அருச்சுனன் வில்லாளிகளில் தலைசிறந்தவனாயினன். ஆம், ஆம், இவன் புகழ் எண்டிசையினும் பரவும்." என்று அவனைப் பலவாறு கொண்டாடினார்கள்.

அங்ஙனம் சபையோர் அருச்சுனனைப் புகழ்தலைக் கேட்ட கர்ணன் வெகுண்டு போரரங்கில் வந்து நின்று துரோணரை வணங்கி அவர் அனுமதியைப் பெற்றுச் சிங்கநாதஞ் செய்து வில்லை வணங்கி முன் அருச்சுனன் எந்த எந்தவிதமாகப் பாணங்களை எய்தானோ அந்த அந்த விதமாகவே அவனினும் பதின்மடங்கு அதிகமான திறத்தினோடு பாணங்களை எய்து நின்றனன். சபையோர்கள் அவன் எய்த கணைகளின் திறத்தினைக் கண்டு "ஆகா! வியப்பு, வியப்பு. இவன் இணையில்லாத வீரன் என்று கொண்டாடினார்கள். அருச்சுனன் அவனது திறத்தினைக்கண்டு நாணங்கொண்டனன். துரியோதனனுக்கு மிக்க களிப்புண்டாயிற்று."

பிறகு கர்ணன் அருச்சுனனை நோக்கி, 'வீர! வருக, நாம் இருவரும் விற்போர் புரிவோம்' என்றழைத்தனன். அதைக் கேட்ட அருச்சுனன் சினங்கொண்டு கர்ணனை நோக்கி, "நீயோ! என்னோடு எதிர் நின்று போர்புரியுந் தகுதி வாய்ந்தவன்? என்றான். அதைக்கேட்ட கர்ணன் மிக்க சீற்றங் கொண்டு 'சீ! அடா! சிறு பயலே! இப்போதே உன் சென்னியைத் துணித்து உன் முகமாகிய தாமரையினால் போர்க்களப் பூசை புரிகின்றேன்' பார்? என்றான். அதைக்கண்டு அனைவரும் 'திகைப்புற்று இஃது யாதாய் முடியுமோ' என்று கலங்கினார்கள்.

அப்போது கிருபாசாரியர் எழுந்து கர்ணனை நோக்கி 'இளைஞனே! நீயோ சூதனுடைய பிள்ளை. அவனோ இப்பெரிய நாட்டினையாளு மன்னர் மைந்தன். அங்ஙனமிருக்க நீ அவனை எதிர்த்து இங்ஙனம் பேசியது உனக்குத் தகுதியாமோ' என்றனர். துரியோதனன் நோக்கி "அடிகள்! தாங்கள் இங்ஙனம் ஒரு சிறந்த வீரனை இழித்துரைத்தல் தகுதியாமோ?

"கற்றவர்க்கு நலனிறைந்த கன்னியர்க்கும் வண்மைகை
யுற்றவர்க்கும் வீரனென் றுயர்ந்தவர்க்கும் வாழ்வுடைச்
சொற்றவர்க்கு முண்மையான கோதின் ஞான சரிதராம்
நற்றவர்க்கு மொன்றுசாதி நன்மை தீமையில்லையே"

"அரி பிறந்த தன்று தூணிலாறும் வேயிலாயினுன்
பரவை யுண்ட முனியுமிப் பாத்து வாசன் மைந்தனும்
ஒருவை யின்கண் முற்பிறந்த தொண்சாத்தி னல்லவோ
அரிய வென்றி முருகவேளு மடிகளும் பிறந்ததே"

என்று இங்ஙனம் பல இனிமையான உண்மை நெறிகளைக் கூறிக் கர்ணனுக்கு முடி சூட்டி அவனை அங்க தேசத்துக்கு அரசனாக்கினான்.

பிறகு பீஷ்மர் முதலியோர்கூறிய இன்மொழிகளால் அருச்சுனனும் கர்ணனுஞ் சினநீங்கினர். அங்கு வந்திருந்த மன்னரனைவரும் தங்கள் தங்கள் நாட்டை யடைந்தார்கள். மற்றையோரும் தத்தம் உறைவிடஞ் சார்ந்தனர். அன்று தொட்டுக் கர்ணன் புகழ் எங்கும் பரவுவதாயிற்று. இராஜகிருகம் என்னு நகரத்தரசன் மகளாகிய சுவர்ணரேகை என்பவள் கர்ணனுடைய பராக்கிரமத்தைக் கேள்வியுற்றுத் தன் தந்தை முதலியோர் தடுத்துங் கேளாமல் அவனை மணந்து கொண்டனள். பிறகு அவள் இரண்டு மைந்தர்களை ஈன்றனள்.

ஐந்தாம் அத்தியாயம்.

ஒருநாள் திருதராட்டிரன் பீஷ்மரோடும் விதுரரோடும் ஆய்ந்து தருமர்க்கு முடிசூட்டி அவரை இளவரசாக்கினன். அதனைக்கண்ட துரியோதனன் மனம் பொறாமல் திருதராட்டிரனிடஞ் சென்று "எந்தையே! உம்முடைய ஆளுகையை உமது முதன் மைந்தனாகிய எனக்கு அளிக்கவேண்டுவதே முறைமையாயி

ருக்க நீர் உமது தம்பியின் புதல்வனாகிய யுதிட்டிரனுக்கு அளித்ததற்குக் காரணம் யாது?" என்று கேட்டனன்.

அதைக்கேட்ட அவன் தந்தையாகிய திருதராட்டிரன் என்னருமைமகனாய்! அரசர்கள் தம்முடைய முதன் மைந்தன் குருடு முதலிய அங்கக்குறை யுடையவனாயிருப்பின் அரசினை அவனுக்கு அளிக்காமல் அவன்றன் இளையவனுக்கே அளிப்பார்கள்; பகை மன்னரை வென்று தங்குடிகளைக் காக்கு முறைமையின்படி அரசாளுகையைச் செலுத்தல் குருடு முதலிய அங்கக்குறை யுடையவரால் முடியாதென்பது கருதியே. யானோ பிறவிக் குருடனாய்ப் பிறந்தேன். ஆதலின் அம்முறைமையின்படி அரசு என் தம்பியாகிய பாண்டுவுக்கே யுரியதாகும். அங்ஙனம் இருக்கவும் என் தம்பியாகிய பாண்டு என்னிடம் வைத்த அன்பினால் என்னை அரசனாக்கி விட்டனன். யான் பேருக்கு அரசனாயிருந்தேனே யன்றி அரசுக்குரிய காரியங்களில் ஒன்றுமே என்னால் நடத்தப்பட்டதில்லை. அவனது வில்திறத்தினுக்கே பகை மன்னர் அஞ்சி நின்றனர். அவனே இவ்வரசாளுகையைச் செலுத்தி வந்தனன். ஆயின் அரசனுக்குப்பதிலாக விருந்து ஆளுகையைச் செலுத்தும் அமைச்சர்கள் சேனைத்தலைவர்கள் முதலியோர்களுக்கு அரசு உரியதாகுமோ என நீ கேட்டல் கூடும். என் தம்பியாகிய பாண்டுவே இவ்வரசுக்கு உரிமை யுடையானென்பதற்குக் காரணம் இவைகளல்ல. யான் பிறவிக் குருடனாய்ப் பிறந்ததே அதற்குக்காரணம். எவ்வகையாலும் இவ்வரசு எனக்குரியதன்று என்பதைத் தெரிவிக்கவே யான் இவற்றைக் கூறினேன்.

இங்குக்கூறியவற்றால் இவ்வரசு பாண்டுவுக்கே யுரியது என்பது நன்கு விளங்கிற்றன்றோ? அங்ஙனம் அவனுக்குரிய ஆளுகையை அவனுடைய முதற் புதல்வனாகிய யுதிட்டிரனுக்குக் கொடாமல் உனக்குக் கொடுப்பது எவ்வாறு முறைமையாகும்? அங்ஙனம் முறை தவிர்த்து நீதிபிறழச் செய்ய விரும்பினும் உலகில் ஒருவரும் அதற்குடன்படமாட்டார். அதனாற் பெரியதொரு கேடு தான் விளையும். மைந்த! யுதிட்டிரனோ எல்லா நற்குணமும் பொருந்தியவன். அவன் உன்னைத்தன் தம்பியினும் மேன்மையாகப் பாராட்டுவான். அவன் உங்களை வேறாகவும் தன் தம்பியரை வேறாகவும் கருதி நடக்கின்றானோ? அவன் உங்களனைவரையும் ஒரே விதமாகத்தானே பார்க்கின்றான். அத்தகைய நற்குண

முடையவனுக்கு முடி சூட்டியதைக் கண்டு நீ இங்ஙனம் பொறாமை கொள்ளுதல் தகுதியன்று. நீ அவனோடு ஒன்றிய மனமுடையவனாயிரு" என்று கூறினன்.

அதைக்கேட்ட துரியோதனன் "எந்தையே! உமக்குள்ளங்களிடத்திலுள்ள அன்பைக்காட்டிலும் அதிக அன்பு உமது தம்பியின் புதல்வர்களிடம் உண்டாய்விட்டது. உமக்கு உமது தம்பியினிடம் உண்டாயிருந்த பெரியதோர் அன்பை அவர் இறந்துவிட்டமையின் அவர் தம்மைந்தர்கள்பாற் செலுத்துகின்றீர். அன்றியும் அவர்கள் தங்கள் தந்தையையிழந்து உம்மிடம் வந்தபோது அவர்கள்பால் உமக்கு உண்டான இரக்கமானது அந்த அன்பை இன்னும் அதிகமாக வளர்த்துவிட்டது. ஆகையால் யான் பதிலொன்றுங் கூறவியலாதபடி செய்யக்கருதி இவற்றையெல்லாம் உறுதியுறக் கூறினீர். இனி அந்த யுதிட்டிரனுடைய தம்பியர் மிகவுஞ் செருக்குற்று என்னை மிகவுந் தாழ்வாகவே நடத்துவார்கள். அதைப் பொறுத்துக் கொண்டிருக்க என்னால் முடியாது. நீர் அதுபற்றி எவ்வளவு சமாதானங்களைக் கூறினும், யான் அவற்றை ஏற்றுக்கொள்ளேன். உமதருகில் உம்முடைய தம்பியின் அருமைப் புதல்வர்கள் இருத்தலால் என்னுடைய பிரிவு உமக்கு வருத்தத்தை விளைவிக்காது. யான் இனி உயிர் துறக்கவே துணிந்துகொண்டேன். இனியான் உமக்குத் துன்பத்தைக் கொடேன்" என்று சினந்து கூறினான். அதைக்கேட்ட திருதராட்டிரன் காட்டுத் தீயினாற் சூழப்பட்ட அரவம்போல ஒன்றுந்தோன்றாமல் தியங்கி மிகவுங்கலங்கி "அப்பா! நான் கூறியவற்றையெல்லாம் ஆற்றிற் கரைத்த புளியாக்கி விட்டனை. இனியான் உன் கருத்துக்கு மாறாகச் செய்யக்கூடிய உபாயம் ஒன்றும் இல்லை. உன் மனப்படியே இந்த அரசினை நீ யடைதற்குரிய உபாயத்தினைச்செய்து முடிக்கின்றேன். நீ மனம் வருந்தாதே" என்று கூறினான். துரியோதனன் அதைக்கேட்டுக் களிகூர்ந்து மாளிகையை யடைந்தான்.

கண்கள் குருடுபட்டாற்போல மனமுங் குருடுபட்டோனாகிய திருதராட்டிரன் பிறகு புரோசனன் என்னும் மந்திரியை அழைத்துச் 'சகலவல்லாய்! நீ யாதையும் நன்குணர்ந்து இயற்றுந் திறமுடையை ஆதலின் நினக்கொன்று கூறுவன்; என் மைந்தன் யுதிட்டிரனுக்கு நான் சூட்டிய அரசைக்கண்டு பொறாதவனாய்

னன். அவன் 'எனக்கு இவ்வரசினைக் கொடாவிடின் உயிர் துறப்பேன்!' என்று உறுதிகூறினான். அதனால் என்மனம் பெரிதுங் கலங்குகின்றது. ஆதலின் இப்போது நீ எனக்கு உதவுதல் வேண்டும்' என்றனன். அதைக்கேட்டு வேதியனாகிய அந்தப் புரோசனன் "மன்னர் மன்ன! தாங்கள் இடுக்கண் உற்ற காலத்தில் தங்களுக்கு உதவிபுரியேனாயின் யான் தங்கள் அந்தரங்கக் காரியக்காரனாயிருத்தலிற் பயன் யாது? தாங்கள் யாது கூறினும் அதை யான் செய்துமுடிப்பேன். யான் செய்ய வேண்டியது இன்னது என்பதைச் சிறிதுங் கலக்கமின்றிக் கூறியருளுவீர்" என்றனன். அதைக்கேட்ட திருதராட்டிரன் களிகூர்ந்து 'அன்புடையோய்! பாண்டவர்களுள் ஒருவன் உயிர்த்திருப்பினும் என் மைந்தன் அரசினை யெய்துதற்கு அருகனாகான். ஆதலின் அவர்களையும் நாம் கொன்றோம் என்பது பிறர்க்குத் தோன்றாமற் கொன்று விடுதற்குரிய உபாயம் ஒன்று எனக்குத் தோன்றியிருக்கின்றது. அஃதாவது காசிப்பட்டணத்தில் அரக்கினால் மாளிகையொன்றமைத்து அதில் அவர்களைக் குடியேற்றிச் சமயம் நோக்கி அதனிற் றீ மூட்டி விடுதலேயாகும்' என்றனன்.

அதைக்கேட்ட புரோசனன் 'நாம் இக்காரியத்தைச் செய்து முடிப்பின் இம்மன்னன்பால் நமக்குச் செல்வாக்குமிகும்' என்று கருதி அதற்கிணங்கி அவ்வண்ணமே காசிப்பட்டணத்தில் ஒரு மாளிகையைத் தக்க சிற்பிகளால் அமைப்பித்து அதனைத் திருதராட்டிரனுக்குத் தெரிவித்தனன். அவன் பிறகு தருமனை அழைத்து 'அறத்துறை மைந்த! யான் உனக்காகக் காசிப்பட்டணத்தில் ஒரு மாளிகையை அமைப்பித்தேன். வீமன் முதலிய உன் தம்பியர் நால்வரோடும் உன் தாயோடும் நீ அதிற் சென்றிருந்து உலக இயல்களையும் அறத்துக்குரிய நெறிகளையும் நன்கு கவனித்தல் வேண்டும். நினக்கு அவற்றையெல்லாம் நன்குணர்த்துதற்குப் புரோசனன் என்னும் நமது அமைச்சனையும் உடன் அனுப்புகின்றேன். இப்பெருஞ் சுற்றத்தாருக்கிடையிலிருப்பையேல் நீ அவற்றை நன்கு கவனிக்கவியலாது. ஆதலின் நீ சென்று அங்கிருந்து நான் கூறியபடி அவற்றைக் கவனிக்க வேண்டும்' என்றனன். அதைக்கேட்ட யுதிட்டிரர் அங்ஙனமே தன் தம்பியரோடும் தாயோடும் புரோசனனோடும் காசிப்பட்டணத்திற்குச் சென்று அம்மாளிகையை யடைந்தனன். (வரும்)

கோவிந்தராஜு முதலியார், தமிழ்ப்பண்டிதர்,
பச்சையப்பன் காலேஜ், சென்னை.

யுத்தம்.

இப்போது ஐரோப்பாக்கண்டத்தில் நடந்து வரும் யுத்தம் உலகமுற்றும் கஷ்ட நஷ்டங்களையும், பயங்கரத்தையும் உண்டாக்கியிருக்கின்றது. யுத்தத்தில் சேர்ந்திருக்கும் தேசங்களிலெல்லாம் அபாரமான உயிர் நஷ்டமும், பொருள் நஷ்டமும் உண்டாயிருக்கின்றன. யுத்தம் தொடங்கி 2½ வருடங்களுக்கு மேலாகி விட்டது. இன்னும் யுத்தம் முடியவில்லை; சீக்கிரம் முடிவாகு மென்பதற்குப் போதிய அறிகுறிகள் காணப்படவில்லை. நமது பகைவராகிய ஜெர்மானியர் சமாதானஞ் செய்துகொள்ளும் நோக்க முடையவராயிருக்கின்றனர்; அவர்களுடைய அகங்காரத்தையும், ஆக்கத்தையும் அழித்த பின்னரே உலகத்தில் சமாதானம் நிலைத்திருக்குமென்று நேச ராஜாங்கத்தார் கருதி யுத்தஞ் செய்து வருகின்றனர். ஜெர்மானியரை முற்றும் தோல்வியுறச் செய்யும் வரையில் யுத்தம் நடந்தேதீரும். இப்போது மேற்கரங்கத்தில் பிரிட்டிஷ்-பிரெஞ்சுக்காரரின் நெருக்குதலினால், ஜெர்மனியர் பின்னடைந்து கொண்டே போகின்றனர். ஆனால் ஜெர்மனியரும், ஆஸ்டிரியரும் சேர்ந்து இத்தாலியரோடு பலமான யுத்தஞ் செய்யப் பெரும் பிரயத்னங்கள் செய்து வருகின்றனர். அவ்விரண்டு கட்சியாரையும் எதிர்த்து நிற்க இத்தாலியரும் தயாரா யிருக்கின்றனர். இன்னும் மழைக்காலம் முடியாதிருக்கின்றமையின், யுத்தம் தீவிரமாக நடப்பதற்கில்லை. மெசபொடேமியாவில் துருக்கியருக்குப் பிரதானமாயிருந்த பாக்தாத் நகரம் பிரிட்டிஷார் வசமாகிவிட்டது. ருஷ்யா குடியரசாகிவிட்டது. ஜார் அரசரின் ஆதிக்யம் ஒரே நாளில் போய்விட்டது. இஃது ஆச்சரியமே!

இந்தியப் பாதுகாப்புச் சேனை.

இந்தியாவிலுள்ள சேனைகளெல்லாம் யுத்தரங்கத்திற்குச் செல்ல வேண்டியிருக்கின்றமையின், இந்தியாவின் பாதுகாப்பின் பொருட்டு இந்தியாவிலுள்ள ஆங்கிலேயர் கட்டாயமாகவும், இந்துக்கள் கட்டாயப்படுத்தப்படாமலும், வாலண்டியர்களாகச் சேர்த்துக் கொள்ளப்படுவார்களென்று கவர்ன்மெண்டார் உத்தரவு செய்திருக்கின்றனர். இந்துக்கள் வாலண்டியர்களாகச் சேர்க்கப்படுவது இந்தியாவிற்கு நன்மையையும், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்கு வன்மையையும் தருவதாம்.

சக்ரவர்த்தினி.

"கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர் மற்றீண்டு வாராநெறி".

VOL-12 தொகுதி-12 | April 1917. ஏப்ரல்மீ 1917. | No-9 பகுதி-9

செய்தவமறந்தார் கைதவமாளும்.

ஒருவன் தன்னை மேன்மேல் விருத்திச் சிறந்திருப்பதற்குச் சிறந்த காரணமாயிருப்பது அவன் செய்துள்ள தவமேயாம். ஒவ்வொருவரும் தாம் செய்துள்ள தவத்திற்கேற்றவாறு மேன்மையடைந்து சிறந்துவிளங்குகின்றனரென்பது "மேலைத், தவத்தளவே யாகுமாந் தாம்பெற்ற செல்வம்" என்று வாக்குண்டாம் கூறுவதாலினிது விளங்குவதாம். காரணமில்லாவிடத்துக் காரியம் நிகழாதென்பது நியமமாமன்றோ? ஒருவன் செல்வத்தாற் சிறந்து விளங்குவதற்குக் காரணம் அத்தியாவசியகமாக ஒன்றிருத்தல்வேண்டும். அஃது அவன் செய்துள்ள தவமேயாம். சிலர் அற்பமுயற்சிசெய்து பெரும்பொருளையடைவதையும் சிலர் பெருமுயற்சிசெய்தும் தாம் விரும்பிய பொருளை யடையாது வருந்தமுறுவதையும் நன்கூசித்து நோக்குவார்க்கு ஒருவர்செல்வத்தாற்சிறந்து விளங்குவதற்குக் காரணம், அவர் செய்துள்ள தவமேயா மென்பது மாறுபாடின்றி விளங்குவதாம். ஒருவன் சக்ரவர்த்தியின் பிள்ளையாகப் பிறந்திருக்கின்றான்; மற்றொருவன் கூலிக்காரன் பிள்ளையாகப் பிறந்திருக்கின்றான்; இவ்விருவருள் முன்னவனும் பின்னவனும் வெவ்வேறு வகையான தவத்தைச் செய்திருத்தல் வேண்டும்; அவ்வாறுசெய்யாதிருப்பின், அவர்கள் அவ்வாறு பிறப்பது கூடாதாம். இதனால் தவத்தை மிகுதியாகச் செய்தவன் சக்ரவர்த்தியின் பிள்ளையாகப் பிறந்தான்; அதனைச் செய்யாதவன் கூலிக்காரன் பிள்ளையாகப் பிறந்தானென்பது நம

க்கு விளங்குவதாம்; விளங்கவே, ஒருவன் செல்வத்தையடைதற்குக்காரணம் தவமன்றிப் பிறிதில்லையென்பது நன்கு வெளிப்படுவதாம். தவம் இம்மைப்பயன், மறுமைப்பயன், மோட்சமென்பனவற்றை யளிப்பதற்குத் தக்க காரணமாயிருக்கின்றதென்று நூல்கள் கூறுவதைக்கவனித்து, அதனை மறவாதும் தவறாதுஞ் செய்துவருபவர் நல்லனவென்று சொல்லப்படுவனவற்றையெல்லாமடைவாரென்பது பலர்க்கு விளங்காதிருக்கின்றது; அதனாலவர் தவத்தைச் செய்வதொழிந்து, அவத்தை (தீவினைகளை) மறவாதுந் தவறாதுஞ்செய்து,இம்மைக்குரிய பழியையும் மறுமைக்குரிய பாபத்தையு மடைந்து கலக்க முற்று வருகின்றனர். இது "இலர்பல ராகிய காரண நோற்பார், சிலர்பலர் நோலா தவர்—உலகத்தில் செல்வர்கள் சிலராக வறுமையுடையார் பலராதற்குக் காரணம் யாதெனின், அது தவஞ்செய்வார் சிலராக அது செய்யாதார் பலராதலாம்" என்று திருக்குறள் கூறுவதால் செவ்விதாக விளங்குவதாம்.

தவம் செல்வமுண்டாதற்குக் காரணமாயும், அஃதில்லாமை வறுமை யுண்டாதற்குக் காரணமாயு மிருக்கின்றன வென்பது செல்வமுடையாரையும் வறுமையுடையாரையும் நோக்குமிடத்து நன்கு விளங்குதலின், நாம் அத்தியாவசியகமாகச் செய்தற்குரியது தவமேயாகும். நம்மனோருள் செல்வத்தை விரும்பாதவர் ஒருவருமின்மையின், நம்மனோர் யாவர்க்கும் மிக முக்கியமாக வேண்டுவது தவமேயாம். முதற் பொருளில்லாத வணிகர்க்கு அதனால்வரு மூதியமில்லையாம்; அங்ஙனமே தவஞ் செய்யாதவர்க்கு அதனால் வரும் செல்வமுமில்லையா மென்பதுணர்ந்தவர் தவத்தைச் செய்யாதிருப்பதில்லையாம்.

செல்வம், கல்விச்செல்வம் பொருட் செல்வமென இருவகைத்தாம். இவ்விரண்டும் ஒருவர்க்கு வாய்க்கவேண்டுமாயின், அவர் அதற்குரிய தவத்தை யத்தியாவசியகமாகச் செய்தல் வேண்டும். மோட்சத்தை விரும்புகின்றவரோ ஒன்றையும் விரும்பாது தவஞ் செய்தல் வேண்டும். தவஞ் செய்யாதவர் நன்மையென்று சொல்லப்படுவனவற்றுள் ஏதனையு மடைவதின்றாகலின், அவர் தமக்கே பெரும் பகைவராயிருக்கின்றனர்; ஒவ்வொருவரும் தவத்தை மறவாதும் தவறாதுஞ் செய்தல் வேண்டும்; தவஞ் செய்வதை மறந்து விடுவாராயின், அவர் துன்பத்

திற் குறைவிடமாக விருந்து வருத்தம் பலவற்றை யடைந்து வதைவரென்பதை நம்மனோர்க்கு நன்கறிவுறுத்துதற் பொருட்டே நமது ஞானத்தாயாகிய ஔவைப்பிராட்டியாரவர்கள் (கொன்றை வேந்தனில்) "சிவத்தைப் பேணிற் றவத்திற் கழகு" என்றருளியதனோடு நில்லாது "செய்தவ மறந்தாற் கைதவமாளும்—(ஒருவன் தான்) செய்தற்குரிய தவத்தைச்செய்ய மறந்து விடுவானாயின், அவனைத் துன்பமானது அடிமை கொண்டாளும்" என்று மருளிச் செய்தனர்.

மன இந்திரியங்களின் ஏகாக்கிரமே தவமாம்; இது புலாலுண்ணுதலை யொழித்துச் சர்வப்பிராணிகள்மீதுங் கருணையுடையவரா யொழுகுவார்க்கன்றி மற்றவர்க்குச் சித்திப்பதின்றாகலின், தவஞ்செய்ய விரும்புகின்ற ஒவ்வொருவரும் புலாலுண்ணுதலைப் பிரயத்தன பூர்வகமாக வொழித்துச் சர்வப் பிராணிகள் மீதும் கருணையுடையவரா யொழுகமுயலுதல்வேண்டும்; இங்ஙனமுயன்றாற்றான் தவத்தைத் தவறில்லாது செய்வது கூடும். திருக்குறள் "கொல்லாநலத்தது நோன்மை:—பிறவுயிர்களும் வேண்டுமாயினும் தவம் ஒருயிரையும் கொல்லாத அறத்தின் கண்ணதாம்" என்று சான்றாண்மை யதிகாரத்தில் கூறுவதைச் சற்றுற்று நோக்கின் கவனிப்பார்க்குத் தவத்திற்கு ஒருயிரையுங் கொல்லாத அறம் சிறப்பாயிருக்கின்றதென்பது செவ்விதாக விளங்குவதாம். புலாலுண்ணாதும் ஒருயிரையும் கொல்லாதுமிருந்து மனத்தையும், மெய் வாய் கண் மூக்குச் செவியென்னுமிந்திரியங்களையும், சப்தமுதலியவிஷயங்களில் பதறியோடாவண்ணமடக்கி ஒருமுகமாக்கிச் செய்வதாகியதவத்தைக் கடவுளுண்டென்னும் பூரண விசுவாசத்துடன் செய்துவருபவர் தாம் விரும்பியவற்றை விரும்பியவாறே யடைவது நிச்சயமாம். இது "வேண்டிய வேண்டியாங் கெய்தலாற் செய்தவம், ஈண்டு முயலப் படும்" என்று திருக்குறள் கூறுவதால் செவ்வனே விளங்குவதாம். உண்டி சுருக்கல், வெயிற்காலத்தில் வெயிலில் நிற்றல், மழைக்காலத்திலும் பனிக்காலத்திலும் நீர்நிலையில் நிற்றல் முதலிய செயல்களைத்தும் தவத்திற்கங்கமேயன்றித் தவமன்றாம். புலாலுண்ணுதலை யொழித்துப் பிராணிகள்மீது கருணையுடையவராய், தமக்கு வரும் துன்பங்களைக் கருதாது தவஞ்செய்தவரன்றி மற்றவர் பெருஞ் செல்வராகப் பிறப்பதில்லையென்பது நமக்கு அடிக்கடி ஞாபகத்திற்கு வருமாயின், நாம் துன்பத்திற் கடிமையாய் வருந்தாதிருக்கத் தவத்தை மறவாதுந் தவறாதுஞ்செய்து வருவோம்; இதனைச்

செய்வது நமக்கு ஆரம்பத்தில் வருத்தமாகவே தோன்றும்; அவ்வருத்தத்தைப்பொறுத்துக்கொண்டு தவத்தைச்செய்வோமாயின், நன்மையனைத்தும் பெறுதல் நிச்சயமாம். "துன்பம் வேண்டுவோ ரின்பங் கண்டான்" என்று முதுமொழிக்காஞ்சிகூறுவதை நாம் பெரிதுங் கவனித்தல் வேண்டும். இன்பம் முன்னர்த் துன்பத்தை யனுபவியாது வாராதன்றோ? தவத்துன்பத்தைப் பொறுத்துக்கொண்டு, அதனைச் செய்பவர் இன்பத்தை யடையாதிருப்பதில்லையாம். தவம் பயனோக்கிச் செய்யுமிடத்து, இம்மைப் பயனையும், மறுமைப்பயனையும், பயனோக்காது செய்தவிடத்து மோட்சத்தையுந் தருவதாக விருத்தலின், நாம் அதனை அத்தியாவசியமாகச் செய்து வருதல் வேண்டும்; செய்யமறந்துவிடுவோமாயின், நம்முடைய கதி அதோகதியேயாம்.

தவமுடையவர் பிறர்க்குபகாரஞ்செய்வதன்றி அபகாரஞ்செய்வதேயில்லையாம்; அவர்மனம் எப்போதும் நிர்மலமாகவேயிருப்பதாம்; ஈசுவரசிந்தனையை மறப்பதேயில்லையாம். விச்வாமித்திரர் பிரஹ்மரிஷியானாரன்றோ? எதனால்? தவத்தாலன்றோ? பகீரதன் ஆகாய கங்கையைப் பூமியின்கண்வரச் செய்தானன்றோ? எதனால்? தவத்தாலன்றோ? அகஸ்தியர் கடலையுண்டாரன்றோ? எதனால்? தவத்தாலன்றோ? இங்ஙனம் தவம் பல மேன்மைகளையுந் தருவதாக விருத்தலின், அதனை நாம் மறவாதுந் தவறாதுஞ் செய்யமுயன்று வருதல் வேண்டும்; வந்தாற்றான் துன்பத்திற் கிடங்கொடாது வாழ்வோம்.

திருக்குறள்.

" தவஞ்செய்வார் தங்கருமஞ் செய்வார்மற் றல்லார்
அவஞ்செய்வா ராசையுட் பட்டு."

பிரபோத சந்திரோதயம்.

" சொல்லருந் தவத்தியற் சொல்லற் பாலதோ
செல்லருந் தீதுரை செய்த போதினும்
நல்லரு மிவ்வுரை நன்று நன்றெனப்
புல்லரும் படைத்தனர் பொருளும் வாழ்வுமே"

கந்த புராணம்.

" தவந்தனின் மிக்கதொன் றில்லை தாவில்சீர்த்
தவந்தனை நேர்வது தானு மில்லையால்
தவந்தனி னரியதொன் றில்லை சாற்றிடில்
தவந்தனக் கொப்பது தவம தாகுமே"

இப்பிரயோகங்க ளிக்கு நன்கு கவனித்தற்குரியனவாம்.

ஆசார மஞ்சரி.

(முன் தொடர்ச்சி)

இறப்பட்டாரிடத் திருப்பன இவையெனல்.

(79) இறப்பட்டாரிடத்துத் தமக்குத் துன்பம் நேரிட்ட காலத்தில் அத்துன்பத்தில் வெறுப்புறுதமைந்து வாழ்தலும், இன்பம் நேரிட்ட காலத்தில் பிறர்க்கு இன்பஞ் செய்யும் வகையாலின்பமடைந்து நடத்தலும், தம்மீது வைத்துள்ள அன்பினின்றும் வேறுபட்டவரது வீட்டின்கண் செல்லாமையுமாமென்று மிம் மூன்றும் நிலைபெற் றிருப்பனவாம்.

இறப்பட்டார்-ஒரு முகப்பட்ட மனமுடையார்.

நன்கறிவார் செயல்களிவையெனல்.

(80) நன்கறிவார் தாம் கோபங் கொண்டாராயினும் தமது ஆசிரியர் பெயரைக் கூறார்; வீட்டினிடத்துத் தம் மனைவியரைக் கண்டித்துப் பேசிக்கொண்டு வெகு நேரமிரார்; தம்மினும் பெரியவராயிருப்பவரை யெப்போதும் முறைப்பெயர் கொண்டழையார்; புலையரையும் முறைப்பெயர்கொண் டழையார்.

நன்கறிவார்-தமக்கானவற்றை யறிவார்.
புலையர்-இழிதொழில் புரிவோர்.

இவ்விக்காரியஞ் செய்தல் கூடாதெனல்.

(81) செவ்வியார் பிறரது மனைவியினிடத்துப் புழைக்கடைவாயிலாகச் செல்லார்; அரசன் சபை சேர்ந்துக் கூத்து முதலியவற்றால் இன்பமடைகின்ற போதும், உரிமை மகளிரோடிருக்கின்றபோதும் சென்று அவனைப்பாரார்; அவ்வத்தொழிற்குரியரோ செல்லலாம்; நோக்கலாம்; மற்றவர் செல்லுதல் கூடாது; பார்த்தல் கூடாது.

செவ்வியார்-சமயமறிந்து நடப்பவர்; உரிமை மகளிர்-வைப்பு ஸ்திரிகள்.

புழைக்கடை வாயிலாகத் தோட்ட வேலைக்காரர் செல்லலாம்; அரசன் சபை சேர்ந்துக் கூத்து முதலியவற்றால் இன்பமடைகின்றபோது, அவற்றிற் சம்பந்தமுடையார் சென்று அவனைக் காணலாம்; அவன் உரிமை மகளிரோடிருக்கின்றபோது, அம்மகளிரைச் சேர்ந்தவர் சென்று அவனைக்காணலாம்; மற்றவர் செல்லுதல் கூடாது என்பதாம்.

அறிவுடையார் பொதுமகளிர் வசிக்குமிடத்து வசியாரெனல்.

(82) அறிவுடையாரென்று சொல்லப்படுவோர் ஆடல் பாடல் அழகு என்பனவற்றால் பிறரை மயக்கும் பொதுமகளிரிடத்தோடு சேர்ந்த தம்மிடத்தைத் தமக்குச் சிறந்த விடுதியாகக் கொள்ளார்; அவ்விடம் வசிப்பதற்குத் தெளிவாக மிக வசிமையுடையதாக விருப்பிருமவேண்டப்படுவதன்றாம்; வேண்டப்படுவதாயின், அவர்தம் மனைவியர்க்கு விரும்பப்படுவன வேறுபடுவனவாம்.

பொது மகளிர்-விபசாரஸ்திரிகள்.

பொதுமகளிர் வசிக்குமிடத்தருகே வசிப்பவரது மனைவியர்கள் அம்மகளிரது நேசத்தால் மாறுபட்ட குணமுடையவராய் விடுவரென்பதாம்.

கடைபோக வாழ்வோ மென்பாரது செயல்களிவை யெனல்.

(83) எப்போதும் கடைபோக வாழ்வோ மென்பவர் ஒருவர் பக்கத்தில் வரிசையாகச் செல்லார்; பிறரது நிழலை மிதித்து நில்லார்; பிறரோடு முன்னரே ஆராய்ந்தன்றிப் பேசும்போது ஆராய்ச்சிசெய்து பேசார்; அறிவுள்ளோர் வெறுக்கத்தக்க செயல்களைச் செய்யார்; தம் அரசரது சேவையின்னவை அவரது பகைவர்க்குச் சொல்லார்.

கடைபோக வாழ்தல்-ஒரு தன்மையாக வாழ்தல்.

இகழின், இழுக்கந் (துன்பந்) தருவன இவையெனல்.

(84) புற்றில் வசிக்கும் பாம்பும், அரசும், நெருப்பும், குகையில் வசிக்கும் சிங்கமுமென்னும் இந்நான்கும் இளையனவென்றும் எளியனவென்றும், பழகினவை யென்றும் கருதி, ஒருவர் இகழுவாராயின், அவர்க்கு அவை தவறாது துன்பந் தருவனவாம்.

பாம்பு, அரசு, நெருப்பு, சிங்கம் என்னுமிந்நான்கும் இளையன எளியன பழகினவை யென்று அலட்சியஞ் செய்யின், அவையுடனே சேர்தவர்க்குத் துன்பந் தருமென்பதாம்.

அறமுதலியவற்றை அரசர் செய்வதிலுமதிகமாகச் செய்தல் கூடாதெனல்.

(85) அறிவுடையார் தம்மிடத்துச் செல்வம் மிகுதியாகப் பெருகியிடத்தும், அறத்தையும் கலியாணத்தையும், முயற்சியையும், வீட்டையும் அரசர் செய்வதிலுமதிகமாகச் செய்யாதிருக்கக்கடவர். செய்வாராயின், அவரிடத்துள்ள செல்வம் விரைந்து நீங்கிவிடுதாம்.

அற முதலியவற்றை அரசர் செய்வதிலுமதிகமாகச் செய்பவர், அவருக்குப் பகைவராய் விடுவர் அதனாலவரது செல்வம் அவராலபகரித்துக் கொள்ளப்படுமென்பதாம்.

குரவரையும், சான்றோரையும் கீழோரையும் நோக்கி, உண்டது கேட்டல் கூடாதெனல்.

(86) ஐங்குரவரையும் சான்றோரையும் காண வேண்டிய விடத்துக் கண்டால், மனம் வேறுபடாதவர் அவர்களை நோக்கி, தாங்களுண்டது யாது என்று கேளார்; கீழோரைக் கண்டவிடத்தும் நீங்களுண்டது யாது என்றும் கேளார்.

ஐங்குரவர்-அரசன், உபாத்தியாயன், தாய், தந்தை, தமையன். சான்றோர்-குணங்களால் நிறைந்தவர்.

படுத்துக்கொண்டிருப்பவர்க்குச் செய்யலாகாதன இவையெனல்.

(87) உலகியலறிந்தவர் கட்டிலின் மீது படுத்திருப்பவரது காலைக் கழுவார்; அவர்க்குப் பூச்சூடார்; மறந்தாவது சந்தனம் பூசார்; அவரருகேயும் நில்லார்.

இச்செயல்களைச் செய்யின், அவை அமங்கலமாகத் தோன்றுமென்பதாம்.

நெடுநாள் வாழ்வோ மென்பாரது செயல்களிவையெனல்.

(88) நெடுநாள் வாழ்வோ மென்பார் தாம் பிறர்க்குச் செய்த உபகாரத்தின் பயனைக் கூறார்; தமக்குப் பிறரிட்ட வுணவை யிகழ்ந்து பேசார்; தாம் செய்த அறத்தையும் விரதத்தையும் புகழ்ந்து பேசார்.

நெடுநாள் வாழ்தல்-பெரியோரது ஒழுக்கத்தினை நினைத்து அவ்வாறு வாழ்வோமென்று கருதுதல்.

மெய்யுணர் வுடையார் செயல்களிவையெனல்.

(89) மெய்யுணர் வுடையார் தமக்குக் கிடைத்தற்கரிய பொருள்களை விரும்பார்; தாமிழந்த பொருள்களுக்காக வருந்தமாட்டார்; நீக்குதற்கரிய துன்பம் வந்தவிடத்தும் அதற்கு மனங் கலங்கார்.

மெய்யுணர்வு-மெய்ப்பொருளை யறிதல்.

(1) பயமின்றித் துணிச்சலாய் ஒரு காரியத்தில் பிரவேசித்தல் தைரியமாகாது; ஆனால் நியாயமான ஒரு விஷயத்தில் பிடிவாதமான மனதுடன் முயற்சித்தலே தைரியமாகும்.

(2) ஆங்கிலேயர்பால் எவற்றை அதீதம் என்று நாம் கொள்ளுகிறோமோ அவை நம்மை மேலான நடவடிக்கைகளுக்கும், உயர்ந்த விதமான உயிர்வாழ்க்கைக்கும், அகண்ட தர்ம குணத்துக்கும், மன்னிக்கும் சுபாவத்துக்கும், ஒவ்வொரு நியாயக் கேட்டையும் சரிப்படுத்தவும், ஒவ்வொரு கண்ணினுமுள்ள கண்ணீரைத் துடைக்கவும் சித்தமாயுள்ள சர்வஞ்ஞத்துவக் கடவுளின் மீது ஆழ்ந்த நம்பிக்கை வைத்தலுக்கும் நம்மைத் தூண்டக் (ஆல்பிர்ட் வெப்)
கடவதாக.

(3) வீரம் என்பது ஒரு குலத்தாரின் அல்லது வம்சத்தாரின் அல்லது தேசத்தாரின் அறிகுறியாகுமாயின், அது சிறப்பாக ஒவ்வொரு குலமகனிடத்திலும், குலமகளிடத்திலும் விளங்க (ரஸ்கின்)
வேண்டும்.

(4) தேசங்களில் நன்றாக உழவுத் தொழில் செய்தல் அவற்றின் செழிப்புக்குத் தக்க மாதிரியல்ல; ஆனால் அவற்றின் சுவதினத்துக்கும் கட்டவிழ்ந்த தன்மைக்கும் தக்கவாறும்.
(மான்டெஸ்க்)

(5) எல்லாக் குற்றங்களுக்கும் மேலான குற்றம் எதுவெனின், அது ஒரு குற்றத்தையும் உணராமலிருப்பதே என் (கார்லைல்)
நான் சொல்லவேண்டும்.

(6) ராஜரீகத்தில் சாராம்சம் கண்டிதம் அல்லது இசுதிப் (பிமே)
என்பதே.

(7) ஒரு தேச சரித்திரத்தில் ம ழுவிருப்பத்தை யுண்டுபண்ணுவ தெதுவெனில், அது அத்தேசத்து ஏழைகளின் கஷ் (எமெர்சன்)
நஷ்டங்களும், அதிர்ஷ்டமுமேயாம்.

(8) மனோதிடமிருக்குமாயின், ஒருவன் எவ்வளவு செய்ய மென்பதும், சுவாதந்திரியத்தோடு கூடியிருப்பானாயின் தன்னை எவ்வளவு தூரம் உயர்த்திக் கொள்ளலா மென்பதும், நமக்குத் (வான்மல்)
தெரியா.

நீதிசாரம்.

நட்பாராய்தல்.

ஒருவனுடைய குணங்களையும் நடக்கைகளையும் சோதித்து அறிந்து பின்பு ஸ்நேஹஞ்செய்ய வேண்டும். அப்படிச் செய்யாமல் அயோக்யனிடத்து நட்புக்கொண்டால் அவன் செய்யும் பழி பாவங்களுக்குத் தானுந் துணையாகித் துன்பப்படுவது மல்லாமல், இகபரங்களில் தான் பெறத்தக்க பலன்கள் யாவையு மிழந்து விடுவான்.

ஒருவன் மற்றொருவனுடனே ஸ்நேஹஞ்செய்ய விரும்பினால் முன்னரே அவனுடைய பிறப்பையும், சுற்றத்தையும், ஸ்நேகிதர்களையும் அறிந்து அவற்றால் அவனது குணம் இப்படிக் கொத்த தென்று நிதானித்துப் பின்பு அவனுடனே ஸ்நேஹம் செய்தல் வேண்டும்.

நல்லகுலத்திற் பிறந்தவனும், உலகத்தார் சொல்லும் பழிக்கும் பாபத்திற்கு மஞ்சி நடக்கின்றவனும் இருக்கின்றவனது நட்பைப் பொருள்கொடுத்தாவது வாங்குதல்வேண்டும்; தனக்குள்ள பகைவர்களுக்கு நல்லோருடைய ஸ்நேஹம் காவலாக விருக்கும். குற்ற முள்ளவர்களுடைய ஸ்நேஹம் தீமையைத் தருமாதலா லதற்கொன்றைக் கொடுத்தாவது விட்டுவிட வேண்டும்.

தான்செய்த கெடுதிகளைக்குறித்துக் கண்டித்து இனி அப்படிச் செய்யாம லிருக்கும்படியாக நன்மார்க்கத்தைத் தெரிவிக்கும் வல்லமையுடைய விவேகிகளை முன்னரே ஆராய்ந்தறிந்து பின்பு ஸ்நேஹித்தல் வேண்டும். அப்படி அறிந்து ஸ்நேஹஞ் செய்தினாலே மேன்மை யுண்டாகும்.

அவிவேகியோடு மன்கலந்து உறவாடுவதைப் பார்க்கிலும் விவேகியோடு பகைசெய்து கொண்டிருப்பது நலம்; அவிவேகியினுடைய உறவு ஆபத்தான காலத்தில் பகையை விளைவிக்கு மென்றும், விவேகியினுடைய பகை எத்தனை கொடியதாகவிருந்தாலும் அன்புமுண்டாக்க மாட்டாதென்றும், முன்னோர்கள் மொழிந்திருக்கின்றார்கள்.

வறுமையுற்ற காலத்தில் கைவிடும் ஸ்நேஹருடனே உறவாடுவது எத்தன்மைய தென்னில் மண் குதிரையை நம்பி ஆற்றி

விறங்கிய தன்மை போல்வதாம். ஆதலால் இவ்வித அறிவிலருடனே ஸ்நேஹஞ் கொள்ளாமல், மௌனமாக விருத்தலே பெரியசெல்வமென்று நீதிநூல்களில் சொல்லப்பட்டிருக்கின்றது.

சாஸ்த்ரங்களில் சொல்லிய விதியையும் விலக்கையும் புத்திக் கூர்மையாலறிந்து நடக்கின்ற புலவரைக் கண்டு அவர்களோடு நட்புக்கொண்டால் புகழுங் கீர்த்தியுமுண்டாம்.

இழிகுலத்தோர், ஹீனத்தொழிலோர், இழிவான நடையுளோர் இப்படிக்கொத்த தாழ்வினரோடு பழகுதலால் கெடுதி வராவிடினும் பெருமை குறைந்து விடும்.

உத்தமனுடைய ஸ்நேஹம் ஆவக்கத்தில் சிறியதாக விருந்தாலும் பின்பு மேன்மேலும் விருத்தியாகும்; மத்திமனுடைய ஸ்நேஹம் அதிகமாக விருத்தியடையாமற் போனபோதிலும் தகுதியாக விருக்கும்; அதமனுடைய ஸ்நேஹம் நிலையாக விராமல் வரவரத் தேய்பிறை போல் குறைந்துபோகும்; அதமாதமனுடைய ஸ்நேஹம் குறைவதுமின்றிப் பகையாக மாறித் தீங்கு பயக்குமாதலால், ஒருவனை ஸ்நேஹஞ் செய்வதற்கு முன் அவனுடைய குறைகுணங்களை யறிந்து பின்பு நட்புக்கொள்ளல் வேண்டும்.

கரும்பைக் கொழுந்தாடையிலிருந்து தின்றுகொண்டு போனாலது வரவர மதுரத்தை யதிகமாகக் கொடுக்கும்; அதுபோல் அறிவுடன் நூல்களைக் கற்றறிந்த விவேகிகளோடு கொண்ட உறவு ஆரம்பத்தில் மனத்திற்கு வெறுப்பாயிருப்பினும், பழகப்பழக விருத்தியாகி இனிமைதரும்; அக்கரும்பை அடியிலிருந்து தின்றுகொண்டுபோனால் அதன் சுவை வரவரக்குறைந்தாலும். அதுபோல நன்மையில்லாத தீயரோடு கொண்ட உறவு முதலில் அதிக இஷ்டத்தைத் தருமாயினும் வரவரக் குறைவதுமல்லாமல் தீமையையுமுண்டாக்கும்; இதையுணர்ந்து உத்தமமான ஸ்நேஹத்தைத் தேடவேண்டும்.

யானையினது ஸ்வபாவத்தைப் போன்ற விலைமாதருடனே கொள்ளும் நட்பைவிட்டு சுநகத்தின் ஹிருதயத்தைப் போன்ற மனமுள்ள நல்லவர்களிடத்தில் உறவுசெய்தல்வேண்டும். அஃதெவ்வாறெனின், யானை தனக்குக் கவளங்கொடுத்து ஸம்ரக்ஷணை செய்த பாகனையும் ஒரு காலத்தில் கொன்றுவிடும். அதுபோல விலைமாதருக்கு மன வெறுப்பில்லாமல் மேன்மேலும் த்ரவ்யத்

தைக் கொடுத்துக்கொண்டு வந்தாலும், அவர்கள் நன்றி பாராட்டாமல் ஸமயத்தில் துன்பத்தை விளைவிப்பார்கள். ஆதலா லிவ்வித நடக்கையுள்ளவர்கள் தீயோரென்று சொல்லப்படுவார்கள். சுநகத்தை வளர்க்கின்றவன் அதனிடத்து எறிந்த வேலாயுதம் அதன்மீது பட்டுருவித் தொங்கிக்கொண்டிருந்தாலும் அது தன் வருத்தத்தை நினையாமல் வாலைக் குழைத்துக்கொண்டு யஜமானன் ஸமீபத்தில் வருமேயல்லது தனக்குண்டாகிய வருத்தத்தால் மேல்விழுந்து கவ்வாது; இதுபோல நல்லோர்களுக்குக் கொடிதாகிய பிழையைச் செய்தாலும் அவர்கள் கோபங்கொள்ளாமல் முன் பழக்கத்தாலுண்டாகிய விச்வாஸத்தைப் பாராட்டி நட்பாகவே நடப்பார்கள். ஆதலால் நல்லோர்களுடைய ஸ்நேஹத்தையே விரும்ப வேண்டும்.

தலையான ஸ்நேஹம் பனைபோலவும், இடையான ஸ்நேஹம் தெங்கு போலவும், கடையான ஸ்நேஹம் கமுகுபோலவு மிருக்கும். பனை முயற்சியில்லாமலே பலனை யளிப்பது போல உத்தமர்கள் ஒருநாள் கண்டு வசனித்தாலு மதைப்பழமையாக எண்ணிப் பல நன்மைகளைச் செய்வார்கள். தெங்கு சிலகாலம் ஜலம் விட்டுக் காப்பாற்றப்பட்ட பின்பு பலனைத்தருவது போல மத்திமர்களுடனே சிலநாள் பழகினாலல்லது அவர்களுடைய ஸ்நேஹம் ஊர்ஜிதப்படாது. எக்காலமும் குறைவில்லாமல் ஜலம்விட்டுக் காப்பாற்றி வந்தால் ப்ரயோஜனத்தை யளிப்பதும், ஒருநாள் ஜலம் குறைவுபட்டால் பலத்தைத் தாராததுமான கமுகுபோல் அதமர்களுடைய பழக்கம் ஒருநாளிடை யிட்டாலும் பயன்படாதென்பதாம்.

ஈயினது காலளவு கூட உதவிசெய்யாத ஒருவன் நாயினது கால்விரல்களைப் போல நெருக்கமுற்ற ஸ்நேஹனாக விருந்தாலும் அவனாலொரு பலனுமுண்டாகாது. ஆதலால், அந்த ஸ்நேஹ நெருக்கத்தை உதறிவிட்டுப்பண்புடையவர்கள் எவ்வளவு தூரத்திலிருந்தாலும் அவர்களைப்போய் அடுத்தால் பலனுண்டாகும்; இதற்கு த்ருஷ்டாந்தம். புலத்தினாலே கால்வாய்க்கு ஒரு பலனுமில்லாதிருந்தாலும் அது தூரத்திலிருக்கும் ஜலத்தைத் தன் வழியாய்க்கொண்டு வந்து அந்தப்புலத்திற் சேர்த்து அதை விளைவிக்கும்படி செய்யும். அதுபோல நல்லோர்களும் உபகாரத்தை விரும்பாமலே நன்மை செய்வார்கள்.

விவேகிகளோடு கலந்துறவாடுவதே ஒருவனுக்கு உறுதியான பலன்; அப்படியல்லாது அவிவேகிகளோடு உறவாடுவது எத்தன்மைய தென்னில் பாம்புக்குப் பாலூட்டி வளர்த்து ஸ்நேஹம் பாராட்டிக் கொண்டுவந்தாலும் அது விஷத்தைக் கொடுக்கும்; தன் ஸ்பாவ குணத்தைவிடாது. இதுபோலவே தீயோருடைய நட்பு தீமைபயக்காமற் போகாது.

உலகத்திலுள்ள யாவரிடத்தும் உறவாயும் ஹிதமாயும் நடக்கின்ற நல்லோர்கள் பிறருக்குத்துன்பம் நேரிட்ட காலத்தில் அது தமக்கு நேரிட்டதாகக் கருதி அதற்குத்தம்மால் கூடிய உபகாரத்தை மனவஞ்சனையில்லாமற் செய்வார்கள். இத்தன்மையுடையோருக்குப் பிறர் எத்தனையாகக் குற்றஞ் செய்தாலும் அதைத் தங்கை விரல் தங்கண்ணில் பட்டதுபோல எண்ணுவார்களே யல்லாமல் குற்றமாக எண்ணார்கள்.

தர்மத்தின் வழியை யறியவும், குற்றங்களுக்கஞ்சி நடக்கவும் கடின வசனத்திற்குக் கோபியாமல் பொறுமை கொண்டிருக்கவும், கபடமான சொற்களால் மோசஞ் செய்யாதிருக்கவும், தீவினையைக் கொடுக்கின்றவர்களுடைய இணக்கத்தை மறந்துவிடவும் நினைக்கின்றவர்கள் யாரோ அவர்களே பெரியோர்களுடைய சொற்களைக் கேட்டு அவர்களோடு நட்புக்கொள்ள விரும்பியவர்கள்.

பாலுடனே கூடிய ஜலத்தை நாமறிந்திருந்து மதைப்பிரிப்பது நம்மால் கூடாததுபோல, நல்லவர்களுடனே நட்புக்கொண்ட சிறியவர்களுடைய அல்பகுணம் வெளிப்படாது.

கடலினிடமாய் ஓடுகின்ற கப்பல் தீதாகிய சுழல்காற்றினால் கெடுதியடையும். இதுபோல நற்குணத்தையுடைய பாலியன் தீங்கான சிற்றினஞ் சேருவானாயின் கெடுதியடைவான்.

ஆதலால் ஒருவரை நட்புக்கொள்ள விரும்பியவர்கள் முன்னரே அவர்களுடைய குணாகுணங்களை ஆராய்ந்து பின்பு நட்புக்கொள்ள வேண்டும்.

பிதுர்வாக்ய பரிபாலனம்.

அங்கம்—1.

காட்சி—1

இடம்: அயோத்தியில்-மந்த்ராலோசனை மண்டபம்.

தசரதர் பிரவேசிக்கின்றார்.

[சேவர்கள் இருமருங்குமிருந்து கைகட்டிக்கொண்டு நிற்கிறார்கள்.]

தசரதர்:—சேவகா! சுமந்திரர் முதலிய மந்திரிகட்கும் நமதுகுரு வசிஷ்ட முனிவர்க்கும் மகாராஜா மந்திராலோசனை மண்டபம் வந்திருக்கின்றாரென்று கூறி யழைத்துவா—

சேவகன்:—இதோ போய்வருகின்றேன்.

(போகிறான்.)

தசரதர்:—(தமக்குள்) இராமன் மகாபுத்திசாலி; பூமியைவகிக்கும் பொறுமையுடையவன்; அவன் இந்த அயோத்திக்கு அரசனாக வேண்டியது அவசியமே. ஏனெனின் "விளையும்பயிர் முளையிற்றானே தெரியும்" என்கிறபடி இவனுக்கு இந்த இளம் பிராயத்திலேயே அதற்குரிய குணங்களமைந்திருக்கின்றன; அன்றியும் இவன்—

"குடிதளர் வுற்றகாலைக் கொள்பொரு ளாறி லொன்றும்
விடுவது செய்து தங்கள் விழுகுறை முறைசொல் வார்க்குத்
தடையறக் காட்சி நல்கித் தண்ணிய வின்சொற் காட்டி
வடுவற விடுத்துச் சொல்வார் வன்மொழி" பொறுக்கும்

ஆற்றலுள்ளவனென்பதிற் பிணக்கில்லை. மந்திரிகளும் குலகுருவும் வரட்டும். இராமனைத் தனக்கு அரசனாகவடைவதற்கு இந்த அயோத்தி உண்மையில் பெருந்தவமே செய்திருத்தல் வேண்டும். பரந்தாமா! பக்தவத்ஸலா! நித்தியகல்யாணகுணசீலா! நிரஞ்சனா! உனது கருணையால் இந்தப் புவியை இதுவரையில் முறை பிறழாது அரசுசெய்து வந்தேன். இனி என்னை உன்னுடைய திருவடித்தியானத்தி லிருக்கப்பணித்து என்றென்றும் அழியாத இன்பநிலையை யடையத் திருவருள் புரியவேண்டும். எங்கும் நிறைந்த ஏகநாயகனே!

ஸ்தோத்திரம்-விருத்தம்.

விடைக்குல மேழ டர்த்த விண்ணவா விறல்சே னைந்து
படைக்கலம் பண்பி னேந்தும் பரஞ்சுடர்ப் பொருளே மாறாக்,
கொடைக்குல வள்ளா லென்றன் குறையற வினிது காப்பாய்
அடைக்கலம் புகுந்தே னின்பொ னம்புயத் துணைத்தாட் கம்மா.

வசிஷ்டர் பிரவேசிக்கின்றார்.

தசரதர் எதிர்சென்று
வணங்கி வரவேற்கிறார்.

தச:—அடியேன் வந்தன மளிக்கின்றேன்! வரவேண்டும்! வரவேண்டும்! ஆசனத்தமர்ந்தருள்வீராக.

வசிஷ்:—கல்யாண்! கல்யாண்!

(ஆசனத் தமர்கிறார்.)

சுமந்திரர் முதலிய மந்திரிகள் பிரவேசிக் ன்றார்கள்.

மந்திரிகள்:—(வசிஷ்டரைநோக்கி) சுவாமி! வந்தனம்

(வந்தனம் செய்கிறார்கள்.)

வசி:—மங்கள முண்டாகக்கடவது!

சுமந்திரர்:—(அரசனைப்பார்த்து) பிரபுவே! வந்தனம் செய்கின்றோம்.

(தசரதர் தலையையசைத்து
வரவேற்கின்றார்.)

தச:—வீற்றிருக்கலாம்.

(மந்திரிகள் ஆசனத்தமர்
கின்றனர்.)

(சபையைநோக்கி) என் உணர்வை யொத்த உத்தமர்களே! இந்த ஸூர்ய குலத்தில் தோன்றிய மநு முதலிய ஆன்றோர்கள் அரசாட்சி செய்துவந்ததுபோலவே, இந்த அயோத்தியிலிருந்து அறுபதினாயிரம் வருஷகாலம் இந்தப் பூமண்டலத்தை நடுநிலைமைதவறாமல் நான் ஆண்டுவந்தேன். இப்போது என் உள்ளம் மறுமைப் பயனைத் தேடுவதில் நாடியிருக்கின்றது. இனி இந்தப் பூபாரந் தாங்க வல்லமை சிறிது மில்லேன். ஞானசிகாமணிகளே! வருவதறிந்து கூறும் மதியூகிகளே! நீதி தவறாத நிலையினின்று மூன்று காலங்களையு முணர்ந்து தக்கவாறு யுக்தி சொல்லும் தைரியசிரர்களே! இந்த மண்ணுலகத்திலும் விண்ணுலகத்திலும் எற்

பட்ட பகைவர்களை யொழித்து, பெருங்கீர்த்தியோடு அரசுபுரிந்த நான் இன்னும், காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாற்சரியம் என்னும் பகைவர்களுக்குள்ளாகி ஒதுங்கியிருந்துவாழப் பொறுப்பனோ? மனமென்னும் அறிவிலி ஏறிச் செலுத்தும் பஞ்சேந்திரியங்களையும் வெல்லுவது அரியதாமோ?

குருநாதரே! இஃதிருக்கட்டும்; மாய்வதன்முன்னே வகைப்பட்ட நல்வினையை ஆய்வின்றிச் செய்வதல்லவா ஆண்மை! பெறுதற்கரிய செல்வமாகிய மறுமைச் செல்வத்தை யடைய முயல்வதன்றோ அறிவுடைய மாந்தர்க்கழகு! அந்த மறுமைச் செல்வங் கைவரப் பெற்றவர்யாவர்? போர்க்களத்தில் அஞ்சாமல் நின்று அமர்புரிந்து உயிர் துறந்தவர்களும், உண்மை ஞானம் கைவரப் பெற்றவர்களும், செல்வமானது இம் மண்ணுலகத்திற்கேயன்றி மறுமைக்கில்லை யென்று கருதிவிட்டவர்களும் – ஆகிய இவர்களே யன்றோ? என் ஐயனே! இந்த உலகத்தில் எப்போது பிறந்தோமோ அப்போது இறப்பதும் உண்மையல்லவோ? இதனை மறப்பதுபோல் மாந்தர்க்குக் கேடுதருவது முண்டோ? என்குல தெய்வமே! துறவமென்னும் புணையைக் கைக்கொண்டாலல்லது பிறவி யென்னும் பேராழி கடக்க வழியுண்டோ? காமாதி உட்பகைகளை வென்ற துறவென்னும் தனியரசாட்சியிற் சென்று நிலைத்த மனமானது இந்த அரசுரிமையை இனியது என்று கருதுமா?

(சற்றுமௌனம்.)

பக்தி.

5. குருசிஷ்ய லட்சணம்.

அங்ஙனமாயின், குருவை யெங்ஙனம் அறிவோம்? சூரியனைப் பிரகாசிப்பிக்க ஒரு தீவர்த்தி வேண்டுவதில்லை; அவனைப் பார்க்க ஒரு மெழுகுவர்த்தியை யேற்றவேண்டுவதில்லை. சூரியன் உதித்தெழும்போதே நாம் விஷயத்தைத் தெரிந்துகொள்ளுகின்றோம். அதுபோலவே மனிதரை ஆத்மவிஷயமாக உத்தாரணஞ் செய்யும் ஒரு குரு நம்முன் வரும்போது நம்மிடத்து உண்மை பிரகாசிக்கத் தொடங்கி யிருக்கின்றதென்று நாம் சுயமாக அறிகின்றோம். ஒளியைப் பிரகாசிப்பிக்க அந்நிய பதார்த்தம் வேண்டுவதில்லை; அது போலவே சத்தியத்தைச் சத்தியமாமென்று தெரிவிக்க அந்நிய பிரமாணம் வேண்டுவதில்லை; அது

சயமாகவே பிரகாசித்துக் கொண்டிருக்கின்றது. அது நம்மிடத்தில் பிரகாசிக்கும்போது "இதுதான் பரமார்த்தம்" என்று நமக்கு அநுபவமுண்டாகின்றது. எந்தக் குருக்களின் ஞானமும் சத்தியமும் சூரிய கிரணம் போல் பிரகாசிக்கின்றனவோ அவர்கள் தாம் இவ்வுலகத்தில் மிகமேன்மை யுடையோர். பெரும்பான்மையான ஜனங்கள் அத்தகைய மகான்களைக் கடவுளைப்போல் பூஜிக்கின்றனர். ஆனால், அதனினும் சிறிது தாழ்ந்தவரிடத்திருந்தும் நமக்கு உதவிகிடைத்தல் கூடும். ஆனால் நமக்கு உபதேசம் தருவதற்கும், நம்மைச் சன்மார்க்கத்திற்குத் திருப்புவதற்கும் தகுதியுடைய ஒருவரைத் தேடியெடுப்பதற்குரிய சாமர்த்தியம் நமக்கின்றாம். ஆனதால் சிஷ்யனது யோக்யதையைப்போல குருவினது யோக்யதையையும் பரீட்சிக்கச் சில லட்சணங்கள் அவசியம் வேண்டும்.

மனத்தூய்மை, யதார்த்த ஜிஞ்ஞாசை, உத்சாகம் முதலியன சிஷ்யனுக்கு வேண்டிய குணங்களாம். மனத்தூய்மையில்லாதவனுக்குப் பரமார்த்த பக்தி யுண்டாவதின்றாம். பக்தனாக வேண்டுமாயின், அவனது மனோவாக்குக் காயங்கள் ஒரு படித்தாகத் தூய்மையாயிருத்தல் வேண்டும். பரமார்த்த ஜிஞ்ஞாசையை யொட்டி இவ்வளவே கூறக் கிடந்தது. நாம் எதை யிச்சிக்கின்றோமோ நாம் அதனை யடைகின்றோ மென்பது ஒரு பழைய நியமமாம். நமது மனத்தை நாம் எதன்கண் நிறுத்துகின்றோமோ அஃதன்றி மற்றொன்று நம்மொருவருக்கும் சித்திப்பதின்றாம். பக்தியடையும் பொருட்டு முயற்சி செய்வதென்பது நாம் சாதாரணமாக நினைத்து வருவது போல எளிதான காரியமன்று. அது மிகக் கடினமேயாம். பரமார்த்த விஷயத்தைப் பற்றிப் பேசுவதும், அவ்வகைப் புஸ்தகங்களைப் படிப்பதும், பரமார்த்த பக்தியுண்டென்பதற்குத் தெளிவன்றாம். எப்போது நம்மிடத்துப் பரமார்த்த ஜிஞ்ஞாசை யுண்டாகின்றதோ, எப்போது நமது பிரயத்தனம் பயனுடையதாகின்றதோ அது பரியந்தம் அநாதி அவித்தையினால் நிர்மிக்கப்பட்ட நாநாவித கர்மவாசனைகளாகின்ற சத்துருக்களுடன் சேர்ந்திருக்கும் நமது சுபாவத்துடன் நாம் இடைவிடாது போர்புரிதல் வேண்டும். இந்த யுத்தம் ஒன்றிரண்டு தினமோ, அல்லது ஒன்றிரண்டு வருஷமோ, அல்லது ஒன்றிரண்டு ஜன்மமோ செய்வதனால் போதாதாம். அநந்த

ஜன்மங்களில் இந்தப் போர்புரிய வேண்டியதா யிருக்கிறது. மிகு கஷ்டங்களை யநுபவிக்கவும் வேண்டும். ஒருகால் கணநேரத்தில் நமது பிரயத்தனம் பயனுடையதாதலுங் கூடும். ஆயினும் நாம் மிக நீண்டகாலத்திற்குத் தயாராய்ப் பொறுமையுடன் பலப்பிராப்திக்காகக் காத்திருத்தல்வேண்டும். இங்ஙனம் உத்சாகத்துடனும் தைர்யத்துடனும் யத்தனஞ் செய்யும் புருஷன் சந்தேகமின்றி முடிவில் ஜயத்தையும் சித்தியையும் அடைவான்.

உபதேஷ்டாவானவன் அத்யாத்மசாஸ்திரங்களின் கருத்தை உணர்ந்தவனாயிருத்தல் வேண்டும். உலகத்திலுள்ள சகல ஜனங்களும் பைபில், வேதம், கொரான் என்பனவாகிய பல வைதிகக் கிரந்தங்களைப் படிக்கின்றனர். ஆனாலிவை யாவும், பதங்களும் வாக்கியங்களு மாத்திரமாம். பரமார்த்த ஞானத்தின் உலர்ந்த அஸ்திகளாக மாத்திர மிருக்கின்றன. பெரும்பான்மையோரும் இதனால் திருப்தியடைகின்றனர்; அவற்றின் உயிராகிய கருத்தைக் கிரகிக்க எவரும் முன் வருவதில்லை. வாக்கை அதிகமாக உபயோகிக்கும் உபதேஷ்டாவின் மனது, ஸ்திரமாகவும், ஏகாக்ரமாகவும் நிற்பதின்றாம். வாக்சக்தியால் அவனது மனது சலனத்தையடைகின்றது; அதனால் அவன் வைதிகக்கிரந்தங்களிலுள்ள கருத்தைவிட்டு விடுகின்றான். அத்யாத்ம சாஸ்திரங்களின் சாராம்சத்தை எவன் கிரகிக்கின்றானோ அவனே பரமார்த்த மாகிய குரு; வைதிகக் கிரந்தங்களிலுள்ள வாக்கின் பிரகடனம் ஒரு வனத்திற்குச்சமானமாம். அவ்வனம் வழியாக மனிதன் சஞ்சரிக்கும்போது பலகாலும் வழிதடுமாறி வெளிப்படவாக் கூடாமல் உழன்று கஷ்டப்படுகின்றது.

* * *

நானாவிதமாகிய வாக்கின்கட்டுகளும், அழகான பலபிரசங்கங்களும், சுருதியின் பலவித பாஷ்யங்களை யெடுத்துக் காட்டுவதும், வித்வான்களின் வாதத்திற்கும், ரசத்திற்கும் மாத்திரந்தான் பயன்படுகின்றது. அந்தர்முகமாக எண்ணத்தைத்திருப்பி ஆன்ம ஞானத்தைச் சம்பாதிக்க இவையாவும் பயன்படாவாம்.

* * *

நாநாவித விஷயமாகிய சக்திகளை யிவ்வாறு அந்நியர்களுக்கு உபதேசிப்போர் உலகமுழுதும் தங்களை வித்வான்களென்று கூறி, ஸ்தாபிப்பதற்காகத் தங்களது பாண்டித்தியத்தைக்காண்பிக்க மாத்திரம் இச்சிப்பவராம். உலகத்தில் முன்னிருந்த மகா ஆச்சாரியர்களும், வேதத்திலுள்ள பலவியாக்யானங்களைப் பார்த்தவ

என்றும். அவர்களுக்குச் சுருதி வாக்யங்களை ரூபமில்லாமற் செய்வதற்குரிய பிரயத்னமு மிருக்கவில்லை. பதங்களுக்கோ, அவற்றின் தாதுக்களுக்கோ, நானா அர்த்தங்களைக் கற்பிக்க அவர்கள் முயற்சி செய்யவில்லை. ஆயினும், அவர்கள் மிக்க நேர்மையாக உபதேசமுஞ் செய்துவந்தனர். அங்ஙனம் உபதேசஞ் செய்யத் தகுதியற்ற வேறுசிலர் அம்மொழிகளின் ஒருவாக்கை யெடுத்து அதனை முதலிற் பிரயோகித்தவர் இன்னாரென்றும், அவர் இன்னின்ன சாதனங்களைப் புசித்து வந்தன ரென்றும், அவரிவ்வளவு தூங்குவதுண்டென்றும் என்றிவ்வாறு கட்டுக் கட்டி மூன்றோ நான்கோ கிரந்தங்கள் எழுதிக் கூட்டுகின்றனர்.

பகவான் ராமகிருஷ்ணபரமஹம்சர் இங்ஙனம் ஒருகதை கூறுவதுண்டு:—சில ஜனங்கள் ஒன்றாகச் சேர்ந்து ஒருமாந்தோப்புக்குச் சென்றனர். அவர்களுட் சிலர் தோப்பிற் சென்றவுடன் மாமரத்தின் கொம்புகளையும் சிறுகிளைகளையும் இலைகளையுங்கூட எண்ணத் தொடங்கி, அவற்றின் வடிவங்களது ஏற்றக் குறைவையும், அவற்றின் நிற பேதங்களையும், வேறுசங்கதிகளையும் குறிப்பிட்டுக் கொண்டு இந்த இன்பமாகிய விஷயத்தைப் பற்றி வாதஞ் செய்யத் தொடங்கினர். அச்சமயம் அவர்களுள் சிறிது புத்தி நுட்பமுடைய ஒருவன் அவர்களின் வாதத்தைக் கவனியாது மாம்பழத்தைப் பறித்துத் தின்ன முயற்சி செய்கின்றான். அவனன்றோ மிகப் புத்திசாலி! ஆகலின், இலையெண்ணுதல், குறிப்பிடுதல் முதலியன தள்ளத் தக்கனவாம். அவையெல்லாம் ஒவ்வொரு சமயங்களில் அவசியப்படுவனவாம். ஆனால் ஆத்ம விஷயமான காரியங்களைப் பற்றிய வளவு அவை பயனற்றனவாம். இந்த இலையெண்ணுவோருள் ஒரு பரமார்த்த தரிசனை நீங்கள் ஒருகாலும் காணமாட்டீர்கள். மனிதனது பரமபுருஷார்த்தமாகிய ஆத்மஞானத்தை யடைய இலையெண்ணுமளவு பிரயத்னங்கூட அவசியமின்றாம். நாம் பக்தர்களாகவேண்டுமாயின், ஸ்ரீகிருஷ்ண பகவான் மதுராவிலோ, அல்லது அம்பாடியிலோ அவதரித்தனரென்றும், பகவான் அர்ச்சுனனுக்குக் கீதையை யுபதேசித்தது இர்த்யமாக இன்னதிதியிலாமென்றும் பார்க்கவேண்டியது அவசியமின்று; செய்யவேண்டிய கர்மங்களைப் பற்றியஞானம், ஸ்வதர்மாநுஷ்டானத்தில் சிரத்தை, கீதையில் சிரத்தாபக்தி என்னுமிவைகளே நமக்கு வேண்டும். அவ்வகை விஷயங்களைப் பிரதி

பாதிக்கும் கிரந்தங்களை யாரெழுதிய தென்றும், அவர்களின் காலக்ஷேபம் எங்ஙன மிருந்த தென்றுமுள்ள சங்கதிகள் வித்வான்களுக்கு ரசத்தின் பொருட்டாம்! அவர்களுக்குப் பிரியமுள்ளதை யவர்கள் அங்கீகரிக்கட்டும். நாமதை யறியவேண்டுவதில்லை. அவர்களது நிபுணவாதங்களுக்கு சரி சரி (சாந்தி சாந்தி) என்று மாத்திரம் கூறிவிட வேண்டும். நாம் மாம்பழத்தையும் புசிக்கலாம்.

ஒருவனிடத்து இரண்டாவதாக இருக்கவேண்டும் குணம் அகல்மஷமாம் (பாபமின்மையாம்). "உபதேஷ்டா எத்தகையரெனத் தெரிவதனால் யாது பயன்? அவர் கூறுவது உண்மையாவென்று மாத்ரம் பார்த்தால் போதாதா?" என்று பலகாலும், பலருங் கூறுவதுண்டு. இதுசரியன்றாம்; ஏனெனின் ஒருவன்என்னை சித்திர வேலையையோ, சிற்பவேலையையோ, மதவேலையையோ, அல்லது ரசாயன முதலிய பிரகிருதித்துவ சாஸ்திரங்களையோ கற்பிப்பானாயின் அவன் எத்தகைய புருஷனாயிருந்த போதிலும் குற்றமின்றாம். அதற்குப் புத்தியை மாத்திரம் விசாலப்படுத்தினால் போதும். ஆனால் அத்யாத்ம சாஸ்திரங்களைப் பற்றிய அளவு அது போதாதாம். ஏனெனின், மனத்தூய்மையின்றி ஒருவனுக்கு ஒருகாலும் ஆத்மப் பிரகாசமுண்டாவதின்றாம். அங்ஙனமாங்கால் மனத்தூய்மையின்றிய ஒருவன் எதை உபதேசிப்பன்? மனத்தூய்மையும், ஆத்மப்பிரகாசமும் உடையவனுக்கு மாத்திரந்தான் பரமார்த்த ஞானத்தையடையவும் அதனை மற்றொருவனுக்கு உபதேசிக்கவுங் கூடும். மனத்தூய்மை வந்தாலன்றி ஈசுவர சாட்சாத்காரமாவது, அதீத மாகிய அவஸ்தையின் ஒரு முகூர்த்த காலத்திய தரிசனமாவது கிடைப்பதின்றாம். ஆகையினால் குரு எத்தகைய ரென்றும், அவர் எதைக் கூறுகின்றா ரென்றும் நாம் முதலில் அறியவேண்டும். அவர் பரிசுத்தராக விருத்தல் வேண்டும். அங்ஙனமிருந்தால் மாத்திரந்தான் அவரது வாக்யம் பிரமாணமாம். அங்ஙனமிருந்தால் மாத்திரந்தான், அவர் உண்மையான உபதேஷ்டா ஆவர். தம்மிடத்தில் ஆத்மப் பிரகாசமில்லாதவர் அவர் எதனை உபதேசிப்பர்? (மின்சார சக்தியால் நிர்மிக்கப்பட்ட கம்பித் தபாலை யொன்று ஓர் உதாரணமாக எடுக்குக. ஒரு கம்பித் தபாலாபீசில் மின்சார சக்திக்கு ஒரு கலனத்தைக் கொடுக்கும்போது அந்தக் கணமே அந்தச் சக்தி

யிற்றோராமிசில் பிரகாசிக்கின்றது; அதுபோல) சுத்த அந்தக்கரணமுடைய குருவினிடத்துப் பிரகாசித்துக் கொண்டிருக்கும் ஆன்ம சைதன்யத்தின் ஒருகலை, விசேஷத்தினுல் அதிகாரியாகிய சிஷ்யனது ஆன்மாவையும் பிரகாசிப்பிக்கின்றது ஆதலின் குரு பரிசுத்தராக விருத்தல் வேண்டும். (வரும்)

கர்ணன்.

(முன்தொடர்ச்சி.)

பிறகு ஒருநாள் ஒரு சிற்பி பீமனை ஒருவரும் உணராதபடி தனியாக அழைத்துச் சென்று "அருந்திறவீரரே! உமது பெரிய தந்தையார் உங்களைக் கொல்லக்கருதி இம்மாளிகையை அரக்கினுற் கட்டுவித்தனர். சமயமறிந்து இம்மாளிகையில் நெருப்பு வைக்கவே புரோசனன் உங்களுடன் வந்திருக்கின்றான். அதனைத் தமது மதிவன்மையினுணர்ந்த உமது சிறிய தந்தையாராகிய விதுர மகாராஜர் உங்களுக்கு நன்மையுண்டாகும் உபாயமொன்றைச் செய்யும்படி என்னை யனுப்பினர். இம்மாளிகையினின்று அடுத்துள்ளதொரு வனத்திற்கு நீங்கள் அனைவரும் சுகமாய்ச் செல்லுதற்கேற்றபடி சுரங்கமொன்றைச் செய்து அதன்மீது ஒரு மண்டபம் அமைத்து அதில் அந்தச் சுரங்கத்தில் நீங்கள் இறங்கிச் செல்லுதற்காக வழியொன்றை அமைத்து அதன்மேல் இம்மண்டபத்திலுள்ள தூண்களின் ஒன்றை நீர் பறிக்கலாம்படி அமைத்திருக்கின்றேன்; இதனை ஒருவர்க்கும் உரைக்காமலிருந்து துன்பநேரின் உடனே தம்முடைய சகோதரர்களை அவ்வழியாக அழைத்துச் சென்று அடுத்துள்ளவனத்தையடையக்கடவீர். இதுவேஎன் விண்ணப்பம்" என்று கூறிப் பீமனிடம் விடைபெற்றுச் சென்றனன். பீமன் அதனை ஒருவருக்குங் கூறாமல் சமயம் பார்த்துக் கொண்டிருந்தான். தருமர் புரோசனனுடைய செய்கைகளால் அவனிடம் ஐயுறவுகொண்டு அவன் பால் விழிப்புடன் இருக்கும்படி தன் சகோதரர்களுக்கும் தாய்க்குங்கூறித் தாமும் அங்ஙனமேயிருந்தனர். ஒருநாள் நள்ளிரவில் புரோசனன் நன்றாய்த் தூங்குதலைப் பீமன் கண்டு விதுரரால் அனுப்பப்பட்ட சிற்பி கூறியதை நினைத்து அம்மாளிகையில் ஒரு புறத்தில் தானே நெருப்பிட்டுவிட்டு சகோ

தரரையும் தாயையும் அழைத்துக்கொண்டு அம்முறையின் வழியாய்ச் சென்று அடுத்துள்ள காட்டை யடைந்தனன்.

தீயினுக்குக் காற்றுந் தக்கபடி உதவி புரிந்தமையின் அம்மாளிகை மிக விரைவின் எரிந்து சாம்பராயிற்று. அதில் தீமதியமைச்சனுகிய புரோசனனும், தாயோடு வந்து தங்கிய வேடுவர் ஐவரும் வெந்து மாய்ந்தனர். அம்மாளிகை எரிந்து விட்ட செய்தி நாடெங்கும் பரவியது. பீஷ்மர் முதலியோர் பாண்டவர்களும் அவர்கள் தாயுமே அதில் மாண்டுபோனவர்கள் என்று கருதி அவர்களுக்குச் செய்யவேண்டிய காரியங்களைச் செய்து முடித்து விட்டார்கள்.

ஆறும் அத்தியாயம்.

பிறகு பாண்டவர்களும் தாயும் அடுத்துள்ள இடும்பவனத்தை யடைந்தனர். அங்குப் பீமன் இடும்பன் என்னும் ராக்ஷதனைக் கொன்று அவன் தங்கையாகிய இடும்பியைக் காந்தர்வமுறையின் மணந்து கடோற்கஜனைப் பெற்றான். பிறகு பாண்டவர்களும் தாயும் இடும்பியையும் அவளுடைய குழந்தையையும் அவ்வனத்திற்றானே யிருக்கவிட்டு பார்ப்பன வேடந்தாங்கி வேத்திரகீயம் என்னும் ஊரையடைந்து அங்கோர் அந்தணன் வீட்டிற்றங்கி யிருந்தனர். அங்குச் சில நாட்கள் சென்றபின் பீமன் அவ்வூரிலுள்ளார்க்கு மிகவுந் தீமைபுரிந்துக்கொண்டிருந்த பகன் என்னும் அரக்கனைக்கொன்று அவ்வூரினர் களிக்கும்படி செய்தனன்.

இவர்கள் இங்ஙனமிருக்கப் பாஞ்சாலநாட்டின் மன்னனுகிய துருபதமகாராஜன் பாண்டவர்கள் இறந்துவிட்டனர் என்ற செய்தியைக் கேட்டுப் பெரிதும் வருந்தி அவர்களிற் பாண்டவர்களுக்குக் கொடுப்பதற்காக வைத்திருந்த தன் அருமைச் செல்வியாகிய திரௌபதியை யாருக்கு மணம் புரிவிக்கலாம் என்று எண்ணினன். அருச்சனனுக்கு கொடுக்கவிருந்த தன் பெண்ணை மணத்தற்குரியார் ஒருவரும் அவனுக்குப் புலப்பட்டிலர். பிறகு ஒரு தீர்மானஞ் செய்துகொண்டான்.

அஃதாவது "இரண்டு தூண்களமைத்து அவற்றினிடையில் மிகவும் உயரத்தில் காற்றினுங் கடுவேகமாகச் சுழலும் சக்கரமமைத்து அதற்கிடையில் அவ்வாறே சுற்றும் மச்சவடி இலக்கு

ஒன்றமைத்துப் பிறகு அரசர்களை வருவித்து அவர்களில் யார் அவ்விலக்கை எய்கின்றார்களோ, அவர்களுக்கே கொடுத்தல் வேண்டும்" என்பதே. பிறகு இலக்கை அமைப்பித்து துரோபதன் அரசர்களை வரவழைத்தனன். குறித்தநாளில் அதற்கென்று ஏற்படுத்தப்பட்ட இடத்தில் அரசர்கள் அனைவரும் வந்து கூடினார்கள். பாண்டவர்களும் இச்செய்தியைக்கேட்டு தங்கள் தாயோடும் பல வேதியரோடும் பாஞ்சால நாட்டை யடைந்து தங்கள் தாயை ஒரு குலாலன் வீட்டிலிருத்தி வேதியரோடு சபையை யடைந்தார்கள்.

அப்போது வலுவிற்சிறந்த பல மல்லர்கள் ஒரு வில்லைச் சுமக்கமுடியாமற் சுமந்துவந்து அரசசபையில் வைத்தார்கள். பிறகு திரௌபதியை அவள் தோழியர் அரசசபையில் நிறுத்தி அவளுக்கு ஒவ்வொரு அரசரைப்பற்றியும் தெரிவித்தார்கள். அவள் தமயனாகிய திட்டத்துய்மன் அரசர்கள் முன் வந்து நின்று அவர்களை நோக்கி, "அரசர்களே! நான் கூறுவதொன்றை அன்புடன் கவனித்துக் கேட்டல்வேண்டும்.

சிலையிது சிலீமுகங்க ளிவைகடுந் திரிகையேகத்
திசைமுகத் துழலுகின்ற வியந்திரத் திகிரிகாப்பண்
நிலையிலா விலக்குமற்றீ தெஞ்சுரா யாவனெய்தான்
கலைவலீ ரவற்கேயிந்தக் கன்னியு முரியள்" என்றான்.

அதைக்கேட்டு அவையிருந்த அரசர்களிற் சிலர் அழகிய மின்சனை தானளிக்குஞ் சொல்லா லுருக்குணத்துப் பாஞ்சாலி யழகிற்சென்ற மனமுடையவர்களாகி வில்லினது பெருமையையும் இலக்கத்துள்ள அருமையையும் எண்ணாமல் அவ்வில்லை எடுக்கவு முடியாதவர்களாய், அதன்பால் நாண் பூட்டுதற்கு மாறாக அங்குத் தமக்குண்டான அவமதிப்பாலான நாண் பூண்டு திரும்பினர். சிலர் யாம் இவ்வேடிக்கையைக் காணவந்தோமே யன்றி இவ்வில்லை யெண்ணி வந்திலோம் என்றனர். சிலர் எமக்கு முன்னமே மணமாயிருக்கின்றது. இவ்வில்லை வளைத்துப் பின்னு மொரு பெண்ணை மணப்பதில் விருப்பமில்லை என்றனர். சிலர் யாம் வருகையில் நிமித்தம் பிழைத்தது, ஆதலின் இதில் எமது மனம் சென்றிலது என்றனர். சிலர் ஒன்றும் பேசாமல் மௌனமுற்றிருந்துவிட்டனர். அப்போது எதுகுலத் தரசர்களிற் சிலர் அவ்வில்லை வளைக்க விழைந்து அக்குலத் தலைவராகிய பலராமனை

நோக்க, அவர் என்னிரும் புலத்து யோகியர் தங்கள் கண்மணி யிருக்குங் கண்ணனை நோக்க, கண்ணன் பாண்டுமைந்தர் பார்ப்பன மக்களினிடையே உருமாறி வந்திருக்குந் தன்மையை யுணர்த்தினன். பின் பலராமன் அதைக்கேட்டு இட்ட கட்டளையினால் யாதவர்கள் அவ்விருப்பத்தினை விட்டு அமைதியுற்றார்கள்.

பிறகு நகுல சகதேவர்களின் தாயின் தமயனான சல்லியன் என்னும் அரசர் பிரான் அரியேறென, வெழுந்துசென்று வில்லை வாரி எடுத்து நிறுத்தி வளைக்க வெண்ணி அதன் நாணைப்பற்றி யிழுத்துத் தரையில் வீழ்ந்தான். பின்னர் சராசந்தன் நாணைச் சிறிது தூரங்கொண்டுவந்து பின் பின் முடியாமல் விட்டான். பின்பு மகத தேசாதிபதிபதி நாணை மார்பளவுங் கொண்டுவந்து விட்டனன். பிறகு சீலனென்னுமருத்திறலரசன் நாணை அது பூட்டப் பட்டுள்ள முனையினின்று மற்றொரு முனைக்குச் சாணளவு வரையினுங் கொண்டுவந்துவிட்டான். பின் துரியோதனன் நால்விரலளவாகக் கொண்டுவந்து அதன்மேல் முடியாமல் விட்டான். பின்னர்,

"சிலைவருந்த மறக்கற்ற கன்ன னென்னுங்
கழற்காளை மறனிருந்த கயிலை யென்னு
மலைவருந்த மறவெடுத்த நிருத னென்ன
மன்னவையில் வலியுடனே வந்து தோன்றி
நிலைவருந்த மறநின்ற பரியகோல
நீள்வரிநாண் மயிர்க்கடைக்கீழ் நின்றதென்னச்
சிலைவருந்த மறவளைத்து வளைந்த வண்ணச்
சிலைக்காறன் முடித்தலையைச் சிந்தவீழ்ந்தான்."

அதைக்கண்ட திரௌபதி தன் தோழியரை நோக்கி "நங்கைமீர்! நீங்கள் இவ்வரசர்களைப் பற்றிக் கூறிவருகையில் என் மனம் இங்கில்லாமல் வேறோரிடஞ் சென்று கவலையிலாழ்ந்திருந்தது. ஆதலின் இவ்வரசர்களுள் ஒருவரையும் நான் கவனித்திலேன். இப்பொழுது வில்லையெடுத்து வளைத்த காளையாவன்? இவன் பெரிதும் அக்குந்திதேவியின் மைந்தர்களை ஒத்திருக்கின்றான். இப்போது வில்லை வளைக்கச் சென்ற வீரர்கள் எல்லாரினும் இவன் சிறந்த வன்மையுடையான் என்பதில் ஐயுறவில்லை" என்றனள். அதைக்கேட்ட அத்தோழியரில் ஒருத்தி,

"பெண்மைக் கிரதி யெனவந்த
பெண்ணா ரமுதே பேருலகில்
உண்மைக் கிவனே பொறைக்கிவனே
யுறவுக்கிவனே யுரைக்கிவனே
திண்மைக்கிவனே நெறிக்கிவனே
தேசக்கிவனே சீலக்கிவனே
வண்மைக்கிவனே கன்னனென்று
மன்னன் கண்டாய் மற்றிவனே."

திரௌபதி! "ஆம், நீ கூறிய குணங்கள் யாவும் இவனிடம் உள்ளனவே என்பதை இவனது முகப்பொலிவே காட்டுகின்றது. இத்தகையோனை அத்தியவனை துரியோதனனுக்கு நண்பனாகச் செய்வித்த ஊழின் வலியை என்னென்பேன்? நங்கைமீர்! இப்போது இச்சபையில் அக்குந்திதேவியின் மூன்றும் புதல்வனாகிய அருச்சுனராசர் வந்திருப்பாராயின் இவ்வரும் பெரும் வீரனும் நாணும்படி இவ்வில்லை வளைத்துக் குறித்த இலக்கை எய்து என்மனத்தைக் குளிர்விப்பாரன்றோ?" என்று கூறினள். அப்போது அவள் கண்களில் நீர்பெருகியது. அவளது மெய் சோர்ந்தது. அதைக்கண்ட தோழியர் இன்மொழிகள் பல கூறி அப்பொன்னங்கொடியைத் தேற்றினார்கள். பிறகு அந்தணர் மத்தியில் அந்தணர் வேடந்தரித்திருந்த பாண்டவர்களில் அருச்சுனன் எழுந்து அவ்வில்லை வளைத்து இலக்கை யெய்தான். திரௌபதி உடனே அவனுக்கு மாலையைச் சூட்டினள். அதைக் கண்ட துரியோதனன்முதலியோர் அவனை எதிர்த்தார்கள். பாண்டவர்கள் அவர்களனைவரையும் பின்னிட்டோடும்படி செய்தார்கள். பிறகு பாண்டவர்கள் திரௌபதியை அழைத்துக்கொண்டு குந்திதேவி தங்கியுள்ள மனைக்குச் சென்று தெருவில் நின்றனர். அப்போது அர்ச்சுனன் தெருவிலிருந்தபடியே அம்மா! நான் ஒரு கனி கொண்டுவந்திருக்கின்றேன்" என்றான். அதைக் கேட்ட அத்தேவி "அப்படியா! அக்கனியை நீங்கள் ஐவரும் உண்பீர்களாக" என்று முன்பின் யோசியாமற் கூறிவிட்டனள். பிறகு செய்தி இன்னதென வுணர்ந்து பெரிதும் வருந்தினள். அதைக்கண்ட தருமபுத்திரர் "அன்னாய்! நீ வருந்தற்க; நீ கூறியது எங்களுக்கும் விருப்பமானதே; இப்பொற்கொடியை நாங்கள் ஐவரும் மணம்புரிந்து கொள்ளவே விரும்பியுள்ளோம்" என்றனர். அதைக் கேட்டுக் குந்திதேவி வருத்தம் நீங்கினள். பிறகு

துருபதமகாராசா அவர்களை வருவித்து அவர்கள் பாண்டவர்கள் என்பதையுணர்ந்து பெரிது மகிழ்ந்து அருச்சுனனுக்குந் திரௌபதிக்கும் மணம் புரிவிக்க வேண்டுமென்றனர். அதைக்கேட்ட தருமர் தங்கள் கருத்தை அவ்வரசனுக்குத் தெரிவித்தனர். அதைக்கேட்ட அம்மன்னன் மிகவுங் கலங்கினன். அச்சமயம் அங்கு வந்த வியாசமுனிவர் கூறிய சமாதான மொழிகளால் அவ்விறையோன் தெளிந்து திரௌபதியைப் பாண்டவர் ஐவருக்கும் மணம் புரிவித்தனன்.

C. R. கோவிந்த ராஜு முதலியார்,
பண்டிதர், பச்சையப்பன் காலேஜில், சென்னை.

சுகாதாரம்.

(முன்தொடர்ச்சி.)

வாயு.

சுத்தமான வாயுவை உட்கொள்ளுவதனால், அதன் ஒரு பாகமாகிய பிராண வாயு நமது சரீரத்திலுள்ள பலவகை விஷமுள்ள கழிவுப் பதார்த்தங்களோடு சேர்ந்து அவற்றையெல்லாம் எரித்துப் பின்னர் கரி அமில வாயுவாக மாறி வெளியே வந்து விடுகின்றது. தேகாரோக்கியத்திற்கு வேண்டிய அளவான சுத்த வாயுவை யுட்கொள்ளாம லிருப்போமாயின், நமது தேகத்திலுள்ள கழிவுப் பதார்த்தங்களில் ஒரு பாகம் தேகத்திலேயே தங்கிவிடும்; அதனால் தேகத்தில் புதிதாகச் சேரவேண்டிய பதார்த்தங்களுக்கு இடையூறுண்டாகின்றது. இதுகாரணமாகச் சுத்தவாயுவை யுட்கொள்ளாதவர்கட்குத் தீவிரமான பசி யுண்டாகமாட்டாது; அதனால் ஆகாரத்தின் மீது அரோசிகம் உண்டாகும்; தேகத்திலும், மனத்திலும் அசதியும், சோர்வு முண்டாம். இக்காரணத்தினாற்றான் வீட்டிற்குள்ளேயேயிருந்து தேகப் பயிற்சி செய்யாமலும், சுத்தவாயுவை யுட்கொள்ளாமலு மிருக்கும் தனவான்கள் சதா நோயாளிகளாக விருக்கின்றார்கள். பரந்த விடங்களிலிருந்து, சுத்த வாயுவை யுட்கொண்டு, மிகு கஷ்டமான கூலிவேலை செய்துவரும் கூலியாட்கள் திட சரீரிகளாயும், சுக ஜீவிகளாயுமிருக்கின்றனர். ஒரு நாள் முழுதும் உழைத்து வரும் கூலியாட்கள் சுத்த வாயுவை யுட்கொள்ளுவதனாலும், அதிக தேகப் பயிற்சி செய்வதனாலும் அவர்களுடைய தேகம் உறுதியுள்ளதாய் எத்தக் குளிரையும், காற்றையும், தாங்

கும் சக்தியுடையதாய் விடுகின்றது; அவர்கள் எவ்வகைப்பட்ட அசுத்தான உணவை உண்டபோதிலும், அவர்களுடைய ஜீரணக் கருவிகள் பலமுள்ளனவாயிருக்கின்றமையின், அந்த அசுத்தான உணவிலிருக்கும் சத்தைக் கிஞ்சிற்றும் விடாமல் ஜீரணித்து அவர்களுடைய தேகத்தை வளர்த்துப் புஷ்டியாக்கும். தனவானுடைய தேகமோ, வீட்டிலிருக்கும் அசுத்தமான வாயுவினாலும், தேகப் பயிற்சி யின்மையினாலும், உறுதியற்று திடமற்றிருக்கின்றது; அதனால் அது அற்பக்குளிரையும், காற்றையும் சகிக்கும் சக்தியுடையதாகவில்லை; தனவான்களுடைய ஜீரணக் கருவிகளும் பலவீன முடையனவாயிருக்கின்றமையின், அவை சுத்தமான உணவுகளிலுள்ள சாரத்தைக் கிரகிக்கும் சக்தியுள்ளனவாகவில்லை; அதனால் தனவான்கள் சுத்தான உணவுகளை உண்டபோதிலும், அவர்களுடைய தேகம் திடமும் சுகமுமுள்ளனவாயில்லை.

அசுத்தமான வாயு பரவியிருக்குமிடங்களில் வாசஞ்செய்து, வெளியிற்சென்று தேகப்பயிற்சிசெய்யாத மனிதர்களுக்குள் மதுபான வழக்கம் அதிகமாகவிருக்கும். சுத்த வாயு மனிதனுக்குச் சுகத்தையும், உற்சாகத்தையும் உண்டாக்குவதனால் மனிதர் தத்தமக்குரிய வேலைகளை வருத்தமின்றிச் செய்வதற்குச் சக்தியுள்ளவர்களாக விருக்கின்றார்கள்.

சுத்த மானகாற்றில்லாத வீடுகளிலும், அசுத்தங்களாலுண்டாகும் பலவிஷவாயுக்கள் நிறைந்த பட்டணங்களிலும் குடியிருக்கிற ஜனங்கள் சோர்வடைந்து உற்சாகமற்றவர்களாகித் தங்களுடைய வேலைகளைப் பார்க்கச் சக்தியற்றுப் போகின்றார்கள். இதினிமித்தந்தான் அவர்கள் தற்காலத்திற்குச் சற்று உற்சாகத்தைக் கொடுக்கத்தக்க லாகிரி வஸ்துக்களைச் சாப்பிட்டுத் தங்களுடைய வேலைகளை நடத்தப்பார்க்கிறார்கள். அஸ்திபாரம் பலவீனப்பட்டுச் சாய்ந்து கீழேவிழப்போகிற சுவருக்குத் தற்காலத்திற்கேற்ற முட்டுக்கொடுக்கிறதுபோல இந்த ஜனங்கள் அசுத்த ஆகாயத்தினாலும் தேகமுயற்சி யில்லாமையினாலும் தங்களுடைய சரீரத்தைப் பலவீனப்படுத்திக்கொண்டு தற்கால முட்டுக்குச் சமானமான லாகிரி பதார்த்தங்களை யுட்கொண்டு சற்று நேரத்திற்குத் தங்களைத் தேற்றிக்கொள்ளுகிறார்கள். ஆனால் குடியானது முதலில் சற்றுநேரத்திற்கு உற்சாகத்தைக் கொடுத்தபோதி

னும் பின்னர் அது முன்னிலும் இரண்டத்தனைத் தளர்ச்சியை யுண்டாக்கிவிடும். இப்படிப்பட்ட ஜனங்கள் தற்செயலாய்த் தங்களுடைய அசுத்தமான இடங்களைவிட்டுச் சுத்தமானகாற்றுள்ள இடங்களிற்போய்க் குடியிருந்து முயற்சிகளைச் செய்யும் தருணம் வாய்க்கும்போது பிரயத்தனமின்றியே அவர்களுடைய கெட்ட பழக்கங்கள் அவர்களைவிட்டு,பெரும்பான்மையும் விலகிப்போகின்றன. ஆகையால் மதுபானஞ்செய்வோர் கெட்ட பழக்கங்களைவிடவேண்டுமெனின்,தங்களுடையகெட்ட பழக்கங்களால் தங்களுக்கும் தங்களுடைய குடும்பங்களுக்கும் வருவிக்கிற பல கேடுகளைக் குறித்து அவர்களுக்குப் புத்திசொல்லுவது மாத்திரம் போதாது; அவர்களுடைய கெட்ட பழக்கங்களுக்கு முக்கிய காரணத்தையும் நீக்கவேண்டும். அவர்கள் அசுத்த காற்றுள்ள தங்கள் இடங்களைவிட்டுச் சுத்தமான காற்றுள்ள வேறு இடங்களிற் போய்க் குடியிருந்து அல்லது தங்களுக்கிருக்கிற இடங்களைச் சுத்தமாக வைத்து, எப்பொழுதும் உள்ளே சுத்தமான காற்றைப் பிரவேசிக்கும்படிச் செய்து, நாடோறும் சற்றுநேரமாவது ஊருக்கு வெளியேபோய்ச் சுத்தமான காற்றில் உலாவுதல் முதலான தேகமுயற்சிகளைச் செய்துவந்தால் அவர்களுடைய கெட்ட பழக்கங்கள் பெரும்பான்மையும் நீங்கிவிடும்.

சிலவகைத் தொழில்களினால் நாம் சுவாசிக்கும் காற்று கெடுதியாகி நமக்குத் தீமைகளை யுண்டாக்கும். பருத்திப்பஞ்சை அல்லது இலவம் பஞ்சை வெட்டுகையில் நுட்பமான பஞ்சுத்தூள் ஆகாயத்தில் சேர்ந்து அவ்வேலைகளைச் செய்கிறவர்களுடைய சுவாசத்தின் மூலமாய் அவர்கள் சுவாசக் கருவியாகிய நுரை ஈரலுக்குள் புகுந்து க்ஷயம், இருமல் முதலிய பலவியாதிகளை யுண்டாக்குவதுமன்றி. அவ்விதமே நெல் முதலான தானியங்களை விற்கிறவர்களும், அளக்கிறவர்களும் தானியத் தூசுகளை நெடுநாள் சுவாசித்து க்ஷயம் முதலான சுவாசக்கருவி வியாதிகளுக்கு உட்படுகிறார்கள்.

ஈயம், பித்தளை, தாம்பிரம் முதலிய லோகங்களை எப்பொழுதும் உருக்கி வேலைசெய்கிற கம்மாளர் அந்த லோகங்களின் புகையை எப்பொழுதுஞ் சுவாசிக்கிறதினால் ஒருவகையான இருமல் வியாதி, காசநோய் (Asthma), ஒருவகைக் குளிர் காய்ச்சல் முதலான சிலநோய்களை அடைகிறார்கள். ஈயப் புகையைச் சுவா

சிக்கிறவர்களுக்குக் கொடிய வயிற்றுநோய், பக்கவாத முதலிய வியாதிகள் வருவதுண்டு. சாய்வெள்ளை, பாஷாணஞ் சேர்ந்திருக்கிற பச்சை வர்ணம் முதலிய சில வர்ணங்களைப் பிரயோகிக்கிற வர்ணக்காரர் அந்த விஷ வர்ணங்களிலிருந்து புறப்படும் ஆவியைச் சுவாசிப்பதினால் பலவகையான வியாதிகளை அடைவார்கள்.

(வரும்).

Special to "Chakravarthini"

கிரீக் தேசத்துப் பீமசேனன் கதை.

(முன்தொடர்ச்சி)

பீமசேனனும் பொன் மாம்பழமும்.

பின்னர் அரசன் அவனுக்கு அதிக கஷ்டமான வேறொரு வேலையைச் செய்யும்படிக்குச் சொன்னான். அவ்வேலை மூன்று விநோதமான மாம்பழங்களைக் கண்டறிவதேயாம். இப்பழங்கள் பொன்னால் செய்யப்பட்டன. இவை ஒரு கொடூரமான பறவை நாகம் காத்துவரும் தோட்டத்தில் விளைகின்றன. இத்தோட்டம் எங்கே இருக்கிறதென்பது யாருக்கும் தெரியாது. சிலர் மலைமேலிருக்கிறதென்றும், சிலர் வடக்கே வெகு தூரத்திலிருக்கிறதென்றும், வேறு சிலர் மேற்கே தூரத்திலிருக்கிறதென்றும் சொன்னார்கள்.

இவற்றையெல்லாம் கேட்டறிந்த பீமசேனன் தன்னால் கொல்லப்பட்ட சிங்கத்தின் தோலை உடையாகத் தரித்துத் தோளில் வில்லும், அம்பும்மாட்டி கையில் ஒரு பெரிய தடியையெடுத்துக்கொண்டு புறப்பட்டுப் போனான்.

அப்படிப் போகும்வழியில் தான் எதிர்ப்படுகின்றவர்களை அந்த நேர்த்தியான தோட்டத்திற்குச் சரியான வழி அதுதானா என்று கேட்டான்; ஆனால் ஒருவரும் அவனுக்குச் சரியான பதில் சொல்லவில்லை. ஆனபோதிலும் மேலே மேலே போய்க்கொண்டிருந்தான். இப்படிப் போகும்போது ஒரு நதியை அடைந்தான்; அதன் கரையில் புஷ்பங்களை மாலையாகத் தொடுத்துக்கொண்டு சில யுவதிகள் உட்கார்ந்திருந்தார்கள். அவர்களைப் பார்த்து

"அழகிய பெண்களே! பொன் மாம்பழம் விளைகின்ற தோட்டத்திற்குப் போவதற்கு இது சரியான வழிதானா நீங்கள் சொல்ல முடியுமா?" என்று கேட்டான். இப்புது மனுஷனது குரலைக்கேட்ட உடனே அப்பெண்கள் தங்கள் கையிலிருந்த புஷ்பங்களைத் தரையில் நழுகவிட்டு, ஆச்சரியமாக அவனைப்பார்த்தார்கள். "ஆ! ஆ! பொன்மாம்பழத் தோட்டம்! உனக்கு அங்கே என்னவேண்டும்?" என்று ஒருத்தி கேட்டாள். அதற்கு "பொன் மாம்பழங்கள் மூன்று கொண்டுவந்து கொடுக்கும்படியாக எனக்கு ஓர் அரசன் ஆக்ஞை யளித்தான்" என்று பீமசேனன்சொன்னான். இதற்கு மேல் அந்தப் பெண் அவனை நோக்கி "நூறுதலையுள்ள ஒரு பெரிய கொடூரமான பறவைநாகம் இம்மரத்தடியில் காவல் இருக்கிறதென்பது உனக்குத்தெரியுமா?" என்றாள் "அது நன்றாகத் தெரியும்; ஆனால் என்வாழ்நாள் முழுதும் நான் சர்ப்பங்களையும் பறவை நாகங்களையும் சிங்கங்களையும் கரடிகளையுக் கொன்று வருகின்றேன்" என்று பதில் சொன்னான். இதைக் கேட்ட அந்தப் பெண்கள் அவனையும் அவனது பெரிய தடியையும் அவன் போர்த்திருந்த சிங்கத்தின் தோலையும் பார்த்து, இவன் மனிதர்களைப்பார்க்கிலும் அதிக பலமுடையவன்; ஆதலால் இவன் மேலான காரியங்களைச்செய்வானென்று நினைத்தார்கள். ஆனபோதிலும் அந்தப் பறவைநாகமோ நூறுதலையுடையது; அந்தப்பூதத்தினின்று எந்த வல்லமைசாலிதான் தப்பமுடியும்? என்று மனதில் எண்ணி இவனைத் திரும்பிப்போகும்படி செய்யப் பிரயத்தனப்பட்டு அவர்கள் எல்லோரும் ஒன்றுகூடி நீ திரும்பிப்போ; உன்னுடைய நாட்டிற்குத் திரும்பிப் போ; பொன்மாம்பழத்தைப் பற்றிக் கருதாதே; அந்தக் கொடூர அரசனைப் பற்றி எண்ணாதே; அந்த நூறுதலையையுடைய பறவை நாகம் உன்னைத் தின்றுவிடுவது எங்களுக்கு இஷ்டமில்லை என்றார்கள். இவற்றைக்கேட்ட பீமசேனன் இளைப்படைந்தான். தன் கையிலுள்ள பெருந் தடியை மேல்தூக்கிப் பக்கத்திலுள்ள ஒரு கற்பாறையின் மீது அடித்து அதைத் துண்டுத்துண்டாக நொறுக்கி விட்டான். புன்சிரிப்போடு அப்பெண்களை நோக்கி "இம்மாதிரியான ஒரு பலத்த அடி அந்தப் பறவைநாகத்தின் நூறுதலைகளையும் நொறுக்கி விடாதா" வென்று கேட்டான்.

பிறகு புல் தரையின்மீது உட்கார்ந்தான்; ஒரு பெரிய சிம்மத்தைத் தான் கொன்றதும், ஐம்பதுதலை (ஒவ்வொன்றிலும்

அநேக கூர்மையான பற்களையுடைய நீர்நாகத்தோடு சண்டையிட்டது முதலிய தன்னுடைய கதைகளை அவர்களுக்குச் சொன்னான். இவற்றைக் கேட்ட அவர்களில் ஒருத்தி தோட்டத்திலுள்ள பறவை நாகத்துக்கு நூறு தலைகள் உண்டு என்றாள். இதற்குப் பதிலாக அத்தகைய பாம்பின் ஒன்றிற்குப் பதிலாக இரண்டோடு சண்டையிடுவேன் என்றான். "முன்னர்ச் சண்டையிட்ட பாம்பின் ஒருதலை நசுக்கப்பட்டால் அந்த இடத்தில் இரண்டு தலைகள் தோன்றின" என்று சொன்னான்.

மேலும் தான் எப்படி ஒரு பெரிய வேகமான மானை ஒருவருடம் முழுதும் துரத்தி அடித்துக் கடைசியாக அதைப்பிடித்துவீட்டிற்குக் கொண்டு போனதையும் அவர்களுக்குச் சொன்னான். இந்தக் கதையைச் சொல்லி முடித்து அவர்களை நோக்கி "என்னைப்பற்றி நீங்கள் முன்னமே கேள்விபட்டிருப்பீர்; என்பெயர் பீமசேனன்" என்றான். "உன்னுடைய செய்கைகள் உலகம் முழுவதும் பரவியிருக்கின்றமையின், நீ இன்னாரென்பதை நாங்கள் குறித்து அறிந்துகொண்டோம். பொன்மாம்பழத் தோட்டத்தை நீகண்டறிய விரும்புவது ஆச்சரியமென்று நாங்கள் எண்ணமாட்டோம். உனக்கு உதவி செய்ய எங்களால் கூடிய ஒத்தாசையைச் செய்கின்றோம்" என்றுசொன்னார்கள் "நீ கடற் கரைக்குப் போய் ஒரு கிழமனிதனைப் பார்த்துப் பொன் மாம்பழம் கிடைக்கக்கூடிய இடத்தைச் சொல்லும்படிக்கு வேண்டிக்கொள்" என்றும், "அவனைக் கண்டு பிடித்தால் அவனைக் கெட்டியாகப் பிடித்துக்கொள். நீ தெரிந்துகொள்ள விரும்புகிற விஷயத்தை அவன் உனக்குச் சொல்லுவான்" என்றும் சொன்னார்கள். இதைக்கேட்டு பீமசேனன் அவர்களுக்கு வந்தனம்கொடுத்துவிட்டுப் பிறகு தன்வழியே போய்விட்டான். அப்பெண்கள் பூமாலையைத் தொடுத்துக் கொண்டே, மூன்று பொன்மாம்பழங்களோடு அவன் திரும்பி வரும்போது இம்மாலைகளால் அவனை அலங்கரிப்போம் என்று அவர்கள் பேசிக்கொண்டார்கள்.

(வரும்.)

வ. ஆறுமுக செட்டியார், சென்னை.

யுத்தம்.

ஐரோப்பாக்கண்டத்தில் 3-வருடகாலமாக நடந்து வரும் மகா யுத்தம் இன்னும் ஒரு முடிவிற்கும் வரவில்லை. இந்த யுத்தத்தினால் ஐரோப்பாக்கண்ட முற்றும் பெரிதும் உயிர்ச்சேதமும், பொருட் சேதமுமடைந்து வருகின்றது; சுந்தோப சுந்த நியாயமாக அழிந்து வருகின்றது. மிகுதியும் நாகரீகம் பெற்றிருக்கின்றது ஐரோப்பாக்கண்டமென்னும் வதந்தி இந்த யுத்தத்தினால் பொய்யாகிவிட்டது. கல்வியிலும், தொழிலிலும், வியாபாரத்திலும் மிகுதியுந் தேர்ச்சி பெற்றிருக்கின்றதென்று உலகப்பிரசித்தி பெற்றிருந்த ஜெர்மன் தேசமே கருணையின்றி உயிர்ச்சேதத்தை விளைக்க முற்பட்டுவிட்டது; அதனிடத்து நியாயமென்பது தலைகாட்டா தோடிவிட்டது. நாகரீகம் சிறிதுமில்லாத தேசத்தைப் போல நடந்து வருகின்றது. இவையெல்லாம் அதன் அழிவிற்கு அறிகுறிகளாக நிற்கின்றன. மேற்கரங்கத்தில், பிரிட்டிஷ், பிரெஞ்சுக்காரர்களின் நெருக்குதலினால் ஜெர்மானியர் பின்னடைந்து போய்க் கொண்டேயிருக்கின்றனர்; தாமிழந்து வருமிடங்களை மீட்டுக்கொள்ளச் செய்யும் பகீரதப் பிரயத்னங்களும் அபலமாகி வருகின்றன. நீர்மூழ்கிக்கப்பலின் போராட்டத்தினால் நேச ராஜாங்கத்தினரை வென்று விடலாம், அவர்கள் தேசங்களுக்கு உணவுப் பொருள் வருவதைத்தடுத்து அவர்களைப்பட்டினி கிடக்கச் செய்யலாமென்று நினைத்தது பகற்கனவாய் விட்டது. ஜெர்மானியர் செய்து வரும் அக்கிரமங்களைச்சகிக்காது அமெரிக்காவும் ஜெர்மனியின்மீதுபடையெடுத்து யுத்தசன்னத்தமாகிவருகின்றது. ஐரோப்பாக்கண்டத்திலுள்ள நடுநிலைமைத் தேசங்களெல்லாம் ஜெர்மனியோடு உள்ளே பகையும். வெளியே உறவுமாக விருக்கின்றன. என் செய்யும்? சிறிய தேசங்கள் தாமே! பெல்ஜியம், செர்பியா, மாண்டிநீக்ரோ தேசங்கள் அடைந்த நிலைமையைக் கருதிவாளாக விருக்கின்றன. ஆசியாக்கண்டத்தில் ஜப்பானும், சீனுவும் ஜெர்மனிக்கு விரோதமாகி விட்டன. உலகமுற்றும் ஜெர்மனிக்கு விரோதமாக விருக்கின்றது. ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும் என்னும் முதுரை ஜெர்மனிக்கிலக்காக விருக்கின்றது. ஜெர்மனியின் அழிவுக்காலம் சமீபித்து விட்டதென்றே கூறலாம்.

ஏனைய போர்முகங்களில் தீவிரமான யுத்தம் இன்னும் ஆரம்பமாகவில்லை. எல்லாப் போர்முகங்களிலும் யுத்தம் நடக்கும்போது ஜெர்மனி செய்வதின்னதென்றறியாது விழிக்கும்படியான நிலைமையில் வந்துவிடும்.

Precepts of Life.

In the pocket book of the Honourable Stephen Allen who was drowned on board "Clay" was found a printed slip, apparently cut from a Newspaper of which the following is a copy. It is worthy to be engraved on every man's heart:—

1. Make a few promise.
2. Always speak the truth.
3. Never speak evil of any one.
4. Keep good company or none.
5. Live up to your engagements.
6. Be just before you are generous.
7. Never play at any game of chance
8. Drink no kind of intoxicating liquor.
9. Good character is above all things else.
10. Keep your own secrets if you have any.
11. Never borrow if you possibly can help it.
12. Keep yourself innocent if you would be happy.
13. Make no haste to be rich, if yon would prosper.
14. When you speak to a person look him in the face.
15. Do not marry until you are able to support a wife.
16. Ever live within your income.
17. Save when you are young to spend when you are old.
18. Never run into debt unless you can see a way out again.
19. Avoid temptation through fear you may not withstand it.
20. Good company and good conversation are the sinews of virtue.
21. Small and steady gains have a competency with a tranquil mind.
22. Your character cannot be essentially injured except by your own acts.
23. If any one Speak evil of you, let your life be such, that none will believe him.
24. When you retire to bed think over what you have been doing during the whole day.
25. Never be idle; if your hands cannot be employed usefully, attend to the cultivation of your mind.

Read over the adove maxims carefully and thoughtfully at least once a day.

சக்ரவர்த்தினி.

" கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றீண்டு வாராநெறி ".

VOL-12 தொகுதி-12 | May 1917. மே 1917. | No-10 பகுதி-10

சேமம் புகினும் யாமத் துறங்கு.

பசித்திரு, தனித்திரு, விழித்திரு என்று வழங்கப்பட்டு வருவது கவனிக்கப்படுமாயின், பசித்திருத்தலும் தனித்திருத்தலும் விழித்திருத்தலும் நம்மனோர் யாவர்க்கும் நன்மை பயப்பனவாமென்பது நன்கு விளங்குவதாம். சிறிது பசியாகவிருக்கவே உணவுண்டு வருதலும், நல்லாரோடு பழகுதல் சம்பவியாதவிடத்துத் தனித்திருத்தலும், பெருந்தூக்கங் கொள்ளாது அளவாகத் தூங்கி விழித்திருத்தலு முடையார்க்கு நோயும் பகையும் காரியக்கேடு முண்டாவதில்லையாம். விழித்திருக்கப் பழகுபவர்க்கே பசித்திருக்கப் பழகுதலும் தனித்திருக்கப் பழகுதலுங் கூடுமாகலின், நம்மனோருள் ஒவ்வொருவரும் விழித்திருக்கப் பழகிவருதல் வேண்டும். முயற்சி யில்லாதவர் என்னவென்று சொல்லப்படுகின்றனர்? தூங்குமூஞ்சி யென்றல்லவோ சொல்லப்படுகின்றனர். தூக்கத்தில் பெரும் பிரியங்கொண்டிருப்பவர் பசித்திருத்தலும் தனித்திருத்தலு முடியாமையின், அவர் புறம்பொருள் புண்ணியங்களை யடையாது வருந்த நேருதல் நிச்சயமாம்.

" நெடுநீர் மறவி மடிதுயில் நான்குங், கெடுநீரார் காமக் கலன்"—சோம்பலும், விரைந்து செய்வதனைத் தாமதித்தலுக்

செய்புமியல்பும், மறப்பும், தூக்கமுமாகிய இந்நான்கும் இறக்குமியல்பினையுடையார் விரும்பியேறும் மரக்கலமாம்" என்று தெய்வப்புலமைத் திருவள்ளுவ நாயனார் திருவாய்மலர்ந்தருளி யிருப்பதனைக் கவனித்து நோக்குவார்க்குச் சோம்பல் முதல் தூக்கமீறுயுள்ள நான்கும் ஒவ்வொருவர்க்கும்பெரும்பகையா யிருப்பனவாமென்பது நன்கு விளங்குவதாம். சோம்பலும், விரைந்து செய்வதனைத் தாமதித்துச் செய்புமியல்பும், மறதியும் யாரிடத்து நிலைபெற்றிருக்கின்றனவென்றாராய்ந்து நோக்குவார்க்கு அவை பெருந்தூக்கமுடையாரிடத்தே நிலைபெற்றிருக்கின்றனவென்பது விளங்காமற்போகாது. பெருந்தூக்கத்தை யொழித்துச் சோம்பலும் மறப்புமில்லாது விரைந்து செய்வதற்குரிய காரியத்தைத் தாமதஞ் செய்யாது செய்து வருபவர் புகழ் பொருள் புண்ணியங்களை யடைவது நிச்சயமாம். நாம் நமது ஞானத்தாயாராகிய ஔவைப்பிராட்டியார் ஆத்திசூடியில் "அனந்தலாடேல்-நித்திரையை மிகுதியாகச் செய்யா திருக்கக்கடவாய்" என்று கூறியதனோடு மில்லாது, கொன்றைவேந்தனில் "சேமம்புகினும் யாமத்துறங்கு-காவற்கூடத்திற் சென்று ஒருவேலையு மில்லாதிருந்தாலும் நீ யாமப்பொழுதிற்குப் பின்னே நித்திரை செய்யக் கடவாய்" என்று கூறியிருத்தலைக் கவனித்து நோக்குவோமாயின், அளவுகடந்து தூங்குதல் பெருந்துன்பத்திற்குச் சாதனமாமென்பது நன்கு விளங்குவதாம்.

விழித்திருக்க விரும்புகின்றவர் போஜன நியமனத்தை மிகவுங் கவனித்தல் வேண்டும். சத்துவவுணவு, அசத்துவவுணவு, அபத்தியவுணவு என்னு மூன்றுவகைகளில் சத்துவவுணவை யளவாகவுண்டு வருபவர் பசித்திருத்தலேயன்றி விழித்திருத்தற்கு முரியவராவர். மரக்கறியுணவு சத்துவவுணவாம்; மாமிசவுணவு அசத்துவவுணவாம்; வியாதியைப் பெருகச்செய்யு முணவு அபத்தியவுணவாம். ஊசிய பழஞ்சோறு, அழுகிய பழ முதலியவற்றை யுண்ணாது, எப்போதும் மிதமான வுணவைச் சிரமிக்கு மளவாக நன்றாகப் பசியெடுத்தபின் உண்டு வருபவர் பெருந் தூக்கத்திற் கடிமையாவதில்லையாம்; அவர்க்குப் பெரும்பான்மையும் வியாதி வருவதில்லையாம். போஜன நியமனத்தைக் கடைப்பிடித்து, இரவில் ஒரு யாமமானபின் சயனக்கிருகத்திற்குச் சென்று படுத்துறங்கி, சூரியோதயமாவதற்கு 5 நாழிக்கு முன்னே

யெழுந்து தாம் செய்யவேண்டிய காரியங்களைச் செய்துவருபவர் தாமடைய விரும்பிய பயனை யடையாநிற்பரென்பது நமக்கு நன்கு விளங்கியிருக்குமாயின், நாம் உறங்கும் விஷயத்தில் மிகு கவனமுடையவராக விருப்போம்.

சோம்பல், விரைந்து செய்வதனைத் தாமதித்துச் செய்தல், மறதி, துயில் என்னுமிந்நான்கும் நமக்குப் பெரும்பகையா யிருப்பனவாமென்றுணர்ந்து, இவற்றை யொழிக்க முயல்பவர் முன்னர்ப்பெருந்தூக்கத்தை யொழிக்க முயலுதல் வேண்டும். அவர் பெருந்தூக்கங் கொள்ளுதலை யொழித்துவிடுவாராயின், சோம்பல் முதலியவற்றை யொழித்தல் அவர்க்கு மிகு எளிதாயகாரியமாம். சூரியாஸ்தமான ஏழரைநாழிகைக்கு (யாமத்திற்கு)ப் பின்னுறங்கி, சூரியோதயமாவதற்கு 5 நாழிகைக்குமுன் எழுந்திருக்கும் வழக்கத்தை மேற்கொண்டு வருவது எவரிடத் திருக்கின்றதோ அவரே தாமத குணத்தால் தோன்றுவனவாய சோம்பலையும் மறதியையும் பிரயத்ன பூர்வகமாக வொழித்துத் தாம்விரைந்து செய்தற்குரிய காரியத்தைத் தாமதியாது செய்து புகழ் பொருள் புண்ணியங்களை யடைதற்குரியவரா யிருக்கின்றனர்; அவர்க்குப் பகைவருண்டாதலும் வியாதியுண்டாதலும் பெரும்பான்மையுமில்லையாம். ஔவைப் பிராட்டியார் ஆத்திசூடியில் "அனந்தலாடேல்" என்று கூறியதனோடு மில்லாது "வைகறைத் துயிலெழு-விடியக் கடவதாய காலத்தில் நீ தூக்கத்தினின்றும் எழுந்திரு" என்றும், கொன்றைவேந்தனில் "சேமம் புகினும் யாமத்துறங்கு" என்று கூறியதனோடு மில்லாது "ஒத்தவிடத்து நித்திரை கொள்—(முன் தூங்கிப் பின்விழித் தெழுதற்குத் தகுதியாய் மேடு பள்ளமில்லாது) ஒத்தவிடத்து நீ நித்திரை செய்யக்கடவாய்" என்றும் திருவாய் மலர்ந்தருளி யிருப்பதனை நாம் பெரிதுங் கவனித்தல்வேண்டும். சூரியன் அஸ்தமயமானவேழரைநாழிகை(மூன்று மணி)க்குப்பின் படுத்து, சூரியனுதயமாவதற்கு 5 நாழிக்கு (இரண்டுமணிக்கு) முன் விழித்தெழுந்திருத்தல் நமக்கவசியமான கடமையொன்றாமெனத் துணிந்து இரவில் 17½ நாழிகை (7 மணி) காலம் தூங்கும் வழக்கத்தை மேற்கொண்டு வருவோமாயின் நாமேற்கொண்ட காரியத்தைக் கிரமமாக ஆலோசித்துச் செய்தற்குத் தகுதியுடையவராவோம்; இத்தகுதி நம்மிடத்துப் பூரணமா யிருக்குமாயின், (சிறு நிழலு நிலைம்பொதிபு நெற்கட்டும் பெரும்

புகழும் பெருவாழ்வும்-ஊரும், வருந்திருவும் வாழ்நாளும் தரும் இலக்குமியினருளை நாம் செவ்வையாகப் பெறுதற்குரியவ ராவோம். இலக்குமியினருளைப் பெறுதலாவது பிணி, வறுமை, பகை முதலியனவில்லாது நெடுநாள் வாழ்தலாம்.

உணவு, செயல், உறக்கமுதலியன மிகுமாயினும் குறைவு மாயினும் நோய் செய்வனவாயிருத்தலின், நாம் அவற்றில் மிகு கவனமாக விருந்து வருதல்வேண்டும்; உணவும் செயலும் மிகு மாயினும் குறையுமாயினும் உறக்கம் தக்களவாக வில்லாது போவதாம்; போமாயின், உம்மிடத்து நோயே குடிகொண் டிருப்பதாம். இரவு 9 - மணிக்கு மேல் - 4 மணி பரியந்த முறங் கும் பழக்கத்தை மேற்கொள்வோமாயின், உணவிலும் செய லிலும் மிகுகவனமுடையவராக விருப்போம். பகலிற் றூங்கு தல், சூரியனுதயமாகுங்காலத்தில் தூங்குதல், சூரியன் மறை யுங் காலத்தில் தூங்குதல், இரவில் அளவு கடந்த நேரம் தூங்கு தல் என்னும் வழக்கமுடையவர்தாம் மூதேவி மக்கள் என்று சொல்லப்படுகின்றனர்? மூதேவிமக்கள் நன்மையடைவது கூடுமா? நித்திரை செய்வதிலேயே பிரியமுள்ளவர், சோம்ப லுடையவராயிருப்பவர், அவர் தாமெடுத்துக்கொண்ட காரியத் தைச் சிரத்தையோடு செய்து முடிக்கமாட்டாரென்பது பேருறக் கங் கொள்பவர்களைக் கவனித்து நோக்குவோமாயின் நன்கு விளங்கும்; இரவில் 7½ நாழிக்குப் பின்படுத்து, விடிய 5 நாழி கைக்கு முன் எழுந்திருக்கும் பழக்கமுடையவர் சோம்பலும் தாமெடுத்துக்கொண்ட காரியத்தைச் செய்து முடிப்பதில் அசிரத்தையுமுடையவரா யிருப்பதில்லையாம். நாம் மனத்தை யெப்போதும் நல்லவர் சகவாசத்தால் தெளிவுடையதாகச் செய்து வருவோமாயின், கும்பகர்ணன்போல் நித்திரையின் வசமாய்க் கெடாது நல்வாழ்வடைதற்குரியவராவோம்.

இரவில் படுத்துறங்கப் போகுஞ்சமயத்திலும் விழிக்குஞ் சமயத்திலும் நல்லெண்ணமுடையவராயிருக்கப் பழகிவருதலும் வேண்டும்; வந்தாற்றான், நாம் செய்யத்தக்கனவற்றைக் கிரமமாகச் செய்தற்குரியவராவோம். "வைகறை யாமந் துயிலெழுந்து தான் செய்யும், நல்லறமு மொண்பொருளுஞ் சிந்தித்து வாய்வதில், தந் தையுந் தாயுந் தொழுதெழுக வென்பதே, முந்தையோர் கண்ட

முறை" என்றும், "அந்திப் பொழுது கிடவார்" என்றும், (பாழ் மனையும் என்னுஞ் செய்யுளில்) "பகல்வளரார், நோயின்மை வேண்டுபவர்" என்றும் ஆசாரக்கோவை கூறுவதும், "புத்தி யதற்குப் பொருந்தாத் தெளிவளிக்கும், சுத்த நரம் பினற் றூய்மையுந்தும்—பத்தெட்டியும், தாவழி வாதபித்தம் தந்ததனை மன்னுமதி, காலைவிழிப் பின்றுணர்ந்தக் கால்" என்று வைத்திய நூல் கூறுவதும் நன்கு கவனிக்கப்படுமாயின், காவற்கூடத்திற்குச் சென்றும் யாமத்திற்குப் பின் உறங்குத லும் விடிதற்குமுன் னெழுதலும் ஒவ்வொருவர்க்கும் அத்தியா வசியகமான கடமையாமென்பது நன்கு விளங்குவதாம். ஆனந்த ராமாயணம் இராஜ்யகாண்டத்தில் ஸ்ரீராமர் நித்திராதேவிக்கு கீர்த்தனம், புராணச் சிரவணம், வேதபாடம், பூசை, ஜபம், தவம், தியானம், ஹோமம் முதலியவற்றைச் செய்யும் பாவிக ளிடத்தும் மூடன் பாலன் முதலியவர்களிடத்திலும் சென்று வசிக்கக் கடவாய் என்று வரங்கொடுத்தாரென்று கூறுவதை நாம் பெரிதுங் கவனித்து, நித்திரையின் வசமாகாது, அதனை நம் வச மாகச் செய்து வருவோமாயின், நல்லனவற்றை யெல்லாம் பெறு தற்குரியவராவோம். இது நிச்சயமாம்.

ஆசார மஞ்சரி.

(முன் தொடர்ச்சி)

ஒவ்வொருவரும் விடத்தக்கவை இவை யெனல்.

(90) அறிவுடையார் எப்போதும் ஒருவர் தமது தலையில் முடித்தபூவைத் தாமுடியார்; ஒருவர் மோந்த பூவையும் சூடார்; பிராமணர்கள் பசுவினைக் கொடுத்தால் அதனை யேற்றுக்கொள் ளார்; புலையர்க்கு எச்சிலுணவைக்கொடார். (முடித்தல், சூடுதல், ஏற்றல், கொடுத்தல் என்னு மிந்நான்கும் எப்போதும்) விடத்தக் கனவாம்.

மூத்தோர்முன் செய்யத் தகாதன இவையெனல்.

(91) எவரும் காட்டிலேயாயினும் தம்மினு மூத்தவரிருப் பாராயின், அவர்முன் உடம்பின் மீது போர்வையைப் போர்த்

திருத்தலும், இறுமாந்திருத்தலும், இரண்டு கால்களையும் சேர்த்திணைத்திருத்தலும் செய்தல் கூடாது; செய்வாராயின், அவை பழிபிறத்தற்கு எல்லையாம். இறுமாந்திருத்தல் - கர்வித்திருத்தல். இரண்டு கால்களையும் சேர்த்திணைத்திருத்தல் - ஒரு காலின்மீது மற்றொருகாலை வைத்திருத்தல்.

நற்கருமங்களை அந்தணரிடத்தேயே நல்லநாள் கேட்டுச் செய்யவேண்டுமெனல்.

(92) அறிவுடையார் மேலான நற்கருமங்களைச் செய்யுமிடத்து எப்போதும் புலவரிடத்து நல்லநாள் கேட்டுச் செய்வார்; தமது கருமங்களில் குறைவு படுதலில்லாத அந்தணரது வாயினின்றும் வரும் சொல் எப்போதும் தவறுவதில்லையாகலின், அவரிடத்து நல்லநாள் கேட்டுச் செய்வர்.

அந்தணர் - பிராமணர்; அதன்பொருள் அழகிய தண்மையுடையவர் என்பது. தண்மை-கருணை.

அறிவுடையார் இவைசெய்யாரெனல்.

(93) அறிவுடையார் சான்றோர் கூடியுள்ள சபையில் யாதொரங்கசேஷ்டையுஞ் செய்யார்; மாசுள்ளவற்றைத் திமிர்த்துக்கொண்டு நடவார்; எந்தச் சமயத்திலும் கடுஞ்சொற்களைக் கூறார்; இருவர் கூடிப்பேசுமிடத்துச் செல்லார். (அங்கசேஷ்டை செய்தல் முதலிய நான்கும் அவசியமாக விடத்தக்கனவாம்).

சான்றோர்-குணங்களால் நிறைந்தவர். மாசு-அழுக்கு.

ஐயமில் காட்சியவர் செயல்களிவையெனல்.

(94) ஐயமில் காட்சியுடையார் தமது குரவர் முன்பு கையைச் சுட்டிக்காட்டிப் பேசார்; காலின்மீது ஒன்றனை வைத்தெழுதார்; கல்வி கேள்வி அறிவு ஒழுக்கமுதலியவற்றை யுடையாரோடு அவை யில்லாதவரை யொப்பிட்டுக் கூறி, தாம் கூறியது உண்மையென்று சாதியார்; குரவர் தம் காத்தால் கொடுப்பனவற்றை யுட்கார்ந்துகொண்டு வாங்கார்.

ஐயமில் காட்சி-சந்தேகமில்லாத அறிவு; குரவர் - ஆசிரியர்.

பொன்போற் காக்கத்தக்கவை யிவை யெனல்.

(95) ஒருவன் தன்னுடம்பும், தன்மனைவியும், தன்னிடத்தொருவன் அடைக்கலமாக வைத்தபொருளும், தான்தன்னுயிர்க்குதவியாகவேண்டுமென்று கருதிச் சேர்த்துவைத்த பொருளுமாகிய இந்நான்கையும் பொன்னைப்போலப் பாதுகாத்து நடக்கக் கடவன்; அவ்வாறு நடவானாயின், அஃதவனுக்குப் பெருந் துன்பத்தைக் கொடுக்கும்.

இவ்விவ்வாறொழுகுவாரிடத்து ஆசார மிருக்குமெனல்.

(96) தனது ஆக்கத்தை விரும்பும் எறும்பும், தூக்கணாம் பறவையும், காக்கையும் என்னுமிவற்றின் செய்கைகளைப்போல தன்மை தருவனவாகிய தமது கருமங்களைச் சோர்வில்லாது மேற்கொண்டு தமது கருமங்களை அவற்றின் தன்மைபோல முயன்று செய்து வருபவரிடத்து ஆசாரமானது எல்லாவகையாலும் சிறப்புற்று விளங்கும்.

ஆக்கம் - விருத்தி; தூக்கணம் பறவை - தூக்கணாங்குருவி; ஆசாரம் - இல்லறவொழுக்கம்.

இல்லறத்தார்: எறும்பு கிடைக்காத காலத்தில் தனக்கு உதவியாமாறு கிடைத்தகாலத்திலே உணவைச் சேர்த்து வைப்பது போலக், கிடைக்காத காலத்தில் தமக்குதவியாமாறு கிடைத்த காலத்தில் உணவிற்கு வேண்டியவற்றைச் சேர்த்துவைத்துக் கொள்ளுதல் வேண்டும்; தூக்கணம்பறவை குளிர் காற்று முதலியவற்றினின்றும் தன்னைப் பாதுகாத்துக் கொள்ளுதற் பொருட்டுக் கூடுகட்டிக் கொள்ளுதல்போலக் குளிர்காற்று முதலியவற்றினின்றும் தம்மைப் பாதுகாத்தற் பொருட்டு வீடுகட்டிக்கொள்ளுதல் வேண்டும்; காக்கை தன்னினத்தைக் கூவியழைத்து அவ்வினத்துடனே தனக்குக் கிடைத்தவுணவை யுண்ணுதல்போல உறவினரை யழைத்து அவருடனே தமக்குக்கிடைத்த உணவை உண்ணுதல்வேண்டும்; இவ்வாறொழுகுவாரிடத்து ஆசாரம் சிறப்புற்று விளங்கு மென்பதாம்.

பெரியாரிடத்துச் சொல்லும் கிரமத்தைக்கூறல்.

(97) அறிவுடையார் பெரியாரிடத்து யாதேனு மொன்று உரைக்க நேர்ந்தால், வணங்கிநின்றேனும் கையால்வாய்புதைத்து நின்றேனும் அதனை உரைப்பாரேயல்லாமல், வேறுவகையாகவுரையார்; அவர் முன்பழிவராது உள்ளே யாராய்ந்து உரைப்பார்.

சூதாடுதல் முதலிய விடங்களிற் செல்லுதல் கூடாதெனல்.

(98) பேதைமையில்லாதவர் சூதாடு மிடத்திலும் ஆரவாரம் மிக்கவிடத்திலும் செல்லமாட்டார்; செல்வாராயின், அவர்க்கது துன்பத்தைத் தருவதாம்.

பேதைமை - செய்யத்தக்கது இது,செய்யத்தகாதிது என்றுணராமை; ஆரவாரம்-பேரிரைச்சல்.

நடுக்கற்றகாட்சியார் செயல்களிவையெனல்.

(99) நடுக்கற்ற காட்சியுடையார் ஆரவாரஞ் செய்யுமிடத்திலும் மடைப்பள்ளியிலும் பெண்கள் வசிக்குமிடத்திலும் நோக்கிச் செல்லார்; (தம்மை யாருக்கென்றுபசாரமாகக் கூறல்) எடுத்து அழையாதவர் வீட்டிலும் செல்லார். ஆரவாரஞ் செய்யுமிட முதலியவற்றில் செல்லுதலை யொவ்வொருவரும் விடுதல் வேண்டும். நடுக்கற்றகாட்சி - சோர்விலாத அறிவு; மடைப்பள்ளி - சமையலறை.

ஆசாரமில்லாதவரிவரெனல்.

(100) குறிப்பிட்டறியமுடியாத தேசத்தான், வறியவன், மூத்தவன், சிறுவன், இறந்தவன், பயமுற்றிருப்பவன், உணவுண்பவன், இராஜாங்க காரியத்தில் தலைமையாயிருப்பவன், கலியாணப்பிள்ளையென்னும் ஒன்பதின்மரும் ஆராய்ந்துரைக்குமிடத்து உண்மையான ஆசாரமில்லாதவராகத் தோன்றுவர்.

வறியவன்-கல்விச்செல்வம் அல்லது பொருட்செல்வமில்லாதவன்; மூத்தவன்-கிழவன்; உணவுண்பவன்-பெருணவுகொள்பவன்.

முற்றிற்று.

Special to the "Chakravarthini".

கிரீக் தேசத்துப் பீமசேனன் கதை.

பீமசேனனும் பொன் மாம்பழங்களும்.

(முன்தொடர்ச்சி)

இவன் காடு, மலை, வனம், நீர்ப்பரப்பு முதலியவெல்லாம் கடந்து போய்க்கொண்டிருந்தான். அப்படிப்போகும்போது தன் கையிலிருந்த பெருந்தடியைச் சுழற்றி, தேக்கு முதலிய பெருமரங்களின் பெரிய கிளைகளை அடித்து ஓர் அடியாலேயே முறித்துத் தள்ளினான். இவ்வாறு செய்துகொண்டு போகும்போது சமுத்திரத்தின் இரைச்சலைக் கேட்டான். கேட்ட மாத்திரத்தில் அது அருகில் இருக்கிறதென்று நினைத்தான். சீக்கிரத்தில் கடற்கரையை அடைந்தான். அங்கே பெரிய அலைகள் வெண்ணுரையாக நுரைபோடு கரையிலுள்ள மணற் பாங்கின்மேல் வரிசை வரிசையாக இருந்தன. அங்கு ஒரு பக்கத்தில் ஒரு சௌக்கியமான இடம் இருந்தது; அதில் பசுமையான புற்கள் நிறைந்த செங்குத்தான பாறையுண்டு. புற்களின் பசுமையால் அந்தப் பாறையின் பக்கங்கள் மிருதுவாக இருப்பதாகவும் அழகாகவும் காணப்பட்டன. அங்கே பீமசேனன் என்ன பார்த்தான்? ஒரு கிழமனிதன் செவ்வையாகத் தூங்குவதைப்பார்த்தான். அவன் கிழமனிதன்தானா என்ற ஓர் ஐயமும் அவன் மனதில் தோன்றினது. இதற்குக் காரணம் அவனது முதல் பார்வைக்கு அங்குத்தூங்குகின்றவன் கிழமனிதனைப்போலக் காணப்பட்டான். ஆனால் மறுபடியும் பார்க்கும்போது அவன் சமுத்திரத்தில் வசிக்கின்ற ஒரு ஜந்துவைப்போல் பீமசேனன் கண்ணுக்குத் தோன்றினான். இதற்குக் காரணம் அவனுடைய கால்களிலும் கைகளிலும் மீன்களுக்கு இருக்கிறதுபோல் செதிள்கள் இருந்தன. அவனுடைய பாதம் வாத்தின் பாதங்கள்போல் இருந்தன. அவனுடைய நீண்டதாடி சமுத்திரத்தின் நாணல்புல் கற்றைப்போல இருந்தது.

ஆனால் பீமசேனன் இவனைப் பார்த்த மாத்திரத்தில் சமுத்திரக் கிழவன் வாஸ்தவத்தில் இவன்தான் என்றும், பொன் மாம்பழங்கள் கிடைக்கக்கூடிய தோட்டத்தைத் தனக்குக்காட்டக்கூடியவன் இவனே என்றும் தீர்மானித்தான். பீமசேனன் அவ

ளிடத்து மெதுவாக வந்து அவனது கையையும் காலையும் பிடித்துக்கொண்டான். அவன் செவ்வையாக விழித்துக் கொள்வதற்கு முன்னமே அவனைப்பார்த்துப் பொன் மாம்பழங்கள் கிடைக்கக்கூடிய தோட்டத்திற்கு வழியைத் தனக்குக் காட்டும்படிக்குக் கேட்டான். கிழவனிதன் அவனைவிட்டு விலகிப்போகப் பிரயத்தனப்பட்டான். பீமசேனன் அவனை உறுதியாய்ப் பிடித்துக்கொண்டிருந்தபடியால் அவனது பிரயத்தனம் வீணாயிற்று.

உடனே அக்கிழவன் பீமசேனனை நோக்கி, "உனக்கு என்னிடத்தில் என்ன வேண்டும்? என்னை ஏன் இவ்வளவு கெட்டியாய்ப் பிடித்திருக்கின்றாய்? என்னைவிடு; யான் உடனே போகவேண்டும்" என்று சொன்னான். இதற்கு விடையாய்ச் சத்தமிட்டு "என்பெயர் பீமசேனன்; பொன் மாம்பழத் தோட்டத்தின் குறுக்குவழியை நீ சொல்லும்வரை நீ என்னைவிட்டுப் போகமுடியாது" என்று சொன்னான்.

பீமசேனனின் சரீர வல்லமையையும், அவன் அடிக்கடி செய்த பெரும் அற்புதங்களையும் இவன் முன்னமே கேட்டிருந்தான்; ஆகையால் அவன் இன்னானென்று சொல்லக் கேட்ட மாத்திரத்தில், அவனைவிட்டுப் போவதற்குச் செய்யும் பிரயத்தனம் வீணாகுமென்று தெரிந்து கொண்டான். உடனே பொன் மாம்பழத் தோட்டத்தைக் கண்டுபிடியும் விதத்தையும், அங்கே போகும் வழியில் உள்ள அபாயங்களையும் சொன்னான்.

மேலும் அவனுக்கு "ஆகாயத்தைத் தோள்களில் தாங்கிக் கொண்டிருக்கிற ஒருபெரிய ராட்சசனைக் காணும்வரை நீ இவ்வாறு போகவேண்டும். அந்த இராட்சசன் நல்ல சந்தோஷமான மனதோடிருக்கும்போது நீ அவனைப் பிடிப்பாயேயானால், அவன் அந்தத் தோட்டமிருக்கிற இடத்தைக் குறிப்பாக உனக்குச் சொல்லுவான்" என்பதையும் சொன்னான்.

உடனே பீமசேனன் தன் கையிலிருந்த பெருந் தடியைச் சுழற்றி, தன் கைவிரல் முனையில் அதை நிறுத்தி விளையாடிக்கொண்டு கிழவனைப்பார்த்து, "அவ்விராட்சசன் நல்ல மனதோடு இராமல் இருக்கும் பட்சத்தில் அவனை சுமனம் பெறும்படிக்குச்செய்ய ஒருவழி யான் அறியவேண்டும் அல்லவா!" என்று கேட்டான். அதற்கு ஒரு நல்ல உபாயம் அவன் சொன்னான்.

உடனே இச்சமுத்திரக் கிழவனுக்குப் பீமசேனன் வந்தனம் கொடுத்துவிட்டுப் போய்விட்டான். பல வனங்களின் மூலமாயும் தன்னால் கூடிய வேகமாய் நடந்தும் போய்ப் பெரிய சமுத்திரக் கரையைச் சேர்ந்தான். இங்கே நுரையுள்ள ஆழமான பெரிய கடல்தவிர வேறொன்றும் கண்ணில் காணப்படாமையால், அங்கே அவனுடைய வழி முடிவடைந்ததுபோலத் தோன்றினது. ஆனால் தலை தூக்கிக் கண்போகிறவரைக்கும் தூரத்தில் அவன் பார்த்தபோது, வெகு பிரகாசமாயிருக்கும் ஏதோ ஒன்றைப்பார்த்தான். கடைசியில் அது மிக அருகில் வந்தது; அது நன்றாகப் பிரகாசிக்கும் பித்தளையால் செய்யப்பட்ட ஒருவட்டில்போன்ற தெப்பத்தையும் பார்த்தான்; அது மிகப்பெரியது; அது பித்தளையால் செய்திருந்தபோதிலும், இறகுதும்பு நீர் நுரையில் மிதப்பதுபோல் அந்த அலையின்மீது மிதந்து வந்தது; பீமசேனன் நிற்குமிடத்தருகே நின்றது.

அவன் அதை என்ன செய்வதென்று தெரிந்து கொண்டான். அவன் சமுத்திரத்தைக் கடந்து தோட்டத்திற்குப் போகவேண்டுமென்று எண்ணிய யாரோ ஒருவரால் இது அனுப்பப்பட்டிருக்கிறதென்பது நன்றாய்த் தெரிகிறது.

உடனே பீமசேனன் அதன்மீது குதித்து அதிலுள்ளே மெள்ள கீழே இறங்கி, அங்கே தனது சிங்கத்தோலைப் பரப்பி, படுத்து நன்றாய்த் தூங்கிவிட்டான். (வரும்).

வ. ஆறுமுக செட்டியார், சென்னை.

நட்பில் பிழைபொறுத்தல்.

உறவுகொண்ட ஒருவன் பொறுக்கலாகாத காரியத்தைச் செய்து விடுவானாயினும் அவனையல்லாமல் நேரிட்டகுற்றமென்று எண்ணி அதைக்குறித்து வருந்தாமல் பொறுத்துக்கொள்வோர் நல்லோர் என்பது நட்பில் பிழைபொறுத்தலாம்.

ஒருவனை நல்லகுணவானென்று நினைத்து விரும்பி நட்புக் கொண்ட பின்பு அவனிடத்து ஒரு பண்பாடு மில்லாதிருந்தாலும் ஒருதரம் நட்புக்கொண்டபடியினாலே அவனைக்கைப்படுத்தித் தமக்குச் சார்பாகக்கொள்ள வேண்டியதேயல்லாமல் அவனது

அபிப்ராயமதை வெளியிட்டுப் பேசலாகாது. அஃதெப்படியெனில், நெல் உமியையும், நீர் நுரையையும், புஷ்பம் புல்லிதழையும் தங் தம் நற்குணத்தால் தழுவிக்கொண்டிருப்பது போலவாம்.

அணையினுலே கட்டப்பட்டிருக்கும் ஜலம் அவ்வணையை உடைத்துக்கொண்டு போய்விடுமாயின் அதற்காக ஜனங்கள் அது விட்டுப் பிணங்கிக் கொண்டிருப்பார்களோ? இரார்கள்; ஏனெ னின், அந்த ஜலம் சகலப்ராணிகளுக்கும் ஜீவாதாரமாயிருக்கிற படியினுலே அதைப்போக வொட்டாமல் மறுபடி அணைபோட் டுக் கட்டிக்கொள்வார்களல்லவா? அதுபோலவே ஒருவனை வருந்தி நட்புக்கொண்ட பின்பு அவன் வெறுக்கும்படியாய்ப் பேசி ஞலும் பொறுத்துக்கொள்ள வேண்டியதே நட்பாளருக்குக் கட மையாம்.

நட்புக்கொண்ட ஒருவன் பொறுக்கத்தகாத ஒருகொடிய பொல்லாங்கைச் செய்தாலும்ஒருகால் நட்புக்கொண்டபடியாலதை நாடிப் பொறுத்தல்வேண்டும். இல்லாவிடில் நட்பு நீடித்திருப்பது கடினம்.

ஒருவன் தனக்குப் பொல்லாங்கு செய்வோனை ஸ்நேஹனாக வுடைத்தாயிருந்தால் அவன் செய்த பொல்லாங்கைப் பொறுத்துத் தனக்குள்ளே யடக்கிக்கொள்ள வேண்டுமேயல்லது அதற்காக அவனை விட்டுவிடலாகாது; எப்படியெனில், எல்லாப்பொருள்களை யும் பஸ்மமாக்கும் அக்னியைக்கூட அதன் ஜ்வாலையை மிதப் படுத்தி ஜனங்கள் தங்கள் வீட்டுக்குள்ளடக்கி வைத்துக்கொள் ளுந் தன்மை போலேதான்.

ஒருவன் தன்கை விரல் தன் கண்ணிற்பட்டதென்று அதைத் தறித்து விடுவானே? அதுபோல ஒருவனும் தன்னிடத்தில் நட் புக்கொண்டவர்கள் பொல்லாங்கான காரியத்தைச் செய்தாரென்று அவர்களை விட்டுவிடலாகாது. விட்டுவிட்டால் உலகம் பழிக்கும். இதற்குப்ரமாணம், "கூடிப்பிரியேல்" என்று ஔவை சொல்லிய நீதியை விட வேறு வேண்டுமோ?

நல்லவர்களையே நல்லவர்கள் ஸ்நேஹிக்க வுடன்படுவார்கள். அப்படி ஸ்நேஹித்த பின்பு காலதேச வர்த்தமானத்தா லவர் களால் தமக்குப் பொல்லாங்கு நேரிடுமாயி னதைத் தமக்குள்ளே யடக்கிக் கொள்வார்களே யல்லாமல் வெளியிட்டுப் பேசார்கள்.

[illegible] வெளியிட்டுப் பேசுவார்களாயின் அவர்களுக் [illegible] வார்கள். ஆதலாலதை மறந்துவிட வேண்டும்.

தன்னுலே காதலிக்கப்பட்டவர்கள் செய்த காரியம் பிராண ஹானிக்கு அபாயத்தைக்கொண்டு வரும்படியானதாக விருந்தாலும் அதைப் பொறுத்துக்கொண்டு அவர்கள்செய்த குற்றத்தை மன் னிக்கவேண்டும். மன்னிக்காமல் அதை வெளியிட்டால் அச் சேர்க்கை [illegible] தொடர்ந்து தீமை செய்யுமென்று நூற்றேர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

ஆதலால் [illegible] கூடிய [illegible] யும் பெரியோர் [illegible] நட்பை யுடையவர் கள் [illegible] குற்றங்களையும் நட்பாளர் பொறுத்துக்கொள் ளவேண்டும்.

தீ நட்பு.

ஒருவனுக்கு [illegible] காலத்தில் ஸ்நேகத்தை மறந்தும், செல்வம் வந்தபொழுது பழமை பாராட்டி உறவு செய்கின்றவ ரும் முகநட்பாளரே யல்லது உண்மையானவர்களல்ல. [illegible]

குணமில்லாதவர்களுடைய நட்புக்கொருபோதும் இடங்கொ டுக்கலாகாது; ஒருவேளை அகஸ்மாத்தாய் அப்படிக்கொத்த நட்பு நேரிட்டு விருத்தியாகுமாயின் அதனுலே அவர்கள் செய்யும்கொடு மைக்குத் தாமுமுட்பட்டு ஆபத்தாகிய துன்பத்தை யடைய வேண்டும். ஆதலால் தீநட்புக் கிடங்கொடுக்கலாகாது.

ஸஜ்ஜனராகிய நல்லோருக்குத் தீயோருடைய ஸஹவாஸம் பொருந்தாது. ஒருவேளை அபூர்வமாக நேரிட்டிருந்தாலும் அத ஞல் தீங்குண்டாகுமென்கிற அச்சத்தால் அவர்கள் பின்னப்பூச்சி போல ஒட்டியு மொட்டாமலுமிருந்து நீங்கிவிடுவார்கள்.

நல்லோர்களுடைய நட்புப் பலன்களையுங் கொடுக்குமென் பதை யுணர்ந்த தீயோர் அவர்களோடு ஏன் நட்புக்கொள்ள விரும்புகிறார்களென்றால், அவர்களுக்கு அறிவு சோர்வுபடுங் கா லத்தில் அவர்களுடைய பொருளை அபகரிப்பதற்குத் தான்.

பிறனாலே பலதரம் பல நன்மைகளைப்பெற்று அதை மறந்து அவனுக்கு நேரிட்ட துன்பத்திலிருந்தானாக அவனைக் காப்பாற்றாமல் கெடுதி செய்வோன், நிஷ்டூரனில் தலைமையானவனென்று சொல்லப்படுவான்.

அறிவுடையவன் ஒருவனிடத்துப் பகைமை மேற்கொண்டிருந்தாலும் அவனுக்கு ஆபத்துவந்த விடத்து உதவியைச் செய்யாமலிருந்தாலும் கெடுதியைச் செய்யப்பார்க்கப்படான்; அறிவிலானோவெனில் மிகுதியான பலனை ஒருவனாலே யடைந்திருந்து மறந்துவிடாமல் அபகாரத்தைச்செய்ய உடன்படுவான்; ஆதலால் அறிவிலானுடைய உறவைப்பார்க்கிலும் அறிவுடையவரது பகையினும் பலனுண்டென்று சொல்லப்படுகின்றது.

மிகுந்த ஸ்நேஹ நெருக்கத்திலே பேதமின்றி விரும்பிக் கேட்கும் காரியத்தை எளிதில் நிறைவேற்றிக் கொடுக்க இடமுண்டாயிருந்தாலும் த்ரவ்யாசையால் அதை மற்றொருவனுக்கு அதிக லப்பிக்கிறிக் கொடுப்பான் பொருத்தமுள்ள ஸ்நேஹனாக விருந்தபோதிலும் அவன் ஸ்நேஹத்தை அப்பொழுதே விட்டு நீங்கியிருக்க வேண்டியதே தர்மமென்று சொல்லியிருக்கின்றது.

தொழில் செய்வதினிடத்துப் பகையாகவும், வசனிப்பதினிடத்து நட்பாகவுமிருக்கின்றவனது நட்பு நினைவிலே மாத்ரமல்ல; கனவினுந் துன்பஞ் செய்யுமென்பதற்கு ஐயப்பட வேண்டியதில்லை.

தனித்த விடத்தில் மேல் விழுந்து உறவு பாராட்டியும் பலர் கூடியவிடத்தில் உரிமையில்லாத அன்னியனைப்போலக் குறிப்பித்துக் கொண்டிருப்போனது நட்பை (பிணிக்கு மருந்தூட்டி நிவர்த்தி செய்வது போல) நிவர்த்திசெய்து விடவேண்டியது.

ஆதலால் நன்மையைத் தாராத தீயோருடைய சேர்க்கையால் விபரீத முண்டாகுமென்று நினைத்து அத்தீயஸஹவாஸத்தை விட்டு நீங்கியிருத்தல் வேண்டும்.

பக்தி.

(முன் தொடர்ச்சி)

இனி எந்த உத்தேசத்தினால் குரு சிஷ்யனுக்கு உபதேசிக்கின்றார் என்று பார்த்தல்வேண்டும். இதுதான் குருவின் மூன்றாவது இலக்ஷணமாம். குரு திரவியத்தை விரும்பியோ புகழை விரும்பியோ அல்லது சுயநலத்தின் பொருட்டு வேறு யாதேனுமொன்றை உத்தேசித்தோ, உபதேசஞ் செய்யற்க; மனிதரிடத்து முழுமையுள்ள பிரேமத்தினால் மாத்திரம் அவர் பிரவர்த்திக்கவேண்டும். பிரேம மாத்திரத்தினாற்றான் ஆத்மோபதேசஞ் செய்தல் வேண்டும். திரவியம் வேண்டுமென்னும் ஆசை, புகழ் வேண்டுமென்னும் இச்சை முதலிய அயலவற்றைக் கருதிய உத்தேசத்துடனாயின், யாவும் குறைப்பாடுடையனவாம்; கடவுள் பிரேமை வடிவினராவர். அங்ஙனமேயும் குரு மாத்திரந்தான் மனிதருக்கு ஆத்மோபதேசஞ் செய்யத் தகுதியுடையவராவர்.

உபதேஷ்டாவினிடத்து இத்தகைய குணங்களெல்லாம் பூர்த்தியாக விருக்கின்றனவென்று அறிந்தபின்னர் நீங்கள் ஒன்றற்கும் பயப்படவேண்டுவதில்லை; இத்தகைய குணங்கள் குருவினிடத்து இன்றாயின் அவனது உபதேசத்தை அங்கீகரிப்பதில் கவனம் வைத்தல்வேண்டும். ஏனெனின் அத்தகையனுக்கு நம்மிடத்து நன்மையை வளரச்செய்யக்கூடாது. அன்றியும், அவன் நம்மிடத்துத் தீமையையும் வளரச்செய்வன். ஆகையினால் இத்தகைய தோஷத்தைக் கவனித்தல் அத்தியாவசியமாம்.

« ஶ்ரோத்ரியோ வ்ருஜினோ காமஹதோ யோ
ப்ரஹ்மவித்தம: »

பொருள்:—வித்வானும், பாபமற்றவனும், காமமுதலிய தோஷங்கள் பற்றாதவனுமாகிய புருஷன்தான் உத்தமனாகிய பிரஹ்மக்ஞானி"

முற்புகன்றவையால் நமக்கு ஆத்மஞானம் கிடைப்பதற்கும், பக்தர்களாவதற்கும், எல்லாவிடத்திருந்தும், எல்லாமனிதரிடத்திருந்தும் ஆற்றலுண்டாவதின்றாம். "பிரகிருதியில் நமது நாற்புறமும் காணப்படும் நதி தடாக முதலியன, பர்வதங்கள் அன்றியும் மற்றும் சகல பதார்த்தங்களும் நமக்கு ஈசுவரதத்துவத்தை யுபதேசிக்கின்றன. அவை ஆத்தியாத்மிகமாகிய விஷயங்களை,

விளக்கும் புஸ்தகங்களின் ஸீமையாகும். அவற்றிலிருந்து நாம் பல உண்மைகளை யறிந்துகொள்ளக் கிடக்கின்றது." என்றும் மற்றுமுள்ள சில அழகிய ஏற்பாடுகள் மிகவும் நன்றாயிருக்கின்றன. அவையெல்லாம் நல்லவைதாம்; ஆனால் தனக்குத்தானே அறிவு தெளிந்து ஞானத்தை யடையாத ஒருவனால், பிறர்க்கு ஞானோபதேசஞ்செய்ய ஒரு சிறிது மியலாது. என்றால் இயற்கையாகக் காணப்படும் பொருள்கள் எவருக்குக் குருவாய்த் தோன்றுகின்றன? மனத்தெளிவை யடைந்து ஆத்ம ஞானோபதேசத்தைப் பெற்றுக்கொள்ளத் தகுதியான ஆத்மாவிற்கவைகளெல்லாமின்றியமையாதன. தன்னிடத்துள்ள ஆன்ம ஒளியை விளக்கச் செய்வதான வல்லமை அறிஞான ஆசிரியரிடத்திலிருந்து வரவேண்டியதாயிருக்கின்றது. இவ்வாறு மனத்திற்குத் தெளிவு வந்து ஞானோபதேசத்திற்குத் தகுதியடைந்தால், பிறகு அந்த மனத்திற்கு உலகத்திலுள்ள எல்லாப் பொருள்களும் குருமயமாகவே தோன்றும் ‡. எனவே, கலங்கிய மனத்தர் உலகுமுழுவதிலுந் தோன்றும் எப்பொருளினும், யாதொரு விசேஷத்தையுங் காண்பதில்லை. ஒரு குருடன் மிக அழகிய பொருட்காட்சிச் சாலைக்குப் போனால், அவன் அங்குச்சென்றதால் எத்தகையதொரு பயனையு மடைவதில்லை; முதலாவது கண்தெரியவேண்டும்; அப்பொழுது மட்டுந்தானே அங்குள்ள பொருள்களை யெல்லாமவன் கண்டு அவற்றைப்பற்றி யெல்லாம் அவன் நன்கறிந்துகொள்ள முடியும். அறிவுத்தேட்டத்தில் முயன்றவனுக்கு ஞானக்கண் திறந்துவிடுபவரே ஆசிரியர்-குரு-எனப்படுவார். ஆதலால் எங்களிடம் ஆசிரியனுக்கும் மாணவனுக்குமுள்ள பற்று - ஸம்பந்தமானது தந்தைக்கு மகனுக்கு முள்ளது போன்றதாகும். ஆசிரியனிடத்து மாணவனுக்குப்-பக்தி, விச்வாஸ-பேரன்பும், நேசமும், இப்படித்தும் இல்லாவிடில் அவனுக்கு ஆத்மஞான முண்டாவதில்லை. எந்த "குருசிஷ்ய" ரிடத்து மேற்சொன்ன குணங்கள் பொருந்தியிருக்கின்றனவோ அங்குமட்டுந்தான் உண்மைஞானம் விளங்கும்; அங்கிருந்து மட்டுமே மஹாஞானிகளுண்டாகின்றார்கள். இந்த-உயர்ந்த-ஏற்பாடுகளில்லாத பிறநாடுகளில் ஆசிரியர் ஒரு வெறும் ப்ரஸங்கிப்பவரைப்போலிருந்துகொண்டு தனக்குக்

‡ ஸ்ரீபாகவதம் 11வது ஸ்கந்தம் அவதூதர் 24 குருக்கள்மார் என்ற பாகத்தைப்பார்க்க!

கூலியை விரும்பி வேலைசெய்கின்றார்கள். மாணவன் அவர்கள் விரும்பிய கூலியைக்கொடுத்து அவர்கள் சொல்வதை யெல்லாந் தனது மண்டை (மூளை)யில் நிறைத்துக்கொள்கின்றான். பிறகு முடிவில் இருவரும் பிரிந்து அவரவர் வேலையை நோக்கிப்போய் விடுகின்றார்கள். இவற்றால் ஆத்மஞானமுண்டாவதற்கு இடமேயின்றிப் போய்விடுகின்றது. ஒழுங்காக உபதேசிக்கு மாசிரியனுமில்லை; அதன்முறைப்படி பெற்றுக்கொள்ளும் மாணவனுமில்லை; கடவுளிடத்துப்பேரன்பு செலுத்துவதை அவர்கள் தங்களுக்குள்ள பலவேலைகளைப்போல (ஸாதாரணமான) ஒருவேலையாகவே எண்ணுகின்றார்கள். அது பணத்தினால் கிடைத்துவிடக் கூடியதென்று அவர்கள் பிழைபடக் கருதுகின்றார்கள். மெய்ப்பொருளறிவும் (-பரமார்த்தஞானமும்), கடவுளிடத்துப் பேரன்பும் (ஈச்வரபக்தியும்) இவ்வளவு எளிதில் கிட்டுவதாயிருந்தால் அடைந்துவிடலாமென்ற விருப்பத்தோடுகூட யானெப்பொழுதுங் கடவுளை வேண்டுகின்றேன்! ஆனால் எந்தத்துரதிருஷ்டத்திலோ அஃது அவ்வளவு எளிதிற்கிட்டுவதாகத் தோன்றவில்லை.

மிக உயர்ந்த-ஈடற்ற-தான இந்த ஆத்மஞானமானது விலைக்குக்கிடைப்பதில்லை; புஸ்தகங்களிலிருந்து வருவதில்லை; நாட்டிலுள்ள எல்லாப்பொருள்களையு மாராய்ந்து நோக்கினும்-எங்கெல்லாந்தேடினும்-அதையடைய முடிவதில்லை; உங்களுக்குமனந்தெளிவெய்தி நல்லாசிரியரை - சத்குருவைக் - கண்டுபிடிக்கும் வரையில் அதனையடைய முடியாது. அவ்வாறு நல்லாசிரியரைக் கண்டுவிட்டால் உடனே அவரை ஸாஷ்டாங்கமாய் வணங்கவேண்டும்; அவரை அளவற்ற பேரன்புடன் நேசிக்கவேண்டும்; அவரிடத்து உனது குறைகளை யெல்லாம் ஒன்றுமொளிக்காது, உள்ளதுள்ளபடியே வெளியிட்டுச் சொல்லவேண்டும்; அவரைக் கடவுளாகவே கருதவும் வேண்டும். இவ்வண்ணம் மெய்ப்பொருளையறிய மிகுந்த ஆவலோடும் அன்போடுங்கூடி ஞானோபதேசத்தை வேண்டிக் குருவினிடத்து வருகிறவனுக்குக் கடவுளே அக்குருவடிவத்திற்றோன்றி அவர் வாயிலாக மெய்ப்பொருளான "ஆத்மஞானோபதேசத்தை நன்குவிளக்கியருள்கின்றார்.

ஏழைப்பையன்.

சுந்தரேசனுக்கு வயது ஆறு; இன்னும் நன்றாக நடக்கத் தெரியாது. சுதாவண்டிகளிலும், வேலைக்காரியின் இடுப்பிலும் இருக்கிறவனுக்கு எங்ஙனம் சீக்கிரமாக நடையில் பழக்கம் ஏற்படும்? ஆயினும், அவனை எல்லாரும் முதலியார் என்றே கூப்பிடுவார்கள். அவன் ஒரு பெரிய வீட்டுப்பிள்ளையல்லவா? ராய்-பகதூர் சோமசுந்தர முதலியாரின் குமாரன். தலையிலே சரிகைக் குல்லாய்; காலில் மேல்நாட்டுப் பாதரக்ஷைகள், பையன் சோமன் கட்டி அறியான். அதனால் சிலர் துரையென்றும், பலர் முதலியார் என்றும் சொல்லுவார்கள். அவன் நாகரிக நடையிலே பழகுவதற்கு, ஒரு சட்டைக்கார ஸ்திரீ அவனுக்கு ஆயாளாக அமர்த்தப்பட்டிருந்தாள். "அங்குச்செல்லுதல் கூடாது, இங்குச் செல்லுதல் அசௌகரியம், வீதியில் நிற்றல் தகாது, மண்ணைத்தொட்டு விளையாடுதல் கூடாது, நடந்துபோதல் கூடாது" என்று அவள் ஓயாமல் அவனுக்குச் சொல்லிக்கொண்டிருப்பாள். ஆயாள் தொந்தரவும், சிப்பாய்த்தனங்களும் பையனுக்கு அருவருப்பை உண்டாக்கின. அவற்றை அவனும் சகிக்கமுடியவில்லை. "இவேளை நான் அப்பாவைப்போல பெரியவனாக இருந்தால் இந்த ஆயாள் சொற்படி நடக்கவேண்டிய இல்லையே" என்று நினைப்பான். இந்தக் குழந்தைப் பிராயம் ஸ்வதந்திரமில்லாத ஜீவியம் அவனுக்குப் பிடிக்கவில்லை.

மற்றக் குழந்தைகளைப்போல அவனுக்கும் ஒரு தாயுண்டு. சுந்தரேசன் தாயார் மிகவும் பால்யம்; அழகுடையவள்; பட்டுப் புடவைகள் தாம் கட்டுவாள். "பார்ஸி" வகுப்பு ஸ்திரீகளைப்போல உடுத்திக்கொள்வாள். பையன் காலையில் ஒருதரம் மாலையில் ஒரு தரந்தான் தாயாரைப் பார்க்கமுடியும். காலையில் அவன் தூங்குகையில், அவள்வந்து அவனுக்கு ஒரு முத்தங்கொடுத்து எழுப்புவாள். அவன் சரியாக விழித்துக்கொண்டு தாயைக் கட்டிக்கொள்ளக் கைகளைத் தூக்குவதற்குமுன், அவள் போய்விடுவாள். என்ன செய்வான்? பாபம்! அவளுக்கு ஒழிவேயில்லை. இரண்டொரு நிமிஷங்கள் தாம் குழந்தையைப் பார்க்கமுடியும். பகல் முழுதும் எவ்வளவோ வேலை. வீட்டுவேலையன்று; அதற்கு வேண்டிய பரிசாரகர்கள் இருக்கிறார்கள். வெளிவேலை; அவள் செல்லும் இடங்களுக்கெல்லாம் பையனைக் கூட்டிக்கொண்டு

போதல் பெரியவர்களுக்கு அழகன்று - அநாகரிகம்; தையற்கடை, ஜவுளிக்கடை, உயர்ந்த சாப்பாட்டுக்கடை, சங்கங்கள் முதலிய இடங்களில் குழந்தைகள் செல்லுதல் கூடாது. இரவில் நாடகம் பார்க்கப்போகும் சமயம் குழந்தைகளுக்கு நித்திரைக்காலமல்லவா? அங்கும் கூட்டிக்கொண்டு போகிறதில்லை. மேல்நாட்டு ஸ்திரீகளைப் பார்த்துக் கற்றுக்கொள்ள வேண்டிய விஷயங்கள் பலவிருக்க, நமது ஸ்திரீகள் அவர்களது ஆசாரங்களை மாத்திரம் கைப்பற்றிக்கொள்ளுகிறார்கள். அவர்கள் குழந்தைகளுக்குப் பால்கொடுக்கிற வழக்கமில்லை. யந்திரத்தைப்போல குறிப்பிட்ட நேரத்தில் தான், குழந்தைகளைப் பார்ப்பார்கள். அந்த வழக்கங்கள் நமது சுந்தரேசன் தாயாரைப் பற்றிக்கொண்டன.

இக்காரணங்கள் பற்றி சுந்தரேசனுக்கு, தெருவில் ஆயாளில்லாமல், யதேச்சையாக விளையாடிக்கொண்டிருக்கும் சிறு பிள்ளைகளின் அந்தஸ்து மேன்மையாகத் தோன்றிற்று. உலாவப் போகும் இடத்தில், மிகவும் ஏழையான தாய் ஒருத்தி தரையில் உட்கார்ந்துகொண்டு ஏதோ கையல் வேலை செய்துகொண்டிருந்தாள்; அவளுடைய மகன், இவன் வயதுடைய ஒரு பையன்; ஒரு சாமான்கூட இல்லாமல், தரைமீது தனியாக விளையாடிக்கொண்டிருந்தான். நமது சுந்தரேசன் இவர்களைக் கண்டுவிட்டான். ஆஹா! தன் இஷ்டப்படி மண்ணில் உட்கார்ந்துகொண்டும், பட்டங்கள் பின்னே ஓடிக்கொண்டும், காரணமில்லாமல் கத்திக்கொண்டும் விளையாடும் பாக்கியம் இப்பையனுக்குக் கிடைத்திருக்கிறது. அதோ ஒரு காய்ந்துபோன அப்பத்தைக் கையில் வைத்துக்கொண்டு என்ன ஆவலோடு தின்கிறான்? காய்ந்த அப்பம் ருசியாயிருக்குமா என்ன? அந்த அப்பத்தில் ஒரு துண்டு கிடைத்தாலும் போதும், என நினைப்பான். ஒரு வாய் அப்பத்திற்காகத் தன் விளையாட்டுப் பண்டங்கள் எல்லாவற்றையும் கேட்டாலும், கொடுத்துவிடச் சித்தமாயிருந்தான்.

இங்ஙனமிருக்க, ஒரு தாடிக்காரன் அவ்வேழைப் பையன் அருகில் சென்றான். பையனும் "அதோ அப்பா" எனச் சந்தோஷக் கூச்சலிட்டான். உடனே தாடிக்காரன் தனது முரட்டுக் கைகளால் சிறுவனைத் தூக்கி, உச்சிமோந்து, கீழேவிட்டுவிட்டான். அப்போது "என்ன அதிர்ஷ்டம் இந்தப் பையனுக்கு" என்று சுந்தரேசன் எண்ணித் துக்கமடைந்தான். தன்னுடைய தகப்ப

னோ, தன்னை ஞாயிற்றுக்கிழமைதினம் சாப்பாட்டு வேளையில் நெற்றியில் முத்தமிடுவதும், தோளில் சந்தோஷமாகத் தட்டுவதும் வழக்கம்; அதுவும் எல்லா ஞாயிற்றுக்கிழமைகளிலும் நடைபெறுவது. சோமசுந்தர முதலியார் ஒரு பெரியவியாபாரி. அவர் அடிக்கடி வெளி ஊர்களுக்குச் செல்லும்படி நேரிடும்.

சுந்தரேசனுக்கு அநேக விளையாட்டுப் பண்டங்களிருந்தும், அவற்றில் அவனுக்குப் பிரியமே கிடையாது. ஏனெனின் அவற்றை அவன் சுயமாக உபயோகிக்கக்கூடிய நிலைமையில் அவை இரா. சிலவற்றை அவனால் தூக்கமுடியாது. வேறு சில மிகவும் நுட்பமானவை. எல்லாம் பொதுவில் விலையுயர்ந்தவை. ஒருநாள் அவனுக்கு ஒரு விளையாட்டுக் கப்பல் வேண்டுமென்றும், அதைத் தானாகவே தொட்டி ஜலத்தில் மிதக்கவிடவேண்டுமென்றும் தன் தகப்பனிடம் சொன்னான். மறுநாள், 40 இராத்தல் கனமுள்ள ஒரு சூத்திரக்கப்பல் வாங்கித் தயாராய்விட்டது. வேலைக்காரி பையனை எடுத்துக்கொண்டாள். வேலைக்காரன் கப்பலை எடுத்துக்கொண்டான்; தொட்டியினிடம் வந்த உடனே, வேலைக்காரன் கப்பலுக்குச் சாவி கொடுத்து, தண்ணீரின்மேல் விட்டுவிட்டான். ஒன்றையும் கையினால் தொடாமல், கண்ணாலே பார்த்துக்கொண்டிருக்க வேண்டியது சுந்தரேசன் வேலை. ஐயோ! பாவம். இவ்வளவு பெரிய கப்பல் அவனுக்கு எதற்கு? ஒரு காகிதக் கப்பல் செய்து கொடுத்தால் போதுமே! அவனே அதை எடுத்துக்கொண்டு போய் ஜலத்தின் மேல் மிதக்கவிட்டுச் சந்தோஷமடைவானே!

சந்தோஷமாக விளையாடுவதற்குப் பண்டங்கள் அவசியமில்லை. சுந்தரேசன் வீட்டிற்கு எதிரே, தெருவில், அரை, அரையாகச் சில கோடுகள் கிழித்து, சில ஆண் குழந்தைகளும், பெண் குழந்தைகளும் சில் ஆடிக்கொண்டிருக்கிறார்கள். ஒவ்வொரு பிள்ளையும், ஒரு காலால் நொண்டி, நொண்டி நடந்துகொண்டு ஒரு சில்லைத் தள்ளுகிறான். எல்லாரும் சிரிக்கிறார்கள்; சந்தடி செய்கிறார்கள், சந்தோஷமாக விளையாடுகிறார்கள். அந்தச் சப்தம் மெத்தை மீது தனதறையில் உட்கார்ந்துகொண்டிருக்கும் சுந்தரேசன் செவிகளில் விழுந்தது; உடனே ஜன்னலால் தலையை நீட்டி, தெருவில் "பார்த்து நான் ஏன் இவர்களோடு சேர்ந்து விளையாடுதல் கூடாது" என்று எண்ணுவான்.

ஏன் விளையாடக்கூடாது? தம்பி! நீ பணக்காரன் மகன். நாகரீகப்பித்தேறினவன். சில்லாடுதல் முதலிய விளையாட்டுகளெல்லாம் உன்னைப்போன்ற பணக்காரப் பிள்ளைகளுக்குத் தடுக்கப்பட்டிருக்கின்றன. ஆமாம், பணம் பத்துவகை செய்யும், பணந்தான் ராஜா என்கிறார்களே! தன் இஷ்டப்படி நடப்பவனல்லவோ ராஜா? ராஜா யாருக்கு அடங்கியிருத்தல் வேண்டும்? பணம் ராஜா என்றது தப்பிதம். பணத்தினால் சந்தோஷமும், சுகமும், ஸ்வதந்திரமும் இல்லாவிடில் இவ்வளவு சிரமப்பட்டு அதனைத் தேடுவானேன்?

சோமசுந்தர முதலியார் வியாபாரத்தில் நஷ்டமடைந்து விட்டார். கடன்காரர்களெல்லாம் அவருடைய சொத்துக்களை ஏலம் போட்டு எடுத்துக்கொண்டார்கள். பத்திரமில்லாத கடன்காரர்கள் ஏமாந்துபோனார்கள். இருந்தாலும் அவர்கள் முதலியாரைத் தினந்தோறும் கண்டு தங்களுக்குச் சேரவேண்டிய தொகையைப் பற்றிப் பேசாமல் போவதில்லை. ஒருநாள் கடன்காரர்கள் தொந்தரவு சகிக்க முடியாததாலும், அவர்கள் முன்னிலையில் அவர்கள் கண்ணில் இருக்கப் பிரியம் இல்லாததாலும், முதலியார் குடும்பத்தோடு பட்டணம் விட்டு புதுவைக்கு வந்துவிட்டார். ஒருசிறிய தெருவில், ஒருசிறு வீடு வாடகைப் பேசி அதனில் வசித்து வந்தார்.

இங்ஙனம் இடம் மாறினதற்குக் காரணம் தெரியாத சுந்தரேசன் ஆச்சரியமடைந்தான். ஆயாளைக் காணவில்லை; தன் தாய் சதா தன்னோடு இருக்கிறதைப்பார்த்து, சந்தோஷமடைந்து அவன் சொன்னதாவது. "ஏன் அம்மா இங்கு வந்தோம்! ஆயாளெங்கே? இந்த வீடு சின்னதாக இருக்கிறதே! நீ எப்போதும் என்னோடு இருக்கின்றாயே. இந்த அதிர்ஷ்டம் எனக்கு எங்ஙனம் வந்தது?

தாய் மறுமொழி சொல்லுகிறாள்:—

"மகனே! நமது பணமெல்லாம் போய்விட்டது. ஆயாளுக்கு எங்கிருந்து சம்பளம் கொடுக்கிறது? அதனால் அவளையும், மற்ற வேலைக்காரர்களையும் நீக்கிவிட்டோம். நானும் இனி வெளியே போகமாட்டேன்; நானே சமையல் செய்து, உனக்கு நானே சாதம் படைப்பேன். உன்னோடு எப்போதும் இருப்பேன். நாம் ஏழைகளாய் விட்டோம்."

"அங்ஙனமா? அம்மா" என்றான் சந்தரேசன். "[illegible] பூரித்தாள், தாய் எப்போதும் என்னுடனிருக்கிறாள், நான் என் இஷ்டப்படி விளையாடலாம்! என்ன பாக்கியம்? இங்ஙனமே, எப்பொழுதும், நாம் ஏழைகளாகவே இருப்போம் அம்மா."

ரங்க N. சுப்பிரமணிய அய்யர்.

கர்ணன்.

(முன்தொடர்ச்சி)

பாண்டவர்களும் குந்திதேவியும் உயிரோடிருக்குஞ் செய்தியையுணர்ந்த பீஷ்மர், விதுரர், துரோணர் முதலியோர் பேரானந்த மெய்தி அவர்களை அஸ்தினபுரிக்குவருவித்து மீண்டும் யுதிஷ்டிரரை இளவரசாக்கினர்.

அதைக்கண்ட துரியோதனன் மீண்டும் அழுக்காறெய்தினன். அதையுணர்ந்த திருதராட்டிரன் கட்டளையினால் பாண்டவர்கள் தாயோடும், திரௌபதியோடும் தங்கட்கு விளைதருந் துயரெலாங் களைதரும்பொருட்டு விண்ணகத்திருந்து மண்ணகத்து கண்ணபிரானோடும் முன்னே நகரமாயிருந்து அழிந்து அப்பொழுது பெருங்காடாயிருக்கும் காண்டவப்பிரத்தம் என்னும் இடத்தை யணுகினர். அருட்கடலாகிய கண்ணபிரான் விருப்பின்படி இந்திரன் அப்பெருமானது திருமுன்வந்து வணங்கி அவ்விறைவனது விழைவிற்படி விச்சுவகர்மனை அழைத்து அவனால் பூமியுலகுக் காணற்கரிய பெரியதோர் அழகிய நகரமமைப்பித்து அதற்கு இந்திரப்பிரத்தம் என்னும் பெயரையிட்டனன். பிறகு பாண்டவர்கள் கண்ணபிரானோடு அந்நகரை யடைந்து யுதிஷ்டிரருக்கு எல்லா வைபவங்களோடு முடி சூட்டப்பட்டது.

பின்னர் பீமன் முதலிய தம்பியர் நால்வரும் திக்குவிஜயஞ் செய்து ஈட்டிய பொருளைக்கொண்டு தருமபுத்திரர் ராஜசூய யாகத்தைச்செய்து முடித்தனர். அவ்வியாகத்தை முடித்ததனால் யுதிஷ்டிரருக்குச் சம்ராட் என்னும் பட்டம் சூட்டப்பட்டது.

அப்போது அங்கு வரவழைக்கப்பட்டிருந்த துரியோதனன் மனம் பொறாமல் அஸ்தினபுரியைச் சார்ந்தவுடன் சகுனி முதலியவரோடு ஆய்ந்து சகுனியின் சொற்படி பாண்டவர்களை அஸ்தினபுரிக்குவருவித்துச் சகுனியைக்கொண்டு யுதிஷ்டிரருடன் சூதாடு

வித்து அவ்வாட்டத்தில் அவர்களுடைய ராச்சிய முதலிய எல்லாவற்றையும் கவர்ந்து, அவர்களையும் அடிமைகளாக்கினன்.

திரௌபதி மீண்டுஞ் சகுனியோடு சூதாடிப் பாண்டவர்களை அடிமைத்தனத்தினின்று மீட்டனள்.

பின்பு பாண்டவர்கள் துரியோதனன் முதலியவர்களைக் கொல்லாமல் விடோம் என்றும், திரௌபதி துரியோதனன் பேரில் பீமன் கையினால் மடிந்தபின்னன்றி என்கூந்தலை முடியேன் என்றும் சபதஞ்செய்தனர். திருதராட்டிரன் அச்சபத மொழிகளைக்கேட்டு மிகவும் அஞ்சி கலங்கி பீஷ்மர், விதுரர் முதலியவர்களோடு ஆய்ந்து பாண்டவர்கள் பன்னிரண்டு வருடங் காட்டில் வசித்துப் பிறகு ஒருவருடம் அஞ்ஞாதவாசம் செய்துவரின் மீட்டும் அவர்களுடைய ராச்சியத்தை அவர்களுக்குக் கொடுப்பதாக வாக்களித்தனன். பாண்டவர்கள் தங்கள் தாயாகிய குந்திதேவியை அஸ்தினபுரத்தில் விதுரர் மாளிகையில் இருத்தித் திரௌபதியோடு சென்று அவ்வண்ணமே பன்னிரண்டு வருடம் காட்டில் உறைந்து ஒருவருடம் விராடநகரில் ஒருவரும் உணராமல் இருந்து அப்பதின்மூன்று வருடங்கள் முடிந்ததும் வெளிப்பட்டனர்.

பிறகு விராடன் பாண்டவர்களை உபசரித்துத் தன் பெண்ணாகிய உத்தரையை அருச்சுனன் மைந்தனாகிய அபிமன்யுவுக்கு மணம் புரிவித்து அவர்களை மகிழ்வித்தான். அவர்கள் வெளிப்பட்டதை யுணர்ந்த பலராட்டிரர்களும் ஸ்ரீ கண்ணன் பலராமன் முதலியோர்களும் அவர்களிடம் வந்து அவர்களுக்குப் பல உபசார மொழிகளைக் கூறினார்கள். பிறகு அனைவருங் கண்ணனோடிருந்து பாண்டவர்கள் தங்கள் நாட்டைத் துரியோதனனிடமிருந்து பெறுதற்குரிய வகையைப்பற்றி யோசித்து முடிவில் கண்ணன் சொல்லியபடி உலூக முனிவனைத் துரியோதனன் பால் தூதாக அனுப்பவேண்டுமென நிச்சயித்தார்கள். பாண்டவர்களைக் காணவந்த அவ்வரசர்களும் ஸ்ரீ கண்ணன் முதலியவர்களும் தத்தம் பட்டணங்களுக்குச் சென்றார்கள்.

தருமர் கண்ணன் சொற்படி உலூக முனிவனைத் தூதாக அனுப்பினார். அம்முனிவன் அஸ்தினபுரிக்குச் சென்று பாண்டவர்கருத்தைத் துரியோதனனுக்குத் தெரிவித்து அவர்கள்நாட்டை அவர்களுக்குக் கொடுக்கும்படி கூறினன். அதைக்கேட்ட விதுரர்

முதலியவர்களும் அவ்வாறு செய்தலே நலமென்று துரியோத
னனுக்குக் கூறினார்கள். துரியோதனன் அவர்கள் சொல்லை
எல்லாம் ஏற்றுக்கொள்ளாமல் பாண்டவர்களுக்கு நாடுகொடேன்
என்று கூறிவிட்டனன்.

அதைக்கேட்ட பீஷ்மர் பாண்டவர்களுக்கு அவர்களுக்
குரிய நாட்டை முற்கூறியபடி கொடாமல் அவர்களோடு போர
புரியக் கருதுதல் தகுதி யன்று. போரில் அவர்களை எதிர்க்க
வல்லார் நம்மில் யாரிருக்கின்றார்கள்? என்று கூறினார்.

அதைக்கேட்ட கர்ணன்:—

“முன்னமே யுகிரிழந்தவெம் புலியென
முரணழி முனிமைந்தன்
றன்னை மற்றவனிடத்து நீ கற்றவெஞ்
சாத்திரன்வென் றமையல்லால்
என்ன சேவகங் கொண்டு நீ யாரையு
மிகழ்துரைப் பதுவென்று
கன்ன னுந்திறற் காங்கேயன் றன்னோடு
கண்சிவந் துரைசெய்தான்”

என்று பீஷ்மரை நோக்கி இகழ்ந்து கூறினன்.

அதைக்கேட்ட பீஷ்மர்

“தாம வெங்கணைத் தொடுத்த தோகையத்
தொடையல் சூடிய நாளில்
காம வெஞ்சிலை நாணெடுத் தனையடா
நானொடும் போர்செய்தாய்
தாம வெண்குடை நிருபரை யுந்தர
சரிதர்கொண் டேகாமல்
வீமன் வெஞ்சிறை மீட்டநாளினுந் திறல்
விசயன் முனைவென்றாய்.”

“ஒருதன் மாகெடுந் தேரினை யறிவுறு
வுத்தரன் விரைந்தூர
செருநர் யாவரை நின்று முகத்தினு
நின்றனை நெடும்போது
மருந ருவுமிழ்ந் மாயவன் தேர்விட
மலையுகாள் வயவாளி
வெருநர் மேல்விட விசயனை நீயலால்
வெல்லவல் லவருண்டோ”

என்றிகழ்ந்து கூறினார். அவர்கள் வார்த்தைகளை
யெல்லாங் கேட்டுக் கொண்டிருந்த துரியோதனன் கண்களிடத்து
மிகவு மனங்களை பரிவினைக்காட்டி, பாண்டவர்கள் தூதனுக்
குத் தன் பால்வந்த முனிவனை அவமதித்து நோக்கிப் “பஞ்சசைனா
இய பாண்டவர்களுக்குத் தூதாய்வந்த முனிவரே! ஊராதவு மின்
றிக் காட்டோடிகளாய்த் திரிந்த அப்பஞ்சைகளுக்கு நான் சிறிதும்
அஞ்சவேண்டுவேன். அவர்கள் இதுகாறும் அலைந்து திரிந்து
கொண்டிருந்த காடுதான் அவர்களுக்கு உரியது. ஒரு மேன்
மையும் இல்லாத அவர்களுக்கு நாட்டாட்சி உரியதன்று. அங்கு
ஏங்களுக்கே புரியதாகும்” என்றனன். அம்முனிவனும்
அதனைக் கேட்டு மறுமொழி யொன்றுங் கூறாமல் துரியோதனன்
பால் விடை பெற்றுச் சென்று யுதிஷ்டிரருக்கு அதனைத் தெரிவித்
தனன். (வரும்)

C. R. கோவிந்தராஜு முதலியார்,
பண்டிதர், பச்சையப்பன் காலேஜு,
சென்னை.

—⊱⊰—

சுகாதாரம்.

(முன்தொடர்ச்சி)

வாசஸ்தலங்களுக்குள் சுத்தமான காற்று.

முன் கூறியிருப்பதுபோல் நாம் சுவாசிக்கும் காற்றில்
துயாமல் அநேகவிதமான அசுத்தங்களும் விஷங்களுஞ் சேர்ந்து
கொண்டே யிருக்கின்றன. எவ்விடத்திலுமுள்ள காற்றில்
10,000-ல் 4-பங்கு விஷமுள்ள கரி அமிலவாய்வு சேர்ந்திருக்கின்
றது. ஆனால், இத்தக்காற்றை ஒரு மனிதன் சுவாசத்தினால்
உட்கொண்டு பின்பு அதை வெளியே விடும்பொழுது இந்தச்
சுவாசக் காற்றைப் பரிசோதித்துப்பார்த்தால் அதில் கரி அமில
வாய்வு 10,000-ல் 400-பங்காகின்றது; அஃதாவது 100-மடங்கு
அது அதிகப்படுகின்றது. மேலும் ஒரு பெரிய ஆள் ஒரு மணி
நேரத்தில் ½-கன அடி அளவுள்ள அல்லது 3½-ரூபாய் நிறையுள்ள
கரி அமிலவாய்வைச் சுவாசத்தினால் வெளியே விடுகிறான். இது
தவிரவும், வேர்வையிலிருக்கும் அநேகமான கரி அமிலவாய்வு

புறப்படும். இவ்விதமாய்ச் சுத்த ஆகாயத்தில் கரி அமிலவாய்வு 10,000-ல் 4-பங்கிருக்க, ஜனக்கூட்டங்களுள்ள பட்டணங்களிலும் ஜனங்கள் நெருக்கமாய் நித்திரைபண்ணுகிற அறைகளிலும் உள்ள காற்றில் கரி அமிலவாய்வு 10,000-ல் 30-50-சில வேளைகளில் 70-பங்கு வரைக்கும் காணப்படுகின்றது. நாம் சுவாசிக்கும் காற்றில் கரி அமிலவாய்வு 10,000-ல் 10-பங்குக்கு அதிகப்பட்டாலும் சுகத்திற்கு இடையூறு உண்டாகும். கரி அமிலவாய்வைத் தவிரவும், வளர்ந்த ஒரு ஆளுடைய வேர்வையிலிருந்தும் சுவாசத்திலிருந்தும் ஒரு நாளொன்றுக்கு 25-முதல் 40-அவுன்ஸ் வரையுள்ள நீராவியும், 30-முதல் 50-கிரெயின் வரையுள்ள அசுத்த தேகக்கழிவுகளும் வெளியே புறப்பட்டு ஆகாயத்தைக் கெடுக்கின்றன.

ஒரு மனிதனுடைய தேகத்திலிருந்து 24-மணி நேரத்தில் இவ்வளவு ஏராளமான அசுத்தமும் விஷமுமுள்ள கழிவுகள் புறப்பட்டு ஆகாயத்தைக் கெடுக்கிறபடியால் போதுமான ஜன்னல்களில்லாமலாவது அல்லது இருக்கிற ஜன்னல்களும் நன்றாய் அடைக்கப்பட்டாவது இருக்கிற அறைகளுக்குள் அநேக ஆட்கள் நித்திரை செய்கிறபொழுது அங்குள்ள காற்று மகா கெட்ட கழிவுவிஷங்களால் நிறைந்துவிடும். ஆகையால் மறுநாள் உதயம் ஒருவன் வெளியிலிருந்து கதவைத்திறந்துகொண்டு அவ்வறைகளுக்குள் பிரவேசித்தால் அங்குள்ள நாற்றத்தையும் அதனால் உண்டாகும் சுவாசத்திகைப்பையும் சகிக்கமாட்டான். இப்படியிருந்தும் அவ்வறைகளுக்குள் வாசஞ்செய்கிற ஆட்களுடைய நாசிப்புலன் வழக்கமாய் துர்க்கந்தத்தை முகர்கிறதினால் முற்றிலும் மழுங்கிப்போகவே அவர்களுக்கு நாற்றம் ஒன்றும் தெரியமாட்டாது. ஆயினும் இப்படிப்பட்டவர்களுடைய சுகம் வெகுவாகக் கெட்டுப்போகிறதற்குச் சந்தேகமில்லை.

முன்சொன்னபடி நெருப்பு எரிகிறதினாலும், கரி அமிலவாய்வும் பின்னும் சில விஷவாய்வுகளும் ஏராளமாயுண்டாகி ஆகாயத்தைக் கெடுக்கின்றன. காற்றில்லாமல் நெருப்பு எரியாது; ஒரு பவுன் நிறையுள்ள காய்ந்த விறகு எரிந்து போகிறதற்கு 120-கன அடி காற்று செலவழியும்; அதனால் 22-கன அடி கரி அமிலவாய்வு உண்டாகும். பெரிய திரியுள்ள ஒரு விளக்கு ஒருமணி

நேரம் எரிய 154-கிரெயின் எண்ணெய் வேண்டும். அதற்கு 3-கன அடி காற்று செலவழியும். அதனால் ½-கன அடி கரி அமில வாய்வு உண்டாகும். ஒரு பவுன் எண்ணெய் எரிய 150-கன அடி காற்று வேண்டும். அதனால் 24-கன அடி கரி அமிலவாய்வு உண்டாகும். மேலும் ஜலதாரை அல்லது சாக்கடை முதலான இடங்களிலிருந்தும் பலவகை விஷவாய்வுகளுண்டாகி ஆகாயத்தைக் கெடுக்கும். இரண்டொரு சாக்கடைத் தண்ணீரிலிருந்து ஒரு மணிநேரத்தில் ஏறக்குறைய 2-கன அடியுள்ள பல அசுத்த வாய்வுகள் புறப்படும்.

மேலேகண்ட பிரகாரமாகப் பலவழிகளால் ஆகாயத்தில் ஓயாமல் அநேக விஷவாய்வுகள் சேர்ந்துகொண்டே யிருக்கிறபடியால் அது எவ்வகையாலாவது எப்பொழுதும் சுத்தமாக்கப்பட்டு வராவிட்டால் அதிசீக்கிரத்தில் அது ஜீவஜெந்துக்களின் சுகத்திற்கும் பிராணனுக்கும் சேதத்தை யுண்டுபண்ணும். ஆகையால் ஜீவகாருண்ணிய கடவுள் ஓயாமலுண்டாகிற விஷவாய்வுகளின் கொடூரங்களை வெகுவாய்க் குறைக்கும்படி இயல்பில் அமைத்திருக்கிற ஏற்பாடுகளை முதலாவது கவனிப்போமாக.

(1) பல இடங்களில் ஓயாமலுண்டாகிற விஷவாய்வுகள் அவை உற்பத்தியாகிற இடங்களிலேயே தங்குமானால் அவ்விடங்களிலிருக்கிறவர்களுக்கு அவை பெரியமோசங்களைச் செய்து விடும். ஆகையால், ஒரு பாத்திரத்தண்ணீரில் கொஞ்சம் பாலை விட்டால் அது உடனே தண்ணீரெங்கும் பரவிப்போய் விடுகிறது போல, பலவிடங்களில் உண்டாகிறவிஷவாய்வுகள் அந்தந்த இடங்களிலேயே நின்றுவிடாமல் மிகவும் விரைவாய்ப் பரவி ஆகாயமெங்கும் சிதறிப்போகின்றன.

(2) காற்றினாலும் விஷவாய்வுகள் நாலா திக்குகளில் சிதறடிக்கப்படுகின்றன. இவ்விரண்டு வகைகளால் விஷவாய்வுகளுடைய கொடூரம் மிகவுந் தணிக்கப்படுகின்றது.

(3) மழை பெய்யும்பொழுது ஆகாயத்தில் கலந்திருக்கிற பல விஷவாய்வுகள் மழைத் தண்ணீரோடு கலந்து பின்பு அதன் வழியாய்ப் பூமிக்குள்ளிறங்கி மறைந்துபோகின்றன.

(4) உலகத்திலுள்ள சிலபொருள்கள் அநேக விஷவாய்வுகளை அழித்துப்போடுகின்றன. திருஷ்டாந்தமாக முன்னே

சொல்லியிருக்கிறபடி புல் பூண்டு விருட்சங்கள் விஷமுள்ள கரி அமிலவாயுவையும் மூத்திர முதலானவைகளிலுண்டாகிற அவாசாரவாயுவையும் ஏராளமாய் உட்கொண்டு அவைகளை அழித்து விட்டு நமக்கு நன்மையான பிராணவாயுவை வெளியே விடுகின்றன.

பொதுவாய் எங்குமுள்ள ஆகாயம் சுத்தமாக்கப்படுவதற்கு இயல்பில் அமைக்கப்பட்டிருக்கிற ஏற்பாடுகளைக் கவனித்தோம். ஆனால் நமது வாசஸ்தலங்களுக்குள் ஓயாமல் பலகாரணங்களினால் விஷமாக்கப்படுகின்ற ஆகாயம் சுத்தமாக்கப்படுவதற்கு இயல்பின் ஏற்பாடுகள் போதாது. நாம் அதைச் சுத்தமாக்குவதற்குப் பலபிரயத்தினங்களைச் செய்யவேண்டும்.

பிதுர்வாக்கிய பரிபாலனம்.

அங்கம்—1.

காட்சி—2.

இடம்:—அயோத்தியில் ஒரு தெரு

மாதவன் கோவிந்தன் நாராயணன் என்னும் மூன்று வாலிபர்கள் பேசிக்கொண்டே போகிறார்கள்.

மாதவன்:—நாராயணா! நாளைக்கு இந்நேரமெல்லாம் இந்த அயோத்தி எப்படி யிருக்கும் தெரியுமா? ஒரு புது நகரம் போலல்லவா விளங்கப்போகிறது. இப்பொழுதே பார்! கொடிகளும் தோரணங்களும் பூரணகும்பங்களும் பதுமைகளும் பகரமுடியாத புதுமைகளும் அதிமனோஹரமாய் அமைக்கப்பட்டிருக்கின்றன.

நாராயணன்:—அடே நீ ராஜவீதிகளைப் பார்க்கவில்லையே! அங்கெல்லாம் ஸ்ரீ இராமச்சந்திரருக்குப் பட்டாபிஷேகம் நடக்கப்போகிறதென்று பறைசாற்றிய அன்றே அலங்கரிக்கத் தொடங்கிவிட்டார்கள். இன்னும் அங்கங்கே பார்த்தால் என்ன அலங்காரம் தெரியுமா? அடே என்ன சொல்லட்டும் நான்! அடடா! தெருக்களும் மாடமாளிகைகளும் கண்ணைக் கவர்கின்றன.

(மாதவனும் நாராயணனும் பேசிக்கொண்டேயிருக்கின்றார்கள்; கோவிந்தன் ஒரு பக்கம் பார்த்துக்கொண்டிருக்கின்றான்.)

மாதவன்:—(மெதுவாய்) நாமென்ன பேசிக்கொண்டுபோகிறோம்? கோவிந்தன் எங்கேயோ பார்த்துக்கொண்டே வருகிறான் பார். பைத்தியக்காரன் மாதிரி நடக்கின்றானே!

நாராயணன்:—அவனுக்கு ஒரு குறையுண்டுபோலும்! இந்தமாதிரி கொட்டு முழக்கு, குதூகலம், அலங்காரம், பாட்டுக்கச்சேரி இவ்வைபவங்களைக் காணும்போதெல்லாம் நமக்கு எப்போது கல்யாணமாகப்போகிறது, நாமெப்போது இவ்வைபவங்களை யெல்லாம் அனுபவிப்போம் என்கிற விசனம் வந்து அவன் மனதில் குடிபுகுந்துவிடும். அப்பொழுது அவன் இப்படிப் பைத்தியக் காரன்போல் விழிப்பான்! அதை யொரு சமயம் கவனித்தேன். அந்த நிலையிலிருக்கிறான் போலிருக்கிறது இப்போது?

கோவிந்தன்:—(திரும்பிப்பார்த்து) என்னடா நாராயணா! உருட்டுகின்றாய் மேலும் கீழுமாக! அப்பாடா என்று இருக்கிறதோ பிழைப்பு! கல்யாணம் பண்ணிக்கொண்டபெருமைபோயிருக்கிறது! நாளைக்குப் பெண்சாதியிடம் உப்புக்கும் புளிக்கும் பிடுங்குப்படும்போது தெரியும் கல்யாணத்தின் சுகம்.

மாதவன்:—அவன் சொல்லுகிறான் என்று கோபித்துக்கொள்ளுகிறாயே! நீ எங்கேயோ பார்த்துக்கொண்டு பைத்தியக்காரன் போல் நடந்தாயே? சும்மா பேசவே நீ! கல்யாணம் பண்ணிக்கொள்ளவேண்டும்; பெண்சாதியும் பிள்ளையுமாக இருக்கவேண்டுமென்கிற எண்ணம் யாருக்கில்லை? எல்லாருக்குந்தான் உண்டு; பத்தைப்பெற்று பத்தைக் குழியில் போட்ட கிழவன்கூட கல்யாணம் செய்துகொள்ள விரும்புகிறான். ஓடுகிற பாம்பை மிதிக்கிற காலம் உனக்கு, நீ அப்படி பெண்ணைக்கொள்ளக் கேட்கவேண்டுமா?

கோவிந்தன்:—ஏதடா மாதவா! நீகூட............................ அதோ அங்கே பாரடா, கனி தன் வீட்டிலிருந்து குனிந்து

குனிந்து அங்குமிங்கும் பார்ப்பதையும் அவன் வீட்டு வாசலில் தோரணக்கால் நடுவதற்குக் கூலிக்காரர் பாடிக்கொண்டு குழி தோண்டுவதையும். நான் அதைப்பார்த்துக்கொண்டே வந்தேன். பைத்தியக்காரனென்று என்னவோ உளறுகிறாய் நீ!

நாராயணன்:—எங்கேயடா கவனம் உனக்கு! கூனியின் அழகிலா உனக்குக் கண்கள் செல்லவேண்டும்? வெகு விந்தை! கூனியையும் கூனி வீட்டையும்விட வேறொன்றும் உன் கண்ணுக்குப் படவில்லைபோலிருக்கிறது! வெகு அழகு! நகரமே புதுக்கோலமாக விளங்குகிறதே! அலங்காரங்கள் கண்களைக் கவர்கின்றனவே! அதிசயப்புதுமையாகத் தோற்றவில்லையா இவை உன் கண்ணுக்கு?

கோவிந்தன்:—எல்லாந் தெரிகிறதடா! கூனி கோலை ஊன்றிக்கொண்டு இங்குமங்கும் ஓடுகிறாள்; நடுவீதியில் இன்னொருத்தியுடன் என்னமோ அவசர அவசரமாகப் பேசுகிறாள்; அதில் புத்திசென்றிருந்தது. அதனால்—

மாதவன்:—போடா! மதியிலி! கூனியையும் கூனி பேச்சையும் யாராவது கவனிப்பாரோ? நகரமண்டப அலங்காரங்களையும் அரண்மனை அலங்காரங்களையும் ராஜாக்கள் வரும் அழகையும், கூடாரங்களின் அழகையும், யானை ஓட்டம், குதிரை முதலியன வரும் விமரிசையையும் சைன்னியங்களின் அமைப்பையும் பேரிகை முழக்கத்துடன் வரும் விருதுகளின் அழகையும் போய்ப் பார்ப்போம். வா? கல்யாணப் பித்தப்பிடித் தலையாதே வாபோவோம்.

(போகிறார்கள்)

அங்கம்—1

காட்சி—3

இடம்:—மந்தரையின் வீடு.

[மந்தரை தன்வீட்டில் இங்கு மங்குஞ்சென்று அலங்காரங்களைப் பார்ப்பதும் தன் வேலைக்காரி சுந்தரியுடன் பேசுவதுமாக இருக்கிறாள்.]

மந்தரை:—(வேலைக்காரியை நோக்கி) அடியே! என்ன தடபுடல் படுகிறது பாரடி பட்டணம்! இராமனுக்குப் பட்டாபிஷேக

மானால் கைகேசி யம்மாளுக்கு என்ன சுதந்தர மிருக்கப் போகிறது? அந்த அம்மாளுக்குச் சுதந்தரமில்லையானால் நமக்கென்கே சுகம்? நாமெல்லோரும் அடிமைதான் கௌசலைக்கும் சீதைக்கும்!

சுந்:—அம்மா! அப்படி நடக்கப் பட்டவரா இராமர்! நல்ல பிள்ளையாச்சே! தெருவிலே யாராவது துக்கப்படக் கண்டாலும் மனமிரங்கி அம்மா என்னவேணும், எங்கே போகணும், என்று விசாரிக்கப் பட்டவர்களாச்சே! கைகேசி யம்மாள் மனம் வேறுபட நடப்பார்களா? தர்மராஜ்யத்துக் கேற்ற பிள்ளையாச்சே! அப்படி விபரீதமாய் எண்ணவேண்டாம்.

மந்:—போடி பைத்தியக்காரி! ஐசுவரியம் வந்துவிட்டால் பிறகு கண் தலை தெரியுமா? * இன்றைக்கு இராமன் இப்படியிருக்கின்றான் என்று எண்ணாதே! பின்னாலே வேறு மாதிரியாய் மாறிவிடுவான். நீ யோசித்துப் பாரடி பைத்தியக்காரி! இராமன் ராஜாவாய்விட்டால், பரதன் அப்பால் பணிவிடைக்காரன்தான், அவன் அப்படியாய்விட்டால் கைகேசி அம்மாளுக்கு என்னடி நடக்கும்! கைகேசி யம்மாள் கதியப்படியானால் நாமெல்லாமெப்படிப் பிழைப்பது? தெரியாமே உளறுகிறாயே? யோசனையே கிடையாதுனக்கு.! கேளடி! கோசலையினுடைய காரியமிது! அவள் என்ன பண்ணியிருக்கிறாள் தெரியுமோ உனக்கு—

(தலையை யசைத்து நீட்டினது போலப் பேசுகிறாள்)

பாரடி என்னே! பரதனும் சத்ருக்னனும் இப்போது எங்கே இருக்கிறார்கள்? அவர்கள் மாமன் வீட்டிற்குப் போயிருக்கிறார்களல்லவா? இதுதான் சமயமென்று கண்டு கௌஸலை ராஜாவை

விருத்தம்

* செல்வம் வந்துற்ற காலைத் தெய்வமும் சிறிதுபேணார்
சொல்வன அறிந்துசொல்லார் சுற்றமுந் துணையும் நோக்கார்.
வெல்வதே நினைவதல்லால் வெம்பகை வலிதென்றோரார்.
வல்வினை விளைவு பாரார் மண்ணின்மேல் வாழுமாந்தர்—
என்று கூறுவது நீ கேட்டதில்லையா?

மயக்கித்தன் வசப்படுத்திக்கொண்டு காரியத்தை நிச்சயித்து விட்டான். ராஜாவுக்கு எப்போதும் ஆழ்ந்த யோசனையே கிடையாது. பரதன் ஊரிலில்லாத சமயத்தில் ராமனுக்குப் பட்டம் கட்டலாமோ? ஊர் சிரிக்காதோ? இதிலேயே பார் ஏதோ தந்திர மிருப்பது தெரிகிறது.

கை:—அப்படி யிராதென்று எண்ணுகின்றேன். பிறகு எப்படியோ? மனம் அடிக்கடி மாறுவதாயிருக்கிறது. கண்டதார் இதையெல்லாம்.

மந்:—அடி என்னடி நீ! ராமனாண்டாலென்ன ராக்ஷஸன் ஆண்டாலென்ன என்று நினைக்கிறாய் நீ! உனக்கு அறிவே கிடையாது. ஒன்றினால் துன்பம் வருமென்பது தெரிந்தும் சும்மா இருக்கலாமோ? வெள்ளம் வருவதற்கு முன்பு அணைபோடுவதல்லவா அழகு! வந்தபின் என்னசெய்ய முடியும்? நீ பேசாமலிரு. நான் இதற்குத் தக்கதுட்டு செய்கின்றேன் பார்! நாளைக்குப் பார் என் வேலையை!

(வரும்.)

மகாகவி-திரு-அ-சுப்பிரமண்ய பாரதி.

யுத்தம்.

ஐரோப்பாக் கண்டத்தில் நடந்துவரும் யுத்தம் சீக்கிரம் முடிவு பெறுமென்று தெரியவில்லை. ருஷ்யாவில் நேர்ந்த கலகத்தினாலும், கிரேக்க அரசரின் விபரீதச் செய்கைகளினாலும், யுத்தம் சீக்கிரத்தில் முடிவுபெறுவது தாமதமாகிவிட்டது. ருஷ்யாவில் ஜனநாயக ஆட்சி ஸ்திரப்பட்டு விட்டமையினாலும், கிரேக்க அரசர் தமது ராஜ்யத்தை விட்டு விலகினமையினாலும், அமெரிக்கா நேசராஜாங்கத்தாரோடு சேர்ந்து கொண்டமையினாலும், அடுத்தகாலத்தில் யுத்தம் மிகு உக்ரமாக நடந்து சீக்கிரத்தில் நேசராஜாங்கத்தார் வெற்றிக்கொடி நாட்டுவார்களென்று தெரிகின்றது. ஜப்பானும், சைனாவும் யுத்தத்திற் சேர்ந்து நேசராஜாங்கத்தார்க்குப் பலிதமான உதவியுஞ்செய்து வருகின்றன. யுத்தத்தினால் உலகத்திற்கு நேர்ந்திருக்கும் கஷ்டம் சீக்கிரத்தில் முடிவுபெறுமாறு நாம் கடவுளைப்பிரார்த்திப்போம்.

(Special to Chakravarthini).

நாலடியார் வசனம்.

அறத்துப்பால்.

அறமாவது மநுமுதலிய நூல்களில் விதித்தவற்றைச் செய்தலும், விலக்கியவற்றை ஒழித்தலுமாம்; பால்—பகுதி அல்லது பாகமாம்.

1-வது செல்வ நிலையாமை.

அதாவது செல்வத்தினது நிலையாமையைக் கூறுதலாம். செல்வம்—தனம், மணி முதலியன; நிலையாமை—நிலைபெறுதலில்லாத் தன்மை.

செல்வர் அதனுடையவராகவே யிருப்பதில்லை யெனல்.

(1) அறுவகைச் சுவையுமுடைய உணவுகளை மனையாள் அன்பாகவிருந்து (தனித்தனி) உண்பிக்க, (ஒவ்வொன்றிலும்) மற்றொருகவளத்தை (இது வேண்டாமென்று குறிப்பித்துத்) தள்ளியுண்ட செல்வமுடையாரும், (தீவினையின் வசத்தால்) வறுமையுடையவராய், (தம்மைப் பிறரறிதலில்லாத) ஒரிடத்திற் சென்று கூழை யிரக்கின்றவராகின்றனர்; அங்ஙனமாயின், செல்வமென்பதொன்று நிலையாக இருப்பதாக (நெஞ்சில்) வைத்தற்குரியதன்றாம்.

(கருத்து.) மனையாள் அருகேயிருந் தன்னை யன்பாக ஊட்டவுண்ட பெருஞ்செல்வரும் தீவினையின் வயத்தால், வறிஞராய், யாசித்தற் குரியராகின்றனர்; ஆதலால், யாம் செல்வமுடையோமென்று எவரும் கர்வமடைதல் கூடாதென்பதாம்.

அறுவகைச்சுவை—கைப்பு, தித்திப்பு, புளிப்பு, உவர்ப்பு, துவர்ப்பு, கார்ப்பு என்பனவாம்.

செல்வமுள்ளபோது செய்வதிதுவெனல்.

(2) செல்வம் எவரிடத்திலும் நடுவு நிலைமை பொருந்த நில்லாது வண்டியின் சக்கரம் (மேல் கீழாகவும் கீழ் மேலாகவும் மாறி வருதல்) போல மாறிவருவதாம்; (அதனால், ஒருவர்) குற்ற

மற்ற பெருஞ்செல்வம் (தமக்குக்) கிடைக்குமாயின், அது கிடைத்தது முதற்கொண்டு, உணவைப் பலரோடுங்கூடி யுண்ணக்கடவர். பலரென்றது-உறவினர், நட்பினர், வறியவர் முதலாயினோரை.

(க-து.) செல்வம் மாறுமியல்புடையதாக விருத்தலின், அது கிடைக்குமாயின், அதுகொண்டு பலரோடுங்கூடி உணவுண்டல் வேண்டுமென்பதாம்.

அரசரும் தம் செல்வமிழந்து
வருந்த நேருதற்குரியாரென்றன ரெனல்.

(3) யானையினது பிடர்மீது சிறப்பாக வெண்கொற்றக் குடையினது நீழற்கீழிருந்து, சேனைகளுக்குத் தலைவராகச் சென்ற அரசரும், தீவினைவந்து கெடுப்பதால், (தமது நிலைமையி னின்றும்) வேறுபட்டு, தாம் மணந்துகொண்ட மனைவியரைப் பகைமன்னர் கொண்டுபோகக் கெடுக்கின்றனர். (அதனால் செல்வமிருப்பது கொண்டு செருக்கடைதல் கூடாதென்பதாம்).

(க-து.) யானையின்மீதேறி யானை, குதிரை, தேர் காலாள் என்னும் நால்வகைச் சேனையுஞ் சூழச்செல்லு மியல்புள்ள அரசரும் தீவினையின்வசத்தால் தம் செல்வமிழந்து, தம் மனைவியரைப் பகைவர் அபகரித்துக்கொண்டு செல்ல வருந்தநேருகின்றன ரென்பதாம்.

செல்வம் நிலையற்றதாயும், வாழ்நாள் குறுகுவதாயு
மிருத்தலின், அறத்தை விரைந்து செய்தல் வேண்டுமெனல்.

(4) வாழ்நாளோ விரைந்துவிரைந்து கழிவதாக விருக்கின்றது; யமனோ கோபித்து (கொல்ல) நெருங்கி நெருங்கி வருகின்றான். (ஆதலால் ஒவ்வொருவரும்) இவை அழியமாட்டா, இவை அழியமாட்டா (என்று கருதிய பொருளைத்தாம்) அழியா திருப்பனவென்றெண்ணாது, (தந்தமக்குப்) பொருந்திய அறத்தைப் பொருந்தியவாறு செய்யக்கடவர்; அவ்வாறு செய்வதையும் விரைந்து செய்யக்கடவர்.

(க-து.) அழியாதென்று கருதும் பொருளும் அழிதலையும் சாவு தவிர்ந்திருப்பதையுங் கவனித்து, மறுமைக்குற்ற துணையாக அறத்தை விரைந்து செய்தல் வேண்டுமென்பதாம்.

செல்வத்தைக்கொண்டு, அறத்தைச் செய்தவர்
அடையுங்கதி யீதெனல்.

(5) யாதாவதொரு பொருள் தமது கையிற் கிடைக்குமாயின், (இதனைக் கொண்டறஞ் செய்வது) நாளைக்காகட்டுமென்று கருதி, அதனைப் பத்திரப்படுத்தி வையாது, கிடைத்த அப்பொழுதே அதுகொண்டறஞ் செய்தவர் யமன் பாசத்தாற் கட்டியிழுத்துச் செல்லுகின்ற பாலைவழியினின்றுந் தப்பிச் சுவர்க்கத்திற்குச் செல்லுவார்.

பாலை—நீரும் நிழலுமில்லாத பாழ்த்த மணற்பூமி.

(க-து.) நாளைக்காகட்டுமென்று நினையாது பொருள்கிடைத்த போதே அதுகொண்டு தருமஞ் செய்பவர் மறுமையில் யமலோகத்தை யடையாது சுவர்க்கலோகத்தை யடைவாரென்பதாம்.

சாவைக்கடத்தல் முடியாததாகலின், தருமத்தை
விரைந்து செய்தல் வேண்டுமெனல்.

(6) (ஒவ்வொருவர்க்குங் கடவுள்) ஏற்படுத்திய நாள்கள் தமது அளவினின்றுங் கடக்கமாட்டா; யமனை விட்டுத் தப்பித்துக்கொண்டோடிப் பிழைத்தவர் இவ்வுலகத்திலொருவருமில்லை. மிகவும் பெரும்பொருளை (அறம்புரியாது சேர்த்து) வைத்திருக்கின்றவர்களே! நாளைக்கே பிணப்பறையானது தழீஇம் தழீஇம் என்னும் ஓசையுண்டாக (பறையடிப்போரால் உங்களைக் குறித்து அடிக்கப்படுமாயினும்) அடிக்கப்படும்; (ஆதலால் நீங்கள் உங்களுடைய பொருள்களை ஏழைகளுக்குப்) பகிர்ந்திட்டுக் கொடுங்கள்.

(க-து.) கடவுள் ஏற்படுத்திய நாளுக்குமேல் வாழ்ந்திருத்தல் முடியாது; ஆகலின், பொருளுடையோர் தமது பொருளை விரைந்து அறநெறியில் செலவிடல் வேண்டுமென்பதாம்.

அறம் புரியாதார் மக்களாய்ப் பிறந்தவராகா ரெனல்.

(7) (மக்களே!) யமன் சூரியனைப் படியாகக்கொண்டு நாள்தோறும் உங்களுடைய ஆயுள்நாளாகிய தானியத்தை யளந்து வருகின்றான்; (ஆதலால் நீங்கள்) மிகவும் தருமத்தைச் செய்யுங் கருணையுடையவராகுங்கள். (அவ்வாறொழுகாதவர்) எத்தன்மையராயிருப்பினும் அவர் மக்களாய்ப் பிறந்தும் பிறவாதார் போலவே ஆவர்.

(க-து.) ஆயுள் விரைந்து விரைந்து கழிந்துபோவதைக் கவனித்து, அறத்தைச் செய்து அருளுடையவரா யிருப்பவரே மக்களாய்ப் பிறந்தவராவர்; மற்றவர் மக்களாய்ப் பிறந்தவராகா ரென்பதாம்.

உலோபிகள் செல்வம் விரைந்து கெடுமெனல்.

(8) யாம் செல்வமுடையவரா யிருக்கின்றோமென்று இறுமாந்து தாம் (இறந்தபின்) செல்லுமிடத்தை யாலோசித்தறியாத புல்லறிவாளரது பெருஞ் செல்வமானது பகற்காலத்தில் கருமேகத்தினின்றும் தோன்றிய மின்னலைப்போலத் தோன்றித் தாமிருந்த விடமுந்தெரியாம லழிந்துபோம். புல்லறிவாளர் - அற்பபுத்தியுடையவர்.

(க-து.) புல்லறிவாளர் செல்வமுள்ளபோது தாம் செய்வது என்னவென்றுணராது உலோபியரா யிருக்கின்றனர்; அவரது செல்வம் கொள்ளை, வழக்கிடல் முதலியவற்றின் வாயிலாக விரைந்து கெடுகின்றதென்பதாம்.

உலோபி பொருளுடையவனா யிருப்பினும் அஃதில்லாதவனே யாவனெனல்.

(9) (ஒருவன் உண்ணவேண்டியவளவாக உணவை) உண்ணாமலும், (தன்னைப் பிறர்) மதித்தலை நிலைபெறச் செய்யாமலும், புகழுண்டாதற்குரிய செயல்களைச் செய்யாமலும், உறவினரது துன்பங்களை நீக்காமலும், (யாசகர்க்கு ஒன்றும்) கொடாமலும், வீணே பொருளை (பத்திரஞ் செய்து) காத்துக்கொண்டிருப்பானாயின், ஐயோ! (அவன்) அப்பொருளை இழந்துவிட்டவனாவனென்று (அறிவுடையவரால்) நினைக்கப்படுவான்.

(க-து.) பொருளுள்ளபோது அதுகொண்டு செய்தற்குரியவற்றை உலோபகுணத்தாற் செய்யாது, அதனைக் காத்துக்கொண்டிருப்பவன், அதன் பயனை யடையாமையால், அவன் பொருளிருந்தும் இல்லாதவனே யாவனென்பதாம்.

உலோபிகள் பொருள் பிறர்க்கே பயன் தருவதா மென்பதற்கோர் உதாரணங்கூறல்.

(10) (தாமுடுத்தற்கேற்ற வுடையை) உடுக்காமலும், (உண்ணுதற்கேற்ற வுணவை) உண்ணாமலும், தம்முடம்பை (கல் [illegible]ளாமை, நல்லுறக்கங் கொள்ளாமை முதலியவற்றால்) வருத்தியும், (பலன் தருவதில்) தவறுதலில்லாத நல்ல தருமங்களைச் செய்யாமலும், (எப்படிப்பட்ட சமயத்திலும் ஒருவர்க்கும் ஒன்றும்) கொடாமலும் பொருளைச் சம்பாதித்து வைத்திருப்பவர் (தம் பொருளைக் கள்வர் முதலியோர்க்கு நிச்சயமாக) இழந்து விடுவர். இதற்குச் சாட்சி (பல மலரினின்றும் தேனைக்) கொண்டு வந்து சேர்த்து வைத்திருக்கின்ற தேனீயேயாம்.

(க-து.) தேனீக்கள் சேர்த்துவைத்த தேனைப் பிறர் வந்து அவற்றை வருத்திக்கொண்டு போதல்போல, உலோபிகள் சேர்த்துவைத்த பொருளைக் கள்வர் முதலியோர் வந்து அவர்களை வருத்திக் கொண்டு போவரென்பதாம்.

2 - வது இளமை நிலையாமை.

அஃதாவது இளமைப் பருவத்தினது நிலையாமையைக் கூறுதலாம். செல்வத்தினது நிலையாமையை யுணர்ந்தவர்க்கன்றி மற்றவர்க்கு இளமை நிலையாமை செவியின் விளங்காமையின், செல்வ நிலையாமையின் பின் இளமை நிலையாமை வைக்கப்பட்டது.

நல்லறிவாளர் விரைந்து துறவறத்தை மேற்கொள்வரெனல்.

(1) குற்றம் நீங்குதலில்லாது நிலைபெறுதலுள்ள (தமது) இளமைப் பருவத்தைக் கண்டு (இஃதென்று மிருக்குமென்று) மகிழ்ச்சி யடைந்திருப்பவர் (முதுமைப் பருவத்தில்) கோலையூன்றிக் கொண்டு வருத்தத்துடன் எழுந்திருக்கின்றவராகின்றனர் (என்பதுணர்ந்து) நல்லறிவாளர் (நிச்சயமாக நமக்கும்) முதுமைப் பருவம் வருமென்று நிச்சயித்து, இளமைப் பருவத்திலேயே (இல்லறத்தினின்றும் நீங்கித்) துறவறத்தை மேற்கொண்டொழுகுகின்றனர்.

குற்றம் - காமம், வெகுளி, கடும்பற்றுள்ளம் (உலோபம்) மானம், உவகை, மதமென்பனவாம். இவை இளமைப்பருவமுடையாரிடத்து மிகுதியும் நிறைமதிபோல வளர்ந்து வருவனவாயிருத்தலின், 'குற்றம் நீங்குதலில்லாது' என்று கூறப்பட்டது. நல்லறிவாளர் - இஃதறிவது இஃதறியாதென்னும் விவேகமுடையவர்.

(க-து.) நல்லறிவாளர் இளமைப் பருவம் விரைந்து மாறிப்போவதையும் முதுமைப் பருவத்தில் தாம் செய்ய வேண்டிய தவத்தைச் செய்ய முடியாமையையும் நோக்கி, விரைந்து துறவறத்தை மேற்கொள்ளுகின்றன ரென்பதாம்.

இளமைப் பருவத்தை நோக்கி மகிழ்ச்சியடைதல் கூடாதெனல்.

(2) (மூடமனமே! ஒருவனுக்கு முதுமைப்பருவம் வந்த போது அவனோடு நட்பினரா யிருந்தவரது) நட்பின் சம்பந்த மனைத்தும் அற்றுப்போகின்றன; (அவனது) மனைவியர் (அவனிடத்து வைத்துள்ள) அன்பு குறைந் தொழுகுகின்றனர்; (இவ்வாறவர்க ளொழுகுவதால் அவன் அவர்கள்மீது வைத்துள்ள) அன்பின் பெருக்கங்களும் குறைந்துபோகின்றன. உலக வாழ்க்கை யிவ்வா றிருப்பதால் இவ்வுலக வாழ்வால் விரும்பும் பயன் யாதாம்? கடலில் மூழ்குகின்ற மரக்கலத்தி லிருப்பவரது அழுகுரல்போல (உறவினரது) அழுகுரல் விரைந்து வருவதாக விருக்கின்றது; (இவற்றை நீ) ஆலோசித் துணரக் கடவாய். (இவற்றை நீ ஆலோசித்துணர்ந்தால் இளமைப் பருவத்தைக் கண்டு மகிழ்ச்சியடையாது விரைந்து துறவறத்தை மேற்கொள்ள விரும்புவாய்.)

(க - து.) இல்லற வாழ்க்கை முதுமைப் பருவத்தில் நன்மை தருவதாகா திருத்தலின், இளமைப் பருவத்தைக் கண்டு மகிழ்ச்சி யடையாது விரைந்து துறவறத்தை மேற்கொண்டு செய்யவேண்டியதைச் செய்யவேண்டு மென்பதாம்.

ஆசையுடையவர் துறவற மார்க்கத்திற் செல்லாரெனல்.

(3) சொல்லோசை குறைந்து, தடிபிடித்துக்கொண்டு, தளர்ந்த நடைகொண்டு, பற்கள் விழுந்து, தேகம் (மேலாய், சீ. இது கெட்டதென்று) பழிக்கப்படு மளவும் இவ்வாழ்க்கையிலிருந்து காமமார்க்கத்திற் செல்லுங் கருத்துடையவர்க்கு இன்பத்தைத் தரும் மார்க்கத்திற் செல்லும்வழி யில்லையாம்.

காமமார்க்கம் - பொன் வேண்டும், பூமி வேண்டும், பெண் வேண்டுமென்று கருதி அவற்றைத் தேடும் (தீய) ஒழுக்கமாம்; இன்பத்தைத் தரும் மார்க்கம் - துறவற வொழுக்கமாம்.

(க - து.) அறிவிலார் உலகவின்பத்தைக் கருதி, துறவறத்தை மேற்கொண்டு சுகமடையாது சாமளவும் சஞ்சலமடைகின்றன ரென்பதாம்.

பெண்களின் இளமையைக்கண்டு மயங்குதல் கூடாதெனல்.

(4) முதுகுவளைந்து, தளர்ச்சியடைந்து, தலை நடுக்கங் கொண்டு, தடியை யூன்றிக்கொண்டு தள்ளாடித் தள்ளாடிச் செல்லுகின்ற இவளிடத்தும் இவளது கையிலுள்ள [illegible]

கோல் (இவளுக்கு) அம்மனைக்கோலா யிருந்த நாளில் (அவளது இளமைப் பருவத்தில்) (உறுதியில்லாத) மோகத்தைக் கொண்ட புருஷர்க்கு ஆசை யுண்டாயிருக்கும்.

அம்மனைக்கோல் - அம்மானை யாடுதற்கு கருவியாயுள்ள தடி. அம்மானை யென்னும் ஒருவகை விளையாட்டாகும் பருவம் இளமைப் பருவமாம்.

(க - து.) முதுமைப் பருவத்தால் அருவருத்தற்குரிய ஸ்திரீ இளமைப் பருவத்தில் பிறர் விரும்புதற்குரிய அழகுடையவளா யிருந்தாள்; அதனால் பெண்களின் இளமையைக் கண்டு மயங்கி, இல்லறத்திலேயே யிருந்துவிடுதல் கூடாதென்பதாம்.

பெண்களின் இளமைப் பருவத்தைக் கண்டு மயங்குதல் கூடாதென்பதற்கு மற்றொரு காரணங் கூறல்.

(5) எனக்குத் தாயாயிருந்தவள் என்னை (பெற்ற காலத்திலோ, பெற்ற சிறிது காலங் கழித்தோ) இவ்வுலகத்தை விட்டு விட்டுத் தனக்கொரு தாயைத் தேடிச் சென்றனள் (இறந்தனள்); அவளுக்குத் தாயாயிருந்தவளும் அவ்வாறானாள்; அதனால் இவ்வுலகமானது ஒருதாய் மற்றொரு தாயைத் தேடிக்கொண்டு செல்லும் வழமையுடையதா யிருக்கின்றது.

(க - து.) தாயும் தான்பெற்ற பிள்ளையை விட்டிறந்து போகின்றாள்; அதனால் இளமைப் பருவமுடையவர் முதுமைப் பருவம் வருமளவு மிருப்போமென் றெண்ணாது விரைந்து துறவறத்தை மேற்கொள்ளல் வேண்டுமென்பதாம்.

அறிவுடையாரிடத்து இளமைப் பருவத்தைக் கண்டு மகிழ்தலில்லை யெனல்.

(6) வெறியாடலைச் செய்கின்ற பலிக்களத்தில் (வெட்டுதற் பொருட்டுக் கொண்டுவந்துள்ள) ஆடு கத்தியை வைத்துள்ள பூசாரியினது கரத்தில் தளிர்கள் நிறைந்த பூமாலை தன் முன்னே (தொங்கி) அசையக்கண்டு அதனை யுணவாகவுண்டு களிப்பது போன்ற களிப்பு அறிவுடையாரிடத்து இல்லையாம்.

வெறியாடல்-தெய்வமாடல்; பலிக்களம்-பிராணிகளைக் கருவியால் வதைசெய்யுமிடம். பலிக்களத்துள்ள ஆடு பூசாரியின் கையிலுள்ள பூமாலையைக் கண்டுகொண்ட களிப்பு மிகைப்படா

மன்றோ? அங்ஙனமே ஒருவர் தம்மிளமைப் பருவத்தைக் கண்டு கொண்ட களிப்பும் மிக வற்பமமென இதனால் உணர்த்தியவாறறிக.

(க-து.) ஆடு தன்னைப் பலியிடுமிடத்துப் பூசாரியின் கரத்திலுள்ள மாலையின் தளிரை யுண்டுகளிப்பதுபோல அறிவுடையார் இளமைப் பருவத்தைக்கண்டு களிப்படையாரென்பதாம்.

இளமைப் பருவத்தைக்கண்டு ஏமாந்துபோதல்
கூடாதெனக் கூறல்.

(7) இளமைப் பருவமானது குளிர்ச்சி பொருந்திய சோலையினிடத்துள்ள பயன்தரும் மரத்தின் கனிகளெல்லாம் உதிர்ந்து வீழ்ந்ததைப்போல்வதாம்; (ஆதலால் அறிவில்லாதவரே! நீங்கள்) மிகப்பெரியதான வேல்போலும் கண்களையுடையவளென்று இவளை விரும்பாதிருங்கள்; பின்னொரு காலத்திலிவளும் (முதுகு) குனியப்பெற்றுக் கோலையே கண்களாக வுடையவளாவள்.

பயன்தரு மரம்-பூ பிஞ்சு முதலிய பயன்களைத் தருதற்குரிய விருட்சம்; பயன்-பிரயோசனம். கோலையே கண்களாக வுடையவளாதல் என்பது கோல் பிடித்துக்கொண்டு தள்ளாடித் தள்ளாடி நடத்தலையுடையவளாதலாம்.

(க-து.) இளமைப்பருவம் மரத்தின்கனி விரைந்து உதிர்வதுபோல்வதாம்; ஆகவின், பெண்களின் இளமைப் பருவத்தைக்கண்டு மயங்கி யேமாந்துபோதல் கூடாதென்பதாம்.

அறிவுடையார் இளமைப்பருவம்
என்று மிருக்குமென் றெண்ணுவதின்றெனல்.

(8) (தங்களுக்கு இன்னும்) வயது எவ்வளவிருக்கும்? பல்லின் உறுதி யெவ்வாறிருக்கின்றது? (உண்ணும்போது பதார்த்தங்களைப் பற்களின்) இரண்டு முனைகளாலும் (மென்று) உண்பீரோ வென்று (பிறரால் வயோதிகரது) உள்ளம் முறையாக ஆராய்ச்சி செய்யப்படுதலால், அறிவுடையார் உடம்பினிளமைப் பருவத்தை (நிலையாக) எண்ணார். பிறர்-உறவினர், நட்பினர் முதலாயினோர்; உள்ளம் மனக்கருத்து.

(க-து.) அறிவுடையார் வயோதிகரிடத்துப் பிறர் வந்து உமக்கென்ன வயது? பல்லுறுதியாக விருக்கின்றதா? வென்றற்

றொடக்கத்தனவாக விசாரித்து வருதலைக் கவனித்து, இளமைப் பருவத்தை நிலையாகக்கருதி மயங்காதிருக்கின்றனரென்பதாம்.

பின்னை அறஞ்செய்வோமென் றெண்ணுவது
பெரும்பிழையாமெனல்.

(9) பெருங்காற்றடிக்கும்போது அதனால் (ஒரு மரத்தில்) முற்றியிருந்த கனிகள் வீழாதிருக்க, (முற்றாதுள்ள) நல்ல காய்கள் உதிர்தலுமுண்டு; (அதனால், அறிவிலிகளே! நீங்கள்) தருமகாரியத்தைப் பின்னாக்கிச் செய்வோம்; பாம்போது இளமைப் பருவமுடையவரா யிருக்கின்றோமென்று நினையாது பொருளுள்ளபோதே அதனைச் சிறிதும் மறைத்துவையாமல் தருமத்தைச் செய்வீராக.

(க-து.) முதியவரே சாவர், இளையவர் சாவாரென்னும் நியமமில்லை யென்பது, பெருங்காற்றடிக்கும்போது கனிகள் வீழாதிருப்பதாலும், காய்கள் வீழ்வதாலும் தெரிகின்றது. அதனால், பின்னே பார்த்துக்கொள்ளுவோ மென்றெண்ணாமல் அறத்தை விரைந்து செய்தல் வேண்டுமென்பதாம்.

யமன் வருவது நிச்சயமாகலின், இளமைப் பருவத்தைக் கண்டு,
ஏமாந்து போகாது விரைந்து அறஞ்செய்ய வேண்டுமெனல்.

(10) ஆயுள்முடிந்த ஆள்களைத் தேடிப்பார்த்துத் திரிகின்ற கருணையில்லாத யமனிருக்கின்றான்; அதனால் (அறிவிலிகளே! நீங்கள்) தோட்கோப்புப் போன்றதாகிய தருமத்தை இளமைப் பருவத்திலேயே செய்து, (துணையாகக்) கொண்டு பிழைத்துப் போவீராக. (வயிற்றிலுள்ள) கருவை வெளிப்படச்செய்து, சிசுவைத் தாயானவள் கூவியழுது கதறும்படி கொண்டுபோய் விடுகின்றான் யமன்; அதனால் அவனது வஞ்சகச்செயலைக் கவனித்தொழுகுதல் (உமக்கு) நன்மையைத் தருவதாம்.

தோட்கோப்பு-(பிரயாணஞ் செய்பவர் துணைக்குதவியாகத்) தோளில் கோத்துக்கொள்ளும் சோற்றுமூட்டை.

(க-து.) யமன் குழந்தையையும் தாயலறக் கொண்டுபோய் விடுகின்றான்; அதனால் இளமைப் பருவத்தைக்கண்டு மயங்காது, மறுமைக்குற்ற துணையாக அறத்தை விரைந்து செய்தல் வேண்டுமென்பதாம்.

சிந்தனாமிர்தம்.

(1) பயமின்றித் துணிச்சலாய் ஒரு காரியத்தில் பிரவேசித்தல் தைரியமாகாது; ஆனால் நியாயமான ஒரு விஷயத்தில் பிடிவாதமான மனதுடன் முயற்சித்தலே தைரியமாகும்.

(2) அந்நியர்பால் எவற்றை அநீதம் என்று நாம் கொள்ளுகிறோமோ அவை நம்மை மேலான நடவடிக்கைகளுக்கும், உயர்ந்த விதமான உயிர் வாழ்க்கைக்கும், அகண்ட தர்ம குணத்துக்கும், மன்னிக்கும் சுபாவத்துக்கும், ஒவ்வொரு நியாயக் கேட்டையும் சரிப்படுத்தவும், ஒவ்வொரு கண்ணினுமுள்ள கண்ணீரைத் துடைக்கவும் சித்தமாயுள்ள சர்வஞ்ஞத்துவக் கடவுளின் மீது ஆழ்ந்த நம்பிக்கை வைத்தலுக்கும் நம்மைத் தூண்டக்கூடியதாக. (ஆல்பர்ட் வெப்)

(3) வீரம் என்பது ஒரு குலத்தாரின் அல்லது வம்சத்தாரின் அல்லது தேசத்தாரின் அறிகுறியாகுமாயின், அது சிறப்பாக ஒவ்வொரு குலமகனிடத்திலும், குலமகளிடத்திலும் விளங்கல் வேண்டும். (ரஸ்கின்)

(4) தேசங்களில் நன்றாக உழவுத் தொழில் செய்தல் அவற்றின் செழிப்புக்குத் தக்க மாதிரியல்ல; ஆனால் அவற்றின் சுவாதீனத்துக்கும் கட்டவிழ்ந்த தன்மைக்கும் தக்கவாறும். (மாண்ட்டெஸ்க்)

(5) எல்லாக் குற்றங்களுக்கும் மேலான குற்றம் எதுவெனின், அது ஒரு குற்றத்தையும் உணராதிருப்பதே என்று நான் சொல்ல வேண்டும். (கார்லைல்)

(6) நாகரீகத்தின் சாராம்சம் தன்னடக்கம் அல்லது சிக்கிப்பு என்பதே. (பிரே)

(7) ஒரு தேச சரித்திரத்தில் முழுவிருப்பத்தை யுண்டுபண்ணுவ தெதுவெனின், அது அத்தேசத்தின் ஏழைகளின் கஷ்ட நஷ்டங்களும், அதிர்ஷ்டமுமேயாம். (எமெர்சன்)

(8) மனோதிடமிருக்குமாயின் ஒருவன் எவ்வளவு செய்யலாமென்பதும், சுவாதந்திரியத்தோடு கூடியிருப்பானாயின் தன்னை எவ்வளவு தூரம் உயர்த்திக்கொள்ளலாமென்பதும், நமக்குத் தெரியா. (வான்மல்லர்)

(9) சுக்கானுக்குப் பதில் சொல்லாதவன் பாறைக்குப் பதில் சொல்லவேண்டும். (ஆர்ச்பிஷப் ஹெறன்)

(10) சன்மார்க்கமானதாய் இல்லாததொன்றும் இராஜாங்க முறைக்கு ஒத்ததாயிருக்க முடியாது. (கிளாட்ஸ்டன்)

(11) ஒருவன் எவற்றிற்காக உயிர்வாழ வேண்டுமெனின், உதவியில்லாமலிருக்கும் சத்விஷயத்திற்குமே, எதிர்ப்பைக் கோருந் தீமைக்கும், எதிர்காலத்தில் விளையப்போகிற நன்மைக்கும், தான் செய்யக்கூடிய நன்மைக்குமேயாம். (ஜி. எல். பாங்க்ஸ்)

(12) நம் தேசமும், நம் முழுதேசமும், வேறொன்றையும் பாராட்டாத நம் தேச எண்ணமுமே நமக்கு இலக்காக இருத்தல் வேண்டும். (டி. வெப்ஸ்டர்)

(13) ஒருவனுடைய பாரத்தைச் சுமப்பதைக் காட்டிலும் சுமையுள்ளவனைப் பலவானாகச் செய்து அவனையே தன் பாரத்தைச் சுமக்கச் செய்வது மேலானதாகும். (சீனப் பழமொழி)

பரோபகாரம்.

1. சந்தனமரத்தின் அடி சர்ப்பங்களாலும், சிகரம் பட்சிகளாலும், சாகை குரங்குகளாலும், புஷ்பம் வண்டுகளாலும் ஆசிரயிக்கப் படுகின்றன. இங்ஙனம் சத்துக்களின் விபூதி பரோபகாரத்தின் பொருட்டே உதவுகின்றது.

2. சம்பத்து ஜலத்திலுண்டாகும் அலையைப்போல் நாசத்தை யடைவதாம், யௌவனம் 3—4 தினங்க ளிருப்பதாம், சரத்காலத்திலுண்டாகும் மேகபங்க்திகளைப்போல் சிதறிப்போகும் தனத்தினாலென்ன பயன்? பரோபகாரமே செய்தல் வேண்டும்.

3. சுரோத்திரமானது சப்தங்களைக் கேட்கும் பொருட்டேயன்றிக் குண்டலமணிவதன் பொருட்டன்றும். கை தானஞ் செய்யும்பொருட்டேயன்றிக் கங்கணமணிதற் பொருட்டன்றும். சரீரமானது பரோபகாரஞ் செய்யும் பொருட்டேயன்றிச் சந்தனத்தைப் பூசி அலங்கரித்துக் கொள்ளும் பொருட்டன்றும்.

4. எவர்கள் சுய நலத்தை விட்டுப் பரோபகாரத்தையே செய்கின்றனரோ அவர்களே சத்புருஷராவர். எவர்கள் சுய நலத்தைவிடாது பரோபகாரஞ்செய்கின்றனரோ அவர்கள் சாமான்ய

புருஷர்களாவர். எவர்கள் சுபகலத்தின் பொருட்டுப் பரோப காரஞ் செய்கின்றனரோ அவர்கள் மனிதராக்ஷச ரெனப்படுவர். எவர்கள் ஒருவர் செய்யும் பரோபகாரத்தைக் கெடுக்கின்றனரோ அவர்களை யின்னாரென்று கூறத்துணியோம்.

5. கோடிக்கணக்கான கிரந்தங்களில் எது கூறப்பட்டிருக்கின் றதோ அதனைப் பாதிச் சுலோகத்தினால் கூறுகின்றேன். அஃதா வது பரோபகாரம் புண்யத்தின் பொருட்டும், பரத்துரோகம் பாபத்தின் பொருட்டுமாம்.

பரான்னம்.

1. வித்தையை விலைக்குக் கொடுத்தலும், பரஸ்திரீ கமனஞ் செய்தலும், பரான்னத்தைப் புசித்தலும் ஆகிய இம்மூன்றும் புருஷர்கட்கு மிகவும் இழிவைக் கொடுப்பனவாம்.

2. ஒவ்வொரு தினமும் நாக்கு ருசியான பரான்னத்தை விரும்பி ஜீவிப்பவனது ஜன்மம் பயனற்றதாம்.

3. துஷ்டர்களிடத்திருந்து சர்ப்பத்தைப் பார்த்துப்பயப்படு வதுபோல் பயந்து விலகுபவனாகவும், பரான்னத்தை விஷம்போல் பார்ப்பவனாகவும், ராக்ஷசியைப் பார்த்தால் எங்ஙனமோ, அங்ஙனம் ஸ்திரீகளிடத்திருந்து விலகுபவனாகவு மெவனிருக்கின்றானோ அவன் கல்வி கற்றவனாவன்.

4. அந்நிய தேசத்தில் வாசஞ் செய்யும் ரோகியும், பரான் னத்தைப் புசிப்பவனும், பரர்களை ஆசிரயித்து உபஜீவனஞ் செய் பவனுமாகிய இவர்கள் ஜீவித்திருப்பதைவிட மரிப்பது விசிராந் தியைக் கொடுக்கும்.

5. மூர்க்கத்தன்மை கஷ்டமாம். யௌவனத்தில் தரித்தி ரத் தன்மை மிகவும் கஷ்டமாம். பரக்கிரக வாசமும், பரான்ன மும், கஷ்டத்திலும் கஷ்டமாம்.

யாசகம்.

1. சரீரத்தில் நடுக்கமும், வாயில் மலினத் தன்மையும், தீனத் தன்மையும், குளறிய சொல்லும் ஆகிய இந்தச் சின்னங் கள் மரண காலத்தி லிருப்பன போன்று யாசகனிடத்து மிருக் கின்றன.

2. திருணத்திலும், பஞ்சிலும், யாசகன் ஸ்தூலமுடையவ னாயிருந்த போதிலும் லகுத் தன்மையை யடைகின்றான். ஆனால் இவன் வாயுவால் ஏன் அடித்துக்கொண்டு போகப்படுகின்றா னில்லையெனின், தன்னிடத்தும் யாசிப்பானென்னும் ஸம்சயத் தினாலாம்.

3. தேஹி என்னும் வசனத்தைக் கேட்ட மாத்திரத்தில், சரீரத்திலிருக்கும் ஸ்ரீ, லஜ்ஜை, தீ (புத்தி), திருதி (தைரி யம்) கீர்த்தி என்னும் பஞ்ச தேவதைகள் வாயின் வழியாக வெளியே செல்லுகின்றன.

4. தரித்திரமென்னும் அக்னியால் தபிக்கப்பட்டவன் சந் தோஷமென்னும் ஜலத்தினால் சாந்தியை யடைவன். யாசகனது உள்ளிருக்கும் ஆசையாகிய அக்னி பற்றிய காலத்து, அதனை யெதனால் சாந்திசெய்தல் கூடும்?

5. தேஹி என்னும் அக்ஷரத்துடன், வாயின் வழியாகப் பிராணன் வெளியே செல்லுகின்றது. கொடுக்கின்றேனென்னும் தாதாவின் வாக்கைக் கேட்டமாத்திரத்தில் காதின் வழியாக மீண்டும் (பிராணன்) உள்ளே பிரவேசிக்கின்றது.

யாசிப்பவனது சற்குணங்களை, யாசகமானது சேவை மானத் தைக் கெடுப்பதுபோலவும், சந்திரன் தமசைக் கெடுப்பதுபோல வும், ஜரை லாவண்யத்தைக் கெடுப்பதுபோலவும், ஹரிகதா சிர வணம் துரித (பாவ)த்தைக் கெடுப்பதுபோலவும் கெடுக்கின் றது.

7. காசின்பொருட்டு நீசர்களைக் கதலிப் பழத்தின் ரசத்தைப் போன்ற மதுரமாகிய வாக்கினால் நான் யாசிக்கமாட்டேன்; மற்றோ, பழங்கந்தையை யுடுத்திக்கொண்டே குசேலருக்குத் தனத்தைக் கொடுத்தவரும், ஸ்ரீபதியும், தயாசிந்துவும் ஆகிய பகவானை நான் ஆசிரயிப்பேன்.

8. அக்ஷரங்களைப் படித்தனையா? அல்லது இன்றோ? ஒரு கால் படித்திருந்தபோதிலும் மறந்தனையா? என்னும் யாசகர்க ளது சம்சயத்தை நிவாரணஞ் செய்யும்பொருட்டு "ந" என் னும் அக்ஷரத்தைச் சிருஷ்டித்தார்.

9. சர்வ சற்குணங்களும் நிறைந்தவன், புத்திசாலி, சாது, மகாத்மா, சூரன், ஒழுக்கமுடையவன், பொறுமையுள்ளவன்

முதலிய யாவரும் தேஹி என்னும் வசன உச்சாரண மாத்திரத்தினால் மிகத் தாழ்வை யடைகின்றனர். ஆகையினால் தேஹி என்னும் வசனத்தைக் கூறுதொழிக.

தரித்திரம்.

1. ஏ தரித்திரமே! உனக்கு நமஸ்காரம். உன்னுடைய பிரசாதத்தினால் நான் மகாசித்தியை யடைந்துவிட்டேன். அஃதியாதெனின்; நான் உலகமுழுமையும் பார்க்கின்றேன்; ஆனால் என்னை ஒருவரும் பார்ப்பதில்லை; இஃதொரு மகா சித்தியன்றோ!

2. இவ்வுலகத்தில் தனவான்களுக்கு அன்னியர்களும் பந்துக்களாய் விடுகின்றார்கள். தரித்திரனுக்குப் பந்துக்களும் அன்னியர்களாகி விடுகின்றார்கள்.

3. இரவில் முட்டியும், பகலில் சூரியனும், இரண்டு சந்தியா காலங்களில் அக்னியும், குளிரைப் போக்குவதற் குதவிசெய்கின்றன.

4. தரித்திர அவஸ்தையை யடைந்த புருஷனது மகத்தான புத்தியும், அரிசி, உப்பு, விறகு, நெய், வஸ்திரம் முதலியவற்றின் சிந்தையினால் நாசத்தை யடைகின்றது.

5. தனமின்றி உறவினர்களின் கூட்டத்தில் உறைவதைவிடப் புலிபாம்பு முதலிய ஜந்துக்கள் நிறைந்த வனத்தில் வாசஞ்செய்தலும், மரத்தடியில் உறைதலும், பத்திர பலங்களைப் புசித்தலும், புற்றரையைப் படுக்கையாகக் கொள்ளுதலும், மரவுரியைத் தரித்தலும், மிக மேன்மையாம்.

6. இந்த வஸ்திரம் என்னுடைய பிதாவின் அங்கத்திற்கு அலங்காரமாக விருந்தது; பாட்டன் முதலியோர் யௌவனகாலத்தில் தரித்திருந்தது மிதுவே. அஃதிப்போது என்னால் தரிக்கப் படுகின்றது. என்னது புத்திரர்களும், பௌத்திரர்களும் இதனையே தரிப்பார்கள்.

7. நித்திரை செய்கின்றான்; ஸ்நானஞ் செய்கின்றான்; போஜனஞ் செய்கின்றான்; வேலையாக விருக்கின்றான்; உள்ளேயிருக்கின்றான்; இப்போது பார்க்க அவசரமில்லை; காலையில் வா என்றிவ்வாறு தனவான்களது வாயில் காப்போர்களால் தடுக்கப்

பட்ட அதிதிகளாகிய எங்களை, ஏ லக்ஷ்மிதேவி! உனது தாமரை மலர்போன்ற கடைக்கண்ணினால் சிறிது கடாட்சித்தருள்வாய்.

ஆசை.

1. ஏ ஆசையே! பகவானான கிருஷ்ணனிடத்திலுங் கூட உன்னுடைய சக்தி காணப்பட்டது; மனிதர்களிடத் திருப்பதைப் பற்றி யாது கூறவேண்டும்? ஏனெனின், சர்வலோக வியாபியாகிய பகவான் தனது விஸ்வரூபத்தைவிட்டு ஆசையினால் மிகச் சிறிதாகிய வாமன ரூபத்தைக் கிரகித்தானன்றோ?

2. ஜரையானது முகத்தை ஆக்ரமித்துக் கொண்டது; தலையில் வெண்மையாகிய நரைகள் வியாபித்திருக்கின்றன. அங்கங்களெல்லாம் தளர்வுற்றன. ஆயினும் ஆசையொன்று மாத்திரம் யௌவனப் பருவத்தை யடைந்திருக்கின்றது.

3. ஆசையென்னும் ஒரு சங்கிலியானது மனிதர்களுக்கு மிகவும் ஆச்சரியத்தைக் கொடுப்பதாக விருக்கின்றது; ஏனெனின், சாதாரணமான சங்கிலியால் கட்டுண்டவன் ஓரிடத்திலிருக்கின்றான். ஆசையென்னும் சங்கிலியால் கட்டுண்டவன் எங்கும் அலைகின்றான். சங்கிலியை யறுத்து விட்டவுடன் முடவனைப்போல ஓரிடத்தி லிருக்கின்றான். இஃதன்றோ ஆச்சரியம்.

4. விருத்தாவஸ்தை வந்துவிட்டது; அங்கங்கள் தளர்வுற்றன; பற்கள் விழுந்துவிட்டன; தடியைக் கையிலெடுத்துக் கொண்டு நடக்கச் சக்தியற்றவனாகித் திரிகின்றான்; ஆயினும் ஆசையைவிட் டொழிக்கின்றானில்லை.

5. தனமிருக்கின்றதென்னும் ஐயத்தினால் பூமியைத் தோண்டிப் பார்த்தோம்; பர்வதங்களிலுள்ள தாதுக்களைக் கொண்டு வந்து தங்கமாகுமென்னு மெண்ணத்தினால் புகைத்துப் பார்த்தோம்; தனவாஞ்சையினால் சமுத்திரத்தைத் தாண்டிப் பார்த்தோம்; அரசர்களையும், பிரபுக்களையும் மிகக் கஷ்டப்பட்டுச் சேவித்தோம்; மந்திரயாகஞ் செய்யும் பொருட்டு, இரவை மயானத்தில் கழித்தோம். இதுகாறும் காமால் ஒரு திருணமும் அடையப்படவில்லை. ஏ ஆசையே! இனிமேலாயினும் என்னை விட்டொழிவாய்.

6. சொந்தமாக இருப்போன் நூறு கிடைக்கவேண்டு மென்று ஆசைப்படுகின்றான்; நூறு கிடைத்தால் ஆயிரம்வேண்டு மென்றும், ஆயிரம் கிடைத்தால் லட்சம் வேண்டுமென்றும், லட்சம் கிடைத்தால் ஒரு சிற்றரசனாக வேண்டுமென்றும், ஒரு சிற்றரசனானால் சக்ரவர்த்தியாக வேண்டுமென்றும், சக்ரவர்த்தியானால் இந்திரபதவி வேண்டுமென்றும், இந்திரபதவி கிடைத்தால் பிரம்மபதவி வேண்டுமென்றும், பிரம்மபதவி கிடைத்தால் விஷ்ணுபதவி வேண்டுமென்றும், விஷ்ணுபதவி கிடைத்தால் சிவபதவி வேண்டுமென்றும் இவ்வாறு ஒன்றன்பின்னொன்று மேலாகிய விஷயங்களை விரும்புகின்றான். ஆசைக் கொருகாலும் அவதியின்றாம்.

7. ஆசையென்னும் நதிக்கு மனோராஜ்யம் ஜலமாம்; திருஷ்ணை தரங்கமாம்; ராகம் முதலையாம்; விதர்க்கம் பட்சிகளாம்; மோகம் சுழியாம்; சிந்தை அதன் கரைகளாம்; தைர்யமாகின்ற விருட்சத்தை நாசஞ் செய்வதாம்; இத்தகைய அதிக கனமாகிய நதியைச் சுத்த அந்தக்கரணமுடைய யோகிகள் கடந்து சந்தோஷத்தை யடைகின்றார்கள்.

ஒரு குகை.

கள்ளிக்கோட்டையைச் சேர்ந்த மண்ணூர்காட்டில், கல்தச்சர்கள் மலையில் கல்வெட்டிக் கொண்டிருக்கும்போது ஒரு சதுரப் பனிக்கருக்கல் தென்பட்டது. அதனைப் பெயர்த்துப் பார்த்தபோது அது ஒரு குகையின் மூகமூடியாக இருந்தது; அது 4-பேரிருந் தற்குரியதாயிருந்தது; அந்தக் குகையின் தரை சலவைக்கல் பரப்பியதாக இருந்தது; அங்குப் பூஜைக்குவேண்டிய சாமான்களும், ஒரு விளக்கும், ஒரு சொட்டாத்தடியும், ஒரு கத்தியு மிருந்தன. இந்தக்குகை காட்டபட்டதாகத் தெரிகின்றது. அநேகர் வந்து விநோதமாகப் பார்க்கின்றனர்.

ஒரு விநோதசம்பவம்.

தென்மலையாளத்தில், கொடக்கலூரில், சென்ற செவ்வாய்க் கிழமை பிற்பகல் 2-மணிக்கு 5-6 கற்கள் ஆகாயத்திலிருந்து விழுந்தன. கல் விழுவதற்குமுன்னர், பேரிடிமுழக்க சத்தம் கேட்டது. இந்தக் கற்கள் கனமாயிருக்கின்றன; கறுப்புச் சலவைக் கற்களைப்போலிருக்கின்றன. அவ்விடத்துள்ள சப்மாஜிஸ்டிரேட் வந்து கற்களை யெடுத்துக்கொண்டு போய்விட்டனர். கொச்சி டிஸ்டிரிக்ட் மாஜிஸ்டிரேட் வந்து மேற்படி சம்பவத்தைப்பற்றி விசாரணைசெய்து வருகின்றனர்.

Issue தொகுதி 12, பகுதி 11 (June 1917) not found.

18 AUG 1917
MADRAS

சக்ரவர்த்தினி.

" கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றீண்டு வாரா நெறி ".

VOL-12 தொகுதி-12 | July - 1917. ஜூலை 1917. | No-12 பகுதி-12

(Special to Chakravarthini).

நாலடியார் வசனம்.

3-வது யாக்கை நிலையாமை.

அஃதாவது யாக்கையினது நிலையாமையைக் கூறுதல்.

யாக்கை - உடம்பு.

இளமை நிலையாமையை யுணர்ந்தவர்க்கன்றி மற்றவர்க்கு யாக்கை நிலையாமை செவ்விதின் விளங்காமையின், அது இளமை நிலையாமையின் பின் வைக்கப்பட்டது.

எத்தன்மையுடையாரும் இறந்துபோவரெனல்.

(1) மலைமீது தோன்றும் மதிபோல யானைத் தலைமீதுயர்த்த வெண்கொற்றக்குடையையுடைய அரசரும் பூமியின்கண் மாண்டொழிந்தனரென்று (பிறரால்) எடுத்துச் சொல்லப்பட்டனர்; அங்ஙனம் சொல்லப்படாமல் உயிரோடிருந்தவர் இவ்வுலகத்தில் (ஒருவரும்) இலர். மதி - இங்குப் பூரணச்சந்திரன்.

(க - ரு.) யானைமீதேறி வெண்கொற்றக் குடைநிழற் கீழ்ச் சென்ற அரசரும் இறந்தாராயின், இவ்வுலகத்தில் இறவாதிருப்பவரெவ ரென்பதாம்.

வாழ்நாள் குறைந்துகொண்டே வருதலின் தருமத்தை விரைந்து செய்தல் வேண்டுமெனல்.

(2) (உயிர் உடம்போடுகூடி) வாழுகின்ற நாள்களுக்கு அளவு செய்து காட்டிக் கதிர்களால் விளங்குகின்ற சூரியன் (மக்களுக்

குப் பயன்படாது) அழிந்தநாள் (இனி) உண்டாகாவாறு (அஸ்தமித்து அஸ்தமித்து) உதயமாய் வருகின்றான்; ஆதலால், (அறிவில்லாதவரே! நீங்கள் உங்களுடைய) வாழ்நாள் கெடுவதற்கு முன்னே (உயிர்களுக்கு) உபகாரத்தைச் செய்யுங்கள்.) (நீமெய்ப் போது மிருப்போமென் றெண்ணுதிர்) எத்தன்மையுடையாரும் இவ்வுலகத்தில் சாவாதிரார்.

(க - து.) உயிர்களின் வாழ்நாளை யளவுசெய்து காட்டுகின்ற சூரியன் அஸ்தமித்து அஸ்தமித்து உதயமாய் வருகிறான்; ஆதலால் தருமத்தை மறுமைக்குத் துணையாக விரைந்து செய்தல் வேண்டுமென்பதாம்.

மணமாட்சியுடையார் யாக்கை நிலையாமையை மறவாது
அறநெறியி லொழுகுவாரெனல்.

(3) மாட்சிமையுடையாரது மனம், ஒருவனுக்கு மன்றமெல்லாம் சப்திக்க மணக்கோலத்திற்குரிய வாத்தியமா யிருந்தவை, பின்பு அன்றைய தினமே அம்மன்றத்திலேயே அவனுக்குப் பிணக்கோலத்திற்குரிய வாத்தியமாய்ச் சப்தித்தது முண்டாமென்று கருதி, (பிறவித் துன்பத்தினின்றும்) தப்பிப்போகும் மார்க்கத்தை யுறுதியாகப் பற்றியிருக்கும். மன்றம்-கல்யாணவீடு.

(க - து.) அறிவுடையார் மணஞ்செய்து கொண்டவன் மணஞ்செய்து கொண்ட தினத்திலேயே யிறத்தலும் கூடுமென்று நிச்சயித்து, விரைந்து அறத்தைச் செய்ய முயலுவாரென்பதாம்.

செத்தாரைச் சாவார் சுமந்தெடுத்துச்சென்று
தீமூட்டி யெரித்து விடுகின்றனரெனல்.

(4) சாவப்போகின்றவர் செத்தவர்களைக் குறித்து (அவர்கள் செத்தவிடத்திற்குச்) சென்று பிணப்பறையை யொருமுறை கொட்டுவார்கள்; பின் சிறிதுபோது தாமதித்து (அப்பறையைக்) கொட்டுவார்கள்; மூன்றாவது முறையாக (அப்பறையைக்) கொட்டுவதற்குள் (பிணத்தை ஆடையால்) மூடி (பாடையில் வைத்து) எடுத்துக்கொண்டு நெருப்புச் சட்டியைத் தூக்கிக்கொண்டு சுடுகாட்டிற்குச் செல்லுகின்றனர். இது நன்றாயிருக்கின்றது! உலக வாழ்க்கையை நம்பி அறத்தைச்செய்யா தேமாந்து போகின்றவனே! நீ இதனை (யாலோசித்துப்) பார். கொட்டுதல்-அடித்தல்.

(க - து.) இறந்தவரை யிறக்கப்போகிறவர் பிணப்பறையை மூன்றாவது முறையாக அப்பறையைக் கொட்டுவார் கொட்டுவதற்குள் சுடுகாட்டிற்குக் கொண்டுபோய், தீமூட்டிக் கொளுத்திவிடுகின்றன ரென்பதாம்.

பிணப்பறை யாக்கை நிலையாமையை யுணர்த்துகின்றதெனல்.

(5) சுற்றத்தார் கூட்டமாகக் கூடிநின்று கலிகொண்டு கூவிக் கதறியழ, பிணத்தைத் தூக்கிக்கொண்டு சுடுகாட்டில் விடுகின்றவரைக் கண்டிருந்தும், கலியாணஞ் செய்துகொண்டு இவ்வில்லற வாழ்க்கையில் (வாழுவோம்; அதில் சுகம் நிச்சயமாக) உண்டு உண்டு என்று கருதுகின்ற அறிவுள்ளவனுக்குத் தொண் தொண் என்று (தன்னைக்கொட்டுவார் கொட்டும்போது) சப்திக்கின்ற பிணப்பறையானது (இல்லற வாழ்க்கையில் சுகம் நிச்சயமாகவில்லையென்று) அறிவிக்கின்றது.

அறிவுள்ளவனென்பது இங்கு இகழ்ச்சிக் குறிப்புச்சொல்; அஃதாவது அறிவில்லாதவனென்பதாம். தொண் தொண் தொண் என்பது ஒலிக்குறிப்பு.

(க - து.) கலியாணஞ் செய்துகொண்டு சுகமாக வாழலாமென்று கருதுகின்றவனுக்குப் பிணப்பறையானது தன்னொலியால் யாக்கை நிலையுடையதன்றென் றுணர்த்துகின்றதென்பதாம்.

உடம்பினின்றும் உயிர் நீங்கியபின், அவ்வுடம்பிற்கொரு
மேன்மையு மின்றெனல்.

(6) தோற்பையென்னு முடம்பிலிருந்து புண்ணிய பாவமென்னும் வினைகளைச் செவ்வையாகச் செய்து, (அவ்வினைகள் தம்பயனாகிய சுகதுக்கங்களை) அனுபவிக்கச் செய்யுமிடத்து அனுபவிக்கின்ற கூத்தன், (தான் வசிக்கும் அவ்வுடம்பினிருந்து) நீங்கிய காலத்தில் (அவ்வுடம்பைக்) கயிற்றாற் கட்டி யிழுத்தாலென்ன பயன்? (அவ்விடத்தை) நன்றாக ஆராய்ச்சிசெய்து (அதில்) அடக்கஞ்செய்தாலென்னபயன்? கண்ட விடத்தில் போட்டாலென்னபயன்? பலரும் (கண்டு சீ இது கெட்டதென்று கூறி) பழித்தாலும் என்ன பயன்? (புகழ்ச்சி இகழ்ச்சி யென்பனவற்றுள் ஒன்றும் அதற்கில்லை).

தோற்பை-தோலாலாகிய பை. கூத்தன்—சீவன். சீவன்தனக்கு கிடைத்த வுடம்பிற்கேற்றவாறு தன்னை ஆண் பெண் அலி யெனப் பாவித்து நடித்தலின், கூத்தனென்று கூறப்பட்டிருக்கின்றது.

(க-து.) புகழ்ச்சி இகழ்ச்சி யென்பனவுடம்போடு கூடிய வுயிர்க்கல்லாமல், உயிர்நீங்கிய வுடம்பிற்கில்லை; ஆகலின், செய்ய வேண்டிய அறத்தை விரைந்து செய்து, அதனால் சீர்பெற ஒவ்வொருவரும் முயற்சி செய்தல் வேண்டுமென்பதாம்.

உடம்பு நீர்க்குமிழிபோல விரைந்தழியும் நிலைமையை யுடையதாக விருத்தலின், தடுமாற்றமொழிய, விரைந்து அறத்தைச் செய்தல் வேண்டுமெனல்.

(7) மேகத்தினின்றும் வீழுகின்ற மழைநீரினது குமிழி போலப் பலகாலங்களினு முண்டாகி, அழியுமியல்புடையது இந்த வுடம்பென்று (கண்டல், கருதல், உரை யென்னு மூன்றளவைகளாலும்) ஆராய்ந்தறிந்து பிறவிக்கடலில் வீழ்ந்து ஏறாத் துறை யறியாது தடுமாற்றமடைந்திருப்பதை நாம் (இப்பிறப்பில் தவறாது நல்வினைகளைச் செய்து) ஒழித்து விடுவோமென்று கருதி, அதற்குரிய நல்வினைகளைச் செய்தொழுகுகின்ற உறுதியான அறிவுள்ளவரை ஒத்தவர் இப்பெரியபூமியினிடத்து யார்? (ஒருவருமிலர்).

(க-து.) உடம்பினிலையாமையைச் செவ்வையாக வறிந்து, அது வாராதிருத்தற்குரிய நல்வினைகளை மறவாதுசெய்து வருகின்றவரே அறிவுடையோராவ ரென்பதாம்.

உடம்பு மேகம் போல நிலையற்றதாக விருத்தலின், அதனாலாய பயனைப் பெற விரைந்து முயலுதல் வேண்டுமெனல்.

(8) உடம்பு மலைமீதுலாவும் மேகம்போலத் தோன்றி நிலைபெறாது கெட்டழியு மியல்புடையதாய் இருத்தலின்; உடம்பைத் தமக் குறுதியுடையதாகப் பெற்றவர் தாம்பெற்ற உடம்பால் ஆக வேண்டிய பயனை (தவறாது) கொள்ள முயற்சி செய்வாராக.

உடம்பால் ஆகவேண்டிய பயன்—மோட்சமாம்.

(க-து.) மோட்சம் மக்களுடம்பாலன்றி மற்ற வுடம்புகளாற் பெறுதற் குரியதன்றாகலின், அவ்வுடம்பாற் பெறற்குரிய மோட்சத்தைப்பெற விரைந்து முயலுதல் வேண்டுமென்பதாம்.

இன்றிருந்தார் நாளைக் கிருப்பாரென் றெண்ணுதல் உறுதியற்றதாக விருத்தலின், அறவினையை விரைந்து செய்தல் வேண்டுமெனல்.

(9) (ஒருவன்) இப்பொழுதுதான் நின்று கொண்டிருந்தான், உட்கார்ந்தான், படுத்தான், தன் சுற்றத்தினர் கதறியழ இறந்தா-

னென்று (மக்களால்) சொல்லப்பட்டு வருகின்றது; ஆதலால், (ஒவ்வொருவரும் உடம்பு) புல்லினது நுனிமீதுள்ள நீரைப் போல நிலையாமையை யுடையதாக விருக்கின்றதென்று (செவ்வையாக) ஆலோசித்தறிந்து (மறுமைக்குத் துணையாக) அற வினையை யிப்பொழுதே செய்யக்கடவர்.

அறவினை—அற (புண்ணிய) முண்டாதற்கேதுவாய வினை.

(க-து.) ஒருவன் இவனை இப்போதுதான் நிற்கக்கண்டே னென்றும், மற்றொருவன் உட்கார்ந்திருக்கக் கண்டேனென்றும், இன்னொருவன் படுத்திருக்கக் கண்டேனென்றும், வேறொருவன் இறந்து கிடக்கக் கண்டேனென்றும் கூறுவது உலகவழக்கா யிருத்தலின், உடம்பு நிலையுடையதாமென்று கருதி மயங்கி யிராது, அறவினையை மறுமைக்குற்ற துணையாகவேண்டி அதனை விரைந்து செய்தல் வேண்டுமென்பதாம்.

கேளாது வந்து சொல்லாது போகும் உறவினரை நம்பி அறவினையைச் செய்யா திருத்தல் கூடாதெனல்.

(10) மக்கள் (எவரையாவ தொருவரை நோக்கி யாம் வரலாமா வென்று) கேளாமலே வந்து உறவினராக (அவரது) குடியிற் பிறந்து, (யாம் போய்வருகின்றோ மென்று அவரோடு) சொல்லாமலே மரத்திற் கட்டியுள்ள தன் கூட்டை யொழித்து விட்டுத் தூரத்திற் சென்றொழிகின்ற பறவைபோலத் தம்முடம்பைத் தம்முறவினர்க் குரியதாக வொழித்துவிட்டு மௌனமாய்ப் போய்விடுகின்றனர். (ஆதலால் அவர்களை நம்பி அறத்தைச் செய்யாதிருத்தல் ஒருவகையானும் கூடாது).

(க-து.) பறவை மரத்தின் மீது கட்டியுள்ள தன் கூட்டை அதற்குரியதாக விட்டு நீங்குதல்போல, ஒரு குடியிற் பிறந்தவர் தம்முடம்பை அக்குடியிலிருப்பவர்க் குரியதாகவிட்டு இறந்து போகின்றனர்; ஆதலால் உறவினரை நம்பி அறவினையைச் செய்யாதிருத்தல் கூடாதென்பதாம்.

THE REGISTRAR 18 AUG 1917 MADRAS.

பக்தி.

6 - ஈச்வராவதாரம்.

(கடவுள் தோற்றம்.)

உலகிற்குயிராயும், உலகின் நிலைவாயு மிருக்கின்ற அவரது திருப்பெயர் எங்குக் கூறப்படுகின்றதோ, அந்த இடங்களெல்லாம் புனித - பரிசுத்தமான - தலங்களாகின்றன. அப்பொழுது அவரது உண்மை - தத்வம் - தனை எடுத்து விளக்குகின்றவரும் மெய்ந்நிலை யடைந்து விளங்கச்செய்பவருமான, ஆசிரியர் எவ்வளவு தூயராயிருத்தல் வேண்டும்? ஆதலால் நாம் அவ்வாறன்ன ஆசிரியரது அருகில் இருந்த வணக்கத்தோடும், மெய்யன்புடனும் கூடியவராய்ச் செல்லவேண்டும். அவ்வளவு மேன்மையவர்களான ஆசிரியர்கள் இப்பொழுது இவ்வுலகத்தில் மிக அருமையாகத்தான் உண்டாயிருக்கிறார்கள். எனினும், ஒருவர்கூட இல்லாமற்போய்விட்டார்களென்று கூறுவது, இனித் தோன்றமாட்டாரென்று கூறுவதும் முடியவே முடியாது. எப்பொழுது அவ்வாறன்ன பெரியோர் - மஹான் - கள் இவ்வுலகில் ஒருவர்கூட இல்லாமல் அற்றுவிடுகிறார்களோ! அந்த நொடியிலேயே இவ்வுலகமானது மிகவு மஞ்சத்தக்க கொடிய காடுபோலாகிவிடும்? அன்றே உலகனைத்தும் அழிந்து - நாசமாகவு - ம் போய்விடும். ஏனெனில் அவ்வாறன்ன பெரியோராகிய நல்லாசிரியர்களே, எல்லாவுயிர்களினும், எல்லாமக்களினும் மிகுந்த உத்தமமான மேலான நிலைமையிலுள்ளவர்கள். அவர் "ஒலிவடதரங் கொழவிலோடு" "அஹேதுக யோகஸிந்து" அதாவது "தன்னலங் கருதாது பிறரது நன்மையையே கோரி எப்பொழுதும், எல்லாவுயிர்களிடத்தும் அருட்கடல் - கருணை சமுத்திரமா - யுள்ளவர்கள். "ஆசார்யம் மாம் விஜாநீயாத்" "ஆசாரிய மாம் விஜாநீயாத்" "என்றன்னையே குருவென கருது!" என்று பகவான் கீதையில் திருவாய்மலர்ந்தருளியிருக்கின்றார்.

கடவுளே தனது மாயையை அடக்கிப் பலவுருவங்களாகத் தோன்றியிருக்கின்றனரன்றோ? அவ்வாறன்ன தோற்றம் - அவதாரமூர்த்தி - கள் மற்றவரைவிட மேலான குருவாகும். அவதார புருஷர்கள் நினைத்தவுடனே ஒரு புலை - சண்டாள - னையும், ஒரு நொடிப்பொழுதில் மெய்யுணர்வு பெற்ற மஹாஞானியாக்கி விடு

வார்கள். அம்மூர்த்திகள் ஆசிரியருக்கு மாசிரியராகும்; அவதார புருஷர்கள் மனிதவடிவத்திலிருந்தே கடவுளது உண்மை - தத்வத்தை - முழுவதும் விளக்குகின்றார்கள். அவர்கள் வாயிலாகவன்றி நாம் கடவுளைக் காணவியலாது; ஆதலால் நாம் அவரை வழிபடாதிருக்க முடியாது என்றுமட்டுமில்லை. இந்த அவதார மூர்த்திகள் மட்டுமே நாம் வழிபடவும், போற்றவும், வணக்கவுந் தகுதியானவரா யிருக்கின்றார்கள். அவதாரமூர்த்திகள் வாயிலாகவன்றி வேறெவ்விதத்துங் கடவுளை நேருக்குநேராய்க் கண்டு மகிழவியலாது. அவ்வாறின்றி வேறு வழியிற் கடவுளைத் தேடிக் காண முயன்றால் பிழைபட்டு எளிதில் இருந்த அன்புடன் திற்குள்ளாக வேண்டிவரும். இதற்கொரு சிறு உதாரணங் கூறுவோம்:—ஒருவனை ஒரு பிள்ளையார் - கணபதி - விக்ரஹஞ்செய்து தரச்சொல்ல, அவன் கெடுதல் வருந்தி முயன்றும், முடிவில் ஒரு குரங்கு வடிவத்தில் தான் அவனால் செய்து கொடுக்க முடிந்தது. * ஆதலாற் கடவுளது உண்மையான வடிவத்தை முதலிற் காண நினைத்தால், எவ்வளவு முயன்றாலும் பலவகைத் துன்பங்களினிடையே அகப்பட்டு வருந்தவேண்டிவரும். ஏனெனில் நாம் எதுவரை மனிதப்பிறவியடைந்து முடவிடத்தும் பற்றுவைத்திருக்கின்றோமோ, அதுவரையில் மனிதனைவிட மேலான உயர்ந்த ஒரு வடிவத்தைத் தியானிக்க-நினைக்கவாவது இயற்றவாவது ஆற்றலற்றவரா யிருக்கின்றோம். ஆதலால் நாம் மனிதத் தன்மையினின்றும் மேல் நோக்கி மிக உயர்ந்த நிலைமையை யடையும் பொழுது கடவுளது உண்மையான வடிவம் நம்மால் காணவியலும். என்றால் இப்பொழுது நாம் மனிதர்க்குள்ள அறிவுடன் அதே நிலைமையில்தானே யிருக்கின்றோம்? ஆதலால் மனித வடிவில் அவதாரஞ் செய்துள்ள (பெரியோர்களாகிய) கடவுளைத் தான் நாம் வழிபடவேண்டும். யார் எது வேண்டுமோ சொல்லிக்கொண்டு போகட்டும்; முயலட்டும்; மனிதவடிவத்திலன்றி வேறெவ்விதத்துங் கடவுளை நினைந்து வழிபட நம்மாலியலாது! கடவுளுக்கு மனித அவதாரத்திற்கும் எவ்வித வேறுபாடுமில்லை; அவ்வெல்லாம் பொருத்தமற்ற வீண்கட்டுக் கதையென்று

* "விநாயகம் ப்ரகுர்வாணோ, ரசயாமாஸ வாநரம்"
"விநாயகம் ப்ரகுர்வாணோ, ரசயாமாஸ வானரம்"
"பிள்ளையார் பிடிக்கக் குரங்காய் முடிந்தது."

சிலர் நம்மிடம் யிருந்த கல்வித் திறமையுடன் பிரஸங்கஞ் செய்ய
லாம் ; புத்தகம் பொருத்தம்படி வாதிக்கலாம் ; ஆனால் நமது
அநுபவத்தைச் சற்று ஊன்றிப் பாருங்கள். மிக வியக்கத்தக்க
நம்முடைய அந்தக்கரணத்திற்கும், உண்ணின்று அதனையுங்
காண்பதாய் உள்ள பரம்பொருள் எது ? எனில் ஒன்றுமில்லை
யென்று பிறர் கூறுவர். இருக்கட்டும், இனி மற்றொரு முறை
கடவுளுடைய அவதார மூர்த்திகளை வணங்குவது பிழை
யானதென்று அவர்கள் குற்றஞ் சமத்தும்பொழுது, அவரிடம்
"கடவுள்," "எல்லாம் வல்லவன்" எங்கும் நிறைந்தவன்"
என்னும், மற்றுமுள்ள வார்த்தைகளுக்கு பொருள் என்னவென்று
கேள் ! அப்பொழுது அந்தப் பதங்களில் இன்னின்ன எழுத்துக்
கள் இருக்கின்றனவென்பதைத் தவிர, அதன்பொருளொன்றையும்
அறியவாவது, அந்த வழியும் திறமையாவது அவரிடத்தில்
இல்லையென்பது நன்கு விளங்கும். மனிதரென்னத்திற்கு
மாறாக அப்பதங்கட்குப் பொருள்கொள்ள அவர்கள் வியல்வ
தில்லை. உண்மையில் அவர்கட்கு அம்மொழிக்குப் பொருளே
இடையாது. அவ்வாறுள்ளவர்க்கும், யாதொரு கல்வியுமின்றித்
தெருவிலிருந்து கொண்டிருக்கும் சோம்பேறிகளான அறிவிலா
மூடருக்கு யாதொரு வேற்றுமையுமில்லை. ஆனால் மூடர்கள்
சும்மாயிருப்பார்கள். இவர்களோ தங்கள் ப்ரஸங்கத்தின் மூல
மாக மனிதசமுதாயத்திற்கே 'அஞ்ஞானத்தைப்' பெருகச்செய்து
துன்பத்தை வளர்க்கிறார்கள். பேரன்பு, அல்லது மெய்யன்பு
(பக்தி) ஆத்மஞானம், இவை தனக்குத்தானே உணர்ந்து தெளிய
வேண்டியதாகும். நாவினுல் ப்ரஸங்கித்தலும், உள்நோக்கி யறி
தலும் முற்றிலும் வெவ்வேறாகும். தன்னைத்தா னாய்ந்தறி
தலே மிக வுயர்ந்ததில்லை. நமது இப்பொழுதைய இந்த நிலையில்
கடவுளை மனிதவடிவமாகக் கருதி வழிபடத்தான் நமக்குத் திற
மையுண்டு. ஒரு எருமைக்கடாவானது கடவுளை த்யானிப்பதாய்
வைத்துக்கொள்வோம். இயற்கையில் அது கடவுளை ஒரு பெரிய
எருமைக்கடாவாகத் தான் நினைத்து வழிபடக்கூடும். ஒரு மீன்,
கடவுளை மீன்வடிவில் வழிபடுகின்றது. அதுபோல மனிதனுந்
தனது வடிவமாகவே கருதிக் கடவுளை வழிபட (பூஜிக்க) வேண்டி
யிருக்கின்றது. இவ ஒரு பொருத்தமற்ற வீண் எண்ணம் மட்
டுமே என்று நினைத்து ஒதுக்கிவிடப்படவில்லை. ஏனெனில் மனி

தரும், எருமையும், மீனும், ஒரே இனம்போல (வேற்றுமையற்று)
கருதவேண்டியதா யிருக்கின்றது. இவ்வேற்றுமைகளெல்
லாம் கடவுளாகிற கடலிற் கொண்டுபோய் அமிழ்த்தும்பொழுது
கடவுளது உண்மை அந்தந்த வடிவில் அதனதற்குத் தோன்றுகின்
றது. எல்லாவுயிர்களுக்கும் கடவுளைப் பற்றிய அறிவுண்டாவது
கூடுமெனில், அந்தந்த உயிர்கட்கு அதனதன் - அந்தக்கரண
விருத்தி - இயற்கைக் கேற்றவாறு தான் கடவுளைப் பற்றிய ஆரா
ய்ச்சி உண்டாகின்றது. ஆதலால் (மனிதராகிய) நாம் கடவுளை
மனிதவடிவத்திலன்றிக் காணமுடியாது. ஆதலால் நாம் கடவுளை
மனிதவடிவத்திலேயே தான் வழிபடவேண்டி யிருக்கின்றது.
அதைவிட்டால் வேறு ஒருவழியுமில்லை.

இரண்டு பிரிவார்தாம் கடவுளை மனிதவடிவத்தில் வணங்
குவதில்லை. ஒன்று கடவுளைப் பற்றிய யாதொரு அறிவுமில்லாத
மனிதவிலங்கு. இரண்டாவது, மனிதர்க் கியற்கையாயுள்ள
கலக்க - மயக்கங்களற்று, அறிவுதெளிந்து எல்லா அபிமானங்
களினின்றும் விலகி உயர்ந்த நிலையினை யடைந்து அதனையுங்
கடந்து, முற்றுந் துறந்த (துறவியாகிய) பரமஹம்ஸர்கள் அப்ப
டிப்பட்ட உயர்வற வுயர்நல மமைந்த பெரியோர் உலகனைத்தையுந்
தமது உயிர்க்கு நிகராகவும், மேலாகவுங் கருதி நோக்குபவராய்
கடவுளது உண்மையான வடிவ - பரமார்த்த ஸ்வரூபத்தை அறி
ந்து போற்றியுள்ளபடி வழிபட அவர்கட்கு மட்டுமே இயலும்.
இங்கு இந்தக் கோடியு மந்தக்கோடியு மொன்றாகவே யாயிற்று;
எவ்வாறெனில், "முழுமூடத்தனமும், மிகுந்த கல்வித்திறமை
யான மேலான அறிவும் ஒன்றாகவே தோன்றுகிறது." விலங்
கொத்த - மருகம்போன்றவன் அறிவின்மையால் கடவுள் பெரு
மையை யறிந்து வழிபடுவதில்லை. ஜீவன் முக்தரான பெரியோர்
தம்மிடத்தே கடவுள் விளங்கி வருவது கண்டுகொண்டவர்க
ளாகையால் (ஸாதாரண மனிதரைப்போன்று) கடவுளை வெளிப்
படையாய் வழிபடுவதில்லை. என்றால், இவ்விரண்டு நிலைமைக்கு
மிடையேயுள்ளவர்கள் அவதார மூர்த்திகளைப் போற்றி வழிபடு
வது பிழையென்று கூறுவதோ, அவதார மூர்த்திகளை வழிபட
லாகாதென்று பிறருக்கு உபதேசிப்பதோ? எவரேனுஞ் செய்தா
ரெனில், அவரிடத்து விழிப்பாயிருந்து கவனிக்கவேண்டும்; அவ
ரது சொல்லை விரும்பிக் கேட்கக்கூடாது; அவரது சொல்லையு

தற்றுச்சொல்லவுங் கூடாது; மனிதரிடத்துள்ள குறைகளை யறிந்தவருள் மனிதராய் அவதரித்து மனிதர்க் கருள்புரி கின்றார்.

"யதா யதா ஹி தர்மஸ்ய க்லானிர்பவதி பாரத
அப்யுத்தான மதர்மஸ்ய ததாத்மானம் ஸ்ருஜாம்யஹம்
பரித்ராணாய ஸாதூநாம் விநாசாய ச துஷ்க்ருதாம்
தர்ம ஸம்ஸ்தாபனார்த்தாய ஸம்பவாமி யுகே யுகே."

"ஓ! பாரதவம்சத்திற் றோன்றியவனே! எவ்வெப்பொழுது (வர்ணாச்ரம தர்ம) கடமைகட்குக் குறைவும், அதர்மத்திற்கு முன்னேற்றமும், உண்டாகின்றதோ, அப்பொழுது என்னை நானே ஸ்ருஷ்டித்துக் கொள்கின்றேன். (அதாவது, நான் ஒரு ரூபத்துடன் வெளிப்படுகின்றேன். அல்லது அவதாரஞ்செய்கின்றேன் என்பதாம்.)

நல்லவர்கள் செழிக்கவும், தீயவர்களை யொழிக்கவும், (இங்கு ஒழித்தலென்பது அவர்களையுந் தண்டித்துத் திருத்தி நல்வழிப் படுத்துவதாம்.) அற (தர்ம)த்தை நிலைநாட்டும்பொருட்டும், யுகந்தோறும் தோன்றுகின்றேன்." (வரும்)

விண்ணாற்ற முடிச்செல்வனார்.

நீதிசாரம்.

கூடாநட்பு.

கூடாநட்பென்பது ஒருவன் தனக்குள்ள பகைமுதலியவற்றை முடித்துக்கொள்வதின் பொருட்டு மற்றொருவனுடனே பற்றில்லாமல் நட்புக்கொண்டிருத்தலாம்.

ஸ்நேஹமான ஒருவனுக்கு இக்கட்டுவந்த விடத்து ஸஹாயமாகவிராமல் அவனது விரோதிகளோடு சேர்ந்து பகைமையினை விருத்திக்கொண்டிருப்போன் கூடாநட்பினனாவன்.

பலகெட்ட காரியங்களையுஞ்செய்து நீக்கி யிருப்பதின் பொருட்டாகவல்லவா மித்ரர்களை யோதி யுணரவேண்டுமென்பது? அப்படி யுணர்ந்தும் கெடுதியையுடையவர்களாக விருந்தால் மித்ரராலாம் பயன் யாது? ஒன்றுமில்லையல்லவா? ஆகலான், அப்படிப் பட்டவர்களுடைய நட்புக் கெடக்கொடுக்கலாகாது.

ஒருவன் ஸ்நேஹமுடைய மற்றொருவனைக் கண்டபொழுதே முகமலர்ச்சியோடு நகைசெய்து மதுரமான நல்வசனங்களை வசனித்தாலும் அவனது உள்ளான் நெஞ்சு குறையைக் கண்டபின்னரே, கூடாநட்பினனென்று கருதி அவனைவிட்டு நீங்கியிருத்தல் வேண்டும்.

மனதினிடத்துப் பகைமை யுடையவன் அதை மறைத்துக் கொள்வதின்பொருட்டு, தன்மனக்கவட்டை வெளிக்காட்டாமல் மிகவும் பிரியமுள்ளவனைப்போல அபிநயித்துக் கொண்டிருப்பானாயின் அவன் பயந்தகனேயல்லது மெய்யான ஸ்நேஹனல்லன்.

ஸ்நேஹத்திற்கு உசிதமல்லாத பகைவன் ஸ்நேஹனைப்போல உபசாரமாய் நடிப்பான். அவனை நம்பி பொருளாய் தனக்குள்ள மர்மங்களையுஞ் சொல்லி அவனது ஆலோசனையின்படி நடக்கவுடன்பட்டால் முடிவில் துன்பப்பட வேண்டியிருக்கும். அத்தகைய பெண், வில்லானது வளைந்துநமயின் அது குறித்த லக்ஷியத்திற்குத் தீமையுண்டாக்கும். அதுபோல உபசாரம் நடிக்கின்ற பகைவனிடத்திருந்து பிறக்குஞ்சொற்கள் மிகவும் வணக்க முள்ளனவாக விருந்தாலும் அவர்கள் குறித்த காரியத்திற்குத் தகுந்தனவாக விருக்குமே யல்லாது நன்மையைத் தருமென்று ஒருபோதும் நினைக்கலாகாது.

பகைவனுடைய தாள்ச்செய்கைகட்டித் தொழுதாலும் அது [illegible] ஆயினும், அவன் [illegible] ஒளித்திருக்குமென்று பெரியோர்சொல்லியிருக்கின்றார்கள்.

பகைமையுடைய ஒருவன் தான் யதார்த்தமானவனென்று பிறன்மதிக்கும்படியாகச்சிலமதுரவசனங்களைக்கொண்டேபிரமிக்கச் செய்தாலும் அவனிடத்து நம்பிக்கை வைக்கலாகாது; வைத்தால் அவன் தனது துர்க்குணங்களை அப்பொழுதே வெளிக்காட்டாவிட்டாலும் ஸமயம்வந்தபொழுது காட்டுவான். அப்பொழுது வியஸனப்படவேண்டி யிருக்கும்.

பகைவரிடத்துச்சிலவேளை நட்புக்கொள்ளும்படியாக நேரிட்ட பொழுது அக்காலத்தைநோக்கி மனதினிடத்துப் பற்றில்லாமல் முகத்தளவுமாத்திரம் நட்புச்செய்து நழுவிவிடுதல் வேண்டும்.

அறிவில்லாத அவிவேகிகளோடு கொண்டநட்பு காதுக்குள் ளிருக்கி பவைப்போலக் காண்பபொயினும், மிக்கெந்தி

விடையிட்டின் கெடுதியடைவது மல்லாமல், கீர்த்திக்கும் கௌரவத்திற்கும் பழுதுண்டாகும். வைக்கோலிற் பற்றிக்கொண்ட தீ விருத்தியடைவதுபோலத் தோற்றினும் உடனே அணைந்துவிடும்.

அயோக்யமான காரியத்தை முடிக்க முயற்சிசெய்கின்றவனும், சக்தியின்றித் திடமெடுத்துக்கொண்ட காரியத்தில் ப்ரதிக்ஞையில்லாமல் விட்டுவிடுகின்றவனும் ஆகிய இவ்விருவரும் அறிவிலாரென்பதற்கு ஐயமுண்டோ? இவர்களோடு உறவுசெய்தால் துன்பப்படவேண்டியதேயாம்.

நல்லோர்களுடைய சேர்க்கையைவிட்டு அறிவிலாத தீயோருடனே நட்புக்கொள்ள விரும்புவது எத்தன்மையதென்னில், பசுவின் நெய்யோடுகூடப்பட்ட புளிப்பைவிட்டு வேப்பெண்ணெயோடு கூடிய புளிப்பைவிரும்புவது போலாம்.

பார்வைக்கு அழகான ரூபத்தையுடைய ஒருவன் மனதில் ஒப்புரவில்லாதவனாக விருப்பானாயின், அவனது ஸ்நேஹம் சுண்டக்காய்ந்த பாலில் நீரைக்கலப்பதுபோ லிருக்கும். அஃதெப்படியெனின், மதுரமான பாலில் ஜலத்தைக் கலந்தாலும் பாலின்சுவை மாத்திரங் குறைந்து நிறங் குறையாதிருப்பதுபோல குணமில்லாத புத்திஹீனன் எவ்வளவு ரூபவானாக விருந்தாலும் அவனது ஸ்நேஹம் நேத்ரோத்ஸவமாகமாத்திர மிருக்குமேயல்லது அதனால் எவ்வளவும் ப்ரயோஜன மிராது.

அறிவினையுடைய நல்லோர்கள் புல்லறிவாளரோடு நட்புக்கொள்வார்களாயின், அது விரியன்பாம்போடு நகம் புணர்ந்தாற்போலவதாம். அஃதெப்படியெனின், விரியன்வயிற்றில்நகத்தின்பிள்ளையாய்த்து கர்ப்பந்தரித்து விருத்தியாகுமாயின் அக்கணத்தில் ஆயுள் நாளுக்குநாள் தேய்ந்து அது க்ஷீணதசையடையுமென்பதுபோல அறிவிலாருடன்கொண்ட ஸ்நேஹமும் விருத்தியாகுமாயின் நல்லவர்களுக்குள்ள எல்லாநன்மைகளும் நாளுக்குநாள் கெடுதியடையுமென்று சொல்லப்பட்டிருக்கின்றது.

ஆதலால், கூடாநட்பாகிய கெட்டவழக்கத்தை விலக்கி நினைத்து அதற்குக்காரணமாகிய நல்லவர்களைக்கண்டு ஸ்நேஹிக்க வேண்டும்.

கள்ளுண்ணாமை.

கள்ளினிடத்து விருப்பங்கொண்டு அதனையுண்டு திரிகின்றவனுடைய மனதில் அச்சமென்பதெவ்வளவு மிராதென்றும், அவனுடையமுன்னோர்களடைந்திருந்த கீர்த்திமுதலானவை அவனிடத்திலுஞ்சேர்ந்திருந்தால் அதுவுங்கெட்டு அவனும் இழிவுபெறுவானென்றும், முன்னூற்களில் சொல்லப்பட்டிருக்கின்றன.

ஸ்வபாவமான விவேகத்தைத் தன்னியல்பிலிருக்கவொட்டாமற் கெடுப்பதற்கு ஹேதுவாகிய கள்ளை உண்கின்றவனுக்கு புத்தி எவ்வளவு தெளிவுள்ளதாக விருந்தாலும் அவனைச்சான்றோர்கள் அறிவிலா மிருகங்களுக்கு ஸமானமாக மதிப்பர்களேயல்லது குணவானாக மதியார்கள்.

கள்ளையுண்ணுதற்றிறனாலே தமக்கு மெய்மறதியும் தமதுபுகழுக்குப் பழுதுமுண்டாகுமென்று அறிந்திருந்தும், அறிவிலார்போல அக்கள்ளை விலைகொடுத்து வாங்கியுண்டு மயங்கிக் கிடப்பவர்களை உலகம்பழியாதோ?

கள்ளையுண்டேப்ப மிடுகிறவனுக்குண்டாகும் கெடுதியென்னவெனில், மனோவாக்குக் காயங்களாகிய மூன்றும் ஸ்வாதீனமில்லாமற் கெடுதியடைவது மாத்ரமல்ல; இஹபரங்களிலுள்ள மற்றெவ்வித நன்மையும் அவனுக்குக் கிடையாது. ஐயோ! இவன்கதி இன்னதென் றறிந்திலேமே.

கள்ளினது ஸ்வபாவம் அதை யுண்கிறவனது அறிவைத்தெளிவில்லாமலுறக்க முறச்செய்வதாதலால், அவனுயிருடனிருந்தாலும் இறந்தவனுக்கு ஸமானமென்றே சொல்லப்படுவான்.

ரஹஸ்யப்பொருளைப் பிறருக்குச் சொல்லாமல் ஒருவன் தன் மனதினிடத்தில் ஒளித்துவைத்திருந்தாலும் அவன்கள்ளையருந்துவோனாக விருப்பானாகில் அத்தன்மயக்கத்தை அவன் மனதிலொளித்த ரஹஸ்யப்பொருளையும் வெளியிட்டுச் சொல்வானென்றும், அதனால் அவனுடைய வேண்டிய எல்லா ப்ரயோஜனங்களையு மிழந்து விடுவானென்றும், சொல்லப்பட்டிருக்கின்றதற்குத் திருஷ்டாந்த மென்னவெனில், "காரியத்தைவார்த்துப் பூரயத்தைத் தேன்" என்று சொல்லும் பழமொழிதான்.

கள்ளை மறைவாகவிருந்து குடிக்கவிரும்புகின்றது ஒருவருமறியாதிருப்பதின்பொருட்டாக வல்லவா? மறைந்துண்டபின்பு அது அவனது ஸ்வபாவத்தைமறக்கும்படிச் செய்யாதோ? அப்பொழுதுபிறர்கண்டு நகையார்களோ? இதுவறிவீனமுடைய வேண்டியிருக்குமென்று தோன்றுதோ; இதற்கு உலகம்பழியாமற் புகழுமோ?

ஒருவன்கள்ளையுண்டிருந்தும் அதையுண்டதில்லையென்று ஸாதித்துச்சொல்லும் வசனம் மாறுவதற்கு முன்னமேமுன்னுண்டிருந்தகள்ளினது மயக்கந்தலைக்கேறி அவன்புத்திக்குச் சோர்வையுண்டாக்கி அவன்ஸாதித்த வசனத்தைப் பொய்யாக்கி விடும்போது வெட்கப்படவேண்டியிருக்குமென் றுணராமலிருப்பதற்கு அவிவேகமே காரணமென்று சொல்லப்பட்டிருக்கின்றது.

ஆதலால் உடலுலங்கி நடுக்க மெடுப்பதற்கும், கண்சிவப்பதற்கும், ரோமங் கூச்செறிவதற்கும், வாய்நுரைத்து வெளுப்பதற்கும், சொற்குளறுவதற்கும், மெய்மறப்பதற்கும், முகம்வேர்ப்பதற்கும், தலை திரும்புவதற்கும், துள்ளுமுன் றுவிழுந்து புரள்வதற்கும், சற்று அழுவதற்கும், உடனே நகைப்பதற்கும், நினைப்பதொன்றும்சொல்வதொன்றுமாய் மாறுவதற்கும், மருண்டு விழிப்பதற்கும், வாயில்வந்தபடி பிதற்றுவதற்கும், கூத்தாடுவதற்கும், கொக்கரிப்பதற்கும், இன்னும் பல இழிவான விகாரச் செய்கைகளுக்கும் காரணமாயிருக்கும் கள்ளுண்டலை நீக்கவேண்டும்.

சுகாதாரம்.

வாயுவு.

(முன்தொடர்ச்சி.)

முன் காட்டியிருக்கிறபிரகாரம் வீடுகளுக்குள் சுவாசம் வேர்வை இவைகளின் விஷங்களாலும், நெருப்பு எரிகிறதினாலும், பின்னும் பல காரணங்களினாலும் விஷமாகப்படுகிற காற்று போதுமானபடி சுத்தமாகும்பொருட்டு வீடுகளுக்குள்ளிருக்கிற காற்று ஓரேநிலையாய் நிற்காமல் எப்போது மாறிக்கொண்டேயிருத்தல்வேண்டும். இதற்காக வீடுகளில் போதுமான ஜன்னல்களிருத்தல்வேண்டும். அவைகளைத் திறந்துவைத்திருத்தல் வேண்டும். சுகமுள்ள ஒரு பெரிய ஆளுக்குப் படுக்க இருக்கத்

தக்கதாக சராசரி 1000-கன அடியுள்ள இடம்வேண்டும். சிறிதுள்ள ஒரு ஆளுக்கோ இதனினும் அதிகமான இடம்வேண்டியது அவசியம்: (1000-கன அடி இடமாவது 10-அடி நீளம், 10-அடி அகலம், 10-அடி உயரமுள்ள இடமாம்) இந்தக்கணக்கின்படிச் செய்ய ஏதுவில்லாத பட்சத்தில் ஒவ்வொரு ஆளுக்கு எவ்வளவு இடத்தை நம்மாற் கொடுக்கக்கூடுமோ அவ்வளவு இடத்தைக் கொடுத்து அந்த இடத்தில் தாராளமாய்ப் புதிய காற்று பிரவேசித்துக் கொண்டிருக்கும்படி செய்தல்வேண்டும். இப்படியில்லாமல் காற்று தாராளமாய்ப்பிரவேசியாத வீடுகளில் ஜனங்கள் ஏகமாய்க்கூடி நெருக்கியிருக்கும்பொழுதாவது அல்லதுநித்திரை செய்யும்பொழுதாவது ஒருவனுடைய சுவாசத்தினாலும்வேர்வையினாலும் விஷமாக்கப்பட்ட காற்றை மற்றொருவன் சுவாசிக்க வேண்டிவரும். ஒரு மனிதன் தேகத்திலிருந்து மாத்திரம் ஒவ்வொருமணிநேரத்தில் 1000-கன அங்குலமுள்ள கரி அமிலவாயுவும், 1½-ரூபாய் நிறையுள்ள நீராவியும் பின்னும் பல அசுத்தங்களும் புறப்படுகின்றனவே; இப்படி ஏராளமான தேகக்கழிவுகளை அறியாமையினால் உட்கொள்ளுகிற ஜனங்கள் தங்களைச் சுத்தமுள்ளவர்களென்று எப்படிச் சொல்லலாம்? ஒருவனுடைய உதடுகள் நிந்திற் படும்படியாக வாய்வைத்துக் குடித்த பாத்திரத்தில் மற்றொருவன் தண்ணீர்குடித்தால் அது மிகவும் அசுத்தமான செய்கை யென்று எண்ணுகின்றவர், மற்றொருவனுடைய நுரையீரலிலிருந்தும் தோலிலிருந்தும் ஏராளமாய்ப் புறப்படுகிற அசுத்தக் கழிவுகளை உட்கொள்ளுவது எவ்வளவு அசுத்தத்தையுண்டாக்காது?

ஆட்கள் எப்பொழுதுங் கூடியிருக்கிறதும் நித்திரைபண்ணுகிறதுமான ஒவ்வொரு அறைக்கும் குறைந்தபட்சம் போதுமான அளவுள்ள இரண்டு ஜன்னல்களாவது இருக்கவேண்டும். இவை எதிர்ச் சுவர்களிலிருப்பது அவசியம். ஒரு ஜன்னல்வழியாய் உள்ளேவந்த காற்று எதிர் ஜன்னல்வழியாய் வெளியேபோக இடமில்லாவிட்டால் மேன்மேலும் புதியகாற்றுத் தாராளமாய் உள்ளேவர ஏதுவிராது. மழைக்காலமுதலான மிகுந்த குளிர்காலங்கள் தவிர மற்றக்காலங்களிலெல்லாம் இரவும் பகலும் ஜன்னல்களைத் திறந்துவைப்பது மிகவும் அவசியம். குளிர்காலங்களிலும் ஓர் அறையில் படுக்கிறவர்கள் ஜன்னலுக்கெதிரே படுக்காமல் பக்கங்களில் படுத்திருக்கலாம். காற்று மிகவும் பலமாய் அடித்

அடைத்துக்கொண்டிருந்தால் காற்று அடிக்கிற பக்கத்துக்கு எதிர்ப் பக்கத்தின் ஜன்னலொன்றைத் திறந்து வைத்துக்கொள்ளலாம்; அல்லது காற்றின் விசையை ஒருவாறு தணிக்கும்படிக்குச் சிறு துவாரங்களுள்ள தட்டிகளைச்செய்து அவைகளைக் கொண்டு திறந்திருக்கிற ஜன்னல்களை மூடலாம். இதனால் காற்றினுடைய விசை குறைந்து தட்டிகளின் சிறு துவாரங்கள் வழியாய் அது மெதுவாய் உட்பிரவேசிக்கும். அனலாயிருக்கவேண்டுமென்றால் கொஞ்சம் நெருப்புண்டாக்கிப் படுக்கைக்குத் தூரமான விடத்தில் வைத்துக்கொள்ளலாம். அப்பொழுது புதிதாய் உட்பிரவேசிக்கிற குளிர்ந்த காற்றினுடைய குளிர்ச்சி நீக்கப்பட்டு சுவாசத்திற்கும் சரியாகிற நெருப்பினாலும் உண்டாகிற சிறுவாயுக்கள் திறக்கப்பட்ட ஜன்னல்களின்வழியாய் வெளியே போய்விடும். அதிக குளிர்காலங்களில் [illegible] அடைத்தே போட்டு [illegible] முன் கதவுகளையும் ஜன்னல்களையும் அடைத்துவிட்டாலும் சுவரிலுள்ள பொந்துகள் வழியாய்ப் போதுமான காற்று உள்ளே பிரவேசிக்கும்.

சுதேசிகளுடைய வீடுகளிலுள்ள ஜன்னல்கள் பெரும்பான்மையும் மிகவும் சிறியவைகளாயிருக்கின்றன. மேலும் அவைகளை வைக்கவேண்டிய இடங்களில் வைக்கிறதுமில்லை. இப்படி அமைப்பதிலும் பிரயோஜனம் மிகவும் கொஞ்சந்தான். வீடுகளுக்குள் வர [illegible] ஜனங்களுடைய சுவாசத்தினாலும் [illegible] வைகளாலும் உள்ளே இருக்கிற காற்று உஷ்ணமாகப்படுகின்றது. உஷ்ணமான [illegible] பொருள்கள் விரிவடையும். பொருள்கள் விரிவடைவதனால் கனங்குறைந்து இலேசாகும். இலேசானவைகள் இலகுவாய் உயரவெழும்பும். இப்படியே வீட்டிற்குள்ளே உஷ்ணமாக்கப்பட்ட காற்று விரிந்து லேசாகி உயர எழும்பி வெளியே போகப்பார்க்கும். ஆகையால் சுவர்களின் உயர்ந்த பக்கங்களில் சிறு ஜன்னல்கள் அல்லது திறப்புகளை விட்டிருந்தால் உள்ளேயிருக்கிற உஷ்ணமும் இலேசுமான அசுத்தக் காற்றும் மேல் திறப்புகளின் வழியாய்வெளியே போய்விட அதன் இடத்தை அடைக்கும்படிவெளியேயிருக்கும் குளிர்ச்சியும் கனமுமுள்ள சுத்தமான காற்று சுவர்களின் கீழ்ப்பக்கங்களிலுள்ள ஜன்னல்கள் வழியாய் உள்ளே வரும். ஆகையால் கல்வீடுகளில் வெளியேயுள்ள சுத்தமான காற்று எப்பொழுதும் உள்ளே தாராளமாய்

வருவதற்குப் போதுமான அளவுள்ள ஜன்னல்களைச் சுவர்களின் கீழ்ப்பக்கங்களில் வைத்தல்வேண்டும்; உள்ளே யிருக்கிற அசுத்த ஆகாயம் மேலே எழும்பித் தாராளமாய் வெளியேபோவதற்குச் சுவர்களின் மேற்பக்கங்களில் சின்ன திறப்புகளைவிட்டு அவைகளைத் திறந்தே வைத்திருத்தல்வேண்டும்.

அநேகர் குளிர்ச்சியினால் ஜலுப்பு அல்லது ஜலதோஷ முதலான வியாதிகள் வருமென்று பயந்து கதவு ஜன்னல்களை நன்றாய் அடைத்துப் போடுகிறார்கள். ஆனால் குளிர்ச்சியினால் உண்டாகின்றனவென்று ஜனங்கள்சொல்லுகிறஜலதோஷமும்,இருமல்முதலிய சுவாசக்கருவியைச்சேர்ந்தவியாதிகளும், வாதநோய்முதலானவையும் உண்டாகிறவிதம் எப்படியென்றால்: 1-வது, குளிர்காலங்களில் புதியகாற்று உள்ளேவாராதபடிக்குக் கதவு ஜன்னல்களை அடைத்துக்கொண்டு உள்ளே அநேக ஜனங்கள் படுத்து நித்திரைசெய்கையில் அவர்களுடைய சுவாசத்திலும் வேர்வையிலுமுள்ள பல விஷ பதார்த்தங்கள் ஆகாயத்தோடுசேர அவ்வாகாயத்தை அவர்கள் திரும்பத் திரும்ப சுவாசிக்கிறதினால் தேகத்தை விட்டு வெளியே கழிந்து போகவேண்டிய விஷங்கள் மறுபடியும் உள்ளே பிரவேசிக்கிறதின் நிமித்தம் அவ்வியாதிகள் உண்டாகின்றன. 2-வது, அடைபட்டிருக்கிற வீட்டிற்குள்ளிருக்கும் அசுத்தக்காற்றினாலும் அனலினாலும் தளர்ந்துபோய் வேர்த்துக்கொண்டிருக்கிற தேகத்தின் மேல் எவ்விதத்திலாவது திடீரென்று குளிர்காற்று படுகிறதாயிருந்தால் தோலின்வழியாக வெளியே புறப்பட்டுக்கொண்டிருந்த வேர்வை திடீரென்று நின்றுபோக, வேர்வையின் விஷங்கள் தேகத்திற்குள் தங்குகிறதினால் அவ்வியாதிகள் உண்டாம். ஆகையால் புதியகாற்று வீட்டிற்குள் தாராளமாய் வருகிறதினால் சரீரத்திற்கு யாதொரு தீமையும் வாராமல் நன்மையே யுண்டாகும். குளிர்ச்சியினால் தீமை யுண்டாகுமென்று பிரமித்துப்பயப்பட்டு எப்பொழுதும் வெந்நீர்ஸ்நானம், வெந்நீர் பானஞ்செய்து குளிர்ந்த காற்றுக்கு அஞ்சி வெளியில் அதிகமாய் நடமாடாமல் எப்பொழுதும் அனலுள்ள இடங்களிலிருக்க விரும்புகிறவர்களுக்குத்தான் மிகவுஞ்சொற்ப ஏதுக்களினால் அடிக்கடி ஜலதோஷம் அல்லது ஜலப்புமுதலிய துன்பங்கள் நேரிடும். அப்படிக் கில்லாமல் ஒழுங்காய்க் குளிர்ந்த தண்ணீர் ஸ்நானஞ் பண்ணி, சுத்த காற்றுள்ள வெளியிடங்களில் தாராளமாய் நட

மாடித் தோட முயற்சிகளைச் செய்து வருகிறவர்களுக்கு ஜலதோஷம் முதலிய துன்பங்களுண்டாவது மிகவும் அபூர்வந்தான். குளிர்ச்சியினால் தேகத்திற்கு யாதொரு தீமையும் உண்டாகாதபடிக்குக் கூடியமட்டும் நல்ல வஸ்திரங்களைத் தரித்துக்கொள்ளலாம். திறப்புகள் துவாரங்கள் வழியாக வருகிற காற்றைத் தேகத்தில் ஒரு பாகத்தின் பேரில்மாத்திரம் படும்படி விடக்கொடுத்தால் தீமைகள் சம்பவிக்கும்.

ஆகாயம் தேகசுகத்திற்கு அவசியமாயிருக்கிறதுபோல வெளிச்சமும் அவசியமாயிருக்கின்றது. வெளிச்சமில்லாத இடங்களில் வளருகிற பூண்டுகள் வெளிறியும் குன்றியும் போகும். அப்படியே வெளியே நடமாடித்திரியாமல் வெளிச்சங்குறைந்த வீடுகளுக்குள் பெரும்பான்மையும் வாசம்பண்ணுகிற ஜனங்கள் வெளிறின தோலுள்ளவர்களாயும் தளர்ந்த தசைகளுள்ளவர்களாயும் குன்றிப்போன தேகமுள்ளவர்களாயு மிருப்பார்கள். முக்கியமாய்ச் சிறுபிள்ளைகள் செழிப்பாய் வளருவதற்கும் அவர்கள் தேகம் சுகமும் உறுதியுமுள்ளதா யிருப்பதற்கும் அவர்களுக்குப் போதுமான சுத்த காற்றும் வெளிச்சமும் வேண்டியது மிகவும் அவசியம். வாசஸ்தலங்களைச் சுற்றி சமீபத்தில் நெருங்கின வீடுகளும் மரங்களுமிருக்குமானால் அவ்வாசஸ்தலங்களுக்குள் போதுமான சுத்த ஆகாயமும் வெளிச்சமும் பிரவேசிக்க ஏதுவிராதாகையால் அவ்விடங்களி லுள்ளவர்களுக்குச் சுகக்குறைவு படும்.

(வரும்)

கர்ணன்.

(முன்தொடர்ச்சி)

பிறகு துரியோதனன் ஸ்ரீகண்ணனைத் தனக்குப் படைத்துணையாக்கிக்கொள்ள வெண்ணித் துவாரகை யடைந்தனன். அருச்சுனனும் அதேகருத்தோடு துவாரகையை யடைந்தனன். அவ்விருவரும் கண்ணனது அரண்மனையை அடைந்தபோது கண்ணன் துயில்கொண்டிருந்தனன். அதைக்கண்டு துரியோதனன் கண்ணனது சிரசின்பக்கம் ஓராசனத்தில் வீற்றிருந்தனன். அருச்சுனன் கண்ணனுடைய திருவடியின் பக்கத்தில் ஓராசனத்தில் அமர்ந்திருந்தான். கண்ணன் துயிலினின் றெழுந்தவுடன்

அருச்சுனனைக் கண்டு க்ஷேமங்களை விசாரித்துப் பின்பு துரியோதனன் வந்திருந்ததை யறிந்து அவனது க்ஷேமங்களைவிசாரித்தான். பிறகு அவ்விருவரும் கண்ணனுக்குத் தங்கள் கருத்தைத் தெரிவித்தார்கள். கண்ணன் துரியோதனனை நோக்கி "மன்னர்மன்ன! எனக்கு யார் முன்னே புலப்படுகின்றார்களோ அவர்களுக்கு நான் போரில் துணையாகக் கடவேன் என முன்னதாகவே தீர்மானித்துக்கொண்டேன். ஆகையால் எனக்கு முன்னதாகப் புலப்பட்ட அருச்சுனனுக்கே யான் துணையாகவேண்டியவனா யிருக்கின்றேன். என்னையும் அருச்சுனனுடைய மைத்துனனாகிய சாத்தகியையும் ஒழிந்த யாதவ வீரர்கள் யாவரையும் உனக்குத் துணையாக அனுப்புகின்றேன்" என்றனன். துரியோதனன் அதற்கிசையக் கண்ணன் அங்ஙனமே தானும் சாத்தகியும் ஒழிந்த மற்றை யாதவ வீரர்களை யெல்லாம் துரியோதனனுக்குப் போர்த்துணையாக அனுப்பிவிட்டுச் சாத்தகியோடும் அருச்சுனனோடும் சென்று உதிஷ்டிரர் முதலியோருள்ள இடத்தை யடைந்தனன். பிறகு துரியோதனன் அந்த யாதவவீரர்களோடு அஸ்தினாபுரியை யடைந்து தன் தந்தையாகிய திருதராஷ்டிரனிடம் கண்ணனது செய்தியைக் கூறினன். திருதராஷ்டிரன் சஞ்சயன் என்னும் புரோகிதனை அழைத்து "நீ எங்கள் குலத்துப் புரோகிதனாதலால் பாண்டவர்கள் உன் சொல்லை மறுக்காமல் ஏற்றுக்கொள்வார்கள். நீ சென்று பூமியின் பொருட்டு சண்டை யிடுதலை யொழித்து மீண்டுங் காட்டிற்குச் சென்று தவம்புரிய விரும்பும்படி அவர்களுக்குப் பல இனிய நீதிகளைக் கூறி அவர்களைக் காட்டுக்கு அனுப்பிவிட்டு வருதி" என்றனன். அவன் பாண்டவர்களிடம் அங்ஙனமே கூற அதற்கவர்கள் சம்மதிக்காமல் மறுத்துவிட்டார்கள். பிறகு அப்புரோகிதன் அஸ்தினாபுரிக்கு மீண்டு வந்து திருதராஷ்டிரனுக்கு அதனைக் கூறினன்.

பிறகு உதிஷ்டிரர் கண்ணனுடன் யோசித்துத் துரியோதனன்பால் சென்று தங்களுக்குரிய நாட்டைக் கேட்கும்பொருட்டுக் கண்ணனையே தூதாகப் போகும்படி வேண்டினர். கண்ணன் அவ்வாறே நாற்படைகள் தன்னைச் சூழ்ந்துவர அஸ்தினாபுரியை யடைந்து அப்பட்டணத்தின் மதிலின் புறத்துள்ள தொரு சோலையில் தங்கினன்.

கண்ணன் வரவை அறிந்து பீஷ்மர் துரோணர் விதுரர் கிருபர் முதலிய பெரியோர்கள் பலவகை மரியாதைகளுடன்

எதிர் சென்று கண்டு அழைத்தார்கள். கண்ணனும் அவர்களுக்கு இனிய பல உபசார மொழிகளைக் கூறி மன்னர்களோடு அளவளாவி, அவர்களோடு அந்நகருக்குட் சென்றனன். சென்று விதுரர் வீட்டை யடைந்து பீஷ்மர், துரோணர் முதலியோரை விடை கொடுத்தனுப்பிவிட்டு ஓர் ஆசனத்தில் வீற்றிருந்தனன். விதுரர் தமது வீட்டுக்கு ஸ்ரீகண்ணன் விருந்தாக வந்ததை எண்ணிக் களிப்பென்னுங் கடலின் மூழ்கி அவ்விறைவனை நோக்கி, எம் பெருமுதலே!

"முன்னமே அயின்றருள் முதுபயோ ததியோ, பன்னகர் திப் பாயலோ பச்சையா லிலையோ, சொன்ன நால்வகைச் சுருதியோ கருதில் எய்தற், கென்ன மாதவஞ் செய்ததிச் சிறுகுடில்" என்று பலவாறு புகழ்ந்து துதித்தப்பிறகு ஸ்ரீகண்ணனுக்கும் அவனுடன் வந்த சேனைகளுக்கும் விருந்து செய்வித்தனன். ஸ்ரீகண்ணன் அன்றிரவு விதுரர் மனையில் துயில் கொண்டிருந்து மறுநாளிற் செய்யவேண்டிய காலைக்கடன்களை முடித்துக்கொண்டு துரியோதனனது அரசவையை அடைந்தனன். அங்ஙனம் வந்த கண்ணனைக் கண்டவுடன்,

"ஆன்று கங்கைமக னாந்து ரோணனொடு
அதனு நீதிபுனை விதுரனும்
மன்னர் மன்னவனை யொழிந்த மன்னவரும்
வந்து சேவடி வணங்கினர்
கன்னன் துச்சனொடு களிமுன் றிருந்தவ
னமுன்று வஞ்சகுனி கருதினன்
முன்ன நின்றவர்க ளிட்ட பீடமிசை
மொய்த்து மாய்முகிலு மேவினன்."

கண்ணன் ஆசனத்தில் வீற்றிருந்தபின் துரியோதனன் கண்ணனை நோக்கி நீ நேற்றே என் பட்டினத்தில் வந்திருந்தும் என் மனைக்கு வாராமல் விதுரர் மனைக்குச் சென்றதற்குக் காரணம் யாது? எனக் கண்ணன், வீர! உனக்கும் எனக்கும் வேறுபாடு ஒன்றுமில்லை; ஆனால் நான் இப்பொழுது பாண்டவர்களின் தூதனாய் வந்திருக்கின்றேன். நான் வந்த காரியத்திற்கு நீ இசையாமற் போவையானால் பிறகு நான் மாறுபடவேண்டியவனாயிருக்கின்றேன். உன் மனையில் உண்டபிறகு அங்ஙனம் நான் மாறுபடுவது அநீதியாகுமன்றோ?

"ஆலமலிய பதாகை யாய்மதி
யமைச்ச ராயசர பூமியினும்
குரவர் தன்னுரை மறுக்கி னும்பிறர்
புரிந்த நன்றியது கொல்லினும்
இரவி புள்ளளவு மதிய முள்ளளவு
மிவர்களே நரகி லெய்துவார்."

ஆதலின் யான் உன்மனைக்கு வந்திலேன் என்றனன். துரியோதனன் அங்ஙனமாயின், நீ தூதாக வந்த காரியம் யாது? கூறுக எனக் கண்ணன்,

"ஆதி நூலா சிறந்த நின்றுணைவர்
சொன்ன சொல்லும்வழு வாதுபோய்
எதிலார்களென வொத்து தன்னிழ
வில்லாத கானினிடை யெய்தியும்
நீதி லாவகை குறித்த நாள்பல
கழித்து வந்தனர் சொகந்தினில்
சோதி லாதகுரு குலம் செய் வது
உரிமை அன்பொடு கொடுத்தியே."

"சொல்ல வாகுக தம்ப! நின் துரிய
துணைவர் தங்களை யழைத்துநீ
வல்ல வாறில் நாடளித்தவர்க
டம்முடன் செறிவு வாழ்தியேல்
நல்ல வாய்மையின் புடையன் பெண்டு பாச
ராஜாடம் புகழ்வார் நன்புகொண்
டல்லவாமன மறுத்தியே லுறுப
மாண்மை யும்புகழு மல்லவே."

என்று கூறினன். அதைக்கேட்ட துரியோதனன்,

"நீலவுத்தியெ னிருந்த மன்னவர்
இகைக்கி லெவ்வல நினைக்கிலேன்
பேயக கைக்கிலேன் துரைத்த வண்மைமொழி
பொய்த்த தென்றமர் புகலிலேன்
வேய்ம லர்த்தொடையிவை யொன்றுடன்
பகைத்து வெஞ்சமர் விளைக்கிலேன்
ஈவி றுக்குமிட மெனினும் இப்புவியில்
யாவ ரக்கள் ளளிக்கொடேன்"

என்று மறுத்துங் கூறினன். பிறகு கன்னன் துரியோதனனை நோக்கி அவர்களுக்கிடம் முழுவதையும் கொடுக்க உனக்கு மனமில்லாவிடின் அதில் பாதி யேனும் அவர்களுக்குக் கொடு என்றான். துரியோதனன் அதனை மறுத்தனன். கன்னன் ஐந்து ஊர்களையேனும் கொடு எனத், துரியோதனன் அதனையும் மறுத்தனன். பிறகு கன்னன் வீர! ஐந்தூர் கொடுக்கவும் உனக்கு மனமில்லையேல் அவர்களோடு போர்புரியக் கைவழங்குவாயாக என்றான். அதைக்கேட்ட துரியோதனன் சினமிகுந்து தன்னை அழைத்த கன்னனை நோக்கி,

"புன்மி றப்புடைய பொதுவர் தங்களொடு
புறவி யானிரை புரந்திடும்
உன்மி றப்புமுறை யோடு கோவிய
குலப்பி ரித்தது மறந்தனை
மன்மி றப்பிலுயர் குருகு லத்தவர் தம்
வாய்மை தானுமொரு மாசிலா
என்மி றப்புமுன ராமலோசனைபி
ழித்த வாசக மியம்பினாய்."

"ஏவி லங்கு சிலையவர் வந்ததுஙில்
மான யர்ந்தெனி திருப்பனோ
கோவி லங்குபோர வந்த மோகாட
குந்த ரங்கள்பல கொண்டகாண்
மேவி லங்குமுன் மலைத்தல் கையறிய
வேண்டு மென்றதுமின் மேன்மையோ
நாவி லங்குமென வெண்ணி யோ மிகவு
நன்று நன்றாசர் ஞாயமே."

என்றனன். அதைக்கேட்ட கன்னன் புன்னகையோடு அரசவையை நீங்கி, நல்லொழுக்க மில்லாதவர் கோபித்த காலத்தும் நற்குணமுடைய பெரியோர் கோபியார் என்னும் நீதியை உலகத்தவர்க்குப் புலப்படுத்துபவன் போலக் கோபஞ் சிறிது மின்றிச் சென்று தனது மனையை யடைந்தனன். (வரும்)

C. R. கோவிந்த ராஜு முதலியார்,
பண்டிதர், பச்சையப்பன் காலேஜ், சென்னை.

சத்சங்கம்.

1. காசம் என்னும் வெள்ளைக் கல்லானது சுவர்ணத்தின் சம்சர்க்கத்தினால் எங்ஙனம் மரகதத்தின் பிரகாசத்தையடைகின்றதோ, அங்ஙனமே சத்துக்களின் சம்சர்க்கத்தினால் மூர்க்கனும் பண்டிதத் தன்மையை யடைகின்றான். சம்சர்க்கம் - சம்பந்தம்.

2. சத் சங்கத்தினால் துர்ச்சங்கம் ஒழிகின்றது; துர்ச்சங்கம் ஒழிவதனால் மோகம் ஒழிகின்றது; மோகம் ஒழியும்போது நிச்சல தத்துவம் பிரகாசிக்கின்றது; நிச்சலத் தத்துவம் பிரகாசிக்கும்போது ஜீவன்முக்தி சித்திக்கின்றது.

3. சத் சங்கத்தினால் மூர்க்கர்கட்குச் சாதுத்தன்மையுண்டாகின்றது; மூர்க்கர்களின் சேர்க்கையினால் சத்துக்கட்கு மூர்க்கத் தன்மை யுண்டாவதில்லை. அங்ஙனமெனின், மண்ணின் கந்தகுணத்தைப் புஷ்பங்கள் கிரகிக்கின்றன வேயன்றி, புஷ்பத்தின் கந்தகுணத்தை மண் கிரகிப்பதின்றாம்.

4. சத் சங்கமானது குறைவைப் பூர்த்திசெய்யும்; அசத்தியத்தை அபகரிக்கும்; அசுத்த புத்தியைச் சுத்தஞ்செய்யும்; பூதங்களிடத்துக் கருணையை வளரச்செய்யும். இத்தகைய சத்சங்கமானது என்ன மங்களத்தைத்தான் கொடுக்கமாட்டாது?

5. சாதுசங்கமானது கங்கையைப்போலச் சகல பாபத்தையும் நாசஞ் செய்யும்; மனதிற்குச் சந்தோஷத்தைக் கொடுக்கும் சந்திரிகையாம்; ஜகத்தின் அந்தகாரத்தை நீக்குவதாம்; சூரியனைப் போலச் சர்வ தாபத்தையும் நீக்குவதாம்; காமதேனுவைப்போலச் சகல காமங்களையும் கொடுப்பதாம். புண்ணியவான்களாகிய சத்துக்களின் சேர்க்கையானது மிகத் துர்லபமாகவே அடையப்படுவதாம்.

பூஷணம்.

1. பிராமணன் வித்தையால் விளங்குகின்றான்; க்ஷத்திரியன் விஜயத்தால் விளங்குகின்றான்; செல்வமுடையோன் தானத்தினால் விளங்குகின்றான்; குல ஸ்திரீ நாணத்தினால் விளங்குகின்றாள்.

2. கைக்குத் தானம் ஆபரணமாம்; கண்டத்திற்குச் சத்தியம் ஆபரணமாம்; சோத்திரத்திற்குச் சாஸ்திரம் ஆபரணமாம்; அந்நிய ஆபரணங்களினால் என்ன பயன்?

3. நட்சத்திரங்களுக்குச் சந்திரன் ஆபரணமாம்; ஸ்திரீகளுக்குப் பதி ஆபரணமாம்; பூமிக்கு அரசன் ஆபரணமாம்; வித்தை யாவருக்கும் ஆபரணமாம்.

4. குதிரைக்கு வேகம் ஆபரணமாம்; ஸ்திரீகளுக்குப் பயம் ஆபரணமாம்; யதிகளுக்குத் தபசு ஆபரணமாம்; அரசனுக்குப் பொறுமை ஆபரணமாம்; வீரனுக்குப் பராக்கிரமம் ஆபரணமாம்.

5. ஆகாசத்திற்குப் பரிசுத்தத் தன்மை ஆபரணமாம்; தாமரைவனத்திற்கு வண்டு ஆபரணமாம்; வாக்கிற்குச் சத்தியம் ஆபரணமாம்; செல்வத்திற்குக் கொடை ஆபரணமாம்; மனத்திற்கு மைத்ரி ஆபரணமாம்; சத்துக்களுக்கு இன்சொல் ஆபரணமாம்; யாவருக்கும் விநயம் ஆபரணமாம்.

(வரும்)

யுத்தம்.

ஐரோப்பாக்கண்டத்தில் நடைபெற்று வரும் யுத்தம் ஜோசியப் பிரகாரம் சீக்கிரத்தில் முடிவாகவில்லை. இம்மாதப் பிரவேச முதல் யுத்தம் ஆரம்பமாகி மூன்று வருஷங்கள் பூர்த்தியாய் விட்டன; இவ்வருஷத்தில் முடிவு பெறுமென்று சாஸ்திர நிபுணர்கள் கூறுகின்றனர்; சில மாதங்களாக ருஷியாவில் ஏற்பட்டிருக்கும் ராஜாங்க மாறுதலினால் நமது சத்ருக்கட்சியினர் தாம் உத்தேசித்த பிரகாரம் யுத்தத்தை முன்னறுவருட காலத்திலேயே முடிக்கக் கூடாதவராய் விட்டனர். ருஷ்யாவின் நிலைமை ஒழுங்குபெற்று வருகின்றமையின், ருஷ்யர் சீக்கிரத்தில் பகைவரை வலுவில் எதிர்க்கும் சக்திபெற்று வருவார்கள். அப்போது ஜெர்மானியர் மிகுதியும் தோல்வி யடைந்து வன்மை குன்றிச் சமாதானத்திற்கு வருவார்கள். மேற்கரங்கத்தில் ஜெர்மானியர் ஒரு வருடகாலமாக மிகுதியும் தோல்வியே யடைந்து வருகின்றனர். சீக்கிரத்தில் நேசக் கட்சியார் ஜெர்மானியரைப் பிரான்ஸ்-பெல்ஜியத்தினின்று துரத்தி விடுவார்கள். அமெரிக்க சேனைகளும் பிரான்சுப் போர்முகத்தில் வந்து யுத்தத்திற்கு ஆயத்தமாகி வருகின்றன. செப்டம்பர் மாதத்தில் 1000 ஆகாய விமானங்கள் அமெரிக்காவிலிருந்து பிரான்சுப் போர்முகத்திற்கு வருகின்றன. அப்போது பிரான்சுப் போர்முகத்தில் ஜெர்மானியர் நேசக் கட்சியாருடன் நின்று போர்செய்ய மிகுதியும் அசக்தராய் விடுவார்கள். அது முதற்கொண்டு ஜெர்மனி வீழ்ச்சி யடையுங் காலமாகும். அக்காலத்தை நாம் ஆவலுடன் எதிர்பார்த்து வருதல் வேண்டும்.